# புகுமுக வகுப்பு
# உலக வரலாறு

**(கி. பி. 15 ஆம் நூற்றாண்டிலிருந்து)**

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது)

நா. பக்தவத்சலு

மிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

9665

த.பா.நி. (க.வெ.) வரிசை எண்—642

# புதுமுக வகுப்பு
# உலக வரலாறு

**(கி.பி. 15ஆம் நூற்றாண்டிலிருந்து)**

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது)

ஆசிரியர்
**நா. பக்தவத்சலு,** எம்.ஏ., பி.டி.,
துணைப் பேராசிரியர், வரலாற்றுத்துறை,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition — August, 1975
Second Edition (Revised) — August, 1976
Third Edition (Revised) — May, 1977
Number of Copies 5,000

T.N.T.B.S. (C.P.) No. 642

© Government of Tamilnadu

**WORLD HISTORY for P.U.C.**
(From 15th Century A.D.)

N. BAKTHAVATHSALU

**Price Rs. 3-35**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

*Printed by*
BHAGAT PRINTERS
55, Railway Station Road,
Alandur, Madras-600 016.

# பதிப்புரை

புகுமுக வகுப்பு உலக வரலாறு (கி.பி. 15ஆம் நூற்றுண்டிலிருந்து) என்ற இந் நூல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் வெளியான 642ஆவது வெளியீடாகும். இதன் முந்தைய பதிப்புப் படிகள் அனைத்தும் விற்பனையாகிவிட்டன. ஆதலின், இப்பொழுது இந் நூல், மீண்டும் வெளி வருகின்றது. இந் நூல், மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

# பொருளடக்கம்


பக்கம்

தோற்றுவாய் ... 1

## I. ஐரோப்பாவில் நவீனகாலத் தொடக்கம்

1. நகரங்களின் வளர்ச்சியும் நடுத்தர வகுப்பினரின் தோற்றமும் ... 3

2. புதிய கடல்வழிகளும் அறிவியல் கண்டுபிடிப்புகளும் ... 10

3. இத்தாலியில் மறுமலர்ச்சி ... 22

4. சமயச் சீர்திருத்தமும் சமயச் சீர்திருத்த எதிர் இயக்கமும் ... 30

## II. ஃபிரான்ஸ், ரஷ்யா, பிரஷ்யா ஆகியவற்றின் வளர்ச்சி

5. ஃபிரான்சில் பதினான்காம் லூயி ... 38

6. ரஷ்யாவில் மகா பீட்டர் ... 47

7. பிரஷ்யாவில் மகா ஃபிரெடரிக் ... 53

## III. புரட்சிகள்

8. ஐக்கிய அமெரிக்காவின் தோற்றம் ... 59

9. ஃபிரெஞ்சுப் புரட்சி ... 71

10. மாவீரன் நெப்போலியன் ... 80

பக்கம்

11. இங்கிலாந்தில் தொழிற் புரட்சி ... 95

12. வேளாண்மைப் புரட்சி ... 102

IV. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தேசிய இயக்கங்கள்

13. இத்தாலிய இணைப்பு ... 107

14. ஜெர்மானிய இணைப்பு ... 116

15. இலத்தீன் அமெரிக்காவின் விடுதலை ... 123

V. நவீன ஆசியா

16. மெய்ஜி மீட்சியும் ஜப்பானின் எழுச்சியும் ... 130

17. சீனாவில் மஞ்சு அரசர்களின் ஆட்சி ... 137

18. இந்தியாவில் சமூக-சமயச் சீர்திருத்தங்கள் ... 145

VI. (அ) இருபதாம் நூற்றாண்டு உலகம்

19. முதல் உலகப் போர் ... 152

20. சர்வதேசச் சங்கம் ... 161

21. சீனக் குடியரசில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் ... 166

22. ரஷ்யப் புரட்சி ... 175

23. இத்தாலி, ஜெர்மனி, துருக்கியில் சர்வாதிகார ஆட்சி ... 183

VII. (ஆ) இருபதாம் நூற்றாண்டு உலகம்

24. இரண்டாம் உலகப் போர் ... 200

25. ஐக்கிய நாடுகள் நிறுவனம் ... 208

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 26. | இந்திய விடுதலை இயக்கம் | ... 215 |
| 27. | உலக அமைதிக்கு இந்தியாவின் பணி | ... 228 |
| 28. | அமெரிக்காவும் ரஷ்யாவும் உலக வல்லரசுகளாதல் | ... 236 |
| | உலக வரலாற்றில் சில முக்கிய நிகழ்ச்சிகள் | ... 249 |
| | மேற்கோள் நூற்பட்டியல் | ... 251 |
| | கலைச்சொற்கள் | ... 252 |

# தோற்றுவாய்

உலக வரலாற்றைப் பண்டைக்காலம், இடைக்காலம் நவீன காலம் அல்லது தற்காலம் என மூன்று பிரிவுகளாக வரலாற்றுசிரியர்கள் பிரித்துள்ளனர். வரலாற்றை எழுதுவதற்கும், படிப்பதற்கும் எளிமையாக இருப்பதற்காகவே இத்தகைய பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக மனிதன் தோன்றியதிலிருந்து கி.பி. 476ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியைப் பண்டைக் காலம் (Ancient Period) என்று கூறுகின்றனர். கி.பி. 476ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1453ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட பகுதியை இடைக்காலம் (Mediaeval Period) என்றும், கி.பி. 1453ஆம் ஆண்டு முதல் இன்றுவரையுள்ள காலத்தை நவீனகாலம் அல்லது தற்காலம் (Modern Period) என்றும் கூறுவது மரபாகும்.

### பண்டைக்காலம்

இக் காலத்தின் தொடக்கத்தில் மனிதன் அறிந்திருந்த நிலப் பகுதி மிகக் குறைவு. இயேசு கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றுண்டு களுக்கு முன்னரே எகிப்து, சுமேரியா, இந்தியா, சீனு முதலான பகுதிகளில் மக்கள் மிக உயர்ந்த நாகரிகத்தைப் பெற்றிருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கிறித்துக்கு முந்திய சில நூற்றுண்டு களில் கிரேக்கர்களும் ரோமானியர்களும் ஐரோப்பிய நாகரிகத்தை உருவாக்கினுர்கள். உலகம் என்பது, ஐரோப்பா, ஆசியாவின் பெரும் பகுதி, ஆப்பிரிக்காவின் வட பகுதி ஆகியவை மட்டுமே என்று அவர்கள் கருதியிருந்தனர். அவர்கள் உருவாக்கிய ரோமானியப் பேரரசு கி.பி. இரண்டாம் நூற்றுண்டில் மிகப் பெரிய பேரரசாக விளங்கியது. அப் பேரரசு கி.பி. 476ஆம் ஆண்டு வீழ்ச்சியுற்றது. அந்த ஆண்டையே பண்டைக் காலத்தின் இறுதி ஆண்டாக வரலாற்றுசிரியர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். பண்டைக் காலத்தில்தான் ஆசியாக் கண்டத்தில் கன்ஃபூசியக் கோட்பாடு, புத்த மதம், சமண மதம், சொராஸ்ட்ரிய மதம், கிறித்தவ மதம் ஆகியவை தோன்றின. இந்து மதம் இம் மதங்கள் தோன்றுவதற்கு முன்னரே இருந்துவந்தது. கி.மு. நான்காம் நூற்றுண்டில் மூன்று கண்டங்களில் பரவியிருந்த மிகப் பெரிய பேரரசை மகா அலெக்சாந்தர் உருவாக்கியிருந்தார். இந்தியாவில் கி.மு. மூன்றும் நூற்றுண்டில் அசோகர் மிகப் பெரிய பேரரசை

ஆட்சி செய்தார். தென் இந்தியாவில் தமிழர்கள் மிக உயர்ந்த நாகரிகமுடைய மக்களாக வாழ்ந்து வந்தனர்.

### இடைக்காலம்

ஐரோப்பாக் கண்டத்தில் சில முக்கியமான நிகழ்ச்சிகள் இக் காலத்தில் நடைபெற்றன. கி.பி. 476ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1453ஆம் ஆண்டுவரை கிழக்கு ரோமானியப் பேரரசு தழைத் தோங்கியிருந்தது.[1] புனித ரோமானியப் பேரரசும் இக் காலத்தில் தான் எழுச்சிபெற்றது.[2] நிலமானியத் திட்டம் (Feudalism) தோன்றியதும், திருச்சபைக்கும் பேரரசுக்குமிடையே பதவிச் சின்னப் போராட்டம் (Investiture Struggle) நடைபெற்றதும், சிலுவைப் போர்கள் (Crusades) மூண்டதும், பாராளுமன்றங்கள் (Parliaments) தோன்றியதும் இந்தக் காலத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதே காலத்தில் சீனுவில் மிகப் பெரிய பேரரசை குப்ளேகான் ஆட்சி செய்தார். இந்தியாவிலும் முகம்மதியரின் ஆட்சி நிலையாக வேரூன்றிவிட்டது.

### நவீனகாலம்

கிழக்கு ரோமானியப் பேரரசின் தலைநகரமாக விளங்கிய கான்ஸ்டான்டிநோபிளை கி.பி. 1453ஆம் ஆண்டு துருக்கியர்கள் கைப்பற்றிக்கொண்டனர். இந் நிகழ்ச்சி வரலாற்றில் மிக முக்கிய மான விளைவுகளை ஏற்படுத்தியது. எனவே, அந்த ஆண்டே நவீன காலத்தின் தொடக்க ஆண்டாகக் கருதப்படுகிறது. அந்த ஆண்டுவரை உலகம் என்பது ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா ஆகிய மூன்று கண்டங்களே என்று மக்கள் கருதினர். உலகம் கோள வடிவமுடையது என்று அவர்கள் நம்பினுர்களேயொழிய, அது நிரூபிக்கப்படவில்லை. புதிய உலகமாகிய வட அமெரிக்கா, தென் அமெரிக்காக் கண்டங்களைப் பற்றியும் ஆஸ்திரேலியாக் கண்டத்தைப் பற்றியும் அவர்கள் ஒன்றும் அறிந்திலர். மனித சமுதாயத்தின் வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்ச்சிகள் நவீன காலத்தில் நடைபெற்றன. அவற்றைப் பற்றி விளக்க இந் நூல் முயலுகின்றது.

[1] கிழக்கு ரோமானியப் பேரரசின் வரலாறு கி.பி. 395ஆம் ஆண்டிலிருந்து தொடங்குவதாகச் சில வரலாற்றாசிரியர்கள் கூறுவர்.

[2] இது கி.பி. 962 முதல் 1806 வரை இருந்தது.

# I. ஐரோப்பாவில் நவீனகாலத் தொடக்கம்

## 1. நகரங்களின் வளர்ச்சியும் நடுத்தர வகுப்பினரின் தோற்றமும்

இடைக்கால ஐரோப்பியச் சமுதாயம் 'நிலமானிய அடிப்படையில்' வேளாண்மையையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தது. சமுதாயம் பொதுவாக இரண்டு பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. நிலத்திலே உழைத்து நாட்டுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்த உழவர்கள் ஒரு பிரிவைச் சேர்ந்தவராவர். இவர்கள் ஏழைகளாகவே இருந்தனர். அரச குடும்பத்தினர், பிரபுக்கள் மற்றும் குருமார்கள் பெரும் பணக்காரர்களாக உயர்ந்த நிலையிலேயே இருந்தனர். இவர்கள் மற்றொரு பிரிவினர் ஆவர். இடைக்காலத்தின் இறுதியில் 'நடுத்தர வகுப்பினர்' தோன்றலாயினர். அவர்கள் பெரும்பாலும் வணிகர்களேயாவர். அவர்கள் வணிக வளத்தால் பெருஞ் செல்வந்தர்களாக மாறினர். அவர்களின் எழுச்சியினால் நகரங்கள் தோன்றின. இதனால் முக்கியமான அரசியல், பொருளாதார மற்றும் சமூக மாற்றங்கள் நிகழ்ந்தன.

### 1. நகரங்களின் தோற்றம்

வேளாண்மைப் பொருளாதாரத்தில் நகரங்கள் தோன்றுவதற்கு அதிகமான வாய்ப்புகள் இல்லை. ஒவ்வொரு பண்ணையிலும்[1] (Manor) வாழ்ந்தவர்கள் தங்களுக்கு வேண்டிய பொருள்களைத் தாங்களே உற்பத்தி செய்துகொண்டனர். அவர்களுடைய தேவைகளும் அதிகமாக இல்லை. அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், உழவுக் கருவிகள், வீடு கட்டுவதற்கு வேண்டிய பொருள்கள் முதலானவை அந்தந்தப் பகுதிகளிலேயே உற்பத்தி செய்துகொள்ளப்பட்டன. மேலும், நிலமானிய அடிப்படையில் ஏழை அடிமை உழவர்கள் பிரபுக்களின் நிலங்களிலிருந்து

[1] ஐரோப்பாவில் நிலவிவந்த நிலமானிய திட்டத்தின்கீழ் ஒரு குறிப்பிட்ட பிரபுவின் அதிகாரத்திற்கு உட்பட்ட நிலங்கள் அனைத்தும் ஒரு மேனர் (Manor) அல்லது 'பண்ணை' என்று வழங்கப்பட்டது.

வெளியேற அனுமதிக்கப்படவில்லை. இந்த நிலையில் ஒருவரைச் சார்ந்து மற்றவர் வாழ்ந்து வந்தனர்.

சிலுவைப் போர்கள் நடைபெற்றதாலும், நிலமானியமுறை (Feudalism) வீழ்ச்சியுற்றதாலும் வணிகர்கள் என்ற ஒரு புதிய சமுதாயம் தோன்றியது. அவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாணிகம் செய்தனர். விடுதலைபெற்ற உழவர்களும் வேறுபல தொழில்களைச் செய்ய முற்பட்டனர். குறிப்பாக இரும்புக் கருவிகள் செய்தல், ஆடைகளை நெய்தல், உழவுக் கருவிகளைச் செய்தல் முதலானவற்றில் அவர்கள் ஈடுபட்டனர். ஒரு தொழிலைச் செய்தவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குடியேறினர். உதாரணமாக, ஒரு கிராமத்தில் அநேகமாக எல்லோரும் ஆடை நெய்பவர்களும், மற்றொரு கிராமத்தில் ரொட்டி செய்பவர்களும், பிறிதொரு கிராமத்தில் தோல் பொருள்களைச் செய்பவரும் வாழத் தொடங்கினர்கள். இவர்கள் ஒரு குறிப்பிட்ட சந்தைக்குச் சென்று தங்கள் பொருள்களை விற்று, தங்களுக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொண்டு வந்தார்கள். அந்தச் சந்தைகள் காலப் போக்கில் பெரிய கிராமங்களாக அல்லது சிறிய நகரங்களாக உருவாயின. இத்தகைய நகரங்கள் கடற்கரை ஓரமாகவோ பல சாலைகள் சந்திக்கும் இடங்களிலோ தோன்றலாயின. சில நகரங்களில் வணிகர்களே வாழ்ந்தார்கள். அவர்களின் செல்வம் வளர வளர பெரிய வீடுகளையும், பகைவர்களிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள அரண்களையுடைய கோட்டைகளையும் கட்டிக்கொண்டனர். மக்களின் தேவைகள் அதிகரித்தபோது அத்தகைய நகரங்களில் எல்லாவிதமான பொருள்களும் கிடைத்தன. கிராமங்களில் இருந்த பலவிதமான தொழிலாளர்கள் அந் நகரங்களில் குடியேறிப் பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கினர். மக்கள் தொகையும் நகரங்களில் பெருகிற்று. இங்ஙனம் வளர்ந்த நகரங்கள் சில பிரபுக்களின் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பகுதிகளில் இருந்தன. தொழிலாளர்களும் வணிகர்களும் அந்தப் பிரபுக்களுக்குப் பலவிதமான வரிகளைத் தரவேண்டியிருந்தது. பொருள்களை ஒரு பண்ணையிலிருந்து மற்றொரு பண்ணைக்கு எடுத்துச் செல்லும்போது அதற்கான வரியும், சந்தைகளில் கடைவைத்துப் பொருள்களை விற்கும்போது அதற்கான வரியும், நதிகளின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பாலங்களைக்கடக்கும்போது 'பாலவரி'யும் பிரபுக்களுக்கு அல்லது அரசர்களுக்குச் செலுத்தவேண்டிய வரிகளுள் சிலவாகும். இத்தகைய வரிகளைச் செலுத்திய போதிலும் சில வணிகர்கள் பெருஞ் செல்வந்தர்களானர்கள்.

இடைக்காலத்தின் இறுதியில் அரசர்களுக்குக் கோட்டைகளைக் கட்டுவதற்கும், படையை வைத்துக்கொள்வதற்கும் பெரும்

பணம் தேவைப்பட்டது. அத்தகைய நேரங்களில் நகரத்தில் இருந்த செல்வ வணிகர்களிடமிருந்து பெருந்தொகையை அரசர்கள் பெற்றுக்கொண்டு, அவர்களுக்கு வரிவிலக்குக் கொடுத்துப் பல உரிமைகளை வழங்கினர். பின்னர் அத்தகைய நகரங்களில் வாழ்ந்த வணிகர்கள் தங்கள்வாணிகத்திற்குப் போட்டியோ இடர்ப்பாடோ வராமலிருக்க 'வணிகக் கழகங்களை' (Merchant Guilds) ஏற்படுத்திக் கொண்டனர். அத்தகைய கழகங்கள் பல நகரங்களில் நிறுவப் பட்டன. ஒரு குறிப்பிட்ட நகரத்தில் எல்லாப் பொருள்களையும் வாங்குதலையும், விற்றலையும் இக் கழகங்களே ஒழுங்குபடுத்தின. ஏறத்தாழ இன்றுள்ள கூட்டுறவுப் பண்டகச் சாலைகளைப்போல் இவை இயங்கின. வணிகர்களுக்கு இலாபம் சம்பாதித்துக் கொடுத் தலும், நகரத்திலுள்ள எல்லா மக்களின் தேவைகளை நிறைவேற்று தலும், ஏழை எளியவருக்கு ஓரளவு உதவி செய்தலும் இக் கழகங் களின் நோக்கங்களாகும். வாணிகம் பெருமளவில் வளர்ந்து வந்தது. தொழில்களும் பெருகின. அவர்கள் அனைவரின் நலனையும் வணிகக் கழகங்களால் காக்கமுடியவில்லை. எனவே, ரொட்டி செய்பவர்கள், நெசவாளர்கள், மீனவர்கள், போர்க்கருவிகள் செய்யும் கொல்லர்கள், மற்றும் தச்சர்கள் முதலான பலதரத்தினர் தனித்தனி கழகங்களை ஏற்படுத்திக்கொண்டனர். அவை 'தொழிற் கழகங்கள்' (Craft Guilds) என்று வழங்கப்பட்டன. அவை குறிப்பிட்ட பொருள்களின் வாணிக வளர்ச்சியில் கவனம் செலுத் தின. வணிகர்களின் நடவடிக்கைகள் பல விதிமுறைகளால் கட்டுப்படுத்தப்பட்டன.

## 2. இத்தாலிய நகரங்கள்

இடைக்காலத்தின் இறுதியில் இத்தாலியில் பல முக்கியமான நகரங்கள் இருந்தன. வெனிஸ் (Venice) ஏட்ரியாடிக் கடலின் வடகரையில் அமைந்துள்ளது. அது நீரால் சூழப்பட்ட இனிய தட்பநிலை கொண்ட நகரமாக விளங்குகின்றது. பெருஞ் செல்வந் தர்கள் இங்கு வாழ்ந்தார்கள். ஆசிய நாடுகளிலிருந்து பெறப்பட்ட விலையுயர்ந்த பட்டு, பருத்தி, உலோகங்கள், நவரத்தினங்கள், தந்தம் மற்றும் நறுமணப் பொருள்கள் முதலானவை இங்கு விற்கப்பட்டன. அங்கிருந்து அவை மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. வெனிஸ் சிறந்த துறைமுகமாக விளங்கியது. இந் நகரச் செல்வந்தர்கள் பல வணிகக் கப்பல்களை வைத்திருந்தார்கள். ஜெனோவா (Genoa) மற்றொரு சிறப்பு மிக்க இத்தாலியத் துறைமுக நகரமாகும். இந் நகர வணிகர் கள், ஆசிய நாடுகளுடன் வாணிகம் செய்ய, வெனிஸ் நகர வணிகர்களுடன் கடும் போட்டியிட்டார்கள். ஃபிளாரன்ஸ் (Florence) உள்நாட்டிலிருக்கும் நகரமாகும். இது கவிஞர்களும்

கலைஞர்களும் வாழ்ந்த இடமாகும். அவர்களையெல்லாம் செல்வந்தர்களான வணிகர்கள் ஆதரித்தார்கள். இவற்றைத் தவிர மிலான் (Milan), பீசா (Pisa), நேபிள்ஸ் (Naples) முதலான நகரங்கள் இத்தாலியின் செல்வ வளத்தைப் பெருக்கிய நகரங்களாகும்.

### 3. ஜெர்மானிய நகரங்கள்

இடைக்கால ஜெர்மனியில் சாதாரண கிராமங்களாக இருந்தவை 15ஆம் நூற்றுண்டுக்குள் பெருநகரங்களாக மாறிவிட்டன. ஜெர்மனியின் வடக்கேயுள்ள ஹாம்பர்க் (Hamburg), பிரெமென் (Bremen), லுயுபெக் (Lubeck) போன்ற துறைமுக நகரங்கள் பால்டிக் கடல் நாடுகளகிய நார்வே, சுவீடன், டென்மார்க் முதலான நாடுகளுடனும் இங்கிலாந்துடனும் வாணிகம் செய்தன. ஃபிளாண்டர்ஸ் பகுதியில் இருக்கும் புருஷ் (Bruges), கென்ட் (Ghent) போன்ற நகரங்களிலிருந்த பெருவணிகர்கள் இங்கிலாந்திலிருந்து கம்பளியை இறக்குமதி செய்தனர். அவர்கள் கம்பளி ஆடைகளை உற்பத்தி செய்து, கொழுத்த இலாபத்தைச் சம்பாதித்தார்கள். இவ் வணிகர்கள் நூறுண்டுப் போர் நடைபெற்ற போது இங்கிலாந்துக்கே சாதகமாக இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கலோன் (Cologne), பிரன்ஸ்விக் (Brunswick) போன்ற நகரங்கள் சிறந்த சந்தைகளாக விளங்கின. அவை ஆக்ஸ்பர்க் (Augsburg), நியுரெம்பர்க் (Nuremberg) போன்ற மற்ற மேற்கு ஐரோப்பிய நகரங்களுக்கும், இத்தாலிய நகரங்களுக்கும் இடையே இருந்ததால், பொருள்களைப் பகிர்ந்து கொடுக்கும் சிறந்த மையங்களாக விளங்கின.

### 4. மற்ற நாடுகளின் நகரங்கள்

இங்கிலாந்தின் எழில்மிகு தலைநகரமாகிய லண்டன் (London) செல்வ வளத்துடன் சிறந்து விளங்கியது. அதனுடன் வின்செஸ்டர், பிரஸ்டல் போன்ற நகரங்களும் நன்கு வளர்ச்சி பெற்றன. மார்செய்ல்ஸ் என்ற துறைமுகம் ஃபிரான்சில் புகழ் பெற்றிருந்தது. இது தவிர பாரிஸ், ரூவன், ரீம்ஸ், ஆர்லியன்ஸ் போன்ற உள்நாட்டு நகரங்கள் பெரிய வாணிகச் சந்தைகளாக விளங்கின. ஃபிரான்ஸ் நாட்டில் மேற்கேயிருந்த துறைமுகங்களுள் போர்டோ முக்கியமானதாகும். ஐபீரியத் தீபகற்பத்தில் லிஸ்பன், காடிஸ் போன்ற துறைமுகங்களிலும், கிரானடா, செனவல் போன்ற உள்நாட்டு நகரங்களிலும் பெருவணிகர்கள் இருந்தனர். கிழக்கு ரோமானியப் பேரரசின் தலைநகரமாகிய கான்ஸ்டான்டிநோபிள் (Constantinople) புகழ்பெற்ற நகரமாக விளங்கியது. மேற்கு ஆசியாவில் ஜாஃபா, பெய்ரூட் போன்ற

துறைமுகங்களும், அங்கோரா, ஜெருசலம் போன்ற நகரங்களும் புகழ்பெற்றவையாக விளங்கின. ஆப்பிரிக்காவில் டுனிஸ், திரிபோலி, அலெக்சாண்டிரியா, கெய்ரோ போன்றவை சிறப்புப் பெற்றிருந்தன.

**5. நடுத்தர வகுப்பினர்**

நகரங்களின் வளர்ச்சிக்கு நடுத்தர வகுப்பினர் (The Middle Class) பெருமளவு காரணமாவர். இவர்கள் 'பூர்ஷ்வாசி' கள் (Bourgeoisie) என்று ஃபிரெஞ்சு மொழியில் அழைக்கப் பட்டனர். இந்த பூர்ஷ்வாசிகள் ஐரோப்பியப் பொருளாதார, அரசியல் மாறுதல்களுக்குக் காரணமாக இருந்தார்கள். அரசர் களுக்கும் பிரபுக்களுக்கும் பூசல்கள் வந்தபோதும், மக்களுக்கும் அரசர்களுக்குமிடையே போராட்டங்கள் நடந்தபோதும், அயல் நாட்டுப் போர்கள் நடந்தபோதும் இவர்கள் முக்கியமான பணியைச் செய்துள்ளனர். தங்களை வலிமைப் படுத்திக்கொள்ளப் பல பெரிய அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். அவற்றுள் கீழ்க் காண்பவை சில முக்கியமான அமைப்புகளாகும் :

(i) ஹன்சீடிக் லீக் (Hanseatic League): ஜெர்மானிய நகரங் களிலிருந்த நடுத்தர வகுப்பு வணிகர்களான பூர்ஷ்வாசிகள் நில வழியாகவும் நீர்வழியாகவும் வாணிகம் செய்தனர். இவர்களின் வணிகக் கப்பல்களைக் கடற்கொள்ளைக்காரர்கள் அடிக்கடி தாக்கினர். எனவே, அவர்கள் அத்தகைய தாக்குதல்களிலிருந்து தங்களையும் தங்கள் வணிகப் பொருள்களையும் காத்துக்கொள்ள 'ஹன்சீடிக் லீக்'கை அமைத்தார்கள். அதில் எண்பதுக்கும் மேற்பட்ட நகரங்கள் சேர்ந்திருந்தன. இந்த அமைப்புக்கெனத் தனியாக வாணிகக் கப்பல்களும், உள்நாட்டிலும் அயல்நாடு களிலும் சேமிப்புக் கிடங்குகளும் இருந்தன. ஜெர்மானிய அரசர் களைத் தேர்ந்தெடுப்பதில் இந்தப் பூர்ஷ்வாசிகள் குறிப்பிடத்தக்க பங்கினைப் பெற்றிருந்தனர். இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்கும் நூறாண்டுப் போர் நடைபெற்றபோது, பூர்ஷ்வாசிகள் இங்கி லாந்துக்கு உதவி செய்தனர். இது அவர்களின் அரசியல் செல்வாக் கையும் அதிகாரத்தையும் காட்டுகின்றது.

(ii) ஹெல்வெடிக் லீக் (Helvetic League) : ஸ்விட்சர்லாந்தில் உள்ள ஊரி (Uri), ஸ்கிவிட்ஸ் (Schwitz) மற்றும் அண்டர்வால் டென் (Underwalden) போன்ற நகரங்களிலிருந்த பூர்ஷ்வாசிகள் 'ஹெல்வெடிக் லீக்'கை அமைத்துக் கொண்டனர். அவர்கள் ஆஸ்திரியப் பேரரசின் ஆணைகளை ஏற்க மறுத்து, அவரைப் போரில் தோற்கடித்தனர். ஸ்விட்சர்லாந்து நாடு உருவாவதற்கு

அவர்கள் பெருமளவு காரணமாக இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(iii) லம்பார்ட் லீக் (Lombard League): இது இத்தாலியின் வடக்கே லம்பார்ட் பகுதியில் உள்ள நகரங்கள் அமைத்துக் கொண்ட அமைப்பாகும். இதிலிருந்த வணிகர்கள் அராபிய வணிகர்களிடமிருந்து பொருள்களை வாங்கி, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் விற்றனர். இவர்களும் வட இத்தாலிய அரசியலில் முக்கியப் பங்கினை வகித்தனர்.

6. நகரங்கள், நடுத்தர வகுப்பினரின் பணிகள்

நடுத்தர வகுப்பினராகிய பூர்ஷ்வாசிகள் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளைவிடச் சமுதாயத்திற்குச் சிறப்புமிக்க பணியினைச் செய்துள்ளனர். தாங்கள் வாழ்ந்த நகரங்களில் கலை வளர்ச்சிக்கு அவர்கள் உதவியுள்ளனர். ஒரு நாட்டின் நாகரிகத்தைப் பிரதி பலிக்கும் முறையில் அவர்கள் அரும்பணியினைச் செய்தனர். கண்ணைக்கவரும் கலைக் கூடங்களும், விண்ணைமுட்டும் கட்டடங் களும் அவர்களால் கட்டப்பட்டன. ஃபிரான்சு நாட்டுக் கட்டடக் கலைஞர்கள் 'கோதிக் கட்டடக் கலை' (Gothic Architecture) அமைப்பை உருவாக்கினார்கள். அது ரோமானியக் கட்டடக்கலை அம்சங்களினின்று மாறுபட்டதாகும். ரோமானியக் கலையம்சக் கட்டடங்களில், கட்டடத்தின் கூரையைத் தாங்க மிக மிக அகன்ற உயரமான சுவர்கள் எழுப்பப்பட்டன. அதேபோலப் பெரிய உயரமான தூண்கள் எழுப்பப்பட்டு, அவை பாதி வட்டத் தைப்போன்ற வளைவுகளால் இணைக்கப்பட்டன. 'கோதிக் கட்டடக் கலை' அமைப்புக் கட்டடங்களில் சுவர்களுக்குப் பதிலாகச் சுவர் தாங்கிகள் பயன்படுத்தப்பட்டன. கட்டடத்திற்கு மேலே கூர்மை யான வளைவுகள் மற்றும் அழகிய வண்ணக் கண்ணாடிகளால் மூடப் பட்ட பெரிய ஜன்னல்களும், கற்களில் சிற்ப வேலைப்பாடுகளும் நிறைந்து காணப்பட்டன. இத்தகைய அமைப்புகளையுடைய கம்பீரமான கட்டடங்கள் நகரங்களில் கட்டப்பட்டன. இந்த நகரங்களில்தாம் கலைகளை வளர்க்கும் பல்கலைக்கழகங்கள் தோன்றின. தாந்தே, பெட்ரார்க், பொக்காஷியோ, மாக்கிய வெல்லி (Dante, Petrarch, Boccaccio, Machiavelli) போன்ற இலக்கிய மேதைகளும், மைகேல் ஆஞ்சிலோ, லியானார்டோ டா வின்சி (Michelangelo, Leonardo da Vinci) போன்ற தலைசிறந்த கலைஞர்களும், கலிலியோ (Galileo) போன்ற அறிவியல் அறிஞர் களும் இத்தாலிய நகரமாகிய நேபிள்சில் வாழ்ந்தார்கள்; அவர்களைப் பூர்ஷ்வாசிகள் ஆதரித்தார்கள் என்பது இங்குக் குறிப் பிடத்தக்கதாகும். 14, 15ஆம் நூற்றாண்டுகளில் இத்தாலிய

நகரங்களில் பலவகை அரசுகள் (Forms of Government) தோன்றியதற்குப் பூர்ஷ்வாசிகளே பெருமளவு காரணமாவர். வெனிஸ் நகரில் 'வணிகர் ஆதிக்க ஆட்சி' (Mercantile Oligarchy) என்ற அரசியல் அமைப்பு நடைமுறையில் இருந்தது. இது வணிகர்களின் நன்மைக்காகவே இயங்கிய அரசாகும். ஃபிளாரன்ஸ் நகரிலும் பூர்ஷ்வாசிகள் அதிகம் வாழ்ந்தனர். அவர்கள் அரசர்களுக்கும் போப்புக்கும் கடன் தருகின்ற அளவு செல்வந்தர்களாக இருந்தார்கள். புதிய கடல்வழிகளைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் இந்தப் பூர்ஷ்வாசிகளால்தாம் பெருமளவு மேற்கொள்ளப்பட்டன. ஐரோப்பிய அரசுகளும் அவர்களுக்கு ஊக்கமளித்தன. 15ஆம் நூற்றுண்டுக்குப்பின் நடைபெற்ற சமூக, சமய, பொருளாதார, அரசியல் புரட்சிகளில் இவர்கள் மிக முக்கியமான பங்கினை வகித்துள்ளார்கள்.

# 2. புதிய கடல்வழிகளும் அறிவியல் கண்டுபிடிப்புகளும்

## I. புதிய கடல்வழிகள்

பதினைந்து, பதினாறாம் நூற்றாண்டுகளில் பல புதிய கடல்வழி களையும் (Geographical Discoveries) நிலப்பகுதிகளையும் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஐரோப்பியர்கள் ஈடுபட்டார்கள். அம் முயற்சியில் அவர்கள் வியத்தகு வெற்றியையும் பெற்றார்கள். அத்தகைய முயற்சியை அவர்கள் ஏன் மேற்கொண்டார்கள்? அதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றைப்பற்றி நாம் அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

### 1. காரணங்கள்

பண்டைக்காலந்தொட்டே ஆசிய நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையே வாணிகம் நடைபெற்றுவந்தது. 11—13ஆம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற சிலுவைப் போர்களின் (Crusades) விளைவாக ஆசிய-ஐரோப்பிய நாடுகளுக்கிடையே நிலவிவந்த வாணிக உறவு வலுப்பெற்றது. இந்தியா, சீனா போன்ற நாடுகளி லிருந்து உயர்ந்த பட்டாடைகள், தந்தம், முத்து முதலான ஆடம் பரப் பொருள்களும், சுவையான உணவைச் சமைக்க மிளகு, இலவங்கம், ஏலக்காய் முதலான நறுமணப் பொருள்களும் ஐரோப் பியர்களுக்குத் தேவைப்பட்டன.

13ஆம் நூற்றாண்டின் இறுதியில், வெனிஸ் நகரத்து வணிக ரான மார்கோ போலோ (Marco Polo) சீனா, ஜப்பான், சுமத்ரா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்குச் சென்றிருந்தார். சீனாவை அப்பொழுது புகழ்வாய்ந்த பேரரசர் குப்ளே கான் (Kublai Khan) ஆட்சி செய்து வந்தார். அப் பேரரசரின் அன்பான ஆதரவுடன் மார்கோ போலோ சீனாவில் ஏறத்தாழப் பதினேழு ஆண்டுகள் தங்கியிருந்தார். தமிழ் நாட்டின் தலையாய நகரமான மதுரைக்கும் அவர் வந்திருந்தார். செல்வவளம் மிக்க இந்தியா, சீனா போன்ற நாடுகளைக் கண்டு அவர் வியந்தார். தம் தாய் நாடாகிய இத்தாலிக்குச் சென்ற பின்னர் மார்கோ போலோ, தாம் ஆசிய நாடுகளில் கண்டவற்றையும் கேட்டவற்றையும் பற்றி விளக்கமாகப் பயணக் கட்டுரைகளாக எழுதினார். சுவைமிகுந்த


புதிய கடல் வழிகள்
ஆசியா
ஐரோப்பா
ஆப்பிரிக்கா
இந்தியப் பெருங்கடல்
தென் அமெரிக்கா
வட அமெரிக்கா
ஸ்பெயினுக்கு
போர்த்துகலுக்கு
கொலம்பஸ்
வாஸ்கோடகாமா
மெகல்லன்
1521
1522
1498
1497
1492
1519

அக் கட்டுரைகளைப் படித்த ஐரோப்பியர்கள் வளம்கொழிக்கும் ஆசிய நாடுகளைக் காணவும், அங்கு வாணிகம் செய்யவும் ஆர்வம் கொண்டார்கள்.

ஆனால், பின்னர் நிகழ்ந்த அரசியல் நிகழ்ச்சிகள் அவர்களுக்கு இடையூறுகளை விளைவித்தன. 1453ஆம் ஆண்டு ஆட்டோமன் துருக்கியர்கள் கான்ஸ்டான்டிநோபிள் நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அந் நகரம் அந்த ஆண்டுவரை கிழக்கு ரோமானியப் பேரரசு என்று அழைக்கப்பட்ட பைசான்டியப் பேரரசின் (Byzantine Empire) தலைநகரமாகவும், பன்னாட்டுச் சிறப்புமிக்க வணிகத் தலமாகவும் விளங்கியது. கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்றிக்கொண்ட துருக்கியர்கள், ஐரோப்பியர்களின் வாணிக வழிகளுக்குத் தடைகளை விதித்தனர்; பல கட்டுப்பாடுகளை விதித்துக் கட்டணங்களைத் திரட்டினர். அதனால் இந்தியா போன்ற கிழக்கு நாடுகளுக்குச் செல்லப் புதிய கடல் வழியைக் காணவேண்டிய கட்டாயம் ஐரோப்பியர்களுக்கு ஏற்பட்டது.

14ஆம் நூற்றாண்டுக்கு முன்னர்க் கடல்வழிப் பயணம் ஆபத்தானதாக இருந்தது. அந் நூற்றாண்டில் ஓரளவு பாதுகாப்பான கடல்வழிப் பயணக் கருவிகளாகிய மாலுமியின் திசை காட்டும் கருவி (Mariner's Compass), அஸ்ட்ரோலேப் (Astrolabe), கிராஸ்-ஸ்டாஃப் (Cross-staff) முதலானவற்றை மாலுமிகள் பயன்படுத்தத் தொடங்கினர். மேலும், கப்பல் கட்டும் தொழிலில் ஏற்பட்ட முன்னேற்றத்தினால் போர்ச்சுகல் நாட்டில் மிக உறுதியான வணிகக் கப்பல்கள் கட்டப்பட்டன. அவற்றைப் பெரும்பாலான வாணிகர்களும் மாலுமிகளும் பயன்படுத்தத் தொடங்கினர். இவை அனைத்தும் பாதுகாப்பான கடல்வழிப் பயணத்திற்கு உதவின.

திருச்சபையைச் சார்ந்த கிறித்தவ குருமார்கள் கிறித்தவ மதத்தைப் பரப்பவேண்டுமென விரும்பினர். மதத்தைப் பரப்பவும் மக்கள் தொண்டு செய்யவும் விரும்பிய அவர்கள் ஆசிய நாடுகளுக்கும் மற்றப் புதிய நிலப்பகுதிகளுக்கும் செல்ல ஆர்வம் கொண்டனர். அதற்கேற்பத் திருச்சபையும் அரசும் அவர்களுக்குத் தேவையான உதவியைச் செய்ய ஆயத்தமாக இருந்தன.

துணிச்சல் மிக்க ஐரோப்பியர்கள் சிலர் ஏதாவது ஒரு பெரும் சாதனையைச் செய்துகாட்டிப் புகழ் பெறவேண்டும்; தங்கள் பெயர்கள் வரலாற்று ஏடுகளில் அழியா இடம்பெற வேண்டும் என்ற வீர உணர்வைப் (adventurous spirit) பெற்றார்கள். அதற்கான வாய்ப்பைப்பெற அவர்கள் துடித்துக்கொண்டிருந்தனர்.

இடைக்காலத்தின் இறுதியில் 'உலகம் கோள வடிவமுடையது' என்ற கருத்துப் பல ஐரோப்பியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து மேற்காகவோ கிழக்காகவோ பயணம் செய்தால் மீண்டும் அதே இடத்திற்கு வந்து சேரமுடியும் என்ற கருத்தை அவர்கள் உறுதியாக நம்பினார்கள், இத்தகைய சூழ்நிலைகளால் உந்தப்பட்ட ஐரோப்பியர்கள், புதிய கடல் வழிகளையும் நிலப்பகுதிகளையும் காண முற்பட்டனர்.

புதிய கடல்வழிகளையும் நாடுகளையும் காணும் நோக்கத்தில் போர்ச்சுகலும் ஸ்பெயினும் முதல் முயற்சிகளை மேற்கொண்டன. இந் நாடுகளின் வீரம் மிக்க மாலுமிகள்தாம், வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனைகளைச் செய்து காட்டினர்.

## 2. புதிய கடல் வழிகளையும் நிலப்பகுதிகளையும் கண்டவர்கள்

இளவரசர் ஹென்றி (1394—1460) : போர்ச்சுகல் நாட்டின் இளவரசர் ஹென்றி வணிகர்களுக்கும் மாலுமிகளுக்கும் வேண்டிய உதவியையும் ஊக்கத்தையும் மனந்தளராது தந்தார். ஆகவே தான் இவர் 'கப்பலோட்டிய இளவரசர் ஹென்றி' (Henry, the Navigator) என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். இவருடைய முயற்சியின் விளைவாக வட அட்லான்டிக் கடலிலுள்ள மடெய்ரா (Madeira), அசோரெஸ் (Azores), மற்றும் கானரி (Canary) போன்ற தீவுக்கூட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவருடைய மாலுமிகள் ஆப்பிரிக்காவின் மேற்குக்கரை ஓரமாகப் பயணம் செய்து செனிகல் (Senegal) மற்றும் காம்பியா (Gambia) முகத் துவாரப் பகுதிகளை ஆய்ந்தறிந்தனர்; ஆப்பிரிக்காவின் மேற்குக் கோடி முனையான வெர்டி முனையையும் (Cape Verde) கண்டறிந் தனர். ஹென்றிக்குப் பின் ஆட்சிக்கு வந்த அரசர்கள் இத்தகைய முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவு தந்தனர்.

பர்தொலோமியோ டயஸ் (Bartolomeu Diaz, 1450—1500): இவரும் போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்தவரே ஆவார். 1487 ஆம் ஆண்டு ஆப்பிரிக்காவின் தென்கோடி முனைவரை அவர் சென்றார். அங்கிருந்து தமது பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள முடிய வில்லை. ஏனெனில், அங்கு மிகக் கடுமையாகப் புயல் வீசியது. எனவே, அம் முனைக்குப் 'புயல்முனை' என்று பெயரிட்டுத் தாயகம் திரும்பினார். இதுவே பின்னர் 'நன்னம்பிக்கை முனை' (Cape of Good Hope) என்று வழங்கப்பட்டது.

கிறிஸ்டொஃபர் கொலம்பஸ் (Christopher Columbus, 1451—1506) : கொலம்பஸ் இத்தாலியிலுள்ள ஜெனோவா (Genoa) என்னும் நகரத்தைச் சேர்ந்த ஒரு வணிகர் ஆவார். இளம் வயதிலேயே இவர் பல கடல்வழிப் பயணங்களை

மேற்கொண்டு இங்கிலாந்து, ஐஸ்லாந்து முதலான நாடுகளுக்குச் சென்றிருந்தார். 1478ஆம் ஆண்டில் கொலம்பஸ் ஒரு போர்ச்சு கீசியப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார்.

மேற்கு நோக்கிப் பயணம் செய்து இந்தியா, சீனு மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுக்குச் செல்ல முடியும் என இவர் நம்பினுர். தம் கடல்வழிப் பயணத்திற்கு முதலில் போர்ச்சுகல் நாட்டு அரசரின் உதவியை நாடினுர். ஆனுல் அவர் உதவி செய்ய மறுத்துவிட்டார். எனவே, பின்னர் ஸ்பெயின் நாட்டு அரசர் ஃபெர்டினுண்ட் (Ferdinand), அரசி இஸபெல்லா (Isabella) ஆகியோரின் உதவியைக் கொலம்பஸ் நாடினுர். ஆனுல், அந்த நேரத்தில் அரசரும் அரசியும், ஸ்பெயினில் உள்ள கிரானடாவி லிருந்து (Granada) மூர்களை (Moors) விரட்டியடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அதனுல் உடனடியாக அவர்கள் கொலம் பஸுக்கு உதவி செய்ய முன்வரவில்லை. எனினும், மூர்களுக்கு எதிரான போர் முடிவடைந்த பின்னர், பின்சோன் சகோதரர் களின் (Pinson Brothers) பரிந்துரையால் அரசர் ஃபெர்டி னுண்டும் அரசி இசபெல்லாவும் கொலம்பஸுக்கு உதவி செய்ய முன்வந்தனர்.

1492ஆம் ஆண்டு ஆகஸ்டு மூன்ரும் தேதி மூன்று கப்பல் களில் கொலம்பஸ் உட்பட எண்பத்தெட்டு மாலுமிகள், ஸ்பெயின் நாட்டின் பாலோஸ் (Palos) துறைமுகத்திலிருந்து மேற்கு நோக்கிப் புறப்பட்டனர். அச்சம் மிகுந்த அப் பயணம் அறுபத் தொன்பது நாள்கள் நீடித்தது. இறுதியில் அந்த ஆண்டு அக்டோபர் மாதம் பன்னிரண்டாம் நாள் அவர்கள் நிலப் பகுதியைக் கண்டனர்; பெருமகிழ்ச்சி அடைந்தனர். தாம் ஆசியாவின் ஒரு பகுதிக்கு வந்திருப்பதாகக் கொலம்பஸ் கருதினுர். ஆனுல், உண்மையில் அவர் கண்டது பஹாமா (Bahama) தீவுகளில் ஒன்றேயாகும். அவர் அத் தீவுக்கருகிலிருந்த பிற தீவுகளுக்கும் சென்ருர். அவை அனைத்தும் இந்தியாவிற்கு அருகில் இருக்கும் தீவுகள் என்று அவர் கருதினுர். எனவே, அத் தீவுகளில் காணப் பட்ட மக்களைச் செவ்விந்தியர்கள் (Red Indians) என்று கொலம்பஸ் அழைத்தார்.

தாம் ஒரு புதிய நிலப்பகுதியைக் கண்டதற்குச் சான்ருக, ஆறு செவ்விந்தியர்களோடு, சில பறவைகளையும் செடிகொடி களையும் எடுத்துக்கொண்டு 1493ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கொலம்பஸ் ஸ்பெயினுக்குத் திரும்பி வந்தார். அவருடைய வெற்றிகரமான பயணத்தைப்பற்றி அறிந்த அரசரும் அரசியும் பெருமகிழ்ச்சி கொண்டனர். அவரைப் பாராட்ட பார்சிலோனு

(Barcelona) என்ற துறைமுக நகரத்தில் மிகப்பெரிய வரவேற்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. விழாவின்போது அரசரும் அரசியும் எழுந்து நின்று கொலம்பஸை வரவேற்று, வானளாவப் புகழ்ந்து பேசினர்; அவருக்கு 'நைட்வீரர்' (Knighthood) பட்டத்தைக் கொடுத்துச் சிறப்பித்தனர். அவர் கண்டுபிடித்த பகுதிகளுக்கெல்லாம் அவரையே ஆட்சியாளராக ஸ்பெயின் நாட்டு அரசர் நியமித்தார்.

அதே ஆண்டு (1493) கொலம்பஸ் மற்றொரு பயணத்தை மேற்கொண்டார். இம் முறை புதிய நாடுகளிலிருந்து விலை மதிப்பு மிகுந்த நவரத்தினங்களையும், தங்கம், வெள்ளி மற்றும் பல செல்வங்களையும் கொலம்பஸ் கொண்டுவரவேண்டும் என்பதற்காக அரசரும் அரசியும் பதினேழு கப்பல்களை அவருடன் அனுப்பினர்! கொலம்பஸ் கண்ட தீவுகளில் செல்வம் ஏது? சென்ற கப்பல்கள் காலியாகத் திரும்பின. அரசரும் அரசியும் பெரும் ஏமாற்றமடைந் தனர். கொலம்பஸ் அவமானப்படுத்தப்பட்டார்.

எனினும், 1498-ல் தம்முடைய மூன்றாவது பயணத்தையும், 1502-3ஆம் ஆண்டுகளில் நான்காவது பயணத்தையும் கொலம்பஸ் மேற்கொண்டார். நான்காவது பயணத்தின்போது தென் அமெரிக்காவின் வடபகுதியிலுள்ள ஒரினோகோ (Orinoco) என்ற நதி கடலில் கலக்கும் பகுதியை ஆய்ந்தறிந்தார். தாம் கண்டது ஒரு புதிய கண்டம் என்பதை அறியாமலே 1506ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டில் ஏழ்மை நிலையில் கொலம்பஸ் இயற்கை எய்தினார்.

ஒரு புதிய கண்டத்தைக் கொலம்பஸ் கண்டுபிடித்தார். அவர் கண்டுபிடித்த புதிய கண்டத்திற்கு அமெரிக்கா என்ற பெயரை ஏன் சூட்டினார்கள் என்பதை நாம் அறிவது அவசியமாகும். இத்தாலியிலுள்ள ஃபிளாரன்ஸ் (Florence) என்னும் நகரத்தைச் சேர்ந்த அமெரிகோ வெஸ்புகி (Amerigo Vespucci) என்ற மாலுமி, தாம் 1497ஆம் ஆண்டு, தென் அமெரிக்காவின் பல பகுதிகளை ஆய்ந்தறிந்ததாகத் தம்மை விளம்பரப்படுத்திக் கொண்டார். அவர் உண்மையில் தென் அமெரிக்காவிற்குச் சென்றாரா என்பது தெரியவில்லை. எனினும், அவருடைய வெற்றியைப்பற்றி அவரா லேயே பரவலாக விளம்பரம் செய்யப்பட்டது. 1507ஆம் ஆண்டு ஒரு ஜெர்மானியப் புவியியல் அறிஞர் புதிய கண்டத்தை அமெரி கோவின் பெயராலேயே அழைக்கலாம் என்று கருத்துத் தெரிவித் தார். அக் கருத்தை ஏற்றுக்கொண்டு உலகப்பட தயாரிப்பாளர் கள் (Cartographers) படங்களை வெளியிட்டனர். இங்ஙனம் புதிய கண்டம் அமெரிக்கா என்ற பெயரைப் பெற்றது.

**போப்பின் ஆணை :** போர்ச்சுகலும் ஸ்பெயினும் குடியேற்றப் போட்டியில் ஈடுபட்டால், பின்னர் அவ்விரு நாடுகளுக்குமிடையே பல வணிகப் பிரச்சினைகளும் போர்களும் வரக் காரணமாக இருக்கக்கூடும் என்று ரோம் (Rome) நகரிலிருந்த திருச்சபையின் தலைவர் போப் ஆறும் அலெக்சாந்தர் (Pope Alexander-VI) கருதினர். எனவே, அவர் 1493ஆம் ஆண்டு ஓர் ஆணையை வெளியிட்டார். அதன்படி வட துருவத்தையும் தென் துருவத்தையும் இணைத்து அட்லாண்டிக் கடல் வழியாக ஒரு கற்பனைக் கோடு (Papal Line of Demarcation) வரையப்பட்டது. அக் கோட்டிற்கு மேற்கே உள்ள பகுதிகளிலெல்லாம் ஸ்பெயினும், கிழக்கேயுள்ள பகுதிகளிலெல்லாம் போர்ச்சுகலும், தங்கள் வாணிக ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என ஆணையிடப்பட்டது. அடுத்த ஆண்டு (1494) இரண்டு நாடுகளின் ஒப்புதலுடன் இக் கோடு இன்னும் மேற்கே, ஆப்பிரிக்காவின் மேற்குக் கோடி முனையான வெர்டி முனையிலிருந்து (Cape Verde) ஏறத்தாழ ஆயிரத்து நூறு மைல்களுக்கு மேற்கே வரையப்பட்டது. இக் கோடு தென் அமெரிக்காவின் கிழக்கில் பிரேசில் பகுதியை வெட்டிக் கொண்டு சென்றது. இவ் வாணையை இவ்விரு நாடுகளும் மதித்து நடந்து கொண்டன. ஆனல், மற்ற ஐரோப்பிய நாடுகள் அவ் வாணையை ஏற்றுக்கொள்ளவில்லை என்றே கூறலாம்.

**வாஸ்கோட காமா** (Vasco da Gama, 1460—1524) : போர்ச்சுகல் நாட்டு மாலுமியான இவர் தந்நாட்டு அரசரின் உதவியுடன், இந்தியாவிற்குக் கடல்வழி காண 1497ஆம் ஆண்டு நான்கு கப்பல்களுடன் லிஸ்பன் (Lisbon) துறைமுகத்திலிருந்து புறப்பட்டார். போப்பின் ஆணையை மதித்து, நன்னம்பிக்கை முனையிலிருந்து கிழக்கு நோக்கிப் பயணம்செய்து இந்தியாவிற்குச் செல்லவேண்டும் என்பது அவரது திட்டமாகும். அதன்படி அம் முனையைக் கடந்து ஆப்பிரிக்காவின் கிழக்குக் கரையோரமாகவே பயணம் செய்து, கென்யா கடற்கரை என்று இப்பொழுது வழங்கப்படுகின்ற மாலிந்தி (Malindi) பகுதியைப் போய்ச் சேர்ந்தார். அங்குச் சில இந்திய வணிகர்களைக் கண்டார். ஒரு வணிகரின் உதவியுடன் 1498ஆம் ஆண்டு கள்ளிக்கோட்டையில் (Calicut) வந்து இறங்கினர். அப் பகுதியின் சிற்றரசர் சாமரின் (Zamorin) அவரை அன்புடன் வரவேற்றார். இதைத் தொடர்ந்து இந்தியாவிற்கும் போர்ச்சுகலுக்குமிடையே வாணிக உறவு ஏற்பட்டது. வாஸ் கோட காமா மூன்று முறை இந்தியாவிற்கு வந்திருந்தார். அவர் மூன்றாவது முறை இங்கு வந்து தங்கியிருந்தபோது 1524ஆம் ஆண்டு கொச்சிக்கு அருகில் இறந்துவிட்டார். அவருடைய கல்லறைகூட அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுப் புதுப்பிக்கப்

பட்டது, பழைய உலகத்திற்குப் புதிய கடல்வழியைக் கண்ட பெருமை வாஸ்கோட காமாவிற்கு உரித்தாகின்றது.

1497—1519ஆம் ஆண்டுகளுக்கிடையில் உலகின் புதிய பகுதிகளைக் காணும் முயற்சிகளைப் பலர் மேற்கொண்டனர். இங்கிலாந்தைச் சார்ந்த காபட் (Cabot) பிற்காலத்தில் நியூஃபவுண்ட்லாந்து (New foundland) என்று வழங்கப்பட்ட பகுதியை 1497-ல் கண்டுபிடித்தார். போர்ச்சுகலைச் சார்ந்த காப்ரல் (Cabral) 1500ஆம் ஆண்டில் பிரேசில் (Brazil) பகுதியைக் கண்டறிந்தார். ஸ்பெயினிலிருந்து சென்ற பால்போா (Balboa) 1513ஆம் ஆண்டு பனுமாப் பகுதியைக் கடந்து பசிபிக் கடற்கரைவரை சென்று வந்தார். கார்டெஸ் (Cortes) என்ற மற்ளுெரு ஸ்பானிய வீரர் 1519-ல் ஐந்நூறுக்கும் மேற்பட்ட வீரர்களுடன் சென்று, மத்திய மெக்சிகோவைக் (Mexico) கண்டறிந்தார். அங்கு மிக உன்னத நிலையிலிருந்த 'அஸ்டெக் பேரரசைக்' (Aztec Empire) கண்டு வியந்தார்.

ஃபெர்டிஞண்ட் மெகல்லன் (Ferdinand Megellan, 1480-1521): போர்ச்சுகல் நாட்டில் பிறந்த இவர் ஸ்பெயின் நாட்டுக் குடிமகனுக மாறினுர். ஸ்பெயின் நாட்டு அரசர் முதலாம் சார்லஸின் (Charles I) உதவியுடன் மேற்கு நோக்கிப் பயணம் செய்து இந்தியாவிற்குக் கடல்வழியைக் காண விரும்பினுர்.[1] ஏற்கெனவே வாஸ்கோட காமாவினுல் கிழக்குத் திசைக் கடல்வழி கண்டுபிடிக்கப்பட்டிருந்ததை அவர் அறிந்திருந்தார். இந்தியாவிற்குக்கூட அவர் வந்திருந்தார். தமக்கு வேண்டிய தகவல்களைத் திரட்டிக்கொண்டு அவர் தம் பயணத்திற்கு ஆயத்தம் செய்தார்.

1519ஆம் ஆண்டு இருநூற்று எழுபது மாலுமிகளுடன் ஐந்து கப்பல்களில் மெகல்லன் புறப்பட்டார். அவற்றுள் 'விட்டோரியா' (Vittoria) என்பது முக்கியமான கப்பலாகும். தென்மேற்கே பயணம் செய்து முதலில் அவர்கள் பிரேசில் (Brazil) கடற்கரையில் இறங்கினர். பின்னர்க் கடற்கரை ஓரமாகவே சென்று லா பிளாடா (La Plata) என்ற பகுதியை அடைந்தனர். அங்குக் காணப்பட்ட உயரமான மக்களைப் படகோனியர்கள் (Patagonians) என்று மெகல்லன் அழைத்தார். தொடர்ந்து பயணத்தை மேற்கொண்டு தென் அமெரிக்காவின் தென் முனைக்கும், டெய்ரா டெல்ஃபியுகோ (Tierra del Fuego) என்ற தீவுக்கு

[1] ஸ்பெயின் நாட்டு அரசர் முதலாம் சார்லஸ் 1519ஆம் ஆண்டு புனித ரோமானியப் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதையடுத்து அவர் ஐந்தாம் சார்லஸ் என்று அழைக்கப்பட்டார்.

மிடையே உள்ள நீர்ச்சந்தியைக் (Strait) கடந்து சென்றார். அது இன்றும் அவர் பெயரால் 'மெகல்லன் நீர்ச்சந்தி' (Strait of Megellan) என்று வழங்கப்படுகிறது. அதை அடுத்துக் காணப் பட்ட பெருங்கடல் மிக அமைதியாக இருந்தது. எனவே, அதை அமைதிக்கடல் என்ற பொருள்படப் 'பசிஃபிக் பெருங்கடல்' (Pacific Ocean) என்று மெகல்லன் வழங்கினார்.

பசிஃபிக் பெருங்கடலில் மூன்று மாதங்களுக்குமேல் அவர்கள் பயணம் செய்தனர். ஆங்காங்குப் பல தீவுகளையும் அவர்கள் கண்டனர். இறுதியில் 1521ஆம் ஆண்டு பெரிய தீவுகளாகக் காணப்பட்ட தீவுக்கூட்டங்களில் வந்திறங்கினர். மெகல்லன் தமக்கு உதவி செய்த முதலாம் சார்லஸுக்கு நன்றி செலுத்தும் முறையில், அவருடைய மகன் இரண்டாம் ஃபிலிப்பின் (Philip II) நினைவாக, அத் தீவுகளுக்கு ஃபிலிப்பின் தீவுகள் (Philippine Islands) என்று பெயரிட்டார். அங்கிருந்த மக்கள் ஓரளவு நாகரிகமடைந்த வர்களாக இருந்தனர். முதலில் அவர்கள் மெகல்லனுக்கும் அவருடைய மாலுமிகளுக்கும் அன்பான வரவேற்பளித்தனர். அத் தீவுகளின் அரசரும் மெகல்லனுக்கு நண்பரானார். ஆனால், மிக விரைவிலேயே இந்த அயலவர்கள் அங்கு வாழ்ந்த மக்களின் பகைவர்களாயினர். அதைத் தொடர்ந்து இருபிரிவினருக்கு மிடையே கைகலப்பு ஏற்பட்டது. அதில் மெகல்லன் உள்படப் பலர் கொல்லப்பட்டனர். மெகல்லனின் மறைவு மற்ற மாலுமி களுக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. இறந்தவர்போக எஞ்சியிருந் தவர்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். இந்தியப் பெருங்கடல் வழியாக அவர்கள் சென்று 1522ஆம் ஆண்டு தாயகம் போய்ச் சேர்ந்தனர். 'விட்டோரியா' என்ற ஒரு கப்பல் மட்டுமே மிஞ்சியது. அதில் பதினெட்டு மாலுமிகள்தாம் இருந்தனர். உலகத்தை ஒரு முறை முதலில் சுற்றிவந்த பெருமை 'விட்டோரியா'வுக்கும் அந்தப் பதினெட்டு மாலுமிகளுக்கு மட்டுமே உரியதாகும். 'உலகம் கோள வடிவமுடையது' என்ற கருத்தை அவர்களது கடற்பயணம் மெய்ப்பித்துக் காட்டியது.

மெகல்லனைத் தொடர்ந்து, புதிய நிலப்பகுதிகளைக் காணும் முயற்சியில் ஐரோப்பிய மாலுமிகள் ஈடுபட்டனர். ஜாக்கஸ் கார்ட்டியர் (Jacques Cartier) என்ற ஃபிரெஞ்சு மாலுமி 1534-ல் வட அமெரிக்காவிலுள்ள செயின்ட் லாரன்ஸ் நதிப் பகுதியை ஆராய்ந்தறிந்தார். சர் ஃபிரான்சிஸ் டிரேக் (Sir Francis Drake) என்ற ஆங்கிலக் கடற்கொள்ளைக்காரர் 1577-80ஆம் ஆண்டுகளில் ஸ்பானிய வணிகக் கப்பல்களைக் கொள்ளையடித்து உலகைச் சுற்றி வந்தார். 1606ஆம் ஆண்டு, டாரெஸ் (Torres) என்ற டச்சு மாலுமி 'டாரெஸ் நீர்ச்சந்தி' (Torres strait) வழியாகக் கப்ப

லோட்டிச் சென்ருர். டாஸ்மன் (Tasman) என்ற மற்ருெரு டச்சு மாலுமி 1642-ல் டாஸ்மேனியாவைக் கண்டுபிடித்தார். 1770ஆம் ஆண்டு, ஜேம்ஸ் குக் (James Cook) என்ற ஆங்கில மாலுமி மேற்கொண்ட பயணத்தால் பின்னர் ஆஸ்திரேலியா இங்கிலாந்தின் குடியேற்ற நாடாயிற்று.

3. விளைவுகள்

ஐரோப்பியர்கள் புதிய கடல்வழிகளையும் நாடுகளையும் கண்டு பிடித்ததினுல் மனித சமுதாயத்தின் பல்வேறு வரலாற்றில் மிக முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டன. அவை சில இடங்களில் மனிதனின் வாழ்க்கை முறைகளையும் மாற்றியமைத்தன. அம் மாறுதல்கள் கீழ்க்காணும் விளைவுகளால் ஏற்பட்டவையாகும்.

பதினைந்தாம் நூற்ருண்டில் சிறிது தடைப்பட்ட வாணிகம் அதையடுத்த நூற்ருண்டுகளில் மிக விறுவிறுப்பாக நடைபெறத் தொடங்கியது. ஐரோப்பிய வணிகக் கப்பல்கள் மிகச் சாதாரண மாகப் பெருங்கடல்களில் உலவத்தொடங்கின. குறிப்பாக, அட்லாண்டிக் பெருங்கடல் கப்பல் போக்குவரத்து மிகுந்த நீர்ப் பரப்பாக மாறியது. மத்தியதரைக்கடல் அதன் பண்டைய சிறப்பினை இழந்தது. இடைக்காலத்தில் புகழ்வாய்ந்த வணிகத் தலங்களாக விளங்கிய வெனிஸ், ஜெனேவா, ஃபிளாரன்ஸ் போன்ற இத்தாலிய நகரங்களும், ஹேம்பர்க், லுபெக் போன்ற ஜெர்மானிய நகரங்களும் தங்கள் பெருமையை இழந்தன.

உலகம் கோள வடிவமுடையது என்ற கருத்து உறுதியாக நிரூபிக்கப்பட்டது. கடலில் பயணம் செய்பவர்கள் ஓரளவு அச்ச மின்றிப் பயணம் செய்து தாயகம் திரும்ப முடியும் என்று ஐயமின்றி நம்பினுர்கள். அதனுல் கடல்வழிப் பயணம் செய்த மாலுமிகள் மற்றும் வாணிகர்கள் எண்ணிக்கை உயர்ந்தது. அதிக மான கப்பல்களுக்குத் தேவை ஏற்பட்டது. அதை ஈடு செய்யக் கப்பல் கட்டும் தொழில் பெருமளவு வளர்ச்சியுற்றது.

பன்னுட்டு வாணிக வளர்ச்சியினுல் 'வங்கிமுறை' (Banking system) நடைமுறைக்கு வந்தது. முதன் முதலில் ஹாலந்து நாட்டில் 'ஆம்ஸ்டெர்டாம் வங்கி' (Bank of Amsterdam) 1608ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன் பின்னர் ஐரேப்பிய நாடுகளில் அத்தகைய வங்கிமுறை பின்பற்றப்பட்டது.

புதிய உலகமாகிய அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டது. இயற்கைச் செல்வங்கள் மிகுந்த அவ் வுலகத்தில் குடியேற்றங்களை அமைத்துக்கொள்ள ஐரோப்பிய நாடுகளிடையே கடும்போட்டி ஏற்பட்டது. தென் அமெரிக்காவின் பெரும் பகுதியை ஸ்பெயின்

கைப்பற்றிக்கொண்டது. வட அமெரிக்காவிலும் ஸ்பெயின், ஃபிரான்சு, இங்கிலாந்து முதலான நாடுகள் குடியேற்றங்களை அமைத்துக்கொண்டன. அங்கு ஏற்கனவே இருந்த பழங்குடிகளின் நாகரிகத்தை முற்றிலும் அழித்துவிட்டு, ஐரோப்பியர்கள் தங்கள் மொழி, மதம் மற்றும் நாகரிகத்தைப் பரப்பினர்.

அதேபோல ஆப்பிரிக்கக் கண்டத்திலும் ஆசியாக் கண்டத்திலும் பல நாடுகள் ஐரோப்பிய நாடுகளின் அடிமை நாடுகளாயின. அவர்களின் மொழி, மதம், பண்பாடு போன்றவை ஆசிய நாடுகளில் திணிக்கப்பட்டன.

புதிய உலகத்திற்குச் சென்று குடியேறிய ஐரோப்பியர்கள் தங்கள் தோட்டங்களில் உழைக்க ஆப்பிரிக்காவிலிருந்து நீக்ரோ அடிமைகளை அழைத்துச் சென்றனர். நீக்ரோ வாணிகம் விரைவாக நடைபெற்றது. நீக்ரோ அடிமைகள் அமெரிக்க அடிமைச் சந்தைகளில் மிருகங்கள்போல் நடத்தப்பட்டு விற்கப்பட்டார்கள். அவர்களின் வாழ்க்கைநிலை மிகக் கேவலமான முறையில் இருந்தது. இந்த நிலை மாற நீக்ரோக்கள் பிற்காலத்தில் பல போராட்டங்களை நடத்தவேண்டியதாயிற்று.

## II. அறிவியல் கண்டுபிடிப்புகள் (Scientific Discoveries)

13ஆம் நூற்றாண்டுவரை கிரேக்க, ரோமானியக் கருத்துகளையே ஐரோப்பியர் பின்பற்றினர். திருச்சபை கூறியவற்றைத் தெய்வ ஆணைபோல் அப்படியே ஏற்றுக்கொண்டனர். ஏற்றுக்கொள்ளாதவர்களும், திருச்சபைக்கு எதிர்ப்பான கொள்கைகளை வெளியிட்டவர்களும், திருச்சபையினாலும் அரசினாலும் துன்புறுத்தப்பட்டனர். எனினும், சில அறிவியல் மேதைகளும் சிந்தனைச் செம்மல்களும் தாங்கள் ஆய்ந்தறிந்த உண்மைகளை அஞ்சாமல் வெளியிட்டனர். அவர்கள் வெளியிட்ட முடிவுகள் வானியல் (Astronomy), கணக்கியல் (Mathematics), இயற்பியல் (Physics), மருத்துவம் (Medicine), உயிரியல் (Biology) போன்ற பல துறைகளைச் சார்ந்தவை ஆகும்.

ரோஜர் பேக்கன் (Roger Bacon, 1214-1294) : ஆங்கிலக் கிறித்துவமதப் பெரியாரான இவர் ஆக்ஸ்ஃபோர்ட் (Oxford), பாரிஸ் (Paris) ஆகிய பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகப் பணிபுரிந்தார்; அறிவியல் அறிஞராகவும் விளங்கினார். அறிவியல் அடிப்படையில் கிறித்துவ மதத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வியை மக்களுக்குப் புகட்ட வேண்டுமென அவர் வற்புறுத்

தினர். அரிஸ்டாட்டிலின் (Aristotle) காலத்துக்கு ஒவ்வாத கருத்துகளைப் படிப்பதில் பயனில்லை என்று பேக்கன் கூறினர். மூக்குக் கண்ணாடி, தொலைநோக்கி (Telescope) போன்றவற்றை இவர் கண்டுபிடித்தார்.

லியனர்டோ டா வின்சி (Leonardo da Vinci, 1452-1519) : இத்தாலிய மறுமலர்ச்சிக் கலைஞரான இவர், உடலியல் அறிஞராகவும் விளங்கினர். நம் உடம்பிலுள்ள இரத்தம் உடல் முழுவதும் சுற்றுகிறது (Blood circulation in our body) என்ற உண்மையை வெளியிட்டார்.

கோபெர்நிகஸ் (Copernicus. *1473-1543*): போலந்து நாட்டைச் சேர்ந்த இவர் புரட்சிகரமான உண்மையை வெளியிட்டார். அகிலத்தின் (Universe) மையம் பூமியே; பூமியைச் சுற்றிதான் கதிரவன், நிலவுபோன்ற கோள்கள் இயங்குகின்றன என்று கி.மு. இரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த கிரேக்க அறிஞர் தாலமி (Ptolemy) கூறியிருந்தார். அக் கருத்தைக் கோபெர்நிகஸ் மறுத்தார். கதிரவனே அகிலத்தின் மையம்; கதிரவனைச் சுற்றிதான் பூமி முதலான பல கோள்கள் (Planets) இயங்குகின்றன என்று அவர் உறுதியாகத் தெரிவித்தார். திருச்சபை அவரை வன்மையாகக் கண்டித்துத் துன்புறுத்தத் துணிந்தது. இதே கருத்தைப் பின்னர் வலியுறுத்திய இத்தாலிய அறிவியல் அறிஞர் ஜியோர்டானோ புருனோவை (Giordano Bruno, *1548-1600*) திருச்சபை தீயிலிட்டது.

எனினும் காலப்போக்கில் வானியல் துறையில் வெளியிடப்பட்ட புதிய கருத்துகளைத் திருச்சபை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. அதனால்தான் ரோமானியப் பேரரசின் காலத்திலிருந்து நடைமுறையில் இருந்துவந்த ஜூலியன் காலண்டரை (Julian Calendar) மாற்றியமைத்து 1582ஆம் ஆண்டு போப் பதின்மூன்றும் கிரிகரி, கிரிகேரியன் காலண்டரை (Gregarian Calendar) நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

கலிலியோ (Galileo, *1564-1642*): தொலைநோக்கியைச் செப்பனிட்டுக் கோள்களின் (Planets) இயக்கத்தைப்பற்றி இத்தாலிய அறிவியல் அறிஞரான கலிலியோ ஆராய்ந்தார். அதன் விளைவாகக் கோபெர்நிகஸின் முடிவு சரியானது என்று அவர் உறுதிப்படுத்தினர். பீசா (Pisa) நகரத்துக் கோபுரத்தின் உச்சியிலிருந்து வெவ்வேறு எடையுள்ள பொருள்களைக் கீழே போட்டுப் பொருளியக்கவியலின் (Dynamics) கோட்பாடுகளை விளக்கினர்.

இத்தகைய அறிவியல் கண்டுபிடிப்புகளாலும், புதிய கடல் வழிகளாலும் ஐரோப்பிய மக்களின் எண்ணங்களிலும் கருத்துகளிலும் வியத்தகு மாறுதல்கள் ஏற்பட்டன.

# 3. இத்தாலியில் மறுமலர்ச்சி

## 1. விளக்கம்

இடைக்காலத்தின் இறுதியில் ஐரோப்பிய மக்களின் எண்ணங்கள், கருத்துகள், செயல்கள் மற்றும் அவர்களால் படைக்கப்பட்ட இலக்கியங்கள், கலைப்பொருள்கள் முதலானவற்றில் மாறுதலும் புதிய தோற்றமும் ஏற்பட்டன. இத்தகைய புத்துயிர் அளிக்கும் புதியதோர் இயக்கம் இத்தாலியில் 13, 14ஆம் நூற்றாண்டுகளிலிருந்து தொடங்கியது. அதற்கு 'மறுமலர்ச்சி' (Renaissance) என்று பெயர். இது 'மறுபிறப்பு' (rebirth) என்ற பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது. அதாவது பண்டைக் காலத்தில் எழுதப்பட்ட கிரேக்க, இலத்தீன் மொழி நூல்கள் தேடி எடுக்கப்பட்டு அச்சிடப்பட்டன. அவற்றை இலட்சக்கணக்கான மக்கள் படிக்கத் தொடங்கினர். அந்த முறையில் அந்த இலக்கியங்கள் 'மறுபிறப்பு'ப் பெற்றன. இந்த இயக்கம் இத்தாலியில் தொடங்கியது என்றாலும் 15, 16ஆம் நூற்றாண்டுகளில் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவி, ஐரோப்பியச் சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல்களை ஏற்படுத்தியது.

இடைக்காலத்தில் கிறித்துவ மதத்தின் தெய்வீக நெறி முறைகளுக்கும், திருச்சபையின் (Church) கடுமையான சில விதிகளுக்கும் கட்டுப்பட்டு ஒருவிதமான அடிமை வாழ்க்கையையே மக்கள் நடத்தி வந்தனர். திருச்சபை கூறியதைக் கண்மூடித்தனமாக அப்படியே அவர்கள் ஏற்றுக்கொண்டனர். ஆனால், நவீன காலத்தின் தொடக்கத்திலேயே ஐரோப்பியர்கள், குறிப்பாக இத்தாலியக் கவிஞர்களும், கலைஞர்களும், அறிஞர்களும் எதையும் பகுத்தறிவைக் கொண்டு ஆய்ந்தறிந்து தங்கள் முடிவுகளை யாருக்கும் அஞ்சாமல், இலக்கியங்களாகவும், கலைக் கருவூலங்களாகவும் படைத்தார்கள். அவை அழியா வரம் பெற்று இன்றும் வரலாற்றுச் சின்னங்களாக விளங்குகின்றன.

## 2. மறுமலர்ச்சியின் தாயகம் இத்தாலி

மறுமலர்ச்சி இயக்கத்தின் தாயகம்—பிறப்பிடம்—இத்தாலி ஆகும். ஆதாவது, இத்தாலி மறுமலர்ச்சியின் தொட்டில் (Cradle

of Renaissance) என்று வழங்கப்படுகின்றது. ஏனெனில், அழிந்து விட்ட ரோமானியப் பேரரசின் பெருமைகளை இத்தாலியில் நிலை நாட்ட இத்தாலியர்கள் விரும்பினர். ஜூலியஸ் சீசர் (Julias Caesar) மற்றும் அகஸ்டஸ் (Augustus) போன்ற ரோமானியப் பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில் ரோம் பெற்றிருந்த மேன்மை யையும், வெர்ஜில் (Virgil), ஹோரேஸ் (Horace) போன்ற கவிஞர் களின் சிறப்புகளையும் இத்தாலியர்கள் நினைவுகூர்ந்து அப் பெருமைகளை மீண்டும் நிலைநாட்ட விரும்பினர். மேலும், இத் தாலியில் நிலமானியத் திட்டம் (Feudalism) ஓரளவுதான் பரவி யிருந்தது. அதுவும் வீழ்ச்சியுற்றபின் சுதந்திரமான குடிமக்கள் கட்டுப்பாடுகள் எவையுமின்றித் தங்கள் கருத்துகளை வெளியிட்ட னர். அதனுடன் 13, 14ஆம் நூற்றுண்டுகளில் வட இத்தாலி வளம் மிகுந்த பகுதியாக மாறியது. அதனால் மக்கள் கலைகளை வளர்க்கும் பணியில் ஈடுபட்டனர். ஃபிளாரன்ஸ் (Florence) போன்ற நகரங்களில் இத்தகைய பணி செவ்வனே நடைபெற்றது. அதுமட்டுமின்றி மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் தாய்மொழியில் எழுதியதால் அவர்களுடைய இலக்கியங்கள் பெரும்பாலான மக் களால் படிக்கப்பட்டன. இத்தாலி முழுவதும் வலிமை மிகுந்த ஒரே முடியாட்சின்கீழ் இயங்கவில்லை. அதாவது, இத்தாலியின் பல பகுதிகள் வெவ்வேறு சிற்றரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தால், அரசுக்கு எதிரான கருத்துகள் மாக்கியவெல்லி (Machiavelli) போன்ற அறிஞர்களால் சுதந்திரமாக வெளியிடப்பட்டன. அதே போலத் திருச்சபையின் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்ட இத் தாலிய அறிஞர்கள் திருச்சபையின் அமைப்பைப் பற்றியும் சமுதா யத்தில் தேங்கிக்கிடந்த மூடப் பழக்கவழக்கங்களைப் பற்றியும் தீவிரமாகக் குறைகூறினர். எல்லாவற்றையும்விட அத்தகைய அறிஞர்களும் கலைஞர்களும் இத்தாலியில்தான் பிறந்தார்கள். அவர்கள் தங்கள் நாட்டின் பெருமையை நிலைநாட்டினார்கள். புகழ்பெற்ற அறிஞர்களும் கலைஞர்களும் தொடங்கிவைத்த இவ் வியக்கம் மற்றவர்களால் தொடரப்பட்டது. குறிப்பாக 1453ஆம் ஆண்டு கான்ஸ்டான்டி நோபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்ட பின்னர் அங்கிருந்த கிரேக்க அறிஞர்களும் கலைஞர்களும் இத்தா லிக்குச் சென்றனர்: அங்குத் தங்கள் பணியைத் தொடர்ந்தனர். இவற்றைத்தவிர வேறு பல சாதகமான சூழ்நிலைகள் இத்தாலியில் இருந்தன. எனவேதான், இத்தாலி மறுமலர்ச்சி இயக்கத்தின் தாயகமாயிற்று.

இத்தாலியில் நடைபெற்ற மறுமலர்ச்சி இயக்கம்பற்றி இரு பிரிவுகளின்கீழ் ஆராயலாம். அவை, (அ) இலக்கியத்துறை, (ஆ) கலைத்துறை ஆகியவை ஆகும்.

### 3. இலக்கியத் துறையில் மறுமலர்ச்சி

இத்தாலியில் வாழ்ந்த தாந்தே (Dante), பெட்ரார்க் (Petrarch), பொக்காஷியோ (Boccaccio) முதலானோர் இலத்தீன் மற்றும் கிரேக்க மொழிகளின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டனர். இவர்களில் சிலர் மக்கள் நடத்தவேண்டிய நெறியான வாழ்க்கையை வலியுறுத்தினர்; கிறித்துவ மதத்தைவிட மக்களின் நல்வாழ்வுக்குச் சிறப்பிடம் தந்தனர். அதனால் இவர்கள் 'மனித நலப் பற்றாளர்கள்' (Humanists) என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்களின் இலக்கியப் பணி தலை வணங்கிப் போற்றுதற்குரியதாகும்.

தாந்தே (1265-1321): இவர் ஃபிளாரன்ஸ் (Florence) நகரத்தில் வாழ்ந்த கவிஞர்களுள் தலைசிறந்தவர் ஆவார். இலக்கியத்துறை மறுமலர்ச்சிக்குத் தொடக்கவிழா நடத்தியவர் இவரே என்றால் மிகையாகாது. பொலொனா (Bologna), பாத்வா (Padua) ஆகிய பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி கற்று இலத்தீன் மொழியில் தேர்ச்சியும் கிறித்துவ மதத்துறைப் படிப்பில் (Theology) ஆழ்ந்த அறிவும் பெற்றார். புனித ரோமானியப் பேரரசு போன்ற அரசியல் அமைப்பின் மேன்மைகளையும், தாய் மொழியையே எல்லா நிலைகளிலும் பயன்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் தாந்தே விளக்கியுள்ளார்.

தாந்தே எழுதிய நூல்கள் எல்லாவற்றையும்விடத் தெய்வீக இன்பியல் (Divine Comedy) என்ற நூலே அவருடைய பெருமையையும் திறமையையும் பார் முழுவதும் பரப்பியது. இந் நூல் இத்தாலிய மொழியில் செய்யுள் வடிவில் கற்பனை மெருகோடு இயற்றப்பட்டுள்ளது. நரகம், பாவம் களையுமிடம், சுவர்க்கம் (Hell, Purgatory and Paradise) ஆகிய இடங்களுக்குத் தாந்தேயே யாத்திரை செய்வது போல எழுதியுள்ளார். நரகத்தில் பாவம் செய்த பாவிகள் கொடுமையான துன்பங்களை அனுபவிக்கின்றனர். பாவம் களையும் இடத்தில் இறந்தவரின் ஆன்மாக்கள் பாவங்களிலிருந்து விடுதலை பெறுகின்றன; சுவர்க்கத்தில் புண்ணியவான்களும் இறைவனும் இனிய இன்ப உலகில் வாழ்கிறார்கள் என்று படிப்போர் உள்ளத்தைக் கவருகின்ற முறையில் தாந்தே எழுதியுள்ளார். இந் நூலில் அவர் விளக்கியுள்ள உயர்ந்த கருத்துகள் தத்துவம் மற்றும் மதத் துறைகளுக்கு இலக்கணமாக அமைந்திருக்கின்றன. இந் நூல் இத்தாலியர்களிடையே தூய எண்ணங்களையும் உணர்வுகளையும் தோற்றுவித்தது.

பெட்ரார்க் (1304—1374): இத்தாலியில் வாழ்ந்த மனித நலப் பற்றாளர்களுக்கெல்லாம் தந்தையாக (Father of Humanists) இவர் விளங்கினார். தாந்தேவைப் போலவே பொலொனா, பாத்வா

ஆகிய பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி கற்றார். இவரும் ஃபிளாரன்ஸ் நகரத்தைச் சேர்ந்தவரே ஆவார். இலத்தீன் மொழியின் வளர்ச்சியில் பேரார்வம் காட்டினர். ஐரோப்பாக் கண்டத்தின் பல மடாலய நூலகங்களில் கேட்பாரற்றுக் கிடந்த இலத்தீன் மற்றும் கிரேக்க எழுத்தாளர்களின் கையெழுத்துப் பிரதிகளை அவரே தேடியெடுத்துப் பாதுகாத்து வெளியிட்டார். ரோமானியக் கவிஞர் சிசரோவின் (Cicero) இலக்கியப் படைப்புகளை ஒன்று திரட்டி, வெளியிட்டு இத்தாலியர்கள் இலத்தீன் மொழியின் பழம்பெருமையையும் கருவூலங்களையும் உணரச் செய்ய அரும்பாடுபட்டார்.

ரோமுக்கும் கார்த்தேஜுக்கும் (Carthage) நடைபெற்ற போரில் கி.மு. 202ஆம் ஆண்டில் நடந்த சாமா (Zama) போர்க் களத்தில், ஹானிபாலைத் (Hannibal) தோற்கடித்த ரோமானியப் படைத் தளபதி சிபியோ ஆஃப்ரிகானஸ் (Scipio Africanus) என்பவரின் வாழ்க்கை வரலாற்றையும், வியத்தகு வெற்றிகளையும் ஆஃப்ரிக்கா (Africa) என்ற நூலில் விவரித்துள்ளார். இது இத்தாலியரின் பழம்பெருமையையும் வீரத்தையும் மக்களுக்கு உணர்த்தியது; அவர்களின் ஒடுங்கியிருந்த நாட்டுப்பற்றைத் தட்டியெழுப்பியது. இது செய்யுள் வடிவில் இயற்றப்பட்ட சிறந்த காவியமாகும்.

பெட்ரார்க், தாம் பெரிதும் போற்றிப் புகழ்ந்த சில நாத்திக எழுத்தாளர்களுக்கு எழுதிய கடிதங்களைத் தொகுத்து 'அறிமுகமான கடிதங்கள்' (Familiar Letters) என்ற தலைப்பில் வெளியிட்டார். இவை அவருடைய கொள்கைகளை அறிந்துகொள்வதற்குப் பயன்பட்டன. கிரேக்க மொழியை அவரால் நன்கு கற்க முடியவில்லையாயினும் அம் மொழியையும் கற்க வேண்டியதன் அவசியத்தை அவர் தம் நாட்டு மக்களுக்கு உணர்த்தினர். கி.மு. 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க அரசியல் மேதை அரிஸ்டாடிலின் (Aristotle) நூல்கள் இலத்தீனில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தன. அவற்றை இத்தாலியர்கள் படிக்கவேண்டும் என அவர் வலியுறுத்தினர்.

பெட்ரார்க் கிறித்துவ மதப்பற்று மிகுந்தவரோ அம் மதத்தை வெறுத்தவரோ அல்லர். அவர், அகஸ்டைன் முனிவருடன் நடத்திய கற்பனை உரையாடலை 'இரகசியம்' (Secret) என்ற நூல் வடிவில் வெளியிட்டார். இது அவர் மனத்தினுள் ஏற்பட்ட ஆன்மீகப் போராட்டத்தின் விளைவாக உருவாகிய நூலாகும். மனித வாழ்க்கையில் மனிதன் எல்லா உலக இன்பங்களையும் துய்க்க வேண்டுமா துறவு வாழ்க்கை மேற்கொண்டு உடலை வருத்தி வாழ வேண்டுமா என அவர் ஐயுற்றார். அவருடைய பகுத்தறிவுக்

கருத்துகளும், தெள்ளிய இலத்தீன் மொழியில் அவர் தந்த விளக்கங்களும் நூற்றுக்கணக்கான மாணவர்களை அவர்பால் இழுத்தன. அவர்கள் பின்னர் நாடு முழுவதும் அறிவுப் பிரசாரம் செய்தனர்.

பொக்காஷியோ (1313-1375) : பெட்ராார்க்கின் மாணவர்களுள் பொக்காஷியோ தலைசிறந்தவர் ஆவார். அவர் எழுதிய 'டெக்கமெரான்' (Decameron) என்ற நூலில் பல சுவையான கதைகள் உள்ளன. ஃபிளாரன்ஸ் நகரில் ஒருமுறை பிளேக் நோய் (Plague) பரவியது. அப்பொழுது அந் நகரச் சீமான்களும் சீமாட்டிகளும் நகரத்துக்குச் சில மைல்களுக்கு அப்பால் சென்று விட்டனர். அவர்கள் செல்லும்போது ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்ட கதைகளின் தொகுப்பே இந் நூலாகும். இதில் திருச்சபையினர் நடத்திவந்த உலக வாழ்க்கையைப் பொக்காஷியோ சாடுகின்றார். இக் கதைகளின் பாணியிலேதான் ஆங்கிலக் கவிஞர் சாசர் (Chaucer), 'கான்டர்பரிக் கதைகள்' (Canterbury Tales) என்ற நூலை எழுதினார். தம் ஆசிரியர் பெட்ரார்க் கூறியதைப் போலவே பொக்காஷியோவும் இலத்தீன் மொழியோடு கிரேக்க மொழியையும் இத்தாலியர்கள் கற்க வேண்டும் என விரும்பினார்.

மாக்கியவெல்லி (1469-1527) : இவர் ஃபிளாரன்ஸ் நகரத்தைச் சேர்ந்த ஓர் அரசியல் அறிஞர் ஆவார். அவர் எழுதிய 'இளவரசன்' (The Prince) என்ற நூல் மிகவும் புகழ்வாய்ந்ததாகும். அதில் அவர் பல அரசியல் கருத்துகளையும் அரசர்கள் அறிந்திருக்க வேண்டிய ராஜதந்திரங்களைப் பற்றியும் விவரிக்கின்றார். 'ஓர் அரசனுக்கு மனிதப் பண்பாடும், மிருக பலமும், நரியின் தந்திரமும் வேண்டும்' என்று மாக்கியவெல்லி கூறுகின்றார். மக்களை அடக்கி ஆள அரசர் ஏதாவது ஒரு மதத்தைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும் எனக் கூறுகின்றார்.

இந்த இத்தாலிய மேதைகளின் நூல்கள் பெரும் எண்ணிக்கையில் அச்சிடப்பட்டு ஐரோப்பா முழுவதும் விநியோகிப்பதற்குச் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டது. 1445ஆம் ஆண்டு கூடன்பெர்க் (Gutenberg) என்ற ஜெர்மானியர், மெய்ன்ஸ் (Mainz) நகரத்தில் அச்சு இயந்திரத்தை அமைத்தார். பத்தாண்டுகளுக்குப்பின் விவிலியநூல் (Bible) இலத்தீன் மொழியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. 1465-ல் இத்தாலியிலேயே அச்சு இயந்திரம் அமைக்கப்பட்டது. 1477ஆம் ஆண்டு வில்லியம் காக்ஸ்டன் (William Caxton) என்ற ஆங்கிலேயர் சிறிது செம்மையாக்கப்பட்ட அச்சு இயந்திரத்தை இங்கிலாந்தில் உள்ள வெஸ்ட்மினிஸ்டரில் (West minster) அமைத்தார். அதனால் ஐரோப்பிய இலக்கியங்களைப் பெரும் எண்ணிக்கையில் அச்சிட்டு வெளியிட வழி ஏற்பட்டது.

4. கலைத்துறையில் மறுமலர்ச்சி

ரோமானியப் பேரரசின்மீது படையெடுத்த பார்பேரியன்கள் (Barbarians) என்று சொல்லப்பட்ட முரட்டு இனத்தினர் அதன் கலைக் கருவூலங்கள் பலவற்றை அழித்துவிட்டனர். இடைக்காலத்தில் திருச்சபையின் கட்டுப்பாடுகளால் அழகு கலைகள் புத்துயிர் பெறவில்லை. 15, 16ஆம் நூற்றுண்டுகளில் கட்டடக்கலை, சிற்பம், ஓவியம், இசை போன்ற நுண்கலைகளில் புதிய பாணிகளும் தோற்றங்களும் பின்பற்றப்பட்டன. உடல் அழகை எடுத்துக் காட்டும் கலை அம்சங்கள் இயல்பாகப் பின்பற்றப்பட்டன. இக் கலைகளுக்குப் புத்துயிரும் மெருகும் ஊட்டியவர்களுள் லியஞர்டோ டா வின்சி (Leonardo da Vinci), மைக்கேல் ஆஞ்சிலோ (Michael Angelo) ராஃபேல் (Raphael) மற்றும் பொட்டிசெல்லி (Botticelli), டிடியன் (Titian) முதலானவர்கள் முக்கியமானவர்களாவர்.

லியஞர்டோ டா வின்சி (1452-1519) : இவர் பல்கலை வல்லுநர் ஆவார். சிறந்த ஓவியராகவும், சிற்பியாகவும், பொறியியல் நிபுணராகவும், மருத்துவராகவும், விஞ்ஞானியாகவும், சிந்தனையாளராகவும் லியஞர்டோ விளங்கிஞர். அவர் வரைந்த வண்ண ஓவியங்கள் ஃபிளாரன்ஸை அழகுபடுத்துகின்றன. லியஞர்டோ வரைந்த ஓவியங்களுள் சாகா வரம் பெற்றது இயேசுவின் இறுதி உணவு' (Last Supper) என்ற ஓவியமாகும். 'மோஞலிசா' (Mona Lisa) என்ற புன்னகை செய்யும் பெண்ணின் வண்ண ஓவியம் அவருடைய மற்றொரு புகழ்மிக்க படைப்பாகும். நம் உடலிலுள்ள இரத்தம் உடல் முழுவதும் சுற்றி வருகின்றது—இரத்த ஓட்டம் (Blood Circulation)—என்ற உண்மையை முதன் முதலில் கண்டு பிடித்தவர் லியஞர்டோ ஆவார். இன்று விண்ணில் பறக்கும் விமானங்கள் எந்தத் தத்துவத்தின் அடிப்படையில் இயங்குகின்றன என்பதை அவர் அன்றே அறிந்திருந்தார். அவர் அறியாத கலையில்லை; அவர் கரம் படாத இடம் இல்லை; அவர் பிறப்பால் இத்தாலி பெருமை பெற்றது.

மைக்கேல் ஆஞ்சிலோ (1475-1564) : சிறந்த ஓவியராகவும், சிற்பியாகவும், கட்டடக் கலைஞராகவும் இவர் விளங்கிஞர். இவர் வரைந்த சுவரோவியங்கள் (frescoes) இன்றும் வாடிகன் நகரில் (Vatican City) உள்ள 'சிஸ்டைன் தேவாலயத்தை' (Sistine Chapel) அழகுபடுத்துகின்றன. அவற்றுள் 'இறுதித்தீர்ப்பு' (Last Judgement) என்ற வண்ண ஓவியம் மிகவும் புகழ்வாய்ந்ததாகும். மேலும், ரோம் நகரத்தில் உள்ள கம்பீரமான 'புனிதப் பீட்டர் தேவாலயம்' (St. Peter's Cathedral) மைக்கேல் ஆஞ்சிலோவின் திட்டப்படி கட்டப்பட்டதாகும். தூய்மையான சலவைக் கற்களால் அழகு மிக்க சிற்பங்களை வடிப்பதில்கூட இவர் வல்லவராக விளங்கிஞர்.

ராஃபேல் (1483-1520) : மிகச் சிறந்த ஓவியராகவும் கட்டடக் கலைஞராகவும் இவர் விளங்கினார். 'புனிதப் பீட்டர் தேவாலயம்' கட்டப்படுவதற்கு மைக்கேல் ஆஞ்சிலோவுடன் பணியாற்றியவர்களுள் ராஃபேல் முக்கியமானவர் ஆவார். வாடிகன் அரண்மனையினுள் பல அறைகளில் தீட்டப்பட்ட ஓவியங்கள் ராஃபேலின் கைவண்ணமேயாகும். எல்லாவற்றையும்விட தீட்டிய மேரி அன்னையின் ஓவியங்கள் உலகப் புகழ் வாய்ந்தவை ஆகும்.

5. மற்ற நாடுகளில் மறுமலர்ச்சி

மறுமலர்ச்சி இயக்கம் இத்தாலியுடன் நின்றுவிடவில்லை. புத்தொளி வீசிய அவ் வியக்கம் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் பரவியது.

இங்கிலாந்தில் ஆக்ஸ்ஃபோர்ட் (Oxford) பல்கலைக்கழகத்தில் இவ் வியக்கம் முதலில் தொடங்கியது. ஜான் கோலெட் (John Colet), இராஸ்மஸ் (Erasmus) போன்றவர்கள் விவிலிய நூலை (Bible) ஆராய்ந்தறிந்து புதிய கருத்துகளை வெளியிட்டனர். சர் தாமஸ் மூர் (Sir Thomas Moor) 'உடோபியா' (Utopia) என்ற கற்பனை நூலை வெளியிட்டுச் சமுதாயத்தில் வேரூன்றியிருந்த குறைகளைச் சாடினார். இவர்கள் அனைவரும் 'ஆக்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தவாதிகள்' (Oxford Reformers) என்று அழைக்கப்பட்டனர்.

ஜெர்மனியில் புரட்சி எழுத்தாளர்கள் திருச்சபையிலிருந்து குறைகளைக் கண்டித்தார்கள். ஃபிரான்ஸ் நாட்டிலும் அத்தகைய இயக்கம் தொடங்கியது.

6. விளைவுகள்

பல இடங்களில் கேட்பாரற்றுக் கிடந்த கிரேக்க, இலத்தீன் இலக்கியங்கள் புத்துயிர் பெற்றன. உயர்தனிச் செம்மொழியாகிய கிரேக்க மொழியில் எழுதப்பட்ட சாக்ரடீஸ் (Socrates) பிளேடோ (Plato), அரிஸ்டாடில் (Aristotle) முதலானோரின் கருத்துகளும், நூல்களும் இலத்தீனில் மொழிபெயர்க்கப்பட்டன. அவற்றை இத்தாலியர்கள் படிக்கவேண்டுமெனப் பெட்ரார்க் முதலான மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் வற்புறுத்தினார்கள். அங்ஙனமே வெர்ஜில் (Virgil) முதலான ரோமானியக் கவிஞர்களின் இலக்கியங்கள் புத்துயிர் பெற்றன. அவை மனிதனின் நலம் பேணும் (Humanistic) நூல்களாகக் கருதப்பட்டன.

மறுமலர்ச்சி இயக்கம் தொடங்கிய பின்னர்தான் தன்னிச்சையாகச் சிந்தித்துச் செயல்படும் உணர்வை மக்கள் பெற்றனர்,

அதன் விளைவாகப் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளும் புதிய கடல் வழிக் கண்டுபிடிப்புகளும் நிகழ்ந்தன. மறுமலர்ச்சியைத் தொடர்ந்துதான் பகுத்தறிவுக்காலம் (Age of Reasoning) தொடங்கிச் சமயச் சீர்திருத்த இயக்கமும் (Reformation) நடைபெற்றது. விவிலிய நூலும் பல ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப்பட்டது.

தேசிய உணர்வு (Nationalism) மக்களிடையே வேகமாகப் பரவியது. இங்கிலாந்து, ஃபிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகல், ஹாலந்து முதலான நாடுகள் ஒருங்கிணைந்து, தேசிய நாடுகள் (Nation States) எழுச்சிபெற்று வலுப்பெற்றன. அதே நேரத்தில் திருச்சபை வலுவிழக்கத் தொடங்கியது.

கிரேக்க மொழிக்கும் இலத்தீன் மொழிக்கும் சிறப்புக் கொடுக்கப்பட்டது. அதனால் உள்நாட்டு மொழிகளின் வளர்ச்சி குன்றிவிடும் என்று அஞ்சப்பட்டது. உண்மையில் அந்த நிலை ஏற்படவில்லை. உள்நாட்டு மொழிகளும் வளர்ச்சி பெற்றன. அதே போல மற்ற ஐரோப்பிய மொழிகளும் மறுமலர்ச்சியின் விளைவாக வளர்ச்சியுற்றன. குறிப்பாக 15ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இன்றுள்ளது போன்ற முழுமை பெற்ற ஆங்கிலம் என்ற மொழி இல்லை என்பதும், 14ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்தில் வாழ்ந்த சாசர் (Chaucer) என்ற ஆங்கில அறிஞரின் இலக்கியத் தொண்டினால்தான் அம் மொழி வளர்ச்சியுறத் தொடங்கியது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அவர் எழுதிய ' கான்டர்பரிக் கதைகள் ' பொக்காஷியோவின், ' டெக்கமெரான் ' என்ற இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டது என்பது ஏற்கெனவே கூறப்பட்டது.

பழம்பெரும் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க ஐரோப்பிய அரசுகள் முற்பட்டன. அவற்றின் பெருமையை உலகுக்குக் காட்டும் முறையில் ' புதைபொருள் இலாகா'வை (Department of Archaeology) அவை ஏற்படுத்தின. தங்கள் பண்பாட்டைக் காத்து மக்களிடையே பரப்பத் தொடங்கின.

மறுமலர்ச்சி இயக்கத்தினால் மக்களிடையே அழகு கலைகளைச் சுவைக்கும் உணர்வு (aesthetic sense) தோன்றியது. அதனால் ஐரோப்பியர்களின் இல்லற வாழ்க்கையில் புதிய பொலிவு ஏற்பட்டது என்றும் கூறலாம்.

# 4. சமயச் சீர்திருத்தமும் சமயச் சீர்திருத்த எதிர் இயக்கமும்

## I. சமயச் சீர்திருத்தம்

ரோமானிய திருச்சபையில் மலிந்திருந்த ஊழல், ஆடம்பர வாழ்க்கை, சர்வாதிகாரப்போக்கு, கடுமையான கட்டுதிட்டங்கள் முதலானவற்றை எதிர்த்து ஜெர்மனியில் ஓர் இயக்கம் 16ஆம் நூற்றாண்டில் நடைபெற்றது. அது சமயச் சீர்திருத்த இயக்கம் (Reformation) என்று வழங்கப்படுகின்றது. அதை நடத்தியவர் மார்டின் லூதர் (Martin Luther) என்ற ஜெர்மானிய அறிஞர் ஆவார். அந்த இயக்கத்தினால் ஐரோப்பாவில் கிறித்துவ மதத்தைப் பின்பற்றியவர்கள் கத்தோலிக்கர்கள் (Catholics) என்றும் புராடஸ்டன்டுகள் (Protestants) என்றும் பிரிந்தனர். இது புராடஸ்டன்டுப் புரட்சி (Protestant Revolution) என்றும் வழங்கப்படுகிறது. இப்புரட்சி எத்தகைய சூழ்நிலையில் நடைபெற்றது என்பதைக் காண்போம்.

### 1. காரணங்கள்

பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் டாமினிக் முனிவர் (St. Dominic), ஃபிரான்சிஸ் முனிவர் (St. Francis) போன்றவர்கள் வாழ்ந்தனர். திருச்சபையைச் சார்ந்த குருமார்கள் மதத்தொண்டும் மக்கள்தொண்டும் செய்யவேண்டும் என அவர்கள் வற்புறுத்தினர்கள். ஆனால், 14–16ஆம் நூற்றாண்டு களில் திருச்சபை ஊழல் மிகுந்த ஆடம்பர நிறுவனமாக மாறி விட்டது. போப் முதற்கொண்டு கீழ்நிலையிலிருந்த குருமார் வரை திருச்சபையின் எல்லா ஊழியர்களும் ஏழை எளியவர்களைப் புறக்கணித்தனர்; மக்கள் தொண்டினை மறந்தனர். பெருஞ் செல்வத்தைக் குவித்தனர்; அரசுக்கு வரிகளைச் (taxes) செலுத்து வதிலிருந்து விலக்கும் பெற்றனர். அவர்கள் ஆடம்பரமான வாழ்க்கையை நடத்தி வந்தனர்; இவ்வுலக இன்பங்களைத் துய்த்து மகிழ முற்பட்டனர். போப்புகள் திருச்சபையைச் சார்ந்த பதவிகளைப் பெரும் பணத்திற்கு விற்கத்தொடங்கினர். இத்தகைய தவறான முறைகளில் போப் ஆறும் கிளமென்ட் (Pope Clement VI, 1342—1352) பெருஞ்செல்வத்தைக் குவித்தார்.

போப்புகள் ஐரோப்பிய அரசியல் விவகாரங்களில் தலையிட்டுத் தங்களின் ஆன்மீக அதிகாரங்கள் மட்டுமின்றி அரசியல் அதிகாரங் களையும் நிலைநாட்ட முற்பட்டனர். அதனால் *11—13*ஆம் நூற்றாண்டுகளிலேயே அரசுக்கும் (State) திருச்சபைக்கு (Church) மிடையே பதவிச் சின்னப் போராட்டம் (Investiture Struggle) நடைபெற்றது. பின்னர் ஃபிரான்சு நாட்டின் அரசர் நான்காம் ஃபிலிப்புக்கும் (Philip IV, 1285-1314) ரோம் நகரில் இருந்த போப்புக்கும் போராட்டம் ஏற்பட்டது. அதையடுத்து அரசர் திருச்சபையின் இருப்பிடத்தை, ரோமிலிருந்து ஃபிரான்சில் உள்ள ஆவினனுக்கு (Avignon) மாற்றிவிட்டார். அந் நகரத்தில் திருச் சபை ஏறத்தாழ எழுபது ஆண்டுகள் இயங்கியது.[1] அக்காலத்தில் போப், அரசரின் ஆணைப்படியே செயல்பட்டுவந்தார். அதைத் தொடர்ந்து திருச்சபையில் ‘பெரும் சமயப் பிளவு’ (The Great Schism, 1378—1417) ஏற்பட்டது.[2] அதனால் திருச்சபையின் பெருமையும் வலிமையும் குன்றின. மக்கள் திருச்சபையில் நம்பிக்கை இழக்கத் தொடங்கினர். அதற்கெதிரான ஓர் இயக்கத் தைத் தொடங்க அவர்கள் ஆயத்தமான நிலையில் இருந்தனர்.

மக்களைவிட ஐரோப்பிய மன்னர்கள் திருச்சபையின் ஆதிக்கத் தையும் ஆணவத்தையும் முறியடிக்கத் துணிந்தனர். தாங்களே தங்கள் நாட்டுக்குள் அரசியல் மற்றும் ஆன்மிகத் தலைவர்களாகச் (Temporal and Spiritual heads) செயல்பட விரும்பினர். திருச் சபை ஊழியர்களை நியமித்தல், அவர்களிடம் வரிகளைத் (taxes) திரட்டுதல் போன்ற பல உரிமைகளைப் பெற மன்னர்கள் துடித்தனர். மேலும் திருச்சபையில் குவிந்திருந்த பெருஞ் செல்வத்தை அரசு செலவினங்களுக்குப் பயன்படுத்த அவர்கள் விரும்பினர். ஆகவே, ஐரோப்பிய அரசர்கள், குறிப்பாக ஜெர்மானியச் சிற்றரசர்கள், திருச்சபையை வீழ்த்தத் தகுந்த வாய்ப்பினை எதிர்நோக்கியிருந்தனர்.

இத்தாலியில் தொடங்கி, பின்னர் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவிய மறுமலர்ச்சி இயக்கத்தினால் மக்களிடையே சிந்தனை ஆற்றல் பெருகியது; பகுத்தறிவுக் காலம் தொடங்கியது. விவிலிய நூலை (Bible), கற்றவர் அனைவரும் படிக்கத் தொடங் கினர். அந்நூலுக்குப் புறம்பாகக் கூறப்பட்ட திருச்சபையின் கருத்துகளை மக்கள் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இல்லை. தேசிய

1 திருச்சபையின் வரலாற்றில் இது ஒளி மங்கிய காலமாகும். இதை வரலாற்றாசிரியர்கள் "பாபிலோனிய சிறையிருப்பு" (Babylonish captivity) என்று குறிப்பிடுகின்றனர்.

2 போப்புக்கும் அவரைத் தேர்ந்தெடுக்கும் கார்டினல்களுக்கும் (Cardinals) இடையே ஏற்பட்ட பூசல் இங்ஙனம் குறிப்பிடப்படுகிறது.

நாடுகள் (Nation States) எழுச்சி பெற்றதால் மக்களிடையே தேசிய உணர்வு தோன்றி, போப்பைத் திருச்சபையின் தலைவராக ஏற்றுக் கொள்ள மறுத்து, அவரை அந்நியராக அந் நாடுகள் கருதின. முதலாண்டு வருமானத்தை எல்லா நாட்டுப் பிஷப்புகளும் போப்பிற்கு அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையும், போப்பே மதம் பற்றிய வழக்குகளுக்கு முடிவான தீர்ப்பினை வழங்கும் உரிமை பெற்றிருந்த நியதியும் தேசியக் கருத்திற்கு முரணாகக் காணப்பட்டன. தேசிய உணர்ச்சியின் வளர்ச்சி மதச் சீர்திருத்த இயக்கத்திற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

## 2. முந்திய முயற்சிகள்

திருச்சபையில் காணப்பட்ட சீர்கேடுகளைக் களைந்தெடுக்க 13, 14ஆம் நூற்றாண்டுகளிலேயே சில ஐரோப்பியச் சீர்திருத்தவாதிகளால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், திருச்சபை திருந்தவில்லை; அதற்கு மாறாக அவர்களைத் துன்புறுத்தியது. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ரோஜர் பேக்கன் (Roger Bacon) என்ற ஆங்கிலக் கிறித்தவ மதப்பெரியார், கிறித்தவமதக்கல்வியில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்யவேண்டுமெனக் கூறினார். ஜான் விக்ளிஃப் (John Wycliffe. 1320-1384) என்ற ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகப் பேராசிரியர் விவிலிய நூலை முதன் முறையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். திருச்சபையில் மலிந்திருந்த குறைகளை அம்பலப்படுத்தி, மக்களிடையே பிரசாரம் செய்தார். அதனால்தான் பின்னர் இவர் 'சமயச் சீர்திருத்த இயக்கத்தின் விடிவெள்ளி' (The morning star of reformation) என்று அழைக்கப்பட்டார். அதேபோல பொஹிமியாவில் (இன்றைய செக்கோஸ்லோவாகியா) இருக்கும் பிராக் (Prague) பல்கலைக்கழகத்தில் மதத்துறைத் தலைவராகப் பணியாற்றிய ஜான் ஹஸ் (Jonn Huss, 1373-1415) என்பவர் திருச்சபையை எதிர்த்து மிகத் தீவிரமாகப் பிரசாரம் செய்தார். ஆத்திரமடைந்த திருச்சபை அவரைத் தீயிலிட்டுப் பொசுக்கியது! எனினும், அவர்களின் புரட்சிக் கருத்துகள் மக்களிடையே காட்டுத் தீபோல் பரவி வந்தன.

## 3. ஜெர்மனியில் சமயச் சீர்திருத்தம்

மார்டின் லூதர் (Martin Luther, 1483—1546): ஒரு சாதாரண ஜெர்மானிய வேளாண்மைக் குடும்பத்தில் லூதர் பிறந்தார். கிறித்துவ மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட விவிலிய நூலைப் பல முறை படித்துத் தேர்ந்தார். 1508ஆம் ஆண்டு விட்டன்பர்க் (Wittenberg) பல்கலைக் கழகத்தில் சமயத்துறைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். மூன்றாண்டுகளுக்குப் பின்னர், போப்பின்

அழைப்பை ஏற்று, ரோம் நகருக்குச் சென்றார். அங்குப் போப்பும் குருமாரும் நடத்திவந்த ஊழல்மிகுந்த ஆடம்பர வாழ்க்கையைக் கண்டு அதிர்ச்சியடைந்து, வேதனைப்பட்டார். தாயகம் திரும்பி, திருச்சபை திருந்தவேண்டுமெனப் பிரசாரம் செய்துவந்தார்.

**பாவமன்னிப்புச் சீட்டுகள் விற்பனை :** இந்த நிலையில் 1517ஆம் ஆண்டு, ரோம் நகரில் புனித பீட்டர் தேவாலாயத்தின் (St. Peter's Cathedral) மற்றொரு பகுதியைக் கட்டப் பணம் திரட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. போப் பத்தாம் லியோ (Pope Leo X), ஜான் டெட்செல் (John Tetzel) என்ற திருச்சபைத் துறவியைப் பாவமன்னிப்புச் சீட்டுகளை (Indulgences) விற்றுவரும்படி, விட்டன்பர்க் நகருக்கு அனுப்பினார். 'பாவம் செய்தவர்கள் அச்சீட்டுகளை வாங்கினால் அவர்களின் பாவங்கள் களையப்படும்' என்று கூறி டெட்செல் அவற்றை விற்றார்.

**லூதரின் எதிர்ப்பு :** மக்களை இங்ஙனம் ஏமாற்றிப் பாவமன்னிப்புச் சீட்டுகள் விற்கப்பட்ட முறையை மார்டின் லூதர் கடுமையாக எதிர்த்தார். விவிலிய நூலுக்குப் புறம்பாகத் திருச்சபை மக்களை ஏமாற்றுகின்றது; பாவமன்னிப்புச் சீட்டுகளை வாங்குவதால் மட்டுமே ஒருவருடைய பாவங்கள் களையப்பட மாட்டா என்று அவர் கூறினார்; அச் சீட்டுகளை வாங்கவேண்டா என மக்களுக்கு அறிவுறுத்தினார். திருச்சபை பின்பற்றிவந்த பிடிவாதமான கொள்கைகளைத் தீவிரமாகக் கண்டித்து '95 கூற்றுகளை' (Theses) எழுதினார் ; அவற்றை எல்லோரும் படித்து அறிந்து கொள்ள வேண்டுமெனக் கருதி, அவற்றை விட்டன்பர்க் ஆலயத்தின் கதவுகளில் அறைந்தார். திருச்சபைக்கு எதிரான பிரசாரத்தையும் அவர் மேற்கொண்டார் ; அவருடைய புரட்சிகரமான கருத்துகள் காட்டுத்தீப்போல மக்களிடையே பரவி வந்தன. லூதரின் செயல்களைக் கண்டு திருச்சபை ஆத்திரப்பட்டது. திருச்சபையிடம் லூதர் பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும் என போப் பத்தாம் லியோ (Pope Leo X) அவருக்கு ஆணையிட்டார். லூதர் அங்ஙனம் செய்ய மறுத்தார். எனவே, 1520ஆம் ஆண்டு போப் அவரைச் 'சமய விலக்கு' (Excommunication) செய்தார். மார்டின் லூதர், சமய விலக்கு ஆணையை மக்கள் முன்பு பகிரங்கமாகத் தீயிலிட்டுக் கொளுத்தினார். புரட்சித் தீ நாடு முழுவதும் பரவத் தொடங்கியது.

**ஒம்ஸ் மாநாடு (1521) :** மார்டின் லூதரைத் தகுந்த முறையில் தண்டிக்கும்படி ஜெர்மானியப் பேரரசர் ஐந்தாம் சார்லஸை (Charles V) போப் வேண்டிக்கொண்டார். எனவே, ஒம்ஸ் நகரத்தில் கூடிய ஜெர்மானியச் சிற்றரசர்களின் மாநாட்டிற்கு (Diet of Worms) லூதர் அழைக்கப்பட்டார். அங்கு அவர்

தன்னுடைய நாவன்மையால் தன் கருத்துகளை விளக்கினார். பல சிற்றரசர்களும் அவரை ஆதரித்தனர். எனினும் பேரரசர், லூதரை நாடு கடத்தினார். ஆனாலும் சாக்சனியின் (Saxony) சிற்றரசரின் நல்லாதரவுடன் லூதர் புகலிட மொன்றில் வாழ்ந்து வந்தார். அப்பொழுதுதான் அவர் விவிலிய நூலை ஜெர்மானிய மொழியில் பெயர்த்தார்.

ஸ்பீயர் மாநாடுகள், 1526, 1529 : லூதரின் சமயச் சீர் திருத்தக் கருத்துகள் ஜெர்மனியில் வேகமாகப் பரவிவந்தன. பல ஜெர்மானிய சிற்றரசர்கள் அவருடைய கருத்துகளை ஏற்றுக் கொண்டனர். 1526ஆம் ஆண்டு ஸ்பீயர் நகரத்தில் கூடிய மாநாடு (Dict of Speier) அவர்களுக்கு மதச் சுதந்திரத்தை வழங்கியது. ஆனால், 1529ஆம் ஆண்டு கூடிய ஸ்பீயர் மாநாட்டில் பேரரசர் ஐந்தாம் சார்லஸ் அந்தச் சுதந்திரத்தை விலக்கினார். இதைச் சில ஜெர்மானியச் சிற்றரசர்கள் 'எதிர்த்தார்கள்' (Protested). எனவே, அவர்கள் 'எதிர்ப்பாளர்கள்' என்ற பொருள்பட 'புராடஸ்டண்டுகள்' (Protestants) என்று அழைக்கப் பட்டனர்.[1] அதாவது, லூதரைப் பின்பற்றியவர்கள் இங்ஙனம் அழைக்கப்படலாயினர். அவர்கள் லூதரின் சமயக் கோட்பாட்டை (Lutheran Creed) ஏற்றுக் கொண்டனர்.

ஆக்ஸ்பர்க் ஏற்பாடு (Peace of Augsburg, 1555 A. D.) : லூதரின் சமயக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டவர்கள், 'புராடஸ்டண்டு' பிரிவின் கோட்பாடுகளை முறைப்படுத்தி, 1530ஆம் ஆண்டு, ஆக்ஸ்பர்க் நகரத்தில் கூடிய மாநாட்டில் வெளியிட்டனர். அதற்குப் பின்னரும் புராடஸ்டண்டுகளுக்குப் பல தொல்லைகள் வந்தன. 1546ஆம் ஆண்டு லூதர் இயற்கை எய்தினார். 1555ஆம் ஆண்டு மீண்டும் ஆக்ஸ்பர்கில் கூடிய மாநாடு ஜெர்மானியச் சிற்றரசர்களுக்கு மதச் சுதந்திரத்தை வழங்கியது. அவர்கள் 'லூதரின் கோட்பாடு (Lutheranism), 'கத்தோலிக்கக் கோட்பாடு' (Catholicism) ஆகிய இரண்டில் ஏதாவது ஒரு பிரிவைப் பின்பற்றித் தங்கள் மாநிலங்களில் அனுமதிக்க அதிகாரபூர்வமாக உரிமை தரப் பட்டனர். இங்ஙனம் புராடஸ்டண்டு பிரிவு உருவாகியது. கிறித்துவ மதத்தின் வரலாற்றில் 'ஆக்ஸ்பர்க் ஏற்பாடு' மிக முக்கியமான நிகழ்ச்சியாகும்,

## 4. மற்ற நாடுகளில் சமயச் சீர்திருத்தம்

ஜெர்மனியில் தொடங்கிய சமயச் சீர்திருத்த இயக்கம் மற்ற நாடுகளிலும் பரவியது. என்றாலும் ரோமானிய கத்தோலிக்கத்

[1] Grant, A. J., Europ: The Story of the Last Five Centuries (1963) P. 488.

திருச்சபையிலிருந்து பிரிந்த புராடஸ்டன்டு பிரிவு பின்னர் மேலும் மூன்று சிறு பிரிவுகளாகப் பிரிந்துவிட்டது. அப் பிரிவுகளைப் பின் பற்றியவர்கள் லூதரன்கள், ஸ்விங்ளியன்கள், கால்வினிஸ்ட்டுகள் (Lutherans, Zwinglians and Calvinists) என்று அழைக்கப் பட்டனர்,

ஸ்விங்கிளி (Zwingli, 1484—1531 A. D.) என்ற மதப் பெரியார் ஸ்விட்சர்லாந்து நாட்டில் சமயச் சீர்திருத்த முயற்சியை மேற்கொண்டார். இவரைப் பின்பற்றியவர்கள் 'ஸ்விங்கிளி யன்கள்' என்று அழைக்கப்பட்டார்கள்.

ஜான் கால்வின் (John Calvin, 1509—64) என்பவர் ஃபிரான்சு நாட்டில் பிறந்தார் என்றாலும் தன் சமயச் சீர்திருத்தக் கொள்கை களை ஸ்விட்சர்லாந்து நாட்டில்தான் பரப்பினார். 'கால்வினிஸம்' ஸ்விட்சர்லாந்திலிருந்து ஸ்காட்லாந்து, ஹாலந்து, ஃபிரான்சு முதலான நாடுகளிலும் பரவியது.

இங்கிலாந்தில், ரோமானியத் திருச்சபைக்கு எதிரான இயக் கத்தை எட்டாம் ஹென்றி (Henry VIII, 1509-47 A. D.) முதலான அரசர்களே நடத்தினர். அந்நாட்டில் பின்பற்றப்படும் புராடஸ் டன்டு மதம் 'ஆங்கிலிகனிஸம்' (Anglicanism) என்று சொல்லப் படுகிறது.

## II. சமயச்சீர்திருத்த எதிர் இயக்கம்

புராடஸ்டன்டு மதம் ஜெர்மனி. ஸ்விட்சர்லாந்து. ஹாலந்து முதலான நாடுகளில் வேகமாகப் பரவி வந்ததைக் கண்டு, ரோமா னியத் திருச்சபை அச்சம் கொண்டது. திருச்சபையில் உடனடி யாகப் பல சீர்திருத்தங்களைக் கொண்டுவரவில்லையாயின் அது அழிந்துவிடக்கூடிய நிலை ஏற்பட்டது. எனவே, புராடஸ்டன்டு மதம் பரவுவதைத் தடுக்கவும், ரோமானியத் திருச்சபையின் தூய் மையையும் பெருமையையும் நிலைநாட்டவும், திருச்சபை பல நடவடிக்கைகளை எடுத்து ஓர் இயக்கத்தையே நடத்தியது, அவ் வியக்கம் சமயச் சீர்திருத்த எதிர் இயக்கம் (Counter Reformation) என்று அழைக்கப்படுகின்றது.

சமயச் சீர்திருத்த எதிர் இயக்கம் நடைபெறுவதற்கான சில சாதகமான சூழ்நிலைகளும் உருவாயின. அண்மையில் பிரிந்து சென்ற புராடஸ்டன்டு மதம் மேலும் இரண்டு சிறு பிரிவுகளாகப் பிரிந்தன. மொத்தம் மூன்று பிரிவுகளாக—லூதரெனிசம், ஸ்விங் ளியனிசம், கால்வினிசம்—ஐரோப்பிய நாடுகளில் பரவியது. இது மக்களிடையே ஓரளவுக் குழப்பத்தை ஏற்படுத்தியது. மேலும் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் போப்புகளாகப் பணியாற்றிய வர்கள் நேர்மையானவர்களாகவும் தூய்மையானவர்களாகவும்

விளங்கினார்கள். எனவே, ரோமானிய கத்தோலிக்கத் திருச்சபையின் பெருமையை மீண்டும் நிலைநாட்ட முடியும் எனக் கருதப் பட்டது. ஆகவே, அதற்கான கீழ்க்காணும் முயற்சிகள் திருச்சபையினாலும் மற்றக் கத்தோலிக்கப் பெரியவர்களாலும் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) இயேசுச் சங்கம் (Society of Jesus)**

இக்னேஷியஸ் லயோலா (Ignatius Loyola, 1491—1556 A.D.) என்ற ஸ்பானியப் பெரியாரால் 1534ஆம் ஆண்டு இச் சங்கம் நிறுவப்பட்டது. இளமையில் இவர் இராணுவ வீரராகப் பணியாற்றி வந்த காலத்தில், போர்முனையில் கடுமையான கால் ஊனம் ஏற்பட்டது. போர்முனையிலிருந்து விலக்கப்பட்டார்; புராடஸ்டன்டு மதத்திற்கு எதிரான போரை மேற்கொண்டார். கத்தோலிக்க மதத்தில் ஆழ்ந்த பற்றுடைய லயோலா அம் மதத்தைப் பரப்பவும், மக்கள் தொண்டு செய்யவும் அந்தச் சங்கத்தை நிறுவினார். அச்சங்கத்தில் சேர்ந்தவர்கள் 'இயேசுச் சங்கத்தார்' (Jesuits) என்றழைக்கப்பட்டனர். போப் மூன்றாம் பால் (Pope Paul III) 1540ஆம் ஆண்டு 'இயேசுச் சங்கத்தை' அங்கீகரித்தார். இயேசுச் சங்கத்தார் அயல் நாடுகளுக்கும் சென்று கத்தோலிக்க மதத்தைப் பரப்பினர்; மக்களுக்குக் கல்விப் பணி, கருத்துவப் பணி முதலானவற்றைச் செய்து கத்தோலிக்கத் திருச்சபையின் தூய்மையையும் பெருமையையும் நிலைநாட்டினர்.

**(ஆ) டிரன்ட் பெருஞ்சபை (Council of Trent)**

ஜெர்மானியப் பேரரசர் ஐந்தாம் சார்லஸின் முயற்சியால் இத்தாலியில் உள்ள டிரென்ட் (Trent) என்ற நகரத்தில் ஒரு பெருஞ்சபை கூட்டப்பட்டது. இது 1545—1563ஆம் ஆண்டு களுக்கிடையே பலமுறை கூடியது. கத்தோலிக்கத் திருச்சபையைச் சீர்திருத்துவதற்கான முறைகளை வகுத்தது. போப் முதற்கொண்டு பல பெரியவர்கள் இச் சபை நடவடிக்கைகளில் பங்கு கொண்டனர். அதன் விளைவாகத் திருச்சபையில் ஊழல் ஒழிந்தது; குருமார் தூய்மையான வாழ்க்கை நடத்தினர்; போப்பின் தலைமையை எல்லாக் கத்தோலிக்கர்களும் ஏற்றுக் கொண்டனர்; லத்தீன் மொழியிலிருந்த விவிலிய நூலையே அதிகாரபூர்வமானதாக அனைவரும் ஏற்றுக் கொண்டனர். உண்மையிலேயே போற்றுதற்குரிய பணியை இச்சபை செய்தது.

**(இ) புறச்சமய ஒழிப்பு நீதிமன்றம் (The Inquisition)**

கத்தோலிக்கச் சமயத்திற்கு எதிரான புறச்சமயக் (heresy) கருத்துகளைக் கூறுபவர்களை மிகக் கடுமையாகத் தண்டிக்க இந்த

நீதிமன்றம் நிறுவப்பட்டது. ஸ்பெயின் நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன்னரே இத்தகைய நீதிமன்றம் செயல்பட்டு வந்தது. 1542 ஆம் ஆண்டு திருச்சபையே இந்த நீதிமன்றத்தை நிறுவியது. இந் நீதிமன்றத்தின் மிகக் கடுமையான தண்டனைகளுக்கு அஞ்சிப் பலர் கத்தோலிக்க மதத்தையே பின்பற்றினர்.

இத்தகைய முயற்சிகளினால் ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி மற்றும் ஃபிரான்சு முதலான நாடுகள் கத்தோலிக்க மதத்தையே ஏற்றுக்கொண்டன. அழியும் தறுவாயில் இருந்த ரோமானியத் திருச்சபை மீண்டும் புத்துயிர் பெற்றது.

## III. விளைவுகள்

சமயச் சீர்திருத்த இயக்கத்தின் மிக முக்கியமான விளைவு மேலே கூறப்பட்ட சமயச் சீர்திருத்த எதிர் இயக்கமாகும். அதனால் கத்தோலிக்க மதம் அழிந்து விடாமல் உயிர் பெற்றது. அதே நேரத்தில் கிறித்துவ மதத்தைப் பின்பற்றிய ஐரோப்பிய நாடுகள், கத்தோலிக்க நாடுகள் புராடஸ்டன்டு நாடுகள் என்று பிரிந்தன. அவை இருபெரும் பகைமை அணிகளாக மாறின. அதனால் ஜெர்மனி, ஃபிரான்சு முதலான நாடுகளில் சமயப் போர்கள் நடைபெற்றன.

இங்கிலாந்தில் மன்னர் திருச்சபையைக் கட்டுப்படுத்தும் உரிமையைப் பெற்றார். அவர் வரம்பிலா அதிகாரங்களைப் பெற்றுப் பாராளுமன்றத்தையும் தன் கட்டுக்குள் கொண்டு வந்தார். கிறித்துவ மடாலயங்கள் பல கலைக்கப்பட்டன; அங்குக் குவிந்திருந்த பெருஞ்செல்வம் கைப்பற்றப்பட்டது. அச் செல்வம் அரசு செலவினங்களுக்குப் பயன்படுத்தப் பட்டது. சமயச் சீர்திருத்தத்தினால் இங்கிலாந்தில் மன்னருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே பல போர்களும் போரட்டங்களும் நடைபெற்றன.

மதத்தைப் பரப்புவதிலும் குடியேற்ற ஆதிக்கத்தைக் கடல் கடந்த நாடுகளில் ஏற்படுத்துவதிலும் ஐரோப்பிய நாடுகளுக் கிடையே போட்டியும் பொறாமையும் ஏற்பட்டன.

விவிலிய நூல் அநேகமாக எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அம் மொழிகள் இலக்கிய வளம் பெற்றன.

இங்ஙனம் சமயச் சீர்திருத்த இயக்கத்தினால் மதம், பொருளாதாரம், அரசியல் மற்றும் இலக்கியத் துறைகளில் ஐரோப்பியச் சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டன.

# II. ஃபிரான்ஸ், ரஷ்யா, பிரஷ்யா ஆகியவற்றின் வளர்ச்சி

## 5. ஃபிரான்சில் பதினான்காம் லூயி (1643 - 1715)

17, 18 ஆம் நூற்றாண்டுகளில் சில ஐரோப்பிய நாடுகளில் ஆட்சி செய்த அரசர்கள் எல்லா அதிகாரங்களையும் தாங்களே மேற்கொண்டு தங்கள் நாடுகளை ஆட்சி செய்தார்கள். அத்தகைய மன்னர்களை 'வல்லாட்சியாளர்கள்' (Despots) என்று வரலாற்றாசிரியர்கள் அழைக்கின்றனர். ஃபிரான்சில் ஆட்சி செய்த பதினான்காம் லூயி (Louis XIV) ரஷ்யாவில் ஆட்சி செய்த மகா பீட்டர் (Peter the Great) முதலானோர் அத்தகைய ஆட்சியாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

ஒரு சில அரசர்கள் மக்களின் நல்வாழ்வையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அது மட்டுமின்றி அக்காலத்தில் தோன்றிய முற்போக்குக் கருத்துகளின்படி ஆட்சிசெய்ய அவர்கள் முற்பட்டனர். அவர்களை 'மக்கள் நலம்பேணும் வல்லாட்சியாளர்கள்' அல்லது 'முற்போக்குக் கருத்துடைய வல்லாட்சியாளர்கள்' (Enlightened Despots) என்கிறோம். அத்தகையவர்களுள் பிரஷ்யாவை ஆட்சி செய்த மகா ஃபிரெடிரிக் (Frederick the Great) மிகச் சிறந்தவராக விளங்குகின்றார்.

இம் மூவரைப்பற்றிய விபரங்களை இனிக் காண்போம்,

1. லூயியும் மசாரினும்

1643 ஆம் ஆண்டு லூயி தமது ஐந்தாம் வயதில் ஃபிரான்சின் அரசரானார். அவர் சிறுவனாக இருந்ததால் கார்டினல் மசாரின் (Cardinal Mazarin) என்பவரை அமைச்சராக நியமித்து ஆட்சி முறையைக் கவனித்துக்கொள்ளும்படி லூயியின் தாய் ஆணையிட்டார். அடுத்த பதினெட்டு ஆண்டுகள் அவர் அந்தப் பொறுப்பில் இருந்தார். மிகவும் திறமை வாய்ந்தவரான மசாரின் முப்பதாண்டுப் போரில் (The Thirty Years War) ஈடு

பட்டு, ஆஸ்திரியாவின் செல்வாக்கை குறைத்து ஃபிரான்சின் செல்வாக்கை ஓங்கச் செய்தார்.[1] அதன்பின் ஸ்பெயினுடன் போரிட்டு இறுதியில் வெற்றிபெற்ருர்.[2] இப் போர்களினுல் ஐரோப்பாவில் ஃபிரான்சின் பெருமை உயர்ந்தது. எனினும், அந்நாட்டின் பொருளாதார நிலேயும், நிதி நிலேயும் சீர்குலேந்தன. மசாரின் 1661-ல் இறந்தபோது, லூயி ஆட்சிப் பொறுப்புகள் அனைத்தையும் தாமே ஏற்றுக்கொண்டார்.

## 2. லூயியின் நோக்கங்கள்

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் தன் விருப்பம் போல் செயல்பட அவர் விரும்பினுர். மக்களே ஆள மன்னர்கள் 'தெய்வீக உரிமையை'ப் (Divine Right) பெற்றுள்ளனர் என்று அவர் நம்பினுர். எனவே, தாம் கடவுளுக்கு மட்டுமே பதில் சொல்லக் கடமைப்பட்டவர், நாட்டு மக்களுக்கு அல்லர் என்று அவர் கருதினுர்.

பார்ப்பதற்கு அழகான உடலமைப்பைப் பெற்றிருந்த லூயி சிறந்த ஆட்சியாளர் என்பதில் ஐயமில்லே. இனிய வாழ்க்கையையும் ஆடம்பரத்தையும் அவர் பெரிதும் விரும்பினுர். தான் சொல்வதுபோலவே அனைவரும் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்த்தார். 'நாடு என்பது நான்தான்' என்று அவர் கூறினுர்.[3] ஃபிரான்சின் சட்டமன்றமாகிய ஸ்டேட்ஸ் ஜெனரலும், திருச்சபையும், நீதிமன்றங்களும் மற்றும் பல்வேறு அமைப்புகளும் தன் அதிகாரத்திற்கு உட்பட்டே செயல்பட வேண்டுமென லூயி கருதினுர். ஃபிரான்ஸை ஐரோப்பாவிலேயே தலேசிறந்த நாடாக மாற்றவேண்டும் என்று அவர் திட்டமிட்டார். தனது பூர்பன் வமிச (Bourbon Dynasty) அரசர்கள் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் ஆட்சி செய்யவேண்டுமென விரும்பினுர். தன்னுடைய நோக்கங்களே நிறைவேற்றிக்கொள்ளப் பல உள்நாட்டுச் சீர்திருத்தங்களே லூயி கொண்டு வந்தார். நான்கு போர்களில் அவர் ஈடுபட்டார்.

[1] இப்போர் மத அடிப்படையில் கத்தோலிக்கர்களுக்கும் புராட்டஸ்டன்டுகளுக்குமிடையே நடைபெற்றது. ஜெர்மனியில் தொடங்கி, பின்னர் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியது. இது 1618—1648ஆம் ஆண்டுகளுக்கிடையில் நடந்தது. 'வெஸ்ட்பேலியா உடன்படிக்கை'யின்படி போர் நின்றது.

[2] மேற்கூறப்பட்ட 'வெஸ்ட்பேலியா உடன்படிக்கை'யின் உட்கூறுகளே ஸ்பெயின் ஏற்றுக்கொள்ள மறுத்தது. அங்நாட்டுடன் ஃபிரான்ஸ் தொடர்ந்து போரிட்டு அதை அடிபணிய வைத்தது.

[3] 'The State, it is I'. அவர் அங்ஙனம் கூறவில்லே என்றும் சில வரலாற்ருசிரியர்கள் கூறுகின்றனர்,

**3. உள்நாட்டுக் கொள்கை**

லூயியின் உள்நாட்டுக் கொள்கைக்கு உயிரூட்டியவர் கால்பர்ட் (Colbert) என்ற பொருளாதார நிபுணராவார். அவர் லூயியின் நிதி அமைச்சராகப் பணிபுரிந்தார். அவரைவிடச் சிறந்த அமைச்சர் ஃபிரான்சில் அதற்குமுன் எவரும் இருந்ததில்லை என்று A. J. கிராண்ட் என்ற வரலாற்றாசிரியர் கூறுகின்றார். கால்பர்டின் ஆலோசனைப்படி லூயி பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார்.

நிதி : வரி வசூல்முறை ஒழுங்குபடுத்தப்பட்டது. வரி ஏய்ப்புத் தடுக்கப்பட்டது. நேர்மையற்ற முறையில் வரி வசூலித்தவர்களும், பணம் சம்பாதித்தவர்களும் பதவியினின்று நீக்கப் பட்டனர். அரசு கணக்குகள் அனைத்தும் தணிக்கை செய்யப் பட்டன. அவசியமில்லாத செலவுகள் தவிர்க்கப்பட்டன அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அயல்நாடுகளி லிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் மீது கூடுதல் வரி விதிக்கப்பட்டது. அதனால் அரசுக்கு வருவாய் பெருகியது. நிதி நிலையும் சீரடைந்தது. பற்றாக்குறையிலிருந்த கருவூலம் கால்பர்டின் நடவடிக்கைகளால் பணம் மிகுந்த கருவூலமாக மாறியது.

**வேளாண்மை :** வேளான்மை நாட்டின் முதுகெலும்பு என் பதை உணர்ந்த அரசு, அதற்கான நடவடிக்கைகளை எடுத்தது. குடியானவர்களின் வரிச்சுமை குறைக்கப்பட்டது. வரி வசூல் செய்பவர்கள் அவர்களைக் கொடுமைப்படுத்தக்கூடாது என்று ஆணையிடப்பட்டார்கள். அரசு குடியானவர்களுக்குக் கடனுதவி செய்தது. நீர்ப்பாசன வசதிக்குச் சில கால்வாய்களும் வெட்டப் பட்டது.

தொழில் : வேளாண்மைத் துறையைப் போலவே தொழில் வளர்ச்சிக்கும் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அயல் நாட்டுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவது ஓரளவு தடுக்கப் பட்டது; அல்லது அவற்றின்மீது அதிகமான சுங்க வரிகள் விதிக்கப்பட்டன. இங்கிலாந்து, ஹாலந்து, இத்தாலி முதலான நாடுகளிலிருந்து தொழில் நுணுக்க வல்லுநர்கள் வரவழைக்கப் பட்டனர், அவர்களின் உதவியுடன் பட்டு ஆலைகள், உலோகத் தொழிற்சாலைகள் கண்ணாடித் தொழிற்சாலைகள் முதலானவை தொடங்கப்பட்டன. தொழிலுக்கும் வாணிகத்திற்கும் உதவியாக இருக்கும்பொருட்டு நெடுஞ்சாலைகளும் கால்வாய்களும் அமைக்கப் பட்டன.

**கப்பல் கட்டும் தொழில் :** கப்பல்கள் கட்டவும் கடற்படையை அமைக்கவும் கால்பர்ட் பெருங்கவனம் செலுத்தினர். டூலோன் (Toulon), ராகிஃபோர்ட் (Rochefort), பிரெஸ்ட் (Brest) முதலான

துறைமுகங்கள் சீர்படுத்தப்பட்டன. பிரெஸ்ட், காலே (Calais), ஹாவர் (Havre) முதலான துறைமுகங்களின் கப்பல் கட்டும் தளங்கள் அமைக்கப்பட்டன. வாணிகக் கப்பல்களும், கடற் படைக்குத் தேவையான போர்க் கப்பல்களும் இங்குக் கட்டப் பட்டன. இங்கிலாந்தும், ஹாலந்தும், ஃபிரான்சின் கப்பல் கட்டும் தொழில் வளர்ச்சியைக் கண்டு வியந்தன.

**கடல் வாணிகம் :** இங்கிலாந்து, ஹாலந்து முதலான நாடுகள் கடல் வாணிகத்தால் பெருஞ் செல்வத்தைப் பெறுவதைக் கண்ட கால்பர்ட், பால்டிக் கடல் நாடுகளோடும், மத்தியதரைக் கடல் நாடுகளோடும், அமெரிக்காவோடும், கிழக்கு ஆசிய நாடுகளோடும் வாணிகம் செய்ய ஃபிரென்சு வாணிகக் கம்பெனிகளைத் தொடங்க வழி செய்தார். ஃபிரென்சு கிழக்கிந்திய கம்பெனி (The French East India Company) 1664-ல் கால்பர்டின் முயற்சியால் நிறுவப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

**குடியேற்றங்கள் :** வட அமெரிக்காவில் கனடா, நியூஃபவுண்ட் லாந்து, லூசியானா முதலிய பகுதிகளிலும், கரிபியன் கடலிலுள்ள மேற்கிந்தியத் தீவுகளிலும், ஆப்பிரிக்காவில் மடகாஸ்கரிலும், ஆசியாவில் இந்தியாவிலும், ஃபிரெஞ்சுக் குடியேற்றங்கள் பல்வேறு காலங்களில் நிறுவப்பட்டன. அதற்கு முதலில் காரணமாய் இருந்தவர் கால்பர்ட்டே ஆவார்.

**சட்டங்கள் :** ஃபிரான்சில் சட்டங்கள் (Laws) குழப்பமான நிலையில் இருந்தன. அவற்றை முறைப்படுத்துவதற்கான முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டன. அவை சிவில், கிரிமினல் மற்றும் கடற்படைச் சட்டங்கள் எனப் பிரிக்கப்பட்டன. அவை லூயியின் சட்டத் தொகுப்பு (Code Louis) என்று அழைக்கப்பட்டன.

**சமயக் கொள்கை :** ஃபிரான்சின் திருச்சபையில் போப்புக்கு இருந்த செல்வாக்கைக் குறைக்கவும், திருச்சபையைத் தனது அதி காரத்தின் கீழ்க் கொண்டுவரவும், லூயி 1682ஆம் ஆண்டு காலிகன் உரிமைகளை (Gallican Liberties) வெளியிட்டார். அதன் படி அரசர்களைப் பதவியிலிருந்து நீக்கப் போப்புக்கு அதிகாரம் இல்லை; குருமார்களை நியமிப்பதிலும் அவர்களைத் தமது பொறுப்பில் வைத்துக் கொள்ளவும் ஃபிரென்சுத் திருச்சபைக்கு மட்டுமே உரிமை கொடுக்கப்பட்டது; ரோம் நகரத்தில் உள்ள போப் அதில் தலையிடக்கூடாது என்று கூறப்பட்டது. லூயி கத் தோலிக்கராக இருந்தும் ரோம் நகரில் இருந்த போப்பின் உயர் அதிகாரத்தை ஏற்க மறுத்தார். லூயியின் ஆட்சிக்காலச் சீர்திருத் தங்களுக்குப் பொறுப்பானவர் கால்பர்ட் ஆவார். ஆனால், லூயி யின் மதக் கொள்கைக்கு லூயியே காரணமாவார். 1685ஆம்

ஆண்டு லூயி, நான்டெஸ் ஆணையை (Edict of Nantes) ரத்து செய்தார்.[1] இதனால் யூக்னூட்டுகள் (Huguenots) என்ற ஃபிரென்சு புராடஸ்டன்டுகள் தங்கள் சமய உரிமையை இழந்தனர். அவர்கள் பலவாறு துன்புறுத்தப்பட்டனர். அதனால் அவர்கள் ஃபிரான்ஸை விட்டு வெளியேறி இங்கிலாந்து, ஹாலந்து. பிரஷ்யா. ஸ்விட்சர்லாந்து முதலான நாடுகளில் குடியேறினர்கள். உழைக்கும் இனத்தைச் சேர்ந்த அவர்களின் வெளியேற்றம் ஃபிரான்சுக்குப்பேரிழப்பு ஆகும். பிரான்சின் தொழில்களும் கலைகளும் நலிவுற்றன.

**ஆடம்பரமான அரசவை:** லூயி ஆடம்பர வாழ்க்கையைப் பெரிதும் விரும்பினர். அவர் ஒரு சிறந்த கலை ரசிகராக விளங்கினர். கலையழகுமிக்க பிரம்மாண்டமான வெர்சாய் அரண்மனையைக் (Palace of Versailles) கட்டுவித்தவர் அவரேயாவர். இந்த அரண்மனையில்தான் பிற்காலத்தில் பல உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டன. லூயி அறிஞர்களின் நட்பைப் பெரிதும் விரும்பினர். அவர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்தார் பல்துறை அறிஞர்கள் அவரைச் சூழ்ந்திருந்தனர். தலைசிறந்த பொருளாதார நிபுணர் கால்பர்ட் (Colbert) அவருடைய நிதி அமைச்சராகப் பணிபுரிந்தார். கார்னெய்ல் (Corneille), ராசீன் (Racine), மோலியர் (Moliere) போன்ற சிறந்த நாடக ஆசிரியர்களும், டெகார்தெ (Descartes) என்ற சிந்தனைச் சிற்பியும், பாஸ்கல் (Pascal) என்ற அறிவியல் அறிஞரும் மற்றும் பல சமயத் துறை அறிஞர்களும் லூயியின் அரசவையில் தங்கியிருந்து அறிவு விருந்தை வழங்கி வந்தனர்.

**4. லூயியின் அயல்நாட்டுக் கொள்கை:**

லூயி தன் நாட்டின் எல்லைகளை விரிவுபடுத்தவும், அதன் வலிமையை ஐரோப்பாவில் நிலைநாட்டவும் நான்கு போர்களை மேற்கொண்டார். அவை, (i) வழி உரிமை வற்புறுத்தும் போர் (The War of Devolution), (ii) டச்சு நாட்டுடன் போர் (The Dutch War), (iii) ஆக்ஸ்பர்க் கூட்டிணைவுப் போர் (The War of the League of Augsburg) மற்றும் (iv) ஸ்பானிய வாரிசுரிமைப் போர் (The War of the Spanish Succession) ஆகியவை ஆகும்.

**(i) வழி உரிமை வற்புறுத்தும் போர் (*1667-1668*):** இப்போர் ஸ்பானிய நெதர்லாந்தைத் (Spanish Netherlands) தன் நாட்டுடன் சேர்த்துக்கொள்ள லூயி விரும்பியதால் நடைபெற்ற.[2] லூயி

[1] இந்த ஆணை கி.பி 1598-ல் நான்காம் ஹென்ரியால் வெளியிடப்பட்டது. அதன்படி நாட்டில் யூக்னூட்டுகளும் (புராட்டஸ்டன்டுகள்) சட்ட ரீதியாகத் தனித்தொழுகை உரிமை பெற்றனர்.

[2] இப்பகுதி இப்பொழுது பெல்ஜியம் என்ற நாடாக உள்ளது.

ஸ்பெயின் நாட்டரசர் நான்காம் ஃபிலிப்பின் (Philip IV) மூத்த மகள் மரியா தெரிசாவை (Maria Theresa) மணந்துகொண்டிருந் தார். திருமணத்தின்போது லூயி ஓர் உறுதிமொழியைத் தந்தார். அதன்படி பிற்காலத்தில் ஸ்பெயின் நாட்டு அரியணையையோ அல்லது ஸ்பெயின் நாட்டுக்குரிய நிலப்பகுதியையோ தன் மனைவிக்குச் சேர வேண்டுமென உரிமை கொண்டாட மாட்டேன் என்று அவர் கூறியிருந்தார். மரியா தெரிசா ஃபிலிப்பின் முதல் மனைவிக்குப் பிறந்தவராவார். ஃபிலிப்பின் இரண்டாவது மனைவியின் வழிப் பிறந்தவர் இரண்டாம் சார்லஸ் (Charles II) ஆவர். அவரே ஃபிலிப்புக்குப்பின் ஸ்பெயினின் அரசராக இருந்தார். நெதர் லாந்தில் நிலவிய ஒரு சட்டத்தின்படி இரண்டாம் மனைவிக்குப் பிறந்த ஆண்பிள்ளையைவிட முதல் மனைவிக்குப் பிறந்த பெண் ணுக்கே சொத்தில் அதிக உரிமை இருந்தது. இதைச் சுட்டிக் காட்டி, தான் தன் திருமணத்தின்போது கொடுத்த உறுதிமொழி யைப் புறக்கணித்து, ஸ்பானிய நெதர்லாந்து தமது மனைவி மரியா தெரிசாவிற்குச் சேரவேண்டுமென லூயி உரிமை கொண்டாடினார். இதை இரண்டாம் சார்லஸ் ஏற்றுக்கொள்ள மறுத்தார். எனவே, போர் தொடங்கியது. 1667-68ஆம் ஆண்டுகளில் போர் நடை பெற்றது. லூயி போரில் பெருவெற்றி பெற்றார். இதைக் கண்டு அஞ்சிய இங்கிலாந்து, ஹாலந்து, ஸ்வீடன் ஆகிய நாடுகள் கூட்டுச் சேர்ந்தன (1668). லூயியின் ஆக்கிரமிப்புகளை அவை வன்மை யாகக் கண்டித்தன. லூயி போரை நிறுத்தினார். அதைத் தொடர்ந்து செய்து கொள்ளப்பட்ட ஐக்ஸ்-லா-ஷாபெல்லே உடன் படிக்கையின்படி (Treaty of Aix-la-Chapelle) லூயி தான் வென்ற வற்றுள் பெரும் பகுதிகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

(ii) டச்சு நாட்டுடன் போர் (1672—1678): ஹாலந்து ஒரு புராடஸ்டண்டு நாடாகும். அது ஃபிரான்சுடன் வாணிகத்தில் கடும் போட்டியிட்டது. லூயியின் ஆக்கிரமிப்பு நடவடிக்கை களுக்கு எதிராக இங்கிலாந்தையும் ஸ்வீடனையும் தன்னுடன் கூட்டுச் சேர்த்துக்கொண்டு லூயியின் திட்டங்களை ஹாலந்து சிதைத்தது. எனவே, லூயி ஹாலந்தை ஒடுக்க திட்டமிட்டார். ரகசிய உடன்படிக்கைகளால் இங்கிலாந்தையும் ஸ்வீடனையும் ஹாலந்தின் உறவிலிருந்து பிரித்துவிட்டார். 1672ஆம் ஆண்டு லூயி ஹாலந்தின்மீது போர் தொடுத்தார். 1678ஆம் ஆண்டு வரை போர் நடைபெற்றது. முதலில் லூயி பல வெற்றிகளைப் பெற்றார். ஜெர்மானிய பிராண்டன்பர்க்கும் (Brandenburg). ஸ்பெயினும், ஹாலந்துக்கு உதவி செய்ய முற்பட்ட பின்னர் லூயி பலமுனைத் தாக்குதல்களுக்கு உள்ளானார். 1678-ல் செய்துகொள் ளப்பட்ட நைமேகன் உடன்படிக்கையின்படி (Treaty of Nimeguen)

போர் நின்றது. வடக்கே சில பகுதிகளையும் கிழக்கே ஃபிரென்சி-காம்டி (Franche-Comte) என்ற மாவட்டத்தையும் ஃபிரான்ஸ் பெற்றது.

(iii) **ஆக்ஸ்பர்க் கூட்டிணைவுப் போர் (1668—1697):** ஹாலந்துக் குடியரசின் தலைவரான வில்லியம் (William of Orange) 1677-ல் ஆங்கில இளவரசி மேரியை (Mary) மணந்துகொண்டார். 1688ஆம் ஆண்டு இங்கிலாந்து மக்கள் தங்கள் மன்னர் இரண்டாம் ஜேம்ஸ் (James II) என்ற கொடுங்கோலருக்கு எதிராகப் புரட்சி செய்து, வில்லியத்தையும் அவருடைய மனைவி மேரியையும் இங்கிலாந்தின் அரியணையை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொண்டனர். வில்லியம் படையுடன் சென்றபோது ஜேம்ஸ் நாட்டைவிட்டு ஃபிரான்சுக்கு ஓடிவிட்டார். வில்லியம் ஆங்கில மக்களின் விருப்பத்திற்கிணங்கி, மூன்றாம் வில்லியம் என்ற பெயருடன் இங்கிலாந்தின் அரசரானார். இங்கிலாந்திலிருந்து தப்பி வந்த ஜேம்ஸ், லூயியின் உதவியைக் கோரினார். இதற்கிடையில் ஸ்டிராஸ்பர்க் (Strasburg), கேசல் (Casale), லக்சம்பர்க் (Luxemburg) முதலானவற்றை லூயி ஃபிரான்சுடன் இணைத்துக்கொண்டார். லூயியின் ஆக்கிரமிப்புக் கொள்கையை முறியடிக்க 1686ஆம் ஆண்டு ஜெர்மானிய அரசுகள், ஆஸ்திரியா, இங்கிலாந்து, ஸ்பெயின், ஹாலந்து, ஸ்வீடன் முதலான நாடுகள் ஆக்ஸ்பர்க் என்னுமிடத்தில் கூடி ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தின. இதுவே 'ஆக்ஸ்பர்க் கூட்டிணைவு' (League of Augsburg) என்று சொல்லப்பட்டது. ஃபிரான்சுக்கும் இச் சங்க நாடுகளுக்கும் இடையே 1688ஆம் ஆண்டு முதல் 1697ஆம் ஆண்டு வரை பல இடங்களில் போர் நடைபெற்றது. நிலப்பகுதியில் ஃபிரான்ஸ் வெற்றிகளைக் குவித்ததென்றாலும், கடற்போரில் பல இடங்களில் அந்நாடு தோற்கடிக்கப்பட்டது. அந் நாட்டின் நிதிநிலையும் சீர்குலைந்தது. 1697ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ரிஸ்விக் உடன்படிக்கையின்படி (Treaty of Ryswick) போர் நின்றது. லூயி தான் வென்ற பல பகுதிகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டார். ஸ்டிராஸ்பர்க், அல்ஸாஸ் ஆகிய பகுதிகளைமட்டும் தம்மிடமே வைத்துக்கொண்டார். இங்கிலாந்தில் புராடஸ்டண்டு அரசர்கள் ஆட்சி செய்வதை லூயி ஏற்றுக்கொண்டார்.

(iv) **ஸ்பானிய வாரிசுரிமைப் போர் (1702—1713) :** ஸ்பெயின் நாட்டு மன்னர் இரண்டாம் சார்லசுக்கு ஆண் வாரிசு இல்லை. அவர் 1698-ல் கடுமையாக நோய்வாய்ப்பட்டார். ஸ்பெயின் அரசு, ஸ்பெயின் மட்டுமின்றி ஸ்பானிய நெதர்லாந்து, நேபிள்ஸ், மிலான் மற்றும் வெளிநாட்டுக் குடியேற்றங்கள் முதலியவற்றை

---

உட்கொண்டிருந்தது. இரண்டாம் சார்லசுக்கு இரண்டு சகோதரிகள் இருந்தனர். அவர்களுள் மரியா தெரிசா என்பவரை ஃபிரான்சின் அரசர் லூயியும், மார்கரெட் தெரிசா என்பவரைப் ஆஸ்திரிய நாட்டுப் பேரரசர் (புனித ரோமானியப் பேரரசர்) முதலாம் லியோபால்டும் (Leopold I) மணந்திருந்தனர். சார்லஸ் இறக்கும் தறுவாயில் இருந்ததால் ஸ்பெயின் அரியணைக்கு லூயியும், லியோபால்டும் உரிமை கொண்டாடினுர்கள்.[1] ஸ்பானிய அரசு ஃபிரான்சுடனே ஆஸ்திரியாவுடனே முழுமையாகச் சேர்ந்துவிட்டால், அது ஐரோப்பிய வல்லரசு சமநிலையை (Balance of Power) பாதிக்கும் என்று இங்கிலாந்து அஞ்சியது. அதனுல் இங்கிலாந்தின் அரசர் மூன்ரும் வில்லியம் ஸ்பானிய நிலப் பகுதிகளை ஃபிரான்ஸ், ஆஸ்திரியா, பவேரியா ஆகிய மூன்று நாடுகளுக்கும் பிரித்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். ஆனுல், இரண்டாம் சார்லஸ் ஸ்பானிய நிலப்பகுதிகள் அனைத்தும் லூயியின் பேரன் ஃபிலிப்புக்குச் (Philip of Anjov) சேரவேண்டுமென உயில் (Will) எழுதிவிட்டு 1700ஆம் ஆண்டு இறந்துவிட்டார். இந்த உயிலை ஆதாரமாகக் கொண்டு, ஸ்பானிய நிலப் பகுதிகள் அனைத்தும் தனக்கே சேர வேண்டுமென லூயி அறிவித்தார். அதை அடுத்து ஸ்பானிய வாரிசுரிமைப் போர் தொடங்கியது.

இப்போர் 1702—1713ஆம் ஆண்டுகளுக்கிடையில் பல இடங்களில் நடைபெற்றது. லூயிக்கு எதிராக இங்கிலாந்து, ஆஸ்திரியா, ஹாலந்து மற்றும் சில முக்கிய ஜெர்மானிய அரசுகள் சேர்ந்து போரிட்டன. இங்கிலாந்து முக்கியமான பணியை இப் போரில் செய்தது. ஆங்கிலப் படைத் தலைவர் ஜான் சர்ச்சில் (John Churchill) ஃபிரென்சுப் படைகளை பிளன்ஹீம் ((Blenheim—1704), ராமலிஸ் (Ramillies—1706), ஊடர்ஞட் (Oudernarde—1708), மால்பிளாக்கே (Malplaquet —1709) முதலான இடங்களில் தோற்கடித்துப் பெருவெற்றி பெற்ருர். அதற்கிடையில் இங்கிலாந்தில் விக் கட்சி (Whig Party) பதவியை இழந்து டோரிக் கட்சி (Tory Party) அமைச்சரவையை அமைத்தது. அது போரைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லை. ஃபிரான்சும் போரில் ஏற்பட்ட பெருந் தோல்விகளால் அமைதியை விரும்பியது. இந்நிலையில் 1713ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட உட்ரெக்ட் உடன்படிக்கையின்படி (Treaty of Utrecht) போர் நிறுத்தப்பட்டது. லூயியின் பேரன் ஃபிலிப், ஸ்பெயினின் மன்னராக ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

[1] பவேரியாவின் இளவரசரும் சில பகுதிகளைக் கேட்கத் தொடங்கினுர். ஏனெனில், அவர் இரண்டாம் சார்லசின் உறவுப் பெண்ணை மணந்திருந்தார்.

ஆனால், ஃபிரான்சும் ஸ்பெயினும் ஒன்ருக இணைக்கப்படக் கூடாது என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. ஆஸ்திரியாவிற்கு ஸ்பானிய நெதர்லாந்து, மிலான், நேபிள்ஸ் ஆகியவை தரப்பட்டன. இங்கிலாந்து ஃபிரான்சிடமிருந்து நியூஃபவுண்டுலாந்து, நோவாஸ் கோஷியா, ஹட்சன் விரிகுடாப் பகுதி முதலானவற்றையும், ஸ்பெயினிடமிருந்து மினர்க்கா, ஜிப்ரால்டர் ஆகியவற்றையும், பெற்றது. உட்ரெக் உடன்படிக்கை ஐரோப்பிய வரலாற்றில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

## 5. லூயியின் இறுதிக்காலம்

ஐம்பது ஆண்டுகளுக்குமேல் ஐரோப்பிய அரசியலில் பீடுநடை போட்ட லூயி 1715ஆம் ஆண்டு மனமுடைந்து மறைந்தார். அவர் ஃபிரான்சை முதல்தரமான வல்லரசாக்கத் திட்டமிட்டார். அதன் விளைவாக அவர் செய்த ஆக்கிரமிப்புப் போர்களால் அந் நாட்டின் பொருளாதார நிலையும் நிதி நிலையும் சீர்குலைந்தன. இது பின்னர் ஃபிரெஞ்ச்சுப் புரட்சி நடைபெறக் காரணமாயிற்று. தூய வானில் தோன்றும் ஒளிமிகுந்த காலைக் கதிரவனைப்போல் ஆட்சி யைத் தொடங்கிய லூயி, இருண்ட மேக மூட்டத்துள் புதைந்த மாலைக் கதிரவனைப்போல் ஒளியிழந்து மறைந்துபோனர்.

# 6. ரஷ்யாவில் மகா பீட்டர்
## (1682 — 1725)

'ரோமனேவ்' என்ற வமிசத்தைச் சேர்ந்த அரசர்கள் 1613ஆம்ஆண்டிலிருந்து 1917ஆம் ஆண்டுவரை ரஷ்யாவை ஆட்சி செய்தார்கள். அவர்களுள் மகா பீட்டர் (Peter the Great) மிகச் சிறந்த அரசராவார். அவருடைய ஆட்சிக் காலத்தில் ரஷ்யா பல் துறை வளர்ச்சிபெற்றது. எனவே, அவர் 'மகா பீட்டர்' என்றும், 'நவீன ரஷ்யாவின் தந்தை' என்றும் சிறப்பிக்கப்படுகிருர்.

### 1. பீட்டர் மன்னராதல்

1682ஆம் ஆண்டு பீட்டர் தமது பத்தாம் வயதில் ரஷ்யாவின் மன்னரானுர். அவர் சிறுவனுக இருந்ததால் அவருடைய தமக்கை அவருக்குக் காப்பாளராக இருந்தார். 16‛9ஆம் ஆண்டு தனது பதினேழாம் வயதில் முழு ஆட்சிப் பொறுப்பைப் பீட்டரே மேற் கொண்டார்.

அவர் அரியணை ஏறியபோது ரஷ்யா மிகவும் பின் தங்கிய நிலே யில் இருந்தது; பழமையிலும் படைமானியத் திட்ட அமைப்பிலும் சிக்கிச் சீரழிந்து கிடந்தது. மக்கள் கல்வியறிவு அற்றவர்களாகவும் மூடநம்பிக்கைகளில் மூழ்கியவர்களாகவும் இருந்தார்கள். ஆசியா விலும் ஐரோப்பாவிலும் பரந்து விரிந்து கிடந்த ரஷ்யா ஐரோப் பிய அரசியல், கலாசாரம் முதலியவற்றினின்று விலகித் தனித்து நின்றது. நடையுடை பாவனைகளில் ஆசியாவையே அது பெரிதும் சார்ந்திருந்தது. ஸ்வீடன், பால்டிக் கடலில் தன் அதிகாரத்தை நிலேநாட்டியிருந்தது. கருங்கடல் பகுதியில் துருக்கியரின் ஆதிக்கம் மிகுந்திருந்தது. ஐரோப்பிய நாடுகளுடன் வாணிக, கலாசாரத் தொடர்புகளே வைத்துக் கொள்ளத்தக்க வாய்ப்புகள் இல்லே. வட பகுதியில் இருக்கும் ஆர்க்டிக் பெருங் கடல் ஆண்டின் பெரும்பகுதி பனி உறைந்து கிடக்கும். அங்கிருக்கும் ஆர்க்கேஞ்சல் (Archangel) துறைமுகம் அப்பொழுது பனிமூடிப் பயனற்றுக் கிடந்தது.

சார் (Czar) என்றழைக்கப்பட்ட ரஷ்ய மன்னர் வரம்பிலா அதிகாரங்களேப் பெற்றிருந்தார். எனினும் அவருக்குப் பெரும் தடைகளாக விளங்கியவை இரண்டு. முதலாவது, ரஷ்யக்

கிறித்துவத் திருச்சபையின் தலைவராகிய பாட்ரியார்க்கின் (Patriarch) அதிகாரங்களாகும். அவர் மன்னரைவிடத் தாமே உயர்ந்தவர், மக்களின் வாழ்க்கை முறைகளைக் கட்டுப்படுத்தும் உரிமையுடையவர் என்று கூறிக்கொண்டார். தாம் ஆணையிடு வதை அரசர் ஏற்றுக்கொண்டு அப்படியே செயல்பட வேண்டும் என்று கருதினார். இரண்டாவது தடை, 'ஸ்டிரெல்சி' (Streltsi) என்று சொல்லப்பட்ட அரசரின் மெய்க்காவல் படையினர் ஆவர். அவர்கள் பீட்டர் கொண்டுவர முயன்ற எல்லாச் சீர்திருத்தங் களுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்களுள் ஆயிரம் பேரைக் கொன்று குவித்து, பீட்டர் தம்முடைய பணிகளைத் தொடர வேண்டியதாயிற்று.[1]

## 2. பீட்டரின் பண்புகளும் நோக்கங்களும்

பீட்டர் பலவிதமான நற்குணங்கள், மற்றும் தீயகுணங்களின் பிறப்பிடமாகக் காணப்பட்டார். நல்லவருக்கு மிகச் சிறந்த நண்ப ராகவும், தீயவருக்கு மிகக் கொடுமையான பகைவராகவும் அவர் விளங்கினார். தம் விருப்பப்படி அனைவரும் செயல்பட வேண்டும் என அவர் விரும்பினார். தம் சொற்கேளாத தம் சொந்த மகனை அவர் கொலை செய்வித்தார். 'ஹூணர்களின் கொடுந்தலைவன் அட்டிலாவிடமிருந்த (Attila) தீக்குணங்கள் அனைத்தும் பீட்டரிடம் இருந்தன...வரலாற்றில் இத்தகைய விந்தை மனிதனைக் காண முடியாது' என்று வரலாற்றாசிரியர் A.J. கிராண்ட் கூறுகின்றார். அதே நேரத்தில் அவரிடம் பல நல்ல குணங்களும் இருந்தன. இனிய இசையையும், நூல்களையும் ரசிக்கும் மனப்பக்குவத்தை அவர் பெற்றிருந்தார். அறிவியல் துறையிலும் தொழில் துறையி லும் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது.

நாட்டில் மன்னருக்குப் பகைவர்களே இருக்கக்கூடாது; எல்லா அதிகாரங்களையும் மன்னர் பெற்றிருக்க வேண்டும் என்று அவர் கருதினார். நடை உடை பாவனைகளாலும், பழக்க வழக்கங் களாலும் ஆசியமயமாகக் கிடந்த ரஷ்யாவை ஐரோப்பிய மயமாக்கப் பீட்டர் விரும்பினார். ஐரோப்பிய நாடுகளுடன் ரஷ்யாவிற்குத் தொடர்பை ஏற்படுத்தி அந்நாட்டின் 'தனித்த நிலையை' (Isolation) மாற்றத் திட்டமிட்டார். நாட்டின் செல்வத்தைப் பெருக்க வாணி கத் துறையும் தொழில் துறையும் வளர்ச்சியடைய வேண்டும் என் பது அவருடைய கொள்கையாகும். ஐரோப்பிய முறையில் பயிற்சி பெற்ற இராணுவத்தை உருவாக்க வேண்டும் என்றும், பனிமூடாத் துறைமுகங்களை ரஷ்யா எப்படியும் பெறவேண்டுமென்றும் பீட்டர்

[1] Grant A.J. Europe: The Story of the Last Five Centuries, (1963). p. 624.

திட்டமிட்டார். தம் நோக்கங்களை நிறைவேற்ற, ரஷ்யாவை வலிமை மிகுந்த நாடாக்கப் பல உள்நாட்டுச் சீர்திருத்தங்களை யும், அயல்நாடுகளுடன் போர்களையும் அவர் மேற்கொண்டார்.

### 3. வலிமைமிக்க மன்னராதல்

பீட்டர் கொண்டுவர விரும்பிய சீர்திருத்தங்களுக்கு 'ஸ்டிரெல்சி' என்ற மெய்க்காவல் படையினர் எதிர்ப்புக் தெரிவித்துக் கலகம் செய்தனர் என்பது முன்னரே கூறப்பட்டது. பீட்டர் தம் அதிகாரங்களைப் பெருக்கிக்கொண்டு அவர்களுள் நூற்றுக்கணக்கானவர்களைக் கொன்றுவிட்டார். அப் படையைக் கலைத்துவிட்டு ஐரோப்பிய முறையில் பயிற்றுவிக்கப்பட்ட இரண்டு இலட்சம் வீரர்களைக்கொண்ட புதிய படையை அவர் உருவாக்கினார். 'டூமா' (Duma) என்று அழைக்கப்பட்ட பிரபுக்கள் அடங்கிய ரஷ்யப் பாராளுமன்றத்தைப் பீட்டர் கலைத்துவிட்டார். ஆட்சிமுறையில் தமக்கு உதவியாய் இருக்க அறிவும் ஆற்றலும்மிக்க ஒரு சிலரை மட்டுமே அவர் நியமித்துக் கொண்டார். ரஷ்யக் கிருத்துவத் திருச்சபையின் பாட்ரியார்க் (தலைமைக் குரு) இறந்த போது புதிய பாட்ரியார்க் ஒருவரை நியமிக்க மன்னர் மறுத்துவிட்டார். திருச்சபையை நிர்வகிக்கும் பொறுப்பைப் 'புனித சினுடு' (Holy Synod) என்ற குருவிடம் ஒப்படைத்தார். அக் குழு மன்னரின் அதிகாரத்திற்கு உட்பட்டு அவர் விருப்பம்போல் செயல்பட்டது. தமக்கெதிராக செயல்படுபவர்களைக் கண்டுபிடிக்க ரகசியக் காவல் படையைப் பீட்டர் வைத்திருந்தார். அப்படை சிறப்பாகச் செயல்பட்டது.

### 4. ரஷ்யாவை ஐரோப்பிய மயமாக்குதல்

ஐரோப்பாக் கண்டத்திலுள்ள மற்ற மேலைநாடுகளைப் போல ரஷ்யாவை முன்னனி நாடாக மாற்றுவதற்காகப் பல்வேறு துறைகளில் கீழ்க்காணும் சீர்திருத்தங்களை மகா பீட்டர் கொண்டு வந்தார் :

**கல்வி வளர்ச்சி :** அறியாமையிலே மூழ்கிக்கிடந்த ரஷ்ய மக்களுக்கு, கல்விக் கண்ணைத் திறக்கப் பீட்டர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். தொடக்கப் பள்ளிகள் முதல் தொழிற்கல்வி நிலையங்கள் வரை பல கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. கணக்கு, அறிவியல் பாடங்கள் முதலானவை கொண்ட ஐரோப்பியக் கல்விமுறை ரஷ்யாவில் புகுத்தப்பட்டது; பெண்கல்வி வற்புறுத்தப்பட்டது; கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் குழந்தைகள் ஐரோப்பிய உடையையே அணிய வேண்டு

மென ஆணையிடப்பட்டது. நாடு முழுவதும் கிறிஸ்துவக் காலண்டர் முறையே பின்பற்றவேண்டும் என அறிவிக்கப்பட்டது.

தொழில் வளர்ச்சி : இங்கிலாந்து, ஹாலந்து, ஜெர்மனி முதலான நாடுகளிலிருந்து தொழில் நுணுக்க நிபுணர்கள் ரஷ்யாவிற்கு வரவழைக்கப்பட்டனர். அவர்களின் உதவியுடன் இரும்பு, தோல் தொழிற்சாலைகளும் நூற்பு ஆலைகளும் தொடங்கப்பட்டன. போக்குவரத்து வசதிக்குப் பாலங்களும், நெடுஞ்சாலைகளும் கட்டப்பட்டன. ஐக்கிய அமெரிக்காவிற்கு இணையாக இன்று ரஷ்யா தொழில்துறையில் முன்னேறியுள்ளது என்றால் அதற்கு அடிக்கல் நாட்டியவர் பீட்டரே ஆவார்.

கடற்படையும் பனிமூடாத் துறைமுகங்களும் : பீட்டர் இளைஞராக இருந்தபோதே ஹாலந்து நாட்டில் உள்ள ஆம்ஸ்டர்டாமிலும் (Amsterdam), இங்கிலாந்தி உள்ள டெப்ட்ஃபோர்டிலும் (Deptford) இருந்த கப்பல்கட்டும் தளங்களைப் பார்த்திருந்தார். அங்கு அவரே ஒரு தொழிலாளியாகப் பணிபுரிந்து அத் தொழிலின் நுணுக்கங்களை அறிந்திருந்தார். பீட்டர் மன்னரான பின் ஆர்வம் மிக்க இளைஞர்களையும் பிரபுக்களையும் அந் நாடுகளுக்கு அனுப்பிக் கப்பல் கட்டும் தொழிலை நன்கு பயின்றுவரச் செய்தார். துருக்கியருடன் போரிட்டுக் கருங்கடலின் திறவுகோலாக விளங்கும் அசாவ் (Azov) துறைமுகத்தை அவர் கைப்பற்றிக் கொண்டார். அது ரஷ்யாவின் தெற்கே சிறந்த கடற்படைத் தளமாக விளங்கியது. ஸ்வீடனுடன் போரிட்டுப் பால்டிக் கடற்பகுதியில் ரஷ்யாவின் செல்வாக்கை நிலைநாட்டினார்.

புதிய தலைநகரம் : பால்டிக் கடற்பகுதி தம் ஆதிக்கத்திற்கு வந்த பின்னர், ரஷ்யாவின் மேற்கே, பால்டிக்கடல் அருகே, நேவா (Neva) நதிக்கரையில் பிரம்மாண்டமான புதிய தலைநகரத்தைப் பீட்டர் கட்டுவித்தார். அது அவருடைய பெயரால் பீட்டர்ஸ்பர்க் (St. Petersburg) என்று வழங்கப்பட்டது. அந் நகரம் 'மேலை நாகரிகத்தின் வாயிலாக'க் (Window of the western Civilisation) கருதப்பட்டது. காலப் போக்கில் இந் நகரம் ரஷ்ய வரலாற்றில் மிக முக்கியமானதாக விளங்கியது. இப்பொழுது அந்த நகரம் லெனின் கிராட் (Leningrad) என்று வழங்கப்படுகிறது.

சமூகச் சீர்த்திருத்தங்கள் : ரஷ்ய மக்கள் அனைவரும் ஐரோப்பிய முறையில் உடை உடுத்தவேண்டுமெனப் பீட்டர் ஆணையிட்டார். பெண்களும் ஆண்களும் சமமாகப் பழகவேண்டும் என்றும் பெண்கள் திரைமறைவில் வாழக்கூடாது என்றும் அவர்

கூறினர். மன்னர் பல விருந்துகளை ஏற்பாடு செய்தார். அந்த விருந்துகளுக்குப் பிரபுக்களும் மற்ற அரசு அதிகாரிகளும் அவரவர் மனைவியரையும் அழைத்துவரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். ரஷ்யர்கள் முகத்தில் முடிவளர்த்து நீண்ட தாடியை வைத்துக் கொள்ளக்கூடாது என்று தடை விதித்தார். தடையை மீறிய சில பிரபுக்களின் தாடியை மன்னரே கத்தரித்துவிட்டார்! தடையை மீறித் தாடி வைத்துக்கொண்டவர்கள் தண்டிக்கப் பட்டார்கள். அவர்களிடமிருந்து வரியும் (tax) வசூலிக்கப்பட்டது.

மற்ற நடவடிக்கைகள்: ரஷ்யாவில் முதல் செய்தித்தாள் வெளிவருவதற்குக் காரணமாக இருந்தவர் பீட்டர் ஆவார். மேலை நாட்டு மருத்துவ மனையையும் அவர் ரஷ்யாவில் முதன் முதலாகத் திறந்தார். அரும்பொருள்களைக் காக்க அரும்பொருட்கூடத்தை (Museum) அமைத்தார். ஆட்சி முறையை ஒழுங்குபடுத்துவதற்கு ரஷ்யாவை எட்டு மாநிலங்களாகப் பிரித்து, ஆளுநர்களை நியமித்து, அவர்களுக்குத் துணைசெய்ய ஆலோசனைக் குழுக்களை நியமித்தார்.

5. அயல்நாட்டுக் கொள்கை

ரஷ்யாவின் வலிமையைப் பெருக்கவும், அதன் பெருமையை ஐரோப்பிய நாடுகளுக்கு உணர்த்தவும், பனிமூடாத் துறைமுகங்களைப் பெறவும் பீட்டர் இரண்டு போர்களிலும் ஈடுபட்டார்.

(i) துருக்கியருடன் போர் (1696): ரஷ்யாவின் தெற்கே ஒரு துறைமுகம் இருக்கவேண்டியதன் அவசியத்தைப் பீட்டர் உணர்ந்தார். எனவே, அவர் 1696-ல், டான் (Don) நதி வழியாகப் போர்க்கப்பல்களை அனுப்பி, துருக்கியரின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த அசாவ் (Asov) என்ற கருங்கடல் துறைமுகத்தைக் கைப்பற்றிக் கொண்டார். இது அடுத்த பதினைந்து ஆண்டுகள் ரஷ்யாவிற்குச் சிறந்த கடற்படைத் தளமாக விளங்கியது.

(ii) ஸ்வீடனுடன் போர் (1699—1721): பால்டிக் கடலில் ஒரு துறைமுகத்தைப் பெறவேண்டும் என்ற பீட்டரின் நோக்கம் அவ்வளவு எளிதாக நிறைவேறக்கூடியதாக இல்லை. ஏனெனில், அப்பொழுது ஸ்வீடனை ஆண்டுவந்த பன்னிரண்டாம் சார்லஸ் (Charles XII) வலிமைமிக்கவர் ஆவார். எனவே, ஸ்வீடனைத் தாக்கப் பீட்டர் 1699ஆம் ஆண்டு டென்மார்க்கோடும், போலந்தோடும் ஓர் உடன்பாடு செய்துகொண்டார். அதையடுத்துப் போர் தொடங்கியது.

'போரிடி' (The thunder bolt of War) என்றும், 'வடக்குச் சூறாவளி' (The Hurricane of the North) என்றும் அழைக்கப்பட்ட

சார்லஸ், முதலில் டென்மார்க்கைப் பயங்கரமாகத் தாக்கி அதன் அரசனை அடிபணிய வைத்தார். அடுத்து, நார்வா (Norva) என்னு மிடத்தில் முற்றுகையிட்டுக்கொண்டிருந்தது நாற்பதாயிரம் வீரர் களைக் கொண்ட ரஷ்யப் படையைச் சார்லஸ் தோற்கடித்தார். பின்னர் போலந்தைத் தாக்கி, அதன் மன்னரை அரியணையினின்று இறக்கினர் (1704). வெற்றிமேல் வெற்றி பெற்ற சார்லஸ் ரஷ்யா வின் தலைநகரான மாஸ்கோவைக் கைப்பற்றிக்கொள்ளத் திட்ட மிட்டார். அந்த நகரை நோக்கிப் படைகள் சென்றன. ஆனால் பீட்டரின் படைகள் தலைநகரத்தை மிகத் திறமையாகப் பாதுகாத் தன. பின்னர்ப் புல்டடேவா (Pultowa) என்ற இடத்தில் நடை பெற்ற போரில் ரஷ்யப் படைகள் ஸ்வீடன் படைகளை மிகக் கடுமையாகத் தாக்கித் தோற்கடித்தன (1709). சார்லஸ் துருக்கிக் குத் தப்பி யோடினர். அவர் 1718-ல் ஒரு போரில் கொல்லப்பட் டார். புல்டோவா வெற்றி பீட்டரின் வலிவையையும் பெருமை யும் ஐரோப்பிய நாடுகளுக்கு உணர்த்தியது.

1720ஆம் ஆண்டு ஸ்வீடன் ரஷ்யாவுடன் நைஸ்டாட் உடன் படிக்கையை (Peace of Nystad) செய்துகொண்டது. அதன்படி கரீலியா, இங்கிரியா, எஸ்தோனியா, லிவோனியா (Carelia, Ingria Esthonia and Livonia) முதலான பகுதிகளை ரஷ்யா பெற்றது. 1721ஆம் ஆண்டு பீட்டர், 'தந்தையர் நாட்டின் தந்தை' 'மகா பீட்டர்,' மற்றும் 'ஒன்றுபட்ட ரஷ்யாவின் பேரரசர்' என்றெல் லாம் சிறப்பிக்கப்பட்டார் (A. J. கிராண்ட்).[1] தாம் பெற்ற பால்டிக்கடல் பகுதியில்தான் புதிய தலைநகரமாகிய பீட்டர்ஸ் பர்கை நிறுவினர்.

## 6. மதிப்பீடு

தம் நாட்டின் நலனுக்காக அயராது உழைத்து, போர்களை மேற்கொண்டு, கடும் எதிர்ப்புகளிடையே ரஷ்யாவை ஐரோப்பிய மயமாக்கி, அந்த நாட்டின் எல்லைகளைப் பெருக்கி, அதை வலிமை மிக்க நவீன ரஷ்யாவாக மாற்றிய பீட்டர், 'தந்தையர் நாட்டின் தந்தை' என்று அழைக்கப்படுவது முற்றிலும் பொருந்தும்.

[1] 'In 1721 he was acclaimed as 'Father of the Fatherland, Peter the Great and the Emperor of all the Russias'—A. J. Grant.

# 7. பிரஷ்யாவில் மகா ஃபிரெடிரிக்
## (1740 — 1786)

பிரஷ்யாவை ஆட்சி செய்த அரசர்களுள் மகா ஃபிரெடிரிக் (Frederick the Great) மிகவும் முக்கியமானவர் ஆவார். ஃபிரான்சை ஆண்ட பதினான்காம் லூயி 'நாடு என்பது நான்தான்' என்று ஆணவமாகக் கூறினார். ஆனால் ஃபிரெடிரிக் 'நான் நாட்டின் முதல் தொண்டன்' என்று கூறிக்கொண்டார். அவர் ஆட்சிக் காலத்தில் பிரஷ்யா பெரும் புகழைப் பெற்றது. ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் ஃபிரெடிரிக், 'மக்கள் நலம் பேணும் வல்லாட்சியாளராக' விளங்கினார்.

### 1. ஃபிரெடிரிக்கின் இளமை

முதலாம் ஃபிரெடிரிக் வில்லியத்தின் மகனான இவர் இளைஞராக இருந்தபோது இசையிலும் இலக்கியத்திலும் நாட்டம் கொண்டிருந்தார். கட்டுப்பாடான இராணுவ வாழ்க்கைக்கு ஏற்றவராக இவரை மாற்ற இவர் தந்தை விரும்பினார். ஆனால், ஃபிரெடிரிக் ஃபிரெஞ்சு இலக்கியத்திலும், பண்பாட்டிலும் பெரு விருப்பம் கொண்டு தந்தையின் விருப்பத்திற்கு நேர்விரோதமாக நடக்க முற்பட்டார். முடிவில் தந்தையின் முரட்டுத்தனத்திற்குப் பணிந்து சிவில், இராணுவ, ஆட்சிமுறை நுணுக்கங்களை அறிந்து கொண்டார். இவர் அரசரானால் அமைதிநாடும் மன்னராக இருப்பார் என்று ஐரோப்பா நினைத்தது. ஆனால், இவர் மன்னரானதும், மாக்கியவெல்லியே (Machiavelli) உயிரோடு இருந்திருந்தால் வியந்து பாராட்டக்கூடிய வகையில் ராஜதந்திரமும் ஆளும் திறனும் பெற்றிருந்தார்.

1740ஆம் ஆண்டு ஃபிரெடிரிக் பிரஷ்யாவின் மன்னரானார். அரசியலரங்கில் முன்னணியில் நின்ற ஐரோப்பிய நாடுகளில் பிரஷ்யாவிற்கு ஒரு முக்கியமான இடம் இருக்கவேண்டும் என ஃபிரெடிரிக் விரும்பினார். ஜெர்மானிய அரசுகளுக்குத் தலைமை தாங்கும் ஆஸ்திரியாவின் தனிப்பெருமையைத் தகர்த்தெறிய அவர் முடிவு செய்தார். அதனால் அவர் நான்கு போர்களில் ஈடுபட வேண்டியதாயிற்று

2. ஃபிரெடிரிக் செய்த போர்கள்

(i) ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் (1740 — 1748): ஆஸ்திரியாவின் மன்னரான ஆரும் சார்லஸ் தமக்குப்பின் தமது மகளான மரியா தெரசாவை (Maria Therasa) ஆஸ்திரியாவின் அரசியாக ஆக்குவதற்கு ஐரோப்பாவின் முன்னணி அரசுகளின் ஒப்புதலைப் பெற்ருர். அவர் 1740-ல் இயற்கை எய்தினுர். உடனே பவேரியா, சார்டினியா, சாக்சனி, ஸ்பெயின், ஃபிரான்ஸ் முதலானவை ஆஸ்திரிய நிலப்பகுதிகளில் தங்களுக்கும் பங்கு உண்டு என உரிமை கொண்டாடின. இத்தகைய சூழ்நிலையில் ஃபிரெடிரிக், ஆஸ்திரியாவுக்குச் சொந்தமான சைலீஷியா (Silesia) என்ற பகுதியைக் கைப்பற்றிக்கொண்டார். ஐரோப்பிய அரசுகள் ஆரும் சார்லசுக்குச் செய்துகொடுத்த உறுதிமொழி புறக்கணிக்கப்பட்டது. எனவே, ஆஸ்திரிய வாரிசுரிமைப்போர் (The War of Austrian Succession) தொடங்கியது. ஃபிரான்ஸ் பிரஷ்யாவை ஆதரித்தது. இங்கிலாந்து ஆஸ்திரியாவுக்கு எல்லாவிதமான உதவியையும் கொடுத்தது. மற்ற நாடுகளும் போரில் கலந்துகொண்டன. போர் எட்டாண்டுகள் நடைபெற்றது. இறுதியில் 1748ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஐக்ஸ்-லா-ஷாபெல் (Aix-la-Chapelle) உடன்படிக்கையின்படி போர்நின்றது. மரியா தெரசா ஆஸ்திரியா அரசி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஃபிரெடிரிக் தாம் கைப்பற்றிக்கொண்ட சைலீஷியாவைத் திருப்பித் தரவில்லை.

(ii) அரசு தந்திரப் புரட்சி (1748 — 1756): தாம் இழந்த சைலீஷியாவை எப்படியும் பெறவிரும்பிய மரியா தெரசா தமது திறமை மிக்க அமைச்சரான கானிட்ஸ் (Kaunitz) என்பவரின் அறிவுரைப்படி நடக்க முன்வந்தார். மிகப்பெரிய ராஜதந்திரியான கானிட்ஸ், ஃபிரான்சுடன் ஆஸ்திரியா நட்புக்கொள்ள வேண்டுமென வற்புறுத்தினுர். அதனுல் சுமார் இருநூறு ஆண்டுகள் பகைநாடுகளாக இருந்த ஃபிரான்சும் ஆஸ்திரியாவும் நட்பு நாடுகளாயின. ஃபிரான்சுடன் கடல்வாணிகத்திலும், குடியேற்றங்களை நிறுவுவதிலும் போட்டியைத் தவிர்க்க முடியாத இங்கிலாந்து, பிரஷ்யாவுடன் நட்புக்கொண்டது. ரஷ்யா ஆஸ்திரியாவை ஆதரித்தது. இத்தகைய விந்தையான கொள்கை மாற்றங்களும், நாடுகளின் கூட்டும் அரசு தந்திரப் புரட்சி (The Diplomatic Revolution) என்று அழைக்கப்படுகின்றது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற போரில் ஆஸ்திரியா-ஃபிரான்சு-ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு எதிராக ஃபிரெடிரிக்கினுல் எந்த வெற்றியையும் பெற முடியவில்லை.

(iii) ஏழாண்டுப் போர் (1756—1763): இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்கும் இடையே ஏற்பட்ட வாணிகப் போட்டியினுல் ஏழாண்டுப்போர் (The Seven Years' War) தொடங்கியது. இந்தப் போரில் இங்கிலாந்து. பிரஷ்யா ஆகிய நாடுகள் ஒரு பக்கமும் ஆஸ்திரியா, ஃபிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் மற்ருெரு பக்கமும் சேர்ந்து போரில் ஈடுபட்டன. 1756ஆம் ஆண்டு தொடங்கிய இந்தப் போர் ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா மற்றும் இந்தியாவிலும் நடைபெற்றது.

ஃபிரெடிரிக் ஃபிரெஞ்சுப் படைகளை ராஸ்பாக் (Rosbach போரிலும், ஆஸ்திரியப் படைகளை லியுதன் (Leuthen) போரிலும், ரஷ்யப் படைகளை சார்ன்டார்ஃப் (Zorndorf) போரிலும் தோற்கடித்தார்.

இங்கிலாந்தில் அப்பொழுது நியூகாசல்-பிட் அமைச்சரவை பதவியிலிருந்தது. அந்த அமைச்சரவையின் உறுதியான கொள்கைகளால், அமெரிக்காவில் ஆங்கிலப் படைகள் ஃபிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்தன (1760). இந்தியாவிலும் மூன்ருவது கர்ஞடகப் போரில், ஃபிரெஞ்சுப் படைகளை ஆங்கிலப் படைகள் தோற்கடித்தன.

எனினும் ஐரோப்பாவில் முதலில் பல வெற்றிகளைப் பெற்ருலும் பின்னர் இரண்டு இடங்களில் ஆஸ்திரியப் படைகளாலும் ரஷ்யப் படைகளாலும் பிரஷ்யப்படைகள் தோற்கடிக்கப்பட்டன மேலும், ரஷ்ய அரசி எலிசபெத் (Tsarina Elezabeth) இறந்தபின் அரியணை ஏறிய மூன்ரும் பீட்டர் (Peter III), ஃபிரெடிரிக்குடன் சமாதானம் செய்துகொண்டார்.[1] போரைத் தொடர்வதில் பயனில்லை எனக் கருதிய எல்லா நாடுகளும் போரை நிறுத்தின. 1763ஆம் ஆண்டு இங்கிலாந்தும் ஃபிரான்சும் பாரிஸ் உடன்படிக்கையை (Treaty of Paris) செய்துகொண்டன. அதே ஆண்டு ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் ஹியுபெர்ட்ஸ்பர்க் உடன்படிக்கையை (Treaty of Hubertsburg) செய்துகொண்டன. பிரஷ்யா சைலீஷியாவை வைத்துக்கொள்ள ஆஸ்திரியா அனுமதித்தது.

ஏழாண்டுப் போரினுல் ஃபிரெடிரிக்கின் போர்த் திறமையை மற்ற நாடுகள் உணர்ந்தன. ஜெர்மானிய அரசுகளுக்குத் தலைமை தாங்க ஆஸ்திரியாவைவிடப் பிரஷ்யாவே தகுதி வாய்ந்தது என்ற உண்மை ஐரோப்பிய நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

[1] அடுத்த நான்கு மாதங்களுக்குள் அவருடைய மனைவி அவரைக் கொலை செய்துவிட்டு ரஷ்யாவின் அரசியாஞர். அவர்தாம் வரலாற்றுப் புகழ்மிக்க இரண்டாம் காதரின் (Catherine II) ஆவார்.

(iv) போலந்துப் பங்கீடு (1772) : போலந்தின் அரசர் மூன்ரும் அகஸ்டஸ் (Augustus III) இறந்ததும், ரஷ்ய அரசி இரண்டாம் காதரின் (Catherine II) ஃபிரெடிரிக்கின் உதவியுடன், ஸ்டானிஸ்லாஸ் (Stanislaus) என்பவரைப் போலந்தின் புதிய அரசராக நியமித்தார். பின்னர் போலந்து முழுவதையும் ரஷ்யாவுடன் இணைத்துக்கொள்ள காதரின் திட்டமிட்டார். இதை உணர்ந்த ஆஸ்திரிய அரசி மரியா தெரசா போலந்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றிக்கொள்ள ஆயத்தமானுர். உடனே இந்தப் பிரச்சினையில் ஃபிரெடிரிக் தலையிட்டுப் பிரஷ்யா, ரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய மூன்று நாடுகளும் போலந்தைப் பங்கு போட்டுக் கொள்ளலாம் எனத் தெரிவித்தார். எந்தவிதமான போரும் இன்றி, பெருநிலப் பரப்புகளைப் பெறுவதை மூன்று நாடுகளும் விரும்பின. அதற்கேற்ப 1772ஆம் ஆண்டு போலந்தை அம் மூன்று நாடுகளும் பங்கு போட்டுக்கொண்டன. இது 'போலந்தின் முதலாவது பங்கீடு' (First Partition of Poland) என்று சொல்லப்படுகின்றது. அதன்படி பிராண்டன்பர்கிற்கும், கிழக்குப் பிரஷ்யாவிற்கும் இடையேயிருந்த மேற்குப் பிரஷ்யாவை ஃபிரெடிரிக் பெற்முர். இதுவரை பிரஷ்ய நாடு பிராண்டன்பர்க், கிழக்குப் பிரஷ்யா என இரு துண்டுகளாகப் பிரிந்திருந்தது. அவ்விரண்டினையும் ஒன்றுசேர்க்க மேற்குப் பிரஷ்யா பயன்பட்டது. இந்தப் போலந்துப் பங்கீடு அநியாயமான பகற் கொள்ளையாகும். எனினும், பிரஷ்யாவின் வலிமைக்கும் ஒருங்கிணைப்புக்கும் இது பெரிதும் உதவியது.

### 3. ஃபிரெடிரிக்கின் உள்நாட்டு நடவடிக்கைகள்

பிரஷ்ய நாட்டு மக்களின் நலனுக்காக ஃபிரெடிரிக் கடுமையாக உழைத்தார். 'எனது ஒரே கடவுள் எனது கடமைதான்' என்று அவர் கூறினுர். அவர் ஒரு சர்வாதிகாரியாக விளங்கினுலும், தம் வரம்பிலா அதிகாரங்களை மக்களின் நலத்துக்காகவும் நாட்டின் வளத்துக்காகவும் பயன்படுத்தினுர். அதற்காகக் கீழ்க் காணும் நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார் :

வேளாண்மை : பிரஷ்யாவின் வேளாண்மை வளத்தைப் பெருக்க ஃபிரெடிரிக் சதுப்பு நிலங்களையும் மேட்டு நிலங்களையும் விளைநிலங்களாக்கினுர். நீர்ப்பாசன வசதிக்குப் பல கால்வாய்களை வெட்டுவித்தார். உழவர்களுக்குச் சுமையாக இருந்த பல வரிகள் நீக்கப்பட்டன. கால்நடைகள் வாங்க அரசு உழவர்களுக்குக் கடன் வழங்கியது. நவீன விதைகளையும் உரங்களையும் அரசு கொடுத்தது.

தொழில் : அவர் காலத்தில் பட்டு, லினன், வெல்வெட் போன்ற ஆடைகளை உற்பத்தி செய்ய நெசவாலைகள் தொடங்கப்

பட்டன. பிற ஐரோப்பிய நாடுகளிலிருந்த தொழில்நுட்பமறிந்த தொழிலாளர்கள் பிரஷ்யாவில் குடியேறத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இரும்பு, நிலக்கரிச் சுரங்கங்களும் வெட்டப்பட்டன.

**நிதி :** நிதிநிலே சீர்பட, வேளாண்மை மற்றும் வணிக வளர்ச்சிக்கு வங்கி முறை (Banking System) அவசியம் என்று கருதிய ஃபிரெடிரிக், நாட்டில் பல வங்கிகளேத் திறக்க வழிவகுத்தார். குறிப்பாக 'பெல்லின் வங்கி' (Bank of Berlin) நாட்டின் நிதிநிலே சீர்பட உதவியது. புதிய நாணயங்களும் வெளியிடப்பட்டன.

**கல்வி :** நாடு முழுவதும் கல்வி நிறுவனங்கள் தொடங்கப் பட்டன. இலக்கியத்திலும், நுண்கலேகளிலும், அறிவியல் பாடங்களிலும் ஈடுபாடு கொண்ட ஃபிரெடிரிக் அவற்றின் வளர்ச்சிக்கு ஆதரவு கொடுத்தார். ஃபிரெஞ்சு மொழியை அரசாங்க மொழியாக்கினுர்.

**நீதி :** வான் கிராமர் (Von Cramer) என்ற வல்லுநரைக் கொண்டு சட்டங்களேத் தொகுக்கச் செய்தார். சித்திரவதை செய்யும் தண்டனே முறையை அவர் ஒழித்தார். விருப்பு வெறுப் பின்றி நீதிவழங்க அவர் ஏற்பாடு செய்தார். தண்டனேகளின் கடுமை ஓரளவு குறைக்கப்பட்டது.

**சமயப் பொறை :** பகைவரும் பாராட்டக்கூடிய சமயப் பொறையை (Toleration) ஃபிரெடிரிக் பெற்றிருந்தார். நாட்டின் நலனுக்காக எந்த மதத்தவரையும் ஆதரிக்க அவர் ஆயத்தமாக இருந்தார். 'துருக்கியர்கள் வந்து இங்குக் குடியேறினுல் அவர் களுக்கு நானே பள்ளிவாசல்களேக் கட்டித் தருவேன்' என்று மன்னர் கூறினுர். பதினுன்காம் லூயியின் மதக் கொள்கையோடு இவருடைய கொள்கையை ஒப்பிடும்போது வியக்கத்தகு வேற்றுமையை நாம் காண்கின்ருேம்.

**அறிஞர்களுக்கு ஆதரவு :** தலேசிறந்த போர்வீரராக விளங்கிய ஃபிரெடிரிக், அறிஞர்களும் புகழத்தக்க அரசியல் திறத்தைப் பெற்றிருந்தார். அத்தகையவர் அறிஞர்களே அன்புடன் ஆதரித்தார். ஃபிரெஞ்சு அரசியல் அறிஞர் வால்டேர் (Voltaire) பிரஷ்ய அரசவையில் சிறிதுகாலம் தங்கியிருந்தார். லெஸ்ஸிங் (Lessing), கதே (Goethe) போன்ற ஜெர்மானிய இலக்கிய மேதைகளேயும் அவர் ஆதரித்தார்.

4. ஃபிரெடிரிக்கின் பெருமை

சைலீஷியாவையும், மேற்குப் பிரஷ்யாவையும் தம் நாட்டுடன் இணைத்துக்கொண்டு அதன் எல்லைகளை விரிவடையச் செய்தார். பிரஷ்யாவை வலிமை பொருந்திய முதல்தரமான அரசாக மாற்றிய பெருமை ஃபிரெடிரிக்கையே சாரும். அந் நாட்டு இராணுவ வலிமையை மற்ற ஐரோப்பிய நாட்டவருக்கு உணர்த்தியவர் அவரே ஆவார். ஜெர்மானியச் சிற்றரசுகளின் தலைமையை ஏற்கக்கூடிய தகுதியைப் பிரஷ்யா பெற்றதென்றால் அதற்கு அவரே காரணமாவார். 'ஆள்வோரின் நன்மைக்காக மக்கள் இல்லை: மக்களின் நன்மைக்காகவே ஆள்வோர் இருக்கின்றனர்' என்று ஃபெரடிரிக் கூறினார். அத்தகைய பண்பாளரை, 'மக்களின் உண்மையான காவலன்' என்று ஆங்கில வரலாற்றாசிரியர் கார்லைல் (Carlyle, 1795—1881) பாராட்டுகின்றார்.

# III. புரட்சிகள்

## 8. ஐக்கிய அமெரிக்காவின் தோற்றம்

### 1. அமெரிக்காவில் ஐரோப்பியர்கள்

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கொலம்பஸ் 1492-ல் மேற்கிந்தியத் தீவுகளில் பஹாமாத் தீவுகளைக் கண்டார். அத் தீவுகள் இந்தியாவை அடுத்துள்ள சில தீவுகள் என அவர் கருதினார். பின்னர் அமெரிக்கோ வெஸ்புகி என்ற இத்தாலிய மாலுமி கொலம்பஸ் கண்டது ஒரு புதிய கண்டம் என்பதை ஐரோப்பியருக்குத் தெளிவுபடுத்தினார். எனவே அக்கண்டம் அமெரிக்கா என அவர் பெயரால் வழங்கப்படுகிறது. பின்னர் ஸ்பானியர், போர்ச்சுகீசியர், ஃபிரெஞ்சுக்காரர்கள் முதலான ஐரோப்பிய நாட்டவர் வட அமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய இரு கண்டங்களிலும் குடியேறினர். ஐரோப்பியருள் இறுதியில் சென்று குடியேறியவர்கள் ஆங்கிலேயர்கள் ஆவர். எனினும் அவர்கள் தாம் வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில் நிலையான பதின்மூன்று குடியேற்றங்களை அமைத்துக்கொண்டனர். அவை தாம் பின்னர் ஆங்கில அடக்குமுறை ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்டு விடுதலை பெற்றன.

### 2. ஆங்கிலக் குடியேற்றங்கள்

இங்கிலாந்தில் எலிசபெத் அரசி (Queen Elezabeth, 1558-1603) ஆட்சி செய்யும்போது 1583ஆம் ஆண்டு சர் வால்டெர் ராலே (Sir Walter Raleigh) என்பவருக்கு அமெரிக்காவில் ஆங்கிலக் குடியேற்றத்தை அமைக்க அனுமதி கொடுத்தார். ராலே, ராணியின் நினைவாக, வெர்ஜினியா (Virginia) என்ற குடியேற்றத்தை அமைத்தார். ஆனால், இது தோல்வியடைந்தது. பின்னர் முதலாம் ஜேம்ஸ் (James I, 1603—1625) மன்னர் காலத்தில் அவருடைய அனுமதியைப் பெற்று, லண்டன் கம்பெனியைச் சேர்ந்த சர் தாமஸ் ஸ்மித் (Sir Thomas Smith) முதலானவர்கள் 1607-ல் அதே வெர்ஜினியாவில் குடியேறி அதைச் சிறப்புமிக்க குடியேற்றமாக மாற்றினர்கள். வெர்ஜினியா ஆங்கிலேயர்களின் முதல் குடியேற்றமாகும்.


பதின்மூன்று குடியேற்றங்கள்
நியூ
மாஸ்ஸாசூசெட்ஸ்
நியூயார்க்
ரோட் தீவு
பென்சில்-
வேனியா
நியூ
ஜெர்ஸி
டிலவேர்
மேரிலாந்து
வெர்ஜினியா
வடகரோலினா
தென்கரோலினா
ஜார்ஜியா
வட அமெரிக்கா
அட்லாண்டிக் பெருங்கடல்

*1620*ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து மேஃப்ளவர் (Mayflower) என்ற கப்பலில் 'யாத்திரிகத் தந்தையர்' (Pilgrim Fathers)[1] பலர் சென்று, பிளிமத் (Plymouth) என்ற இடத்தில் குடியேறினர்கள். பின்னர் இது மஸ்ஸாசூஸெட்ஸ் (Massachusatts) என்ற மாநிலத்தின் ஒரு பகுதியாயிற்று. இந்த மஸ்ஸாசூசெட்ஸ் (*1628*) இரண்டாவது குடியேற்றமாகும்.

இதுபோல *1732*ஆம் ஆண்டுக்குள் பதின்மூன்று குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. வெர்ஜினியா மஸ்ஸாசூஸெட்ஸ், மேரிலாந்து, ரோட் தீவு, கனெக்டிகட், வடகரோலின, தென் கரோலின, நியுயார்க், நியுஹாம்ப்ஷைர், நியு ஜெர்சி, பென்சில்வேனியா, டிலவேர். மற்றும் ஜார்ஜியா ஆகியவை அந்தப் பதின்மூன்று குடியேற்றங்கள் ஆகும்.[2]

இந்தக் குடியேற்றங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சட்டமன்றம் இருந்தது. குடியேற்றங்களில் வாழ்ந்த மக்களின் நலன்களுக்கான சட்டங்களை அவை இயற்றின. ஒவ்வொரு குடியேற்றத்திலும் ஆங்கில அரசினல் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த ஆளுநர்களுக்கும் சட்டமன்றங்களுக்குமிடையே அடிக்கடி பூசல்கள் நடைபெற்றன. ஆங்கிலப் பாராளுமன்றம் குடியேற்றங்களைக் கட்டுப்படுத்தும் பல சட்டங்களை இயற்றும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது. *1750*ஆம் ஆண்டுக்குப் பின்னர் அத்தகைய சட்டங்களை ஆங்கிலப் பாராளுமன்றம் இயற்றியதால், குடியேற்றங்கள் விடுதலைப் போரைத் தொடங்கின.

### 3. விடுதலைப் போருக்கான காரணங்கள்

(i) அமெரிக்கர்களின் இயல்பு : *18*ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த அமெரிக்கர்கள் இயல்பாகவே உரிமை வேட்கை கொண்டவர்களாகவே விளங்கினர்கள். அவர்கள் நாட்டுப்பற்று மிகுந்தவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு இங்கிலாந்தின்பால் பரிவும் பாசமும் ஏற்படவில்லை. தாங்கள் ஆங்கில நாகரிகத்திற்குப் பெரிதும் மாறுபட்ட 'அமெரிக்கப் பண்பாட்டையும் நாகரிகத்தையும்' வளர்த்து, மாறுபட்ட சூழ்நிலையில் வாழ்வதாக அவர்கள் கருதினர்கள். 'ஆங்கிலேயர்கள்' என்பதைவிட 'அமெரிக்கர்கள்'

[1] முதலாம் ஜேம்ஸின் சர்வாதிகார ஆட்சியையும் சமயக் கொள்கையையும் ஏற்றுக்கொள்ளாத இந்தப் புராடஸ்டன்ட் குருமார்கள் அமெரிக்காவுக்குச் சென்றனர்.

[2] உண்மையில் ஆங்கிலேயர்கள் பதினறு குடியேற்றங்களை அமைத்தார்கள். பிளிமத், நியுஹேவன், மெய்ன் ஆகிய மற்ற மூன்றில் பிளிமத், மெய்ன் ஆகிய இரண்டும் மஸ்ஸாசூஸெட்ஸ் குடியேற்றத்துடன் சேர்க்கப்பட்டன. நியுஹேவன் கனெக்டிகட் குடியேற்றத்துடன் சேர்க்கப்பட்டது.

என்ற உணர்வே அவர்களிடம் காணப்பட்டது. ஐரோப்பிய நாடுகளின் வரலாறுகளையும் இலக்கியங்களையும் அவர்கள் படித்திருக்தார்கள். ஆங்கில அறிஞர்களான ஜான் லாக் (John Locke), ஹாரிங்டன் (Harrington) போன்றவர்களின் அரசியல் கருத்துக்களை அமெரிக்கர்கள் படித்திருந்தார்கள். ஃபிரெஞ்சு அறிஞர்களான மாண்டெஸ்கியு (Montesquieu), வால்டேர் (Voltaire) மற்றும் ரூஸோ (Rousseau) போன்றவர்களின் புரட்சிக் கருத்துகளையும் அவர்கள் வரவேற்றார்கள். இத்தகைய அரசியல் விழிப்புணர்ச்சியைப் பெற்றிருந்த அமெரிக்கர்களை அடக்கி ஆள இங்கிலாந்து பல சட்டங்களை இயற்றியபோது அவர்கள் உரிமைக் குரலெழுப்பிப் போரிட ஆயத்தமாய் இருந்தார்கள்.

(ii) வாணிகக் கட்டுப்பாடுகள் : அமெரிக்க வணிகர்கள் ஹாலாந்து, ஸ்பெயின் மற்றும் வேறு பல ஐரோப்பிய நாடுகளுடன் வாணிகம் செய்துவந்தனர். சர்க்கரை, புகையிலை, பருத்தி மற்றும் பல வணிகப் பொருள்களை அந்த நாடுகளுக்குக் குடியேற்றங்கள் ஏற்றுமதி செய்தன. இதை ஆங்கில அரசு விரும்பவில்லை. எனவே, அந்த அரசு அமெரிக்கர்களின் வாணிகத்தைக் கட்டுப்படுத்தப் பல கப்பல் போக்குவரத்துச் சட்டங்களை(Navigation Acts) இயற்றியது. இவற்றின்படி அமெரிக்கர்கள் தங்கள் வாணிகப் பொருள்களை இங்கிலாந்துக்குத்தான் ஏற்றுமதி செய்யவேண்டும் ; அவர்களுக்கு வேண்டிய பொருள்களை இங்கிலாந்திலிருந்து மட்டுமே இறக்குமதி செய்துகொள்ளவேண்டும் ; கடல் வாணிகத்திற்கு ஆங்கிலக் கப்பல்களையே பயன்படுத்தவேண்டும் என்று பலவிதமான கட்டுப்பாடுகளை விதித்தது. இத்தகைய கட்டுப்பாடுகளை அமெரிக்கர்கள் வெறுத்தார்கள்: சட்டங்களை மீறியும் அவர்கள் நடந்துகொண்டார்கள்.

(iii) ஏழாண்டுப் போரின் விளைவு : 1763ஆம் ஆண்டு பாரிஸ் உடன்படிக்கையின்படி ஏழாண்டுப் போர் நின்றது. இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்கும் இடையே நடைபெற்ற அந்தப் போரில் ஃபிரான்ஸ் தோல்வியடைந்ததால், ஃபிரான்சின் ஆதிக்கம் வட அமெரிக்காவிலிருந்து முழுமையாக அகற்றப்பட்டது. ஃபிரான்சுக்குச் சொந்தமான பெருநிலப்பரப்பை ஆங்கில அரசு பெற்றது. அதே ஆண்டு (1763) ஆங்கில அரசு ஓர் ஆணையை வெளியிட்டது. அதன்படி அல்லிகேனி (Allegheny) மலைகளுக்கு மேற்கே மிஸ்ஸிஸிபி (Mississippi) நதிவரையில் அமெரிக்கர்கள் சென்று குடியேறக்கூடாது என்றும் அந்தப் பெருநிலப்பகுதி செவ்விந்தியர்கள் வாழ்வதற்கென ஒதுக்கப்பட்டது என்றும் அறிவிக்கப்பட்டது. அமெரிக்க வணிகர்கள், எல்லைப்புறத்தில் வாழ்வோர் நிலம்

வாங்குவோர் முதலான எல்லாத் தரத்தினரும் இந்த ஆணையை எதிர்த்தனர். மேலே கூறப்பட்டதுபோல் இங்கிலாந்து பெருநிலப் பரப்பை அமெரிக்காவில் பெற்றதால் அதை நிர்வாகம் செய்ய, அரசின் வருவாயைப் பெருக்கவேண்டியதாயிற்று. எனவே, அங்குப் படையை வைத்துக்கொள்ளவும், வேறு பல செலவுகளை ஈடு செய்யவும் 1764ஆம் ஆண்டு சர்க்கரைச் சட்டம் (The Sugar Act) ஒன்றை ஆங்கிலப் பாராளுமன்றம் இயற்றியது. அதன்படி சர்க்கரை விற்பனைமீது வரி விதிகப்பட்டது. அதனால் ஆங்கில அரசுக்கு ஆண்டுக்கு நாற்பத்தைந்தாயிரம் பவுன் வருமானம் வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதை அமெரிக்கர்கள் எதிர்த்தனர். அதே ஆண்டு இயற்றப்பட்ட மற்றொரு சட்டத்தின்படி அமெரிக்க குடியேற்றங்கள் காகிதப் பணம் வெளியிடுவது கட்டுப் படுத்தப்பட்டது. இத்தகைய கட்டுப்பாடுகளால் அமெரிக்க வணிகர்கள் பெருந்தொல்லைக்குள்ளானார்கள்.

(iv) முத்திரைக் காகிதச் சட்டம் (1765): வளர்ந்து வந்த செலவுகளை ஈடுகட்டக் கிரென்வில் (Grenville) தலைமையில் செயல் பட்ட ஆங்கிலஅமைச்சரவை, 1765ஆம் ஆண்டு முத்திரைக்காகிதச் சட்டத்தை (The Stamp Act) இயற்றியது. அதன்படி அமெரிக் கர்கள் வாணிகம் மற்றும் சட்ட ரீதியான பத்திரங்களை எழுது வதற்கு ஆங்கில அரசு வெளியிட்ட 'முத்திரைத் தாள்களை'யே (Stamped papers) பயன்படுத்த வேண்டும் எனக் கூறப்பட்டது. இந்தச் சட்டத்தின் மூலம் ஆண்டுக்கு அறுபதாயிரம் பவுன் வரு மானம் வரும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்தச் சட்டத்திற்குக் குடியேற்றங்களில் புயல் போல் எதிர்ப்புக் கிளம்பியது. இந்தச் சட்டம் எல்லாத் தரத்தினரையும் பாதித்தது. நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்த ஆங்கிலப் பாராளுமன்றம் அமெரிக் கரைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை இயற்ற உரிமை அற்றது என அவர்கள் கூறினர். ஆங்கிலப் பாராளுமன்றத்தில் தங்களுக்குப் 'பிரதிநிதித்துவம் இல்லையேல் வரி இல்லை' (No Taxation without Representation) என்று அமெரிக்கர்கள் முழங்கினார்கள். முத்திரைத் தாள்களை எவரும் வாங்கவில்லை. அத் தாள்களை விற்க முனைந்த அலுவலர்கள் தாக்கப்பட்டனர். நியுயார்க்கில் ஒன்பது குடியேற் றங்களின் பிரதிநிதிகள் கூடி இந்தச் சட்டத்தை வன்மையாகக் கண்டித்தனர். எனவே, அடுத்த ஆண்டு (1766) ஆங்கில அரசு இந்தச் சட்டத்தை விலக்கிக் கொண்டது.

(v) டவுன்ஷெண்ட் சட்டங்கள் (1767): வில்லியம் பிட் (William Pitt) தலைமை அமைச்சராக இருந்தபோது அவருடைய நிதி அமைச்சராக சார்லஸ் டவுன்ஷெண்ட் (Charles Townshend)

பணியாற்றினர். அவருடைய முயற்சியால் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் 'டவுன்ஷெண்ட் சட்டங்கள்' என்று சொல்லப்படுகின்றன. அவற்றின்படி கண்ணாடி, இரும்பு, காகிதம், தேயிலை முதலான பொருள்களின்மீது இறக்குமதி வரிகள் போடப்பட்டன. இவற்றையும் அமெரிக்கர்கள் எதிர்த்தனர். எதிர்ப்புக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் எல்லா இடங்களிலும் நடைபெற்றன. வெர்ஜீனியச் சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருந்த ஜார்ஜ் வாஷிங்டன் (George Washington) ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அதைச் சட்டமன்றம் ஏற்றுக்கொண்டது. அந்தத் தீர்மானம், குடியேற்ற மககளின் மீது வரிவிதிக்க ஆங்கிலப் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை எனக் கூறியது. அமெரிக்காவில் நடைபெற்ற எதிர்ப்புக் கலகங்களை ஒடுக்க இங்கிலாந்திலிருந்து அதிகமான படைகள் அனுப்பப்பட்டன. பாஸ்டன் (Boston) நகரத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றின்மீது ஆங்கிலவீரர்கள் சுட நேர்ந்தது. அதில் ஐந்து அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். இந்தப் 'பாஸ்டன் படுகொலை' (1770) அமெரிக்கா முழுவதும் புரட்சிக் கனலைப் பரப்பியது. அதற்குள் இங்கிலாந்தில் நார்த் பிரபு (Lord North) தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார். அவர் டவுன்ஷெண்ட் சட்டங்களை உடனடியாக விலக்கிவிட்டார். தேயிலையின் மீதான வரிமட்டும் நீக்கப்படவில்லை. எனினும் அடுத்த மூன்றுண்டுக் காலத்தில் அமெரிக்காவில் அமைதிநிலவியது.

(iv) தேயிலைச் சட்டம் (1773) : தேயிலை வாணிகத்தைச் செய்து வந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி பணப் பற்றுக் குறையினுல் பெருந் தொல்லைக்குள்ளாயிருந்தது. அந்தக் கம்பெனியின் 170 இலட்சம் பவுண்ட் தேயிலை விற்பனையாகாமல் கிடங்குகளில் தேங்கிக் கிடந்தது. அந்தக் கம்பெனியின் நிதி நிலையைச் சீர்படுத்துவதற்காகத் தலைமை அமைச்சர் நார்த் 1773 ஆம் ஆண்டு தேயிலைச் சட்டத்தை (The Tea Act) இயற்றுவித்தார். அதன்படி இந்தியாவிலிருந்து நேராக அமெரிக்காவிற்குத் தேயிலையை அனுப்பக் கம்பெனிக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. இறக்குமதி வரியைச் செலுத்தாமல் இங்கிலாந்தின் கிடங்குகளிலிருந்து தேயிலையை அமெரிக்காவிற்கு அனுப்பச் சலுகை வழங்கப்பட்டது. அமெரிக்காவில் கம்பெனியின் ஏஜெண்டுகள் தேயிலையை விற்கத் தனியுரிமை (Monopoly) பெற்றனர். இந்தச் சட்டம் அமெரிக்க வணிகர்களைப் பெரிதும் பாதித்தது. கம்பெனியின் ஏஜெண்டுகள் மட்டுமே அமெரிக்காவில் தேயிலையை விற்ருல், அமெரிக்கவணிகர்கள் வாணிகம் செய்யமுடியாது. மேலும், தேயிலை வாணிகத்தில் கம்பெனிக்கு மட்டுமே தனியுரிமை இருப்பதை அவர்கள் விரும்பவில்லை. அதனுல் இந்தத் தேயிலைச் சட்டத்தை அமெரிக்க

வணிகர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். இத் தறுவாயில் பல கப்பல்கள் தேயிலைச் சரக்குகளுடன் பாஸ்டன் துறைமுகத்திற்குச் சென்றிருந்தன. அப்பொழுது சில ஆத்திரம் மிக்க எதிர்ப்பாளர்கள் செவ்விந்தியர்போல் வேடமணிந்து கொண்டு கப்பல்களினுள் சென்றனர். அவர்கள் நூற்றுக்கணக்கான பவுண்ட் தேயிலையைக் கடலில் எறிந்துவிட்டார்கள். இந் நிகழ்ச்சி ' பாஸ்டன் தேனீர் விருந்து ' (Boston Tea Party, 1773) என்று வழங்கப்படுகிறது. இதைப்பற்றிக் கேள்வியுற்ற நார்த் பிரபுவின் அமைச்சரவை இன்னும் மிகக் கடுமையான சட்டங்களை இயற்றியது. அவற்றின்படி பாஸ்டன் துறைமுகம் மூடப்பட்டது. மஸ்ஸாசூசெட்ஸ் மாநிலத்தின் சாசனம் (Charter) விலக்கப்பட்டது. அமெரிக்காவின் சில பகுதிகள் கனடாவிற்கு அளிக்கப்பட்டன. இவை அனைத்தையும் அமெரிக்கர்கள் மிகக்கடுமையாக எதிர்த்தார்கள். இயற்கையாகவே உரிமை வேட்கை கொண்ட அமெரிக்கர்கள் விடுதலைப் போருக்கான ஏற்பாடுகளை அமெரிக்கா முழுவதும் செய்யத் தொடங்கினர்கள். போர்க் கருவிகள் பெருமளவில் செய்யப்பட்டன: விடுதலைப் போருக்கான படையும் அமைக்கப்பட்டது; எங்கும் பதட்டநிலை நிலவியது.

4. போர் நிகழ்ச்சிகள்

அமெரிக்க விடுதலைப் போர் ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் நடைபெற்றது. 1775ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் லெக்சிங்டன்னில் (Lexington) தொடங்கப்பட்ட போர், 1781ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் யார்க்டவுனில் (Yorktown) நிறுத்தப்பட்டது.

மஸ்ஸாசூசெட்ஸ் மாநிலத்தில் கன்கார்ட் (Concord) என்ற இடத்தில் அமெரிக்கர்களால் வைக்கப்பட்டிருந்த எல்லாப் போர்க் கருவிகளையும் கைப்பற்றும்படி அம் மாநிலத்தின் கவர்னரும், படைத்தலைவருமான ஜெனரல் காஜ் (General Gage) தம் படைகளுக்கு ஆணையிட்டார். ஆங்கிலப் படைகள் அந்த இடத்திற்கு விரைந்து செல்லும்போது லெக்சிங்டன் என்ற இடத்தில் ஆங்கிலப் படைகளுக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் கடும் மோதல் ஏற்பட்டது. ஆங்கிலப் படைகள் அமெரிக்கப்படைகளின்மீது குண்டுமாரி பொழிந்தன. எமர்சன் (Emerson) என்ற அமெரிக்க எழுத்தாளர், 'உலகம் முழுவதும் கேட்ட துப்பாக்கிச் சத்தம் இங்கே சுடப்பட்டது,' என்று பின்னர் இதுபற்றிக் கூறினர்.[1] அந்தத் துப்பாக்கிச் சூட்டில் இருநூறு பேர் இறந்துவிட்டார்கள். எனினும் அயராது

[1] Here was 'fired the shot heard round the world.'—Parkes, H.B., The United States of America (1972) p. 103.

போரிட்ட அமெரிக்க வீரர்கள் பாஸ்டன் நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

1775ஆம் ஆண்டு மே மாதம் ஃபிலடெல்ஃபியாவில் (Philadelphia) கூடிய குடியேற்றங்களின் பிரதிநிதிகள் மாநாடு, ஜார்ஜ் வாஷிங்டனை அமெரிக்கப் படைத்தளபதியாகத் தேர்ந்தெடுத்தது. போர் தொடர்ந்து நடைபெற்றது.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே தாமஸ் ஜெஃப்பர்சன் (Thomas Jefferson) என்ற அறிஞரால் எழுதப்பட்ட 'விடுதலை அறிக்கை' (Declaration of Independence) 1766ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் தேதி வெளியிடப்பட்டது. அந்தத் தேதியில் அமெரிக்கா விடுதலை பெற்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

போர், பல இடங்களில் நடைபெற்றது. 1777ஆம் ஆண்டு இரண்டு இடங்களில் வாஷிங்டன் தோல்வியடைந்தார்; அதே ஆண்டு (1777) கனடாவிலிருந்து ஜெனரல் பர்கோயன் (General Burgoyne) தலைமையில் ஆங்கிலப்படை வந்தது. அந்தப் படையை ஹொரேஷியா கேட்ஸ் (Horatio Gates) தலைமையில் சென்ற அமெரிக்கப்படை சரடோகா (Saratoga) என்ற இடத்தில் தோற்கடித்தது. இந்த வெற்றிக்குப் பிறகு ஃபிரான்சும் வேறு சில ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு உதவி செய்ய முற்பட்டன.

1780ஆம் ஆண்டு கடல்வழியாக, கார்ன்வாலிஸ் (Cornwallis) தலைமையில் வந்த ஆங்கிலப்படை தென் கரோலினாவின் முக்கியத் துறைமுகமான சார்ல்ஸ்டனைக் (Charlesten) கைப்பற்றிக் கொண்டது. அங்கிருந்து அவர் வடக்கு நோக்கிச் சென்றார். வெர்ஜினியாவில் உள்ள யார்க்டவுனில் கார்ன்வாலிஸ் தம் படைகளுடன் இருந்தபோது வாஷிங்டன் தலைமையில் வந்த அமெரிக்கப் படைகள் மற்றும் ஃபிரெஞ்சுப் படைகள் 1781ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அவரைச் சூழ்ந்துகொண்டன. தப்பிச்செல்ல முடியாத கார்ன்வாலிஸ் சரணடைந்தார்.[1] எழுச்சிமிக்க அமெரிக்க விடுதலைப் போர் நிறுத்தப்பட்டது.

5. போரில் அமெரிக்கர்கள் வெற்றிபெற்றதற்கான காரணங்கள்

அமெரிக்கப் படைத் தலைமையை ஏற்றிருந்தவர் ஜார்ஜ் வாஷிங்டன் ஆவார். அவர் மிகச் சிறந்த படைத் தளபதியாகப்

[1] இதே கார்ன்வாலிஸ், இந்தியாவில் கவர்னர் ஜெனரலாக 1786ஆம் ஆண்டு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியினால் நியமிக்கப்பட்டார்.

பணியாற்றினர். அவர் ஏற்கெனவே ஏழாண்டுப் போரில் கலந்து கொண்டு போர் செய்யும் முறைகளில் மிகுந்த அநுபவத்தைப் பெற்றிருந்தார். அவருடைய கடுமையான உழைப்பும், பொறுமையும், மனஉறுதியும் அமெரிக்க வீரர்களைக் கவர்ந்தன. எனவே, தான் ஓரிரு இடங்களில் (பிராண்டிவைன், ஜெர்மன்டவுன்) வாஷிங்டனின் படைகள் தோல்வியடைந்தபோதிலும், அவருடைய வீரர்கள் மனந்தளராது, அவருடன் ஒத்துழைத்து இறுதி வெற்றிபெற வழிவகுத்தார்கள்.

போர் நடைபெற்றுக்கொண்டிருந்த ஏழாண்டுக் காலத்தில் பெஞ்சமின் ஃபிராங்க்ளின், தாமஸ் ஜெஃப்பர்சன், ஜான் ஆடம்ஸ், தாமஸ் பெய்ன் போன்ற தலைவர்கள் மக்களிடையே நாட்டுப் பற்றையும் வீர உணர்வையும் ஊட்டிப் பிரசாரம் செய்துவந்தனர். தாமஸ் பெய்ன் (Thomes Paine) வெளியிட்ட 'பொது அறிவு' (Common sense) என்ற துண்டு வெளியீட்டில் (pamphlet) 'ஒரு சிறிய தீவாகிய இங்கிலாந்து பெரிய வட அமெரிக்கக் கண்டத்தை எக்காலத்துக்கும் ஆட்சி செய்ய முயலுவது ஏற்றுக் கொள்ள முடியாது,' என்ற கருத்தை வெளியிட்டிருந்தார். இவ் வெளியீட்டின் இலட்சக்கணக்கான பிரதிகள் மிக விரைவில் விற்கப்பட்டன. படிக்கத் தெரிந்த எல்லா அமெரிக்கர்களும் இத் துண்டு வெளியீட்டைப் படித்து எழுச்சி பெற்றார்கள். போர் முயற்சிகளுக்கு மனமுவந்து எல்லா உதவிகளையும் பொதுமக்கள் தந்தார்கள்.

விடுதலை வேட்கை கொண்ட அமெரிக்க வீரர்கள் எத்தகைய இடர்ப்பாடுகளுக்கிடையேயும் போரிட ஆயத்தமாய் இருந்தார்கள். உண்மையிலேயே அவர்களுக்குப் போதுமான உணவு, உடை, போர்க்கருவிகள் அவர்களிடம் இல்லை. எனினும் அவற்றைப் பொருட்படுத்தாது அமெரிக்க வீரர்கள் போரிட்டார்கள். ஆனால், ஆங்கிலவீரர்கள் அங்ஙனம் போர் செய்யவில்லை. ஏதோ கடமைக்காகத்தான் அவர்கள் போரிட்டார்களே தவிர வெற்றி பெற்றேயாகவேண்டும் என்ற உண்மையான உணர்வு அவர்களிடம் இல்லை.

அமெரிக்க வீரர்கள் அமெரிக்காவின் நிலவியலை நன்கு அறிந்திருந்தனர். மலைகள், நதிகள், பள்ளத்தாக்குகள் முதலானவை எங்குள்ளன என்ற முன்னறிவை அவர்கள் பெற்றிருந்ததால் போரிடுவது அவர்களுக்கு எளிதாயிற்று. ஆங்கில வீரர்கள் அத்தகைய அறிவைப் பெற்றிருக்கவில்லை. முற்றிலும் புதிய நிலப் பகுதியில் போரிடுவது பெருந்தொல்லையாக அவர்களுக்குத் தோன்றியது.

ஆங்கில வீரர்களுக்கு வேண்டியவை அனைத்தையும் ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள இங்கிலாந்திலிருந்து

அனுப்புவது கடினமாக இருந்தது. போர் நடவடிக்கைகளைக் கவனித்து வந்த இங்கிலாந்தின் போர் அமைச்சர் ஜார்ஜ் ஜெர்மெய்ன் பிரபு (Lord George Germain) பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டார். போர்க்காலத்தில் தலைநகரமாகிய இலண்டனில் இல்லாமல் வெளியூர்களுக்குச் சென்றுவிடுவார். அதனால் அரசு ஆணைகளை ஆங்கிலப் படைத்தளபதிகளுக்கு உடனுக்குடன் அனுப்ப முடியவில்லை.[1] சரடோகாவில் ஆங்கிலப்படை தோல்வி யடைந்ததற்கு இவரே காரணமாவார்.

1777ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஃபிரான்ஸ், ஸ்பெயின், ஹாலந்து முதலான நாடுகள் அமெரிக்காவுக்கு எல்லாத்துறையிலும் உதவிசெய்தன. குறிப்பாக ஃபிரான்ஸ் திறமைமிக்க லஃபேயத் (Lafayatte) முதலான படைத்தளபதிகளின் தலைமையில் பெரும் படையை அனுப்பியது. இப் படை கார்ன்வாலிஸை சரணடையச் செய்வதில் பெரும் பங்கு வகித்தது.

இத்தகைய காரணங்களால் அமெரிக்கச் சுதந்திரப்போரில் ஆங்கிலப் படைகள் தோல்வியடைந்தன. அமெரிக்கப் படைகள் வெற்றிபெற்றன.

6. விளைவுகள்

1776ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் தேதி அமெரிக்கா 'விடுதலை அறிக்கை'யை வெளியிட்டது. அதுமுதல் அது சுதந்திர நாடாக இயங்கத் தொடங்கியது. போருக்குப்பின்னர்ச் செய்துகொள்ளப் பட்ட பாரிஸ் உடன்படிக்கைப்படி (Treaty of Paris, 1783) அமெரிக்காவின் விடுதலையை இங்கிலாந்து அங்கீகரித்தது. உலக நாடுகளின் வரலாற்றில் முதலாவது மக்களாட்சி நாடு தோன்றியது.

அமெரிக்காவை இழந்த ஆங்கில அரசு கனடாவில் தன் குடியேற்ற ஆதிக்கத்தை வலுவாக நிலைநாட்டத் தீவிர முயற்சிகளை மேற்கொண்டது. அதேபோல ஆசியாக் கண்டத்தில் இந்தியா முதலான நாடுகளில் இங்கிலாந்து தன் ஆதிக்கத்தை நிலையாக ஏற்படுத்த முயன்றது.

அமெரிக்க விடுதலைப் போர் மற்ற நாடுகளில் வாழ்ந்த மக்களின் நாட்டுப்பற்றையும் உரிமை வேட்கையையும் தட்டியெழுப்பியது. 1789ஆம் ஆண்டு ஃபிரெஞ்சுப் புரட்சி நடைபெற்றதற்கு

[1] *Vide* Warner and Marten, The Groundwork of British History (1927) p. 508.

அமெரிக்க விடுதலைப்போர் ஒருகாரணமாகும். அமெரிக்க விடுதலைப் போரில் பங்குகொண்ட நூற்றுக்கணக்கான ஃபிரெஞ்சு வீரர்கள் தாயகம் திரும்பி மக்களிடையே மக்களாட்சிக் கருத்துகளைப் பரப்பினார்கள்.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலத்தீன் அமெரிக்க நாடுகள் விடுதலைப் போரைத் தொடங்குவதற்கு அமெரிக்கச் சுதந்திரப் போர் முக்கியமான முன்னோடி நிகழ்ச்சியாக அமைந்தது. பெரும்பாலான இலத்தீன் அமெரிக்க நாடுகள் விடுதலை பெற்றன.

7. சுதந்திர ஐக்கிய அமெரிக்கா

போர் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே, ஜான் டிக்கின்சன் (John Dickinson) தலைமையில் பதின்மூன்று பேர்கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு பதின்மூன்று மாநிலங்களும் இணைந்து செயல்படுவதற்கு ஓர் அரசியல் சட்டத்தை வரைந்தது. அது 'கூட்டிணைப்பரசின் சட்டத் தொகுதிகள்' (Articles of Confederation) என்று சொல்லப்பட்டது. இது 1781ஆம் ஆண்டிலிருந்து 1789ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்தது. இத்தகைய அரசியல் அமைப்பில் மத்திய சட்டமன்றம் ஃபிலடெல்ஃபியாவில் செயல்பட்டது. அது, அயல் நாட்டு விவகாரங்கள், பாதுகாப்பு, நிதி, அஞ்சல்துறை முதலான முக்கியமான துறைகளைக் கவனித்து வந்தது. மற்ற எல்லாவிதமான வேலைகளையும் மாநிலங்களே கவனித்துக்கொண்டன. இத்தகைய அமைப்புச் சரியாகச் செயல்படவில்லை. எனவே, புதிய அரசியல் சட்டத்தை வகுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

புதிய அரசியல் சட்டத்தை எழுதுவதற்காக ஃபிலடெல்ஃபியாவில் ரோட் தீவைத் தவிர மற்றப் பன்னிரண்டு மாநிலங்களின் பிரதிநிதிகள் 1787ஆம் ஆண்டு கூடினார்கள். அவர்களுள் ஜார்ஜ் வாஷிங்டன், அலெக்சாண்டர் ஹாமில்டன், பெஞ்சமின் ஃபிராங்க்ளின், ஜேம்ஸ் மாடிசன் முதலானவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். மிகச் சிறந்த அரசியல் மேதைகளான இவர்கள் ஒரு புதிய அரசியல் சட்டத்தை எழுதி முடித்தார்கள். அதை எல்லா மாநிலங்களும் ஏற்றுக்கொண்டன. 1789ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து அந்த அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தது. அது இன்றளவும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. அதன்படி ஐக்கிய அமெரிக்கா (The United States of America) ஒரு கூட்டரசாக (Federation) இயங்கி வருகிறது.

மக்களுடைய உரிமைகள் காக்கப்பட வேண்டுமானால் அரசின் மூன்று துறைகளாகிய சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை

ஆகியவை தனித்தனியே செயல்படவேண்டும். அவற்றுக்கான 'அதிகாரப் பிரிவினை' இருக்கவேண்டும் என்று ஃபிரெஞ்சு அறிஞர் மான்டெஸ்க்யு (Montesquieu) கூறினார். அந்த 'அதிகாரப் பிரிவினை'க் கொள்கை (Seperation of Powers) முதல் முறையாக அமெரிக்க அரசியல் சட்டத்தில் செயல்முறைப்படுத்தப்பட்டது.

கூட்டரசின் சட்டங்கள் இயற்றும் பொறுப்பு காங்கிரஸ் (Congress) என்று வழங்கப்படும் சட்டமன்றத்திடம் விடப்பட்டுள்ளது. இதில் 'செனெட்' (Senate) என்னும் மேல்சபையும், 'பிரதிநிதிகள் சபை' (House of Representatives) என்னும் கீழ்ச் சபையும் உள்ளன.

சட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு அமெரிக்காவின் குடியரசு தலைவரிடம் (The President) விடப்பட்டுள்ளது. இவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர் காங்கிரசின் உறுப்பினர் அல்லர்.

நீதி வழங்கும் பொறுப்பு தலைமை நீதிமன்றம் (Supreme Court) மற்றும் அதன் துணை நீதிமன்றங்களிடம் விடப்பட்டுள்ளது. அமெரிக்க நீதித்துறை கட்டுப்பாடின்றித் தனித்தியங்குகின்றது.

இங்ஙனம் முடியாட்சி அற்ற முதல் மக்களாட்சி நாடு, எழுதப்பட்ட அரசியல் சட்டத்தைப் பெற்ற முதல் நாடு ஐக்கிய அமெரிக்கா ஆகும். அதன் முதல் குடியரசு தலைவர் ஜார்ஜ் வாஷிங்டன் ஆவார். அவர் மக்களாட்சித் தத்துவங்களை மதித்து நடந்துகொண்டார். இருமுறை குடியரசு தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மூன்றும் முறையும் போட்டியிடச் சொல்லி அவருடைய நண்பர்கள் கேட்டுக்கொண்டனர். அதற்குத் தாம் மீண்டும் ஆட்சி செய்யத் தொடங்கினால் 'ஜார்ஜ் வாஷிங்டனுக்கும் மூன்றும் ஜார்ஜ் மன்னருக்கும் (இங்கிலாந்தின் அரசர்) என்ன வித்தியாசம்?' என்று அவர் கேட்டாராம். அத்தகைய அரசியல் பண்புகளை அவர் வளர்த்ததால்தான் அமெரிக்கா மிகப் பெரிய மக்களாட்சி நாடாக மாறியது.

# 9. ஃபிரெஞ்சுப் புரட்சி
## (1789—1795)

ஃபிரான்சு நாட்டின் வரலாற்றில் மட்டுமின்றி உலக நாடுகளின் வரலாற்றில் ஃபிரெஞ்சுப் புரட்சி மிக முக்கியமான நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்றது. உயர்ந்த இலட்சியங்களோடு அது தொடங்கியது. ரத்தவெறி கொண்டதாக நடைபெற்றது. முடியாட்சியை ஒழிக்க அது முற்பட்டது. எனினும் அடுத்த பதினைந்து ஆண்டுகளுக்குள் அந்த நாட்டில் முடியாட்சி கொண்டுவரப்பட்டது. ஃபிரெஞ்சுப் புரட்சியும், ஃபிரான்சில் நடைபெற்ற நிகழ்ச்சிகளும் மற்ற நாடுகளுக்கு அரசியல் பாடங்களை அறிய உதவின.

1. காரணங்கள்

(i) **பூர்பன் வமிச அரசர்களின் வல்லாட்சி :** ஃபிரான்சை ஆட்சி செய்த பூர்பன் வமிச அரசர்கள் சர்வாதிகாரிகளாக விளங்கினார்கள். ஏற்கெனவே குறிப்பிட்டது போல் பதினான்காம் லூயி (1643—1715) வரம்பிலா அதிகாரங்களைப் பெற்று மக்களை வாட்டி தம் விருப்பம்போல் ஆட்சி செய்தார். நான்கு போர்களில் ஈடுபட்டு ஃபிரான்சின் நிதிநிலையைச் சீர்குலைத்துவிட்டார். அவரை அடுத்து ஆட்சி செய்த பதினைந்தாம் லூயி (1715—1774) மிகவும் திறமையற்றவராவார். அவர் காலத்திலும் ஃபிரான்ஸ் இரண்டு போர்களில் ஈடுபட்டது. அதனால் ஏற்கெனவே சீர்குலைந்திருந்த நிதிநிலை மேலும் மோசமடைந்தது. அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த பதினாறும் லூயி (1774—1792) ஆட்சிமுறையைச் சரிவர கவனிக்கவில்லை. லூயி தம் இருபதாவது வயதில் ஃபிரான்சின் மன்னரானார். அவர் பின்னர் ஆஸ்திரிய நாட்டு இளவரசி மேரி அண்டாய்நெட்டை (Marie Antoinette) மணந்திருந்தார். அந்த அம்மையாரின் அழகில் மயங்கிய மன்னர் அரச பொறுப்புகளைப் புறக்கணித்தார். மன்னரின் மனைவியும் ஆடம்பரமான வாழ்க்கை நடத்தினர். மன்னருக்கு உறுதியான கொள்கை இல்லை. நல்லவர் நல்லதைச் சொன்னால் அதன்படி நடந்தார். தீயவர் தீயதைச் சொன்னால் அதன்படியும் நடந்துகொண்டார். அவருடைய மனைவி அண்டாய்நெட்டின் அன்பும் பாசமும் பிறந்த நாடான ஆஸ்திரியாவின்மீது இருந்தனவேயொழிய ஃபிரான்சு நாட்டின்மீது இல்லை,

ஃபிரெஞ்சு மக்களை அவர் சரியாகப் புரிந்துகொள்ளவும் இல்லை. அதனால் ஃபிரெஞ்சு மக்களும் அவரை வெறுத்தனர். புரட்சியின் போது அவரை 'ஆஸ்திரியாவின் பெண்புலி' (The Austrian Tigress) என்று ஃபிரெஞ்சுக்காரர்கள் அவமானப்படுத்திப் பேசினார்கள். பதினாரும் லூயியின் பொறுப்பற்ற போக்கை மக்கள் வெறுத்தனர்.

(ii) தெய்வீக அரசுரிமைக் கொள்கை : ஃபிரெஞ்சு மன்னர்கள் ஃபிரான்ஸை ஆளும் உரிமையை இறைவனிடமிருந்து பெற்றதாகக் கருதினார்கள். மன்னர் ஆண்டவனின் பிரதிநிதி என்று எண்ணினார்கள். ஆகவே மன்னர், ஆண்டவனுக்கே, பதில் சொல்லக்கூடியவர், மக்களுக்கு அல்லர் என்று உறுதியாக அவர்கள் நம்பினார்கள். இத்தகைய கொள்கை தெய்வீக அரசுரிமைக் கொள்கை (Divine Right Theory) என்று சொல்லப்பட்டது, சட்டங்கள் செய்வதும் வரிகள் போடுவதும், போர்கள் தொடுப்பதும், அமைதி உடன்படிக்கைகள் செய்துகொள்வதும் மன்னரே. எந்தவித விசாரணையுமின்றி மக்களைக் கைதுசெய்து சிறையில் போடவும், சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் மன்னர் அதிகாரம் பெற்றிருந்தார். ஏறத்தாழ ஏழறைக் கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட வெர்சாய் (Versailles) அரண்மனையில் ஆண்டுதோறும் பதினைந்துகோடி ரூபாய் செலவு செய்துகொண்டு மன்னரும் மன்னரைச் சார்ந்தோரும் ஆடம்பரமாக வாழ்ந்துவந்தனர். இதைத் தட்டிக்கேட்க எவருக்கும் உரிமையில்லை என மன்னர்கள் கருதினார்கள். ஏனெனில், அந்த அளவுக்கு அவர்கள் தெய்வீக அரசுரிமைக் கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

(iii) வகுப்புப் பாகுபாடு : ஃபிரெஞ்சுச் சமுதாயம் பிரபுக்கள், குருமார்கள், பொதுமக்கள் (The Nobles, the Clergy and the Third Estate) என மூன்று பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. பிரபுக்களும் குருமார்களும் எல்லாவிதமான சலுகைகளையும் அனுபவித்து வந்தனர். மன்னர் அவர்கள்மீது வரிகளை விதிக்கவில்லை. வரிச்சுமை முழுவதும் பொதுமக்கள் மீதே விழ்ந்தது. அதனால் 'பிரபுக்கள் போரிடுகிறார்கள் ; குருமார்கள் பிரார்த்தனை செய்கிறார்கள் ; பொதுமக்கள் வரி செலுத்துகிறார்கள்' என்று கூறப்பட்டது.[1] பொதுமக்கள் வரி செலுத்தினார்கள் என்பது உண்மை: ஆனால், பிரபுக்கள் போரும் செய்யவில்லை, குருமார்கள் பிரார்த்தனையும் செய்யவில்லை! அவர்கள் ஆடம்பரமான வாழ்க்கையில் திளைத்திருந்தார்கள். உழவர்களின் நிலைதான் மிக மோசமாக இருந்தது. அவர்கள் டெய்லி (Taille) என்ற நிலவரியை அரசுக்குச் செலுத்தி

[1] 'The Nobles fight, the Clergy pray and the people pay.'

ஞர்கள். டைத் (Tithe) என்னும் வரியைத் திருச்சபைக்குச் செலுத்திஞர்கள். இதுபோன்ற வேறு பல வரிகளையும் அவர்கள் செலுத்த வேண்டியிருந்தது.

(iv) உறவினருக்கும் வேண்டியவருக்கும் வேலைவாய்ப்பு : அரசரும் அரசியும் தங்கள் உறவினருக்கு அதிகமான வேலைவாய்ப்புகளைத் (Nepotism) தந்தனர். அதே போல ஆட்சித் துறையிலும் படையிலும் தங்களுக்கு வேண்டியவர்களையே (Favouritism) நியமித்தனர். எந்தத் தகுதியும் இல்லாதவர்கள் அரசனுக்கோ அரசிக்கோ வேண்டியவர்கள் என்ற காரணத்தால் தங்களுக்குத் தலைவர்களாக வருவதைப் படைவீரர்கள் வெறுத்தார்கள். போதிய உணவும், ஊதியமும் இல்லாமல் உழைத்த அவர்கள் வேதனையில் துவண்டிருந்தார்கள். திருச்சபையிலும் இந்த நிலையே நிலவியது. தகுதியற்றவருக்கெல்லாம் உயர் பதவிகள் கொடுக்கப்பட்டன. உண்மையிலேயே கடவுள் நம்பிக்கையும் அரச விசுவாசமும் உடையவர்கள் வறுமையில் வாடிக்கொண்டிருந்தார்கள். நிலைமை மிக மோசமாவதைக் கண்ட ஏழைக் குருமார்கள் விவிலிய நூலைப் (Bible) படிப்பதை விட்டு, ரூஸ்ஸோவின் நூலையும் புளூடார்க்கின் நூல்களையும் படித்தறிந்து புரட்சிக்குத் தயாராயினர்.

(v) புரட்சி எழுத்தாளர்கள் : ஃபிரான்சில் நிலவி வந்த மிக மோசமான நிலைகளைக் கண்டு புரட்சி எழுத்தாளர்கள் தங்கள் உணர்ச்சியூட்டும் எழுத்துகளால் மக்களைத் தட்டியெழுப்பிஞர்கள். மான்டெஸ்கியு (Montesquiue, 1689—1755) என்ற ஃபிரெஞ்சு அறிஞர் பிதரான்சில் மக்கள் உரிமைகளை இழந்து மிருகங்கள்போல் வாழ்வதைக் கண்டு வெதும்பிஞர். அவர் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தார். அந்நாட்டில் மக்கள் அதிக உரிமைகளுடன் சுதந்திரமாக வாழ்வதைக் கண்டார். பின்னர்ச் ‘சட்டங்களின் உள்ளுயிர்’ (The Spirit of Laws) என்ற நூலை வெளியிட்டார் (*1748*). மக்களுடைய உரிமைகள் காக்கப்பட வேண்டுமானல் எல்லா அதிகாரங்களும் மன்னரிடம் குவிந்திருக்கக்கூடாது ; அதிகாரங்கள் சட்டத் துறை, நிர்வாகத்துறை ஆகியவற்றினிடம் பிரிந்திருக்க வேண்டும் என்ற ‘அதிகாரப் பிரிவினைக்’ (Separation of Powers) கருத்தை வெளியிட்டார். இங்கிலாந்தில் இருப்பது போல வரம்புடை முடியாட்சி (Limited Monarchy) ஃபிரான்சிலும் அமைக்கப்பட வேண்டுமென விளக்கிஞர். அப்படி இருந்தால் தான் மக்களின் உரிமைகள் பறிபோகா எனத் தெரிவித்தார். வால்டேர் (Voltaire, 1694—1778) பல்துறை அறிஞராக விளங்கிஞர். அவர் கவிஞராகவும், நாடகாசிரியராகவும், வரலாற்றாசிரியராகவும், தத்துவ ஞானியாகவும் திகழ்ந்தார். அக் காலத்திலிருந்த அவசியமற்ற நிறுவனங்களை அவர் குறை கூறிஞர். மனிதனின் முன்னேற்றத்

திற்குத் திருச்சபை பெருந் தடையாக உள்ளது' என்று அவர் தெரிவித்தார். எதையும் பகுத்தறிவைக்கொண்டு ஆய்ந்து அறிவுக்கேற்றதை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அறிவித்தார். மான்டெஸ்கியுவின் அரசியல் கருத்துக்களை இவர் ஆதரித்தார். ஏழைக் குடும்பத்தில் பிறந்த ரூஸ்ஸோ (Rousseau, 1712—1778) ஃபிரான்சின் மிகச்சிறந்த எழுத்தாளர் ஆவார். அவர் 'சமுதாய ஒப்பந்தம்' (Social Contract), 'எமிலி' (Emily) முதலான நூல்களை எழுதினர். 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூலில் ரூஸ்ஸோ தம் அரசியல் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அந்த நூலில்: 'மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறன். ஆனல் அவன் எங்கும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுள்ளான்' என்று கூறுகின்றர்.[1] தம் ஆற்றல் மிகுந்த எழுத்துவன்மையால் கற்றறிந்த அனைவரையும் அவர் பெரிதும் கவர்ந்தார். மன்னன் நாட்டை ஆளும் உரிமையைச் சமுதாயத்திடமே பெற்றன்; மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் கடமையை மன்னன் செய்யும்வரை அவன் நாட்டை ஆளலாம்; மக்கள் உரிமையை இழந்தபோது மன்னன் ஒப்பந்தத்தை மீறிவிட்டான் என்று பொருள்; எனவே, அத்தகைய மன்னனுக்கு மக்கள் விசுவாசம் காட்டத் தேவையில்லை என்று ரூஸ்ஸோ கூறினர். 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' (Liberty, Equality, Fraternity) என்ற கருத்துக்களை மக்களிடையே அவர் பரப்பினர். இவை மூன்றும் ஃபிரெஞ்சுப் புரட்சியின்போது எங்கும் எல்லோராலும் எழுப்பப்பட்ட முழக்கங்களாயின. இவர்களைத் தவிர வேறு பல எழுத்தாளர்களும் மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சியை ஊட்டினர்கள்.

(vi) **அமெரிக்கச் சுதந்திரப் போர்:** அடக்குமுறை ஆங்கில ஆட்சியை எதிர்த்து அமெரிக்கர்கள் சுதந்திரப் போரை நடத்தினர். அந்தப் போர் 1775—1781ஆம் ஆண்டுகளுக்கிடையே நடைபெற்றது. அமெரிக்கர்களுக்கு ஆதரவாக ஆங்கிலப் படைகளை எதிர்த்துப் போரிட நூற்றுக்கணக்கான ஃபிரெஞ்சு வீரர்கள் அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டிருந்தனர். அவர்கள் அமெரிக்கர்களின் உரிமை வேட்கையைக் கண்டு வியந்தனர். 1776ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற அந்த நாட்டினர் முடியாட்சியினின்று விடுபட்டு மக்களாட்சியில் மகிழ்வுடன் வாழ்வதை நேரில் கண்ட ஃபிரெஞ்சு வீரர்கள் தங்கள் நாட்டில் அதுபற்றிப் பிரசாரம் செய்தனர். எனவே, ஃபிரெஞ்சு மக்களும் உரிமைக்குரலெழுப்பி புரட்சி செய்து, முடியாட்சியை ஒழித்து மக்களாட்சியை நிறுவத் துடித்தனர்.

[1] Man is born free but everywhere he is in chains. இது 'சமுதாய ஒப்பந்தத்'தின் தொடக்க வாக்கியமாகும்.

(vii) உடனடிக் காரணம்—நிதிநிலை : பதினாறும் லூயி ஆட்சியைத் தொடங்கியபோது டர்காட் (Turgot) நிதியமைச்சரானார். அவர் சிறந்த பொருளாதார நிபுணராவார். அவர் புதிய வரிகள் போடாமல், மேலும் கடன் வாங்காமல், நிதிநிலையை ஓரளவு சீர்படுத்தினார். அரசின் அவசியமற்ற செலவுகளைக் குறைத்தார். சுங்க வரியை நீக்கி வாணிகம் சுதந்திரமாக நடைபெற வழிவகுத்தார். உழவர்களுக்கும் சில நன்மைகளைச் செய்தார். இவருடைய கொள்கைகளைப் பிடிக்காத சிலர் லூயியின் மனத்தைக் கெடுத்து டர்காட்டைப் பதவியினின்று விலக்கினர். அவரை அடுத்து நெக்கர் (Necker) நிதியமைச்சரானார். அவர் அரசாங்கத்தின் வரவு செலவுகளை மக்களின் பார்வைக்கு வைத்தார். அதனால் எந்தவித உழைப்புமின்றி அரசு பணத்தை அனுபவித்து வந்தவர் அதிகம்பேர் என்பதை மக்கள் புரிந்துகொண்டனர். அரசு கணக்குகளை மக்களுக்குத் தெரிவித்ததற்காக இவரும் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவருக்குப்பின் கலோன் (Colonne) நிதியமைச்சரானார். இவர் பிற நாடுகளிலிருந்து மிக அதிகமாகக் கடன் வாங்கினார். சில ஆண்டுகளுக்குப்பின் ஃபிரான்சுக்குக் கடன்தர எந்த அயல்நாடுகளும் முன்வரவில்லை. நிதிநிலை மிக மோசமாக இருந்தது. ஃபிரான்சின் சட்டமன்றமாகிய ஸ்டேட்ஸ் ஜெனரலைக் (States General) கூட்டுவதைத் தவிர வேறு வழியில்லை எனப் பதினாறும் லூயி உணர்ந்தார். எனவே, 175 ஆண்டுகளாகக் கூட்டப்படாமலிருந்த ஸ்டேட்ஸ் ஜெனரலை, 1789ஆம் ஆண்டு மே மாதம் லூயி கூட்டினார். அம் மன்றம் கூடியது ; புரட்சி தொடங்கியது.

## 2. புரட்சியின் நிகழ்ச்சிகள்

**ஸ்டேட்ஸ் ஜெனரல் கூடுதல் :** ஸ்டேட்ஸ்-ஜெனரலில் பிரபுக்கள் பிரிவு, குருமார்கள் பிரிவு, பொதுமக்கள் பிரிவு என மூன்று பிரிவுகள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் தனித்தனியே அமர்ந்து தீர்மானங்களை நிறைவேற்றின. அம் மூன்று பிரிவுகளில் பிரபுக்கள் மற்றும் குருமார்கள் பிரிவுகளைவிடப் பொதுமக்கள் பிரிவே எண்ணிக்கையில் பெரியதாக இருந்தது. பிரபுக்கள், குருமார்கள், பொதுமக்கள் ஆகிய அனைவரும் ஒன்றாகக்கூடித் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டுமெனப் பொதுமக்கள் பிரிவு வற்புறுத்தியது. பதினாறும் லூயி இதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. பொதுமக்கள் பிரிவு தன் கோரிக்கையைத் தொடர்ந்து வற்புறுத்தியது. அது தன்னைத் 'தேசியப் பேரவை' (The National Assembly) என்று அறிவித்துக்கொண்டது (ஜூன் 1789). மற்றப் பிரபுக்களையும் குருமார்களையும் தன்னுடன் சேர்ந்து கொள்ளும்படி வேண்டியது. பலர் சேரவில்லையெனினும் சிலர் 'தேசியப் பேரவை'யுடன்

சேர்ந்து கொண்டனர். அவர்கள் மிராபு (Mirabeau) தலைமையில் அருகிலிருந்த டென்னிஸ் மைதானத்தில் கூடினார்கள். தங்கள் நாட்டிற்குப் புதிய அரசியல் சட்டத்தை (Constitution) அமைக்காமல் பிரிந்து செல்வதில்லை என அவர்கள் உறுதி எடுத்தனர். வேறு வழியின்றி தேசியப் பேரவை ஒன்றாகக் கூடுவதை மன்னர் அனுமதித்தார் (ஜூன் 1789). மக்களுக்கு இது முதல் வெற்றியாகும்.

பாஸ்டீல் வீழ்ச்சி : புரட்சியாளர்கள் தங்கள் நிலையை வலுப்படுத்தி வந்தனர். இந்த நேரத்தில் மன்னர் நிதியமைச்சர் நெக்கரைப் பதவியினின்று நீக்கினார்.[1] ஆத்திரமுற்ற பாரிஸ் நகரப் பெருங்கூட்டம். கொடுங்கோல் ஆட்சியின் சின்னமாக விளங்கிய பாஸ்டீல் (Bastille) சிறைச்சாலையின் கதவுகளை உடைத்தெறிந்து, கைதிகளை விடுவித்து, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்று முழங்கியது (ஜூலை, 1789).

பெண்களின் பேரணி : உணவுப் பற்றாக்குறையினால் அவதியுற்ற பெண்கள் ஆயிரக்கணக்கில் ஒன்று திரண்டனர். மன்னரும் மன்னரின் குடும்பமும் வாழ்ந்து வந்த வெர்சாய் அரண்மனையை நோக்கி அவர்கள் விரைந்தனர். மன்னரையும் அவர் குடும்பத்தினரையும் வெளியே வரும்படி முழங்கினர். வேறு வழியின்றி வெளி வந்த லூயி, அவர் மனைவி மற்றும் மகனைக் கைப்பற்றிக்கொண்டு பாரிஸ் நகரத்திற்குத் திரும்பினார்கள். வரும் வழியில் மன்னரைக் கேலி செய்கின்ற முறையில் பெண்கள் முழக்கமிட்டார்கள். லூயியும் அவருடைய குடும்பத்தினரும் பாரிஸில் ட்விலெரி (Tuileries) அரண்மனையில் வாழ்ந்து வர ஏற்பாடு செய்தனர்.

நாடு முழுவதும் புரட்சி : தேசியப் பேரவையின் வெற்றி, பாஸ்டீல் வீழ்ச்சி, பெண்களின் பேரணி, அரச குடும்பம் ட்விலெரியில் அடைக்கப்பட்டது முதலான வெற்றிச் செய்திகள் நாடு முழுவதும் பரவின. எனவே, ஃபிரான்ஸ் முழுவதும் புரட்சி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. உழவர்களும் தொழிலாளர்களும் பிரபுக்களின் சொத்துகளைக் கவர்ந்து கொள்ள முயன்றனர். பல பிரபுக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்பட்டது. நாட்டின் பல இடங்களில் கலகங்கள் நடைபெற்றன.

தேசிய பேரவையின் அறிக்கைகள் (1789—91) : தேசியப் பேரவை ஒரு புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கியது. அதன்படி ஃபிரான்ஸ் நாட்டிற்கு 750 உறுப்பினர்களைக் கொண்ட ஒரே சபையுடைய (Unicameral) சட்டமன்றம் அமைக்கப்பட்டது.

[1] 1789 ஆம் ஆண்டு ஸ்டேட்ஸ்-ஜெனரல் கூடுவதற்கு முன் இவர் மீண்டும் நிதியமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார்.

முடியாட்சி தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப்பட்டது. ஆனால், அரசரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. எல்லாவற்றையும்விட உரிமை, சமத்துவம், சகோதரத்துவம் என்ற அடிப்படையில் மனித உரிமைகள் (Declaration of Rights of Man) தேசியப் பேரவையினால் அறிவிக்கப்பட்டன. பிரபுக்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகைகள் ஒழிக்கப்பட்டன. திருச்சபையின் சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட்டன. திருச்சபை அரசுக்குக் கட்டுப்பட்ட ஒரு துறையாக மாற்றப்பட்டது. மறைமுக வரிகள் ஒழிக்கப் பட்டன.

**அரச குடும்பம் தப்பி யோட முயற்சி:** *1791* ஆம் ஆண்டு ஜூன் மாதம் மன்னர் பதினாறாம் லூயியும் அவருடைய குடும்பத்தினரும் ட்வீலெரி அரண்மனையிலிருந்து தப்பிச் சென்றனர். எனினும் அவர்கள் ஃபிரெஞ்சு எல்லைப் பகுதியில் வாரென்ஸ் (Varennes) என்ற இடத்தில் கைது செய்யப்பட்டு மீண்டும் ட்விலெரியில் அடைக்கப்பட்டனர். இந்த நிகழ்ச்சியினால் மக்கள் இன்னும் அதிக மாக அரச குடும்பத்தை வெறுத்தனர்.

**சட்டசபையின் பணிகள் (1791—1792):** புதிதாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட சட்டசபை (Legislative Assembly) *1791* ஆம் ஆண்டு அக்டோபரில் கூடியது, அந்தச் சபையில் பலவிதமான கொள்கைகளைக் கொண்டவர்கள் உறுப்பினர்களாக இருந்தனர். குறிப்பாக கிரோண்டிஸ்ட்கள் (The Girondists) என்றும் ஜாகோ பின்கள் (Jacobins) என்றும் அவர்கள் பிரிந்திருந்தனர். இந்தச் சபை இயற்றிய சில தீர்மானங்களை அரசர் ஏற்கமறுத்துவிட்டார். அரசர் மீதிருந்த வெறுப்பு இன்னும் அதிகரித்தது.

**அயல்நாடுகளுடன் போர் (1792):** அரசர் ட்விலெரியில் அடைக்கப்பட்டிருந்தபோது இரகசியமாக அயல்நாடுகளின் உதவி யைப் பெற முயன்றார். அதனால் ஆஸ்திரியா, பிரஷ்யா முதலான நாடுகள் ஃபிரான்சில் புரட்சியை ஒடுக்கி. அரச குடும்பத்தை விடுவிக்க தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டன. ஆஸ்திரி யாவின்பேரரசர் இரண்டாம் லியோபால்ட் (Leopold II)புரட்சியை ஒடுக்குவதில் அதிக அக்கறை காட்டினார். ஏனெனில், லூயியின் மனைவி மேரி அண்டாவ்நெட் அவருடைய சகோதரி ஆவார். ஆஸ்திரிய, பிரஷ்யப் படைகள் ஃபிரான்சை முற்றுகையிட்டன. ஃபிரெஞ்சுப் படைகள் முதலில் பல இடங்களில் தோல்வி யடைந்தன. இதைக் கண்டு மக்களும் சட்டசபையின் உறுப்பினர் களும் அச்சம் கொண்டனர். உடனே டான்டன், மாரட், ரோபெஸ்பியர் (Danton, Marat, Robespierre) ஆகியவர் தலைமையில் புரட்சியாளர்கள் அரச குடும்பம் இருந்த ட்விலெரி அரண்மனையைத் தாக்கினார்கள் (ஆகஸ்ட், *1762*). அரசரின்

உறவினர்களையும் மற்றும் பல புரபுக்களையும் அவர்கள் கைப்பற்றிக் கொலை செய்தனர். இதுவே 'செப்டம்பர்ப் படுகொலை' (September Massacre) என்று சொல்லப்படுகின்றது. போர் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. வால்மி (Valmy) என்ற இடத்தில் நடைபெற்ற போரில் ஃபிரெஞ்சுப் படைகள், பிரஷ்யப் படைகளையும் மற்றோர் இடத்தில் ஆஸ்திரியப் படைகளையும் தோற்கடித்தன. இது ஃபிரான்சுக்கு மிகப் பெரிய வெற்றியாகும்.

முதல் குடியரசு: 1792 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 'சட்ட சபை' கலைக்கப்பட்டுத் 'தேசியக் கன்வென்ஷன்' (National Convention) கூடியது. அது முடியாட்சியை ஒழித்து, முதல் குடியரசை (First Republic) நிறுவியது. 1792—95 ஆம் ஆண்டுகளுக் கிடையில் பயங்கர நிகழ்ச்சிகள் நடைபெற்றன,

லூயி கொல்லப்படுதல் (1793): முடியாட்சி ஒழிக்கப்பட்ட பின்னர்த் தேசியக் கன்வென்ஷன், பதினாறும் லூயியை நாட்டுத் துரோகி எனக் குற்றம் சாட்டி, அவரைத் தூக்கிலிடவேண்டுமெனக் கூறியது. அதையடுத்து லூயி 1793 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தூக்கிலிடப்பட்டார். அதே ஆண்டு அக்டோபர் மாதம்அவருடைய மனைவி மேரி அண்டாவ்நெட்டும் கில்லோடின் (Guillotine) இயந்திரத்திற்கு இரையானார்.

மீண்டும் அயல்நாடுகளுடன் போர் (1793): ஃபிரான்சின் புரட்சியாளர்களால் லூயி கொல்லப்பட்டதைக் கேள்வியுற்ற அயல் நாடுகள் அதிர்ச்சியுற்றன. மேலும் ஃபிரான்சில் புரட்சி வெற்றி பெற்றது எனக்கருதிய தேசியக் கன்வென்ஷன்,ஃபிரான்சில் நடைபெற்றதைப்போன்ற புரட்சி மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் நடைபெற வேண்டுமெனவும், முடியாட்சிகள் ஒழிக்கப்பட வேண்டும் எனவும் அறைகூவல் விட்டது. இங்கிலாந்து, ஹாலந்து ஆஸ்திரியா, பிரஷ்யா முதலான நாடுகள் பெரிதும் கலக்கம் அடைந்தன. அதனால் இளங்குடியரசை ஒடுக்க அந்த நாடுகள் ஃபிரான்சின் மீது படையெடுத்தன. ஃபிரெஞ்சுப் படைகள் பல இடங்களில் தோல்வியடைந்தன. உள் நாட்டில் குழப்பங்கள் மலிந்தன.

பயங்கர ஆட்சி (1793—1794): அயல் நாட்டவர் படையெடுப்பை முறியடிக்கவும், உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டவும் ஒன்பது பேர் கொண்ட பொதுமக்கள் பாதுகாப்புக்குழு (Committee of Public Safety) நியமிக்கப்பட்டது. அதில் டான்டன், மாரட், ரோபெஸ்பியர் முதலான ஜாகோபினர் இருந்தனர். அவர்கள் பதின்மூன்று மாதம் பயங்கர ஆட்சியை (Reign of Terror) நடத்தினார்கள். ஆயிரக்கணக்கான பிரபுக்களும், குடியரசை எதிர்த்தவர்

களும் கில்லோடின் என்ற வெட்டு இயந்திரத்தால் கொல்லப் பட்டனர். இந்தப் பயங்கர ஆட்சி நடைபெற்றபோது, மாரட் கொல்லப்பட்டார். 'பொதுமக்கள் பாதுகாப்புக் குழு' அயல் நாட்டவர் படையெடுப்பை எதிர்த்துப்போரிட்டு வெற்றிபெற்றது. தொடர்ந்து பயங்கர ஆட்சியும் நடைபெற்று வந்தது. ஒருநிலையில் டான்டனுக்கும் ரோபெஸ்பியருக்குமிடையே கருத்து வேறுபாடு கள் தோன்றின. எனவே, 1794ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் டான்டனை, ரோபெஸ்பியர் கில்லோடின் இயந்திரத்திற்கு இரையாக்கினார். பின்னர் ரோபெஸ்பியர் இன்னும் அதிகமான கொலைகளைச் செய்தார். அவருடைய பயங்கர ஆட்சியினின்று விடுபட, அவருடைய பகைவர்கள் அதே ஆண்டு ஜூலை மாதம் அவரையும் கில்லோடின் இயந்திரத்தில் வைத்துக்கொன்று விட்டார்கள். பதின்மூன்று மாதம் பயங்கர ஆட்சி முடிவடைந்தது.

டைரக்டரியின் ஆட்சி (1795): தேசியக் கன்வென்ஷன் 1795ஆம் ஆண்டு ஐந்து பேர் கொண்ட டைரக்டரியின் (Directory) ஆட்சியை அமைத்தது. இந்த டைரக்டரி, 1799ஆம் ஆண்டு நெப்போலியனால் கவிழ்க்கப்படும்வரை ஃபிரான்சை ஆட்சி செய்தது.

3. விளைவுகள்

ஃபிரெஞ்சுப் புரட்சியால் பல நாடுகள் அரசியல் சுதந்திரம் பெற்றன. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் சொற்கள் அந் நாடுகளில் பயன்படுத்தப்பட்டன. ஃபிரான்சு நாட்டில் பூர்பன் வமிச அரசர்களின் முடியாட்சி ஒழிக்கப்பட்டது. எனினும், பின்னர் அந்நாட்டில் மாறிமாறி மன்னராட்சி கொண்டு வரப்பட்டது. அதாவது ஃபிரான்ஸ் அரசியல் பரிசோதனைகளின் பிறப்பிடமாயிற்று. படைமானியத் திட்டம் ஃபிரான்சிலும் வேறு பல ஐரோப்பிய நாடுகளிலும் மறைந்தது. தேசிய உணர்ச்சியும், அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட அரசுகளும் அமைய ஃபிரெஞ்சு புரட்சி வழிகோலியது. கார்லைஸ் (Carlyle, 1795—1881) என்ற ஆங்கில அறிஞர் கூறுவது போல ஃபிரெஞ்சுப் புரட்சியினால் 'மன்னர்களின் காலம்' (The Age of the Kings) முடிவடைந்து 'மக்களின் காலம்' (The Age of the People) தொடங்கியது. லத்தீன் அமெரிக்க நாடுகள் விடுதலை இயக்கத்தைத் தொடங்க இந்தப் புரட்சி ஊக்குவிக்கும் நிகழ்ச்சியாக அமைந்தது. எல்லா வற்றையும் விட மனிதனுடைய உரிமைகளைப் பற்றிய விழிப் புணர்ச்சி ஃபிரெஞ்சுப் புரட்சிக்குப் பின்னர் எல்லா நாடுகளிலும் ஏற்பட்டது.

# 10. மாவீரன் நெப்போலியன்

## 1. முந்திய வாழ்க்கை

'இந்தச் சிறிய தீவு ஒரு நாள் ஐரோப்பாவை அதிசயத்தில் ஆழ்த்தப்போகிறது' என்று ஒரு முறை கார்சிகா (Corsica) என்ற தீவைப் பற்றி ரூஸ்ஸோ குறிப்பிட்டார். மத்தியத்தரைக் கடலில் ஃபிரான்சின் தெற்கேயுள்ள கார்சிகா தீவில்தான் 1769ஆம்ஆண்டு நெப்போலியன் போனபர்ட் (Napoleon Bonoparte) பிறந்தார். சார்லஸ் போனபர்ட் என்ற வழக்கறிஞரும் அவருடைய மனைவி லேடிஷியா ரமோலினோ என்பவரும் நெப்போலியனின் பெற்றோர் ஆவர். நெப்போலியனுக்கு ஓர் அண்ணன், மூன்று தம்பிகள் மற்றும் மூன்று தங்கைகள் இருந்தனர். இளமையிலேயே தந்தையை இழந்த நெப்போலியன் தாயின் ஆதரவில் வளரநேரிட்டது. பின்னர் ஃபிரான்சில் இருந்த பிரையன் (Brienne) மற்றும் பாரிஸ் (Paris) இராணுவப் பள்ளியில் பயின்றார். வகுப்பறைகளில் அவர் அமைதியான மாணவராகவே நடந்துகொண்டார். மற்ற மாணவர்களை விடத் தான் வல்லவன் என்றே அவர் கருதினார். துன்பங்களைத் தாங்கிக் கொள்ளும் இயல்பினராகவே அவர் காணப்பட்டார். அவர் பேசத் தொடங்கினால் நாவிலிருந்து சொற்கள் காட்டாற்று வெள்ளம் போல் வெளிவந்தன. ஒரு முறை அவருடைய ஆசிரியர் நெப்போலியனைப் பற்றிக் குறிப்பிடும்போது, அந்த இளைஞன் கருங்கற்பாறையினாலானவன்; ஆனால் அவனுக்குள்ளே ஓர் எரிமலை குமுறிக்கொண்டிருக்கிறது' என்று அவர் கூறினார்.[1] கணக்கில் வல்லவரான நெப்போலியன் வரலாற்றையும் நிலவியலையும் நன்கு கற்றார். அவருடன் பயின்ற மற்ற மாணவர்கள் உதவாத வம்புப் பேச்சில் நேரத்தை வீணாக்கிக்கொண்டிருந்தபோது, நெப்போலியன், பிளாடோ (Plato) மற்றும் புளுடாக்கின் (Plutarch) நூல்களைப் படித்துக்கொண்டிருந்தார். ரூஸ்ஸோ (Rousseau) மற்றும் ராய்னலின் (Raynal) நூல்களை ஆழ்ந்து படித்தார். வெற்றி வீரன் அலெக்சாண்டரின் போர்களைப் பற்றியும், மகா ஃபிரெடிக் முதலான ஆட்சியாளர்களின் வெற்றிகளைப் பற்றியும் படித்தறிந்தார். சுவிட்சர்லாந்து, ஸ்பார்ட்டா, துருக்கி, எகிப்து

[1] 'The Youngster is made of granite, but there is a volcano inside'. *Vide* Ketelbey, C. D. M., A History of Modern Times, 1965 Ed., p. 93.

முதலான நாடுகளின் அரசியல் அமைப்புக்களைப் பற்றியும் ஆய்ந்துகொண்டிருந்தார். ஃபிரெஞ்சுப் புரட்சி தொடங்கிய போது அவர் போர் வீரராகப் பணிபுரிந்தார். இளைஞராக இருந்த நெப்போலியன் புரட்சியின் எல்லா நிகழ்ச்சிகளையும் நேரில் கண்டார். 1793ஆம் ஆண்டு அவர் படையில் துணை அலுவலராக இருந்தபோது, டூலோன் (Toulon) துறைமுகத்தை ஆங்கிலேயர்கள் தாக்க முற்பட்டனர். அந்தத் தாக்குதலை நெப்போலியன் முறி யடித்துப் புகழ்பெற்றார். 1795-ல் தேசிய கன்வென்ஷனுக்கு எதிராக நடத்தப்பட்ட கலகத்தை அவர் வெற்றிகரமாக ஒடுக் கினார். அதனால் அவர் ஃபிரான்சில் அமைக்கப்பட்டிருந்த 'டைரக்டரி'யின் நன்மதிப்பைப் பெற்றார்.

**இத்தாலியப் படையெடுப்பு (1796-97):** ஃபிரெஞ்சுப் புரட்சி நடைபெற்ற பின் பல ஐரோப்பிய நாடுகள் ஃபிரான்சில் அமைக் கப்பட்ட குடியரசைக் கவிழ்க்க முயன்றன. அவற்றுள் இங்கி லாந்து, ஆஸ்திரியா, சார்டினியா (இத்தாலி) ஆகியவை முக்கிய மானவை ஆகும். எனவே, ரைன் (Rhine) நதிப் பகுதி வழியாக ஒரு படையும், இத்தாலி வழியாக நெப்போலியன் தலைமையில் மற்றொரு படையும் சென்று ஆஸ்திரியாவைத் தோற்கடிக்க வேண்டும் என 'டைரக்டரி' திட்டமிட்டது. அதன்படி நெப்போ லியன் தம் படையுடன் ஆல்ப்ஸ் மலைகளைக் கடந்துசென்று, சார்டி னியர்களைத் தோற்கடித்து, சவாய் (Savoy) மற்றும் நீஸ் (Nice) ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டார். தொடர்ந்து முன் னேறி லம்பார்டிப் பகுதியிலிருந்த ஆஸ்திரியப் படைகளைத் தோற் கடித்தார் வெனிஷியா (Venitia) பகுதியும் அவரால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. பின்னர் ஆஸ்திரியாவின் தலைநகரமாகிய வியன்னாவைக் (Vienna) கைப்பற்றுவதற்காக நெப்போலியன் அந்த நகரத்தை நோக்கி விரைந்தார். நெப்போலியனின் வருகையைக் கண்டு அஞ்சிய ஆஸ்திரியப் பேரரசர் இரண்டாம் ஃபிரான்சிஸ் (Francis II), நெப்போலியனுடன் காம்போ-ஃபோர்மியோ உடன் படிக்கையை (The Treaty of Campo-Formio, 1797) செய்துகொண் டார். அதன்படி பெல்ஜியத்தை ஆஸ்திரியா ஃபிரான்சுக்குக் கொடுத்தது. ரைன் நதி ஃபிரான்சு-ஆஸ்திரிய எல்லையாயிற்று. நெப்போலியனின் இத்தாலியப் படையெடுப்பு அவருடைய திற மையை உலகறியச் செய்தது.

**எகிப்தியப் படையெடுப்பு (1798-99):** ஆஸ்திரியாவின் வலிமை ஒடுக்கப்பட்ட பின்னர் இங்கிலாந்து ஒன்றே ஃபிரான்சின் பகைமை நாடாக இருந்தது. எனவே, அந்த நாட்டின் நிதிநிலையையும் வாணிகத்தையும் சீர்குலைக்க எகிப்தைத் தாக்கவேண்டுமென நெப்போலியன் கருதினார். அவர் திட்டபடியே எகிப்தைத் தாக்க

'டைரக்டரி' 1798ஆம் ஆண்டு நெப்போலியனை அனுப்பியது. செல்லும் வழியில் அவர் மால்டா (Malta) தீவைக் கைப்பற்றினார். எகிப்துக்குச் சென்று பிரமிடுகள் போரில் (The Battle of the Pyramids) நெப்போலியன் பெரு வெற்றி பெற்றார். அதற்குள் புகழ்மிக்க கடற்படைத் தளபதி நெல்சன் (Nelson) தலைமையில் ஆங்கிலப்படை நெப்போலியனை விரட்டியடிக்க ஓடிவந்தது. நைல் நதிப் போரில் (The battle of the Nile) நெப்போலியனின் கடற் படை நெல்சனால் தோற்கடிக்கப்பட்டது.

### 2. முதல் கான்சலாக நெப்போலியன் (1799-1804)

ஃபிரான்சை ஆட்சி செய்துவந்த ஐந்து பேர் கொண்ட 'டைரக்டரி' திறமையாகச் செயல்படவில்லை. ஐந்து பேருக் கிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின. ஃபிரான்சை எப்படி யும் தோற்கடித்தேயாக வேண்டும் என்பதற்காக 1798ஆம் ஆண்டு ரஷ்யா, ஆஸ்திரியா, துருக்கி, இங்கிலாந்து ஆகிய நாடுகள் 'இரண்டாவது கூட்டணியை' (Second Coalition) அமைத்தன. இத்தகைய அயல்நாட்டு ஆபத்தினைச் சமாளிக்க முடியாத நிலையில் டைரக்டரி இருந்தது. இந்த நேரத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு, எகிப்திலிருந்து வந்த நெப்போலியன் 'டைரக்டரி'யின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு, 1799ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஃபிரான்சின் ஆட்சியாளர் ஆனார். நெப்போலியனின் ஆணைப்படி ஃபிரான்சுக்குப் புதிய அரசியல் சட்டம் எழுதப்பட்டது. அதன்படி அந்நாட்டில் மூன்று கான்சல்கள் கொண்ட கான்சுலேட் (Consulate) ஆட்சி அமைக்கப்பட்டது. நெப்போலியன் முதல் கான்சல் (First Consul) ஆனார். முதல் கான்சலிடம் எல்லா அதிகாரங்களும் அளிக்கப்பட்டன. மற்ற இருவர், முதல் கான்சலுக்கு உதவியாக இருந்தனர். மேலும் கான்சுலேட்டுக்குச் சட்டமியற்றுவதிலும், ஆட்சித்துறையில் உதவி செய்யவும் நான்கு சபைகள் இருந்தன. எனினும் அரசியல் சட்டத்தின் அமைப்பின்படி அவை முதல் கான்சலின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டே செயல்பட வேண்டி யிருந்தன.

**இரண்டாவது இத்தாலியப் படையெடுப்பு (1800):** முதல் கான்சலான நெப்போலியன், உடனடியாக இரண்டாவது கூட்டணி நாடுகளை ஒடுக்கத்தக்க முயற்சிகளை எடுத்துக்கொண்டார். முதலில் ஆஸ்திரியாவின் வலிமையை ஒடுக்க இரண்டாவது முறையாக இத்தாலிமீது நெப்போலியன் படையெடுத்தார், மாரெங்கோ (Marengo) என்ற இடத்தில் நடைபெற்ற போரில் ஆஸ்திரியப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. மிலான் (Milan) ஜெனோவா (Genoa) மற்றும் பீட்மான்ட் (Piedmont)முதலானவை நெப்போலி

யனின் அதிகாரத்திற்கு உட்பட்டன. நெப்போலியன் அனுப்பிய மற்றொரு படை ஆஸ்திரியாவை வடக்கிருந்து தாக்கியது. இங்ஙனம் நெப்போலியனின் இரு படைகளும் ஆஸ்திரியப் படைகளைத் தோற்கடித்ததால், ஆஸ்திரியப் பேரரசர் பணிந்தார். அவர் நெப்போலியனுடன், 1801ஆம் ஆண்டு, லூனிவில் உடன்படிக்கையைச் (The Treaty of Luneville) செய்து கொண்டார். அதன்படி ஏற்கெனவே செய்து கொள்ளப்பட்ட காம்போ-ஃபோர்மியா உடன்படிக்கையின் உட்கூறுகளை ஏற்றுக் கொள்வதாக ஆஸ்திரியப் பேரரசர் ஒத்துக் கொண்டார்.

**இங்கிலாந்துடன் ஏமியன்ஸ் உடன்படிக்கை (1802) :** ஆஸ்திரியாவைப் பணியவைத்த நெப்போலியன் இங்கிலாந்தை அடக்க முயன்றார். ஆனால், இங்கிலாந்தைத் தோற்கடிப்பது அவ்வளவு எளிதான காரியமன்று. அதே நேரத்தில் இங்கிலாந்தில் இளைய பிட்டின் (Pitt, the Younger) அமைச்சரவை பதிவி விலகியது (1801). அதையடுத்து வந்த புதிய அமைச்சரவை ஃபிரான்சுடன் போர் செய்ய விரும்பாமல் ஏமியன்ஸ் உடன்படிக்கையைச் (The Treaty of Amiens, 1802) செய்து கொண்டது. அதனால் அமைதி நிலவியது.

நெப்போலியன் வெற்றிகளையும் திறமை மிக்க ஆட்சியையும் கண்ட ஃபிரெஞ்சு மக்கள், அவரை வாழ்நாள் முழுவதும் முதல் கான்சலாக இருக்கும்படி, பொது வாக்கெடுப்பின் மூலம் அனுமதித்தார்கள் (1802).

நெப்போலியன் முதல் கான்சலாக இருந்தபோது பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார்.[1] அவற்றால் மக்கள் பெரும் பயன் பெற்றார்கள்.

**3. பேரரசராக நெப்போலியன் (1804—1815)—(அ) வெற்றிக் காலம் (1804—1807)**

ஆயுள் கான்சலாக ஆட்சி செய்த நெப்போலியன் ஃபிரான்சின் பேரரசராக ஆகவேண்டுமெனப் பேராவல் கொண்டார். அதையும் மக்கள் ஏற்றுக்கொண்டனர். 1804ஆம் ஆண்டு நெப்போலியன் தம்மை ஃபிரான்சின் பேரரசர் என அறிவித்துக்கொண்டனர். ரோம் நகரத்திலிருந்து போப் ஏழாம் பையஸ் (Pope Pius VII 1800—1823) பாரிஸ் நகரத்திற்கு வந்திருந்து கோலாகலமான முடிசூட்டு விழாவிற்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். இங்ஙனம் ஃபிரெஞ்சுப் புரட்சியின்போது நிறுவப்பட்ட (1792) 'முதல் குடியரசு' 1804-ல் வீழ்ச்சியுற்று மீண்டும் அந்நாட்டில் முடியாட்சி ஏற்படுத்தப்பட்டது.

[1] இந்த அத்தியாயத்தின் பிற்பகுதியைப் பார்க்கவும்.

**இங்கிலாந்துடன் போர் (1805) :** நெப்போலியன் பேரரசரான பின்னர் இங்கிலாந்தை வெல்லக் கருதினர். எனவே அவர் ஏமியன்ஸ் உடன்படிக்கையின் உட்கூறுகளைப் புறக்கணித்து இங்கிலாந்தைப் போருக்கிழுத்தார் இங்கிலாந்துக்குரிய ஜெர்மானியப் பகுதியாகிய ஹனோவரை (Hanover) நெப்போலியன் கைப்பற்றிக் கொண்டு, இங்கிலாந்தின் கப்பல்கள் அங்கு வரக்கூடாதென ஆணையிட்டார். மேலும், இங்கிலாந்தைத் தாக்குவதற்காகப் பெரும் கப்பற்படையை ஆயத்தம் செய்தார். இதையறிந்த இங்கிலாந்து நெல்சன் தலைமையில் கடற்படையை அனுப்பியது. 1805ஆம் ஆண்டு நடைபெற்ற டிரஃபால்கர் கடற்போரில் (The Battle of Trafalgar) ஃபிரெஞ்சு கடற்படை நொறுக்கப்பட்டது. நெப்போலியனுக்கு இது ஒரு பேரதிர்ச்சியைத் தந்தது. நெல்சன் இப்போரில் கொல்லப்பட்டார். அவருடைய மறைவு இங்கிலாந்துக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

**ஆஸ்டர்லிட்ஸ் வெற்றி (1805) :** நெப்போலியன் வளர்ந்து வந்த வலிமையைக் கண்டும், அவர் 'பேரரசர்' என்ற பட்டத்தை ஏற்றுக்கொண்டதைக் கண்டும், ஆஸ்திரியா, ரஷ்யா ஆகியநாடுகள் பொருமையும் அச்சமும் கொண்டன. இங்கிலாந்தும் நெப்போலியனை வீழ்த்தத் திட்டமிட்டது. அப்பொழுது மீண்டும் இங்கிலாந்தின் தலைமை அமைச்சராகியிருந்த இளைய பிட்டின் முயற்சியால் இங்கிலாந்து, ஆஸ்திரியா, ரஷ்யா ஆகிய நாடுகள் 'மூன்றுவது கூட்டணி'யை அமைத்தன. இதைப்பற்றிக் கேள்விப்பட்ட நெப்போலியன் உடனே ஆஸ்திரியாவின் மீது திடீர்தாக்குதலை நடத்திப் பல வெற்றிகளைப் பெற்ருர். குறிப்பாக ஆஸ்திரியா, மற்றும் ரஷ்யா, ஆகிய இரு நாடுகளின் படைகளை ஆஸ்டர்லிட்ஸ் (Austerlitz) என்ற இடத்தில் நெப்போலியன் தோற்கடித்துப் பெருஞ்நாசதத்தை ஏற்படுத்தினர். மூன்றுவது கூட்டணி முறிந்தது. வெனிஷியா முதலான பகுதிகளை ஃபிரான்சுக்குக் கொடுத்து, ஆஸ்திரியா, அந்நாட்டுடன் உடன்படிக்கை செய்து கொண்டது. நெப்போலியன் ஆஸ்டர்லிட்ஸ் வெற்றியைப் பற்றி அறிந்த இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் இளைய பிட், 'அந்த (ஐரோப்பாப்) படத்தைச் சுருட்டி வையுங்கள். அது இன்னும் பத்தாண்டுகளுக்குத் தேவைப்படாது', என்று மனமுடைந்து கூறினர்.[1] ஆஸ்டர்லிட்ஸ் வெற்றி நெப்போலியனின் பெருமையைத் திக்கெட்டும் பரவச் செய்தது.

**ரைன் கூட்டிணைப்பரசு உருவாக்கப்படுதல் (1806) :** ஆஸ்டர்லிட்ஸ் போருக்கு முன்னர் நெப்போலியன் தம்மை, இத்தாலியின்

[1] 'Roll up that map (of Europe), it will not be wanted these ten years.— Pitt, the Younger,—*Vide* H. A. Davies, An Outline History of the World (1957), p. 454.

பேரரசர் என்றும் அறிவித்துக்கொண்டு முடிசூட்டிக் கொண்டார். போருக்குப் பின்னர்த் தாம் வென்ற ஹாலந்து (Holland) நாட்டுக்குத் தம் தம்பி ஒருவரை அரசராக நியமித்தார். தம் அண்ணனை நேபிள்சின் (Naples) அரசராக நியமித்தார் பின்னர் மேற்கு ஜெர்மானிய அரசுகளை எல்லாம் ஒன்ருகச் சேர்த்து 'ரைன் கூட்டிணைப்பரசை' (Confederation of the Rhine) உருவாக்கிஞர். இது பிரஷ்யாவின் வலிமைக்கெதிராக அமைக்கப்பட்ட அரசு ஆகும். இதிலிருந்த பதிஞெரு ஜெர்மானிய அரசுகளும் புனித ரோமானியப் பேரரசிலிருந்து விலகின. இவை நெப்போலியனைத் தங்கள் பேரரசராக ஏற்றுக்கொண்டன. இப் பேரரசுக்குத் தலைவராக இருந்த ஆஸ்திரியாவின் பேரரசர் தம் உரிமையை இழந்து விட்டார். இங்ஙனம் கி.பி. 962ஆம் ஆண்டு தோன்றிய புனித ரோமானியப் பேரரசு, 1806ஆம் ஆண்டு மறைய நெப்போலியன் காரணமாயிருந்தார்.

**பிரஷ்யா, ரஷ்யாவுடன் போர் (1806 — 1807):** பிரஷ்யாவிற்கு மேற்கே நெப்போலியன் 'ரைன் கூட்டிணைப்பரசை' ஏற்படுத்தியதைக்கண்டு பிரஷ்யா அஞ்சியது. அந்த நாட்டின் அரசர் மூன்ரும் ஃபிரெடிரிக் வில்லியம் (Frederick William III) ரஷ்யாவுடன் நட்புறவுகொண்டார். பின்னர் நெப்போலியன் ரைன் கூட்டிணைப்பரசில் வைத்திருந்த ஃபிரெஞ்சுப்படையை விலக்கிக்கொள்ளும்படி வில்லியம் கேட்டுக்கொண்டார். உடனே நெப்போலியன் பிரஷ்யாவின்மீது போர் தொடுத்தார். 1806ஆம் ஆண்டு ஏனு (Jena) என்ற இடத்திலும், மற்ருேரிடத்திலும் நடைபெற்ற போரில் பிரஷ்யப் படைகள் நிர்மூலமாக்கப்பட்டன. பல கோட்டைகளை நெப்போலியன் கைப்பற்றிக்கொண்டார். பிரஷ்யாவின் தலைநகரமாகிய பெர்லினுக்கு (Berlin), நெப்போலியன் வெற்றிப்பெருமிதத்துடன் சென்ருர். அங்கிருந்து பிரஷ்யாவின் நட்புநாடாகிய ரஷ்யாவைத் தாக்கச் சென்ருர். ரஷ்யாவின் சார் முதலாம் அலெக்சாண்டர் (Czar Alexander I) விரைந்து படையை அனுப்பிஞர். ஆனுல், ரஷ்யப் படைகளும் ஃபிரீட்லாண்ட் (Friedland) என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து சார் அலெக்சாண்டர், நெப்போலியனுடன் டில்சிட் உடன்படிக்கையைச் (The Treaty of Tilsit, 1807) செய்து கொண்டார். அவ்வுடன்படிக்கையால் ரஷ்யா தனக்குச்சொந்தமான பகுதி எதையும் இழக்கவில்லை. ஆனுல், பிரஷ்யாவிடமிருந்து பல நிலப்பகுதிகள் நெப்போலியனுக்குக் கொடுக்கப்பட்டன. அந்தப் பகுதிகளை முறைப்படுத்தி நெப்போலியன் இரண்டு அரசுகளாக அமைத்தார். அவை 'வெஸ்ட்பேலியா அரசு' (Kingdom of Westphalia), மற்றும் 'வார்சா பெருங்கோமகனுட்சிப் பகுதி' (The Grand Duchy of

Warsaw) ஆகியவை ஆகும். வெஸ்ட்ஃபேலியா அரசுக்குத் தம்முடைய தம்பி ஜெரோம் போனபார்ட்டை (Jerome Bonaparte) அரசராக நியமித்தார். அந்த உடன்படிக்கையின்படி ரஷ்யா, ஃபிரான்சுடன் நட்பு நாடாக இருக்க ஒப்புக்கொண்டது. டில்சிட் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டபோது நெப்போலியன் புகழ் ஏணியின் உச்சிக்குச் சென்றுவிட்டிருந்தார் என்று கூறினல் மிகையாகாது. ஐரோப்பாக் கண்டத்தின் பெரும்பகுதி அவருடைய அதிகாரத்தை ஏற்றுக்கொண்டிருந்தது. ஃபிரான்சுக்கும் இத்தாலிக்கும் நெப்போலியன் பேரரசராக இருந்தார். ரைன் கூட்டிணைப்பரசு அவரைப் பேரரசராக ஏற்றுக்கொண்டது. ஹாலந்து, வெஸ்ட்ஃபேலியா அரசு மற்றும் நேபிள்சில் அவருடைய சகோதரர்கள் அரசராக இருந்தனர். ஆஸ்திரியா. பிரஷ்யா, ரஷ்யா ஆகியவை தோற்கடிக்கப்பட்டன. டில்சிட் உடன்படிக்கை வரை நெப்போலியன் சென்றவிடமெல்லாம் வெற்றி வாகைகளையே சூடிவந்தார். அவ்வுடன்படிக்கைக்குப் பின்னர் எந்த ஒரு முக்கியப்போரிலும் நெப்போலியன் வெற்றிபெறவில்லை. எனவே, நெப்போலியனின் எழுச்சிமிக்க வரலாற்றில் டில்சிட் உடன்படிக்கை ஒரு முக்கியக் கட்டமாகக் கருதப்படுகிறது.

(ஆ) தோல்விக் காலம் (1807—1815)

*1807ஆம் ஆண்டிலிருந்து 1815ஆம் ஆண்டு வரையிலுள்ள காலம் நெப்போலியனின் தோல்விக்காலம் ஆகும். அந்த ஆண்டுகளில் அவர் மேற்கொண்ட கண்டத் திட்டம் (The Continental System), தீபகற்பப் போர் (The Peninsular War), மற்றும், ரஷ்யப் படையெடுப்பு (The Russian Expedition) ஆகியவை நெப்போலியனின் தோல்விக்கும் வீழ்ச்சிக்கும் வழிவகுத்தன.*

**கண்டத் திட்டம் (1806 — 1807) :** 'கடைக்காரர்களின் நாடு' (The Nation of Shopkeepers) என்று கருதப்பட்ட இங்கிலாந்தை எப்படியாவது பணியவைக்கவேண்டும் என்று நெப்போலியன் பேராவல் கொண்டார். நிலப்பகுதியிலோ கடற்பகுதியிலோ அதை வெல்லுவது கடினம் என்பதை அவர் அறிந்திருந்தார். எனவே, இங்கிலாந்தின் உயிர்நாடியான வாணிகத்தை தடைசெய்யவேண்டும்; அவ்வாறு செய்தால் அந் நாட்டின் பொருளாதார நிலையும், நிலையும் சீர்குலைந்துபோகும்; அதனுல் இங்கிலாந்து ஃபிரான்சினிடம் பணிந்துவிடும் என்று நெப்போலியன் திட்டமிட்டார். அதன்படி இங்கிலாந்தின்மீது ஒரு பொருளாதாரப் போர் (Economic Warfare) தொடுக்க, 1806ஆம் ஆண்டு நெப்போலியன் பெர்லின் ஆணைகளை (The Berlin Decrees) வெளியிட்டுத் தம்முடைய 'கண்டத் திட்டத்தை' அறிவித்தார். அதன்படி எந்த நாட்டு வணிகக்கப்பலும் இங்கிலாந்தின் துறைமுகங்களுக்குச் செல்

லக்கூடாது; ஆங்கில வணிகக்கப்பல்கள் ஐரோப்பியத் துறைமுகங்களுக்கு வரக்கூடாது; ஃபிரான்சும் அதனுடைய நட்பு நாடுகளும் இங்கிலாந்துடன் வாணிகம்செய்யா; நடுநிலை நாடுகளின் கப்பல்கள் ஐரோப்பியத் துறைமுகங்களுக்கு வராமல் நேராக ஆங்கிலத்துறைமுகங்களுக்குச் செல்லக்கூடாது; ஆங்கில வணிகப் பொருள்கள் அனைத்தும் அழிக்கப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு எதிர் நடவடிக்கை எடுத்த ஆங்கில அரசு 1807ஆம் ஆண்டு 'கவுன்சில் ஆணைகளை' (Orders in Council) வெளியிட்டது. அதன்படி ஃபிரான்சு மற்றும் அதன் நட்பு நாடுகளுடன் இங்கிலாந்து வாணிகம் செய்யாது; நடுநிலை நாடுகள் ஐரோப்பியத் துறைமுகங்களுக்குச் செல்லாமல் நேராக ஆங்கிலத் துறைமுகங்களுக்கே செல்லவேண்டும், என அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நெப்போலியன் மிலான் ஆணைகளை (Milan Decrees) வெளியிட்டார் (1807). எந்த நாட்டுக் கப்பலாவது ஆங்கிலத் துறைமுகத்திற்குச் சென்றால் அக்கப்பலை ஃபிரான்ஸ் கைப்பற்றிக் கொள்ளும் என அவர் தெரிவித்தார். இத்திட்டத்தால் ஐரோப்பிய நாடுகள், இங்கிலாந்து மற்றும் நடுநிலை நாடுகளின் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டது. இங்கிலாந்தும் ஃபிரான்சும் நடுநிலை நாடுகளின் கப்பல்களைப் பறிமுதல் செய்தன. அமெரிக்காவின் பல கப்பல்களை ஃபிரான்ஸ் கைப்பற்றியது. ஐரோப்பிய நாடுகளும், மக்களும் இத்திட்டத்தை வெறுத்தனர். வணிகர்கள் இத்திட்டத்தை மீறி நடந்து கொண்டனர். இத்திட்டம் நெப்போலியனின் வீழ்ச்சிக்கு வழி கோலியதே தவிர அவருடைய வெற்றிக்கு உதவவில்லை. இந்தத் திட்டத்தைச் சரியாக நடைமுறைப் படுத்தவும் முடியவில்லை. அதை நடைமுறைப்படுத்த நெப்போலியன் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. அவை அவருடைய வீழ்ச்சியின் வேகத்தை அதிகரித்தன.

தீபகற்பப் போர் (1808-1814) : கண்டத் திட்டத்தைப் போர்ச்சுகல் நாடு ஏற்க மறுத்தது. போர்ச்சுகல் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டால்தான், ஓரளவு அந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்தமுடியும். எனவே, நெப்போலியன் ஃபிரெஞ்சுப் படையை அனுப்பி அந்த நாட்டைக் கைப்பற்றிக்கொண்டார். அந்த நாட்டு அரச குடும்பம் பிரேசில் நாட்டிற்குத் தப்பிச் சென்றுவிட்டது. ஸ்பெயின் நாட்டில் அரசராக இருந்த நான்காம் சார்லஸுக்கும் (Charles IV) அவருடைய மகனுக்கும் தகராறுகள் இருந்தன. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு, அந்த இருவரையும் நீக்கிவிட்டு, நெப்போலியன் தம்முடைய சகோதரர் ஜோசஃப் போனபார்ட்டை ஸ்பானிய அரசராக நியமித்தார்.[1] இது நெப்போலி

[1] ஜோசஃப் இதற்கு முன் நேபிள்சில் அரசராக இருந்தார். இப்பொழுது அந்த இடத்தில் நெப்போலியன் தம்முடைய மைத்துனர் மூரட் '(Murat) என்பவரை நியமித்தார்,

யன் செய்த மிகப்பெரிய அநியாயச் செயலாகும். இதை ஸ்பானிய மக்கள் எதிர்த்துக் கலகம் செய்தனர். அதற்கு இங்கிலாந்தும் உதவிசெய்தது. சர் ஆர்த்தர் வெல்லஸ்லி (Sir Arthur Wellesley) தலைமையில் இங்கிலாந்து ஒரு பெரும் படையை அனுப்பியது. வெல்லஸ்லி முதலில் போர்ச்சுகலிலிருந்து ஃபிரெஞ்சு அதிகாரத்தை அகற்றினார். பின்னர் ஸ்பெயினில் போர் தொடர்ந்து நடைபெற்றது. 1809ஆம் ஆண்டும் பின்னர் 1813ஆம் ஆண்டும் நடைபெற்ற போர்களில் இங்கிலாந்து வெற்றி பெற்றதால், ஸ்பெயினிலிருந்தும் நெப்போலியனின் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டது. இந்தத் தீபகற்பப் போரில் நெப்போலியனின் திறமைமிக்க படைகள் அழிந்துவிட்டன. அவரது வீழ்ச்சிக்கு இந்த ஸ்பானியப் புண் (Spanish ulcer) ஒரு பெருங்காரணமாகும்.

போர்ச்சுகலிலும், ஸ்பெயினிலும் ஃபிரெஞ்சுப் படைகள் தோல்வியடைந்ததைக் கண்ட ஆஸ்திரியா, நெப்போலியனின் அதிகாரத்திற்கு உட்பட்ட ஜெர்மானிய அரசுகளில் கலகத்தைத் தூண்டிவிட்டது. உடனே நெப்போலியன் 1809ஆம் ஆண்டு ஆஸ்திரியாவைத் தோற்கடித்து, அந்நாட்டுப் பேரரசரின் மகள் மேரி லூயிஸைத் (Marie Louise) திருமணம் செய்துகொண்டார் (1810).

**ரஷ்யப் படையெடுப்பு (1812):** 1807ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட டில்சிட் உடன்படிக்கையிலிருந்து ரஷ்யா ஃபிரான்சுக்கு நட்பு நாடாகவே விளங்கியது. எனினும் ரஷ்ய அரசருக்குத் தொடர்புடைய சிலநிலப்பகுதிகளை நெப்போலியன் ஆக்கிரமித்துக் கொண்டதாலும், அவர் ஆஸ்திரிய இளவரசியை மணந்துகொண்டதாலும், கண்டத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ரஷ்ய அரசர் மறுத்தார். எனவே, நெப்போலியன் ரஷ்யாவைத் தாக்குவதற்கான விரிவான ஏற்பாடுகளைச்செய்தார். சுமார் ஆறு லட்சம் போர் வீரர்களுடன் 1812ஆம் ஆண்டு ரஷ்யாவைத்தாக்க நெப்போலியன் புறப்பட்டார். மிகப் பயங்கரமாக முன்னேறிச்சென்ற ஃபிரெஞ்சுப்படையைக்கண்ட ரஷ்யப்படை சிறிது சிறிதாகப் பின்னேக்கிச் சென்றது. விடாமுயற்சியுடன் சென்ற நெப்போலியன் பொரோடினோ (Borodino) என்ற இடத்தில் ரஷ்யப் படைகளைத் தோற்கடித்தார். ரஷ்யர்கள் தொடர்ந்து பின்னேக்கிச்சென்றனர். அங்ஙனம் செல்லும்போது அவர்கள் எல்லாப் பொருள்களையும் அழித்துவிட்டுச்சென்றனர்.[1] முன்னேறிய ஃபிரெஞ்சுப்படையினர் உணவும், குடி நீரும் இன்றிப் பெருந்தொல்லைக்கு உள்ளாயினர். தொல்லைகள் பலவாயினும் அவர்கள் மாஸ்கோ (Moscow) நகரைக்

[1] Scorched Earth Policy.

கைப்பற்றி விடலாம் என்ற நம்பிக்கையில் தொடர்ந்து முன்னேறினார்கள். இறுதியில் மாஸ்கோ நகரத்திற்குச் சென்றடைந்த நெப்போலியன் அதிர்ச்சியடைந்தார். ஏனெனில், நகரத்தின் பெரும் பகுதியைத் தீக்கிரையாக்கிவிட்டு ரஷ்யர்கள் தொலைதூரத்திற்குச் சென்றுவிட்டிருந்தார்கள். ஏமாற்றமடைந்த நெப்போலியன் தம் படைகளை ஃபிரான்சுக்குத் திரும்பும்படி ஆணையிட்டார். அதற்குள் ரஷ்யாவில் குளிர்காலம் தொடங்கிவிட்டது! கடும்பனி பெய்தது; குளிரினாலும் நோயினாலும் ஆயிரக்கணக்கான வீரர்கள் உயிரிழந்தனர். ஆறு லட்சம் வீரர்களுள் பெரும் பகுதியினர் இறந்துவிட்டனர். இருபதாயிரம் வீரர்கள் மட்டுமே தாயகம் திரும்பினார்கள். ரஷ்யப் படையெடுப்பு நெப்போலியனின் இராணுவ வலிமையைச் சீர்குலைத்துவிட்டது.

**நெப்போலியனின் இறுதித் தோல்வி:** நெப்போலியனின் ரஷ்யப் படையெடுப்புப் பெருந்தோல்வியிலும் இழப்பிலும் முடிந்ததை அறிந்த இங்கிலாந்து, ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா, ஆகிய நாடுகள் 1813ஆம் ஆண்டு 'நான்காவது கூட்டணி'யை அமைத்தன. இவை நெப்போலியன் மீது போர் தொடுத்தன. போர்கள் பல இடங்களில் நடைபெற்றன. இறுதியாக 1813 ஆம்ஆண்டு அக்டோபர் மாதம் லைப்சிக் (Leipzig) என்ற இடத்தில் நடைபெற்ற மூன்று நாள் போரில் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டார். இந்தப் போர் தேசிய நாடுகளின் போர்' (The Battle of Nations) என்றும் சொல்லப்படுகிறது. இந்தத் தோல்விக்குப் பின் அவர் நிர்மானித்த பேரரசு நிர்மூலமாகியது. 'ரைன் கூட்டிணைப்பரசு' கலைக்கப்பட்டது. ஹாலந்து சுதந்திர நாடாகியது. வெஸ்ட்ஃபேலிய அரசு மறைந்துவிட்டது. இந்த நிலையில் கூட்டணி நாடுகள் நான்கு திசைகளிலிருந்தும் பாரிஸ் நகரத்தை நோக்கி முன்னேறின. 1814ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், வேறுவழியின்றி நெப்போலியன் அரச பதவியைத் துறந்தார். அவர் மத்திய தரைக் கடலிலுள்ள எல்பா (Elba) தீவுக்கு அனுப்பப்பட்டார்.

ஃபிரெஞ்சுப் புரட்சியின்போது கொல்லப்பட்ட பதினாறும் லூயியின் சகோதரர் பதினெட்டாம் லூயியை (Louis XVIII) கூட்டணி நாடுகள் ஃபிரான்சின் அரசாக நியமித்தன. இங்ஙனம் பூர்பன் வமிச ஆட்சி மீண்டும் ஃபிரான்சில் கொண்டுவரப்பட்டது. ஆனால், இது நீண்டநாள் நீடிக்கவில்லை.

நெப்போலியனை எல்பா தீவிற்கு அனுப்பிவிட்ட ஐரோப்பிய நாடுகள், 1814ஆம் ஆண்டு ஆஸ்திரியாவின் தலைநகரமாகிய வியன்னாவில் கூடி, போரின் இறுதியில் பெற்றபகுதிகளைப் பங்கு போட்டுக்கொள்வது பற்றிப் பேசிக்கொண்டிருந்தன. இந்த

'வியன்னு மாநாடு' (The Congress of Veinna) அமைதியாக நடைபெறவில்லை. அங்குக் கூடிய நாடுகள் நிலப்பகுதிகளைப் பங்கு போட்டுக்கொள்வதில் சச்சரவிட்டுக் கொண்டிருந்தன.

இந்த நிலைமையை அறிந்துகொண்ட நெப்போலியன் எல்பா தீவிலிருந்து தப்பித்துக்கொண்டு ஃபிரான்சுக்குச் சென்றுர். அங்கு அவரை மக்களும், வீரர்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். நெப்போலியன், பதினெட்டாம் லூயியை விரட்டியடித்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டார்.

வியன்னுவில் கூடியிருந்த ஐரோப்பிய நாடுகள் இதையறிந்து அதிர்ச்சியும் அச்சமும் கொண்டன. உடனே எல்லா நாடுகளும் மிகப்பெரிய படையைத் திரட்டின. வெல்லிங்டன் கோமகன் (Duke of Wellington) தலைமையில் மிகப் பெரிய படையை இங்கிலாந்து அனுப்பியது. புளுச்சர் (Blucher) தலைமையில் மற்றொரு பெரும் படையை பிரஷ்யா அனுப்பியது. அதேபோல ரஷ்யா, ஆஸ்திரியா மற்றும் வேறு பல நாடுகளும் படைகளை அனுப்பின. ஏறத்தாழ எட்டு லட்சம் வீரர்களைக் கொண்ட பெரும்படையுடன் கூட்டணி நாடுகள் ஃபிரான்சை முற்றுகையிட்டன. அஞ்சா நெஞ்சம் கொண்ட நெப்போலியன் ஒரு இலட்சத்து இருபதாயிரம் வீரர்களைக் கொண்ட படையுடன் பகைவர்களைச் சந்திக்கச் சென்றுர். 1815ஆம் ஆண்டு ஜூன் மாதம் வாட்டர்லூ (Waterloo) என்ற இடத்தில் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டார். அவர் பாரிஸ் நகருக்குத் தப்பியோடினுர். எனினும் பின்னர் கூட்டணிப் படைகளிடம் சரணடைய வேண்டியதாயிற்று. எல்பா தீவிலிருந்து தப்பி வந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்று, வாட்டர்லூ போருக்குப் பின் சரணடைந்தது வரை நெப்போலியன் 'நூறு நாட்கள்' (The Hundred Days) பேரரசராக இருந்தார். நெப்போலியனுல் பெருந் தொல்லைகள் பட்ட ஐரோப்பிய நாடுகள் அவரைக் கண்ணியமாக நடத்தவிரும்பவில்லை. அதன் விளைவு, நெப்போலியன் பதவியையும் பேரரசர் பட்டத்தையும் துறந்தார். அட்லாண்டிக் கடலிலுள்ள செயின்ட் ஹெலினு (St. Helena) தீவிற்குப் போர்க் கைதியாக அவர் அனுப்பப்பட்டார் (1815). ஐரோப்பிய நாடுகள் மீண்டும் பதினெட்டாம் லூயியை ஃபிரான்சின் அரசராக நியமித்தன. ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகள் ஐரோப்பிய அரசியல் வானில் எரிமீன் (Meteor) போல விளங்கிய நெப்போலியன், 1821ஆம் ஆண்டு செயின்ட் ஹெலினு தீவில் மனமுடைந்து மறைந்தார்.

### 4. நெப்போலியன் சீர்திருத்தங்கள்

நெப்போலியன், வீரர்களே வியக்கும் வல்லமை பொருந்திய மாவீரன் மட்டுமல்லர், மிகச் சிறந்த நிர்வாகியும் ஆவார். தன்

னுடைய ஆட்சிக் காலத்தில் பல உள்நாட்டுச் சீர்திருத்தங்களை அவர் கொண்டுவந்தார். குறிப்பாக அவர் 1799—1804ஆம் ஆண்டுகளில் முதல் கான்சலாக இருந்தபோது அவற்றுள் பெரும் பாலானவற்றைச் செயல்முறைப்படுத்தினர். நெப்போலியன் கொண்டுவந்த சீர்திருத்தங்களை எல்லா வரலாற்றுசிரியர்களும் புகழ்ந்து பாராட்டுகின்றனர். 'நெப்போலியனின் வெல்கைகள் நிலையற்றவையாயின், ஃபிரான்சில் அவர் செய்த பொதுப்பணி கருங்கற்பாறையின் மீது கட்டப்பட்ட அமைப்புபோல் உள்ளது', என்று வரலாற்றறிஞர் H. A. L. ஃபிஷர் குறிப்பிடுகின்றார். கீழ்க்காண்பவை நெப்போலியன் கொண்டு வந்த சீர்திருத்தங்கள் ஆகும்.

நிர்வாகத் துறை: நெப்போலியன் எல்லா அதிகாரங்களையும் தானே வைத்துக்கொண்டிருந்தார். ஸ்தல-சுய ஆட்சியில் அவருக்கு நம்பிக்கை இல்லை, 'எல்லோருக்கும் உரிமை' என்ற கொள்கையை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதித்துவ மன்றங்களைக் கலைத்து விட்டார். ஃபிரான்சிலிருந்த டிபோர்ட்மென்ட்டுகள், அர்ரோன் டைஸ்மென்ட்டுகள், கம்யூன்கள் (Deportments, Arrondisements, Communes) முதலான ஆட்சித்துறை நிலப்பகுதிகளில் தன்னுடைய அரசு அலுவலர்களையே நெப்போலியன் நியமித்தார். அவர்கள் அனைவரும் அவருக்குக் கட்டுப்பட்டே செயல்பட்டனர். 1799ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் சட்டத்தின்படி சட்ட மியற்ற அமைக்கப்பட்ட சட்ட மன்றங்களும் அவருடைய விருப்பப்படியே செயல்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நிதி: ஃபிரான்சில் நிதிநிலை சீர்கெட்டிருந்தது. பூர்பன் அரசர்கள் மேற்கொண்ட பொறுப்பற்ற போர்களினுலும், புரட்சியின் போது நிலவிய நிலையற்ற ஆட்சியினுலும் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டு நிதிநிலை சீர்குலைந்தது. அதனுல் அரசு விதித்த வரிகளை ஒழுங்காகத் திரட்ட நெப்போலியன் வழி செய்து அரசு வருமானத்தைப் பெருக்கினர். லஞ்ச ஊழலில் ஈடுபட்டிருந்த அலுவலர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். வளர்ந்து வந்த இராணுவச் செலவுகளை ஈடு செய்ய. தான் வென்ற அரசுகளிட மிருந்து பெரும் போர் இழப்பீட்டுத் தொகைகளைப் பெற்ருர். நிதி நிலையை முறைப்படுத்த ஃபிரெஞ்சு வங்கியை (Bank of France) அவர் அமைத்தார். வட அமெரிக்கக் கண்டத்தில் லூசியானு (Louisiana) என்ற பெருநிலப்பகுதி ஃபிரான்சுக்குச் சொந்தமாக

[1] 'If the Conquests of Napoleon were ephemeral, his civilian work in France was built upon granite.—*Vide*. Fisher, H. A. L., A History of Europe, Vol. II (Collins) 1970 Ed., p. 923.

இருந்தது. அரசு செலவினங்களை ஈடு செய்ய 1803ஆம் ஆண்டு அந்தப் பகுதியை நெப்போலியன், ஒரு கோடியே ஐம்பது லட்சம் டாலர் பணத்திற்கு, ஐக்கிய அமெரிக்காவிற்கு விற்றுவிட்டார்.

கல்வி: கல்வித்துறையில் பல மாறுதல்கள் கொண்டுவரப் பட்டன. நாடெங்கிலும் தொடக்கப் பள்ளிகள் திறக்கப்பட்டன. ஃபிரெஞ்சுமொழியும் லத்தீன் மொழியும் கட்டாயமாகக் கற்பிக்கப் பட்டன. அறிவியல் பாடங்கள் சிறப்புப் பெற்றன. நகரங்களில் உயர்நிலைப் பள்ளிகள், தொழில் நுணுக்கப் பள்ளிகள், இராணுவப் பள்ளிகள் முதலானவை தொடங்கப்பட்டன. அவை அரசின் கொள்கைகளுக்கேற்ப இயங்கின. இலவசக் கல்விக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆசிரியர்களுக்குப் பயிற்சி தரப் பயிற்சிப் பள்ளி அமைக்கப்பட்டது. அவர் காலத்தில் ஒரு பல்கலைக் கழகமும் நிறுவப்பட்டது. நாடு முழுவதும் ஒரே சீரான கல்வி முறை நடை முறைப்படுத்தப்பட்டது. ஒரு நாட்டிற்கு ஓர் ஆட்சியாளர் இருப்பதுபோல நாடு முழுவதற்கும் ஒரே சீரான கல்விமுறை இருக்கவேண்டுமென நெப்போலியன் கருதினார்.

பொதுப் பணி: பல பொதுப்பணிகள் மேற்கொள்ளப் பட்டன. உள்நாட்டு வாணிக வசதிக்கும், போக்குவரத்து வசதிக்கும், போர்க் காலங்களில் மிக விரைவாகப் படைகளை நடத்திச் செல்லவும் பல நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டன. 1811ஆம் ஆண்டிற்குள் ஏறத்தாழ இருநூற்றிருபது அகன்ற நெடுஞ்சாலைகள் இருந்தன. அவற்றுள் முப்பது நெடுஞ்சாலைகள் தலைநகரிலிருந்து எல்லைப்பகுதிகளுக்குச் சென்றன. இரண்டு நெடுஞ் சாலைகள் ஃபிரான்சின் தலைநகரிலிருந்து டூரின், மிலான், ரோம், நேபிள்ஸ் முதலான இத்தாலிய நகரங்களுக்குச் சென்றன. ஏற்கெனவே வெட்டப்பட்டிருந்த கால்வாய்கள் சீர்படுத்தப் பட்டன, டூலோன் (Toulan) மற்றும் செர்பர்க் (Cherbourg) முதலான துறைமுகங்கள் விரிவுபடுத்தப்பட்டு வலிமைப்படுத்தப் பட்டன. இத்தகைய பொதுப்பணிகளால் வேலையற்றிருந்த ஆயிரக்கணக்கானவர் வேலை வாய்ப்பினைப் பெற்றனர். போர்க் கைதிகளும் இந்த வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டனர்.

கலைகள்: மாவீரன் நெப்போலியன் இனிய கலைஞனுமாவார். எல்லாவிதமான கலைகளின் வளர்ச்சிக்கும் அவர் ஆதரவு கொடுத்தார். அரசாங்க அரண்மனைகளைப் பெரிதாக்கிக் கலைஞர் களைக் கொண்டு அழகுபடுத்தினார். ஓவியம் வரைவோர், காவியம் செய்வோர், கற்சிலைகளை வடிக்கும் சிற்பிகள், கட்டடக் கலைஞர்கள் முதலானவர் பாரிஸ் நகரை அழகு நகராக்கினர். கலைக்கூடங்கள் அமைக்கப்பட்டன. நெப்போலியன் வென்ற நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட கலைக் கருவூலங்கள் அங்கு வைக்கப்பட்டன.

சட்டத் தொகுப்பு: நெப்போலியனுக்கு நிலேயான புகழைத் தந்தது அவர் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சட்டத்தொகுப்பே ஆகும். புரட்சிக்கு முன்னர் ஃபிரான்சில் பலவிதமான சட்டங்கள் குழப்பமான நிலேயில் இருந்தன. அவற்றைத் தொகுத்து முறைப் படுத்த நெப்போலியன் ஒரு சட்ட வல்லுநர் குழுவை நியமித்தார். நெப்போலியன் பல ஆணைகளேயும் திருத்தங்களேயும் வெளியிட்டு அந்தக் குழுவின் பணியை எளிமைப் படுத்திஞர். இறுதியில் வெளியிடப்பட்ட, முறைப்படுத்தப்பட்ட சட்டங்கள் 'நெப்போலியனின் சட்டத் தொகுப்பு' (Code Nepoleon) என்று பெயர் பெற்றன. இத் தொகுப்பு நாடு முழுவதும் ஒரே சீரான சிவில் சட்டத்தை நடைமுறைப்படுத்த பெரிதும் உதவியது. சட்டங்களே மொத்தம் ஐந்து வகையாக அவர் பிரித்து வெளியிட வழிசெய்தார். அவை சிவில் சட்டம், சிவில் சட்டமுறை. கிரிமினல் சட்டம், கிரிமினல் சட்ட முறை, வணிகச் சட்டம் என்பவை ஆகும்.[1] இவற்றின்படி மத வுரிமை அளிக்கப்பட்டது. கணவன் மனேவியரிடையே ஒப்புதலின் பேரில் மணவிலக்கு அனுமதிக்கப்பட்டது. பெண்கள் அதிகமான உரிமைகளேப் பெறவில்லே. வீட்டின் தலேமைப் பொறுப்பு தந்தையிடமே இருந்தது. அரசுக்கு எதிரான செயல்களேச் செய்தவர் முறைப்படி தண்டிக்கப்பட்டனர். சட்டத்தின் முன் அனேவரும் சமமானவர்களாகக் கருதப்பட்டனர். நெப்போலியன் சட்டத் தொகுப்பு அவருடைய மிகப் பெரிய வெற்றியாகக் கருதப்படுகிறது. 'அவர் காலத்தில் அவர் மேற்கொண்ட முயற்சிகளில் ஃபிரான்சின் நீதித்துறைக்குச் செய்த பணியே மிகமுக்கியமானது', என்று வரலாற்றறிஞர் A. J. கிரான்ட் கூறுகின்ருர்.[2] செயின்ட் ஹெலிஞ தீவில் கைதியாக இருந்த நெப்போலியன், தன் சாதனேகளேப்பற்றி மனமுடைந்து நினேவு கூர்ந்தபோது 'எனது உண்மையான பெருமை, நான் வென்ற நாற்பது போர்களில்லே. என்னுடைய சிவில் சட்டத் தொகுப்பு, எவராலும் அழிக்கப்படாமலும், எப்பொழுதும் நிலேத்து நிற்கும்' என்று கூறிஞர்.[3] எனவே தான் ரோமானியச் சட்டங்களேத் தொகுத்த ஜஸ்டினியன் (Justinian, 527—565 A. D.) என்ற கிழக்கு ரோமானியப் பேரரசருக்கு இணேயாக நெப்போலியன் கருதப்படுகிருர். இந்தச் சட்டங்கள் ஃபிரான்சில் மட்டுமின்றி, நெப்போலியன் வென்ற மற்ற நாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

[1] Civil Code, Code of Civil Procedure, Criminal Code, Code of Crimina Procedure· Code of Commercial Law.

[2] 'The work that he did for the judical system of France was perhaps the most important of all the effort at this time'—A. J Grant.

[3] 'My real glory is not my having won forty battles. What will never be effaced, what will endure for ever, is my Civile Code.'—Nepoleon

**போப்புடன் நல்லுறவு:** ரோம் நகரத்திலிருந்த போப்புடன் நல்லுறவை வைத்துக்கொள்ளவே நெப்போலியன் விரும்பினர். அதனுல் 1801ஆம் ஆண்டு அவர், போப் ஏழாம் பையஸுடன் ஓர் ஒப்பந்தத்தை (The Cancordat) செய்து கொண்டார். இது நெப்போலியனின் மற்ருெரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். அதன்படி கத்தோலிக்க மதத்தை ஃபிரெஞ்சு அரசு ஏற்றுக் கொண்டது; இருப்பினும் மற்றப் பிரிவினருக்கு சமயப் பொறை (Toleration) காட்டப்பட்டது; உயர்பதவிகளே வகித்த குருமார்கள் நெப்போலியனுல் நியமிக்கப்படுவார்கள்; அதை போப் ஏற்றுக் கொண்டு, அவர்களுக்குப் பதவி ஏற்பு நிகழ்ச்சியை நடத்திவைப் பார்; ஃபிரெஞ்சுப் அரசாங்கத்தின் முன் ஒப்புதலுடன், கீழ்நிலே யிலிருந்த குருமார்களேப் போப் நியமிப்பார்; குருமார்கள் அனே வரும் தங்கள் சம்பளங்களே அரசாங்கத்திடமிருந்தே பெறுவார்கள்: பதவியை ஏற்றுக்கொள்ளும் போது அரசுக்கு விசுவாசமானவர் களாக இருப்பதாக குருமார்கள் உறுதிகூற வேண்டும்; ஃபிரெஞ்சுக் குடியரசும் நெப்போலியனும் வான்புகழ் பெற்று வாழவேண்டு மென குருமார்கள் இறைவழிபாடு செய்ய வேண்டும் என்று அதில் கூறப்பட்டது. இதனுல் நெப்போலியன் திருச்சபையைத் தன் அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவந்தார் என்பதில் ஐயமில்லே. 1804ஆம் ஆண்டு நெப்போலியன் பேரரசராக முடிசூட்டிக் கொண்டபோது, போப் தலேநகரத்திற்கு வந்திருந்து முடிசூட்டு விழாவை நடத்திவைத்தார் என்பது ஏற்கெனவே கூறப்பட்டது.

இவை தவிர வேறு பல நடவடிக்கைகளேயும் நெப்போலியன் மேற்கொண்டார். புரட்சியின்போது நாட்டைவிட்டு வெளியேறி யிருந்த ஆயிரக்கணக்கான பிரபுக்கள் நாடு திரும்ப தக்க முயற்சி களே மேற்கொண்டார். வேளாண்மை வளர்ச்சியுற அரசு உதவி செய்தது. நாட்டிற்குச் சிறந்த தொண்டு செய்தவர்கள் கௌரவப் பட்டங்கள் (Region of Honour) கொடுக்கப்பட்டார்கள். இத் தகைய நடவடிக்கைகளால் தான் சிறந்த போர்வீரன் மட்டுமின்றி மக்கள் நலன் பேணும் ஆட்சியாளர் என்பதையும் நெப்போலியன் நிரூபித்தார்.

# 11. இங்கிலாந்தில் தொழிற் புரட்சி

## 1. விளக்கம்

*1760—1830*ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பொருள்களை உற்பத்தி செய்யும் முறைகளில் மிகப்பெரிய மாறுதல்கள் இங்கிலாந்து நாட்டில் ஏற்பட்டன. கைகளால் செய்யப்பட்டவை இயந்திரங்களால் செய்யப்பட்டன. வீடுகளில் செய்யப்பட்டவை தொழிற்சாலைகளில் செய்யப்பட்டன. உற்பத்தி பன்மடங்கு பெருகியது. தொழில் துறையில் ஏற்பட்ட இத்தகைய மாறுதல் 'தொழிற்புரட்சி' (Industrial Revolution) என்று அழைக்கப்படுகின்றது. இப்புரட்சி முதலில் இங்கிலாந்தில் நடைபெற்றது. பின்னர் மற்ற நாடுகளுக்கும் பரவியது.

## 2. காரணங்கள்

தொழிற்புரட்சி முதலில் இங்கிலாந்தில் ஏன் நடைபெற்றது? அதற்குப் பல சாதகமான சூழ்நிலைகள் அந் நாட்டில்தான் காணப்பட்டன.

பதினெட்டாம் நூற்றுண்டின் இடைப்பகுதிக்குள், இங்கிலாந்து மிகப்பெரிய குடியேற்ற ஆதிக்க நாடாக (colonial power) மாறி விட்டது. வட அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, ஆசியா முதலான கண்டங்களில் இங்கிலாந்து குடியேற்றங்களை அமைத்துக் கொண்டிருந்தது. தனக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் பெறவும், மற்றவற்றை விற்கவும் அந்நாட்டிற்கு வசதி இருந்தது.

வாணிகத் துறையில் மற்ற எல்லா ஐரோப்பிய நாடுகளையும் விட அந்நாடு முன்னணியில் இருந்தது. அதனல் செல்வ வளம் மிகுந்த நாடாக அது விளங்கியது. பெருஞ் செல்வந்தர்கள் தங்களிடம் தேங்கிக் கிடந்த செல்வத்தை உள்நாட்டிலும் அயல் நாட்டிலும் முதலீடு செய்ய ஆயத்தமாய் இருந்தனர்.

இங்கிலாந்தின் புவியியல் அமைப்பு வாணிக வளர்ச்சிக்கு ஏற்றதாய் உள்ளது. ஐரோப்பாக் கண்டத்தினின்று பிரிந்து தனித் தீவுக் கூட்டமாக அந்நாடு உள்ளது. லண்டன், பிரைடன், சவுத் ஹேம்டன், கார்டிஃப் முதலான இயற்கைத் துறைமுகங்கள் பல இருப்பதால் கடல்வழிப் போக்குவரத்துக்கும் வசதிகள் உள்ளன.

அதோடு தன் பாதுகாப்புக்கும் பெரும் கப்பற்படையை வைத்துக் கொள்ள வாய்ப்பு உள்ளது.

இங்கிலாந்து இயற்கைச் செல்வங்கள் மிகுந்த நாடாகும். நியுகாசல் (Newcastle) நிலக்கரிச் சுரங்கங்கள் உலகப் புகழ் பெற்றவையாகும். மற்றும் இரும்பு முதலான தாதுக்களும் அந் நாட்டில் மிகுதியாகக் கிடைக்கின்றன.

மேலும் 'தேவையே கண்டுபிடிப்புகளின் தாய்'[1] என்பதுபோல உள் நாட்டிலும் அயல் நாட்டிலும் பல பொருள்கள் பெரும் எண்ணிக்கையில் தேவைப்பட்டன. எனவே அவற்றை உற்பத்தி செய்யவேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டது. எல்லாவற்றையும் விட இங்கிலாந்தில் தான் பல புதிய கண்டுபிடிப்புகள் செய்யப் பட்டன. ஆகவே, தொழிற்புரட்சி நடைபெறுவதற்கான சாதக மான சூழ்நிலை அந் நாட்டில் உருவாயிற்று.

## 3. தொழிற்புரட்சியின் போக்கு

இங்கிலாந்தில் நடைபெற்ற தொழிற் புரட்சியின் விளைவாகப் பல துறைகளில் மாறுதல்கள் ஏற்பட்டன. என்றாலும் முதலில் குறிப்பாக நெசவுத் தொழில், சுரங்கத் தொழில், இரும்புத் தொழில், போக்குவரத்துச் சாதனங்கள் முதலான துறைகளில் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டது.

நெசவுத் தொழில் : பழங்காலந்தொட்டு இங்கிலாந்தில் கைராட்டையால் நூல் நூற்று ஆடை நெய்யும் பழக்கம் இருந்து வந்தது. இந்த முறையினால் தேவைக்கு ஏற்றதை விரைவாகச் செய்ய முடியவில்லை. ஆகவே, 1738ஆம் ஆண்டு லங்காஷயர் நகரத்தைச் சேர்ந்த ஜான் கே (John Kay) என்ற நெசவாளி 'பறக்கும் நாடா'வைக் (Flying Shuttle) கண்டுபிடித்தார். இதனால் நெய்யும் தொழிலின் (Weaving) வேகம் விரைவுபடுத்தப்பட்டது. அதற்கேற்ப நூல் நூற்கும் (Spinning) முறையும் விரைவுபடுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அதிகமான தேவைக்கு ஏற்ப நூல் நூற்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக 1764-ல் ஜேம்ஸ் ஹார்கிரீவ்ஸ் (James Hargreaves) என்ற மற்றொரு லங்காஷயர் நெசவாளி 'நூற்கும் ஜென்னி' (Spinning Jenny) என்ற கருவியை அமைத்தார். அதில் அவர் ஒரே சமயத்தில் எட்டுக் கதிர்களைப்

[1] Necessits is the mother of invention.

பொருத்தி நூல் நூற்க வழிவகுத்தார். அதனால் நூலின் உற்பத்தி எட்டு மடங்கு பெருகியது. இது பின்னர் எண்பது மடங்காகப் பெருக்கப்பட்டது.

நூல் நூற்கும் முறையிலேயே அடுத்த சில ஆண்டுகளில் பல முன்னேற்றங்கள் செய்யப்பட்டன. 1771ஆம் ஆண்டு ரிச்சர்ட் ஆர்க்ரைட் (Richard Arkwright) என்ற நெசவாளி 'நூற்கும் சட்டம்' (Spinning Frame) என்ற கருவியை அமைத்தார். இது 'நீர்ச் சட்டம்' (Water Frame) என்றும் அழைக்கப்பட்டது. ஏனெனில், நூற்கப்பட்ட நூலிழைகள் இரண்டு உருளைகளின் நடுவே செலுத்தப்பட்டு, நீரில் அழுத்தப்பட்டு, உறுதிப்படுத்தப் பட்டன. இழைகள் உறுதியாக இருந்தனவென்றாலும் அவை தடிப்பாக இருந்தன; ஒரே சீராக இல்லை.

உறுதியான மற்றும் மெல்லிய இழைகளை உற்பத்தி செய்வதற் கான ஒரு பொறியை 1779ஆம் ஆண்டு சாமுவேல் கிராம்டன் (Samual Crompton) கண்டுபிடித்தார். அது 'மியூல்' (Mule) என்று அழைக்கப்பட்டது. முதன் முதலில் நீராவியின் சக்தியால் இயக்கப் பட்டு இக்கருவியின் மூலம் நூல் நூற்கப்பட்டது. [1765ஆம் ஆண்டே ஜேம்ஸ் வாட் (James Watt), நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தார் என்பதை இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டும்]. இதனால் சிறந்த நூலின் உற்பத்தி பல மடங்கு அதிகரித்தது.

உற்பத்தி செய்யப்பட்ட நூலை நெய்யவேண்டுமல்லவா? எனவே அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியாக 1785ஆம் ஆண்டு எட்மண்ட் கார்ட்ரைட் (Edmund Cartwright) என்பவர் 'விசைத்தறி'யைக் (Power loom) கண்டுபிடித்தார். இது நீராவி இயந்திரத்தால் இயக்கப்பட்டது. ஆகவே. நெய்யும் தொழிலிலும் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டது. இங்ஙனம் வீடுகளில், கைகளால் நூற்கப்பட்டு நெய்யப்பட்ட ஆடை, ஆலை களில் இயந்திரங்களால் செய்யப்பட்டது. நெசவுத் தொழிலில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது. இங்கிலாந்தில், லங்காஷய ரும் மான்செஸ்டரும் பஞ்சாலைகள் மிகுந்த இடங்களாக மாறின.

சுரங்கத் தொழில் : இரும்புத் தாதுவும் நிலக்கரியும் பூமிக் கடியில் புதையுண்டு காணப்படுகின்றன. சுரங்கங்கள் வெட்டி அவற்றை வெளியே எடுக்கவேண்டும். இதில் பல ஆபத்துகள் இருந்தன. சுரங்கத்தை வெட்டும்போது சுரங்கம் முழுவதும் தண்ணீர் (ஊற்று நீர்) வந்துவிடும். இந்தத் தொல்லையை நீக்க நியுகாமென் (Newcomen) என்பவர் குழாய்கள் மூலம் தண்ணீரை

வெளியேற்றும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். ஜேம்ஸ் வாட்டின் நீராவி இயந்திரத்தைக் கொண்டு சுரங்கங்களிலிருந்து நிலக்கரி மற்றும் இரும்புத்தாதுக்கள் மிக எளிதாக வெளியே கொண்டுவரப்பட்டன. டேவி (Davy) என்பவர் கண்டுபிடித்த 'காப்பு விளக்கு' (Safty Lamp), சுரங்கங்களிலும் அணையாமல் ஒளியைத் தந்தது. அதனால் சுரங்கத் தொழிலிலும் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் காணப்பட்டது.

இரும்புத் தொழில்: பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இரும்பை உருக்க மரக்கட்டைகளே பயன்படுத்தப்பட்டன. அதனால் காடுகள் பெருமளவு அழிக்கப்பட்டன. போதிய மரக் கட்டைகளும் கிடைக்கவில்லை. இத்தகைய நேரத்தில் இரும்பை உருக்க மரக்கட்டைகளுக்குப் பதிலாக நிலக்கரியைப் பயன்படுத்த லாம் என ஆப்ரஹாம் டார்பி (Abraham Darby) என்பவர் நிரூபித்துக்காட்டினார். இதையடுத்து இரும்பு உருக்கு ஆலைகள் நிலக்கரி வயல்களுக்கு அருகிலேயே அமைக்கப்பட்டன. அதனால் எளிமையாகவும் சிக்கனமாகவும் இரும்பு உருக்கப்பட்டது.

மிக விரைவில் இரும்பை உருக்கும் முறைகள் அபிவிருத்திகள் செய்யப்பட்டன. இரும்பு உருக்கப்பட்ட உலைகளில் அதிகமான காற்றைச் செலுத்தினால். மிக விரைவில் வெப்பம் அதிகரித்து இரும்பு உருகியது. அதற்கேற்ப 'ஊது உலைகள்' (Blast Furnaces) அமைக்கப்பட்டன. இங்ஙனம் உலைகளுக்கு உள்ளே காற்றைச் செலுத்துவதற்கு ஜேம்ஸ் வாட்டின் நீராவி இயந்திரம் பயன் படுத்தப்பட்டது. இரும்பு உற்பத்தி பலமடங்கு அதிகரிக்கப் பட்டது. வாழ்க்கையின் பல தேவைகளுக்கு மக்கள் இரும்பைப் பயன் படுத்தத் தொடங்கினர்.

போக்குவரத்துச் சாதனங்கள்: மேலே குறிப்பிடப்பட்ட பல துறைகளில் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டு வந்ததால் போக்கு வரத்துத் துறையிலும் அதற்கு ஏற்ற மாறுதல்களைக் கொண்டுவர வேண்டிய நிலைமை உருவாகியது. ஆகவே, சாலைகளை அமைத்தல், கால்வாய்களை வெட்டுதல், புகைவண்டிப் பாதைகளைப் போடுதல் போன்றவற்றில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பதினெட்டாம் நூற்றாண்டுக்கு முன்னர் இங்கிலாந்தில் நல்ல சாலைகள் இல்லை. தொழிற்புரட்சி தொடங்கிய பின்னர் சாலைகளை நல்ல முறையில் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அதனால் ஏற்பட்ட செலவை ஈடு செய்ய ஆங்காங்கு சாலைகளில் 'சுங்கச்சாவடிகள்' (Toll Gates) அமைக்கப்பட்டுச்

சாலைகளைப் பயன்படுத்துபவரிடம் சுங்கம் திரட்டப்பட்டது. இச் சாலைகள் அனைத்தும் மண்சாலைகளாகவே இருந்தன. பத்தொன்பதாம் நூற்றுண்டின தொடக்கத்தில் மெட்காஃப் (Metcalf) மற்றும் டெல்ஃபோர்ட் (Telford) ஆகியவர்கள் பல புதிய சாலைகளை அமைத்தனர். பின்னர் மெகாடம் (Macadam) என்பவர் மண் சாலையின்மீது சல்லிக் கற்களைப் பரப்பி, பிறகு மண்ணைப் பரப்பி உருளையினுல் சாலையை உறுதிப்படுத்தும் முறையைக் கண்டு பிடித்தார். இங்ஙனம் அமைக்கப்பட்ட சாலைகள் எல்லாக் காலத்திலும் சுமை வண்டிகள் செல்வதற்கு ஏற்றவையாக இருந்தன. இது சாலை அமைப்பு முறையில் ஒரு பெரும் புரட்சியாகும்.

நிலக்கரி, இரும்புப்பொருள்கள் மற்றும் பலவிதமானபொருள்களை ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு எடுத்துச் செல்லக் கால்வாய்களும் பெருமளவு பயன்பட்டன. பிரிட்ஜ்வாடர்(Bridge-water) என்ற பிரபுவுக்கு ஓர்ஸ்லி (Worsley) நிலக்கரிச்சுரங்கங்கள் சொந்தமாய் இருந்தன. அந்த இடத்தையும் மான்செஸ்டரையும் (Manchester) இணைக்க, ஜேம்ஸ் பிரிண்ட்லே (James Brindley) என்ற பொறியியல் நிபுணரின் உதவியுடன் பிரிட்ஜ்வாடர் ஒரு கால்வாயை வெட்டினுர். அதனுல் சிறிய படகுகளில் நிலக்கரியைக் கடத்திச் செல்வதற்கான செலவு பாதியாகக் குறைந்தது. இதைக் கண்ட மற்றச் சுரங்கச் சொந்தக்காரர்களும் நதிகளையும் நகரங்களையும் இணைத்துப் பல கால்வாய்களை வெட்டத் தொடங்கினர். இந்தக் கால்வாய் வெட்டும் இயக்கம் இங்கிலாந்தின் தொழில் வளர்ச்சியில் மிக முக்கியமான மாறுதலை ஏற்படுத்தியது.

ஜேம்ஸ் வாட் கண்டுபிடித்த நீராவி இயந்திரம் தொழிற் புரட்சியின் வேகத்தை அதிகரிக்கப் பலவிதத்தில் பயன்பட்டது என்பது ஏற்கெனவே கூறப்பட்டது. குறிப்பாகப் போக்குவரத்துத் துறையில் எல்லா முறைகளிலும் நீராவி இயந்திரம் பயன்பட்டது. சாலைகளில் வண்டிகளை இழுத்துச் செல்லவும், கால்வாய்களில் படகுகளைச் செலுத்தவும், தண்டவாளங்களின் மீது வண்டிகளை ஓட்டவும் நீராவியின் சக்தி பெருமளவு பயன்பட்டது. 1815ஆம் ஆண்டு ஜார்ஜ் ஸ்டீவென்சன் (George Stephenson), நீராவி இரயில் இயந்திரத்தை அமைத்துத் தண்டவாளங்களின் மீது ஓட்டிக் காண்பித்தார். பின்னர் ஸ்டாக்டன்-டார்லிங்டன் (Stockton-Darlington) ஆகிய நகரங்களுக்கு இடையே தன் இரயில் வண்டியில் பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்று புகைவண்டிப் பயணத்தைத் தொடங்கி வைத்தார். அதை மேலும் அபிவிருத்தி செய்து 'ராக்கெட்' (Rocket) என்ற நீராவி இரயில் இயந்திரத்தைக் கட்டினுர். அந்த இயந்திரத்தோடு வேறு சில பெட்டிகளையும்

இணைத்து, 1829ஆம் ஆண்டு, லீவர்பூலுக்கும் மான்செஸ்டருக்கும் இடையே இருந்த எழுபது மைல் தூரத்திற்குப் பாதுகாப்பாக ஸ்டீவென்சன் ஓட்டிக் காண்பித்தார். இதைத் தொடர்ந்து பல புகைவண்டிப் பாதைகள் போடப்பட்டன. போக்குவரத்துத் துறையில் புரட்சிகரமான முன்னேற்றம் ஏற்பட்டது.

4. விளைவுகள்

இங்கிலாந்தில் நடைபெற்ற தொழிற் புரட்சியினுல் மக்களின் பொருளாதார, சமூக, அரசியல் துறைகளில் மிகப் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன.

இல்லங்களில் செய்யப்பட்ட பொருள்கள் தொழிற்சாலைகளில் செய்யப்பட்டன. பொருள்களின் உற்பத்தி பலமடங்கு பெருகியது. இங்கிலாந்து உலகத்தின் தொழிற்சாலையாக (Workshop of the World) மாறியது. உலகம் முழுவதும் இருந்த தன் குடியேற்ற நாடுகளில் பொருள்களை விற்றுச் செல்வம் மிகுந்த நாடாக அது உருவாயிற்று.

பொருள்கள் வீடுகளில் செய்யப்பட்டபோது மக்கள் கிராமப் புறங்களில் வாழ்ந்தார்கள். அப்பொழுது அவர்கள் வேளாண் மைத் தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர். ஆனுல், நகரங்களில் தொழிற்சாலைகள் தோன்றியதால் பெரும்பாலான தொழிலாளர் கள் நகரங்களில் சென்று குடியேறிவிட்டனர். அதனுல் வேளாண் மைத் தொழில் புறக்கணிக்கப்பட்டது. எனவே, உணவுப் பொருள்களுக்கு இங்கிலாந்து மற்றக் குடியேற்ற நாடுகளை நம்பி வாழவேண்டியதாயிற்று. எனினும், இதை ஈடுசெய்யும் முறையில் இங்கிலாந்தில் 'வேளாண்மைப் புரட்சி' நடைபெற்றது.

மான்செஸ்டர், பர்மிங்ஹாம், நியுகாசல், ஷெஃப்பீல்ட் போன்ற தொழில் நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் சென்று குடியேறினர். தொழிற்சாலைகளில் அவர்கள் குறிப்பிட்ட சில வேலைகளை மட்டுமே செய்தனர். அதாவது மக்களுக்கு இடையே 'வேலைப்பகுப்புமுறை' (Division of Labour) முறை நடைமுறைக்கு வந்தது. அதே நேரத்தில் தொழிலதிபர்கள் தொழிலாளர்களிடம் கடும் உழைப்பைப் பிழிந்தெடுத்து மிகக் குறைந்த ஊதியத்தையே வழங்கியதால் தொழிலாளர்கள் ஒன்றுபட்டுத் தொழிற்சங்க இயக் கங்களை (Trade Union Movements) நடத்த முற்பட்டனர். அதே போலக் கூட்டுறவு இயக்கமும் (Co-operative Movements) வலுப் பெற்றது. எனினும், இங்கிலாந்து 'தனி உடைமை' (Capitalism) முதலாளித்துவப்பொருளாதார அமைப்பின் தாயகமாகவே மாறி

விட்டது. இந்த அமைப்பின் கொடுமையை எதிர்த்துதான் 1848ஆம் ஆண்டு கார்ல் மார்க்ஸ் (Karl Marx) மற்றும் எங்கெல்ஸ் (Engels) என்ற ஜெர்மானிய அறிஞர்கள் 'பொதுவுடைமை அறிக்கையை, (Communist Manifesto) வெளியிட்டனர். இது பொதுவுடைமைக் கொள்கைகளை விளக்கிக் கூறியது. எனவே, பொதுவுடைமைத் தத்துவத்தின் தோற்றத்திற்கு மூலகாரணமாக விளங்கியது தொழிற்புரட்சி எனலாம்.

தொழிற்சாலைகளில் ஆண் தொழிலாளர்கள் மட்டுமின்றிப் பெண்கள் மற்றும் சிறுவர் சிறுமியரும் உழைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஒரு நாளைக்குப் பதினாறு மணி நேரம் அவர்கள் வேலை செய்ய வேண்டியதாயிற்று. மேலும் அவர்கள் இயந்திரங்களோடு போதிய பாதுகாப்பு இல்லாமல் வேலை செய்ததால் பல விபத்துகள் நடைபெற்றன. இவற்றை எல்லாம் தடுக்கப் பின்னர் பாராளுமன்றம் பல 'தொழிற்சாலைச் சட்டங்களை' (Factory Acts) இயற்றியது. தொழிலாளர்களின் நலன்களைக் காக்க இங்கிலாந்தில் தொழிற்கட்சி (Labour Party) தோன்றியது.

# 12. வேளாண்மைப் புரட்சி

## 1. விளக்கம்

பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியிலிருந்து இங்கிலாந்தின் தொழில்துறையில் ஒரு பெரும் புரட்சி நடைபெற்றது. அங்ஙனமே அந்நாட்டின் வேளாண்மைத் துறையிலும் அத்தகைய புரட்சி ஏற்பட்டது. வேளாண்மைத் துறையில் புகுத்தப்பட்ட நவீன முறைகளினுலும், கால்நடைகளின் உற்பத்தி, வளர்ப்பு முறை மாறுதல்களினுலும் இங்கிலாந்தின் உணவு தானியங்கள், பால், இறைச்சி முதலானவற்றின் உற்பத்தி பலமடங்கு அதிகரித்தது. இத்தகைய ஒரு பெரும் மாறுதலுக்கு 'வேளாண்மைப் புரட்சி' (Agrarian or Agricultural Revolution) என்று பெயர்.

## 2. நடைமுறையில் இருந்த வேளாண்மை முறைகள்

வேளாண்மைத் துறையில் பதினெட்டாம் நூற்றுண்டின் இடைப்பகுதி வரையில், மிகப்பழைய முறைகளே பின்பற்றப்பட்டு வந்தன. அவற்றுள் 'திறந்த புலன் திட்டம்' (Open Field System) என்பது முக்கியமானது ஆகும். இம்முறையில் குடியானவர்களின் நிலங்கள் வேலியிடப்படவில்லை. நிலங்கள் பல துண்டுகளாக இருந்தன. ஒவ்வொரு குடியானவனும் தனக்கு இருந்த நிலத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஒரு பிரிவில் கோதுமையும் மற்றொரு பிரிவில் பார்லி அல்லது வேறு ஏதாவது ஒரு பயிரையும், மூன்ருவது பிரிவைத் தரிசாகவும் விட்டுவிடுவது வழக்கம். அவ்வாறு ஓரிரு ஆண்டுகள் நிலத்தைத் தரிசாக விட்டால்தான் அந்த நிலம் இழந்த சாரத்தை மீண்டும் பெறும் என்று கருதப்பட்டது. இங்ஙனம் மூன்று பிரிவுகளாகப் பிரித்துப் பயிரிடப்பட்டதால் இது 'மூவயல் முறை' (Three Field System) என்றும் அழைக்கப்பட்டது.

இந்த முறையில் பல குறைபாடுகள் இருந்தன. நிலங்கள் வேலியிடப்படாததால் பெரும்பாலும் மிருகங்களினுல் பயிர்கள் அழிக்கப்பட்டன. குடியானவர்களுக்கு இடையே நிலத்தகராறுகளும் அடிக்கடி ஏற்பட்டன. விளைச்சலுக்கு ஏற்ற நிலத்தில் மூன்றில் ஒரு பகுதி தரிசாகவே விடப்பட்டது. அதனுல் தேவைக்கு ஏற்ப உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. கால்நடைகளுக்கு வேண்டிய தீவனமும் மிகக் குறைவாகவே

கிடைத்தது. பால் மற்றும் இறைச்சி உற்பத்தி பாதிக்கப்பட்டது. கால்நடைகளும் பல நோய்களைப் பெற்றன. அவற்றின் பாலையும் இறைச்சியையும் சாப்பிட்ட மக்களின் உடல்நலம் கெட்டுவிட்டது.

எனினும், இம்முறையில் சில நன்மைகளும் இருந்தன. குடும்பத்தில் இருந்த அனைவரும் வேலை வாய்ப்பைப் பெற்றார்கள். வேளாண்மை வேலை இல்லாத காலத்தில் நூல் நூற்றல், ஆடை நெய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டனர். அமைதியான கிராம வாழ்க்கையை அவர்கள் நடத்தினார்கள். இருப்பினும், நன்மைகளைவிடத் தீமைகளே இம்முறையில் அதிகமாக இருந்தன. மேலும் கீழ்க்காணும் காரணங்களினால் இம்முறையை விடுத்து, வேளாண்மைத் துறையில் புதிய முறைகளைக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

3. காரணங்கள்

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் தொழில் துறையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. தொழிற் புரட்சியினால் நகர்ப்புறங்களில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. கிராமப் புறங்களில் வாழ்ந்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள் தொழிற்சாலைகளில் வேலைசெய்ய நகரங்களுக்குச் சென்று விட்டார்கள். அதனால் வேளாண்மைத் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டது. உணவுப் பொருள் உற்பத்தி மிகவும் குறைந்துவிட்டது. அதே நேரத்தில் இங்கிலாந்தின் மக்கள் தொகை பெருகிக்கொண்டே வந்தது. உணவுத் தானிய உற்பத்தி குறைந்தது; ஆனால், தேவை அதிகரித்தது. எனவே, உணவுத் தானியங்களின் விலைகள் உயர்ந்து கொண்டே சென்றன. மேலும் தொழிற்புரட்சியினால் பெரும் முதலாளிகள் (Capitalists) தோன்றினார்கள். அவர்கள் நகரங்களுக்கு இடம்பெயர்ந்து சென்ற குடியானவர்களிடமிருந்து பரந்த நிலப்பரப்பை விலைக்கு வாங்கினார்கள். அந்நிலப்பரப்பில் நவீன வேளாண்மை முறைகளைக் கடைப்பிடிப்பது எளிதாயிற்று.

4. வேளாண்மைப் புரட்சியின் போக்கு

நவீன வேளாண்மை முறைகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவே அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

ஜெத்ரோ டல் (Jethro Tull) என்ற நிலக்கிழார் கி.பி. 1702-ல் விதைக்கும் இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்தார். அது 'டிரில்' (Drill) என்று அழைக்கப்பட்டது. இதைக் கொண்டு ஒரே சீரான இடைவெளி நிலப்பரப்பில் விதைக்க முடிந்தது. விதைத்த விதைகளை அந்த இயந்திரமே மண்ணைத் தள்ளி மூடியது. சிறந்த ஊட்ட

முள்ள விதைகளையே பயன்படுத்த வேண்டுமென்றும், பயிர்கள் ஓரளவு வளர்ந்த பிறகு களை எடுத்து, மண்ணைக் கொத்திவிட்டால் அங்குக் காற்றுப் புகுந்து பயிர்கள் நன்கு வளரும் என்றும் வலியுறுத்திக் கூறினுர். இந்த முறைகளை மற்றவர்களும் பின்பற்றத் தொடங்கினுர்கள். அதனுல் நல்ல பலனைக் கண்டார்கள்.

டவுன்ஷெண்ட் பிரபு (Lord Townshend) முதலாம் ஜார்ஜ் மன்னரின் அமைச்சராக இருந்து பின்னர் அரசியலிலிருந்து விலகித் தன்னுடைய பரந்த நார்ஃபோக் (Norfolk) பண்ணையில் குடியேறி வேளாண்மைத் துறையில் பல புதிய முறைகளைக் கையாண்டு பெரும் வெற்றியைப் பெற்றுர். மூவயல் முறைக்குப் பதிலாக 'மாற்றுப் பயிர் முறை' அல்லது 'நாற்பயிர் சுழற்சி முறை'யைப் (Four Course Rotation of Crops) பின்பற்றலாம் என அவர் கூறினுர். அதன்படி ஒவ்வொரு குடியானவனும் நிலத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிப்பதற்குப் பதிலாக நான்கு பிரிவுகளாகப் பிரித்து அதில் கோதுமை, டர்னிப், பார்லி, கிளோவர் போன்ற பயிர்களை மாற்றி மாற்றிப் பயிரிடலாம் என்று தெரிவித்தார். தன்னுடைய பண்ணையில் அங்ஙனம் பயிரிட்டு விளைச்சலைப் பெருக்கிக் காட்டினுர். இந்த முறையினுல் சிறிது நிலம்கூட தரிசாக விடப்படவில்லை. மேலும் 'டர்னிப்' போன்ற கிழங்கு வகைகளைப் பயிரிடுவதால் நிலம் இழந்த சாரத்தை மீண்டும் பெற்றது என்று நிரூபித்துக் காட்டினுர். அதனுல் அவர் 'டர்னிப் டவுன்ஷெண்ட்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார். இவருடைய முறைகளினுல் உணவுப் பொருள்களின் உற்பத்தியும் மற்றும் மாடுகளுக்கு வேண்டிய தீவனத்தின் உற்பத்தியும் பெருக்கப்பட்டது.

சர் ஆர்தர் யங் (Sir Arthr Young) என்ற பிரபு நவீன வேளாண்மை முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தைப் பத்திரிகைகள் மூலமாக வலியுறுத்திப் பிரசாரம் செய்தார். அவரே 'வேளாண்மைக் குறிப்புகளை' (The Annals of Agriculture) என்ற பத்திரிகையை நடத்தி வேளாண்மைத் தொடர்புள்ள செய்திகளை வெளியிட்டார். பல குடியானவர் சங்கங்களை இவர் தொடங்கினுர். அதிகமான உணவுப் பொருள் உற்பத்தி செய்த குடியானவர்களுக்குப் பரிசுகளை வழங்கினுர். இவருடைய பணிகளைப் போற்றுகின்ற முறையில், மூன்றும் ஜார்ஜ் மன்னரின் தலைமை அமைச்சராக இருந்த இளைய பிட் (William Pitt the Younger) 'வேளாண்மை வாரியம்' (Board of Agriculture) ஒன்றை அமைத்து அதற்கு ஆர்தர் யங்கைச் செயலராக நியமித்தார். யங் நிலங்களுக்கு வேலியிட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினுர். அவருடைய கருத்தை நடைமுறைப் படுத்துவதற்காகப் பாராளுமன்றம் பல 'நில அடைப்புச் சட்டங்களை'

(Enclosure Acts) இயற்றியது. ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் குடியானவர்களால் வேலியிடப்பட்டது. வேளாண்மைத் துறைக்கு ஆர்தர் யங் செய்த பணி போற்றுதற்கு உரியதாகும்.

மூன்றும் ஜார்ஜ் (George III) மன்னரும் வேளாண்மை வளர்ச்சியில் ஆழ்ந்த அக்கறை காட்டினர். தன்னுடைய விண்ட்ஸர் (Windsor) பண்ணையில் நவீன முறைகளைப் பயன்படுத்தி உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்கினர். எனவே, மக்கள் அவரைக் 'குடியானவர் ஜார்ஜ்' (Farmer George) என்று சிறப்பித்து அழைத்தனர். அவர் வேளாண்மை தொடர்பான கட்டுரைகளைப் பத்திரிகைகளில் எழுதிக் குடியானவர்களை ஊக்குவித்தார். 'மன்னர் எவ்வழி மக்கள் அவ்வழி' என்பதுபோல, மக்கள் மன்னரைப் பின் பற்றி, நவீன முறைகளைப் பயன்படுத்தி, உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்கினர்கள்.

வேளாண்மைத் துறையில் புதிய முறைகள் பின்பற்றப்பட்டது போலவே கால் நடைகளின் உற்பத்தி மற்றும் வளர்ப்பு முறைகளில் புதிய வழிகள் கையாளப்பட்டன.

ராபர்ட் பேக்வெல் (Robert Bakewell) என்பவர் ஆடுகளின் உற்பத்திபற்றிப் பல ஆராய்ச்சிகளை நடத்தி இறுதியில் 'புதிய லெஸ்டர்' (New Leicester) வகை ஆடுகளை உற்பத்திசெய்தார். இந்த வகை ஆடுகளின் எடை (weight) அதற்கு முன்னிருந்த ஆடுகளின் எடையைவிட மூன்று மடங்கு அதிகமாக இருந்தது. அதில் அதிகமான ரோமமும் (wool) இருந்தது. பால் மற்றும் வெண்ணெய் அதிகமாகக் கிடைத்தது. அதேபோல் புதிய வகைக் காளை மாடுகளையும் உற்பத்தி செய்தார். அவருடைய பண்ணையில் இருந்த 'Two pounder' என்ற ஆட்டையும் 'Two penny' என்ற காளை மாட்டையும் பார்க்கப் பல நாடுகளிலிருந்து மக்கள் வந்தார்கள் என்று கூறப்படுகிறது.

சார்லஸ் காலிங் (Charles Colling) என்பவர் டர்ஹாம் (Durham) நகரத்தைச் சேர்ந்தவர். அவர் மற்றொரு புதிய வகை மாடுகளை உற்பத்தி செய்தார். அவை 'டர்ஹாம் குட்டைக் கொம்பு மாடுகள்' (Durham Shorthorns) என்று அழைக்கப்பட்டன. இந்த வகைப் பசுக்கள் மிக அதிகமான பாலையும் இறைச்சியையும் தந்தன. இத்தகைய புதியவகை ஆடு மாடுகளினால் விளைச்சல் நிலங்களுக்குத் தேவையான சாண உரம் அதிகமான அளவு கிடைத்தது. இறைச்சி உற்பத்தியின் அளவை அதிகரிக்கப் புதிய வகைப் பன்றிகள் உருவாக்கப்பட்டன. புதிய குதிரை

வகைகள் தோற்றுவிக்கப்பட்டு நிலங்களில் உழுவதற்கும் போக்கு வரத்துக்கும் பயன்படுத்தப்பட்டன.

இங்ஙனம் ஒவ்வொரு பிரிவிலும் அபிவிருத்திகள் செய்யப் பட்டதால் வேளாண்மைத் துறையில் புரட்சிகரமான முன் னேற்றம் ஏற்பட்டது.

**5. விளைவுகள்**

மக்களின் தேவைக்கு ஏற்ப உணவுத் தானியங்களின் உற்பத்தி வியக்கத்தக்க அளவு பெருக்கப்பட்டது. பால், வெண்ணெய், இறைச்சி, ரோமம் முதலானவற்றின் உற்பத்தியும் பல மடங்கு அதிகரித்தது. நிலஅடைப்பு முறையினால் விளைச்சலுக்கு ஏற்ற எல்லா நிலமும் வேலியிடப்பட்டுப் பயிர் செய்யப்பட்டன. துண்டு நிலங்கள் ஒழிந்து பெரும் பண்ணைகள் தோன்றின. அவற்றில் நவீன வேளாண்மை முறைகளைப் பயன்படுத்துவது எளிதாயிற்று. தொழில் துறையைப் போலவே வேளாண்மையும் பெரும் முதலாளி களால் நடத்தப்பட்டது. இங்கிலாந்து உணவுப் பொருள்களுக்குக் குடியேற்ற நாடுகளை நம்பியிராமல் உணவுத் துறையில் தன்னிறைவு பெற்றது.

எனினும், வேளாண்மைப் புரட்சியினால் சில தீமைகளும் ஏற் பட்டன. வேலியிடும் முறை சிறு குடியானவர்களால் செய்ய முடியவில்லை. அவர்கள் தங்கள் நிலங்களை விற்றுவிட்டு நகரங் களுக்குச் சென்று குடியேறிவிட்டார்கள். அதனால், கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டன. நகரங்களிலும் அனைவருக்கும் வேலை கிடைக்கவில்லை. திக்கற்ற ஏழைகள் அதிகரித்தனர். இந்த வேலை யில்லாப் பிரச்சினையை அரசு சமாளிக்க வேண்டியதாயிற்று. என்றாலும், வேளாண்மைப் புரட்சியினால் இங்கிலாந்தின் பொருளாதார அமைப்பு வலுவடைந்தது என்பதில் ஐயமில்லை.

# IV. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தேசிய இயக்கங்கள்

## 13. இத்தாலிய இணைப்பு

### 1. இணைப்புக்கு முன் இத்தாலியின் நிலை

இத்தாலி என்பது நிலவியல் அடிப்படையில் கூறப்படும் ஒரு கூற்றே தவிர அப்படி ஒரு நாடு கிடையாது என்று ஆஸ்திரியாவின் தலைமை அமைச்சர் மெட்டர்நிக் (Metternich) கூறினர்.[1] அதாவது இத்தாலியத் தீபகற்பத்தில் பல நாடுகள் சிதறுண்டு கிடக்கின்றன என்ற பொருளில் அங்ஙனம் அவர் கூறினர். அவர் கூறியதுபோல 1815ஆம் ஆண்டு கூடிய வியன்ன மாநாடு (Congress of Vienna) இத்தாலியை கீழ்க்கண்டவாறு பிரித்துவிட்டிருந்தது.

(i) வெனிஷியாவும் (Venetia), லம்பார்டியும் (Lombardy) ஆஸ்திரியாவின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. (ii) பார்மா (Parma), மொடின (Modena), டஸ்கனி (Tuacuny) ஆகியவை ஆஸ்திரியச் செல்வாக்கு உட்பட்ட ஹாப்ஸ்பர்க் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களால் ஆட்சி செய்யப்பட்டன. (iii) இத்தாலியின் வடமேற்கே இருந்த லூக்காவும் (Lucca), தெற்கேயிருந்த இரு சிசிலிகளின் அரசு (Kingdom of Two Sicilies) என்று அழைக்கப் பட்ட சிசிலியும்-நேபிள்சும், ஸ்பானிய பூர்பன் வமிச அரச குடும்பத்தினரால் ஆட்சி செய்யப்பட்டன. (iv) ரோமக்ன (Romagna), மார்செஸ் (Marches), அம்பிரியா (Umbria) மற்றும் ரோம் (Rome) ஆகிய நான்கும் போப்பினல் ஆட்சி செய்யப் பட்டன. எனவே, அவை போப்பாட்சி மாநிலங்கள் (The Papal State) என்று சொல்லப்பட்டன. (v) சார்டினியா (Sardinia), பீட்மண்ட் (Piedmont), நீஸ் (Nice), சவாய் (Savoy) ஆகியவை

[1] Italy is a 'mere geographical expression' – Metternich.


இத்தாலிய இணைப்பு
சவாய்
பீட்மாண்ட்
லம்பார்டி
1859
வெனிஸியா
1866
வெனிஸ்
மிலான்
பார்மா
1860
மொதீனா
1860
ரோமக்னா
1860
லூக்கா
1860
நீஸ்
ஜெனேவா
டஸ்கனி
1860
மார்செஸ்
1860
அம்பிரியா
1860
ரோம்
1870
ஏட்ரியாடிக் கடல்
ஆஸ்திரியா
கார்சிகா
(ஃபிரான்ஸ்)
சார்டினியா
டிர்ரெனியன் கடல்
நேபிள்ஸ்
சிசிலிகளின்
1860
மர்சாலா
மெசினா
கரிபால்டியின் வழி

இத்தாலிய அரச வமிச அரசர்களால் ஆட்சி செய்யப்பட்டன. இவை நான்கும் ஓர் அரசரின் கீழ்க் கொண்டு வரப்பட்டிருந்தன, இணைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது இரண்டாம் விக்டர் இமானுவேல் (Victor Emmanuel II, *1849—1878*) இவற்றின் அரசராக இருந்தார்.

2. இத்தாலிய இணைப்பின் சிற்பிகள்

இங்ஙனம் சிதறுண்டு கிடந்த இத்தாலியை இணைத்த பெருமை ஜோசஃப் மாஸினி (Joseph Mazzini), இரண்டாம் விக்டர் இம்மானுவேல் (Victor Emmanuel II), கவுன்ட் கவுர் (Count Cavour) மற்றும் கரிபால்டி (Garibaldi) ஆகியவர்களைச் சேரும்.

ஜோசஃப் மாஸினி (1805—1872) : 'இத்தாலிய இணைப்பின் தீர்க்கதரிசி' என்றும், 'இத்தாலிய இணைப்பின் ஆன்மா' என்றும் மாஸினி பாராட்டப்படுகின்றார். இவர் இளம் வயது முதலே இத்தாலியின் அடிமைத்தனத்தை எண்ணி வருந்தினார். இத்தாலி அடிமைப்பட்டிருந்தது என்பதற்காக இவர் எப்பொழுதும் கருஞ் சட்டையை அணிந்துகொண்டு தன் துயரத்தை வெளிப்படுத்தினார், இத்தாலிய இணைப்புக்காக உணர்ச்சி மிக்க கட்டுரைகளை எழுதி இலட்சக்கணக்கான இளைஞர்களின் நாட்டுப் பற்றைத் தட்டி யெழுப்பினார். முதலில் கார்பொனாரி (Carbonari) என்ற ரகசிய சங்கத்தில் சேர்ந்திருந்தார்[1] அது எதிர்பார்த்த அளவு வெற்றி கரமாகச் செயல்படவில்லை. இத்தாலியை எப்படியும் ஒன்றாக இணைத்து அதை ஒரு குடியரசாக மாற்றவேண்டும் என்பது அவருடைய கொள்கையாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள *1831*ஆம் ஆண்டு 'இளம் இத்தாலி' (Young Italy)என்ற இயக்கத்தைத் தொடங்கினார். ஆயிரக்கணக்கான இத்தாலியர் அதில் சேர்ந்தனர். இத்தாலியருக்கு குடிமையும், அவர்களுக்கென ஒரு நாடும், கொடியும் இல்லாதிருந்ததை மாஸினி சுட்டிக் காட்டினார். பண்டைய ரோமானியப் பேரரசின் பெருமையை நினைவுப்படுத்தி இத்தாலியரை எழுச்சியுறச் செய்தார். 'முதல் ரோம் சீசர்களுக்கு உரியதாக இருந்தது; இரண்டாவது ரோம் போப்புக்களுக்குரியதாக இருந்தது; மூன்றாவது ரோம் இத்தாலிய மக்களுக்குரியதாக இருக்கவேண்டும்' என்று மாஸினி கூறினார். அவர் தொடங்கிய 'இளம் இத்தாலி' இயக்கம் வலிமைமிக்க இயக்கமாக மாறிவந்தது. இத்தாலியை அயலவரின் ஆட்சியி லிருந்து விடுவித்தல், நாட்டிற்காக எந்தத் தியாகத்தையும்

[1] இது ஒரு தொழிலாளர்களின் சங்கமாகும். அயலவர் ஆட்சியைக் கலகத் தினாலும புரட்சியினாலும் கவிழ்த்துவிடவேண்டும் என்பது இதன் நோக்க மாகும்.

செய்தல். இத்தாலியின் பழம் பெருமையை மக்கள் உணருமாறு செய்தல். இத்தாலியை ஒரு குடியரசாக மாற்றுதல் ஆகியவை அந்தஇயக்கத்தின் நோக்கங்களாகும். நாற்பதுவயதுக்குஉட்பட்ட அனைவரும் இந்த இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் இதில் சேர்ந்தனர். முதலாவதாக ஆஸ்தியரை இத்தாலியினின்று விரட்டியடிக்க வேண்டும் என்பது இதன் முக்கிய நோக்கமாகும். அதற்கேற்ப 1848ஆம் ஆண்டு ஐரோப்பாவில் புரட்சிகள் நடைபெற்றன. புரட்சி வெனிஷியாவிலும் லம்பார்டியிலும் நடைபெற்றது. ஆனால், அது தோல்வியடைந்தது. புரட்சியாளர்களுக்கு சார்டினியா அரசர் சார்லஸ் ஆல்பர்ட் (Charles Albert) உதவி செய்தார். எனினும், அவர் கஸ்டோசா (Custozza) மற்றும் நொவாரா (Novara)ஆகியஇடங்களில் ஆஸ்திரியப் படைகளால்தோற்கடிக்கப் பட்டார். அரசர் பதவி துறந்தார். அவருடைய மகன் இரண்டாம் விக்டர் இம்மானுவேல் சார்டினிய அரசரானார். 1849ஆம் ஆண்டு மாஸினியின் தலைமையில் ரோம் நகரில் ஒரு புரட்சி நடைபெற்றது. அதையடுத்து அங்குக் குடியரசு நிறுவப்பட்டது. கத்தோலிக்கர் களின் நல்லெண்ணத்தைப்பெற விரும்பிய மூன்றும்நெப்போலியன் ஃபிரெஞ்சுப் படைகளை அனுப்பி, குடியரசைக் கலைத்துவிட்டு, போப்பை மீண்டும் ஆட்சியில் அமர்த்தினர். மாஸினி செய்த முதல் முயற்சி, இங்ஙனம் தோல்வியடைந்தது.

**இரண்டாம் விக்டர் இம்மானுவேல் (1849—1878):** இத்தாலிய இணைப்பை இறுதி வரை இருந்து செய்து முடித்தவர் இவர். பீட்மாண்டையும் சார்டினியாவையும் ஆட்சி செய்த இம்மானுவேல் மக்கள் விருப்பத்திற்கு இணங்க ஆட்சி செய்தார். நாட்டுப்பற்று மிக்க இத்தாலியர்கள், இம்மானுவேல் இணைந்த இத்தாலியின் அரசராக இருக்கவேண்டுமென விரும்பினர். அதைப் புரிந்துகொண்ட இம்மானுவேல், தனது தலைமை அமைச்சர் கவூரின் ஆலோசனைப்படி நடந்துகொண்டார். இத்தாலிய இணைப்புக்காக அரசரும் அமைச்சரும் இணைந்து செயல்பட்டனர்.

**கவுன்ட் கவூர் (1810—1861):** டூரின் (Turin) நகரத்தில் பிறந்த கவூர் முறையான கல்வியையும், இராணுவப் பயிற்சியையும் இளமையில் பெற்றார். 1850ஆம் ஆண்டு அவர் அமைச்சர் ஆவதற்கு முன்னர் 'ரிசார்ஜிமென்டோ' (Risorgimento) என்ற பத்திரிகையை நடத்திவந்தார். பின்னர் விக்டர் இம்மானுவேலின் தலைமை அமைச்சராக இருந்தபோது மிகச் சிறந்த அரசியல் திறம் மிக்கவராக விளங்கினார். இத்தாலியை இணைக்க இவர் பேராவல் கொண்டார். எனினும், இத்தாலியில் குடியரசை அமைக்க அவர்

விரும்பவில்லை. இம்மானுவேலின் தலைமையில் 'வரம்புடை முடியாட்சியை' (Limited Monarchy) நிறுவவே விரும்பினர். செயல் வீரரான கவூர் ஆஸ்திரியாவின் பிடியிலிருந்து இத்தாலியை விடுவிக்கவும், புர்பன் வமிச அரசரை விரட்டியடிக்கவும், இத்தாலியை இணைக்கவும் புரட்சிகளையும் வெட்டிப் பேச்சுகளையும் அவர் செய்யத்தயாராய் இல்லை. அவற்றை எப்படிச் செய்வது என்ற ராஜ தந்திரம் அவருக்குத் தெரிந்திருந்தது. 'எனக்கு உரையாற்றத் தெரியாது, ஆனால் இத்தாலியை உருவாக்கத் தெரியும்' என்று ஒரு முறை கவூர் உணர்ச்சியுடன் கூறினர்.

கரிபால்டி (1807—1882): மாஸினியின் தொண்டரான கரிபால்டி 'இத்தாலிய இணைப்பின் போர்வாள்' என்று அழைக்கப்படுகிறார். *1833*-ல் செய்யப்பட்ட ஒரு புரட்சியில் பங்கு பெற்றதால் இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆகவே, அவர் இத்தாலியிலிருந்து தென் அமெரிக்காவிற்குத் தப்பியோடினர். அங்குக் 'கொரில்லாப் போர்முறை' என்னும் மறைந்திருந்து தாக்கும் போர்முறையில் நன்கு தேர்ச்சி பெற்று நாடு திரும்பினர். *1848*ஆம் ஆண்டு நடந்த புரட்சியில் கலந்துகொண்டார். அதே ஆண்டு 'செஞ்சட்டை வீரர் படை'யை (The Red Shirts) அவர் நிறுவினர். நாட்டுப்பற்று மிக்க இளைஞர் அனைவரும் இதில் சேர்ந்தனர். கரிபால்டியின் தலைமையில் ஆயிரக்கணக்கான செஞ்சட்டை வீரர்கள் புர்பன் அரசரை விரட்டியடித்து அரசைக் கைப்பற்ற ஜெனேவாவிலிருந்து (Genoa) சிசிலித் தீவிற்குச் சென்றனர். அத் தீவைக் கைப்பற்றிக்கொண்ட பின்னர் தென் இத்தாலி வழியாக நேபிள்சுக்குச் சென்றனர். அப்பொழுது அவர்கள்,

> 'இத்தாலியை விட்டுப் போய்விடு,
> தாயகத்தைவிட்டுப் போய்விடு,
> இத்தாலியைவிட்டுப் போய்விடு,
> ஓ அயலவனே போய்விடு'

என்ற எழுச்சிமிக்க கரிபால்டியின் பாடலைப் பாடிக்கொண்டு சென்றனர்.[1] இந்த நான்கு பெரியோர்கள் மேற்கொண்ட முயற்சிகளாலும் கீழ்க்காணும் நிகழ்ச்சிகளில் அவர்கள் பங்குகொண்டதாலும் இத்தாலி இணைந்தது.

### 3. இத்தாலி இணைதல்

கிரிமியப் போர் (The Crimean War, 1854—1856): 'ஐரோப்பாவின் நோயாளி' என்று சொல்லப்பட்ட துருக்கியின்மீது ஆதிக்கம்

[1] *Vide* Pandit Jawaharlal Nehru, Gilmpses of World History (1948), p. 509.

செலுத்த ரஷ்யா விரும்பியது. அதைத் தடுக்க இங்கிலாந்தும் ஃபிரான்சும் துருக்கிக்கு உதவின. அதன் விளைவாக நடைபெற்றது தான் கிரிமியப்போர். இப்போருக்கும் இத்தாலிக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. எனினும், அரசியல் திறம்மிக்க கவூரும், விக்டர் இம்மானுவேலும் இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்கும் ஆதரவாக சார்டினியப் படைகளைப் போரிட அனுப்பினர். இங்ஙனம் செய்தால் ஆஸ்திரியாவிற்கு எதிராக இத்தாலி போரிடின் இங்கிலாந்தும் ஃபிரான்சும் அந்நாட்டிற்கு உதவிசெய்யும் என்று எதிர் பார்க்கப்பட்டது. போரின்போது இத்தாலிய வீரர்கள் செபாஸ்ட்போல் (Sebastopol) என்ற நகரத்தைக் கைப்பற்றவேண்டிய தறுவாயில் சேற்றிலே புரண்டு போரிட வேண்டியதாயிற்று. இதுபற்றி இத்தாலிய வீரர் ஒருவர் 'இந்தச் சேற்றைக் கொண்டுதான் இத்தாலி உருவாக்கப்படவேண்டும்', என்று கூறினர். போருக்குப் பின்னர் பாரிஸ் மாநாட்டில் கலந்து கொள்ள கவூர் அழைக்கப்பட்டிருந்தார். அந்த மாநாட்டில் இத்தாலியின் பிளவுபட்ட நிலையை அவர் விவரித்துக் கூறினர். குறிப்பாக ஆஸ்திரியாவிற்கு உட்பட்ட நிலப் பகுதிகளில் அடக்கு முறை ஆட்சி நடத்தப்பட்டு வருவதை கவூர் விளக்கினர். அவருடைய விளக்கத்தைக் கேட்டறிந்த ஐரோப்பிய அரசுகள், குறிப்பாக இங்கிலாந்தும், ஃபிரான்சும் இத்தாலியின் இணைப்புக்கு உதவி செய்யத் துணிந்தன. பின்னர் 1858ஆம் ஆண்டு ஃபிரான்சின் பேரரசர் மூன்றும் நெப்போலியனுடன் (Napolean III) பிளாம்பியர்ஸ் (Plombieres) என்னுமிடத்தில் கவூர் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். அதன்படி (1) ஆஸ்திரியாவிற்கும் இத்தாலிக்கும் போர் ஏற்பட்டால் பீட்மாண்ட்-சார்டினிய அரசுக்கு உதவி செய்ய ஃபிரான்ஸ் ஒத்துக் கொண்டது. (2) ஆஸ்திரியாவிடமிருந்து வெனிஷியாவையும் லம்பார்டியையும் கைப்பற்றிக்கொள்ள, பீட்மாண்ட்-சார்டினியா அரசுக்குத் துணை செய்ய ஃபிரான்ஸ் உடன்பட்டது. (3) அதற்கு ஈடாக ஃபிரான்சுக்கு நீஸ், சவாய் ஆகிய பகுதிகளைத் தருவதாக பீட்மாண்ட்-சார்டினியா அரசு ஒத்துக்கொண்டது.

**ஆஸ்திரியா-சார்டினியப் போர் (1859—1860) :** ஃபிரான்சின் உதவியைப் பெறப்போகின்றோம் என்ற நம்பிக்கையில் சார்டினியா தன் படைபலத்தைப் பெருக்கியது. இதை ஆஸ்திரியா கடுமையாக எதிர்த்தது ; படைகளைக் கலைக்கச் சொன்னது. சார்டினியா மறுத்ததால் 1859ஆம் ஆண்டு ஆஸ்திரிய-சார்டினியப் போர் தொடங்கியது. ஏற்கெனவே ஒப்பந்தம் செய்து கொண்டபடி ஃபிரான்ஸ் சார்டினியாவின் உதவிக்கு வந்தது. இந்த இருபடைகளும் சேர்ந்து ஆஸ்திரியப் படைகளை, மாஜெண்டா (Magenta), சால்ஃபெரினோ (Solferino) ஆகிய இடங்களில் தோற்கடித்தன.

லம்பார்டி முழுவதும் வீழ்ந்தது. இந்த நிலையில் திடீரெனப் போரை நிறுத்திவிட்டு, ஃபிரான்சின் மூன்றும் நெப்போலியன் ஆஸ்திரியாவுடன் வில்லா ஃபிராங்கா (Villa Franca) தற்காலிக போர் நிறுத்த ஏற்பாட்டைச் செய்துகொண்டார். சார்டினியா அரசின் ஒப்புதலைப் பெறுமலேயே நெப்போலியன் இந்த ஏற்பாட்டைச் செய்துகொண்டார். தொடர்ந்து போர் நடைபெற்றால் ஆஸ்திரியாவின் உதவிக்குப் பிரஷ்யா வரும் என நெப்போலியன் அஞ்சினர். அதுமட்டுமின்றி இத்தாலி முழுவதும் இணைந்துவிட்டால் அது வலிமை பொருந்திய நாடாக மாறிவிடுமென அவர் அச்சம் கொண்டார். அவர் செய்துகொண்ட உடன்படிக்கையின் படி லம்பார்டியை சார்டினியாவும், வெனிஷியாவை ஆஸ்திரியாவும் வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. சார்டினியா அரசைக் கலந்தாலோசிக்காமல் இவ்வுடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டதால் நீஸ் மற்றும் சவாய் ஆகிய பகுதிகளைத் தனக்கு வேண்டுமென ஃபிரான்ஸ் வற்புறுத்தவில்லை. ஃபிரான்ஸ் செய்த துரோகச் செயலைக் கவூர் கடுமையாக எதிர்த்தார். எனினும் அவருடைய அரசர் விக்டர் இம்மானுவேல் இதை ஏற்றுக்கொண்டார். இத்தாலியின் இணைப்பு முயற்சியில் முதல் கட்டமாக லம்பார்டி சார்டினியாவுடன் சேர்ந்தது.

பார்மா, மொதினு, டஸ்கனி ஆகியவற்றின் மக்கள், ஆஸ்திரிய-சார்டினியப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, தங்களை ஆட்சி செய்துவந்த ஆஸ்திரிய அரச குலத்தைச் சார்ந்த தமது ஆட்சியாளர்களை விரட்டியடித்துவிட்டார்கள். போருக்குப் பின்னர், அப் பகுதிகளில் பொது வாக்கெடுப்பு (Referendum) நடத்தப்பட்டது. அவை சார்டினிய அரசுடன் சேர விரும்பின. அதன்படி அவை சார்டினிய அரசுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டன. அதேபோலப் போப்பாட்சி மாநிலமான ரோமக்னுவும் சார்டினியாவுடன் இணைந்தது. இது இணைப்பு இயக்கத்தின் இரண்டாவது கட்டமாகும். இதற்கு உதவியாக ஃபிரான்ஸ் பணிபுரிந்ததால் நீஸ் மற்றும் சவாய் ஃபிரான்சுக்குக் கொடுக்கப்பட்டன.

**கரிபால்டியின் வெற்றிகள் (1860):** இரு சிசிலிகளின் அரசு என்று சொல்லப்பட்ட சிசிலியும் நேபிள்சும் இணைவதற்கான வாய்ப்பு 1860-ல் ஏற்பட்டது. அங்கு ஸ்பானிய பூர்பன் வமிசத்தைச் சேர்ந்த இரண்டாம் ஃபிரான்சிஸ் (Francis II) ஆட்சி செய்துவந்தார். அந்த ஆண்டு அவருக்கெதிராக மக்கள் கிளர்ச்சி செய்தனர். கரிபால்டி ஜெனேவா (Genoa) என்ற நகரத்திலிருந்து ஆயிரக்கணக்கான செஞ்சட்டை வீரர்களுடன் சிசிலிக்குப் புறப்பட்

டார். அவர்கள் வீர உணர்ச்சியுடன் எழுச்சிமிக்க பாடல்களைப் பாடிக்கொண்டு கடல்வழியாகச் சென்றனர். சார்டினிய அரசரும் கவூரும் கரிபால்டிக்கு மறைமுகமாக உதவி செய்தனர். கரிபால்டியும் அவருடைய வீரர்களும் மிக எளிதாக சிசிலித் தீவைக் கைப் பற்றிக்கொண்டார்கள். கரிபால்டி தன்னை அத்தீவின் சர்வாதிகாரியாக நியமித்துக்கொண்டார். அத் தீவில் மக்களின் ஆதரவு அவருக்கு இருந்தது. பின்னர் அங்கிருந்து தென் இத்தாலிய தீபகற்பத்தின் வழியாகத் தலைநகரமான நேபிள்சைக் கைப்பற்றிக் கொள்ளப் படையுடன் கரிபால்டி சென்றார். வழி நெடுகிலும் மக்கள் அவரை அன்புடன் வரவேற்றனர். இரண்டாம் ஃபிரான்சிஸின் படைகள் செஞ்சட்டை வீரர்களைக் கண்டு போரிடாமல் அஞ்சி ஓடின. தலைநகரம் கைப்பற்றப்பட்டது. இரண்டாம் ஃபிரான்சிஸ் நாட்டைவிட்டு ஓடினார். மக்கள் கரிபால்டியைப் புகழ்ந்து பாராட்டினர். தான் வென்ற இரு சிசிலிகளின் அரசைக் கரிபால்டி இரண்டாம் விக்டர் இம்மானுவேலிடம் ஒப்படைத்து விட்டார். தன் வாழ்க்கையின் இறுதிக் காலத்தை அமைதியாகக் கழிப்பதற்காகக் காப்ரிரா (Caprera) என்ற தீவுக்குச் சென்றுவிட்டார். பதவியையும் அதிகாரத்தையும் சிறிதும் விரும்பாமல் இத்தாலிய இணைப்பையே தன் நோக்கமாகக் கொண்ட கரிபால்டியின் மனப்பக்குவம் போற்றுதற்கு உரியதாகும். இரு சிசிலிகளின் அரசு சார்டினிய அரசுடன் இணைந்தது மூன்றாவது முக்கியக் கட்டமாகும்.

அதே ஆண்டு (1860) இரண்டாம் விக்டர் இம்மானுவேலின் அமைச்சராகிய கவூர் போப்பாட்சி மாநிலங்களான அம்பிரியா, மார்செஸ் (அங்கோனா) ஆகியவற்றைக் கைப்பற்றிக்கொள்ள படையுடன் சென்றார். கவூரின் படைகளை எதிர்த்து வந்த போப்பின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. பின்னர் நடைபெற்ற பொது வாக்கெடுப்பில் அம் மாநிலங்கள் இம்மானுவேலின் அரசுடன் இணைய விருப்பம் தெரிவித்தன. எனவே, அவை சார்டினிய அரசுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டன. லூக்காவும் 1860-ல் இணைந்தது. ரோம் மற்றும் வெனிஷியாவைத் தவிர இத்தாலி முழுவதும் இணைந்துவிட்டது. இது இணைப்பு இயக்கத்தின் நான்காவது நிலையாகும்.

1861ஆம் ஆண்டு இத்தாலியின் தலைநகரம் டூரின்னுக்கு (Turin) மாற்றப்பட்டது. இணைந்த இத்தாலிய மன்னராக இரண்டாம் விக்டர் இம்மானுவேல் அறிவிக்கப்பட்டார்.

**வெனிஷியா இத்தாலியுடன் இணைதல் (1866):** பிரஷ்யா 1866-ல் ஆஸ்திரியாவுடன் போர் தொடுத்தது. பிரஷ்யா (ஜெர்

மனி) இணைவதற்காக பிஸ்மார்க் (Bismarck) இந்தப் போரை மேற்கொண்டார். போரில் இத்தாலி பிரஷ்யாவிற்கு உதவி செய்தால் ஆஸ்திரியாவிடமிருந்து வெனிஷியாவைக் கைப்பற்றி இத்தாலிக்குத் தருவதாக பிஸ்மார்க் உறுதியளித்தார்; எனவே, இத்தாலி பிரஷ்யாவிற்கு உதவி செய்தது. ஆஸ்திரியப் படைகள் சடோவா (Sadowa) என்ற இடத்தில் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டன. பிரஷ்யாவின் பெருவெற்றிக்குப் பின்னர் வெனிஷியாவை இத்தாலிக்குக் கொடுத்துவிடும்படி ஆஸ்திரியாவிற்கு ஆணையிடப்பட்டது. இது இணைப்பின் ஐந்தாவது நிலையாகும்.

**ரோம் இணைதல் (1870):** இத்தாலியின் எல்லாப் பகுதிகளும் இணைக்கப்பட்டன. ரோம் மட்டும் போப்பின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அவருக்கு உதவியாக ஃபிரெஞ்சுப் படைகள் அந்த நகரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. ரோமைத் தாக்கினால், ஃபிரான்ஸைப் போருக்கு இழுப்பது போலாகும். எனவே, இரண்டாம் விக்டர் இம்மானுவேல் பொறுமையாகக் காத்திருந்தார். 1870-ல் ஃபிரான்சுக்கும் பிரஷ்யாவுக்கும் போர் மூண்டது. அப்பொழுது ஃபிரான்ஸ் தன் படைகளை ரோம் நகரத்திலிருந்து விலக்கிக்கொண்டது. இந்த அருமையான வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு இம்மானுவேல் படைகளுடன் சென்று ரோமைக் கைப்பற்றிக்கொண்டார். முற்றும் இணைந்த இத்தாலியின் தலைநகரமாக ரோம் ஆக்கப்பட்டது. பண்டைய ரோமானியப்பேரரசின் தலைநகரமாக விளங்கிய ரோம் மீண்டும் தன் இழந்த பெருமையைப் பெற்றது.

# 14. ஜெர்மானிய இணைப்பு

## 1. இணைப்புக்கு முன் ஜெர்மனியின் நிலை

ஒரே மொழியையும் ஏறத்தாழ ஒரே விதமான கலாசாரத்தையும் பெற்றிருந்த ஜெர்மானிய மாநிலங்கள் இடைக்காலம் முதற்கொண்டே பிளவுபட்டிருந்தன. அவை சுமார் 360 அரசுகளாகப் பிரிந்திருந்தன. ஆஸ்திரியாவின் அரசர், புனித ரோமானியப் பேரரசர் என்ற முறையில் ஜெர்மானிய அரசுகளுக்குத் தலைமைதாங்கிவந்தார். அவற்றுள் பிரஷ்யா வலிமை பொருந்திய நாடாக விளங்கியது. மாவீரன் நெப்போலியன் காலத்தில் ஜெர்மானிய அரசுகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 300-ல் இருந்து 40ஆகக் குறைக்கப்பட்டது. புனித ரோமானியப் பேரரசு அழிக்கப்பட்டது. அதனுடன் ஜெர்மனியில் ஆஸ்திரியாவிற்கு இருந்த தலைமைப் பொறுப்பும் அழிந்தது. பிரஷ்யாவின் வலிமை ஒடுக்கப்பட்டது. அதே நேரத்தில் நெப்போலியன் அயல் நாட்டவர் என்ற காரணத்தால் ஜெர்மானியரிடம் தேசிய உணர்ச்சி வளர ஏதுவாயிற்று. ஜெர்மானியர் அல்லாதவரின் ஆட்சியை அகற்றத் தங்களிடமிருந்த வேறுபாடுகளை மறந்து செயல்படத் தொடங்கினர். இதுவே தேசிய நாடுகளின் போர் (Battle of the Nations, *1813*) ஏற்படக் காரணமாய் இருந்தது. இங்ஙனம் ஜெர்மனியில் தேசிய உணர்ச்சி வளர நெப்போலியன் வழிவகுத்தார். நெப்போலியனின் தோல்விக்குப் பிறகு, வியன்னாவில் கூடிய மாநாடு (Congress of Vienna, *1815*) ஜெர்மனியில் 39 அரசுகளையும் நான்கு சுதந்திர நகரங்களையும் கொண்ட கூட்டமைப்பை அமைத்தது. அந்த அமைப்புக்கு ஆஸ்திரியா தலைமை ஏற்றது. ஆஸ்திரியாவின் தலைமைஅமைச்சர் மெட்டர்நிக் (Metternich) ஜெர்மானிய இணைப்புக்கும் பெருந்தடையாய் இருந்தார். இந்த 39 அரசுகளில் ஹனோவர் ஒன்றாகும். இது இங்கிலாந்தின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அதேபோல மற்றொரு ஜெர்மானிய அரசு ஹால்ஸ்டைன் (Holstein), டென்மார்க்கின் ஆட்சியின் கீழ் விடப்பட்டிருந்தது. எனவே, ஆஸ்திரியா, இங்கிலாந்து, டென்மார்க் ஆகிய நாடுகள் ஜெர்மனியின் இணைப்புக்குத் தடைகளாக இருந்தன. 39 ஜெர்மானிய அரசுகளில் மிகப்பெரியது பிரஷ்யா ஆகும். அந்த அரசுகளையெல்லாம் இணைக்கப் பிரஷ்யா தகுந்த வாய்ப்புகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

**2. இணைப்புக்குச் சாதகமான நிகழ்ச்சிகள்**

1819ஆம்ஆண்டு பிரஷ்யாவின் முயற்சியால், பல ஜெர்மானிய அரசுகள் 'சால்ஃபரைன்' (Zollverein) என்ற வணிக அமைப்பை ஏற்படுத்திக்கொண்டன. 1837ஆம் ஆண்டுக்குள் பெரும்பாலான ஜெர்மானிய அரசுகள் இந்த அமைப்பில் சேர்ந்தன. இதில் சேர்ந்த அரசுகளின் வணிகப் பொருள்கள்மீது காப்புவரி அல்லது சுங்க வரி போடாமல் வாணிக வளர்ச்சிக்கு வழிவகுக்கப்பட்டது. இதனால் உள்நாட்டு வாணிகம் மட்டுமின்றி அயல்நாட்டு வாணிகமும் வளர்ச்சியுற்றது. இந்தப் பொருளாதார இணைப்பு அரசியல் இணைப்புக்கு வழிவகுத்தது. பிரஷ்யாவை மற்ற ஜெர்மானிய அரசுகள், தங்கள் தலைமை அரசாக ஏற்றுக்கொண்டன.

1848-ல் ஐரோப்பாவின் பல பகுதிகளில் புரட்சி நடைபெற்றது. ஆஸ்திரியாவில் நடைபெற்ற புரட்சியினால் மெட்டர்நிக் நாட்டைவிட்டு ஓடிவிட்டார். இந்நிகழ்ச்சி ஜெர்மனியில் புரட்சி தோன்றுவதற்கு ஊக்கத்தை அளித்தது. முதலில் புரட்சியாளர்கள் வரம்பிற்குட்பட்ட ஆட்சியினை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தினைக் கொண்டிருந்தனர். அதன் விளைவாகப் பலஇடங்களில் அரசியலமைப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. பிரஷ்யாவிலும் அரசியலமைப்புத் திட்டத்தை ஒட்டிய ஆட்சியொன்று அமைக்கப்பட்டது. அதன் பின்னர் புரட்சியாளர்கள் ஜெர்மனி முழுவதையும் ஒன்றுசேர்த்து அதற்கு ஓர் அரசியலமைப்புத் திட்டத்தை ஏற்படுத்த விரும்பினார்கள். அதன் விளைவாக ஃபிராங்க்ஃபர்ட் (Frankfort) என்ற இடத்தில் தேசிய மக்கள் சபை கூடியது. அச்சபை, அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சியை நடத்தும்படி பிரஷ்யாவின் மன்னர் நான்காம் ஃபிரெடிரிக் வில்லியமை (Frederick William IV, 1840-61) கேட்டுக்கொண்டது. ஆனால், அதற்கு வில்லியம் உடன்படவில்லை. புரட்சியாளர்களும் மக்களும் ஏமாற்றமடைந்தனர். எனினும், இந்த ஃபிராங்க்ஃபர்ட் பாராளுமன்றத்தின் முயற்சி ஜெர்மானிய இணைப்பு இயக்கத்தின் குறிப்பிடத்தக்க கட்டமாகும்.

**3. ஜெர்மனியை இணைத்த பெரியார்கள்**

ஜெர்மனி முழுமையாக இணைய மூன்று தலைவர்கள் அரும்பாடுபட்டார்கள். அவர்கள் பிரஷ்யாவின் மன்னர் முதலாம் வில்லியம் (William I, 1861—1888), அவருடைய திறமை மிக்க தலைமை அமைச்சர் ஆட்டோ வான் பிஸ்மார்க் (Otto Von Bismarck) மற்றும் படைத்தலைவர் வான் மால்ட்கே (Von Moltke) ஆகியவர் ஆவர்.

முதலாம் வில்லியம் நாட்டுப்பற்று மிக்க மன்னராவார். சில துறைகளில் முற்போக்குக் கொள்கைகளை உடையவர். ஒரு சிறந்த

போர்வீரனுக்குரிய எல்லாக் குணங்களும் அவரிடம் இருந்தன. எவரிடம் எந்தப் பணியை ஒப்படைக்கவேண்டுமென்பதை அவர் அறிந்திருந்தார். அதனுல்தான் பிஸ்மார்க்கைத் தன்னுடைய தலைமை அமைச்சராக நியமித்துக்கொண்டார். அதே நேரத்தில் முடியாட்சியில்தான் அவர் நம்பிக்கைகொண்டார். ஆஸ்திரியாவின் பிடியிலிருந்து பிரஷ்யா விடுபடவேண்டுமென்ருல் வலிமைமிக்க படை தேவை என்பதை அவர் அறிந்திருந்தார். 'ஜெர்மனியை ஆளவிரும்பும் எவரும் அதை வெல்லவேண்டும்; அதை அழகிய சொற்றொடர்களைப் பேசுவதால் செய்யமுடியாது,' என்று அவர் கூறினுர். தன் நாட்டை இணைக்க எந்த நடவடிக்கையையும் எடுக்க அவர் ஆயத்தமாக இருந்தார்.

பிஸ்மார்க் (*1815—1898*) பெரிய பணக்காரக் குடும்பமொன்றில் பொமரேனியா (Pomerania) என்ற பகுதியில் பிறந்தார். பல்கலைக் கழகப் படிப்புக்குப் பின்னர் பிரஷ்ய அரசாங்கத்தில் அலுவலராகப் பணிபுரிந்தார். பின்னர் அரசியலில் பங்கு கொண்டார். எதையும் போரினுல்தான் சாதிக்கமுடியும் என இவர் நம்பினுர். பணக்கார வகுப்பே நாட்டை ஆட்சி செய்யவேண்டும்; முடியாட்சியே சிறந்த அரசியல் அமைப்பு; மக்களுக்கு அதிகமான உரிமைகள் தரக்கூடாது, என்று இவர் கருதினுர். பிரஷ்யச் சட்டமன்றத்தில் இவர் உறுப்பினராக இருந்தபோது தன்கொள்கைகளை விளக்கியிருந்தார். முதலாம் வில்லியம் 1862ஆம் ஆண்டு தன்னுடைய தலைமை அமைச்சராக பிஸ்மார்க்கை நியமித்துக்கொண்டார். தலைமை அமைச்சரானவுடன் 'நம் காலத்தின் பெரிய பிரச்சினைகள், பேச்சுகளாலும் பெரும்பான்மையினரின் தீர்மானங்களாலும் தீர்க்கப்படப்போவதில்லை. அவை போரினுல்தான் தீர்க்கப்படும்,' என்று பிஸ்மார்க் கூறினுர்.[1] அவருடைய கொள்கைகள் எப்படிப்பட்டவையாயினும், ஜெர்மனியை இணைப்பதில் இவர் பெரும் பங்கு கொண்டார் என்பதில் ஐயமில்லை. எனவே, அவர் 'இரும்பு மனிதர்' (Iron Man) என்றும் 'நவீன ஜெர்மனியை உருவாக்கியவர்' (The Maker of Modern Germany) என்றும் பாராட்டப்படுகின்ருர்.

படைத்தலைவர் வான் மால்ட்கே பிரஷ்யாவிற்குத்தேவையான மிகப்பெரிய படையை உருவாக்கினுர். முதலாம் நெப்போலியனின் வீழ்ச்சிக்குப்பின் அத்தகையசிறந்த படைத்தளபதி ஐரோப்பாவில் இருந்ததில்லை. தம் மன்னர், மற்றும் தலைமை அமைச்சரின் விருப்பப்படி செயல்பட்டு ஜெர்மனியின் இணைப்புக்கு உதவினுர். மூவரும் இணைந்து மூன்று பெரிய போர்களைச்செய்ததால் ஜெர்மனி முழுமையாக இணைந்தது.

[1] 'The great questions of the time will be decided not by speeches and resolutions of majorities, but by iron and blood'.

4. மூன்று போர்கள்

ஜெர்மானிய அரசுகளை இணைக்க மூன்று போர்களைப் பிரஷ்யா மேற்கொண்டது. டென்மார்க், ஆஸ்திரியா மற்றும் ஃபிரான்சுடன் அப்போர்கள் செய்யப்பட்டன.

(i) டென்மார்க்குடன் போர் (1864): ஏற்கெனவே குறிப்பிட்டபடி ஹால்ஸ்டைன் என்ற ஜெர்மானிய அரசு டென்மார்க்கின் ஆட்சியின்கீழ் இருந்தது. அந்த அரசோடு ஷ்லெஸ்விக் (Schleswig) என்ற பகுதியும் டென்மார்க்கின் ஆட்சியில் இருந்தது. இப் பகுதியிலும் ஜெர்மானியர்கள் அதிகமாக வாழ்ந்து வந்தனர். இலண்டன் உடன்படிக்கைப்படி (Treaty of London, 1852) இந்த இரு பகுதிகளையும் டென்மார்க்கின் அரசர் ஆட்சி செய்யலாமே தவிர அவற்றை டென்மார்க்குடன் இணைத்துக்கொள்ளக்கூடாது எனக் கூறப்பட்டிருந்தது. ஆனால், 1863ஆம் ஆண்டு டென்மார்க்கின் அரசர் ஷ்லெஸ்விக்கைத் தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டார். ஹால்ஸ்டைன்மீது தனக்கிருந்த அதிகாரத்தைத் தீவிரப்படுத்தினார். இவ்விரு பகுதிகளில் வாழ்ந்துவந்த ஜெர்மானியர் இதை எதிர்த்தனர். பிஸ்மார்க் இதை நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு டென்மார்க்குடன் போர் தொடுத்தார். தன் உதவிக்கு ஆஸ்திரியப் படைகளையும் பிஸ்மார்க் அழைத்திருந்தார். பிரஷ்யப் படைகளும் ஆஸ்திரியப் படைகளும் 1864-ல் மிகச் சுலபமாக ஹால்ஸ்டைன், ஷ்லெஸ்விக் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டன. கைப்பற்றிய இரு பகுதிகளையும் பிரஷ்யாவுடன் சேர்த்துக்கொள்ள பிஸ்மார்க் விரும்பினார். ஆனால், அதற்கு ஆஸ்திரியா உடன்படவில்லை. எனவே, ஷ்லெஸ்விக்கைப் பிரஷ்யா ஆட்சி செய்வதென்றும், ஹால்ஸ்டைனை ஆஸ்திரியா ஆட்சி செய்வதென்றும் இரு நாடுகளும் ஒத்துக் கொண்டன. பிஸ்மார்க் இந்தப் பிரச்சினையை இத்துடன் நிறுத்திவிடத் தயாராய் இல்லை. ஆஸ்திரியாவைத் தாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அவர் முற்பட்டார்.

(ii) ஆஸ்திரிய-பிரஷ்யப் போர் (1866): ஆஸ்திரியாவுடன் போர் செய்யப்போவது உறுதி என்பதைத் தீர்மானித்த பிஸ்மார்க் அந்த நாட்டைத் தனிமைப்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டார். 1863-ல் போலந்து கலகம் செய்தபோது அதை அடக்க ரஷ்யாவிற்கு பிஸ்மார்க் உதவி செய்தார். அதனால் பிரஷ்யா ஆஸ்திரியாவுடன் போரிட்டால் ரஷ்யா நடுநிலைமை வகிக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார். ஃபிரான்சின் பேரரசர் மூன்றும் நெப்போலியனை பிஸ்மார்க் சந்தித்து, பிரஷ்ய-ஆஸ்திரியப் போர் மூண்டால் அதில் நெப்போலியன் தலையிடக் கூடாது எனக் கேட்டுக் கொண்டார். அதற்கு நெப்போலியன் உடன்பட்டார்,

அப்பொழுது இத்தாலிய இணைப்பு இயக்கம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆஸ்திரிய-பிரஷ்யப் போரில் இத்தாலி பிரஷ்யாவின் பக்கம் சேர்ந்தால் இத்தாலிக்கு (பீட்மாண்ட்-சார்டினிய அரசு) வெனிஷியாவைக் கைப்பற்றித் தருவதாக அவர் உறுதி கூறினர். இங்ஙனம் ரஷ்யா, ஃபிரான்ஸ் மற்றும் இத்தாலியுடன் பிஸ்மார்க் நட்புகொண்டார் ஆஸ்திரியாவுடன் போர் தொடுக்கத் தகுந்த வாய்ப்பினை அவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

ஹால்ஸ்டைனில் ஆஸ்திரியா நடத்திய ஆட்சி சரியில்லை எனக் காரணம் காட்டி ஹால்ஸ்டைனை ஆளும் பொறுப்பை பிரஷ்யா ஏற்றுக்கொண்டது. உடனே இதை ஆஸ்திரியா கண்டித்தது. அதன் விளைவாக பிஸ்மார்க் 1866-ல் ஆஸ்திரியாவின்மீது போர் தொடுத்தார். பவேரியா, சாக்சனி, ஹனோவர் முதலான ஜெர்மானிய அரசுகள் பிஸ்மார்க்கின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை வெறுத்தன. எனவே, அவை ஆஸ்திரியாவுக்கு உதவி செய்தன. ஆஸ்திரியப்படைகள், பிரஷ்யப்படைகளைப் போல் இரு மடங்கு இருந்தன. எனினும் பிரஷ்யப் படைகள் மிகச் சிறந்த பயிற்சியைப் பெற்றிருந்தன. படைத்தளபதி மால்ட்கே என்பவரின் ஆணைப்படி பிரஷ்யப்படைகள் நுண்ணிய போர் நுணுக்கங்களைக் கையாண்டன. போர் ஏழு வாரங்கள் நடைபெற்றது. இறுதியில் சடோவா (Sadowa) என்னுமிடத்தில் ஆஸ்திரியப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. அதையடுத்துப் பிராக் உடன்படிக்கை (Treaty of Prague, 1866) செய்து கொள்ளப்பட்டது. அதன்படி ஆஸ்திரியா, வெனிஷியாவை இத்தாலிக்குக் கொடுத்து விட்டது. ஜெர்மானிய அரசுகளின் தலைமையை ஆஸ்திரியா இழந்தது. போருக்குப் பின்னர் 1815ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்ட ஜெர்மானியச் கூட்டிணைப்பரசு அழிக்கப்பட்டு, வட ஜெர்மன் கூட்டிணைப்பரசு (North German Confederation) உருவாக்கப்பட்டது. அதில் ஷ்லெஸ்விக், ஹால்ஸ்டைன், ஹனோவர், ஹெஸ்ஸி முதலான அரசுகளும், ஹாம்பர்க், பிரெசுமன், லூபெக், முதலான நகரங்களும் இருந்தன. இந்தக் கூட்டமைப்புக்குப் பிரஷ்யா தலைமை தாங்கியது. அதாவது அதன் நிர்வாகத் தலைவர் பிரஷ்யாவின் மன்னர் முதலாம் வில்லியம் ஆவார். அரசருக்கு ஆலோசனை வழங்க ஒரு சான்சலர் (Chancellar) நியமிக்கப்பட்டார். அந்தப் பதவியை ஏற்ற முதல் சான்சலர் பிஸ்மார்க் ஆவார். அவர் அரசருக்குப் பதில் சொல்லக் கூடியவரேயன்றிப் பாராளுமன்றத்திற்கு அல்லர். அந்தக் கூட்டிணைப்பரசின் அரசியல் சட்டத்தை (Constitution) பிஸ்மார்க் சொல்லிக் கொண்டேயிருக்க, அவருடைய உதவியாளர் எழுதிக்கொண்டே வந்து முடித்து விட்டார். ஐந்துமணி நேரத்தில் அரசியல் சட்டம்

ஆயத்தமாகிவிட்டது. அது அடுத்த ஐம்பது ஆண்டுகள் நடைமுறையில் இருந்தது.

(iii) ஃபிரெஞ்சு-பிரஷ்யப் போர் (1870—1871): பிரஷ்யாவின் வெற்றியால் ஃபிரான்ஸ் அச்சம் கொண்டது. எல்லா ஜெர்மானிய அரசுகளும் பிரஷ்யாவின் தலைமையில் ஒன்று சேர்ந்துவிட்டால் ஜெர்மனி மிக வலிமைபெற்ற நாடாக மாறிவிடும் என்று மூன்றும் நெப்போலியன் அஞ்சினர். பிரஷ்யாவிற்கும் ஆஸ்திரியாவிற்கும் நடைபெற்ற போரில் நடுநிலைமை வகித்ததற்காகத் தனக்குப் பலாடினேட் (Palatinate), லக்சம்பர்க் (Luxemburg), பெல்ஜியம் (Belgium) முதலானவற்றைக் கொடுக்கும்படி மூன்றும் நெப்போலியன் கோரினர். ஆனல், அங்ஙனம் தர பிஸ்மார்க் மறுத்து விட்டார். ஃபிரான்சின் வலிமையைக் குலைக்க அவர் மேலும் படை வலிமையைப் பெருக்கினர். அந்த நாட்டைத் தாக்கத் தகுந்த வாய்ப்பை பிஸ்மார்க் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஃபிரான்சும், அதன் எல்லைப்பகுதியில் வலிமைமிக்க ஜெர்மனி உருவாவதை விரும்பவில்லை. எனவே, ஃபிரான்சும் தன் படை வலிமையைப் பெருக்கியது. போரில் ஈடுபட இருநாடுகளும் ஏற்பாடுகளைச் செய்தன.

ஆஸ்திரிய-பிரஷ்யப் போரில் கடைப்பிடித்த அதே அரசியல் திறத்தை பிஸ்மார்க் இப்பொழுதும் பின்பற்றினர். ரஷ்யா நடுநிலை வகிக்கவேண்டும் என்பதற்காக, கிரிமியப் போரில் ஃபிரான்ஸ் ரஷ்யாவின்பால் பகைமை கொண்டிருந்ததை பிஸ்மார்க் ரஷ்யாவிற்கு நினைவூட்டினர். ஆஸ்திரிய-பிரஷ்யப் போரில் ஆஸ்திரியா கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டதென்றாலும் அந் நாட்டை அவர் மிகவும் கண்ணியமான முறையில் நடத்தி அதனுடைய நட்பைப் பெற்றிருந்தார்.

ஃபிரான்சைத் தாக்கத் தக்க காரணத்தைப் பிஸ்மார்க் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இந்த நிலையில் 1868-ல் ஸ்பானிய மக்கள் புர்பன் வமிச அரசியான இசபெல்லாவின் (Isabella) ஆட்சியை விரும்பாமல் அவரைத் துரத்திவிட்டனர். ஜெர்மானிய ஹோஹன்சொலர்ன் (Hohenzollern) அரச குடும்பத்தைச் சேர்ந்த லியோபால்ட் (Leopold) ஆட்சியை ஏற்பதை ஸ்பானியர் விரும்பினர். லியோபால்ட் பிரஷ்ய அரசரின் உறவினர் ஆவார். ஸ்பெயினில் அவர் அரசரானல் வல்லரசுச் சமநிலை (Balance of Power) பாதிக்கப்படும் என்றும் மூன்றும் நெப்போலியன் கருதினர். அதனல் அவர் லியோபால்ட் ஸ்பெயினின் அரசராவதை எதிர்த்தார். எனவே, முதலில், லியோபால்டை ஆதரித்த பிரஷ்யா அவரை ஆதரிப்பதை விடுத்தது. எனினும் லியோபால்டைப் பிரஷ்யா எதிர்காலத்திலும் எப்பொழுதும் ஆதரிக்காது என்று உறுதி கூறும்படி நெப்போலியன் பிரஷ்யா அரசரிடம் கோரினர். பிரஷ்ய அரசர்

நெப்போலியனின் தூதுவரிடம் அத்தகைய கோரிக்கைக்குத் தான் இணங்க முடியாது எனத் தெரிவித்துவிட்டார். அதுபற்றி அரசர் எம்ஸ் (Ems) நகரத்திலிருந்து, தன்னுடைய தலைமை அமைச்சர் பிஸ்மார்க்குக்குத் தந்தி மூலம் செய்தி அனுப்பினார். இதுவே புகழ் பெற்ற 'எம்ஸ் தந்தி' (The Ems telegram) ஆகும். தந்தியிலிருந்த சொற்கள் சிலவற்றை நீக்கிவிட்டுப் பிஸ்மார்க் அதை வெளியிட்டார். நெப்பொலியனின் தூதுவர், பிரஷ்ய அரசரை அவமானப் படுத்தி விட்டதாக அச்செய்தி வெளியிடப்பட்டது. இதையறிந்த ஜெர்மானிய மக்கள் கொதிப்படைந்தனர். அதேபோல ஃபிரெஞ்சு மக்களும் தங்களை பிஸ்மார்க் இழிவுபடுத்திவிட்டதாகக் கருதி வெகுண்டனர். உடனே பிரஷ்யாவின் மீது போர் தொடுக்க வேண்டுமென ஃபிரான்ஸ் நாட்டின் சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. அதையடுத்து ஃபிரான்சும் பிரஷ்யாவும் போரிடத் துவங்கின (ஆகஸ்ட், 1870).

பிரஷ்யப் படைகள் மிகத் திறமை வாய்ந்தவை ஆகும். மால்ட்கேயின் தலைமையில் ஐந்து லட்சம் ஜெர்மானிய வீரர்கள் ஃபிரான்ஸை மூன்று முனைகளில் தாக்கினார்கள். மூன்று இடங்களிலும் ஜெர்மனி பெருவெற்றி பெற்றது. செடான் (Sedan) என்ற இடத்தில் ஃபிரெஞ்சுப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. அந்தப் போரில் 17 ஆயிரம் ஃபிரெஞ்சு வீரர்கள் கொல்லப்பட்டனர். 85 ஆயிரம் வீரர்களுடன் மூன்றும் நெப்போலியன் சரணடைந்தார். பாரிசில் இருந்த தலைவர்கள் சிலர் உடனே ஃபிரான்சில் மூன்றுவது குடியரசை அமைத்தனர். குடியரசு போரைத் தொடர்ந்து நடத்தியது. ஜெர்மானியப் படைகள் முன்னேறி பாரிஸ்நகரத்தை முற்றுகையிட்டன. அந்த நகரமும் 1871ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜெர்மானியரிடம் சரணடைந்தது.

பாரிஸ் முற்றுகை நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே தென் ஜெர்மானிய அரசுகள் அனைத்தும் வட ஜெர்மானியக் கூட்டிணைப் பரசுடன் இணைந்துவிட்டது. ஜெர்மனியின் இணைப்பு முடிவடைந்து விட்டது.

போருக்குப் பின், ஃபிரங்க்ஃபர்ட் உடன்படிக்கையின்படி (Treaty of Frankfort, 1871) அல்ஸாஸ், லொரைன் பகுதிகளை ஃபிரான்ஸ் ஜெர்மனிக்குக் கொடுத்துவிட்டது. போர் இழப்பு ஈடாகப் பெருந்தொகையை ஃபிரான்ஸ் ஜெர்மனிக்குக் கொடுத்தது

ஜெர்மானிய அரசுகள் அனைத்தும் இணைந்து பிரஷ்ய அரசர் முதலாம் வில்லியமைத் தங்கள் பேரரசராக ஏற்றுக்கொண்டன. பாரிஸ் நகரத்திற்கு அருகில் உள்ள வெர்சாய் மாளிகையில் மகிழ்ச்சி மிக்க ஆடம்பரமான வெற்றி விழா கொண்டாடப் பட்டது. முதலாம் வில்லியம் அழகிய அரியணையில் வீற்றிருக்க, பிஸ்மார்க்கும் மால்ட்கேயும் இருபுறமும் நின்றிருக்க, வில்லியம் 'ஜெர்மானியப் பேரரசர்' என அறிவிக்கப்பட்டார்.

# 15. இலத்தீன் அமெரிக்காவின் விடுதலை

### விளக்கம்

தென் அமெரிக்கக் கண்டத்தில் உள்ள நாடுகள், மத்திய அமெரிக்காவில் உள்ள நாடுகள் மற்றும் கரிபியன் கடலிலுள்ள மேற்கிந்தியத் தீவுகள் ஆகியவை அனைத்தையும் இலத்தீன் அமெரிக்கா என்ற சொற்றொடரால் குறிப்பிடுகிறோம். ஏனெனில், இப்பகுதிகளில் குடியேற்ற நாடுகளை அமைத்துக்கொண்ட ஸ்பானியர், போர்ச்சுகீசியர், ஃபிரெஞ்சுக்காரர்கள் முதலானவர்களின் மொழிகள் இலத்தீன் (Latin) மொழியை அடிப்படையாகக் கொண்டவைகளாகும். தென் அமெரிக்காவிலுள்ள பிரேசிலில் (Brazil) போர்ச்சுக்கல் தன் குடியேற்றத்தை அமைத்திருந்தது. கயானாவில் (Guyana) இங்கிலாந்து, ஹாலந்து, ஃபிரான்சு ஆகிய மூன்று நாடுகளும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தியிருந்தன. அக்கண்டத்தின் மற்ற எல்லாப் பகுதிகளும் ஸ்பெயினுக்கே சொந்தமாக இருந்தன. மெக்சிகோ உட்பட மத்திய அமெரிக்காவிலும் ஸ்பெயின் தன் அரசியல்ஆதிக்கத்தை நிலை நிறுத்தியிருந்தது. இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பெரும்பாலானவை 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பிய நாடுகளின் இரும்புப் பிடியிலிருந்து விடுபட விரும்பி விடுதலை இயக்கங்களை நடத்தின. அத்தகைய விடுதலை இயக்கங்களை நடத்துவதற்குப் பல காரணங்கள் இருந்தன.

### காரணங்கள்

ஸ்பெயின் தன்னுடைய அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் மீது மிகக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தது. அவை ஸ்பெயினைத் தவிர வேறு எந்த நாடுகளுடனும் வாணிகத் தொடர்பு கொள்ளக் கூடாது எனத் தடை செய்தது. குடியேற்ற நாடுகளில் இருந்த இயற்கைச் செல்வங்களை எல்லாம் ஸ்பெயின் சுரண்டிச் சென்றது. அந்நாடுகள் தொழில் துறையில் முன்னேறுவதற்கு எந்தவகையான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த அவல நிலையைக் குடியேற்ற நாடுகளில் வாழ்ந்தவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

## லத்தீன் அமெரிக்க நாடுகளின் விடுதலை



ஸ்பெயின் நாட்டின் அமெரிக்கக் குடியேற்றங்களில் நான்கு வகையான மக்கள் வாழ்ந்துவந்தார்கள். முதல் பிரிவினர் ஸ்பெயினில் பிறந்து அமெரிக்காவில் சென்று குடியேறியவர்கள் ஆவர். இவர்களில் பலர் அரசு ஊழியர்கள் ஆவர். இவர்களிடம் தான் அதிகாரமும்செல்வமும் குவிந்திருந்தன. இவர்களின்சர்வாதிகாரப் போக்கைத்தான் மற்ற மூன்று பிரிவினரும் வெறுத்தனர். இரண்டாம் பிரிவினர், அமெரிக்காவிலேயே பிறந்த ஸ்பானிய இனத்தினர் ஆவார்கள். அவர்கள் 'கிரியோல்கள்' (Creoles)என்று அழைக்கப்பட்டனர். இவர்கள்தான் விடுதலை இயக்கத்தைத் தொடங்கியவர்கள் ஆவர். மூன்றும் பிரிவினர் ஸ்பானிய-அமெரிக் கப் பெற்றோர்களுக்குப் பிறந்த கலப்பு இனத்தினர். இவர்கள் 'மெஸ்டிசோக்கள்' (Mestizos) எனப்பட்டனர். வேளாண்மை மற்றும் பல சிறு தொழில்களில் இவர்கள் ஈடுபட்டிருந்தனர். நான்காம் பிரிவினர் பழங்குடி இந்தியர்கள் ஆவார்கள், இவர்கள் அடிமைகள்போல் நடத்தப்பட்டனர். இரண்டாம் பிரிவினரும் மூன்றும் பிரிவினருமே ஸ்பெயினின் அடக்குமுறை ஆட்சியிலிருந்து விடுபடப் போர்க்கொடியை ஏந்தினர்.

1776ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்கா (The United States of America) இங்கிலாந்தின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது, அதையடுத்த நாற்பது ஆண்டுகளில் அது வலிமை மிகுந்த மக்களாட்சி நாடாக மாறியது. அது இலத்தீன் அமெரிக்கர்களுக்கு மிக முக்கியமான தூண்டுகோலாக அமைந்தது, மேலும் 1789ஆம் ஆண்டு நடைபெற்ற ஃபிரெஞ்சுப் புரட்சியின் கொள்கைகளும் இலத்தீன் அமெரிக்கர்களின் நினைவுகளில் பசுமையாக இருந்தன. இவ்விரு புரட்சிகளிலும் பல இலத்தீன் அமெரிக்க வீரர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் தாயகம் திரும்பி இளைஞர்களின் மனதில் விடுதலைக் கனலைப் பரப்பினார்கள்.

1805ஆம் ஆண்டில் நடைபெற்ற 'ட்ரஃபால்கர் கடற்போரில்' (Battle of Trafalgar) ஸ்பெயினின் (மற்றும் ஃபிரான்சின்) கடற் படையை இங்கிலாந்து முழுமையாகச் சேதப்படுத்திவிட்டது. அதனால் ஸ்பெயினுக்கும் அதன் அமெரிக்கக் குடியேற்ற நாடு களுக்குமிடையே இருந்த தொடர்பு தளர்த்தப்பட்டது. மேலும் இரு அமெரிக்கக் கண்டங்களின் பெரு நிலப் பரப்பில் ஸ்பெயின் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பதை இங்கிலாந்து வெறுத்தது. தன்னுடைய வாணிகப் பொருள்களை அங்கு விற்க அந்நாடு விரும்பியது. ஸ்பெயினுக்கு எதிரான இயக்கங்களுக்கு இங்கிலாந்து ஆதரவு கொடுத்தது.

1808ஆம் ஆண்டு நெப்போலியன் ஸ்பெயினைக் கைப்பற்றிக் கொண்டு, அந் நாட்டு அரசர் நான்காம் சார்லஸையும் (Charles IV)

அவருடைய மகனையும் விரட்டிவிட்டுத் தன்னுடைய சகோதரர் ஜோசஃப் போனபார்ட் (Joseph Bonaparte) என்பவரை அந்நாட்டு அரசராக நியமித்தார். இலத்தீன் அமெரிக்காவிலிருந்துஸ்பானியக் குடியேற்ற நாடுகளிலும் ஃபிரெஞ்சு அதிகாரத்தைத் திணிக்க நெப்போலியன் முயன்றார். ஆனால், அந் நாடுகள் ஃபிரெஞ்சு அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தன. அது மட்டுமன்றி இலத்தீன் அமெரிக்க நாடுகளில் செயல்பட்டுவந்த ஸ்பானிய அரசுகளை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து அவை தற்காலிக அரசுகளை (Provisional Governments) அமைத்துக்கொண்டன.

இத்தகைய சூழ்நிலையில்தான் ஃபிரான்சிஸ்கோ மிராண்டா, சைமன் பொலிவர், சான்மார்ட்டின் ஆகிய மூன்று தலைவர்களும் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் விடுதலை இயக்கத்தின் சிறப்பு மிக்க கட்டத்தை நடத்தினார்கள்.

### விடுதலை இயக்க நிகழ்ச்சிகள்

**ஃபிரான்சிஸ்கோ மிராண்டா** (Francisco Miranda, 1754-1816): வெனிசுலா (Venezuela) நாட்டில் உள்ள காரகஸ் (Caracas) என்ற நகரத்தில் மிராண்டா பிறந்தார். இராணுவத்தில் சேர்ந்து வீரராகப் பணி புரிந்தார். பின்னர் அமெரிக்கச் சுதந்திரப் போரின் போது ஃபிரெஞ்சுப் படையில் சேர்ந்து ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போரிட்டார். இராணுவத்திலிருந்து விலகித் தென் அமெரிக்காவின் விடுதலைக்காகப் பாடுபட்டார். அதன் விளைவாக அவர் ஐக்கிய அமெரிக்காவிற்குத் தப்பி ஓடினார். அங்கிருந்து இங்கிலாந்து, ஆஸ்திரியா, ரஷ்யா முதலான ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று தென் அமெரிக்க விடுதலை இயக்கத்திற்கு அவற்றின் உதவியை நாடினார். குறிப்பாக ரஷ்யப் பேரரசி இரண்டாம் காதரினைச் (Catherine II) சந்தித்து விடுதலை இயக்கத்திற்கு உதவும்படி வேண்டினார். ஆனால், எந்த நாடும் உடனடியாக உதவி செய்ய முன்வரவில்லை. ஃபிரெஞ்சுப் புரட்சி நடைபெற்றபோது ஃபிரெஞ்சு இராணுவத்தில் உயர் அதிகாரியாக மிராண்டா பணி புரிந்தார்.

1803ஆம் ஆண்டு மீண்டும் ஐக்கிய அமெரிக்காவிற்குச் சென்றார். மூன்றாண்டுகள் கழித்து இரண்டு கப்பல்களில் இரு நூறு வீரர்களுடன் வெனிசுலாவுக்குச் சென்று அரசாங்கத்தைக் கைப் பற்றமுயன்றார். ஆனால், அம்முயற்சியில்அவர் தோல்வியடைந்தார்.

மிராண்டாவின் முயற்சி தோல்வி அடைந்ததென்றாலும் வெனிசுலாவில் விடுதலை இயக்கம் தொடர்ந்து நடைபெற்றது. 1810ஆம் ஆண்டு வெனிசுலாவில் அரசுக்கு எதிரான கலகங்கள் நடைபெற்றன. அப்பொழுது வெளிநாட்டிலிருந்த மிராண்டா,

நாடு திரும்பி விடுதலை இயக்கத்தை நடத்தினார். அதே ஆண்டு ஸ்பானிய அரசைக் கவிழ்த்துவிட்டு 'புரட்சி அரசை' (Revolutionary Government) அமைத்தார். தலைநகரான காரகாஸில் விடுதலை இயக்கத் தலைவர்களின் மாநாட்டை அவர் கூட்டினார். 1811ஆம் ஆண்டு வெனிசுலா சுதந்திர நாடு எனப் பேரறிக்கை வெளியிடப் பட்டது. மிராண்டாவின் தலைமையில் தேசிய அரசு செயல்படத் தொடங்கியது.

எனினும், விடுதலை இயக்கத் தலைவர்களிடையே ஒற்றுமை இல்லை. குறிப்பாக வெனிசுலாவின் மற்றொரு தலைவர் சைமன் பொலிவர் மிராண்டாவின் எழுச்சியைக் கண்டு பொறாமை கொண்டார். இந்த நிலையில் டொமிங்கோ மாண்டிவெர்டி (Domingo Monteverde) என்ற கடற்படைத் தலைவரின் தலைமையில் வந்த ஸ்பானியப்படை வெனிசுலாவைத் தாக்கியது. தாக்குதலைச் சமாளிக்க முடியாத மிராண்டா தப்பி ஓடினார். எனினும், பொறாமைமிக்க பொலிவர் அவரைப் பிடித்து ஓர் இரகசியமான கோட்டையில் சிறை வைத்தார் (1812). அந்தக் கோட்டையும் பின்னர் ஸ்பானிய இராணுவத்தால் கைப்பற்றப்பட்டது. மிராண்டா கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். இறுதியாக அவர் ஸ்பெயினில் உள்ள காடிஸ் (Cadiz) நகரத்துச் சிறையில் 1816-ல் உயிர்நீத்தார். மிராண்டாவின் வீரம் மிகுந்த வாழ்க்கை வெனிசுலாவின் விடுதலைக் காவியமாகும்.

சைமன் பொலிவர் (Simon Bolivar, 1783—1830): மிராண்டாவைப் போலவே, பொலிவரும் வெனிசுலாவின் தலைநகரமான காரகாஸில் ஸ்பானிய செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தார். ஸ்பெயினில் உயர்கல்வி கற்றார். அமெரிக்கச் சுதந்திரப் போர் மற்றும் ஃபிரெஞ்சுப் புரட்சியின் விடுதலைக் கருத்துகளைப் படித்தறிந்தார். அக்கருத்துகள் அவரைப் பெரிதும் கவர்ந்தன. பொலிவர் தன்னுடைய பதினெட்டாவது வயதிலேயே திருமணம் செய்து கொண்டார். ஆனால், திருமணமான சில மாதங்களுக்குள் அவருடைய மனைவி இறந்துவிட்டார். பின்னர் அவர் திருமணமே செய்து கொள்ளவில்லை. நாட்டின் விடுதலையே தன் நோக்கமெனக் கொண்ட பொலிவர் அதற்காக அரும்பாடுபட்டார்.

1812ஆம் ஆண்டு ஸ்பானியப் படை மிராண்டா முதலானவர்களைக் கைது செய்தபோது பொலிவர், கரிபியன் கடலில் (Caribbean Sea) உள்ள ஒரு தீவுக்குத் தப்பியோடினார். அடுத்த ஆண்டு நியு கிரானடா (New Granada) என்ற இன்றைய கொலம்பியா பகுதிக்கு ஒரு படையுடன் சென்று ஸ்பானியப் படைகளைத் தோற்கடித்தார். இயக்கம் வலுப்பெறுவதற்கு முன் ஐரோப்பாவில்

சில அரசியல் மாறுதல்கள் ஏற்பட்டன. 1814ஆம் ஆண்டு நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டு எல்பா (Elba) தீவுக்கு அனுப்பப்பட்டார். அதையடுத்து ஏழாம் ஃபெர்டினுண்ட் (Ferdinand VII) ஸ்பெயின் நாட்டு அரியணையில் அமர்த்தப்பட்டார். அவர் ஆட்சிக்கு வந்தவுடன், கிளர்ச்சிகள் செய்து வந்த இலத்தீன் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் மீது கடும் நடவடிக்கை எடுக்க முற்பட்டார். எனவே, விடுதலை இயக்கம் இன்னும் தீவிரமடைந்தது.

1816ஆம் ஆண்டு வெனிசுலாவுக்கு அருகிலிருந்த ஒரு தீவைத் தன்னுடைய இராணுவ தளமாக அமைத்துக்கொண்டு பொலிவர் விடுதலை இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தினுர். 1819ஆம் ஆண்டு நியு கிரானடா பகுதியில் ஸ்பானியப் படைகளைத் தோற்கடித்து அதன் தலைநகரமாகிய பொகோட்டாவைக் (Bogota) கைப்பற்றிக் கொண்டார். அங்கிருந்து வெனிசுலாவுக்குச் சென்று அதையும் பொலிவர் கைப்பற்றினுர். நியு கிரானடா (கொலம்பியா). வெனிசுலா ஆகிய இரு சுதந்திர நாடுகளுக்கும் பொலிவர் ஜனுதிபதி ஆனுர்.

அடுத்த நான்கு அண்டுகளுக்குள் பொலிவரின் உதவியுடன் ஈக்வெடார் (Ecuador), பெரு (Peru) மற்றும் பொலிவியா (Bolivia) ஆகியவை விடுதலை பெற்றன. பொலிவரின் நினைவாக பொலிவியா என்ற நாடு அமைக்கப்பட்டது, அதற்கு முன் அது பெரு மற்றும் சிலியில் அடங்கிய ஒரு பகுதியாக இருந்தது.

இங்ஙனம் வெனிசுலா, கொலம்பியா, ஈக்வெடார், பெரு, பொலிவியா முதலான நாடுகள் விடுதலை அடைவதற்குக் காரணமாயிருந்த பொலிவரை 'விடுதலை வீரர்' (The Liberator) என்று மக்கள் சிறப்பித்து அழைத்தனர். H. G. வெல்ஸ் என்ற வரலாற்ருசிரியர் பொலிவரை, 'தென் அமெரிக்காவின் வாஷிங்டன்' என்று அழைக்கின்ருர்.

சான் மார்ட்டின் (San Martin, 1778—1850): அர்ஜென்டைனுவில் (Argentina) உள்ள லா பிளாடா (La Plata) என்னும் நகரத்தில் ஓர் இராணுவ அதிகாரியின் மகனுக சான் மார்ட்டின் பிறந்தார். ஸ்பெயினில் கல்வி கற்று, இராணுவத்தில் சேர்ந்து, நெப்போலியனுக்கு எதிராகத் தீபகற்பப் போரில் பணியாற்றினுர். தென் அமெரிக்காவின் தெற்கு நாடுகள் விடுதலை பெறுவதற்கு இவர் காரணமாக இருந்தார்.

1812ஆம் ஆண்டு அர்ஜென்டைனுவின் தலைநகரமான புவேனஸ் ஐயரிஸ்ஸுக்குச் (Buenos Aires) சென்ருர். அங்கு நடைபெற்று வந்த விடுதலை இயக்கத்திற்கு ஆதரவு தந்தார். அடுத்த

ஆண்டு ஸ்பானிய இராணுவத்தை சான் லொரிசோ (San Lorezes) என்ற இடத்தில் அவர் தோற்கடித்தார், அர்ஜென்டைனுவில் உள்ள மென்டோசா (Mendoza) என்ற நகரத்தைத் தன்னுடைய இராணுவத் தலைமையகமாக அமைத்துக்கொண்டார். அர்ஜென்டைனு மற்றும் சிலி ஆகிய நாடுகளிலிருந்து தன்னுடைய இராணுவத்தில் ஆயிரக்கணக்கான வீரர்களைச் சேர்த்தார். அந்தப் படை 'ஆண்டிஸ் இராணுவம்' (Army of the Andes) என்று அழைக்கப்பட்டது. 1817ஆம் ஆண்டு கடத்தற்கரிய ஆண்டிஸ் மலைகளைக் கடந்து சென்று சிலி நாட்டின் தலைநகரான சாண்டியாகோவிற்கு (Santiago) அருகில் ஸ்பானியப் படையைத் தோற்கடித்தார். சிலி விடுதலை பெற்றது. அந்த நாட்டின் தலைவர் பதவியைத் தான் ஏற்றுக்கொள்ளாமல் தன் நண்பர் ஓ'ஹிக்கின்ஸ் (O'Higgins) என்பவருக்குக்கொடுத்தார். பின்னர் பெருவை (Peru) விடுவிக்க மார்ட்டின் படையுடன் வடக்கு நோக்கிச் சென்முர். 1820-ல் பெருவில் பல பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டு, அடுத்த ஆண்டு அதன் தலைநகராகிய லிமாவையும் (Lima) பிடித்துக்கொண்டு, பெருவை ஸ்பானிய ஆதிக்கத்தினின்று விடுவித்தார்.

1822ஆம் ஆண்டு மார்ட்டின், பொலிவரைச் சந்தித்தார். இருவருக்கும் சில அரசியல் கருத்து வேறுபாடுகள் தோன்றின. மார்ட்டின் வரம்புடை முடியாட்சியில் (Limited monarchy) நம்பிக்கை கொண்டார். ஆனுல், பொலிவர் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. எனவே, மார்ட்டின் பெருந்தன்மையுடன் அரசியலிலிருந்து விலகினுர். தென் அமெரிக்க நாடுகளின் விடுதலைக்குப் பெரும்பணி ஆற்றிய மார்ட்டின் பதவி ஆசை சிறிதுமின்றித் தன் இறுதி நாட்களை அமைதியுடன் கழிக்க, தன் மகளுடன் ஃபிரான்சுக்குச் சென்றுவிட்டார். தன்னலமற்ற தியாகச் சுடராக இவர் விளங்குகின்முர்.

1830ஆம் ஆண்டுக்குள்ளாக ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகலின் குடியேற்றங்களாக இருந்த இலத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்தும் விடுதலை பெற்றுவிட்டன.

# V. நவீன ஆசியா

## 16. மெய்ஜி மீட்சியும் ஜப்பானின் எழுச்சியும்

### 'மெய்ஜி மீட்சி'—விளக்கம்

ஜப்பானின் வரலாறு கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகின்றது. அந்த நூற்றாண்டிலிருந்து இன்று வரை அந் நாடு அரசர்களால் ஆட்சி செய்யப்படுகின்றது. அரச பதவியின் பெயர் மிகாடோ (Mikado) எனப்பட்டது. 1603ஆம் ஆண்டி லிருந்து 1867ஆம் ஆண்டு வரை ஷோகன் (Shogun) என்று சொல்லப்பட்ட இராணுவத் தலைவர்களே அரசின் எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்திவந்தனர். மிகாடோ அரியணையை அலங்கரிக்கும் பொம்மையாகவே இருந்துவந்தார். 1867ஆம் ஆண்டு ஷோகன்களின் அதிகாரங்கள் முற்றிலும் நீக்கப்பட்டு மிகாடோவின் அதிகாரங்கள் மீண்டும் நிலைநாட்டப்பட்டன. இந்த மாற்றம் 'மெய்ஜி மீட்சி' (Meiji Restoration) எனப்படுகிறது. அந்த ஆண்டில்தான் முட்சுஹிடோ (Mutsuhito) என்பவர் ஜப்பானின் மிகாடோ ஆனார். இவர் 1912ஆம் ஆண்டு வரை, நாற்பத்து ஐந்து ஆண்டுகள், ஜப்பானை ஆட்சி செய்தார். அவருடைய ஆட்சியில் ஜப்பான் வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்தது.

### ஐரோப்பியர் வருகை

முதன் முதலில் 1542ஆம் ஆண்டு போர்ச்சுகீசியர்கள் வாணிகம் செய்வதற்காக ஜப்பானுக்குச் சென்றார்கள். அவர்களைத் தொடர்ந்து டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், மற்றும் ஸ்பானியர்கள் அந் நாட்டிற்குச் சென்றார்கள். அவர்கள் ஜப்பானியர்களைக் கிறித்தவர்களாக மாற்ற முயன்றார்கள். இதைக் கண்டு அஞ்சிய ஜப்பானிய அரசு 1587ஆம் ஆண்டு எல்லாக் கிறித்துவ குருமார்களும் உடனடியாக ஜப்பானைவிட்டு வெளியேற வேண்டுமென ஆணையிட்டது. 1641ஆம் ஆண்டுகளுக்குள் எல்லா ஐரோப்பியர்

களும் ஜப்பானிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். 1853ஆம் ஆண்டுவரை ஜப்பான் வேறு எந்த நாட்டுடனும் எந்தவிதமான உறவும் கொள்ளாமல், இருநூற்றுப் பதின்மூன்று ஆண்டுகள், தனிமையில் வாழ்ந்துவந்தது. இது வரலாற்றில் ஒப்புமைஇல்லாத காலமாகும். இது 'மூடிய கதவுக்கொள்கை' (Closed Door Policy) என்று அழைக்கப்பட்டது.

ஜப்பானின் தனிமையைக் கண்டு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் வியந்தன. அந்நாட்டுடன் அவை வாணிகம் செய்ய விரும்பின. 1853ஆம் ஆண்டு மேத்யு சி. பெர்ரி (Mathew C.Perry) என்ற கடற்படை அதிகாரியை நான்கு போர்க் கப்பல்களுடன் அமெரிக்க ஜனாதிபதி ஜப்பானுக்கு அனுப்பினார். பெர்ரி, தன் போர்க் கப்பல்களைக் காட்டி, அரசரை பயமுறுத்தி, ஜப்பானில் அமெரிக்கர்கள் வாணிகம் செய்ய அவரிடம் அனுமதி பெற்றார். அதையடுத்து அந் நாட்டுத் துறைமுகங்களிலும் பல அமெரிக்க வணிகர்கள் குடியேறினார்கள். அதுபோன்ற சலுகைகளை மற்ற ஐரோப்பிய நாட்டினரும் பெற்றார்கள். அவர்கள் எந்தவிதமான தடையுமின்றி ஜப்பானியத் துறைமுகங்களைப் பயன்படுத்தவும், உள்நாட்டில் எங்குவேண்டுமானாலும் செல்லவும், கிறித்தவ மதத்தைப் பரப்பவும் உரிமைகளைப் பெற்றார்கள். இந்த நிலை நீடித்தால் ஐரோப்பியர்கள் ஜப்பானை அடிமைப்படுத்திவிடுவார்கள் என்று கருதப்பட்டது. எனவேதான் 1867ஆம் ஆண்டு 'ஷோகன்' பதவி ஒழிக்கப்பட்டு எல்லாஅதிகாரங்களும் மிகாடோவிடம் கொடுக்கப்பட்டன. இந்த அதிகாரங்களைப் பெற்ற முதல் மிகாடோ முட்சுஹிடோ ஆவார்.

### முட்சுஹிடோவின் சீர்திருத்தங்கள்

முட்சுஹிடோ (1867-1912) ஜப்பானை வலிமை மிகுந்த நாடாக்கவேண்டும் என்று விரும்பினார். அதற்கேற்ப இட்டோ(Ito) என்ற பிரபு அவருடைய திறமைமிக்க அமைச்சராகப் பணியாற்றினார். இந்த இருவரின் முயற்சியால் ஜப்பான் பல துறைகளில் முன்னேறியது. காலத்திற்கு ஒவ்வாத நிலமானிய முறை (Feudalism) ஒழிக்கப்பட்டது. பிரபுக்களின் செல்வாக்கு அழிக்கப்பட்டது. 1889ஆம் ஆண்டு ஒரு புதிய அரசியலமைப்பு (Consitution) உருவாக்கப்பட்டது. அதன்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் ஒன்று அமைக்கப்பட்டது. இராணுவம் மற்றும் கடற்படை மேற்கத்திய முறையில் திருத்தியமைக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டன. மேலைநாடுகளிலிருந்து தொழில் நுணுக்க வல்லுநர்கள் ஜப்பானுக்கு அழைக்கப்பட்டார்கள். அவர்களின் உதவியுடன் பல நவீன தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன.

புகைவண்டிப் பாதைகள், தபால் தந்தி முறைகள். மருத்துவ மனைகள் முதலானவை நவீன முறையில் அமைக்கப்பட்டன. கல்வித் துறையில் பெரும் புரட்சியே நடைபெற்றது. தொடக்கக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை எல்லா நிலைகளிலும் மாறுதல்கள் செய்யப்பட்டன. டோக்கியோ (Tokyo) மற்றும் கியோடோ (Kyoto) ஆகிய நகரங்களில் புதிய பல்கலைக் கழகங்கள் திறக்கப்பட்டன. மேலை நாட்டுப் பேராசிரியர்கள் அங்கு வந்து பல கலைகளைக் கற்பித்தனர். ஆயிரக்கணக்கான ஜப்பானிய மாணவர்கள் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி முதலான நாடுகளுக்குச் சென்று பல துறைகளில் உயர் கல்வி கற்றுத்தாயகம் திரும்பினர். சிவில் மற்றும் கிரிமினல் சட்டங்கள் தொகுக்கப்பட்டன. வேளாண்மைத் துறையிலும் நவீன முறைகள் பயன்படுத்தப்பட்டன. கால் நூற்றுண்டில் ஜப்பான் வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்தது. உலகத்தின் பல நாடுகளில் ஜப்பானியப் பொருள்கள் மலிவாகக் கிடைத்தன. ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுடன் போட்டிபோட்டுக்கொண்டு ஜப்பான்முன்னேறியது. தன்னுடைய வலிமையை வெளியுலகுக்குக் காட்டத்தக்க நேரத்தை ஜப்பான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது.

### முதல் சீன-ஜப்பானியப் போர் (1894-95)

அண்மையில் உள்ள கொரியாவையும் மஞ்சூரியாவையும் கைப்பற்றிக்கொள்ள ஜப்பான் திட்டமிட்டது. கொரியா சீனுவின் சார்பு நாடாக இருந்தது, 1894ஆம் ஆண்டு கொரியாவில் ஒரு கலகம் நடைபெற்றது. அதை ஒடுக்க சீனு இராணுவத்தை அனுப்பியது. உடனே ஜப்பானும் தன் படையை அனுப்பியது. நிலத்திலும் நீரிலும் சீனப்படைகள் ஜப்பானியப் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. ஒன்பது மாதங்கள்போர் நடைபெற்றது. தோல்வி மேல் தோல்வியைக் கண்ட சீனு போரை நிறுத்த முன் வந்தது. அதையடுத்து ஷிமோனுசெகி உடன்படிக்கையைச் (Treaty of Shimonoseki) செய்துகொண்டு இருநாடுகளும் போரை நிறுத்தின.

இவ்வுடன்படிக்கையின்படி, ஃபார்மோசா (Formosa) தீவு, லியோடுங் (Liaotung) தீபகற்பம் ஆகியவற்றைச் சீனு ஜப்பானுக்குக் கொடுத்தது. மேலும் போர்ட் ஆர்தர் (Port Arthur) மற்றும் வேறு நான்கு சீனத் துறைமுகங்களோடு வாணிகம் செய்ய ஜப்பான் உரிமை பெற்றது. போர் இழப்பீடாக ஒரு பெருந் தொகையைச் சீனு ஜப்பானுக்குக் கொடுத்தது. இப் போரினுல் ஜப்பானின் வலிமை வெளியுலகுக்குப் பறைசாற்றப்பட்டது.

## ரஷ்ய-ஜப்பானியப் போர் (1904-1905)

ரஷ்யாவையும் வேறு பல ஐரோப்பிய நாடுகளும் ஜப்பானின் வலிமையையும், ஏகாதிபத்தியக் கொள்கையையும்கண்டு அதிர்ச்சி அடைந்தன. ரஷ்யா, ஃபிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் கூட்டாகச் சேர்ந்து லியோடுங் தீபகற்பத்தையும் அங்கு உள்ள போர்ட் ஆர்தர் துறைமுகத்தையும் சீனாவுக்கே திருப்பிக் கொடுத்துவிடும்படி ஜப்பானை வற்புறுத்தின. ஜப்பான் வேறுவழி யின்றி அங்ஙனமே செய்தது. ஆனால், இந்த நாடுகள் தங்கள் ஆதிக் கத்தைச் சீனாவில் ஏற்படுத்திக்கொண்டன. கியோசௌ (Kiao-Chou) துறைமுகத்தில் ஜெர்மனியும், போர்ட் ஆர்தர் மற்றும் லியோடுங் தீபகற்பத்தில் ரஷ்யாவும், க்வாங்சௌவில் (Kwang-chow) ஃபிரான்சும், வெய் ஹை வெய் (Wei Hai Wei) என்ற துறை முகத்தில் இங்கிலாந்தும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டன. இதற்கெல்லாம் காரணம் ரஷ்யா என்பதை ஜப்பான் புரிந்துகொண்டது. 1902ஆம் ஆண்டு இங்கிலாந்துடன் ஜப்பான் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டது. அதன்படி ஜப்பான் எந்த நாட்டுடன் போரிட்டாலும் அதில் தலையிடுவதில்லை என இங்கி லாந்து உறுதி கூறியது.

ஏற்கெனவே சைபீரிய இருப்புப் பாதையை போர்ட் ஆர்தர் வரை ரஷ்யா அமைத்திருந்தது. இதைக்கண்டு ஜப்பான் ஆத்திரம் கொண்டது. இந்த நிலையில் 1904ஆம் ஆண்டு ரஷ்யப் படைகள் மரம் வெட்டுதலைக் காரணமாகக் கொண்டு கொரியாவுக்குள் நுழைந்தன. உடனே ஜப்பான் ரஷ்யாவின்மீது போர்தொடுத்தது. ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே நடைபெற்ற இந்தப்போர் சிங்கத்திற்கும் சுண்டெலிக்கும் இடையே நடக்கும் போர் என அனைவரும் கருதினர். ஆனால், சுண்டெலி போன்ற ஜப்பான், ரஷ்யாவை நீரிலும் நிலத்திலும் பல இடங்களில் தோற்கடித்தது. போர்ட் ஆர்தர், லியோடுங் தீபகற்பம் மற்றும் மஞ்சூரியா ஆகிய வற்றை ஜப்பான் கைப்பற்றிக்கொண்டது. ட்சுஷிமா நீர்ச்சந்தியில் (Straits of Tsushima) நடைபெற்ற போரில் ஜப்பான், ரஷ்யாவின் கடற்படையை முழுமையாகச் சேதப்படுத்தியது. ரஷ்யா போரை நிறுத்த முன்வந்தது. அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல் டின் (Theodore Roosevelt) நன் முயற்சியால் போர் நிறுத்தப்பட்டது. அதையடுத்து ஐக்கிய அமெரிக்க நாட்டில் உள்ள போர்ட்ஸ் மத் என்ற நகரத்தில் இருநாடுகளும் 'போர்ட்ஸ்மத் உடன்படிக்கை'யை (Treaty of Portsmouth) 1905ஆம் ஆண்டு செய்துகொண்டன. அதன்படி லியோடுங் தீபகற்பத்தை ஜப்பான் பெற்றது : மஞ்சூரியாவை மீண்டும் சீனா பெற்றது. கொரியாவைப் பற்றித்

திட்டவட்டமாக எதுவும் கூறப்படவில்லை. எனவே, அந்த நாட்டை 1910ஆம் ஆண்டு ஜப்பான் கைப்பற்றிக்கொண்டது.

இந்தப் போர் ஆசியா மற்றும் ஐரோப்பாவின் வரலாற்றில் மிகமுக்கியமான விளைவுகளை ஏற்படுத்தியது. ஜப்பான் மிகப்பெரிய வல்லரசு என்பதை உலகநாடுகள் புரிந்துகொண்டன. முதல் முறையாக ஓர் ஆசியநாடு ஐரோப்பியநாட்டைப் போர்க்களத்தில் தோற்கடித்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### முதல் உலகப் போரும் ஜப்பானும்

1914ஆம் ஆண்டு முதல் உலகப் போர் தொடங்கியது. அப் போரின்போது இங்கிலாந்து, ஃபிரான்சு முதலான நேச நாடுகளுடன் ஜப்பான் சேர்ந்துகொண்டது. சீனாவில் உள்ள ஷாண்டுங் (Chantung) தீபகற்பத்திலிருந்து ஜெர்மானியர்களை வெளியேற்றுவதற்கான முயற்சிகளை ஜப்பான் மேற்கொண்டது. பின்னர் அத் தீபகற்பத்தைத் தானே வைத்துக்கொண்டது. போருக்குப்பின்னர் செய்துகொள்ளப்பட்ட வெர்சாய் உடன்படிக்கையை (Treaty of Versailles) வரைவதில் ஜப்பான் மிக முக்கியமான பணியினைச்செய்தது. பசிபிக் பெருங்கடலில் பல தீவுகளை ஜப்பான் பெற்றது.

### சீன-ஜப்பானியப் போர்கள் (1931-37)

ஜப்பானின் மக்கள் தொகை பெருகிக்கொண்டே வந்தது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலான நாடுகளின் கடுமையான கட்டுத்திட்டங்களால் ஜப்பானியர் வெளிநாடுகளில் சென்று குடியேற முடியவில்லை. 1929ஆம் ஆண்டு உலகம் முழுவதும் பரவிய பொருளாதார மந்தத்தால் (Depression) ஜப்பானின் உற்பத்திப் பொருள்கள் விலை போகாமல் தேங்கிக்கிடந்தன. ஆகவே மஞ்சூரியாவைக் கைப்பற்ற ஜப்பான் திட்டமிட்டது. ஜப்பானுக்குச் சொந்தமான தென் மஞ்சூரியப் புகைவண்டிப் பாதையில் சில சீனத்தேசியவாதிகள் கலகங்களை விளைவித்தார்கள். இந்தச் சிறிய நிகழ்ச்சியைக் காரணம் காட்டி 1931ஆம் ஆண்டு ஜப்பான் மஞ்சூரியாவைத் தாக்கி மிக எளிதாக அதைக் கைபற்றிக் கொண்டது. உடனே அங்கு மஞ்சுகோ (Manchuko) என்ற தற்காலிக அரசையும் ஜப்பான் நிறுவியது. சர்வதேசச் சங்கம் ஜப்பானின் ஆக்கிரமிப்பைக் கண்டித்தது. அதனால் 1933ஆம் ஆண்டு அச்சங்கத்திலிருந்து ஜப்பான் விலகியது.

1925-49ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் சீனாவில் குழப்பங்கள் அதிகமாயிருந்தன. தேசியவாதிகளுக்கும் பொதுவுடைமைக் கட்சியினருக்கும் இடையே உள்நாட்டுப் போர்கள்

நடைபெற்று வந்தன. வலுவான அரசு எதுவும் இல்லை. இத்தகைய குழப்பமான காலத்தில்தான் ஜப்பான், சீனுவை அடிக்கடி தாக்கிப் பெரும் நிலப்பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டு வந்தது.

1931-ல் மஞ்சூரியாவைப் பிடித்துக் கொண்ட பின்னர், 1932ஆம் ஆண்டு ஆயிரக்கணக்கான ஜப்பானிய வீரர்கள் சீனுவுக்குள் அனுப்பப்பட்டனர். அவர்கள் வடசீனு முழுவதையும் கைப்பற்றிக் கொண்டனர். ஷாங்கை, நான்கிங், காண்டன் முதலான முக்கிய நகரங்களையும் ஜப்பான் பிடித்துக்கொண்டது. போர் இரண்டு மூன்று ஆண்டுகள் நடைபெற்றது. சிறிது காலம் அமைதி நிலவியது. மீண்டும் 1937ஆம் ஆண்டு சீனுவின் பல இடங்கள் ஜப்பானுல் தாக்கப்பட்டன. பீகிங், நான்கிங், காண்டன் போன்ற நகரங்களில் ஜப்பான் தற்காலிக அரசுகளை அமைத்தது. ஐரோப்பாவில் ஹிட்லரும், முஸோலினியும் கட்டுக்கடங்காத ஆக்கிரமிப்புகளில் ஈடுபட்டிருந்த அதே காலத்தில் அதேபோன்ற ஆக்கிரமிப்பில் ஆசியாவில் ஜப்பான் ஈடுபட்டிருந்தது.

1936ஆம் ஆண்டு ஜப்பானும் ஜெர்மனியும் பொதுவுடைமை எதிர்ப்பு ஒப்பந்தத்தை (Anti-Comintern Pact) செய்துகொண்டன. இதில் 1939ஆம் ஆண்டு இத்தாலியும் சேர்ந்துகொண்டது. இங்ஙனம் ரோம்-பெர்லின்-டோக்கியோ அச்சு (Axis) உருவாகியது.

### இரண்டாவது உலகப்போரும் ஜப்பானும்

1939ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. ஜெர்மனி மற்றும் இத்தாலியுடன் ஜப்பான் இணைந்து போரில் ஈடுபட்டது என்ருலும் அதன் கவனம் முழுவதும் சீனு மற்றும் வேறு பல நாடுகளைக் கைப்பற்றுவது எங்ஙனம் என்பதிலேயே இருந்தது. 1941ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7ஆம் தேதி, எந்தவிதமான முன் அறிவிப்பும் இன்றி, அமெரிக்காவுக்குச் சொந்தமான ஹவாய் (Hawaii)தீவுகளில் உள்ள கடற்படைத்தளமான பெர்ல்ஹார்பரை (Pearl Harbour) ஜப்பான் குண்டு போட்டுத் தாக்கிப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. அதைத் தொடர்ந்து ஃபிலிப்பைன்ஸ் தீவுகள், கிழக்கிந்தியத் தீவுகள், மலேயா, பர்மா ஆகியவற்றையும் ஜப்பான் பிடித்துக்கொண்டது. அதற்குள் பசிபிக் கடல் போர் நிகழ்ச்சிகளைக் கவனித்துக்கொள்ள தளபதி மெக் ஆர்தரை (Mac-Arthur) அமெரிக்கா நியமித்தது; தென் கிழக்கு ஆசிய நிகழ்ச்சிகளைக் கவனித்துக்கொள்ள மவுண்ட்பாட்டன் (Mountbatten) பிரபுவை இங்கிலாந்து நியமித்திருந்தது. 1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் பர்மாவை மவுண்ட் பாட்டனும், ஃபிலிப்பைன்ஸ் தீவுகளை மெக் ஆர்தரும் மீட்டுவிட்டனர். ஏற்கெனவே ஜெர்மனி

யும் இத்தாலியும் தோற்கடிக்கப்பட்டுவிட்டன. ஜப்பான் இன்னும் பணியவில்லை. எனவே, அந்த ஆண்டு (1945) ஆகஸ்டு மாதம் ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா (Hiroshima), நாகசாகி (Nagasaki) ஆகிய நகரங்களின் மீது இரண்டு அணுகுண்டுகளைப் போட்டு அமெரிக்கா லட்சக்கணக்கான ஜப்பானியர்களைக் கொன்று குவித்தது. உடனே ஜப்பான் சரணடைந்துவிட்டது. இரண்டாம் உலகப் போர் நின்றது.

போர் நின்ற பிறகும் அமெரிக்கப் படைகள் மெக் ஆர்தர் தலைமையில் ஜப்பானிலேயே இருந்தன. 1946ஆம் ஆண்டு புதிய அரசியல் சட்டம் எழுதப்பட்டது. அது அடுத்த ஆண்டு நடைமுறைக்கு வந்தது. எனினும் அமெரிக்கப் படைகள் தொடர்ந்து ஜப்பானிலேயே இருந்தன. அதை ஜப்பான் விரும்பவில்லை. அதையடுத்து ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. 1951ஆம் ஆண்டு அமெரிக்கப் படைகள் விலகின. 1952ஆம் ஆண்டு பொதுத்தேர்தல்கள் நடைபெற்றன. வரம்புடை முடியாட்சியின் கீழ் ஜப்பான் இயங்கிவருகின்றது.

# 17. சீனாவில் மஞ்சு அரசர்களின் ஆட்சி (1644—1911)

சீனா மிகப் பழமையான நாகரிகத்தையும் வரலாற்றையும் உடைய நாடாகும். அதன் வரலாறு கி.மு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து தொடங்குகின்றது. 1911ஆம் ஆண்டு வரை அந்த நாட்டைப் பதினெட்டு வமிசங்களைச் சேர்ந்த அரசர்கள் ஆட்சி செய்துள்ளனர். 1644—1911ஆம் ஆண்டுகளுக்கிடையே சீனாவை ஆட்சி செய்த மஞ்சு (Manchu) அரசர்கள் சிங் (Ching) வமிசத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் பீகிங்கைத் (Peking) தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். அவர்கள் காலத்தில் சீனா மிகப் பெரிய பேரரசாக விளங்கியது. அப் பேரரசில் சீனா, மஞ்சூரியா, மங்கோலியா, சிங்கியாங் (சீனத் துருக்கிஸ்தானம்), திபெத் ஆகியவை அடங்கியிருந்தன. நேபாளம், சியாம், பர்மா, லாவோஸ், அன்னாம், கொரியா முதலானவை மஞ்சு அரசர்களின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டிருந்தன. பல துறையில் சீனா வளர்ச்சி பெற்றது. அவர்களின் ஆட்சிக் காலத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவற்றைப்பற்றிய விபரத்தை இனிக் காண்போம்.

**மஞ்சு அரசர்களின் வருகை**

மஞ்சுக்கள் இன்றுள்ள மஞ்சூரியாவில் உள்ள கிரின் (Kirin) மாநிலத்தில் தோன்றினார்கள். அவர்கள், 'ஜூர்கென்' (Jurchen) என்ற பழங்குடியினைச்சேர்ந்தவர்கள் ஆவர். நூர்ஹாசு (Nurhachu) 1559—1626) என்ற திறமைமிக்க தலைவனின் கீழ் இவர்கள் ஒன்றுபட்டார்கள். அவர்கள் சிறந்த வில் வீரர்களும் குதிரை வீரர்களும் ஆவர். அவர்கள் பலமுறை வடக்குச் சீனாவின் மீது படையெடுத்தனர். தாங்கள் வென்ற பகுதிகளில் எட்டுக் கொடிகளைப் பறக்கவிடும் முறையை (Eight Banner System) அவர்கள் பின்பற்றினர். 1644ஆம் ஆண்டு பீகிங்கைக் (Peking) கடுமையாகத் தாக்கினர். 1659ஆம் ஆண்டு அங்கு ஆட்சி செய்துகொண்டிருந்த மிங் (Ming) வமிசத்துக் கடைசி அரசரை விரட்டியடித்துவிட்டு அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார்கள். பின்னர் சீனா முழுவதையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தார்கள்.

மஞ்சு அரசர்களுள் சிலர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். கங் ஹி (Kang Hi, 1661—1722) என்ற அரசர் அறுபத்தோர் ஆண்டுகள் சீனாவை ஆட்சிசெய்தார். அவர் சீனாவின் பெரும்பகுதியை ஆட்சி செய்தார். 17, 18ஆம் நூற்றாண்டுகளில் அவ்வளவு பெரிய பேரரசை வேறு எந்தப் பேரரசரும் எந்த நாட்டிலும் ஆட்சி செய்த தில்லை. தொழில், கலை, இலக்கியம் முதலான துறைகளில் சீனா வேகமாக முன்னேறியது. சீயென்-லுங் (Chien-lung, 1736—1795) என்ற பேரரசரும் நீண்ட காலம் ஆட்சி செய்தார். தம் பேரரசின் எல்லைகளை மேற்கே விரிவுபடுத்தினார். கத்தோலிக்கக் கிறித்துவர்களை அவர் துன்புறுத்தினார். இங்கிலாந்தில் ஆட்சி செய்த மூன்றாம் ஜார்ஜ் இந்தச் சீனப் பேரரசரிடம், ஆங்கில வணிகர்கள் சீனாவில் வாணிகம் செய்ய, அனுமதி கேட்டார் (1792). அதற்கு இந்தப் பேரரசர் நீண்டதொரு கடிதம் எழுதி அனுமதி கொடுக்க மறுத்து விட்டார். 'விந்தையான, விலையுயர்ந்த பொருள்கள் எனக்குப் பிடிப்பதில்லை; உங்கள் நாட்டுப் பொருள்கள் எனக்குத் தேவை யில்லை,' என்று அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டார். தாவோ குவாங் (Taokuong, 1821—1850) மற்றொரு முக்கியமான பேரரசர் ஆவார். இவர் காலத்தில்தான் முதல் ஆங்கில-சீனப் போர் (அபின் போர்) நடைபெற்றது. ஹசீன் ஃபெங் (Hsien-feng, 1851—1860) காலத்தில் இரண்டாவது ஆங்கில-சீனப்போரும், தைப்பிங் புரட்சியும் நடைபெற்றன. இவருக்குப் பின் தோவேஜர் சூ ஹசி (Dowager Tzu Hsi, 1860—1908) என்ற பெண் பேரரசி ஆனார்.[1] இவர் காலத்தில் பாக்சர் கிளர்ச்சி போன்ற முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### சீனாவில் ஐரோப்பியரின் ஆதிக்கம்

மஞ்சு அரசர்களின் ஆட்சிக் காலத்தில் பல ஐரோப்பியர்கள் சீனாவில் வாணிகம் செய்வதற்காக அந் நாட்டில் வந்து குடியேறினர். அவர்களைத் தொடர்ந்து கிறித்துவக் குருமார்களும் சமயத்தொண்டு செய்யச் சீனாவிற்குச் சென்றனர். எனினும், அவர்கள் சீன அரசிடமிருந்து முறையான அனுமதியைப் பெற வில்லை. 1692ஆம் ஆண்டு சமயச் சகிப்பு ஆணை வெளியிடப் பட்டது. அதனால் கிறித்தவத் திருச்சபை செல்வாக்குப் பெற்றது. பின்னர்ச் சீனர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் அடிக்கடி பூசல்கள் நடைபெற்று வந்தன. ஐரோப்பியர் வருகையால் பல அறிவியல் கருத்துகள் சீனாவில் பரவின. சீனாவைப் பற்றி மேலை நாட்டினர் அறிந்து கொண்டனர். குறிப்பாக ஃபிரெஞ்சுக்காரர்கள், டச்சுக் காரர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் சீனாவில் அதிகமாகக் குடியேறினார்கள். 18ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆங்கில

[1] இவர் 1860—1908ஆம் ஆண்டுகளில் சீனாவைத் தொடர்ந்து ஆட்சி செய்யவில்லை; விட்டு விட்டு ஆட்சிசெய்தார்.


மஞ்சு ஆட்சியில் சீனா
(கி.பி. 18ஆம் நூற்றாண்டு)
ரஷ்யா
மங்கோலியா
பீகிங்
நான்கிங்
காண்டன்
ஷாங்கை
ஹாங்காங்
ஜப்பான்
டோக்கியோ
கொரியா
பார்மோசா
பிலிப்பைன் தீவுகள்
திபெத்
யார்கண்ட்
இந்தியா
வங்காள விரிகுடா
அரபிக் கடல்
பாரசீகம்
அரேபியா

வணிகர்களே வலிமை மிக்கவர்களாக விளங்கினுர்கள். சீனு விலிருந்து தேயிலையும் உயர்ந்த பட்டும் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. அபின் ஐரோப்பிய வணிகர்களால் சீனுவிற்குக் கொண்டு வரப்பட்டது. அபின் வாணிகத்திற்குப் பல தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. கான்டன் (Canton) துறைமுகப் பகுதியில் தான் அதிகமான ஐரோப்பியர் குடியேறியிருந்தனர். 1784ஆம் ஆண்டு முதல் அமெரிக்கர்கள் சீனுவில் வாணிகம் செய்ய வந்தனர், அவர்களும் மற்ற' ஐரோப்பிய வணிகரைப்போல சீனுவில் வாணிகம் செய்யப் பல சலுகைகளைப் பெற முயன்றனர். அபின் வாணிகத்தில் கொள்ளை இலாபம் பெற்ற வெளி நாட்டவர், சீன அரசு அதைத் தடை செய்திருந்தும், கள்ளத்தனமாக அதைச் சீனுவில் விற்று வந்ததால் சீனுவில் பல போர்கள் நடைபெற்றன.

### முதல் ஆங்கில-சீனப் போர் (முதல் அபின் போர், 1839—1842)

ஆங்கில வணிகர்கள் கேட்ட சலுகைகளைச் சீனஅரசு கொடுக்க மறுத்தது. அது மட்டுமன்றிக் கள்ளத்தனமாக நடைபெற்று வந்த அபின் வாணிகத்தைத் தடைசெய்ய மிகக்கடுமையான நட வடிக்கைகளைச் சீன அரசு எடுத்தது. 1839-ல் ஆங்கில வாணிகர் களிடமிருந்த அபினியை எல்லாம் சீன அரசு அலுவலர்கள் கைப் பற்றினுர்கள். இனி அபின் வாணிகத்தைச் செய்வதில்லை என எழுதிக் கொடுக்குமாறு ஆங்கில வணிகர்களை அவர்கள் வற்புறுத் தினுர்கள். அதற்கு ஆங்கில வணிகர்கள் மறுத்தனர். அதனுல் போர் மூண்டது. தக்க போர்க்கருவிகளுடனிருந்த ஆங்கிலே யர்கள் பெரு வெற்றி பெற்ருர்கள். 1842-ல் ஆங்கிலேயர்கள் சீன அரசுடன், 'நான்கிங் உடன்படிக்கையை'ச் (The Treaty of Nanking) செய்து கொண்டார்கள். அதன்படி ஹாங்காங் (Hong Kong) ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டது. மேலும், ஐந்து துறைமுகங் களைப் பயன்படுத்திக் கொள்ள அவர்கள் அனுமதிக்கப் பட்டார்கள். அவர்களுக்குப் பல வரிச்சலுகைகள் தரப்பட்டன. இந்தப் போர் 'முதல் அபினிப் போர்' என்றும் சொல்லப் படுகின்றது.

சீனுவின் தோல்வியைக்கண்ட அமெரிக்கா மற்றும் ஃபிரெஞ்சு வணிகர்கள் தங்களுக்கும் அத்தகைய சலுகைகள் வேண்டுமென வற்புறுத்தி, சீன அரசுடன் சில அநியாய உடன்படிக்கைகளைச் செய்து கொண்டனர். அதனுல் சீனுவில் அயல்நாட்டவர் ஆதிக்கம் கொஞ்சங்கொஞ்சமாக அதிகரித்தது.

### இரண்டாம் ஆங்கில-சீனப்போர் (1856—1858)

நான்கிங் உடன்படிக்கையால் இருதரத்தாருக்கும் மனநிறைவு ஏற்படவில்லை. சீனர்கள் அயல்நாட்டவருக்குப் பலவிதமான

வாணிகச் சலுகைகள் கொடுப்பதை விரும்பவில்லை. அயல் நாட்டு வாணிகர்கள் வாணிகம் செய்யச் சென்ற இடங்களில் எல்லாம் சீனர்களால் தாக்கப்பட்டனர். அயல்நாட்டு வாணிகர்களுக்கும் சீனர்களுக்கும் அடிக்கடி கைகலப்பு ஏற்பட்டது. அதனுல் 1856-ல் போர் பெருமளவில் மூண்டது. ஆங்கிலேயரும் ஃபிரெஞ்சுக்காரர்களும் ஒன்று சேர்ந்துகொண்டு சீனர்களைத் தாக்கினுர்கள். அவர்கள் கான்டன் முதலிய துறைமுகங்களைக் கைப்பற்றினர். பின்னர் தலைநகரமாகிய பீகிங்கை முற்றுகையிட்டனர். தலைநகரத்தைக் காப்பாற்றவேண்டி, அயலவர்கள் கோரிய சலுகைகளை எல்லாம் கொடுக்கச் சீன அரசு ஒத்துக்கொண்டது. 1858-ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட டியென்ட்ஸின் உடன்படிக்கையின் படி (The Treaty of Tientsin) அபின் இறக்குமதி சட்டப்படி அனுமதிக்கப்பட்டது. ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட ஐந்து துறைமுகங்கள் அல்லாமல் மேலும் பத்துத் துறைமுகங்களை அயல் நாட்டவர் பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அயல்நாட்டு அரசுகளின் பிரதிநிதிகள் பீகிங்கில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டனர். கிறித்துவர்களுக்குச் சமய உரிமை வழங்கப் பட்டது. அவர்கள் விருப்பப்படி கிறித்துவ மதத்தைப் பரப்பவும் அனுமதி கொடுக்கப்பட்டது. வாணிக ஒழுங்கு விதிகள் வகுக்கப் பெற்றன.

**தைப்பிங் புரட்சி (1850—1864)**

மஞ்சு அரசர்கள் அயல்நாட்டவரின் குறுக்கீட்டால் பெருந் தொல்லைகளுக்கு உள்ளானுர்கள். அதே நேரத்தில் சீனர்களாலும் பெருந்துன்பங்களுக்கு ஆளாகவேண்டிய நிலை மஞ்சு அரசர்களுக்கு ஏற்பட்டது. நிலப்பரப்புக்கள் ஏழை உழவர்களைக் கசக்கிப் பிழிந்து வந்தார்கள். அதிக வேலைக்குக் குறைந்த ஊதியம் கொடுத்து வந்தார்கள். இங்கிலாந்துடன் அபினிப் போர்களை நடத்தியதால் சீன அரசு பெருந்தொகையைப் போர் இழப்பீடாக அயல்நாட்டவருக்குக் கொடுத்தது. அதனுல் அரசு, வருவாயைப் பெருக்கப் பல வரிகளை மக்கள்மீது சுமத்தியது, இந்தக் கொடுமைகளைத் தாங்கமுடியாத மக்கள், அரசுக்கு எதிராகப் புரட்சிகள் செய்தனர். அவற்றுள் முக்கியமானது தைப்பிங் புரட்சி (Taiping Rebellion) ஆகும். இது குடியானவர்கள் செய்த கிளர்ச்சியாகும். இந்தப் புரட்சியின் தலைவர் ஹங் ஹ்சியு சுவான் (Hung Hsiu-Chuan) ஆவார். குவாங்ஸீ (Kwangsi) மாகாணத்தில் புரட்சி வெற்றிகரமாக நடைபெற்றது. புரட்சியாளர்கள் கோவில்களையும் விக்கிரகங்களையும் சேதப்படுத்தினுர்கள். அரசு உடைமைகளுக்குப் பெருஞ் சேதம் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான மக்களும் கொல்லப்பட்டனர். பின்னர் அமைதி நிலைநாட்டப்பட்டது.

சீன-ஜப்பானியப் போர் (1894-95)

ஏகாதிபத்திய வெறிகொண்ட ஜப்பான், கொரியாவைக் கைப் பற்றிக்கொள்ள விரும்பியது. அதைச் சீஞ விரும்பவில்லை. இரு நாடுகளும் கொரியாவில் படைகளைக் குவித்தன. இரு நாடுகளுக்கு மிடையே போர் நடைபெற்றது. அந்தப் போரில் நிலப்பரப்பிலும் கடற் பரப்பிலும் சீனப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. போர்ட் ஆர்தர் (Port Arthur), வெய் ஹை வெய் (Wei Hai Wei) ஆகிய சீனத் துறைமுகங்களையும் ஜப்பான் கைப்பற்றிக்கொண்டது. போரில் பெருந்தோல்விகண்ட சீஞ, ஜப்பானுடன் ஷிமோனேசேகி உடன்படிக்கையை (The Treaty of Shimonoseki, 1895) செய்து கொண்டது. அதன்படி, லியோடுங் தீபகற்பம் (Liao-tung), அங்குள்ள போர்ட் ஆர்தர், மற்றும் ஃபார்மோசா (Formosa) தீவு முதலானவற்றைச் சீஞ ஜப்பானுக்குக் கொடுத்துவிட்டது. பெரும் போர் இழப்பீட்டைத் தரச் சீஞ ஒத்துக் கொண்டது. சில சீனத் துறைமுகங்களில் ஜப்பானியக் கப்பல்கள் வரவும் வாணிகம் செய்யவும் அனுமதி கொடுக்கப்பட்டது.

சீஞவில் ஜப்பானின் செல்வாக்கு வளரக்கூடாது எனக் கருதிய ஐரோப்பிய நாடுகள், சீஞவில் சில நகரங்களைக் கைப்பற்றிக் கொள்ளத் திட்டமிட்டன. 1897ஆம் ஆண்டு இரண்டு ஜெர் மானியக் கிறித்துவக் குருமார்கள் சீனர்களால் கொல்லப்பட்டனர் என்று காரணம் காட்டி அதற்கு இழப்பீடாகக் கியாசாவ் (Kiauchau) நகரத்தை ஜெர்மனி கைப்பற்றிக் கொண்டது.

அதே ஆண்டு ரஷ்யா ஜப்பானின் ஆதிக்கத்திலிருந்த போர்ட் ஆர்தர் துறைமுகத்தைக் கவர்ந்துகொண்டது. அதனுடன் டிரான் சைபீரியப் புகைவண்டிப் பாதையை அமைக்கச் சீன அரசாங்கத் திடமிருந்து ரஷ்யா அனுமதியைப் பெற்றது. அதேபோல இங்கி லாந்தும், வெய் ஹை வெய் என்ற துறைமுக நகரத்தைத் தனக் குரியதாக்கிக் கொண்டது. ஃபிரான்சும் அன்னும் (Annam) பகுதியில் சீஞவுக்குரிய சில பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டது.

இந்தச் சீன-ஜப்பானியப் போரிஞல் சீஞ மிகவும் வலிமை குன்றிய நாடு என்பதை ஐரோப்பிய நாடுகள் அறிந்துகொண்டன. அதஞல் அந்த நாடுகள் சீஞவிற்குப் பணிந்து போகாமல், சிறிதும் நியாயமில்லாத முறையில் சீனப் பகுதிகளை ஆக்கிரமித்துக் கொள்ளத் தொடங்கின. இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத் தில் சீஞவிற்கு ஐந்து கோடிப் பவுன் அயல் நாட்டுக் கடன் இருந்தது.

'நூறு நாள்' சீர்திருத்த இயக்கம் (1898)

சீன-ஜப்பானியப் போரிஞல் சீஞ தோல்வியடைந்ததால், அந்த நாட்டில் புரட்சிகரமான மாறுதல்களைக் கொண்டுவரவேண்டு

மெனச் சில சீர்திருத்தவாதிகள் கோரினார்கள். கங் யு வெய் (Kang Yu-wei), லியாங் சி-சோ (Liang Chi-Cho) முதலானவர்கள் 1898 ஆம் ஆண்டு, நாட்டில் கொண்டுவரவேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றி ஓர் இயக்கம் நடத்தினார்கள். அது 'நூறு நாள் சீர்திருத்தம்' (The Reform of Hundred Days) என்று சொல்லப்படுகின்றது. அவர்கள், அரசாங்கத்தை முழுமையாகச் சீர்திருத்தி அமைக்க வேண்டும், மேலை நாட்டு முறையில் கல்வியமைப்பைத் திருத்தி அமைக்கவேண்டும், சீனாவை ஒரு குடியரசாக மாற்றவேண்டும், என்று பேரரசர் குவாங் ஹ்சுவிடம் (Kuang-hsu) கோரினார்கள். பேரரசரும் அவற்றை ஏற்றுக்கொண்டு 1868 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் தேதி ஓர் ஆணையை வெளியிட்டார். சீர்திருத்த வாதிகளும் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால், அவர்களுடைய மகிழ்ச்சி நூறு நாள்தான் நீடித்தது. சீனாவின் அரசியல் அமைப்பு மாறு வதைக் கண்டு அச்சமுற்ற தோவேஜர் சூ ஹ்சி (Dowager Tzu Hsi) 1898ஆம் ஆண்டு செம்டம்பர் 22ஆம் தேதி பேரரசர் குவாங் ஹ்சு என்பவரைக் கவிழ்த்துவிட்டுத் தாமே சீனாவின் பேரரசி ஆனார். மீண்டும் பழைய பிற்போக்கு ஆட்சியே சீனாவில் தொடங்கியது. மக்கள் பெரும் அதிருப்தியில் வாழ்ந்து வந்தார்கள். சுரண்டல் பேர்வழிகளான அயல்நாட்டு வாணிகர்களின் ஆதிக்கத்தினாலும் சீனர்கள் பெருந்தொல்லைகளுக்கு உட்பட்டிருந்தார்கள்.

**பாக்சர் கிளர்ச்சி (Boxer Rebellion, 1900)**

சீனாவின் பல பகுதிகளை ஐரோப்பியர்கள் கைப்பற்றிக்கொண்டு ஆதிக்கம் செலுத்துவதை நாட்டுப் பற்றுமிக்க சீனர்கள் வெறுத் தார்கள். அவர்களை விரட்டியடிக்கச் சீனாவில் ஓர் இயக்கம் தொடங்கியது. அதுவே பாக்சர் இயக்கம் ஆகும். இந்த இயக்கத் திற்கு ஊக்கமளித்தவர் சீனப் பேரரசி தோவேஜர் சூ ஹ்சி (Empress Dowager Tzu Hsi) ஆவார். 1899ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பேரரசி, மாநில ஆளுநர்களுக்கு ஓர் இரகசிய ஆணையை அனுப்பினார்; மக்களைத் தூண்டிவிட்டு, அயல்நாட்டவர் கொல்லப் பட்டு அவர்களின் சொத்துகள் சீனர்களால் கைப்பற்றிக்கொள்ளப் படவேண்டுமென அவர் அந்த ஆணையில் குறிப்பிட்டிருந்தார். அதனால் அந்த ஆண்டின் இறுதியில் நாட்டுப் பற்று மிக்க சீனர்கள் கொதித்தெழுந்தார்கள். நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்த அயல் நாட்டினரை அவர்கள் கொன்று குவித்தார்கள். அவர்களின் சொத்துகளைச் சீனர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். பல வாரங்கள் இந்தக் கிளர்ச்சி பயங்கரமாக நடைபெற்றது. ஷான்டுங் (Shantung) மற்றும் ஹோபே (Hopeh) மாநிலங்களில் நூற்றுக் கணக்கான அயல் நாட்டினரும் மற்றும் சீனக் கிறித்துவர்களும் கொல்லப்பட்டனர். சீன அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கா ததைக் கண்ட அயல்நாடுகள் அதிர்ச்சியடைந்தன. சீனாவிலிருந்த

அயல்நாட்டவர் தங்கள் தாயக அரசுகளின் உதவியை நாடினர். உடனே 1900ஆம் ஆண்டு ஜூன் மாதம் இங்கிலாந்து, ஜப்பான், ரஷ்யா, அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய நாடுகளின் படைகள் சீனுவுக்குச் சென்று பாக்சர் கிளர்ச்சியை ஒடுக்கின. அயல்நாட்டினரின் உயிர்களும் உடைமைகளும் காப்பாற்றப் பட்டன. தலைநகரமாகிய பீகிங் அயல் நாட்டுப் படைகளால் கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. சீன அரசு பணிந்தது. அயல் நாட்டினர் விதித்த எல்லாவிதமான வெட்கக் கேடான நிபந்தனை களுக்கெல்லாம் சீன அரசு உடன்பட்டது.

**பேரரசியின் சீர்திருத்தங்கள் (1902—1908)**

பாக்சர் கிளர்ச்சியினுல் அயல்நாட்டவரிடம் அவமானப்பட்ட சீனப் பேரரசி தோவேஜர் சூ ஹ்சி, அரசை வலுப்படுத்தவும் மக்களின் நல்லெண்ணத்தைப் பெறவும் பலவிதமான உள்நாட்டுச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். அவசியமில்லாத அரசு துறைகள் ஒழிக்கப்பட்டன. பழைய கல்விமுறை நீக்கப்பட்டு மேலைநாட்டு முறையில் கல்வித்திட்டம் அமைக்கப்பட்டது. தலைநகரத்தில் புதிய பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. நாடு முழு வதும் மேலும் பல பள்ளிகளும் கல்லூரிகளும் திறக்கப்பட்டன. 1908ஆம் ஆண்டு ஏறத்தாழப் பதினைன்கு இலட்சம் மாணவர்கள் கல்வி நிறுவனங்களுக்குச் சென்றதாகக் கணக்கிடப்பட்டது. மாணவர்கள் கல்வி கற்க அயல்நாடுகளுக்கு அனுப்பட்டார்கள். இராணுவம் மேல்நாட்டு முறையில் திருத்தியமைக்கப்பட்டது. சீனு முழுவதும் இரயில் பாதைகளைப் போடுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. நாட்டில் வரம்புடைய முடியாட்சியைக் (Limited Monarchy) கொண்டு வருவதற்குப் புதிய அரசியல் சட்டத்தைக் கொண்டு வரப்போவதாகப் பேரரசி அறிவித்தார் (1906).

எனினும் இந்தச் சீர்திருத்தங்களால் சீன மக்கள் மகிழ்ச்சி யடையவில்லை. மஞ்சு ஆட்சியை வீழ்த்தப் புரட்சியாளர்கள் தக்க ஏற்பாடுகளைச் செய்து வந்தனர். 1894ஆம் ஆண்டிலேயே டாக்டர் சன் யாட் சென் (Dr. Sun-Yat Sen) 'சீனப் புத்துயிர்ச் சங்கத்தை' (Chinese Revival Society) அமைத்திருந்தார். அவருடைய கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாத சீன அரசு அவரை நாடு கடத் தியது. எனினும் அவருடைய ஆதரவாளர்கள் அரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்துவந்தனர். இறுதியாக 1911ஆம் ஆண்டு மஞ்சு அரசர்களின் ஆட்சி வீழ்த்தப்பட்டுக் குடியரசு அமைக்கப்பட்டது. தாய்நாடு திரும்பிய டாக்டர் சன் யாட் சென் குடியரசின் தலைவ ரானுர்.

# 18. இந்தியாவில் சமூக-சமயச் சீர்திருத்தங்கள்
## (19ஆம் நூற்றாண்டு)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல சமூக-சமயச் சீர்திருத்த இயக்கங்கள் இந்தியாவில் நடைபெற்றன. மேலை நாட்டவர், குறிப்பாக ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் தங்கள் அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்டதால் இந்தியக்கலாசாரம் பெரிதும்பாதிக்கப் பட்டது. நம் நாட்டில் இந்து மதம், சமண மதம், புத்த மதம், சீக்கிய மதம் முதலானவை நீண்டகாலமாக இருந்துவந்தன. கிறித்தவ மதமும் இஸ்லாம் மதமும் இந்தியாவில் பரப்பப்பட்டன. எனினும், மேலைநாட்டவர் வருகையால் இந்து மதமே குறிப்பிடத் தக்க மாறுதலைப் பெறத் தொடங்கியது. அதில் இருந்த குறைகள் அல்லது சிறப்பு அம்சங்களை அன்னிபெசன்ட் முதலான மேலை நாட்டினரும், ராஜா ராம்மோகன்ராய் முதலான இந்திய அறிஞர் களும் சுட்டிக்காட்டினர். எனவே, இந்தியக் கலாசாரத்தைக் காக்கவும் அதில் உள்ள குறைகளைப் போக்கவும் அல்லது காலத்திற் கேற்ற மாறுதல்களைச் செய்யவும் பல அறிஞர்கள் சமூக-சமயச் சீர்திருத்த இயக்கங்களை நடத்தினர். அதனால் இந்தியர், தங்கள் கலாசாரத்தைப் பற்றி விரிவாக அறிந்துகொள்ளத் தொடங் கினார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இத்தகைய ஒரு மறு மலர்ச்சி இயக்கம் எங்ஙனம் நடைபெற்றது என்பதைக் காண்போம்.

### 1. பிரம்ம சமாஜம்

பிரம்ம சமாஜத்தை நிறுவியவர் ராஜா ராம்மோகன்ராய் (Raja Rammohan Roy) ஆவார். அவர் இதை நிறுவியதற்குக் காரணம் அவருடைய குடும்ப வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சி களே ஆகும்.

1774ஆம் ஆண்டு கடவுள் பக்தி மிக்க பிராமண குடும்ப மொன்றில் ராம்மோகன் வங்காளத்தில் பிறந்தார். இளைஞராக இருக்கும்போதே புரட்சிகரமான கொள்கைகளைப் பின்பற்றினார். 15ஆம் வயதிலேயே 'விக்கிரக வழிபாட்டைக்' (Idol-worship or Idolatry) கடுமையாகத் தாக்கி ஒரு கட்டுரை எழுதினார். வேதங் களில் அது கூறப்படவில்லை எனக் கூறினார். அதனால் அவர்

வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார். அதையே சிறந்த வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு ராம்மோகன் இந்தியாவின் பல்வேறு இடங்களுக்குச் சென்று பல அறிஞர்களின் உரைகளைக் கேட்டுத் தம் அறிவைப் பெருக்கிக்கொண்டார். வங்காளம், பாரசீகம், அரபிக், சமஸ்கிருதம், ஆங்கிலம், ஃபிரெஞ்சு, இலத்தீன், கிரேக்கம், ஹீப்ரு ஆகிய மொழிகளைக் கற்றுக்கொண்டார். அந்தந்த மொழிகளில் இருந்த சமய நூல்களை அவர் கற்றார்.

1805ஆம் ஆண்டு வங்காளத்தில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பணியில் சேர்ந்தார். அதில் 1814ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தார்.

ராம்மோகன் தம்முடைய கருத்துகளை நடைமுறைப்படுத்த 1828-ல் பிரம்ம சமாஜத்தை நிறுவினார். 'கடவுள் ஒருவரே; அவரைத் தூய உள்ளத்துடன் மனத்துக்குள் வழிபட்டால்போதும்; விக்கிரக வழிபாடு தேவையில்லை; மக்கள் அனைவரும் ஒரு தாய் மக்கள்போல் வாழவேண்டும்; ஒருவர் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் மற்ற மதங்களையும் அவற்றின் புனித நூல்களையும் மதிக்கவேண்டும்; எல்லா மதங்களைச் சேர்ந்தவர்களும் இதில் சேரலாம்,' என்பவை பிரம்ம சமாஜத்தின் நோக்கங்களாகும். இதில் சேர்ந்திருந்த பல்வேறு சமயங்களைச் சேர்ந்தவர் அனைவரும் ஒருசேர இறைவனை வணங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

வில்லியம் பென்டிங்க் (William Bentinck)இந்தியாவில் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது, மெக்காலேயின் (Macaulay) பரிந்துரையின்படி, ஆங்கிலம் பயிற்றுமொழியாகவும் வேறு பல மேலை நாட்டுப் பாடங்களும் மாணவர்களுக்குக் கற்பிக்கத் தீர்மானிக்கப் பட்டது. இதை இந்தியர்கள் எதிர்த்தனர். ஆனால், ராம்மோகன் அதை ஆதரித்தார். ஆங்கிலத்தையும் மேலைநாட்டு அறிவியல் பாடங்களையும் கற்றால்தான் இந்தியா முன்னேறும் என்று கூறினார். பழைய இந்திய இலக்கியங்களையே மீண்டும் மீண்டும் படித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை என்றார்.

'சதி' என்ற உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ராம்மோகன் கடுமையாக எதிர்த்தார். அதை ஒழிக்க வில்லியம் பென்டிங்க் மேற்கொண்ட முயற்சிகளுக்கு அவர் தம் முழு ஆதரவைத் தெரிவித்தார். விதவை மறுமணத்தை அவர் ஆதரித்துப் பிரசாரம் செய்தார். இங்கிலாந்திலும் வேறு பல ஐரோப்பிய நாடுகளிலும் ராம்மோகனின் புகழ் பரவியது. அந்த நாடுகள் இவரை மிகச் சிறந்த சீர்திருத்தவாதியாகக் கருதின.

1831ஆம் ஆண்டு மொகலாயப் பேரரசர் இரண்டாம் அக்பர் (1806-37) ராம்மோகனுக்கு 'ராஜா' என்ற பட்டத்தைக்

கொடுத்து இங்கிலாந்துக்கு அனுப்பினுர். அங்குத் தம் பணியை முடித்தபின் 1833ஆம் ஆண்டு அந்நாட்டிலேயே (பிரஸ்டல் என்ற நகரத்தில்) இயற்கை எய்தினுர்.

ராம்மோகன் இறந்தாரெனினும் அவருடைய கொள்கைகளையும் அவர் நிறுவிய பிரம்ம சமாஜத்தின் நோக்கங்களையும் அவரை அடுத்து வந்த சீர்திருத்தவாதிகள் தொடர்ந்து பரப்பி வந்தனர். குறிப்பாக, தேவேந்திரநாத் தாகூர் (ரவீந்திரநாத் தாகூரின் தந்தை) பிரம்ம சமாஜத்திற்கு உயிரூட்டி அதன் பணிகளைப் பெருக்கினுர். அதேபோல உண்மையான பற்றுடையவரும் சிறந்த பேச்சாளருமான கேசவ சந்திர சென், சமாஜத்தின் கொள்கைகளை வட இந்தியா முழுவதும் பரப்ப அரும்பாடு பட்டார்.

ராஜா ராம்மோகன்ராய் 19ஆம் நூற்றுண்டு இந்தியாவில் வாழ்ந்த தலைசிறந்த சீர்திருத்தவாதி என்பதில் ஐயமில்லை. அவர் 'இந்திய மறுமலர்ச்சியின் தந்தை' என்றும், 'இந்திய தேசத்தின் தீர்க்கதரிசி' என்றும், 'புதிய யுகத்தின் முன் அறிவிப்பாளர்' என்றும் பலவாறு புகழப்படுகின்றுர்.

## 2. பிரார்த்தன சமாஜம்

இது மகாராஷ்டிரத்தில் கேசவ சந்திரசென் என்பவரின் ஆதரவுடன் 1867-ல் நிறுவப்பட்டது. சமூகச் சீர்திருத்தத்திற்காகவும், ஓரே கடவுள்கொள்கையை வற்புறுத்துவதற்காகவும் பிரார்த்தன சமாஜம் தொடங்கப்பட்டது. நீதிபதி M.G. ரானடே, சர் R. G. பண்டார்கர் முதலான பேரறிஞர்கள் இதில் உறுப்பினர்களாக இருந்தார்கள். இந்த சமாஜம் இரவுப் பள்ளிகளை நடத்தி முதியோர்க்குக் கல்வி புகட்டியது. மகளிர் சங்கங்களை அமைத்துப் பெண்கள் கல்வி கற்கவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியது. அனுதைகளுக்கான பள்ளிகளை நடத்தி அவர்களுக்குக் கல்வியை வழங்கியது. தாழ்த்தப்பட்டோர் நலன்களைக் காக்க எல்லா நடவடிக்கைகளையும் சமாஜம் மேற்கொண்டது நீதிபதி M.G ரானடே விதவைகள் மறுமணத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்தார். 'தக்கணக் கல்விக் கழகம்' (Deccan Education Society) அவரால் நிறுவப்பட்டது. தன்னலமற்ற முறையில் நாட்டுக்குத் தொண்டு செய்ய இளைஞர்களைப் பயிற்றுவிப்பதும் அவர்களுக்குக் கல்வி வழங்குவதும் அந்தக் கழகத்தின் நோக்கமாகும்.

## 3. ஆரிய சமாஜம்

சுவாமி தயானந்த சரஸ்வதி என்பவரால் 1875ஆம் ஆண்டு ஆரிய சமாஜம் நிறுவப்பட்டது. மேலைநாட்டு அறிவியல் கருத்துகளையும் பகுத்தறிவுக் கொள்கைகளையும் அடிப்படையாகக்

கொண்டு பிரம்ம சமாஜம், பிரார்த்தன சமாஜம் ஆகியவை நிறுவப்பட்டுச் செயல்பட்டு வந்தன. அவற்றுக்கெதிராக இந்து மதத்தின் பழைமையையும் பெருமையையும் மக்களுக்கு உணர்த்த ஆரிய சமாஜம் நிறுவப்பட்டது. மேலைநாட்டுக் கொள்கைகளில் இந்தியாவுக்கு ஏற்றவற்றை நாம் எடுத்துக்கொள்ளலாம். அதே நேரத்தில் இந்தியாவின் பழம் பெருமையையும் இந்து மதத்தின் நல்ல கருத்துகளையும் மீண்டும் நிலைநாட்டவேண்டும் எனச் சுவாமி தயானந்தர் கருதினர். 'மீண்டும் வேதங்களுக்குச் செல்லுங்கள் (Go back to the Vedas) என்பது இவருடைய கொள்கையாகும். புராணங்கள் முதலான எல்லாவற்றையும்விட வேதங்களே மிக உயர்ந்தவை என இவர் கூறினர்.

பல சீர்திருத்தக் கொள்கைகளையும் ஆரிய சமாஜம் பின் பற்றியது. இந்துக்கள் அல்லாதவர்கள், இந்து மதத்தில் சேர விரும்பினல் அவர்கள் இந்து மதத்தில் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள். உருவ வழிபாடு கூடாது; கடவுள் ஒருவரே என்ற கருத்துகளையும் ஆரிய சமாஜம் வலியுறுத்திக் கூறியது. இந்து மதத்தில் உள்ள சாதிமுறை (Caste-system) ஒழியவும், குழந்தைத் திருமணங்களைத் தடுக்கவும் இந்த சமாஜம் அரும்பாடுபட்டது. மகளிர் கல்வியையும் விதவைகள் மறுமணத்தையும் சமாஜம் ஆதரித்தது.

சுவாமி தயானந்தர் இந்தியரிடையே நாட்டுப் பற்றையும் வளர்த்தார். ஆங்கில ஆதிக்கத்தின்கீழ் இந்தியர் பட்ட தொல்லை களை அவர் நேரில் கண்டவர். எனவே, 'இந்தியா இந்தியருக்கே' என்ற கொள்கையைப் பரப்பினர். அயலவரின் ஆட்சி நல்லாட்சி யாயினும், அது சுயாட்சிக்கு ஈடாகாது என்று அவர் கூறினர்.

ஆரிய சமாஜம் பல பள்ளிகளையும் கல்லூரிகளையும் நிறுவியது. நாட்டுப்பற்று மிக்க நூற்றுக்கணக்கான தலைவர்களை ஆரியசமாஜம் உருவாக்கியது. லாலா லஜ்பத்ராய் முதலான தலைவர்கள் இந்த சமாஜத்தைச் சேர்ந்தவர்களே ஆவர்.

### 4. இராமகிருஷ்ண மடம்

இராமகிருஷ்ண பரமஹம்சரின் (1836 — 1886) ஈடுஇணையற்ற சீடர் சுவாமி விவேகானந்தர் ஆவார். அவரால் 1896ஆம் ஆண்டு இராமகிருஷ்ண மடம் (Ramakrishna Mission) நிறுவப்பட்டது.

இராமகிருஷ்ண பரமஹம்சர் கல்கத்தாவுக்கு அருகில் உள்ள ஒரு சிறிய கோவிலில் ஏழைப் புரோகிதராக (Priest) பணியாற்றி வந்தார். காளி அவர் விரும்பி வணங்கிவந்த தெய்வமாகும். முறை யான கல்வியறிவையும் அவர் பெறவில்லை. ஆழ்ந்த தெய்வ பக்தி மிக்க அவர் தனிமையில் தூய்மையான ஆத்மீக வாழ்க்கையை

நடத்தினார். 'எல்லா மதங்களும் ஒரே உண்மையைத்தான் கூறு கின்றன. எல்லா மதத்தினரும் ஒரே கடவுளைப் பல பெயர்களால் வணங்குகின்றனர். பல மதத்தினர் பலவழிகளைப் பின்பற்றினாலும் இறுதி இலட்சியம் இறைவனை அடைவது ஒன்றே' என்று அவர் கூறினார். தம்முடைய கருத்துகளைச் சிறு சிறு நீதிக்கதைகள் (Parables) மூலமாக விளக்கினார். கல்கத்தா நகரத்திலிருந்து ஏராளமான மக்கள் அவரைத் தரிசனம் செய்து அவருடைய கருத்துகளை அறிந்தனர். ஜெர்மானிய அறிஞர் மாக்ஸ் முல்லர் (Max Muller) இவருடைய பெருமையைப்பற்றி வானளாவப் புகழ்கின்றார். 'கல்வியறிவு இல்லாத இராமகிருஷ்ணருடன், ஐரோப்பாவின் மிகச்சிறந்த அறிஞர்களை ஒப்பிடும்போது அவர் கள் இருட்டில் தேடி அலையும் கண்மூடிகளாகத் தோன்று கின்றனர்' என்று அவர் கூறுகின்றார்.[1]

இராமகிருஷ்ணரிடம் சென்று அறிவு ஒளி பெற்றவர்களுள் தலைசிறந்தவர் சுவாமி விவேகானந்தர் (*1863—1902*) ஆவார். அவருடைய இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா என்பதாகும். அவர் இளமையில் நாத்திகராக இருந்தார். கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் பட்டதாரியான பின் ஒரு நாள் அவர் இராமகிருஷ்ண பரமஹம்சரைக் காணச்சென்றார். நரேந்திரநாத் வினவிய வினாக் களுக்கெல்லாம் இராமகிருஷ்ணர் மிக அமைதியான முறையில் பதிலளித்தார். அந்த இளைஞனின் மெய்யறிவுக் கண் திறக்கப்பட் டது. அவர் இராமகிருஷ்ணரின் மிகச் சிறந்த சீடரானார்.

வங்கமொழியிலும் ஆங்கிலத்திலும் தலைசிறந்த பேச்சாள ரான விவேகானந்தர் தம் 'குரு' வின் பரந்த கருத்துகளை உலகத் தின் எல்லாப் பகுதிகளிலும் பரப்ப முயன்றார். அவருடைய ஆழ்ந்த அறிவையும், பேச்சாற்றலையும், கம்பீரமான உடலமைப் பையும் கண்டு மயங்காதவர்கள் எவரும் இலர். *1893*ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள சிகாகோ (Chicago) நகரத்தில் நடைபெற்ற உலகச் 'சமயங்களின் மாநாட்டில்' (Parliament of Religions) கலந்துகொண்டு, இராமகிருஷ்ணரின் கருத்துகளை விளக்கி, மிகச்சிறந்த ஆங்கில உரையாற்றினார். 'நதிகள் பல இருப் பினும் அவை அனைத்தும் இறுதியில் கடலில் கலக்கின்றன; அது போல மதங்கள் பலவாயினும் அவை அனைத்தும் ஒரே கடவுளைப் பற்றிக் கூறுகின்றன,' என்று விவேகானந்தர் விளக்கினார். அவரு டைய விளக்கங்களைக் கண்டு அங்குக் கூடியிருந்த உலகச் சமயத் தலை வர்கள் வியந்தனர். விவேகானந்தரின் புகழ் உலகெங்கும் பரவி யது. அமெரிக்காவின் பல இடங்களில் இராமகிருஷ்ண மடங்கள் நிறுவப்பட்டு, அவருடைய கொள்கைகள் பரப்பப்பட்டன.

1 'Illiterate Ramakrishna in comparison with whom the brightes intellects of Europe are mere gropers in the dark'—Max Muller.

இந்தியாவில் இராமகிருஷ்ண மடம் பல பள்ளிகளையும் கல்லூரிகளையும் தொடங்கி அவருடைய கருத்துகளைப் பரப்பி வருகின்றது. கடந்த எண்பது ஆண்டுகளாக இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் இந்த மடம் அரும்பணியைச் செய்துவருகின்றது.

விவேகானந்தரின் பணியினால் இந்துக் கலாசாரம் புத்துயிர் பெற்றது. எந்த ஐரோப்பியக் கலாசாரத்திற்கும், இந்தியக் கலாசாரம் தாழ்ந்தது அன்று என்ற எண்ணத்தை இந்தியரிடையேயும் ஐரோப்பியரிடையேயும் நிலைநாட்டச் செய்தவர் விவேகானந்தர் ஆவார். இந்துக் கலாசாரத்தின்மீது பற்றையும் தேசிய உணர்வையும் இளைஞர்களிடையே அவர் ஏற்படுத்தினார். 'எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் நாட்டுக்குத் தொண்டு செய்யுங்கள்,' என்றும் 'உறுதியாய் இருங்கள், எதைக் கண்டும் அஞ்சாதீர்கள்' என்றும் அவர் இளைஞர்களுக்கு அறிவுறுத்தினார்.

5. பிரம்மஞான சபை (Theosophical Society)

ரஷ்யாவைச் சேர்ந்த H. P. ப்ளாவட்ஸ்கி (Madame H. P. Blavatsky) என்ற அம்மையாரும், அமெரிக்காவைச் சேர்ந்த இராணுவ அதிகாரி H. S. ஆல்காட் (Colonel H. S. Olcott) என்பவரும் 1875ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிரம்மஞான சபையை நிறுவினார்கள். அவர்கள் 1879ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்து 1886ஆம் ஆண்டு சென்னை நகரத்தில் உள்ள அடையாற்றில் அந்தச் சபையை அமைத்தார்கள். ஐரோப்பிய நாகரிகத்தோடு தொடர்பு கொண்டாலும், இந்து மதம் புத்துயிர் பெற்று நிலையான மதமாக இருக்கவேண்டும் என்பதற்காகவே இது நிறுவப்பட்டது. உலக மதங்களுக்கெல்லாம் பழமையானது, வாழ்க்கைத் தத்துவங்களைச் சரியான முறையில் விளக்கவல்லது இந்துமதமே என்று மேலைநாட்டவரும் உணர்ந்ததால்தான் இரண்டு மேலைநாட்டவரே இச் சபையை நிறுவினார்கள். இந்தச் சபையின் முழு வெற்றிக்குக் காரணமாய் இருந்தவர் அன்னிபெசன்ட் (Annie Besant) அம்மையார் ஆவார். அவர் 1889ஆம் ஆண்டு இச் சங்கத்தில் சேர்ந்தார். 1893ஆம் ஆண்டு தமது நாற்பத்து ஆறாவது வயதில் இந்தியாவிற்குவந்து இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டார்.

இந்து மதம் புத்துயிர் பெற்றால்தான் இந்தியா முன்னேறும் என்று அன்னிபெசன்ட் உறுதியாக நம்பினார். 1893ஆம் ஆண்டு தம்முடைய 'வாழ்க்கை வரலாற்றில்', 'முதலாவதாக நான் இந்தியாவில் செய்யப்போவது என்னவென்றால், பழம்பெருமை வாய்ந்த மதங்களுக்குப் புத்துயிரூட்டி, அவற்றை வலுப்படுத்தி உயர்நிலைக்குக் கொண்டு வருவதே ஆகும்' என்று அந்த அம்மையார் எழுதினார். தம் கொள்கையை நடைமுறைப்படுத்த, உத்தரப்

பிரதேசத்தில் உள்ள காசி (Benares) நகரத்தில் மத்திய இந்துப் பள்ளியை (Central Hindu School) பெசன்ட் நிறுவினர். இந்தப் பள்ளி இந்துமதப் பற்றும் நாட்டுப்பற்றும் மிக்க இளைஞர்களை உருவாக்குவதில் அரும்பணி செய்தது. இது கல்லூரியாக வளர்ந்துப் பின்னர் 1915ஆம் ஆண்டு காசி இந்துப் பல்கலைக் கழகமாக (Benares Hindu University) மலர்ந்தது.

பிரம்மஞான சபையின் கிளைகள் இந்தியாவில் பல்வேறு இடங்களில் உள்ளன. அவை சமூக-சமயச் சீர்திருத்தப் பணிகளைச் செய்தன; இன்றும் செய்து வருகின்றன.

**விளைவுகள்**

மேலே கூறப்பட்ட நிறுவனங்கள் செய்துவந்த சீர்திருத்தப் பணிகளால் இந்து மதம் புத்துயிர் பெற்றது. மற்ற எந்த மதத்தையும்விட அது தாழ்ந்தது அன்று; உயர்ந்ததே என்று இந்துக்கள் உணர்ந்தனர். காலத்திற்கு ஏற்ற மாறுதல்களை இந்துக்கள் ஏற்றுக் கொண்டனர். 'சதி' என்ற கொடுமையான 'உடன்கட்டை ஏறும்' பழக்கம் கைவிடப்பட்டது. அதைச் சட்டவிரோதமாக்க 1829ஆம் ஆண்டு வில்லியம் பெண்டிங்க் ஒரு சட்டத்தை இயற்றினர். குழந்தைத் திருமணங்கள் நடைபெறுவது பெருமளவு தடுக்கப் பட்டது. விதவை மறுமணங்கள் பல நடைபெற்றன. சில அரசியல் தலைவர்களும் இந்தத் துறையில் மற்றவர்களுக்கு வழி காட்டிகளாக அமைந்தனர். விதவை மறுமணத்தைச் சட்டபூர்வமாக்கி, 1856ஆம் ஆண்டு அரசு சட்டத்தை இயற்றியது. பெண்கள் கல்வி கற்கவேண்டியதன் அவசியத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். ஆடவரும் பெண்டிரும் சமமான உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றனர்கள்.

மேலைநாட்டுக் கல்வியை இந்தியர்கள் ஏற்றுக்கொண்டனர். ஆங்கில மொழி வாயிலாக மேலைநாட்டுக் கலைகளையும் அறிவியல் பாடங்களையும் இந்தியர்கள் விரும்பிக் கற்றுக்கொண்டார்கள். பெண்களும் மேலைநாட்டுக் கல்வியைக் கற்றதால் வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்காமல், நாட்டுத்தொண்டு செய்ய, விடுதலை இயக்கத்தில் கலந்துகொள்ள, அரசியல் அரங்குக்கு வந்தார்கள். சமூக-சமயச் சீர்திருத்த இயக்கங்களால் தன்னலமற்ற, மக்கள் தொண்டு செய்யக்கூடிய, நாட்டுப்பற்றுமிக்க இளைஞர்கள் உருவானர்கள் என்பதில் ஐயமில்லை. தாழ்த்தப்பட்டோரின் (Depressed Classes) சமூக-பொருளாதார நிலை உயர இந்த இயக்கங்கள் அரும்பணியைச் செய்தன.

# VI. (அ) இருபதாம் நூற்றாண்டு உலகம்

## 19. முதல் உலகப் போர்
## (1914—1918)

உலக வரலாற்றில் முதல் உலகப் போரைப் போன்ற பயங்கர மான போர் அதற்குமுன் எப்பொழுதும் நடைபெற்றதில்லை. நாடுகளின் வளர்ச்சிக் கட்டங்களில் போர்கள் தவிர்க்க முடியா தவையெனினும், முதல் உலகப் போரைப்போன்று கொடுந் துயரை வேறு எந்தப் போரும் ஏற்படுத்தவில்லை. அப்போரில் இறந்துபோன இராணுவ வீரர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு கோடி ஆகும். இறந்துபோன பொதுமக்கள் ஒருகோடியே முப்பது இலட்சம் பேர் ஆவர். படுகாயமடைந்தவர்கள் இரண்டு கோடி மக்கள். போரினால் அனாதையானவர்கள் தொண்ணூறு இலட்சம் பேர். விதவைகளானவர் ஐம்பது இலட்சம் பெண்கள். அகதி களானவர் ஒரு கோடியினர்.[1] இவ்வளவு பயங்கரமான போர் ஏன் நடைபெற்றது? அதற்கான காரணங்கள் கீழ்வருமாறு :

### காரணங்கள்

(1) ஜெர்மனியின் ஏகாதிபத்திய வெறி : ஜெர்மனியை ஐக் கியப்படுத்தி, அதன் பாதுகாப்பிற்காக, ஐரோப்பிய நாடுகளுடன் பல இராஜதந்திர உடன்படிக்கைகளை பிஸ்மார்க் (Bismarck) செய்துகொண்டார். அவருடைய ஆற்றலை அறியாத இரண்டாம் கெய்சர் வில்லியம், அவரை 1890-ல் பதவியிலிருந்து நீக்கினார். பின்னர் ஜெர்மனியின் வெளிநாட்டுக் கொள்கையைத் தாமே கையாளத்தொடங்கினார். ஜெர்மனியை மேலும் விரிவடையச் செய்தால் அந்நாடு அழிந்துவிடும் என்பதை பிஸ்மார்க் அறிந் திருந்தார். ஆனால், அதை வில்லியம் அறியவில்லை. ஜெர்மனியை

[1] *Vide* Pandit Jawaharlal Nehru, 'Glimpses of World History' (1948), p. 637.


1914-ல் ஐரோப்பா
ரஷ்யா
போலந்து
ஜெர்மனி
ஆஸ்திரியா-ஹங்கேரி
பிரான்ஸ்
ஸ்பெயின்
இத்தாலி
செர்பியா
பல்கேரியா
கருங்கடல்
மத்தியதரைக் கடல்
ஆப்பிரிக்கா
வட கடல்
டெ டென்மார்க்
ஹா ஹாலந்து
பெ பெல்ஜியம்
லக் லக்சம்பர்க்
ஸ் ஸ்விட்சர்லாந்து
மா மாண்டிநீக்ரோ
அ அல்பேனியா
து துருக்கி

உலகிலேயே முதல்தரமான நாடாக மாற்ற வில்லியம் திட்டமிட்டார். அதைத் தம்மால் செய்யமுடியும் என்று உறுதியாக அவர் நம்பினர். அதற்காக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்ற எதிர் நடவடிக்கைகளுக்குக் காரணமாயின. வலிமை குன்றியிருந்த துருக்கிக்குப் பலவிதமான பொருளாதார உதவிகளை ஜெர்மனி செய்து, அங்குத் தன் செல்வாக்கை நிலைநாட்டியிருந்தது. அதனுல், இங்கிலாந்தும் ரஷ்யாவும் ஜெர்மனியின்மீது பொருமை கொண்டன.

(2) **வாணிகப் போட்டி:** தொழிற்புரட்சியினுல் ஏராளமான வாணிகப் பொருள்களை ஐரோப்பிய நாடுகள் உற்பத்தி செய்தன. அவற்றை விற்க ஒவ்வோர் ஐரோப்பிய நாடும் அயல்நாட்டுச் சந்தைகளைத் தேடி அலைந்தன. அதனுல், அந் நாடுகளுக்கிடையே கடும்போட்டியும் பகையுணர்வும் ஏற்பட்டன. குறிப்பாக, புதிதாகத் தொழில்வளம் பெற்ற ஜெர்மனி தன் பொருள்களை விற்க இங்கிலாந்துடன் போட்டியிட்டது. இங்கிலாந்து பல குடியேற்றங்களைப் பெற்றிருந்தது. அதனுல் தன் பொருள்களை விற்பது எளிதாயிற்று. ஆனுல், ஜெர்மனி அந்தச் சந்தைகளைக் கைப்பற்றப் பெருமுயற்சிகளை எடுத்துக்கொண்டது. இதை இங்கிலாந்து முறியடிக்க முற்பட்டது.

(3) **ஃபிரான்சின் பழியுணர்ச்சி :** *1871*–ல் ஜெர்மனி ஃபிரான்சிடமிருந்து அல்சாஸ்-லொரெய்ன் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டது. அப் பகுதிகளை மீண்டும் பெறவும், ஜெர்மனியைப் பழிவாங்கவும் தக்க சமயத்தை ஃபிரான்ஸ் எதிர்நோக்கியிருந்தது. ஃபிரான்சில் இரும்பு-எஃகு தொழிலை நடத்தியவர்கள், லொரெய்ன் என்ற கனிவளம் மிக்க சுரங்கங்கள் ஜெர்மனிக்குப் போய்விட்டதால் தொழிலை நடத்த முடியாமல் தொல்லைக்கு உள்ளானுர்கள். அதே லொரெய்ன் சுரங்கங்களால் ஜெர்மனியின் தொழில் வளர்ச்சி வியத்தகு வேகத்துடன் செல்வதைக் கண்ட ஃபிரெஞ்சு மக்கள் கொதிப்படைந்தனர்.

(4) **கூட்டணிகளின் பகைமைப் போக்கு :** பிஸ்மார்க் தனது அரசியல் திறத்தால் ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய மூன்று நாடுகளுக்கிடையில் *1882*-ல் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தினர். இம் மூன்று நாடுகளின் அணி 'முக்கூட்டு உடன்பாடு' (Triple Alliance) என்று அழைக்கப்பட்டது. ஃபிரான்சைத் தனிமைப்படுத்தவே பிஸ்மார்க் இவ்வாறு செய்தார். ஃபிரான்ஸ் மத்தியதரைக் கடலில் கொண்டிருந்த ஆதிக்கத்தைக் கண்டு

அஞ்சியதால்தான் இத்தாலி இந்த அணியில் சேர்ந்தது.[1] தனித்து நின்ற ஃபிரான்ஸ் நட்பு நாட்டைத் தேடியது. அதன் விளைவு 1895ஆம் ஆண்டு ஃபிரான்ஸ் ரஷ்யாவுடன் நட்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. ஜெர்மனி இங்கிலாந்துடன் கடுமையான போட்டி யிட்டுப் பகையுணர்வைக் காட்டியது. இந்நிலையில் நீண்டகால மாகப் பகைமை நாடுகளான இங்கிலாந்தும் ஃபிரான்சும் 1904-ல் நட்பு ஒப்பந்தம் செய்துகொண்டன. அதேபோல் இங்கிலாந்து ரஷ்யாவுடன் நட்பு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது (1907). அதாவது இங்கிலாந்து, ஃபிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூன்று நாடு களும் ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு எதிரான அணியை உருவாக்கின. இது 'முக்கூட்டு நட்பு' (Triple Entente) என்று அழைக்கப்பட்டது. இங்ஙனம் ஐரோப்பாவின் முக்கிய நாடுகள் இருவேறு எதிர் அணிகளை ஏற்படுத்திக்கொண்ட தால் போர் தவிர்க்க முடியாததாயிற்று.

(5) படைப் பெருக்கம் : ஐரோப்பிய வல்லரசுகள் ஆண்டுக்கு ஆண்டு படைவீரர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக்கொண்டே சென்றன. தங்கள் நாட்டின் தற்காப்பிற்காக என்று கூறி அவை அதிகரித்த படைபலம் ஒவ்வொரு நாடும் இன்னொரு நாட்டைச் சந்தேகக் கண்ணோடு பார்க்கவைத்தது. அமைதிக்காலத்திலேயே ஃபிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் ஒவ்வொன்றும் சுமார் ஐந்து இலட்சம் வீரர்களைக்கொண்ட படையை வைத்திருந்தன. 1914-ல் அவை ஒவ்வொன்றும் சுமார் நாற்பது இலட்சம் வீரர்கள் கொண்ட படையை உருவாக்கின. இதிலிருந்து அந்த நாடுகளுக்கு எவ்வளவு போர் வேட்கை இருந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். ஜெர்மனி பலம் பொருந்திய கப்பற்படையை உருவாக்கியது. ஜெர்மனி உருவாக்கிய ஒவ்வொரு போர்க் கப்ப லுக்கும் இரு போர்க் கப்பல்கள் வீதம் இங்கிலாந்து கப்பற்படை யைப் பெருக்கியது. போர் மூண்டால் தங்கள் வலிமையைக் காட்ட அவை ஆயத்தமாய் இருந்தன.

(6) மொராக்கோவில் ஃபிரான்சின் ஆதிக்கம் : வடமேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மொராக்கோவில் (Morocco) ஃபிரான்சின் ஆதிக்கத்தை ஜெர்மனி விரும்பவில்லை. இரண்டாம் கெய்சர் வில்லி யமின் தலையீட்டால் மொராக்கோவுடன் வாணிகம் செய்ய எல்லா அரசுகளுக்கும் உரிமை வழங்குவதென்று 1906-ல் நடைபெற்ற

[1] 1915ஆம் ஆண்டு இத்தாலி இந்த அணியிலிருந்து விலகி ஃபிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுடன் சேர்ந்துகொண்டது. ஏனெனில், இத்தாலியர் அதிக அளவில் வாழ்ந்துவந்த டிரென்டினோ (Trentino), டிரிஸ்டே (Trieste) ஆகிய பகுதிகளை ஆஸ்திரியாவிடமிருந்து இத்தாலி பெற விரும் பியது.

அல்ஜிசிராஸ் மாநாடு (Conference of Algiciras) தீர்மானித்தது. ஆனால், மொராக்கோவில், உள்நாட்டுக் குழப்பம் என்று காரணம் காட்டி ஃபிரான்ஸ் தனது படைகளை அனுப்பி, மொராக்கோவை ஆக்கிரமித்துக்கொண்டது. ஆத்திரம் கொண்ட ஜெர்மனி உடனே இரு போர்க்கப்பல்களை மொராக்கோவிற்கு அனுப்பியது. ஃபிரான்சுக்கு உதவி செய்யும் எண்ணத்துடன் இங்கிலாந்தும் ஒரு போர்க் கப்பலை அனுப்பியது. அச்சம் கொண்ட ஜெர்மனி பின்வாங்கியது. இந்த நிகழ்ச்சி 1911-ல் நடைபெற்றது. இதைத் தனக்கு ஏற்பட்ட பெரிய அவமானமாக ஜெர்மனி கருதியது. இங்கிலாந்தையும் ஃபிரான்சையும் பழிவாங்குவதற்குத் தகுந்த நேரத்தை ஜெர்மனி எதிர்பார்த்துக்கொண்டிருந்தது.

(7) **பால்கன் பிரச்சினை :** துருக்கியின் வலிவின்மையைப் பயன்படுத்திக்கொண்டு, ஜெர்மனியின் உதவியுடன், ஆஸ்திரியா 1908ஆம் ஆண்டு பாஸ்னியா (Bosnia), ஹெர்ஸிகோவினா (Herzegovina) ஆகிய பகுதிகளைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. அப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் ஸ்லாவ்கள் (Slavs) ஆவர். எனவே, அவற்றைத் தன் ஆட்சியின்கீழ்க் கொண்டுவர செர்பியா (Serbia) துடித்தது. அதற்காக ரஷ்யாவின் உதவியை அது நாடியது. உடனடியாக உதவி செய்ய ரஷ்யா விரும்பவில்லை. ஏனெனில், ஆஸ்திரியா தாக்கப்படுமானால், ஜெர்மனி ஆஸ்திரியாவின் உதவிக்கு வரும்; பல நாடுகள் போரில் கலந்துகொள்ள வேண்டியதாகிவிடும். இந்த நிலையில் செர்பியா ஆஸ்திரியாவிற்கு எதிரான பிரசாரத்தை மேற்கொண்டது. ரஷ்யாவும் அதற்கு உடந்தையாக இருந்தது. செர்பியாவின் பிரசாரம் மிகப் பயங்கரமான விளைவை ஏற்படுத்தியது. கிறித்துவ நாடுகளான பல்கேரியா, கிரீஸ், செர்பியா, மாண்டினிக்ரோ ஆகிய நாடுகள் துருக்கியின்மீது போர்தொடுத்தன. இதுவே 1912-ல் நடைபெற்ற முதல் பால்கன் போர் (The First Balkan War) ஆகும். இதன் விளைவாக கான்ஸ்டான்டிநோபிளைச் (Constantinople) சுற்றியுள்ள பகுதியைத் தவிர மற்ற எல்லா ஐரோப்பியப் பகுதிகளையும் துருக்கி இழந்தது. துருக்கியினிடமிருந்து கைப்பற்றிய பகுதிகளைப் பங்கு போட்டுக்கொள்வதில் கிறித்துவ நாடுகளுக்குள் தகராறு ஏற்பட்டது. கிரீஸ், செர்பியா, மாண்டினிக்ரோ ஆகியவை பல்கேரியாவுடன் போர் செய்தன. இது 1913-ல் நடைபெற்ற இரண்டாம் பால்கன் போர் (The Second Balkan War) ஆகும். இப் போரில் துருக்கியும் பல்கேரியாவிற்கு உதவியது. ஆனால், பல்கேரியா தோற்கடிக்கப்பட்டது. எனவே, பல்கேரியா சில பகுதிகளை வெற்றி பெற்ற நாடுகளுக்குத் தரவேண்டியதாயிற்று. இப் போரினால் பெரும் இலாபம் அடைந்தது செர்பியா

தான். செர்பியாவின் இந்த வளர்ச்சியை ஆஸ்திரியா விரும்ப வில்லை. அதனுல், செர்பியாவைத் தாக்க ஆஸ்திரியா ஆயத்த மாயிற்று.

(8) உடனடி காரணம் — ஆஸ்திரிய இளவரசரின் கொலை: 1914ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் நாள் ஆஸ்திரிய இளவரசர் ஃபெர்டினண்டும் (Archduke Ferdinand) அவருடைய மனைவியும் தங்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த பாஸ்னிய மாநிலத்தில் உள்ள சராஜிவோ (Sarajevo) நகரத்திற்கு வருகை தந்தனர். அப்பொழுது அவரையும் அவர் மனைவியையும் செர்பிய நாட்டு இளைஞன் ஒருவன் சுட்டுக் கொன்றுவிட்டான். இதனுல் ஆஸ்திரியா கொதிப் படைந்தது. செர்பியாவின்மீது அந்நாடு குற்றம் சாட்டியது. பலவிதமான நிபந்தனைகளை அது விதித்தது. அவற்றை செர்பியா ஏற்க மறுத்தது. ஜெர்மனியின் ஒப்புதலுடன் ஆஸ்திரியா, செர்பியாமீது போர்தொடுத்தது. செர்பியாவிற்கு உதவி செய்ய ரஷ்யா படைகளை அனுப்பியது. ஆஸ்திரியாவின் நட்பு நாடான ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்க முற்பட்டது. இத்தாலி முதலில் நடுநிலைமை வகித்தது. பெல்ஜியமும் நடுநிலை நாடாக இருந்தது. ஆனுல், ஜெர்மனி ஃபிரான்சைத் தாக்குவதற்காக பெல்ஜியத்தின் வழியாகப் படைகளை அனுப்பியது. பெல்ஜியத்திற்கு ஆதரவாக இங்கிலாந்து போரில் ஈடுபட்டது. இங்ஙனம் முதல் உலகப் போர் தொடங்கியது.

### போரின் போக்கு

1914ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் உலகப் போர் தொடங்கியது. மேற்கு அரங்கில் ஜெர்மனி, ஃபிரான்சைக் கடுமை யாகத் தாக்கியது. ஃபிரெஞ்சுப் படைகளும், உதவிக்கு வந்த ஆங்கிலப் படைகளும் ஜெர்மானியப் படைகளைத் தடுத்து நிறுத்த முடியாமல் திணறின. ஜெர்மானியப் படைகள் பாரிஸ் (Paris) நகரத்திற்கு மிக அருகில் வந்துவிட்டன. நல்லவேளையாக மார்னே (Marne) என்ற இடத்தில் ஜெர்மானியப் படைகள் முன்னேறுவது தடுக்கப்பட்டது. ஆங்கில, ஃபிரெஞ்சு, பெல்ஜியப் படைகள் ஜெர்மானியப் படைகளை எதிர்த்துத் தொடர்ந்து போரிட்டு வந்தன.

கிழக்கு அரங்கில்: ரஷ்யப் படைகள் ஜெர்மானிய, ஆஸ்திரியப் படைகளைத் தாக்கின. முதலில் ரஷ்யப் படைகள் தோற்றன. பின்னர், ஹங்கேரியைப் பிடித்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு முன்னேறின. அந்த நேரத்தில் ஆஸ்திரியாவின் உதவிக்கு வந்த புதிய ஜெர்மானியப் படை ரஷ்யர்களை முறியடித்து ஆஸ்திரிய எல்லையிலிருந்து விரட்டியது.

தென்மேற்கு ஆசியாவிலும் போர் நடைபெற்றது. ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுடன் துருக்கி சேர்ந்துகொண்டதால், இங்கிலாந்தும் ஃபிரான்சும் அவற்றின் நட்பு நாடான ரஷ்யாவுடன் சரிவரத் தொடர்புகொள்ள முடியவில்லை. அதனால், ரஷ்யாவின் உதவிக்கு அவை செல்லவில்லை. இருப்பினும் ஆங்கிலப் படைகள் சூயஸ் கால்வாயைப் பாதுகாத்துக் கொண்டதோடு, மெசபடோமியா, பாலஸ்தீனம் ஆகியவற்றைக் கைப்பற்றிக்கொண்டன.

நிலப்பகுதியில் மட்டுமன்றி கடற்பகுதியிலும் போர் பயங்கரமாக நடைபெற்றது. ஜட்லாந்து (Jutland) கடற்போரில் ஜெர்மானியப் போர்க்கப்பல்களும் ஆங்கிலப் போர்க்கப்பல்களும் கடுமையாகத் தாக்கிக்கொண்டன. இருதரத்தாருக்கும் பெரும் இழப்பு ஏற்பட்டது. ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் (Submarines) ஆங்கிலக் கடற்படைக்குப் பெருஞ்சேதத்தை ஏற்படுத்தின.

ஜெர்மானிய நீர்முழ்கிக் கப்பல்கள் பகை நாடுகள், நடுநிலை நாடுகள் என்ற வேறுபாடின்றி எல்லா நாட்டுக் கப்பல்களையும் தாக்கின. குறிப்பாக, 1915-ல் லூசிடேனியா (Lusitania) என்ற பெரிய கப்பலை ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடித்தன. அதிலிருந்த 1198 பயணிகள் இறந்தனர். அவர்களுள் 128 பேர் அமெரிக்கர்கள் ஆவர். இதையறிந்த ஐக்கிய அமெரிக்கா பெரும் ஆத்திரம் கொண்டது. 1917ஆம் ஆண்டும் ஜெர்மனி அமெரிக்கக் கப்பல்கள் பலவற்றைத் தாக்கியது. எனவே, ஆத்திரமடைந்த ஐக்கிய அமெரிக்கா ஜெர்மனிமீது போர் தொடுத்தது. வலிமை மிக்க அமெரிக்காவின் உதவியுடன் நேச நாடுகள் போரை வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டுவந்தன.[1] 1918ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜெர்மனியின் இரண்டாம் கெய்சர் வில்லியம் பதவி துறந்தார். 1919ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட வெர்சாய் உடன்படிக்கையின்படி (Treaty of Versailles) நேச நாடுகள் பல இலாபங்களைப் பெற்றன. ஜெர்மனி முதலான பகைமை நாடுகளின்மீது மிகக் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

**விளைவுகள்**

போர் என்பது மனித இனத்தையே அழிக்கவல்லது என்ற கசப்பான உண்மையை உலகிற்கு உணர்த்தியது முதல் உலகப் போராகும். நீராவிக் கப்பல்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும், தந்தி,

1 நேச நாடுகளில் ஒன்றான ரஷ்யா, அந்நாட்டில் நடைபெற்ற ரஷ்யப் புரட்சியின் (1917) காரணமாக, 1918-ல் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், ஜெர்மனியுடன் அமைதி உடன்படிக்கை செய்துகொண்டு போரிலிருந்து விலகியது. அதனால், போரின் முடிவில் நேசநாடுகள் பெற்ற இலாபத்தில் ரஷ்யா பங்குபெற இயலாமல் போய்விட்டது.

தொலைபேசிச் சாதனங்களும், டாங்கிகள், குண்டுகள் விஷ வாயுக்கள் முதலானவையும் இப்போரில் பயன்படுத்தப்பட்டன. இப்போரினுல் இறந்தவரும் கடுமையாகக் காயமுற்ருேரும் ஏறத் தாழ நாலரைக் கோடியாகும். போர் செய்த நாடுகள், போருக் காகச் செய்த செலவும் அடைந்த நஷ்டமும் பதினெரு லட்சம் கோடி ரூபாய் ஆகும் !

போரின் இறுதியில் நான்கு நாடுகளில் முடியரசு (Monarchy) ஒழிக்கப்பட்டு, குடியரசு (Republic) நிறுவப்பட்டது. ஜெர்மனி, ஆஸ்திரியா, துருக்கி ஆகிய நாடுகளில் போர் முடிந்த பின்னர் அத்தகைய ஆட்சி கொண்டுவரப்பட்டது. ரஷ்யாவில் 1917-ல் நடைபெற்ற புரட்சியின்போது முடியரசு ஒழிக்கப்பட்டுப் பொது வுடைமை ஆட்சி அமைக்கப்பட்டது. ஆனுல், இந்நாடுகளில் உலக நாடுகள் எதிர்பார்த்ததுபோல் மக்களாட்சி நடைபெறவில்லை. சர்வாதிகார ஆட்சியே நடைபெற்றது. இத்தாலியில் முஸோலினி (Mussolini) சர்வாதிகாரியாக விளங்கினுலும், மூன்ரும் விக்டர் இம்மானுவேல் தொடர்ந்து அரசராக இருந்ததால் அது முடி யாட்சியாகவே கருதப்பட்டது.

போருக்கு ஜெர்மனிதான் காரணம் என்று குற்றம் சாட்டப் பட்டது. ஆகவே, போர் நஷ்ட ஈடாக மிகப் பெருந்தொகையை அந்நாடு கொடுக்கவேண்டுமென வற்புறுத்தப்பட்டது. அதனு டைய படை பெருமளவு குறைக்கப்பட்டது. அதனிடமிருந்து அல்ஸாஸ்-லொரெய்ன் பகுதிகள் ஃபிரான்சுக்குத் தரப்பட்டன. மேலும், ஜெர்மனிக்குச் சொந்தமான சார் (Saar) நிலக்கரி வயல்கள் பதினைந்து ஆண்டுகளுக்கு ஃபிரான்சின் பொறுப்பில் விடப்பட்டன. ஜெர்மனி பெருத்த அவமானத்திற்கு உள்ளானது. நேச நாடுகளைப் பழிவாங்க ஹிட்லர் (Hitler) ஜெர்மனியில் நாசிச (Nazism) ஆட்சியை அமைத்தார். அவருடைய ஆட்சியில் புது வலிமை பெற்ற ஜெர்மனி இரண்டாம் உலகப் போருக்குக் காரண மாயிற்று.

ஆஸ்திரியாவும் துருக்கியும் தங்களுக்குச் சொந்தமான பகுதிகள் பலவற்றை இழந்தன. ஆஸ்திரியாவிடமிருந்த பகுதிகள் இத்தாலி, போலந்து, செக்கோஸ்லோவாகியா முதலான நாடுகளுக்குப் பங்கு போட்டுக் கொடுக்கப்பட்டன. ஒரு பகுதி ஆஸ்திரியாவிடமிருந்து பிரிக்கப்பட்டு ஹங்கேரி (Hungary) என்ற குடியரசாக அமைக்கப் பட்டது. துருக்கியிடமிருந்து சில பகுதிகள் பெறப்பட்டு கிரீசுக்கும் பல்கேரியாவிற்கும் தரப்பட்டன. ஐரோப்பிய வரைபடத்திலிருந்து (Map), மும்முறை கூறு போட்டுக்கொள்ளப்பட்டதால், மறைந்து

போன போலந்து மீண்டும் தோன்றியது. ஜெர்மனி, ஆஸ்திரியா, ரஷ்யா முதலான நாடுகளிலிருந்து பெறப்பட்ட பகுதிகளால் போலந்து மீண்டும் பிறந்தது. ஆஸ்திரியாவிடமிருந்தும் ஹங்கேரியிடமிருந்தும் பெற்ற பகுதிகளைக்கொண்டு செக்கோஸ்லோவாகியா (Czechoslovakia) என்ற புதிய நாடு உருவாக்கப்பட்டது. ஆஸ்திரியாவிடமிருந்து பெறப்பட்ட சில பகுதிகளை செர்பியாவுடன் இணைத்து யுகோஸ்லாவியா (Yugoslavia) என்ற மற்றொரு புதிய நாடு அமைக்கப்பட்டது. மற்றும், பால்டிக் கடல் பகுதியில் ஃபின்லாந்து, எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா (Finland, Estonia, Latvia, Lithuvania) ஆகிய நாடுகளும் தோன்றின.

ரஷ்யாவில், புகழ்மிக்க பொருளாதாரப் புரட்சியாகிய 'பொதுவுடைமைப் புரட்சி' 1917-ல் நடைபெற்று, லெனின் (Lenin) தலைமையில் வரலாற்றில் முதல் முறையாகப் பொதுவுடைமை ஆட்சி ஏற்பட்டது.

முதல் உலகப் போரைப் போன்ற கொடுமையான போர் மீண்டும் நடைபெறக்கூடாது என்பதற்காக ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் தலைவர் உட்ரோ வில்சன் (Woodrow Wilson) பதினான்கு கோட்பாடுகளை வெளியிட்டு, சர்வதேசச் சங்கம் (The League of Nations) அமைவதற்கான முயற்சியை மேற்கொண்டார். இச் சங்கம் குறிப்பிடத்தக்க பணியைச் செய்தது. என்றாலும், இது இறுதியில் தோல்வியுற்றது. எனினும், இரண்டாவது உலகப் போருக்குப்பின் ஐக்கிய நாடுகள் நிறுவனம் (The United Nations Organisation) தோன்றுவதற்கு இச் சங்கம் முன்னோடியாக இருந்ததென்பதில் ஐயமில்லை.

# 20. சர்வதேசச் சங்கம்

## தோற்றம்

முதல் உலகப் போரினுல் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப் பட்டனர், நோய்வாய்ப்பட்டனர், மற்றும் பலர் நிரந்தரமாக உறுப்புகளை இழந்தனர். இலட்சக்கணக்கான சொத்துகள் அழிக் கப்பட்டன. இத்தகைய கொடுமையான போர் மீண்டும் வராமல் தடுக்கவும், உலக மக்கள் அமைதியான முறையில் வாழவும், ஒரு நிறுவனத்தை அமைக்கவேண்டும் என உலகத் தலைவர்கள் கருதினுர்கள். குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் ஜனுதிபதி உட்ரோ வில்சன் (Woodrow Wilson) 1918ஆம் ஆண்டு வெளி யிட்ட பதினுன்கு கோட்பாடுகளில் (Fourteen Points) சர்வதேசச் சங்கம் ஒன்றை அமைக்கவேண்டியதன் அவசியத்தை விளக்கியிருந் தார். இதுபற்றிப் பாரிஸ் அமைதி மாநாடும் (Paris Peace Conferenee)விவாதித்து, சர்வதேசச் சங்கத்தை(League of Nations) நிறுவ ஒத்துக்கொண்டது. அதையடுத்துச் சங்கத்தின் நோக்கங் களையும் செயல்முறையையும் விளக்கி ஓர் 'ஒப்பந்தத் திட்டம்' வெளியிடப்பட்டது. அது 'சங்கத்தின் ஒப்பந்தத் திட்டம்' (Covenant of the League) எனப்பட்டது. இது பாரிஸில் செய்து கொள்ளப்பட்ட எல்லா அமைதி உடன்பாடுகளுடனும் இணைக்கப் பட்டது. இச்சங்கத்தின் தலைமையகம் ஸ்விட்சர்லாந்தில் உள்ள ஜெனீவா (Geneva) என்பதைப் பாரிஸ் அமைதி மாநாடு ஏற்றுக் கொண்டது. முதலில் 27 நாடுகள் இச்சங்கத்தில் சேர்ந்தன. ஆனுல், அமெரிக்கா இதில் சேரவில்லை. ஏனெனில், சங்கத்தில் சேர அந் நாட்டின் மேல் சட்டமன்றமாகிய செனட் (Senate) அனுமதி கொடுக்க மறுத்துவிட்டது. அதேபோலப் பாரிஸில் செய்துகொள் ளப்பட்ட மற்ற உடன்படிக்கைகளையும் ஏற்க செனட் மறுத்து விட்டது.

## சங்கத்தின் நோக்கங்கள்

சர்வதேசச் சங்கத்தின் நோக்கங்கள், அச்சங்கத்தின் ஒப்பந்தத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளன. எல்லா நாடுகளும் போர் வராமல் தடுப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டும். உலக அமைதியையும் பாதுகாப்பையும் பேணுவதற்கு அவை முழு ஒத்துழைப்பைத் தரவேண்டும். நாடுகளுக்கு இடையே தோன்றும்

பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்த்துக்கொள்ள முயல வேண்டும். பன்னாட்டுச் சட்டத்தை எல்லா நாடுகளும் மதிக்க வேண்டும். உறுப்பு நாடுகள் எவையேனும் ஆக்கிரமிப்பில் ஈடு பட்டால் அவற்றின் மீது மற்ற நாடுகள் மேற்கொள்ளத்தக்க நட வடிக்கைகளைப் பற்றியும் ஒப்பந்தத்திட்டத்தில் கூறப்பட்டுள்ளன.

இவை தவிர உலகத் தொழிலாளர்களின் நலன்களைக் காத்தல், நோய்களைத் தடுத்தல், பெண்டிர் நலம் பேணுதல், அடிமை முறையை ஒழித்தல் முதலானவற்றையும் சங்கம் தன் நோக்கங் களாகக் கொண்டிருந்தது.

### சங்கத்தின் செயல் முறை

சர்வதேசச் சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்ற அச் சங்கம் மூன்று முக்கிய உறுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இம் மூன்றைத் தவிர வேறு சில துணை உறுப்புகளும் இருந்தன. அவை கீழ்வருமாறு செயல்பட்டன.

(1) சபை (Assembly): சங்கத்தின் எல்லா உறுப்பு நாடுகளும் இதில் இடம் பெற்றன. ஒவ்வோர் உறுப்பு நாடும் மூன்று பிரதி நிதிகளை அனுப்ப அனுமதிக்கப்பட்டது. ஆனால், ஒரு நாட்டுக்கு ஒரு வாக்கு (Vote) மட்டுமே கொடுக்கப்பட்டது. சங்கத்தின் அதிகாரத்திற்கு உட்பட்ட எல்லாப் பிரச்சினைகளையும் அது கவனித்து உரியநடவடிக்கை எடுத்தது. ஆண்டுக்குக் குறைந்தது ஒரு முறையாவது கூடி உலகப் பிரச்சினைகளை இது விவாதித்தது. தேவை ஏற்பட்டபோது அவசரக் காலக் கூட்டங்களும் கூட்ட வழி வகுக்கப்பட்டிருந்தது.

(2) கவுன்சில் (Council): அடுத்தது கவுன்சில் ஆகும். இது சங்கத்தின் வலிமை மிகுந்த குழுவாகும். இதில் முதலில் எட்டு உறுப்பு நாடுகள் இருந்தன. இங்கிலாந்து, ஃபிரான்சு, இத்தாலி, ஜப்பான் ஆகியவை நிரந்தர உறுப்பு நாடுகள் ஆகும். மற்ற நான்கும், ஆண்டுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டன. 1926-ல் ஜெர்மனி நிரந்தர உறுப்பு நாடாகச் சேர்ந்தது. பின்னர் நிரந்தரம் அல்லாத உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையும் உயர்த் தப்பட்டு மொத்தம் பதினன்கு உறுப்பு நாடுகள் இதில் இருந்தன. இது ஆண்டுக்கு நான்கு முறை கூடிப் பிரச்சினைகளை ஆய்ந்தது. தேவை ஏற்பட்டபோது அவசர காலக் கூட்டங்களும் கூட்டப் பட்டன. இக்குழுவில் தீர்மானங்கள் ஒருமனதாக எடுக்கப்பட வேண்டும் என ஒரு விதிமுறை இருந்தது. இந்த விதி பிற்காலத்தில் சங்கத்தின் செயல்முறைக்குப் பெருந்தடையாக இருந்தது.

(3) செயலகம் (Secretariat): இது பொதுச் செயலர் ஒருவரின் கீழ் இயங்கியது. சங்கத்தின் மற்ற உறுப்புகளுக்குத் துணை செய்

வதும் அவற்றின் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதும் இதன் கடமையாகும். பொதுச் செயலர் சபையின் ஒப்புதலுடன் கவுன்சிலினுல் நியமிக்கப்பட்டார். பல்வேறு உறுப்பு நாடுகளைச் சார்ந்த எழுநூறுக்கும் மேற்பட்ட அலுவலர்கள் செயலகத்தில் பணி புரிந்தனர்.

இவை தவிர, சர்வதேச நீதிமன்றம் (Court of International Justice), சர்வதேசத் தொழிலாளர் நிறுவனம் (International Labour Organisation) போன்ற துணை உறுப்புகளும் இருந்தன.

சர்வதேச நீதிமன்றம் ஹாலந்து நாட்டில் உள்ள தி ஹேக்(The Hague) என்ற நகரத்தில் செயல்பட்டு வந்தது. இதில் பதினொரு நீதிபதிகளும் நான்கு துணை நீதிபதிகளும் இருந்தனர். அவர்களின் பதவிக் காலம் ஒன்பது ஆண்டுகளாகும். அவர்களைச் சர்வதேசச் சங்கத்தின் சபையும் கவுன்சிலும் சேர்ந்து தேர்ந்தெடுத்தன. இந் நீதிமன்றம் தான் செயல்பட்ட காலத்தில் அறுபத்தைந்து வழக்குகளை விசாரித்தது,

சர்வதேசத் தொழிலாளர் நிறுவனம் உலகத் தொழிலாளர்களின் நலன்களைக் காக்க முற்பட்டது. தொழில் துறையில் பின் தங்கியிருந்த நாடுகளில் நவீன இயந்திரங்களைப் பயன்படுத்த உதவி செய்து தொழிலாளர்களின் வேலை வாய்ப்பினையும், ஊதியத்தையும் அதிகரிக்க உதவியது. சிறுவர்களைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்துவதை இந்நிறுவனம் அனுமதிக்கவில்லை. பெண் தொழிலாளர்களின் உரிமைகளைக் காக்க இந்நிறுவனம் குறிப்பிடத்தக்க பணியினைச் செய்தது. மற்றும் பின்தங்கிய நாடுகளின் முன்னேற்றம்பற்றி ஆராயத் தனிக்குழுவும், அடிமை முறையை ஒழித்தல், உடல் நலம், நிதி போன்றவற்றைக் கவனிக்கத் தனிக் குழுக்களும் செயல்பட்டன.

### சங்கத்தின் சாதனைகள்

பல்வேறு இக்கட்டான சூழ்நிலையிலும் குறைபாடுகளுடனும் சங்கம் செயல்பட்டது. இருப்பினும் சில குறிப்பிடத்தக்க சாதனைகளையும் அது செய்துள்ளது. 1925ஆம் ஆண்டு கிரீசுக்கும் பல்கேரியாவுக்கும் இடையே ஒரு போர் துவங்கியது. உடனே சங்கம் தலையிட்டுப்போரை நிறுத்தியது. பால்டிக்கடலில் உள்ள ஆலந்து (Aland) தீவுகள் பற்றி ஸ்வீடனுக்கும் ஃபின்லாந்துக்கும் இடையே தகராறு ஏற்பட்டபோது, சங்கம் இப் பிரச்சினையை ஆராய்ந்து ஆலந்துத் தீவுகளை ஃபின்லாந்துக்குக் கொடுத்து அமைதியை நிலை நாட்டியது.

துருக்கி-இரான் ஆகிய நாடுகளுக்கிடையே நிலவிவந்த எல்லைப் பிரச்சினையைச் சங்கம் தீர்த்துவைத்தது.

தென்னமெரிக்க நாடுகளான கொலம்பியாவிற்கும் பெருவுக்கும் இடையே இருந்து வந்த எல்லைப் பிரச்சினையையும் அங்ஙனமே சங்கம் தீர்த்துவைத்தது.

அரசியல் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தது மட்டுமின்றிக் குறிப்பிடத்தக்க பொதுநலப் பணிகளையும் இச்சங்கம் செய்தது. சர்வதேசத் தொழிலாளர் நிறுவனம் உலகத் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டது.சங்கத்தின் மற்றப்பிரிவுகள் மலேரியா. காலரா முதலான நோய்களைத் தடுப்பதிலும், பெண்களின் உரிமைகளைக் காப்பதிலும், குழந்தைகளைப் பராமரிப்பதிலும், அடிமை வாணிகத்தைத் தடுப்பதிலும், அபின் (Opium) கடத்துவதைத் தடை செய்வதிலும் சிறப்பான பணியைச்செய்தன. முதல் உலகப்போரினுல் நலிவுற்ற ஜெர்மனி, ஆஸ்திரியா.ஹங்கேரி முதலான நாடுகள் இச்சங்கத்தினிடமிருந்து பொருளாதார உதவியைப் பெற்றன. 'காப்பு முறை பெற்ற, நாடுகள் (Mandated Territories) முன்னேறுவதற்குத் தக்க முயற்சிகளைச் சங்கம் எடுத்துக்கொண்டது.

**சங்கத்தின் தோல்விகளும் அது முறிந்ததற்கான காரணங்களும்**

ஒரு சில பிரச்சினைகளுக்குச் சங்கம் தீர்வு கண்டது என்ருலும் பல பெரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அது தவறிவிட்டது. குறிப்பாகக் கீழ்க்காணும் போர்களைத் தடுக்கச் சங்கம் தவறியது: (1) 1931ஆம் ஆண்டு சீனுவின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்த மஞ்சூரியாவை ஜப்பான் கைப்பற்றிக்கொண்டு அங்கு ஒரு புதிய அரசை ஏற்படுத்தியது. இதுபற்றி ஆய்ந்தறிய சர்வதேசச் சங்கம் ஒரு குழுவை நியமித்தது. அக்குழு இரண்டாண்டுகளுக்குப் பிறகு ஓர் அறிக்கையைச் சங்கத்திடம் கொடுத்தது. சங்கம் அறிக்கையை ஏற்றுக்கொண்டு,மஞ்சூரியாவில் சீனுவின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட சுதந்திர அரசை ஏற்படுத்தவேண்டும் என்று அறிவித்தது. ஆகவே, 1933ஆம் ஆண்டு சங்கத்திலிருந்து ஜப்பான் விலகிக்கொண்டது. (2) 1934-35 ஆம் ஆண்டுகளில் இத்தாலியின் சர்வாதிகாரி முஸ்ஸோலினி (Mussolini) எதியோபியா (அபிசினியா)வின் மீது படையெடுத்து அந்நாட்டைக் கைப்பற்றிக்கொண்டார். அவருடைய ஆக்கிரமிப்பினுல் எதியோபியா பெருந்துன்பத்திற்கு உள்ளானது. இத்தாலிக்கு எதிரான சில பொருளாதார நடவடிக்கைகளைச் சங்கம் எடுத்தது. எனினும் அவை பலனளிக்கவில்லை. (3) ஜெர்மனியும் இத்தாலியும் சேர்ந்துகொண்டு ஸ்பெயின் நாட்டுக் குடியரசின் அழிவுக்கு வழி வகுத்தன. அப்பொழுதும் சங்கம் வாளா இருந்து விட்டது. (4) ஜெர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லர் பயங்கரமான ஆக்கிரமிப்புகளில் ஈடுபட்டார். மற்ற நாடுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை மீறினர்; ஜெர்மனியின்

படை வலிமையைப் பெருக்கிக்கொண்டே சென்ருர்; ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாகியா, முதலான நாடுகளைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டார். ஹிட்லரின் இத்தகைய கொடுஞ் செயல்களைத் தடுக்கச் சங்கத்திஞல் இயலவில்லை. (5) ரஷ்யாவும் ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டு போலந்தை வெல்லுவதில் ஈடுபட்டது. இங்ஙனம் நிகழ்ச்சிகள் ஒன்றையடுத்து ஒன்று நடைபெற்று வந்ததால் இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. அந்தப் போரைத் தடுக்கத் தவறியதால் சங்கம் முறிந்துவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேற்கண்ட தோல்விகளுக்குக் காரணம் சங்கத்தின் அமைப்பிலும் செயல்முறையிலும் பல குறைபாடுகள் இருந்தன. அவற்றுள் முக்கியமானவை யாவை என்பதைப் பார்ப்போம்.

சங்கத்தின் உறுப்பு நாடுகளுள் வல்லரசுகள் சங்கத்தின் ஒப்பந்தத் திட்டத்தின் கோட்பாடுகளைப் புறக்கணித்தன. இங்கிலாந்து, ஃபிரான்சு முதலான நாடுகள் தங்கள் நன்மைக்காகவே சங்கத்தைப் பயன்படுத்தின. சர்வதேசச் சங்கம் தோன்றுவதற்குக் காரணமாய் இருந்த அமெரிக்கா, சங்கத்தின் உறுப்பு நாடாகச் சேரவில்லை. இது சங்கத்தின் மிகப் பெரிய குறையாகும். பெரிய நாடுகள் படைவலிமையைப் பெருக்கிக்கொண்டே சென்றன. மற்றச் சிறிய நாடுகளுக்கு அறிவுரை வழங்கினவே தவிர பேச்சுக்கும் செயலுக்கும் தொடர்பில்லாமல் அவை நடந்துகொண்டன. அதனுல்தான் பலர் சர்வதேசச் சங்கத்தைக் கடுமையாகத் தாக்கிப் பேசினர். அதைத் 'திருடர்களின் சங்கம்' (League of Thieves) என்றும், 'ஜெனிவாவில் கூடும் முட்டாள்களின் கூட்டம்' (Geneva Council of Fools) என்றும் சாடினர். உறுப்பு நாடுகள் தங்களுக்குள்ளே பல இரகசிய ராணுவ ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு செயல்பட்டன. குறிப்பாக ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் 'அச்சு நாடுகளாக' (Axis Nations) இயங்கின. திட்டமிட்ட ஆக்கிரமிப்பில் ஈடுபட்டு 1933-ல் ஜப்பானும் ஜெர்மனியும், 1937-ல் இத்தாலியும் சங்கத்திலிருந்து விலகின. மேலும், எல்லாத் தீர்மானங்களும் சங்கத்தின் சபை மற்றும் கவுன்சிலில் ஒருமனதாக மேற்கொள்ளவேண்டும் என்று ஒரு விதிமுறை இருந்தது. இந்த விதி, சங்கத்தின் செயல் முறைக்குப் பெருந்தடையாக இருந்தது. எல்லாவற்றையும் விடச் சங்கத்தின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த எந்தவிதமான சாதனமும் இல்லை; அல்லது சங்கத்திற்கு என்று ஒரு வலிமையான படையும் இல்லை. அதனுல் சர்வதேசச் சங்கம் இறுதியில் முறிந்தது.

# 21. சீனக் குடியரசில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்

## (1911—1949)

**1911ஆம் ஆண்டு சீனப் புரட்சியின் காரணங்கள்**

*1911ஆம் ஆண்டு சீனாவில் ஒரு புரட்சி நடைபெற்றது. அதற்குக் காரணம் மஞ்சு அரசர்களின் ஆட்சியில் சீனா வலிமை குன்றியிருந்ததே ஆகும். 1904-5ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ரஷ்ய-ஜப்பானியப் போரில் மிகப் பெரிய நாடான ரஷ்யாவை மிகச் சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது. இதைக்கண்டு சீன மக்கள் பெரும் அச்சம் கொண்டார்கள். சீனாவின் மஞ்சு அரசர்கள் ஆற்றல் இழந்தவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்கள் ஆட்சியில் ஊழல் மலிந்திருந்தது. அவர்கள் காலத்தில் சீனா பல போர்களில் ஈடுபட்டுத் தோல்வியடைந்தது. குறிப்பாக 1894-95-ல் நடைபெற்ற சீன ஜப்பானியப் போரில் சீனா தோற்கடிக்கப்பட்டது. மஞ்சு அரசர்களின் ஆட்சியில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். அந்த அரசர்களின் திறமையின்மையினால்தான் அயல்நாட்டவர்கள் தங்கள் செல்வாக்கைச் சீனாவில் நிலைநாட்டிக்கொண்டார்கள் என்றும், அந்த நாட்டில் நடைபெற்ற உள்நாட்டுக் குழப்பங்களுக்கும் மக்களின் துன்பங்களுக்கும் மஞ்சு அரசர்களே காரணம் என்றும் மக்கள் கருதினார்கள். மேலும், மஞ்சு அரசர்கள் அயலவர்கள் என்ற காரணத்தால் அவர்களின் சர்வாதிகார ஆட்சியைச் சீன மக்கள் வெறுத்தார்கள். இந்த நிலையில் மஞ்சு ஆட்சியை ஒழிப்பதற்கான இயக்கம் வலுப்பெற்று வந்தது.*

**டாக்டர் சன் யாட் சென்**

*டாக்டர் சன் யாட் சென்* (Dr. Sun Yat Sen) *சீனாவின் தேசிய இயக்கத் தலைவர் ஆவார். அவர் குவான்டுங்* (Kwantung) *மாநிலத்தில் ஓர் ஏழைக் குடியானவர் குடும்பத்தில் பிறந்தார். இளமையிலேயே புரட்சிக் கருத்துகளை மேற்கொண்டார். சீனா முன்னேறவேண்டுமென்றால் மஞ்சு ஆட்சி ஒழியவேண்டும் எனக் கருதினார். ஹாங்காங்கில்* (Honkong) *மருத்துவக் கல்வி பயின்று சிறிது காலம் டாக்டராகப் பணிபுரிந்தார். தம் தொழிலைவிட நாட்டின் நலத்தில் அக்கறைகொண்ட அவர் அரசியலில் ஈடு*


சீன மக்கள் குடியரசு
ரஷ்யா
மங்கோலியா
திபெத்
இந்தியா
பர்மா
கான்டன்
பீகிங்
போர்ட் ஆர்தர்
வட கொரியா
தென் கொரியா
ஷாங்காய்
அமாய்
ஹாங்காங்
நான்கிங்
லாசா
தேசிய சீனா (தைவான்)

பட்டார். சீனாவை வலிமைமிக்க நாடாக்க வேண்டும்; அயல் நாட்டவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த சலுகைகள் விலக்கப்பட வேண்டும்; சீனர்கள் எல்லா உரிமைகளையும் அதிகாரங்களையும் பெறவேண்டும் என்று அவர் கருதினார். சீனாவில் மக்களின் குடியரசை நிறுவி அவர்களுக்கு அரசியல் உரிமைகளைத் தர வேண்டும் என அவர் திட்டமிட்டார். சோஷலிசக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும் என்பது அவருடைய கொள்கையாகும். அயல் நாட்டு விவகாரங்களில் உலக அமைதி விரும்பும் நாடாகச் சீனா செயல்படவேண்டும் என விரும்பினார். தம்முடைய கொள்கை களைச் செயல்முறைப்படுத்த 1894-ல் 'சீனப் புத்துயிர்ச் சங்கத்தை' (China Revival Society) நிறுவினார். இதுவே பின்னர் 'குவோ மின்டாங்' (Kuomintang) என்ற கட்சியாயிற்று. இதில் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் சேர்ந்தனர். இச் சங்கத்தின் நடவடிக்கை களைக் கண்ட சீன அரசு டாக்டர் சன் யாட் சென்னை நாடு கடத்தி யது. அவர் ஜப்பான், அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடு களுக்குச் சென்று தம் கொள்கைகளுக்கு ஆதரவு தேடினார்.

### சீனக் குடியரசு

1911ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மத்திய சீனாவிலும், தென் சீனாவிலும் புரட்சி நடைபெற்றது. மூன்று மாதங்கள் மஞ்சு அரசு படைகளுக்கும் புரட்சியாளர்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்றது. பெரும்பாலான தெற்கு மாநிலங்களில் புரட்சியாளர்களின் கை ஓங்கியது. 1912ஆம் ஆண்டு புத்தாண்டு நாளில், சீனா குடியரசு ஆகிவிட்டதெனப் பேரறிக்கை வெளியிடப் பட்டது. புதிய குடியரசின் தலைவராக டாக்டர் சன் யாட் சென் தேர்ந்தெடுக்கப்பட்டார். நான்கிங் (Nanking) அதன் தலைநகர மாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

1912ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மஞ்சு வமிசத்தின் கடைசி அரசர் பதவி துறந்தார். இதுபற்றிச் சீனர்கள் குறிப்பிடும்போது 'மஞ்சு அரசர்கள் புலியின் கர்ஜனைபோல் வந்தார்கள்; பாம்பின் வாலைப்போல் மறைந்தார்கள்' என்று கூறுகின்றார்கள்.

### குடியரசின் இடையூறுகள்

சன் யாட் சென் குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டாரெனினும் அவர் தொடர்ந்து அப்பதவியில் இருக்க முடிய வில்லை. ஏனெனில், யான் ஷி கே (Yuan Shih Kai) என்ற முன்னாள் இராணுவத் தளபதி பீகிங்கில் (Peking) போட்டிக் குடியரசை அமைத்து வடக்குச் சீனாவை ஆளத் தொடங்கினார். இரு குடியரசுகளுக்கும் இடையே உள்நாட்டுப் போர் ஏற்பட்டுச் சீனா நலிந்துவிடக்கூடாது என்பதற்காகச் சன் யாட் சென் தாமே

பதவியிலிருந்து விலகினர். யான் ஷி கே சீனக் குடியரசின் தலைவராக ஆளத் தொடங்கினர். அவருடைய ஆட்சியில் சீனு பல இடையூறுகளுக்கு உள்ளாயிற்று. பிற்போக்குவாதியான அவருக்கும் மக்கள் சபைக்கும் தகராறுகள் ஏற்பட்டன. அதனல் 1913-ல் மக்கள் சபை கலைக்கப்பட்டது. குவோமின்டாங் கட்சியை ஒழிக்க அவர் முற்பட்டார். சன் யாட் சென்னை நாட்டைவிட்டு ஓடச்செய்தார். 1915-ல் சீனக் குடியரசு அழிக்கப்பட்டது என்றும், மீண்டும் மன்னர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது என்றும் யான் ஷி கே அறிவித்தார். அவர் அயல்நாடுகளிலிருந்து பல உதவிகளைப் பெற்றார். சீனுவில் இருந்த அயல்நாட்டவருக்குப் பல சலுகைகளை வழங்கினர். அதனல் சீனர்களின் நலன்கள் பாதிக்கப்பட்டன. அதே ஆண்டு (1915) ஜப்பான் அனுப்பிய இருபத்தொரு கோரிக்கைகளில் பெரும்பாலானவற்றை யான் ஷி கே ஏற்றுக்கொண்டு அந்த நாட்டிற்குச் சீனுவில் பல சலுகைகளை வழங்கினர். இவற்றையெல்லாம் எதிர்த்துக் குரலெழுப்பிய சீனர்களை அவர் அடக்கி ஒடுக்கினர். இதற்கிடையில் 1914ஆம் ஆண்டு முதல் உலகப் போர் மூண்டு நடைபெற்றுக்கொண்டிருந்தது. 1916ஆம் ஆண்டு யான் ஷி கே இறந்தார். நாட்டில் குழப்பம் அதிகரித்தது. படைத் தலைவர்கள் (War Lords) வடக்குச் சீனுவில் தங்கள் அதிகாரத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

### சன் யாட் சென் அரசு அமைத்தல்

படைத் தலைவர்களின் சர்வாதிகார ஆட்சியில் சீனு சீர்குலைந்து விடக்கூடாது என்பதற்காகச் சன் யாட் சென் மீண்டும் தாயகம் திரும்பினர். தம் குவோமின்டாங் (Kuomintang) கட்சியினரின் ஆதரவுடன் 1916-ல் கான்டனைத் (Canton) தலைநகரமாகக் கொண்டு ஓர் அரசை அமைத்தார். பீகிங்கில் நடைபெற்றுவந்த படைத்தலைவர்களின் ஆட்சியை ஒழித்துச் சீனு முழுவதையும் ஒரே ஆட்சியின் கீழ்க் கொண்டுவர அவர் முயன்றார். சீன மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தத் திட்டமிட்டார். தேசியம், ஜனநாயகம், சமூகநீதி (Nationalism, Democracy and Social Justice) ஆகியவை அவருடைய மூன்று முக்கியக் கொள்கைகள் ஆகும். இவற்றை நடைமுறைப்படுத்த சென் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார். அதற்காக இங்கிலாந்து, அமெரிக்கா முதலான நாடுகளின் உதவியை நாடினர். அவை அவருக்கு உதவிசெய்ய முன்வரவில்லை. அவர் அமைத்த அரசை அந்த நாடுகள் அங்கீகரிக்கவில்லை. எனவே, சென், 1924-ல் ரஷ்யாவின் உதவியை நாடினர். ரஷ்யா, சன் யாட் சென் அரசுக்கு உதவிசெய்தது. ரஷ்ய அரசும் கான்டன் அரசும் நட்புறவு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு தூதுவர்களைப் பரிமாறிக் கொண்டன. சீன மக்களின் பொரு

ளாதார முன்னேற்றத்திற்கு ரஷ்ய அரசு பலவிதத்தில் உதவி செய்தது. ரஷ்யா அனுப்பிவைத்த பொரோடின் (Borodin) என்ற அறிஞரின் ஆலோசனையின்படி சன் யாட் சென் சில பொருளாதாரத் திட்டங்களை மேற்கொண்டார். குடியானவரின் சங்கங்களும் தொழிற்சங்கங்களும் தொடங்க அரசு ஊக்கம் தந்தது. எனவே, மக்கள் ஆதரவு பெற்றுக் கான்டன் அரசு இயங்கியது. இந்த நிலையில் 1925ஆம் ஆண்டு மார்ச் மாதம் சன் யாட் சென் இறந்தார்.

### சியாங் கே ஷேக் அரசு அமைத்தல்

சன் யாட் சென் இறந்த பின்னர் கோமின்டாங் கட்சியிலிருந்த இடதுசாரித் தலைவர்களுக்கும் சியாங் கே ஷேக் (Chiang Kai Shek) போன்ற வலதுசாரித் தலைவர்களுக்கும் இடையே அதிகாரப் போராட்டம் ஏற்பட்டது. இறுதியில் சியாங் கே ஷேக் மற்றும் அவருடைய தோழர்கள் கான்டன் நகரத்தில் அரசு அமைத்தார்கள். அந்த அரசின் இராணுவத் தளபதியாக ஷேக் பொறுப் பேற்றார். நிர்வாகத்திலும் மிக முக்கியமான பணியை அவர் செய்தார்.

சியாங் கே ஷேக் சில முற்போக்கு நடவடிக்கைகளை எடுத்தார். முன்னர்க் குறிப்பிட்ட ரஷ்ய அறிஞர் பொரோடின் தொடர்ந்து 1927 வரை அவருடைய ஆலோசகராகப் பணியாற்றினார். தம் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பகுதியில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். நீர்ப்பாசன வசதிகளை அதிகரித்து வேளாண்மை வளர்ச்சிக்கு உதவினார். தொழில்துறையிலும் அரசு மிகுந்த கவனம் செலுத்தியது. தொழிலாளர்களின் நலன்களைக் காக்கப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன; அரசின் நிதிநிலை சீராக்கப்பட்டது; சாலைகள் புதுப்பிக்கப்பட்டன; எல்லா இருப்புப் பாதை அமைப்புகளும் ஒன்றாக்கப்பட்டன; விமானங்கள் மூலம் விரைவாகச் செய்திக் கடிதங்களை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது; கல்வி வளர்ச்சிக்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

### உள்நாட்டுப் போர்

சீனாவை ஒரே ஆட்சியின்கீழ்க் கொண்டுவர சியாங் கே ஷேக் பல முயற்சிகளை மேற்கொண்டார். அதனால் சீனாவில் பல ஆண்டுகள் உள்நாட்டுப் போர் நடைபெற்றது. 1926-ல் ஆட்சிக்கு வந்தவுடன் குவோமின்டாங் கட்சியிலிருந்த இடதுசாரிகளையும், பொதுவுடைமைக் கட்சியினரையும் முறியடிக்க அவர் முற்பட்டார். கான்டனிலிருந்து அனுப்பப்பட்ட படைகள் பீகிங் அரசின் ஆட்சியின்கீழ் இருந்த பல நிலப்பகுதிகளைக் கைப்பற்றின.

எதிர்த்துப் போரிட வந்த பீகிங் படைகள் கான்டன் படைகளோடு சேர்ந்து கொண்டன. சியாங் கே ஷேக் வெற்றிமேல் வெற்றியைக் குவித்து வந்தார். அதற்கு முக்கியக் காரணம் குடியானவர்களும் தொழிலாளர்களும் கான்டன் அரசோடு முழுமனத்துடன் ஒத்துழைத்தனர். இராணுவத் தலைவர்களால் ஆட்சி செய்யப் பட்ட வடக்குச் சீனாவைவிட சியாங் கே ஷேக்கினால் ஆட்சி செய்யப்பட்ட தெற்குச் சீனா நல்லாட்சியைப் பெற்றிருந்ததென அவர்கள் கருதினார்கள். 1926ஆம் ஆண்டு முடிவதற்குள் சீனாவின் பெரும் பகுதியை ஷேக் கைப்பற்றிக் கொண்டார். தலைநகரமும் கான்டனிலிருந்து யாங்ட்சி (Yangtse) நதிக்கரையில் உள்ள ஹாங்கௌவுக்கு (Hongkow) மாற்றப்பட்டது. அந்த நகரம் ஊஹான் (Wuhan) என்று புதிய பெயரிடப்பட்டது.

ஊஹானுக்குத் தலைநகரத்தை மாற்றிய பின்னர் கடற்கரை நகரமான ஷாங்கையைக் (Shanghai) கைப்பற்ற ஷேக் திட்ட மிட்டார். அதற்குக் குவோமின்டாங் கட்சியின் இடதுசாரிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அந்த எதிர்ப்பைப் புறக்கணித்து ஷேக், ஷாங்கை சென்று அதைக் கைப்பற்றிக்கொண்டார் (மார்ச் 1927). அதையடுத்து ஊஹான் அரசோடு உறவை முறித்துக்கொண்டு தாமே தனியாக நான்கிங்கில் (Nanking) ஓர் அரசை அமைத்தார். 1927ஆம் ஆண்டு சீனாவில் பீகிங், ஊஹான் (ஹாங்கௌ), நான்கிங் ஆகிய இடங்களில் மூன்று அரசுகள் இயங்கிவந்தன.

முற்போக்கு வாதியாக இருந்த சியாங் கே ஷேக் பிற்போக்கு வாதியாக மாறிவிட்டார். பொதுவுடைமைக் கட்சியின் தொண் டர்களை ஒடுக்க முனைந்தார்.[1] அவரை எதிர்த்த குடியானவர்களை யும் தொழிலாளர்களையும் சிறையிலிட்டார். பலர் குண்டுக்கு இரையாயினர். பயங்கர ஆட்சியை அவர் நடத்திவந்தார். பல சீனர்கள் நாட்டைவிட்டும் ஓடிவிட்டனர். குறிப்பாக, காலஞ் சென்ற டாக்டர் சன் யாட் சென்னின் மனைவி நாடுகடத்தப் பட்டார். ரஷ்யாவுடன் வைத்துக்கொண்டிருந்த உறவுகளை சியாங் கே ஷேக் 1927 டிசம்பரில் முறித்துக்கொண்டார். அமெரிக்கா, இங்கிலாந்து முதலான நாடுகள் அவருக்கு உதவி செய்ய முன்வந்தன. குவோமின்டாங் கட்சியிலிருந்த பலர் பொது வுடைமைக் கட்சியில் சேர்ந்து விட்டனர். சியாங் கே ஷேக்கும் அவரை ஆதரித்த ஒருசிலர் மட்டுமே அக் கட்சியில் இருந்தனர்.

### ஜப்பானின் ஆக்கிரமிப்புகள்

சீனாவில் இத்தகைய குழப்பமான நிலைமை தொடர்ந்து நீடித் தது. உள்நாட்டுப் போரும் நடைபெற்றுக் கொண்டே இருந்தது. இந்த நிலையைப் பயன்படுத்திக்கொண்டு ஜப்பான் சீனாவின்மீது மூன்று முறை படையெடுத்து ஆக்கிரமிப்பில் ஈடுபட்டது.

1 1920ஆம் ஆண்டே பொதுவுடைமைக் கட்சி சீனாவில் தொடங்கப்பட்டது.

1931ஆம் ஆண்டு ஜப்பான் மஞ்சூரியாவைத் தாக்கிக் கைப் பற்றிக்கொண்டது. அங்கு 'மஞ்சுகோ' என்ற அரசையும் அமைத்து ஜப்பான் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தியது. ஜப்பானின் இந்த ஆக்கிரமிப்பைக் கண்டு சீனர்கள் ஆத்திரப்பட்டனர். ஜப்பானின் ஆக்கிரமிப்பைச் சர்வதேசச் சங்கம் கண்டித்தது. அதன் விளைவாக ஜப்பான் அந்தச் சங்கத்திலிருந்து விலகிக் கொண்டது.

1932ஆம் ஆண்டு மீண்டும் சீனுவின்மீது ஜப்பான் மிகப் பயங்கரமான தாக்குதலை நடத்தியது. ஷாங்கை நகரத்திற்கு அருகில் மக்கள்தொகை மிக்க ஒரு நகரத்தினைத் தாக்கி ஆயிரக் கணக்கான பொதுமக்களை ஜப்பான் கொன்று குவித்தது. அடுத்த இரண்டு ஆண்டுகள் சீனுவின் பல இடங்களை ஜப்பான் தாக்கியது. எனினும், சியாங் கே ஷேக் ஜப்பானின் தாக்குதலை முறியடிக்க உறுதியான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. அதற்கு மாருக 1934ஆம் ஆண்டு ஜப்பானுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டார். ஆனுல், இதைப் பொதுவுடைமைக் கட்சியினர் வன்மையாகக் கண்டித்தனர். மிகப் பெரிய நாடான சீனு, மிகச் சிறிய நாடான ஜப்பானுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் சீனுவின் அவமானச் சின்னம் என அவர்கள் கருதினுர்கள். 1936ஆம் ஆண்டு அவரைப் பொதுவுடைமையினர் கடத்திச் சென்று விட்டனர். அடுத்த முறை ஜப்பானுடன் உறுதியுடன் போரிடுவதாக ஷேக் உறுதியளித்தார். அதனுல் அவர் உயிருடன் விடப்பட்டார்.

1937ஆம் ஆண்டு மீண்டுமொருமுறை ஜப்பான் சீனுவின் பல பகுதிகளைக் கடுமையாகத் தாக்கியது. இந்த முறை சீனர்கள் தங்களுக்குள்ளிருந்த வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு, எதிரியை முறியடிக்க முனைந்தனர். அங்ஙனமே சீன அரசுகளும் முன்வந்தன. ரஷ்யாவும் சீனுவுக்கு உதவிசெய்ய முன்வந்தது. ஜப்பான் பலமுனைத் தாக்குதல்களை மேற்கொண்டது. சீனர்கள் 'கொரில்லா' முறைப் போரில் ஈடுபட்டு ஜப்பானியத் தாக்குதலைத் தடுக்க முயன்றனர். எனினும் ஷாங்கை, நான்கிங் முதலான நகரங்களை ஜப்பான் கைப்பற்றிக்கொண்டது. சியாங் கே ஷேக் தம் தலைநகரத்தை நான்கிங்கிலிருந்து முதலில் ஹாங்கௌவிற்கும் (Hangkow) பிறகு சுங்கிங்கிற்கும் (Chungking) மாற்றிக்கொண்டார். கான்டன், ஹாங்கௌ முதலான நகரங்களை ஜப்பான் கைப்பற்ற முனைந்தபோது அந்தப் பெரு நகரங்களைச் சீனர்களே தீயிட்டுக் கொளுத்திவிட்டார்கள். போர் நடைபெற்றுக் கொண்டே இருந்தது. அதற்குள் 1939-ல் இரண்டாம் உலகப் போர் தொடங்கிவிட்டது.

### இரண்டாம் உலகப் போரும் சீனாவும்

இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனி, இத்தாலி முதலான நாடுகளுக்கு ஆதரவாக முதலில் ஜப்பான் போரிலீடுபட்டது. 1941ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பசிபிக் பெருங்கடலில் ஹவாய் தீவுகளில் உள்ள அமெரிக்கக் கடற்படைத்தளமான பேர்ல் ஹார்பரை (Pearl Harbour) ஜப்பான் குண்டு வீசித் தாக்கியது. உடனே அமெரிக்கா ஜப்பானின் மீது போர் தொடுத்தது. அந்த நேரத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஃபிரான்சு முதலான நாடுகளுக்கு ஆதரவாகச் சீனா போரில் இறங்கியது. ஜப்பான் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது தாக்குதலை நடத்திப் பெரும் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டது. அதனால் 1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஹிரோஷிமா, நாகாசகி ஆகிய ஜப்பானிய நகரங்கள்மீது இரு அணுகுண்டுகளைப் போட்டு அமெரிக்கா கடுஞ்சேதத்தை உண்டாக்கியது. உடனே ஜப்பான் நிபந்தனையின்றிச் சரணடைந்தது. சீனா ஜப்பானின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலை பெற்றது.

### மீண்டும் உள்நாட்டுப் போர்

சீன மண்ணிலிருந்து ஜப்பான் வெளியேறியதெனினும், அந்நாட்டில் அமைதி நிலவவில்லை. பொதுவுடைமைக் கட்சியினருக்கும் சியாங் கே ஷேக்கின் குவோமின்டாங் கட்சியினருக்கும் இடையே கடுமையான உள்நாட்டுப் போர் நடைபெற்றது.

மாவ் சே துங்கின் (Mao Tse Tung) தலைமையில், பொதுவுடைமைக் கட்சியினர் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகத் துணிவுடன் சியாங் கே ஷேக்கின் கொடுமையான ஆட்சியை எதிர்த்துப் போரிட்டனர்.[1] இங்கிலாந்து முதலான நேசநாடுகள் சீனாவில்

[1] மாவ் சே துங் 1893-ல் ஹூனன் (Hunan) மாநிலத்தில் குடியானவர் குடும்பமொன்றில் பிறந்தார். இளைஞராக இருந்தபொழுது குடியானவர்களின் மிக மோசமான பொருளாதார நிலையைக் கண்டு வருந்தினார். பின்னர் 1911-12ஆம் ஆண்டு புரட்சியில் மஞ்சு ஆட்சியை ஒழிக்கப் போரிட்டார். 1918-ல் பட்டம் பெற்றார். 1917ஆம் ஆண்டு நடைபெற்ற ரஷியப் புரட்சி அவரைப் பெரிதும் கவர்ந்தது. 1920-21ஆம் ஆண்டுகளில் அவரும் அவருடைய நண்பர்களும் சீனாவில் பொதுவுடைமைக் கட்சியை நிறுவினார்கள். டாக்டர் சன் யாட் சென் ரஷியாவின் உதவியுடன், சோஷலிசக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தியதால் பொதுவுடைமைக் கட்சி செல்வாக்குப் பெறவில்லை. 1927ஆம் ஆண்டிலிருந்து சியாங் கே ஷேக் பொதுவுடைமைக் கட்சியினரைத் துன்புறுத்தத் தொடங்கினார். அதை எதிர்த்து மாவ் மற்றும் இரண்டாயிரம் தொண்டர்கள் கலகம் செய்தனர். அந்தக் கலகத்தை ஷேக் ஒடுக்கினார். பின்னர் 1927-ன் இறுதியில் குவான்டுங் மாநிலத்தில் பொதுவுடைமைக் குடியரசை மாவ் அமைத்தார். அதையும் ஷேக் நசுக்கினார். 1931-ல் கியாங்சி மாநிலத்தில் மற்றொரு பொதுவுடைமை அரசு அமைக்கப்பட்டது. அப்பொழுது மாவ் அக் கட்சியின் மிகச் சிறந்த தலைவராக விளங்கினார். அந்த அரசையும் ஒடுக்க ஷேக் படைகளை அனுப்பினார். அதனால் மாவ் மற்றும் அவருடைய வீரர்கள் 800 மைல் நடந்துசென்று, ஷண்சி மாநிலத்தில் ஓர் அரசை அமைத்தனர். 1937-1945ஆம் ஆண்டுகளில் சீனாவிலிருந்து ஜப்பானியரை விரட்டும் பணியில் ஈடுபட்டார். பின்னர் நாட்டை இணைத்துப் பொதுவுடைமை அரசை நிறுவ சியாங் கே ஷேக்கை எதிர்த்துத் தொடர்ந்து போராடினார்.

அமைதியை நிலைநாட்ட முயன்றன. அம்முயற்சி பலனளிக்கவில்லை சீனா பொதுவுடைமை நாடாக மாறுவதை அமெரிக்கா விரும்பவில்லை. எனவே, அந்த நாடு சியாங் கே ஷேக்குக்குப் பணத்தையும் படையையும் கொடுத்துதவியது. பொதுவுடைமை நாடான ரஷ்யாவும் மாவ் சே துங்கிற்கு மறைமுகமாக உதவியது. அதனால் உள்நாட்டுப் போர் மிகத் தீவிரமாக நடைபெற்றது. நகரங்களை விட நாட்டுப் புறங்களில் தங்கள் செல்வாக்கை நிலைநாட்ட மாவ் மற்றும் அவருடைய படைத் தளபதி சு தே (Chu Teh) திட்டமிட்டனர். அவர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த நிலப்பகுதிகளில் நிலச்சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தனர். பெரும் நிலக்கிழார்களின் பண்ணைகள் அனைத்தும் கைப்பற்றப்பட்டு, அவற்றில் வேலை செய்துவந்த குடியானவர்களுக்கு அவை சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டன. அதனால் ஆயிரக்கணக்கான குடியானவர்கள் மாவின் பக்கம் சேர்ந்துகொண்டு ஷேக்கின் அடக்குமுறை ஆட்சியை எதிர்த்துப் போரிட்டனர். 1948ஆம் ஆண்டு மஞ்சூரியாவின் பெரும்பகுதியில் பொதுவுடைமையினர் தங்கள் அதிகாரத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள். 1949ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அவர்கள் பீகிங் நகரத்தைப் பிடித்துக்கொண்டார்கள். பின்னர் நான்கிங், ஷாங்கை, கான்டன் முதலான பெருநகரங்களைப் பொதுவுடைமையினர் கைப்பற்றிக்கொண்டு சீனா முழுவதும் தங்கள் அதிகாரத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள். சியாங் கே ஷேக் தப்பித்துக்கொண்டு ஃபார்மோசாத் தீவுக்கு ஓடிவிட்டார்.

**சீன மக்கள் குடியரசும் தேசியச் சீனாவும்**

சீனா முழுவதிலும் செல்வாக்குப் பெற்ற பொதுவுடைமையினர் 1949ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதியன்று 'சீன மக்கள் குடியரசை' (People's Republic of China) அமைத்தார்கள். அதன் தலைவர் மாவ் சே துங் ஆவார் (1949-76). அதன் தலைநகரம் பீகிங் ஆகும். அன்று அமைக்கப்பட்ட இந்தக் குடியரசு இன்றும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றது. இது பொதுவுடைமை நாடு என்பதால் செஞ்சீனா (Red China) என்றும் வழங்கப்படுகின்றது.

தப்பியோடிய சியாங் கே ஷேக் 1950ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஃபார்மோசாத் தீவில், அமெரிக்காவின் உதவியுடன் தம் அதிகாரத்தை ஏற்படுத்திக்கொண்டார். இது 'தேசியச் சீனா' (Nationalist China) என்று அழைக்கப்படுகின்றது. தைவான் (Taiwan) என்பது இந்தத் தீவின் மற்றொரு பெயராகும். ஷேக் 1975ஆம் ஆண்டு தம் மறைவுவரை தேசியச் சீனாவின் தலைவராக இருந்தார்.

# 22. ரஷ்யப் புரட்சி
## (1917)

ரஷ்யாவில் 1917ஆம் ஆண்டு நடைபெற்ற புரட்சி இருபதாம் நூற்றாண்டு வரலாற்றில் மிகப்பெரிய திருப்பத்தை ஏற்படுத்தி யுள்ளது. ரஷ்யப் புரட்சி அரசியல் மற்றும் பொருளாதாரப் புரட்சியாகக் கருதப்படுகிறது. உலக நாடுகளில் பல இன்று ரஷ்யாவின் வழியைப் பின்பற்ற முயலுகின்றன. அதற்குக் காரணம் ஒரு சில ஆண்டுகளிலேயே மக்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைப் போக்கி ரஷ்யா மிக வலிமை பொருந்திய நாடாக மாறியது. ரஷ்யப் புரட்சி கீழ்க்காணும் காரணங்களால் நடைபெற்றது.

**காரணங்கள்**

(1) **சார்களின் வல்லாட்சி:** ரோமனுவ் வமிசத்தைச் சேர்ந்த சார்கள் ரஷ்யாவில் வல்லாட்சி நடத்தினார்கள். முதலாம் நிக்கோலஸ் (Nicholas I, 1825-55) கொடுங்கோலராக ஆட்சி செய்தார். 'சர்வாதிகார ஆட்சிதான் நியாயமான ஆட்சி', என்று இவர் கருதினார். மக்கள் அவரைக் கடவுள்போல் கருத வேண்டு மென எதிர்பார்த்தார். பள்ளிகளில் பயின்ற சிறுவர்கள் அரசருக்கு விசுவாசமானவர்களாக நடந்துகொள்ள வேண்டுமெனக் கற்பிக்கப் பட்டார்கள். உரிமைகளைக் கேட்பது அவர்கள் கடமை அன்று. மன்னனின் ஆணைப்படி செயல்படுவதே அவர்களின் கடமையாகும். நாட்டில் புதிய கருத்துகளோ புரட்சிக் கருத்துகளோ பரவாமல் தடுப்பதற்கான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அரசுக்கு எதிராகப் பேசியவர்கள் அனைவரும் சிறையிலடைக்கப் பட்டனர். முதலாம் நிக்கோலஸின் காலத்தில் நாட்டு மக்களில் பாதிப்பேர் அடிமை உழவர்களாக இருந்தார்கள். அவருக்குப்பின் ஆட்சி செய்த இரண்டாம் அலெக்சாண்டர் (Alexander II, 1855-1881) ஓரளவு பரந்த மனப்பான்மை கொண்டவராவார். 1861ஆம் ஆண்டு அவர் அடிமை உழவர்களுக்கு விடுதலை அளித் தார். எனினும், அவர்கட்கு நிலமோ வேறு வேலைவாய்ப்போ கொடுக்கப்படவில்லை. எனவே, அவர்கள் உணவின்றிச் சாக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவருடைய ஆட்சிக்காலத்தில் தொடங்கிய நிஹிலிசம் (Nihilism) என்ற இயக்கம், அப்பொழுது

இருந்த பிற்போக்கு நிறுவனங்கள் ஒழிக்கப்பட வேண்டும் எனப் போராடியது. அதை ஒழிக்க மன்னர் முற்பட்டார். அதனுல் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருக்குப் பின் அவருடைய மகன் மூன்றும் அலெக்சாண்டர் (Alexander III, 1881—1894) நிஹிலிச இயக்கத் தலைவர்களைக் கொடுமைப்படுத்தினுர். அவருக்குப்பின் இரண்டாம் நிக்கோலஸ் (Nicholas II, 1894—1917) சார் ஆனுர். அவர் ஒரு சர்வாதிகாரி ஆவார். நோயாலும், பட்டினியாலும், வறுமையாலும் வாடிக்கொண்டிருந்த மக்களைப் பற்றி அவர் சிறிதும் கவலை கொள்ளவில்லை. மக்கள் அரசியல் சீர்திருத்தங்களை வேண்டினர். வல்லாட்சி ஒழியவேண்டுமென அவர்கள் கோரினர். ஆனுல், மன்னர் வல்லாட்சியின் தன்மையை நிலைநாட்ட முற்பட்டார். எனவே, மக்கள் கொதிப்படைந்து வந்தனர்.

(2) உழவர்களின் இழிநிலை : ரஷ்யாவில் இலட்சக்கணக்கான உழவர்கள் அடிமைகளாகவே இருந்தனர். 1861-ல் அவர்கள் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். பெருநிலக்கிழார் களிடமிருந்து அவர்கள் விடுதலை பெற்றுர்களேயொழிய வறுமை யினின்று அவர்கள் விடுதலை பெறவில்லை. அவர்கள் கல்வியறிவு இல்லாதவர்களாகவும் வேறு வழிகளில் பிழைக்கத் தெரியாதவர் களாகவும் இருந்தார்கள். மேலும், அவர்கள் பலவிதமான வரிகளை அரசுக்குச் செலுத்தவேண்டியிருந்தது. பிரபுக்களால் உழவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். வட்டிக்குப் பணம் கொடுக்கும் பண முதலைகள் உழவர்களுக்கிருந்த துண்டு நிலங்களை யும் பறித்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் வாழ்க்கைத் துன்பங்களிலிருந்து விடுபடச் சாவைத் தவிர வேறுவழியே இல்லை போல் தோன்றியது.

(3) தொழிலாளரின் துயரநிலை : 18, 19ஆம் நூற்றுண்டு களில் ரஷ்யாவில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது. அதனுல் தொழிற்சாலைகளும் நகரங்களும் பெருகின. அங்கு வேலைசெய்த தொழிலாளர்களின் பிரச்சினைகள் பெருகின. முதலாளிகள் தொழிலாளர்களிடம் நீண்ட நேரம் வேலைவாங்கிப் பிழிந்தெடுத்து மிகக் குறைந்த ஊதியத்தையே கொடுத்தனர். ஆலைகளில் வேலை செய்த தொழிலாளர்கள் பல விபத்துக்குள்ளாயினர். இயந்திரங் களால் ஏற்பட்ட விபத்துகளைத் தடுக்க அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை. இறந்துவிட்ட தொழிலாளியின் குடும்பம் பெருந்துயரில் ஆழ்ந்தது. தொழிலாளர்கள் வாழ்ந்த இடங்கள் உடல்நலத்திற்கு ஏற்றவையாக இல்லை. தங்கள் உரிமைகளைக் கேட்க வழியும் இல்லை. ஏனெனில், தொழிற்சங்கங்கள் அமைக்கப் படுவது தடைசெய்யப்பட்டது. அதனுல் புரட்சித் தலைவர்கள் காட்டிய வழியில் நடக்க அவர்கள் ஆயத்தமாய் :இருந்தார்கள்.

(4) **புரட்சி எழுத்தாளர்களின் புதுமைக் கருத்துகள் :** எந்தப் புரட்சியிலும் எழுத்தாளர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். 19, 20ஆம் நூற்றுண்டுகளில் மனித சமுதாயத்திலிருந்த வர்க்கப் பாகுபாடுகளை நீக்கவும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்கவும் எழுத்தாளர்கள் புரட்சிகரமான கருத்துகளை வெளியிட்டார்கள். கார்ல் மார்க்ஸ் (Karl Marx, 1818-83) ஒரு ஜெர்மானிய அறிஞர் ஆவார். அறிவுக்கும் ஆற்றலுக்கும் பெயர் போன யூத இனத்தைச் சேர்ந்தவராவார். அவர் வெளியிட்ட அரசுக்கு எதிரான கருத்துகளால் ஜெர்மனியிலிருந்து நாடு கடத்தப்பட்டார். இலண்டனில் குடியேறிய மார்க்ஸ், 'மூலதனம்' (Das Capital) என்ற நூலை எழுதினார். ஆடம் ஸ்மித் (Adam Smith) எழுதியிருந்த 'நாடுகளின் செல்வம்' (Wealth of Nations, 1776) என்ற நூலுக்கெதிராக அது எழுதப்பட்டது. ஸ்மித் முதலாளித்துவ (Capitalism) அமைப்பில்தான் நாடுகளின் செல்வமும் வளமும் பெருகும், மக்கள் சுதந்திரமாக மகிழ்ச்சியாக வாழ முடியும் என்ற கருத்தைத் தெரிவித்திருந்தார். அதை மார்க்ஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. முதலாளித்துவ அமைப்பில் முதலாளிகள் தொழிலாளிகள் என இரு பிரிவினர் சமுதாயத்தில் உள்ளனர். தொழிலாளர்கள் முதலாளிகளால் சுரண்டப்படுகின்றனர். தொழிலாளர்களின் துன்பங்கள் பெருகுகின்றன. இந்த நிலை நீடித்தால் தொழிலாளர்கள் புரட்சிசெய்து முதலாளிகளின் செல்வத்தைப் பறித்துக்கொள்வார்கள். புரட்சிக்குப் பின் எல்லாச் செல்வமும் அரசாங்கத்திற்கே சொந்தமாகும். சமுதாயத்தில் உள்ள அனைவரும் நல்லுறவுடன் வாழ, சோஷலிசக் (Socialism) கொள்கையின் அடிப்படையில் சமுதாயத்தினை அமைக்க வேண்டுமென மார்க்ஸ் கூறினார். அவர் 'மூலதனம்' என்ற நூலில் வெளியிட்ட இந்தக் கருத்துகள் ரஷ்யாவில் செல்வாக்குப் பெற்றன. கார்ல் மார்க்ஸ் மற்றும் அவருடைய நண்பர் ஃபிரெடிரிக் எங்கெல்ஸ் (Frederick Engels)ஆகிய இருவரும் சேர்ந்து 'பொதுவுடைமை பொது அறிக்கை' (Communist Manifesto) என்ற நூலையும் வெளியிட்டனர் (1848). இந்த நூல் பொதுவுடைமைக் கொள்கையை விளக்கியது. ரஷ்யப் புரட்சியாளர்கள் இந்த நூலால் பெரிதும் கவரப்பட்டார்கள். லியோ டால்ஸ்டாய் (Leo Tolstoy, 1825-1919), மாக்சிம் கார்கி (Maxim Gorki) முதலான ரஷ்ய எழுத்தாளர்கள் தங்கள் நூல்களில் ரஷ்யர்களின் இழிநிலையை விவரித்திருந்தார்கள். இவற்றைப் படித்த கல்வியறிவு பெற்ற மக்கள் எழுச்சி பெற்றார்கள்.

(5) **ரஷ்ய-ஜப்பானியப் போர் (1904-1905) :** ஏகாதிபத்திய வெறிகொண்ட சிறிய நாடாகிய ஜப்பான் மிகப் பெரிய நாடான

ரஷ்யாவை மிக எளிதாகப் போரில் தோற்கடித்தது. இந்தத் தோல்வி ரஷ்ய மக்களுக்கு மிகப் பெரிய அதிர்ச்சியைத் தந்தது. முடியாட்சி ஒழியவேண்டும். திறமையற்ற இரண்டாம் நிக்கோலஸ் ஆட்சி மாறவேண்டுமென மக்கள் துடித்தனர். அந்த ஆண்டு மக்கள் வறுமையிலும் பஞ்சத்திலும் துவண்டிருந்தார்கள். ஆயிரக் கணக்கான மக்கள் தலைநகரமாகிய பீடர்ஸ்பர்க்கை (St. Petersburg) நோக்கி அணிவகுத்துச் சென்றனர். ஆனல், இரண்டாம் நிக்கோலஸ் அவர்களைப் பார்க்க மறுத்தார். படையை ஏவி அவர்களைச் சுட்டுவீழ்த்தும்படி ஆணையிட்டார். இந்த, செஞ்ஞாயிற்றுப் படுகொலை'யில் (The Massacre of the Red Sunday) நூற்றுக்கணக்கான ரஷ்யர்கள் இறந்தனர். உணவு கேட்கச் சென்றவர்கள் துப்பாக்கிக்கு உணவாயினர். நாடு முழுவதும் மன்னருக்கு எதிர்ப்புக் கிளம்பியது. மக்களின் கோரிக்கைகளுக்கு இணங்கி மன்னர் 'அக்டோபர் அறிக்கை'யை (October Manifesto) வெளியிட்டார். அதன்படி ஓர் அரசியல் சட்டம் எழுதப்பட்டது. 'டுமா' (Duma) என்ற பாராளுமன்றம் அமைக்கப்பட்டது. 1906ஆம் ஆண்டு முதல் 'டுமா' கூடியது. அடுத்த ஆண்டும் அது கூடியது. இரு முறையும் அதை மன்னர் கலைத்துவிட்டார். மூன்ருவது முறை கூடிய 'டுமா' மன்னரின் 'கைப் பொம்மை' ஆகிவிட்டது. இரண்டாம் நிக்கோலஸ் தம் வரம்பிலா அதிகாரத்தைப் பயன்படுத்திச் சர்வாதிகார ஆட்சியைத் தொடர்ந்து நடத்தினர். வேறு வழியின்றி மக்கள் துன்பக்கடலில் மூழ்கியிருந்தார்கள்.

(6) அரசியல் கட்சிகள்: 1895ஆம் ஆண்டு 'தொழிலாளர் சமூக மக்களாட்சிக் கட்சி' (Workers Social Democratic Party) நிறுவப்பட்டது. இதிலிருந்த தலைவர்களுக்கிடையே கட்சியின் கொள்கைகளில் கருத்து வேறுபாடுகள் தோன்றின. எனவே, 1903ஆம் ஆண்டு கட்சியின் தீவிரவாதிகள் லெனின் (Lenin) தலைமையில் பிரிந்துசென்றனர். அவர்கள் போல்ஷிவிக்குகள் (Bolsheviks) என்று அழைக்கப்பட்டனர். மற்றவர்கள் கெரன்ஸ்கி (Kerensky) தலைமையில் செயல்பட்டனர். அவர்கள் மென்ஷிவிக்குகள் (Mensheviks) என்று அழைக்கப்பட்டனர். போல்ஷிவிக்குகள் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கவும், தொழிலாளரின் ஆட்சியை நிறுவவும் முயன்றனர். அவர்களின் தலைவர் லெனின், கார்ல் மார்க்ஸின் பொதுவுடைமைக் கொள்கைகளால் கவரப்பட்டவர். 1870-ல் பிறந்த லெனின் முறையான கல்விக்குப் பின் 1891-ல் பீடர்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறைப் பட்டத்தைப் பெற்ருர். அவர் இளைஞராக இருந்தபோதே புரட்சிகரமான கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார். லெனினின் பதினேழாவது

வயதில், அவருடைய சகோதரர் மன்னரைக் கொல்ல முயன்றார் என்று குற்றம் சாட்டப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார். இந்த நிகழ்ச்சி அவரைப் பெரிதும் பாதித்தது. ரஷ்யாவில் மக்கள் உரிமைகளை இழந்து விலங்குகள்போல் நடத்தப்படுவதைக் கண்டு லெனின் வெதும்பினார். அச்சுறுத்தும் முறைகளால் ஆட்சியை மாற்ற முடியாது, சுதந்திரத்தைப் பெறமுடியாது; அதற்கு மக்களின் எழுச்சி தேவை என்று அவர் விளக்கினார். பொது வுடைமை ஆட்சியை நிறுவப் புரட்சி நடைபெற்றே ஆகவேண்டும் என்றும் அவர் பிரசாரம் செய்தார். அரசுக்கெதிரான கொள்கை களை அவர் கூறியதால் நாடு கடத்தப்பட்டார். எனவே, அவர் ஸ்விட்சர்லாந்திற்குச் சென்று அங்குத் தங்கியிருந்தார். தக்க நேரத்தில் ரஷ்யாவிற்கு வந்து ஆட்சியைக் கைப்பற்ற ஆயத்தமாய் இருந்தார்.

(7) உடனடி காரணம்—முதல் உலகப் போரில் தோல்வி: முதல் உலகப் போரில், 1914ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரஷ்யப் படைகள் ஜெர்மானியப் படைகளால் கடுமையாகத் தோற் கடிக்கப்பட்டன. ஒரு லட்சத்து இருபதாயிரம் ரஷ்ய வீரர்கள் ஜெர்மனியிடம் சரணடைந்தனர். மூன்று லட்சம் வீரர்கள் போரில் கொல்லப்பட்டனர். மன்னரின் திறமையின்மையே இதற்குக் காரணமென மக்கள் கருதினர். ஏற்கெனவே ஜப்பா னிடம் தோற்ற (1905) ரஷ்யா, இப்பொழுது அண்டை நாடு ஜெர்மனியிடம் மேலும் பல தோல்விகளை அடைந்து, ரஷ்யா ஜெர்மனியின் ஒரு பகுதியாகிவிடும் என்றே புரட்சியாளர்கள் கருதினார்கள். எல்லா நிலைகளிலிருந்தும் மன்னருக்கு எதிர்ப்புக் கிளம்பியது. இராணுவ அதிகாரிகள், அரசரின் ஆணையை ஏற்க மறுத்தனர். போர் வீரர்கள் படையைவிட்டு விலகினர். தொழி லாளர்கள் தொழிற்சாலைகளுக்குச் செல்லாமல் வேலை நிறுத்தங்கள் செய்தனர். உழவர்கள் ஆங்காங்குக் கலகங்கள் செய்தனர். மற்றப் பிரிவினரும் அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் செய் தனர். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் குழப்பம் நிலவியது. அரசு எதிர் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது. அதனால் புரட்சி மூண்டது.

## புரட்சியின் போக்கு

1917ஆம் ஆண்டு மார்ச் மாதம் பீட்ரோகிரேட் (Petrograd) நகரத்தில் ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் அணி வகுத்துச் சென்றனர். அவர்கள் அரசுக்கெதிரான முழக்கங்களை எழுப்பினார்கள். கூட்டத்தைக் கலைக்க அனுப்பப்பட்ட படைகள் கூட்டத்தினருடன் சேர்ந்துகொண்டன. இரண்டாம் நிக்கோலஸ்

அந் நகருக்கு விரைந்தார். மக்கள் அவரைச் சூழ்ந்துகொண்டனர். ஆட்சியினின்று விலகும்படி அவர்கள் மன்னரை வற்புறுத்தினர்கள். வேறு வழியின்றி நிக்கோலஸ் முடிதுறந்தார். அதையடுத்து நாட்டுப்பற்று மிக்க மிதவாதிகளால் ஒரு தாற்காலிக அரசு (Provisional Government) அமைக்கப்பட்டது. அது முதல் உலகப் போரைத் தொடர்ந்து நடத்த விரும்பியது. ஆனல், ரஷ்ய மக்களுக்கு அப்பொழுது தேவைப்பட்டது உணவும், உழுநிலமும், அமைதியும்தாம்; போர் அன்று. எனவே, அந்த அரசு மக்களின் ஆதரவை இழந்தது.

இந்த நிலையில் கெரன்ஸ்கி (Kerensky) தாற்காலிக அரசின் தலைமைப் பொறுப்பேற்றுர். அவர் மிகுந்த நாட்டுப்பற்றும் சிறந்த பேச்சாற்றலும் பெற்றவராவார். மிதவாதியும் சோஷலிஸ்டுமான கெரன்ஸ்கி ரஷ்யாவின் பெருமை பாதிக்கப்படாமல் போரை நிறுத்தவும், நாட்டில் சோஷலிசத் திட்டத்தைப் படிப்படியாகக் கொண்டுவரவும் விரும்பினுர். ஆனல், இதையும் போல்ஷி விக்குகள் எதிர்த்துவந்தனர். புரட்சிகரமான மாறுதல்கள் உடனே தேவை என்று அவர்கள் கோரினுர்கள்.

ரஷ்யாவில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண் டிருந்தபோது லெனின் மற்றும் டிராட்ஸ்கி தாயகம் திரும்பினர். ரஷ்ய மக்களின் எண்ணங்களை நன்கு புரிந்துகொண்ட லெனின் அவர்கள் விரும்பிய உறுதிமொழிகளைத் தந்தார். உடனடியாக அமைதி, எல்லோருக்கும் உணவு, உழுவோருக்குச் சொந்த நிலம், தொழிலாளரின் அரசு (Government of the Workers and Peasants) முதலானவற்றை உடனே தரமுடியும் என லெனின் மக்களிடம் தெரிவித்தார். மக்களின் ஆதரவு போல்ஷிவிக்குகளுக்குப் பெருகியது. இந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு 1917ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கெரன்ஸ்கி தலைமையிலியங்கிய அரசைக் கவிழ்த்துவிட்டு லெனின், டிராட்ஸ்கி முதலான போல்ஷிவிக்குகள் ஆட்சியைக் கைப்பற்றினுர்கள். லெனின் தலைமையில் பொதுவுடைமை அரசு அமைக்கப்பட்டது.

### போல்ஷ்விக் அரசின் பணிகள்

லெனின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் ரஷ்யாவை முதல் உலகப் போரிலிருந்து விலக்கிக்கொண்டார். ஜெர்மனியுடன் 1918ஆம் ஆண்டு பிரெஸ்ட் லிடோவ்ஸ்க் உடன்படிக்கையைச் (The Treaty of Brest Litovsk) செய்துகொண்டார். முதலாளித்துவ அமைப்பு ஒழிக்கப்பட்டது. உழுகின்ற உழவர்களுக்குச் சொந்த நிலம் கொடுக்கப்பட்டது. தொழிற்சாலைகள் இழப்பீடு

(Compensation) இன்றிக் கைப்பற்றப்பட்டன. திருச்சபை கலைக்கப்பட்டது. உழைப்பவருக்கு மட்டுமே உணவு, உழைக்காதவர் தண்டனை பெறுவர் என அறிவிக்கப்பட்டது. கார்ல் மார்க்ஸின் பொதுவுடைமைக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த லெனின் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.[1] சர்வாதிகார ஆட்சி முறையால்தான் இத்தகைய முற்போக்கு நடவடிக்கைகளை எடுக்க முடியுமென லெனின் நம்பினார். இந்தப் புரட்சிகரமான நடவடிக்கைகள் ஏழை உழவர்களையும் தொழிலாளர்களையும் முதலில் பெரிதும் கவர்ந்தன.

லெனின் திட்டங்களால் பாதிக்கப்பட்ட ஆலைச் சொந்தக்காரர்கள், நிலப்பிரபுக்கள், திருச்சபையினர் முதலானோர் லெனினின் ஆட்சியைக் கவிழ்க்க இரகசியத் திட்டங்களைத் தீட்டினர். மேலும், இப் புரட்சியைக் கண்டு அச்சமுற்ற அயல்நாட்டினரும் இவர்களுக்குப் படையை அனுப்பி உதவினர். குறிப்பாக இங்கிலாந்து, ஃபிரான்ஸ், ஜப்பான் முதலான நாடுகள் பணக்காரச் சதிக்காரர்களுக்கு உதவ 'வெள்ளைப் படையை' (The White Army) அனுப்பின. இந்தப் படையை ஒடுக்க டிராட்ஸ்கி தலைமையில் அமைக்கப்பட்டிருந்த 'சிவப்புப் படை' (The Red Army) உதவியது. 1920ஆம் ஆண்டுக்குள் வெள்ளைப் படையும் சொத்துகளை இழந்த பணக்கார வர்க்கத்தின் எதிர்ப்பும் ஒடுக்கப்பட்டன. 'சேகா' (Cheka) என்ற இரகசியக் காவல் படை பொதுவுடைமை அரசை எதிர்த்த அனைவரையும் சுட்டு வீழ்த்தியது. 1918ஆம் ஆண்டு இரண்டாம் நிக்கோலஸ் மற்றும் அவருடைய குடும்பத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

லெனின் மேற்கொண்ட நடவடிக்கைகள் முதலில் ஏழை எளியவர்களைக் கவர்ந்தன. எனினும், அவர்களே பின்னர் அரசுடன் ஒத்துழைக்கவில்லை. ஆலைகளில் தொழிலாளர்கள் கடுமையாக உழைக்கவில்லை. எனவே, உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. உழவர்கள் உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்கவில்லை. ஏனெனில், அவர்களிடம் தேவைக்கு அதிகமாக இருந்த உணவுத் தானியங்களை அரசு எடுத்துக்கொண்டது. அதே நேரத்தில் அவர்களுக்கு வேண்டிய பொருள்களை அரசு கொடுக்கவில்லை. எனவே, லெனின் 'புதிய பொருளாதாரக் கொள்கையை' (New Economic Policy) அறிவித்தார். அதன்படி பொதுவுடைமைக் கொள்கையைச் சிறிது தளர்த்தினார். தனிப்பட்ட

[1] உழைக்காதவருக்கு உணவில்லை. (He who does not work. neither shall he eat') சக்திக்கேற்ற உழைப்பு, உழைப்பிற்கேற்ற ஊதியம் ('From each according to his ability, to each according to his work') என்று இபபொழுது நடைமுறையிலுள்ள ரஷ்ய அரசியல் சட்டம் (12ஆம் பத்தி) கூறுகின்றது.

வர்கள் சிறிய அளவில் வாணிகம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். உழவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு உணவுத்தானியங்களை அரசுக்குக் கொடுத்துவிட்டு மிகுதியை அவர்களே வைத்துக்கொள்ளவும் விற்கவும் அனுமதிக்கப்பட்டனர். பெரிய தொழிற்சாலைகளை மட்டுமே அரசு எடுத்துக்கொண்டது. மற்றச் சிறு தொழில்களை நடத்தத் தனிப்பட்டவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இத்தகைய மாறுதல்களால் மக்களின் ஆதரவு அரசுக்குக் கிடைத்தது. லெனின் இந்தக் (NEP) கொள்கையைத் தாற்காலிகமாகவே கடைப்பிடித்தார். அவருக்குப்பின் தலைமைப் பொறுப்பேற்ற ஸ்டாலினும் (Stalin) பொதுவுடைமைக் கொள்கைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டார். 1923ஆம் ஆண்டு ரஷ்யாவுக்குப் புதிய அரசியல் திட்டம் வழங்கப்பட்டது.[1] 1924ஆம் ஆண்டு லெனின் இயற்கை எய்தினர்.

**புரட்சியின் சிறப்பு**

ரஷ்யப் புரட்சியினுல் சார் மன்னர்களின் கொடுங்கோலாட்சியினின்று மக்கள் விடுதலை பெற்றனர். லெனினின் தலைமையில் சர்வாதிகார ஆட்சி நிறுவப்பட்டதென்ருலும் மக்கள் உணவும், உடையும், உறைவிடமும் பெற்ருர்கள். பொதுவுடைமை அரசில் தனிமனிதனின் நலனைவிட நாட்டின் நலனுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. பொதுவுடைமைக் கொள்கைகளை உலகெங்கும் பரப்பக் கோமின்டென் (Comintern) என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. லெனினுக்குப் பிறகு ஸ்டாலின் ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் ரஷ்யாவை வளமிக்கதாக மாற்றினர். வலிமைமிக்க ஹிட்லரை இரண்டாம் உலகப் போரின்போது வீழ்த்திய பெருமை ரஷ்யாவைச் சாரும். பொதுவுடைமைப் புரட்சிக்குப் பின் ரஷ்யாவின் வழியைப் பின்பற்றிக் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சீனு, மற்றும் வேறு சில நாடுகள் பொதுவுடைமை நாடுகளாக மாறின.

[1] இன்று ரஷ்யாவில் நடைமுறையிலிருக்கும் அரசியல் சட்டம் 1936ஆம் ஆண்டு ஸ்டாலினுல் அமைக்கப்பட்டதாகும்.

# 23. இத்தாலி, ஜெர்மனி, துருக்கியில் சர்வாதிகார ஆட்சி

முதல் உலகப் போருக்குப்பின் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளால் இத்தாலி, ஜெர்மனி, துருக்கி போன்ற நாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. குறிப்பாக, ஜெர்மனி மிக இழிவான நிலைக்குள்ளாக்கப்பட்டது. எனவே, இந் நாடுகளில் இருந்த அரசியல் தலைவர்கள் தங்கள் நாடுகளை மிக வலிமை பொருந்திய நாடுகளாக மாற்றவும், பொதுவுடைமைக் கொள்கைகள் பரவுவதைத் தடுக்கவும் முற்பட்டார்கள். அதனால் இத்தாலியில் முஸ்ஸோலினியின் ஆட்சியும், ஜெர்மனியில் ஹிட்லரின் ஆட்சியும், துருக்கியில் முஸ்தாபா கமால் பாஷாவின் ஆட்சியும் ஏட்பட்டது.

## I. இத்தாலியில் முஸ்ஸோலினியின் ஃபாசிச ஆட்சி

இத்தாலி 1870ஆம் ஆண்டு முழுமையாக இணைக்கப்பட்டது. எனினும், இத்தாலிய மக்கள் பாராளுமன்ற ஆட்சிக்கு வேண்டிய பக்குவம் பெற்றவர்களாக இல்லை. அந் நாடு இணைவதற்கு முன்னர், மக்கள் எவ்வளவு பிரிவு மனப்பான்மையும், தனிப்பட்டவர் நலனும் கொண்டிருந்தார்களோ அப்படியே இணைப்புக்குப் பின்னரும் விளங்கினர்கள். முதல் உலகப் போரில் இங்கிலாந்து ஃபிரான்ஸ் முதலான நாடுகளுடன் சேர்ந்து இத்தாலி போரிட்டது. போருக்குப் பின்னர்க் கூடிய பாரிஸ் மாநாட்டிடமிருந்து இத்தாலி பல சலுகைகளை எதிர்பார்த்தது. ஆனால், தென் டைரோல் (Southern Tyrol), டிரிஸ்டே (Trieste) மற்றும் இஸ்ட்ரியா (Istria) முதலானவற்றை மட்டுமே இத்தாலி பெற்றது. ஆகவே, இத்தாலிய அரசும், மக்களும் இதனால் மன நிறைவு பெறவில்லை. போரில் பெரும் தியாகங்களைத் தாங்கள் செய்ததாகவும், அவற்றிற்கு ஈடாக ஃபிரான்சும் இங்கிலாந்தும் தங்களுக்கு நிலப்பகுதிகளைத் தரவில்லை என்றும் இத்தாலியர் ஆத்திரம் கொண்டனர். போருக்குப்பின் இத்தாலியில் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்குலைவையும் அவர்கள் பொறுமையாகச் சமாளிக்கவில்லை. இந்த நிலையில் இத்தாலியில் பொதுவுடைமைக் கொள்கைகள் பரவி, ரஷ்யாவில் வந்ததுபோலப் பொதுவுடைமை அரசு வந்துவிடுமோ எனச் சிலர் அஞ்சினர். தொழிலாளர்கள் வலுக்கட்டாய

மான முறையில் தொழிற்சாலைகளைத் தமதுடைமையாக்கிக் கொள்ள முயன்றார்கள். உழவர்கள் நிலக்கிழார்களை விரட்டிவிட்டு நிலங்களைத் தமதுடைமையாக்கிக்கொள்ள முயன்றனர். பொதுவுடைமைத் தொண்டர்கள் கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் முதலானவற்றை நடத்தித் தங்கள் வலிமையை வெளிப்படுத்தினார்கள். இத்தகைய நிலையில் மூன்றும் விக்டர் இம்மானுவேலின் அரசு பாராளுமன்ற ஆட்சியினை நடத்த முடியாமல் திணறிக்கொண்டிருந்தது. இந்த அவல நிலையைச் சீர்படுத்த நாட்டுப்பற்று மிக்க நடுத்தர வகுப்பினர் விரும்பினர். வலிமைமிக்க நாடாக இத்தாலி மாறவேண்டுமானால் பொதுவுடைமைக் கொள்கைகள் நாட்டிலிருந்து விரட்டப்பட வேண்டுமென அவர்கள் கருதினார்கள். இத்தகையவர்களின் ஆதரவுடன் தான் பெனிடோ முஸ்ஸோலினி (Benito Mussolini) இத்தாலியில் ஃபாசிச ஆட்சியை (Fascist Rule) அமைத்தார்.

முஸ்ஸோலினியின் எழுச்சி

முஸ்ஸோலினி ஓர் எளிய இத்தாலியக் குடும்பத்தில் பிறந்தார். அவருடைய தந்தை இரும்புக் கருவிகளைச் செய்பவர்; அவருடைய தாய் ஒரு பள்ளி ஆசிரியை. முஸ்ஸோலினியும் சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் அரசியலில் பங்கு கொண்டார். பத்திரிகை எழுத்தாளராகவும் இருந்தார். அவர் ஸ்விட்சர்லாந்துக்குச் சென்றிருந்தபோது ரஷ்யாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட லெனினைச் (Lenin) சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார். அவரிடமிருந்து பொதுவுடைமைக் கொள்கைகளைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டார். சிறிது காலம் அவர் சோஷலிஸ்டாக இருந்தார். பின்னர்த் தம் கொள்கைகளை மாற்றிக்கொண்டார். முதல் உலகப் போரின்போது இத்தாலியப் படையில் சேர்ந்து பணிபுரிந்தார். போருக்குப்பின் இத்தாலியில் நிலவிய அமைதியின்மையைச் சாதகமாகப் பயன் படுத்திக்கொண்டு ஒரு கழகத்தை அமைத்தார் (1919). அது பின்னர் ஃபாசிஸ்ட் கட்சி (The Fascist Party) என்று அழைக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான இளைஞர்களும், படையிலிருந்து விலகிய இராணுவ வீரர்களும் அக் கட்சியில் சேர்ந்தனர். சிறந்த நாவன்மையும் எழுத்தாற்றலும் பெற்ற முஸ்ஸோலினி இத்தாலியின் பழம்பெருமையை மக்களுக்கு எடுத்துரைத்தார். பண்டைய ரோமானியப் பேரரசின் பெருமைகளை மக்களிடம் கூறி, அவர்களின் இதயங்களைக் கவர்ந்தார். 'சுண்டெலியாக நூறு நாள் வாழ்வதைவிடச் சிங்கம் போல் ஒருநாள் வாழ்வது மேல்' என்று அவர் கூறினார்.[1] முஸ்ஸோலினி ஒரு பேச்சாளர் படையையே உருவாக்கினார். அவர்கள் ஃபாசிஸ்ட் கட்சியின்

[1] 'It is better to live a day as a lion than a hundred days as a mouse'.

கொள்கைகளை மக்களிடம் எடுத்துரைத்தனர். அக் கட்சியின் தொண்டர்கள் கருஞ்சட்டையை அணிந்தனர். கருஞ்சட்டையினர் (The Black Shirts) என்றே அவர்கள் அழைக்கப்பட்டனர். நாட்டுப்பற்று மிக்க கருஞ்சட்டையினர் வீதிகளில் அணிவகுத்துச் சென்ற காட்சியைக் கண்ட எழுச்சிமிக்க இத்தாலியர் அனைவரும் அக் கட்சியில் சேர்ந்தனர். முஸ்ஸோலினி தம் கட்சித் தொண்டர்களுக்கு மூன்று சொற்களைத் தாரக மந்திரமாகத் தந்தார்: அவை 'நம்பிடு, பணிந்திடு, போரிடு' (Believe, Obey, Fight) என்பவையாகும். மூன்றாண்டுகளுக்குள் ஃபாசிஸ்ட் கட்சி வலிமை பொருந்திய கட்சியாக மாறியது. இலட்சக்கணக்கான இத்தாலியரின் ஆதரவு அக் கட்சிக்கு இருந்தது. இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, 1922ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆயிரக் கணக்கான தம் தொண்டர்களுடன் முஸ்ஸோலினி தலைநகரத்திற்குச் சென்றார். அரசர் மூன்றும் விக்டர் இம்மானுவேலைச் (Victor Emmanuel III, 1900—46) சந்தித்து ஆட்சியைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி வற்புறுத்தினர். வேறுவழியின்றி அரசர் முஸ்ஸோலினியை நாட்டின் தலைமை அமைச்சராக நியமித்தார். அன்று முதல் மூன்றும் விக்டர் இம்மானுவேல் பெயரளவுக்கே செயல்பட்டார். முஸ்ஸோலினி எல்லா அதிகாரங்களையும் பெற்ற சர்வாதிகாரியானார். அவர் 'டியூஸ்' (Duce) அல்லது தலைவர் என்று அழைக்கப்பட்டார். 1922 முதல் 1943 வரை அவர் தொடர்ந்து அப் பதவியிலிருந்தார்.

**ஃபாசிஸ்ட் கட்சியின் நோக்கங்கள்**

முஸ்ஸோலினியின் கொள்கைகளுள் முக்கியமானவை மூன்றாகும். அவை, அரசாங்கத்தை மிக வலிமை பொருந்தியதாக மாற்றுதல், தனிப்பட்டவர் சொத்துகளைக் காத்தல், உறுதியான அயல்நாட்டுக் கொள்கை என்பவை ஆகும். அதனால் ஃபாசிச ஆட்சி, பொதுவுடைமையை இத்தாலியிலிருந்து முழுமையாக அகற்றத் திட்டமிட்டது. 'நாடுதான் எல்லாம்' என்ற கொள்கை பின்பற்றப்பட்டது. 'ஒவ்வொன்றும் நாட்டுக்குட்பட்டது; நாட்டுக்கு எதிராக எதுவும் இருக்கமுடியாது. நாட்டுக்கு வெளியே எதுவும் இருக்கவியலாது' என்று அறிவிக்கப்பட்டது[1]. இத்தாலியை ஐரோப்பாவில் மிகப் பெரிய வல்லரசாக மாற்றவேண்டும் என்பது முஸ்ஸோலினியின் கொள்கையாகும். மத்தியதரைக்கடல் முழுவதிலும் இத்தாலியின் அதிகாரம் நிலைநாட்டப்படவேண்டும் என்று அவர் பேராவல் கொண்டார். அதற்காக எல்லா நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டார்.

1 'Everything within the State, nothing against the State and nothing outside the State.

முஸ்ஸோலினியின் உள்நாட்டுச் சாதனைகள்

ஃபாசிச ஆட்சியில் இத்தாலிய மக்களுக்கு நம்பிக்கை ஏற்படச் செய்ய அரசு திறமையாகச் செயல்படத் தகுந்த வழிமுறைகளை முஸ்ஸோலினி மேற்கொண்டார்; நாணய முறையைச் சீரமைத்தார். நாட்டின் நிதிநிலையைச் சீர்படுத்தினார். முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே இருந்த வேற்றுமைகளைக் களைந்து நல்லுறவை ஏற்படுத்தினார். தொழில் உற்பத்தி பெருக்கப்பட்டது. உதவாமலிருந்த சதுப்பு நிலங்கள் வேளாண்மைக்கு ஏற்ற நிலங்களாக மாற்றப்பட்டன. வேளாண்மையும் தொழில் துறையும் முன்னுரிமை பெற்று வளர்ச்சியுற்றன. நீர்மின் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன, போக்குவரத்துச் சாதனங்கள் பெருக்கப்பட்டன. சாலைகளும் இருப்புப் பாதைகளும் அமைக்கப்பட்டன. மேலும் பல பள்ளிகளும் கல்லூரிகளும் திறக்கப்பட்டன. கல்வி நிறுவனங்களில் ஃபாசிஸ்ட் கட்சியின் கொள்கைகளும், முஸ்ஸோலினியின் சாதனைகளும் விளக்கப்பட்டன. பத்திரிகைகள் மூலமாகவும் மேடைப் பிரசாரங்களாலும் ஃபாசிசக் கொள்கைகள் பரப்பப்பட்டன. இத்தாலியில் இத்தாலியர்களின் மக்கள் தொகை பெருகவேண்டுமென அவர் விரும்பினார். அதற்காக மக்கள் பெருக்கத்தை ஊக்குவித்தார்.

முஸ்ஸோலினி பெரும் சர்வாதிகாரியாக விளங்கினார். அவர் பாராளுமன்ற மரபுகளை மதிக்கவில்லை. தம் எதிரிகளை ஒழித்துக் கட்டுவதற்காக எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். ஃபாசிஸ்ட் கட்சியைத் தவிர மற்றக் கட்சிகள் தடை செய்யப்பட்டன. அரசை எதிர்த்தவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர், நாடு கடத்தப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர். பொதுவுடைமையினர் வேரோடு ஒழிக்கப்பட்டனர். அவர்கள் நாட்டின் பகைவர்களாகக் கருதப்பட்டனர். நாட்டு மக்கள் அனைவரும் ஃபாசிசக் கொள்கைகளையே பின்பற்றவேண்டுமென அவர் விரும்பினார். 1928 ஆம் ஆண்டு இத்தாலியச் சட்டமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் 400 பேர் கொண்ட பட்டியலை அவர் மக்கள் முன் வைத்தார். அந்தப் பட்டியலை அப்படியே மக்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என அவர் விரும்பினார். மக்களும் வேறு வழியின்றி அப்படியே செய்தனர்.

இத்தாலிய அரசர் மூன்றும் விக்டர் இம்மானுவேலுக்கும் போப்புக்கும் நீண்ட காலமாகவே பகைமை நிலவி வந்தது. 1870 ஆம் ஆண்டு அரசர் ரோம் நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டார். அதைப் போப் வன்மையாகக் கண்டித்தார். 1871 ஆம் ஆண்டு இத்தாலியச் சட்டமன்றம் ஒரு சட்டத்தை

இயற்றியது. அதன்படி போப், வாடிகன் அரண்மனையில் (Vatican Palace) வாழவும், பாதுகாப்புப் படையை வைத்துக் கொள்ளவும், பிற கத்தோலிக்க நாடுகளுடன் சுதந்திரமாகத் தொடர்பு கொள்ளவும், தூதுவர்களை மாற்றிக்கொள்ளவும் இத்தாலிய அரசிடமிருந்து ஐந்தரைக் கோடி ரூபாய் பெறவும் அனுமதி கொடுக்கப்பட்டது. எனினும், இவற்றை ஏற்றுக் கொள்ள போப் மறுத்துவிட்டார். எனவே, அரசருக்கும் போப்புக்குமிடையே பகைமை நீடித்திருந்தது. இது 'ரோமானியப் பிரச்சினை' (The Roman Question) என்று அழைக்கப்பட்டது. இதைத் தீர்த்துவைக்க முஸ்ஸோலினி முயற்சிகளை மேற்கொண்டார். அதன் விளைவாக 1929ஆம் ஆண்டு போப்புக்கும் அரசுக்கு மிடையே 'லாடெரன் உடன்படிக்கை' (The Lateran Treaty) நிறைவேறியது. அதன்படி சவாய் அரச குடும்பத்தைச் சேர்ந்த மூன்றும் விக்டர் இம்மானுவேலை இத்தாலிய அரசராகப் போப் ஏற்றுக் கொண்டார். ரோம் நகரத்தினுள் உள்ள வாடிகன் நகரத்தில் (Vatican City) முழு அதிகாரம் செலுத்தப் போப் அனுமதிக்கப்பட்டார். அது தவிர நிதி, சமயம், கல்வி, திருமணம் முதலான விவகாரங்களிலும் இரு தரத்தினரும் உடன்பாடு கண்டனர். போப்புக்கும் அரசுக்கும் இடையே ஏற்பட்ட அந்த உடன்பாடு முஸ்ஸோலினியின் மிகப் பெரிய சாதனையாகக் கருதப் படுகிறது.

**அயல்நாட்டுக் கொள்கை**

முஸ்ஸோலினியின் உள்நாட்டுக் கொள்கைகளால் இத்தாலி வலிமை பெற்றது. அதன் வலிமையை அயல்நாடுகளுக்கு எடுத்துக்காட்ட அவர் ஆக்கிரமிப்புகளில் ஈடுபட்டார். அதற்கேற்றவாறு அடிக்கடி அயல்நாடுகளுக்கெதிரான கருத்துகளையே அவர் மக்களிடையே பேசி வந்தார். 1935-36ஆம் ஆண்டுகளில் முஸ்ஸோலினி ஆப்பிரிக்காவின் வடகிழக்கேயுள்ள அபிசீனியா (Abyssinia) என்று அழைக்கப்பட்ட எதியோப்பியாவின் மீது படையெடுத்தார். சர்வ தேசச் சங்கம் அவருடைய ஆக்கிரமிப்பைக் கண்டித்தது. அதை அவர் புறக்கணித்துவிட்டு, அந் நாட்டைக் கைப்பற்றிக்கொண்டார். சர்வதேசச் சங்கத்திலிருந்தும் 1936ஆம் ஆண்டு இத்தாலி விலகியது, இந்த ஆக்கிரமிப்புச் செயலால் இங்கிலாந்தும், ஃபிரான்சும் இத்தாலிக்கு நட்பு நாடுகளாக இருந்தவை, பகைமை நாடுகளாக மாறின. எனவே, முஸ்ஸோலினி, ஜெர்மனி மற்றும் ஜப்பானுடன் நட்புக் கொண்டார். அவையும் இத்தாலியைப் போல ஆக்கிரமிப்பு நாடுகள் ஆகும். 1936ஆம் ஆண்டு ஜெர்மனியும் ஜப்பானும் ரஷ்யாவிற்கு எதிராகப் பொதுவுடைமை எதிர்ப்பு ஒப்பந்தத்தை

(Anti Comintern Pact) செய்துகொண்டன. 1937-ல் இத்தாலி அதில் சேர்ந்தது. இங்ஙனம் பெர்லின்-ரோம் - டோக்கியோ (Berlin-Rome-Tokyo) அச்சு உருவாயிற்று. 1939-ஆம் ஆண்டு முஸ்ஸோலினி, ஹிட்லருடன் மற்றோர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார், அதன்படி ஜெர்மனி, இத்தாலி ஆகிய இரு நாடுகளில் ஏதாவது ஒன்றை வேறு எந்த நாடேனும் தாக்குமானால், மற்றொன்று அதன் உதவிக்கு வரவேண்டும் என ஒத்துக்கொள்ளப் பட்டது, முஸ்ஸோலினி 1939ஆம் ஆண்டு அல்பேனியாவைத் (Albania) தாக்கிக் கைப்பற்றிக் கொண்டார். இத்தகைய ஆக்கிரமிப்புகளால் இரண்டாம் உலகப்போர் தொடங்கியது.

இரண்டாம் உலகப் போரும் முஸ்ஸோலினியின் வீழ்ச்சியும்

ஜெர்மனி மற்றும் இத்தாலியின் வெறிச் செயல்களால் 1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. 1940ஆம் ஆண்டு ஹிட்லர் ஃபிரான்சைத் தாக்கினார். அப்பொழுது அந்த நாட்டை முஸ்ஸோலினி தென் கிழக்கிலிருந்து தாக்கினார். ஃபிரான்ஸ் வீழ்ந்தது. முஸ்ஸோலினி ஆப்பிரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் சோமாலிலாந்தை ஆக்கிரமித்துக்கொண்டார். பின்னர் எகிப்தைத் தாக்கினார். ஆனால், அதற்குப் பதிலடியாக ஆங்கிலப்படை, இத்தாலியப் படைகளைத் தோற்கடித்து லிபியாவில் பாதிப் பகுதியைக் கவர்ந்துகொண்டது. அதனால் ஹிட்லரின் படைகள் இத்தாலியின் உதவிக்கு வரத் தொடங்கின. ஹிட்லர் ருமேனியாவைத் தாக்கியபோது, முஸ்ஸோலினி அல்பேனியாவிலிருந்து கிரீஸைத் தாக்கினார். ஆனால், கிரீஸ் அவருடைய படையைத் தோற்கடித்தது. அதற்குள் 1941ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்கா பகைமை நாடுகளான ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியவற்றுக்கு எதிராகப் போரில் இறங்கியது. 1943 ஆம் ஆண்டு நட்பு நாடுகளின் படைகள், இத்தாலியப் படைகளை ஆப்பிரிக்காவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் விரட்டியடித்தன. அந்தப் படைகள் சிசிலித் தீவைக் கைப்பற்றிக் கொண்டு, தென் இத்தாலியின் வழியாகத் தலைநகரத்தை நோக்கி விரைந்தன. வேறு வழியில்லாமல் இத்தாலி சரணடைந்தது. 1943ஆம் ஆண்டு ஜூலை மாதம் முஸ்ஸோலினி பதவியிழந்தார்.

பதவியை இழந்த முஸ்ஸோலினி தப்பித்துச் சென்று, ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டு வெற்றிகாணத் துடித்தார். எனினும், 1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இத்தாலியர்களாலேயே முஸ்ஸோலினி சுட்டுக் கொல்லப்பட்டார். இருபத்தோர் ஆண்டுகள் இத்தாலியை ஆட்சிசெய்த சர்வாதிகாரி முஸ்ஸோலினி வீழ்ந்தார். ஃபாசிச ஆட்சி முடிவுற்றது. 1946ஆம் ஆண்டு இத்தாலி குடியரசு ஆயிற்று.

## II. ஜெர்மனியில் ஹிட்லரின் நாசிச ஆட்சி

### முதல் உலகப் போருக்குப் பின் ஜெர்மனி

ஜெர்மனியை ஆட்சி செய்துவந்த இரண்டாம் வில்லியம் (William II, 1888-1918) முதல் உலகப் போருக்குப் பின் நாட்டை விட்டு ஹாலந்துக்கு ஓடிவிட்டார். அதையடுத்து நாட்டில் கொந்தளிப்பும் குழப்பமும் மிகுந்தன. பின்னர் பெர்லின் நகரத்திற்கு அருகில் உள்ள வெய்மார் (Weimar) என்ற இடத்தில் 1919-ல் அரசியல் நிர்ணய சபை கூடி ஓர் அரசியல் சட்டத்தை உருவாக்கியது. அந்த 'வெய்மார் அரசியல் சட்டப்படி' ஜெர்மனி ஒரு குடியரசாயிற்று. ஈபெர்ட் (Ebert, 1919—1925) அதன் முதல் குடியரசுத் தலைவர் ஆனார். அவரையடுத்து ஹிண்டென்பர்க் (Hindenburg, 1925—1934) தலைவரானார்.

கடுமையான நிபந்தனைகளைக்கொண்ட வெர்சாய் உடன்படிக்கையை நிறைவேற்றும் பணி இந்தக் குடியரசுக்கு அளிக்கப்பட்டது. அந்த உடன்படிக்கையின்படி ஜெர்மனியின் படைவலிமை பெருமளவு குறைக்கப்பட்டது. நாடு மிகச் சிறியதாக மாற்றப்பட்டது. ஜெர்மனி மிகப்பெரிய போரிழப்பீட்டுத் தொகை கொடுக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. இதைக் காரணம்காட்டி ஜெர்மனிக்குச் சொந்தமான கனிவளம் மிக்க ரூர் (Rhur) பகுதியை, ஃபிரான்ஸ் கைப்பற்றிக்கொண்டது. இவையனைத்தும் குடியரசின் மதிப்பைக் குறைத்துவிட்டன. பொருளாதார நிலை சீர்குலைந்திருந்தது. 1929-32ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பரவிய பொருளாதார மந்தநிலை (Depression) ஜெர்மனியைப் பெரிதும் பாதித்தது. இந்நிலையைச் செம்மைப் படுத்தக் குடியரசினால் இயலவில்லை. இத்தகைய நேரத்தில்தான் அடால்ஃப் ஹிட்லர் (Adolf Hitler) ஆட்சியைக் கைப்பற்றுவதில் வெற்றி கண்டார்.

### ஹிட்லரின் எழுச்சி

1889ஆம் ஆண்டு ஆஸ்திரியாவில் பிறந்த ஹிட்லர் ஒரு சாதாரணச் சுங்கவரி அலுவலரின் மகனாவார். பள்ளியில் அவர் படிக்கும்போது அவருக்குச் சரியாகப் படிப்பு வரவில்லை. முரட்டுப் பிள்ளையாகவே அவர் காணப்பட்டார். இளமையில் தம் பெற்றோரை அவர் இழந்துவிட்டதால் தாமே உழைத்து வாழ வேண்டியதாயிற்று. ஆஸ்திரியாவின் தலைநகரமாகிய வியன்னாவில் கொஞ்சம் காலம் தொழிலாளியாகப் பணிபுரிந்தார். 1913ஆம் ஆண்டு ஜெர்மனியில் உள்ள மியுனிச் (Munich) என்ற நகரத்திற்குச் சென்று வேலை தேடினார். முதல் உலகப்போரில் ஜெர்மானியப்

படையில் சேர்ந்து போரிட்டார். 1919ஆம் ஆண்டு படையிலிருந்து விலகி அரசியலில் பங்கு கொண்டார். அதே ஆண்டு தேசிய சோஷலிச ஜெர்மன் தொழிலாளர் கட்சியை நிறுவினர். அதுவே நாசிக் கட்சி (The Nazi Party) என்று அழைக்கப்பட்டது. 1923ஆம் ஆண்டு ஹிட்லரும் அவருடைய நண்பர்களும் குடியரசுத் தலைவர் ஈபெர்ட்டைக் (Ebert) கவிழ்த்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றச் சதி செய்தார்கள். எனினும், அதில் தோல்வியடைந்தார்கள். இதுவே 'பீர் மண்டபப் புரட்சி முயற்சி' (Beer-Hall Putsch) என்று சொல்லப்படுகின்றது, ஹிட்லரும் மற்றப் புரட்சியாளர்களும் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர். ஹிட்லர் சிறையிலிருந்தபோது தம் கட்சியின் கொள்கைகளை விளக்கி ஒரு புத்தகம் எழுதினர். அது 'எனது போராட்டம்' (My Struggle—Mein Kampf) என்று தலைப்பிடப்பட்டது. அந்நூலில், நாரிடிக் (Nordic) என்று சொல்லப்படுகின்ற ஜெர்மானிய இனமே உலகத்திலேயே மிகச் சிறந்த இனம் என்றும் அவர்கள் மிக உயர்ந்த நாகரிகத்தைப் பெற்றவர்கள் என்றும் விளக்கினர். தம்முடைய கொள்கைகளையும், திட்டங்களையும் தெரிவித்தார். யூதர்களையும் (Jews), பொதுவுடைமையினரையும் அவர் வெறுத்தார். 'நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள்' என்று அவர்களை வர்ணித்தார். சிறையிலிருந்து வெளிவந்த பின்னர் நாசிக் கட்சியை வலுப்படுத்தினர். அந்தக் கட்சியில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் சேர்ந்தார்கள். அத்தொண்டர்கள் 'புயல் படையினர்' (The Storm Troops) என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் நாசிக் கட்சிக் கூட்டங்களைத் தாக்குதல்களிலிருந்து காத்தார்கள். மற்றக் கட்சிகளின் கூட்டங்களைத் தாக்கிக் குழப்பம் விளைவித்தார்கள். ஹிட்லர் மனித இனத்தினரை மூன்று பிரிவுகளாகப் பிரித்தார். கலாசாரத்தை உண்டாக்குபவர்கள், கலாசாரத்தைப் பரப்புபவர்கள், கலாசாரத்தை அழிப்பவர்கள் என்பவர் அந்த மூன்று பிரிவினர் ஆவர்.[1] ஜெர்மானியர்கள் முதல் பிரிவையும், ஆங்கிலேயர்கள் இரண்டாவது பிரிவையும், யூதர்களும் நீக்ரோக்களும் மூன்றுவது பிரிவையும் சார்ந்தவர் என்று ஹிட்லர் உறுதியாகக் கூறினர். அவர் ஆட்சிக்கு வந்த பின்னர், ஒரு நாட்டில் 'ஓர் இனமக்கள், ஓர் அரசு, ஒரு தலைவன்' (One People, one State and one Leader) இருக்க வேண்டுமெனக் கூறினர். அவர் ஆட்சியாளராக இருந்தபோது தம் கொள்கைகளை எல்லாம் நடைமுறைப் படுத்தினர். தம் நாட்டின் இழிவுச் சின்னமாக விளங்கிய வெர்சாய் உடன்படிக்கையைத் தகர்த்தெறிந்தார், 1924ஆம் ஆண்டு ரைக்ஸ்டாக் (Reichtag) என்ற

[1] The Culture creators, the Culture bearers and Culture destroyers.

ஜெர்மானியச் சட்டமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் நாசிக் கட்சியினர் முப்பத்திரண்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1932ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சட்ட மன்றத்தில் நாசிக் கட்சி மிகப் பெரிய கட்சியாக விளங்கியது. எனவே, குடியரசின் தலைவர் ஹிண்டென்பர்க், 1933ஆம் ஆண்டு ஹிட்லரை சான்சல ராக (தலைமை அமைச்சர்) நியமித்தார். இங்ஙனம் ஹிட்லர் மக்களாட்சி முறைப்படியே ஆட்சியைக் கைப்பற்றினார்.

### ஹிட்லரின் சாதனைகள்

1933ஆம் ஆண்டு சான்சலர் பதவியில் அமர்ந்த பின்னர் எல்லா அதிகாரங்களையும் தாமே பயன்படுத்த விரும்பினார். 1934ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஹிண்டென்பர்க் இறந்துவிட் டார்.அந்தப் பதவியையும் தாமே மேற்கொண்டு சான்சலராகவும், தலைவராகவும் எல்லா அதிகாரங்களையும் பெற்றுச் சர்வாதிகாரி யாக ஜெர்மனியை 1945ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்தார். அவரை மக்கள் ஃப்யூரர் (Fuehrer) அல்லது ‘தலைவர்’ என்று அழைத்தனர். அவர் விருப்பப்படி சட்டமன்றம் அவருக்கு எல்லா அதிகாரங்களையும் கொடுத்தது.

கட்சியின் கொள்கைகளையும், ஹிட்லரின் சாதனைகளையும் விளக்கக் கோயபெல்ஸ் (Goebbels) என்பவர் தகவல் மற்றும் விளம்பரத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் அரசாங்கத்தின் எல்லாத் துறைகளையும் ஹிட்லரைப்பற்றி விளம்பரப்படுத்தச் சொன்னார். நூற்றுக்கணக்கான பேச்சாளர் களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது. அவர்கள் நாசிக் கட்சியின் கொள்கைகளையும் ஹிட்லரின் சாதனைகளைப்பற்றியும் நாடு முழுவதும் பிரசாரம் செய்தார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட நாளிதழ்களும், வார மற்றும் மாத இதழ்களும் ஹிட்லரைப் பற்றி எழுதிவந்தன. நாடகமேடைகளும். திரையரங்குகளும், வானொலி யும் இத்தகைய விளம்பரத்திற்கும் பிரசாரத்திற்கும் பயன்படுத்தப் பட்டன. ஜெர்மானிய மக்கள் அனைவரின் தேவைகளையும் அவர் நிறைவேற்றுவதாகக் கூறினார். இளைஞர் நிறுவனங்கள் அமைக்கப் பட்டன. அதில் இளைஞர்கள் பலர் சேர்ந்தனர். கட்சியிலும், அரசாங்கத்திலும் உயர் பதவிகள் பெறுவதற்கு அவை பயிற்சிக் களங்களாக அமைந்தன. நாசிக் கட்சி தவிர வேறு எந்தக் கட்சியும் செயல்படவில்லை. அனைத்தும் தடைசெய்யப்பட்டன.

தம்மை எதிர்ப்பவர்கள் எவரும் இருக்கக்கூடாது என ஹிட்லர் விரும்பினார். அவ்வாறு எவராவது இருந்தால் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அயல்நாட்டவர், கொள்ளை இலாபம் அடிப்

பவர், யூதர்கள், பொதுவுடைமையினர் முதலானவர்கள் நாட்டில் இருக்கக்கூடாது என்றூர். கெஸ்டபோ (Gestapo) என்ற இரகசியக் காவல்துறை அவருடைய பகைவர்களைக் கண்டுபிடித்து ஒழித்துக் கட்டியது. அவருடைய கட்சியிலேயே அவரை எதிர்த்தவர்கள் இருந்தனர். 1934ஆம் ஆண்டு அத்தகையவர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். அதேபோல் இலட்சக்கணக்கான யூதர்களை ஹிட்லர் கொன்று குவித்தார். அவர்களுடைய சொத்துகளைப் பறிமுதல் செய்தார்.

ஜெர்மானிய மாநிலங்களிலிருந்த பிரதிநிதித்துவ சபைகள் கலைக்கப்பட்டன. அங்கெல்லாம் நாசிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் கமிஷனர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் ஹிட்லரின் ஆணைப்படியே செயல்பட்டார்கள். அவர்களின் நடவடிக்கைகளும் 'கெஸ்டபோ' என்ற காவல்படையினுல் கண்காணிக்கப்பட்டன.

எல்லாவிதமான தொழிற்சங்கங்களும் கலைக்கப்பட்டன. அவை தொழில் உற்பத்தியைப் பாதிக்கின்றன என்று அவர் கருதினூர். அதற்குப் பதிலாக எல்லாத் தொழிலாளர்களையும் நாசிக் கட்சியில் சேரச்சொன்னூர். அக் கட்சியில் தொழிலாளர் களின் நலன்களைக் கவனிக்க தனிப்பிரிவு இருந்தது. இந்தப் பிரிவு தொழிலாளர்களின் குறைகள், பிரச்சினைகள், ஊதியங்கள், உடல் நலம், பொழுதுபோக்கு முதலானவை பற்றிக் கவனித்துக் கொண்டது. வேலை நிறுத்தங்கள் முதலானவை தடைசெய்யப் பட்டன.

கல்வித்துறையில் முக்கியமான மாறுதல்கள் செய்யப்பட்டன. தொடக்கப்பள்ளியிலிருந்து பல்கலைக்கழகம் வரைஎல்லா நிலை யிலும் மாணவர்கள் நாசிசக் கொள்கைகள் பற்றியும் ஹிட்லரைப் பற்றியும் படிக்கவேண்டுமென ஆணையிடப்பட்டார்கள். ஆசிரியர் களின் பணி நாசிக் கட்சித் தொண்டர்களை உருவாக்குவதுதான் ஆகும். 'எனது போராட்டம்' என்ற நூலை அனைவரும் பாடப்புத்தக மாகப் படிக்கவேண்டியதாயிற்று. நாசிக் கட்சியின் ஒரு பிரிவாகிய 'ஜெர்மானிய மாணவர் சங்கத்தில்' எல்லாக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக கழக மாணவர்களும் உறுப்பினர்களாகச் சேர வேண்டுமென அறிவிக்கப்பட்டது. அயல்நாட்டுப் புத்தகங்கள் அனுமதிக்கப்படவில்லை. அனைத்தும் முறையாகக் கண்காணிக்கப் பட்டன.

ஜெர்மானியர்களின் மக்கள்தொகை பல மடங்கு பெருக வேண்டும் என்பது அவர் விருப்பமாகும். அதே நேரத்தில் ஜெர்மானிய இனத்தின் தூய்மை கெடக்கூடாது எனக்கூறினூர்.

எனவே, மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு வேண்டிய அரசாங்க ஆதரவை ஹிட்லர் மக்களுக்குக் கொடுத்தார். பெண்கள் ஆண்களுக்குச் சமமாகக் கருதப்படவில்லை. தொழிற்சாலைகள் போன்ற பல இடங்களில் அவர்களுக்கு வேலை தரப்படவில்லை. அவர்கள் வீட்டில் இருந்தால் போதும்; உணவு சமைத்து, குழந்தைகளை வளர்த்து, இறைவனை வணங்கினால் போதும் என்று ஹிட்லர் கூறினார்.

எல்லாத் துறையிலும் ஜெர்மனி தன்னிறைவு பெற்றிருக்க வேண்டும் என்று ஹிட்லர் விரும்பினார். அதை நிறைவேற்றிக் கொள்ள நான்காண்டுத் திட்டங்களைச் செயல்முறைப்படுத்தினார். வேளாண்மைத்துறை, தொழில்துறை, முதலான எல்லாத் துறைகளிலும் தன்னிறைவு பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. கனிவளம் மிக்க ரூர் மற்றும் சாக்சனி பகுதிகளில் தோண்டி எடுக்கப்பட்ட கனிச்செல்வங்கள் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டன. 'எதையும் நாம் இறக்குமதி செய்யக் கூடாது, எதுவும் வீணாகப் போகக்கூடாது' என்று ஹிட்லர் கூறினார். இங்ஙனம் ஹிட்லரின் நாசிச ஆட்சியில் ஜெர்மனி எல்லாத் துறைகளிலும் வியத்தகு முன்னேற்றம் அடைந்தது என்பதில் ஐயமில்லை.

### இரண்டாம் உலகப்போரும் ஹிட்லரின் வீழ்ச்சியும்

ஜெர்மனியின் இழிவுச் சின்னமாக விளங்கிய வெர்சாய் உடன்படிக்கையைத் தகர்த்தெறிய ஹிட்லர் ஆட்சிக்கு வந்தவுடன் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஜெர்மனிக்குரிய ரைன்லாந்தில் ((Rhineland) படையை நிறுத்தினார். 1936ஆம் ஆண்டு ரஷ்யாவின் செல்வாக்கை முறியடிக்க, ஜப்பானுடன் சேர்ந்து பொதுவுடைமை எதிர்ப்பு ஒப்பந்தத்தை (Anti-Comintern Pact) ஹிட்லர் செய்துகொண்டார். இதில் அடுத்த ஆண்டு இத்தாலியும் சேர்ந்தது.

இதற்கிடையில் ஜெர்மனியின் படைவலிமையை மிக அதிகமான அளவு ஹிட்லர் பெருக்கத் தொடங்கினார். பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட நாற்பத்தைந்து வயதுக்குட்பட்ட எல்லா ஜெர்மானியரும் கட்டாய இராணுவப் பயிற்சி கொடுக்கப்பட்டார்கள். இருபது இலட்சத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் படையில் சேர்க்கப்பட்டார்கள். நவீன முறையில் படைவலிமையைப் பெருக்க அயல்நாடுகளில் இருந்த ஜெர்மானிய விஞ்ஞானிகளை நாடு திரும்பும்படி ஹிட்லர் அறைகூவல் விடுத்தார். அவர்களின் உதவியால் ஆயிரக்கணக்கான போர் விமானங்கள் கட்டப் பட்டன. நூற்றுக்கணக்கான போர் விமான தளங்கள் அமைக்கப்

பட்டன. போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் போன்றவை ஆயிரக்கணக்கில் உற்பத்தி செய்யப்பட்டன. U-போட்டுகளும், $V^1$ $V^2$ என்ற விமான ஓட்டியில்லாத, குண்டுகளை வீசும் போர் விமானங்களும் கட்டப்பட்டன. விஷ வாயுக்களும் தீயைக் கக்கும் குண்டுகளும் (incendiary bombs) செய்யப்பட்டன. இத்தகைய மிக பயங்கரமான போர்க் கருவிகளைக்கொண்டு ஐரோப்பிய நாடுகளையெல்லாம் பணிய வைத்துவிடலாம் என்று ஹிட்லர் திட்டமிட்டார். செய்திகளை நொடிப்பொழுதில் அறியக் கம்பியில்லாத் தந்தி மற்றும் தொலைபேசி வசதிகள் செய்யப்பட்டன. இத்தகைய வியத்தகு ஏற்பாடுகளை ஐந்து ஆண்டுகளுக்குள் ஹிட்லர் செய்து முடித்தார் என்பது உண்மையிலேயே மிகப்பெரிய சாதனையாகும். இந்தப்படை வலிமையைக்கொண்டு ஹிட்லர் அண்டை நாடுகளை ஆக்கிரமிக்கத் தொடங்கினர்,

1938ஆம் ஆண்டு ஆஸ்திரியாவைக் கைப்பற்றிக்கொண்டார். 1939ஆம் ஆண்டு மார்ச் மாதம் செக்கோஸ்லோவாகியாவை ஆக்கிரமித்துக் கொண்டார். 1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் போலந்தின் தலைநகரமாகிய வார்சாவின்மீது மிகக் கடுமையான விமானத்தாக்குதலை நடத்தினர். உடனே இங்கிலாந்தும் ஃபிரான்சும் போரில் இறங்கின. இரண்டாம் உலகப் போர் தொடங்கி விட்டது.

1940ஆம் ஆண்டு டென்மார்க், நார்வே, ஹாலந்து முதலான நாடுகளை ஹிட்லர் கடுமையாகத் தாக்கினர். அதே ஆண்டு ஃபிரான்ஸ் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டது. அந் நாடு வீழ்ந்தது. ஃபிரான்ஸ் அடுத்த நான்காண்டுகள் ஜெர்மனியின் அதிகாரத்திற்கு உட்பட்டே இருந்தது. ஃபிரான்ஸ் நாட்டை ஆட்சி செய்ய விச்சி (Vichy) என்ற இடத்தில் ஜெர்மானிய அரசு அமைக்கப்பட்டது. 1940ஆம் ஆண்டு இங்கிலாந்தின்மீது மிகப் பயங்கரமான விமானத் தாக்குதலை ஜெர்மனி நடத்தியது. ஆங்கில விமானப்படை அந்தத் தாக்குதலைத் திறமையுடன் தாங்கி, முறியடித்தது. 1941ஆம் ஆண்டு ஹிட்லர் ரஷ்யாவையும் தாக்கினர். அதில் அவர் வெற்றி பெறவில்லை. அதே ஆண்டின் இறுதியில் பேர்ல் ஹார்பரில் (Pearl Harbour) இருந்த அமெரிக்கக் கடற்படையை ஜப்பான் தாக்கியதால், ஐக்கிய அமெரிக்கா போரில் இறங்கியது. ஜெனரல் ஐசன்ஹவர் தலைமையில் வந்த அமெரிக்கப் படைகள் ஆப்பிரிக்காவில் இத்தாலியப் படைகளைத் தோற்கடித்து, சிசிலித் தீவு வழியாகச் சென்று 1943ஆம் ஆண்டு இத்தாலியைப் பணிய வைத்தன. 1944ஆம் ஆண்டு ஃபிரான்ஸ் முழுவதும் ஜெர்மானிய ஆதிக்கத்திலின்று விடுவிக்கப்பட்டது. 1945ஆம் ஆண்டு மேற்கிலிருந்து நட்பு நாட்டுப் படைகளும்,

கிழக்கிலிருந்து ரஷ்யப் படைகளும் ஜெர்மனியை மிகக் கடுமையாகத் தாக்கின. அழிவது உறுதி என்பதை அறிந்துகொண்ட ஹிட்லர் அந்த ஆண்டு (1945) ஏப்ரல் மாதம் தற்கொலை செய்துகொண்டார். ஐரோப்பாக் கண்டத்தை ரத்தக் களமாக்கிய கொடிய ஹிட்லரின் மறைவுச் செய்தி உலக மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாகவே வந்தது.

## III. துருக்கியில் முஸ்தாபா கமால் பாஷாவின் ஆட்சி

### கமால் பாஷாவின் இளமை வாழ்க்கை

1881ஆம் ஆண்டு சலோனிகா (Salonika) என்ற நகரத்தில் முஸ்தாபா கமால் பாஷா (Mustapha Kemal Pasha) பிறந்தார். இளமையில் இராணுவப் பள்ளியில் கல்வி கற்றார். கணக்கில் அவர் வல்லுநராக விளங்கினார். பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற பின்னர் இராணுவத்தில் சேர்ந்தார். அவர் துருக்கியப் படையில் இராணுவ அதிகாரியாகப் பல போர்களில் கலந்துகொண்டார். 1908ஆம் ஆண்டிலிருந்து 'இளந் துருக்கியர்' இயக்கத்தில் (Young Turks) Movement) ஈடுபாடு கொண்டார்.[1] முதல் உலகப் போரின்போது ஜெர்மனி, ஆஸ்திரியா முதலான நாடுகளுடன் சேர்ந்து துருக்கி போரிட்டது. போரின்போது கமால் பாஷா ஆங்கிலப் படைகளை எதிர்த்துப் போரிட்டார். டார்டநெல்லிஸ் என்ற நீர்ச்சந்தியில் நடைபெற்ற போரில் அவர் மிகத் திறமையாகப் போரிட்டார். அவர் 'டார்டநெல்லிஸ் பெருவீரன்' (The Hero of Dardanelles) என்று சிறப்பித்து அழைக்கப்பட்டார்.

### முதல் உலகப்போரின் விளைவு

முதல் உலகப்போர் நடைபெற்று முடிந்த பின்னர் இங்கிலாந்து முதலான நட்பு நாடுகள் துருக்கியை மிக மோசமாக நடத்தின. அப்பொழுது ஆறும் முகமது (Mohmed VI, 1917—1922) துருக்கியின் சுல்தானாக இருந்தார். அவர் செவெரே உடன்படிக்கையை (The Treaty of Sevres, 1920) நட்பு நாடுகளுடன் செய்துகொள்ள வேண்டியதாயிற்று. இங்கிலாந்து முதலான நாடுகள் துருக்கியைப் பழிவாங்கத் திட்டமிட்டன. ஏனெனில், துருக்கி ஜெர்மனிக்கு ஆதரவாகப் போரிட்டது. ஆகவே, அந்த உடன்படிக்கையின்படி பெரும் நிலப்பகுதிகளைத் துருக்கி இழக்க வேண்டியதாயிற்று.

[1] மேலை நாடுகளில் உயர்கல்வி கற்ற பெரும்பாலான துருக்கிய இளைஞர்கள் இவ்வியக்கத்தில் பங்குகொண்டனர். துருக்கியில் மேலைநாட்டு நாகரிகததைப் புகுத்தவேண்டுமென்றும், அந்நியர்களின செல்வாக்கைத் துருக்கியிலிருந்து முறியடிக்க வேண்டுமென்றும். வரம்புடை முடியாட்சியைக் கொண்டுவர வேண்டுமெனவும் அவர்கள் போராடினார்கள்.

ஸ்மிர்ணு (Smyrna) என்ற முக்கியமான துறைமுகம் கிரீசுக்குக் கொடுக்கப்பட்டது. இராக், பாலஸ்தீனம், சிரியா முதலான பகுதிகளைத் துருக்கி இழந்தது. இத்தகைய வெட்கக்கேடான உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளவேண்டாமெனச் சுல்தானுக்குக் கமால் பாஷா ஆலோசனை வழங்கினுர். ஆனுல், சுல்தான் அந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. சுல்தானுக்கும் கமால் பாஷாவுக்கும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. எனவே, இராணுவ அதிகாரியாக இருந்த பாஷாவை அனடோலியா (Anatolia) என்ற இடத்திற்குச் சுல்தான் மாற்றி விட்டார். அப்பொழுது கான்ஸ்டான்டிநோபிள் துருக்கியின் தலைநகரமாக இருந்தது.

### தேசிய அரசு

அனடோலியாவிற்கு மாற்றப்பட்டதால், சுதந்திரமாகச் செயல்படப் பாஷாவிற்கு அது ஏற்ற இடமாக இருந்தது. இராணுவ வீரர்களிடையேயும் மக்களிடையேயும் நாட்டுப்பற்றை ஊட்டினுர். இங்கிலாந்து முதலான நாடுகள் துருக்கிக்கு இழைத்த கொடுமையை எடுத்துரைத்தார். 'மக்கள் கட்சி' (The Peoples Party) என்ற அரசியல் கட்சியை நிறுவினுர். கான்ஸ்டான்டிநோபிளிலிருந்து ஆட்சி செய்த சுல்தானின் ஆட்சியைக் கமாலும் அவருடைய ஆதரவாளர்களும் கண்டித்தார்கள். இந்த நிலையில் 1920ஆம் ஆண்டு கமால் பாஷா அங்காரா (Ankara) என்ற நகரத்தில் தேசிய அரசை (Nationalists Government) அமைத்தார். அதைத் துருக்கியர் வரவேற்றனர். 'துருக்கி துருக்கியருக்கே' என்று அவர்கள் முழங்கினுர்கள். 'மக்கள் கட்சியின்' தலைவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து, அங்காரா நகரத்திற்கு வந்திருந்து துருக்கிக்கு ஒரு புதிய அரசியல் சட்டத்தை எழுதினுர்கள். அவர்கள் துருக்கியின் நன்மைக்காக எதையும் செய்யும்படிக் கமாலுக்கு அதிகாரம் கொடுத்தார்கள். துருக்கியின் சுல்தானுக்கு எதிராக மக்களின் வெறுப்பு வளர்ந்து வந்தது. எனவே, 1922ஆம் ஆண்டு சுல்தான் பதவி ஒழிக்கப்பட்டதாகக் கமால் அறிவித்தார். கான்ஸ்டான்டிநோபிளிலிருந்த சுல்தான் ஆறும் முகமதுவைக் கைது செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குள் அவர் பதவியைத் துறந்து நாட்டைவிட்டு ஓடிவிட்டார். கமால் எல்லா அதிகாரங்களையும் பெற்ற சர்வாதிகாரியாகச் செயல்பட்டார்.

### கிரீசுடன் போர் (1922)

கமால் பாஷாவுக்கும் சுல்தானுக்குமிடையே இருந்த கருத்து வேறுபாடுகளைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, துருக்கியின்

பெரும்பகுதிகளைக் கைப்பற்றிக்கொள்ள கிரீஸ் திட்டமிட்டது. ஏற்கெனவே, ஸ்மிர்ணு, கிரீசுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. 1922ஆம் ஆண்டு கிரீஸ் அங்கு மேலும் படைகளைக் குவித்துத் துருக்கியை ஆக்கிரமித்தது. கிரேக்கப் படையை எதிர்த்துப் போரிடக் கமால் பெரும்படையை அனுப்பினூர். கிரேக்கருக்கும் துருக்கியருக்குமிடையே நடைபெற்ற அந்தப் போரில் பலர் கொல்லப்பட்டனர். கிரேக்கப் படைகளை விரட்டியடித்து, துருக்கியப் படைகள் ஸ்மிர்ணு துறைமுக நகரத்தையும் கைப் பற்றிக்கொண்டன. கிரேக்கர்கள் அனைவரும் துருக்கியினின்று வெளியேற்றப்பட்டனர். தொடர்ந்து முன்னேறி கிரீஸ் நாட்டைத் தாக்கத் துருக்கியப் படைகள் திட்டமிட்டன. எனினும், உடனே இங்கிலாந்து துருக்கிக்கு எதிராகப் போரிலிறங்கும் எனக் கருதித் துருக்கி போரை நிறுத்தியது. போருக்குப்பின் செய்து கொள்ளப்பட்ட லாசேன் உடன்படிக்கையின்படி (The Treaty of Lausanne, 1923) ஸ்மிர்ணுவைத் துருக்கியே வைத்துக் கொண்டது. கிழக்கு த்ரேஸ் (Eastern Thrace) துருக்கிக்குக் கொடுக்கப்பட்டது. கருங்கடல் பகுதியில் படைகளை வைத்துக் கொள்வதில்லை எனத் துருக்கி ஒத்துக்கொண்டது. இருதரத்தாரும் யாருக்கும் போர் இழப்பீட்டுத் தொகைகளைத் தரவில்லை. துருக்கி யில் வாழ்ந்த எல்லா ஐரோப்பியர்களும் அனுபவித்துவந்த சிறப்புச் சலுகைகள் விலக்கப்பட்டன. இந்த உடன்படிக்கையால் 1920ஆம் ஆண்டு இழந்த தன் பெருமையை மீண்டும் துருக்கி நிலைநாட்டியது. கமால் பாஷா பின்னர், பல உள்நாட்டுச் சீர்திருத் தங்களை மேற்கொண்டார்.

**உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்**

கமால் பாஷா மேற்கொண்ட நடவடிக்கைகளால் சமூகத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் துருக்கி மிகப் பெரிய மாறுதல்களைக் கண்டது. அதனால், கமால் 'நவீன துருக்கியின் தந்தை' என்று சிறப்பிக்கப்படுகிறார். ரஷ்யாவை மகா பீட்டர் செய்ததுபோலத் துருக்கியைக் கமால் 'மேற்குமயமாக்கினார்' (Westernisation of Turkey). 1938ஆம் ஆண்டு அவர் இறக்கும் வரை நாட்டிற்காகவே அரும்பாடுபட்டார்.

1923ஆம் ஆண்டு துருக்கி குடியரசாக மாற்றப்பட்டது. அக் குடியரசின் தலைவராக முஸ்தாபா கமால் பாஷா பொறுப்பேற்றார். பழமையின் சின்னமாகவும், உதவாத நிறுவனமாகவும் காட்சி யளித்த 'சுல்தான், பதவியை 1924ஆம் ஆண்டு கமால் ஒழித்துக் கட்டினார். ஆட்சித்துறையில் முக்கியமான பங்கு வகித்து வந்த இஸ்லாமிய மதத் தலைவர்களின் அதிகாரங்களை அவர் ஒடுக்கினார்.

அவர் விருப்பப்படி துருக்கியின் தேசியச் சட்டமன்றம் (The National Assembly) சட்டங்களை இயற்றியது. குரானை (Quran) அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டிருந்த சட்டங்களை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, ஸ்விட்சர்லாந்தும், இத்தாலி, ஜெர்மனி முதலான நாடுகளில் நடைமுறையிலிருந்த சட்டங்களின் அடிப்படையில் துருக்கியில் சிவில் சட்டங்கள், கிரிமினல் சட்டங்கள் முதலானவை வரையப்பட்டன. பள்ளிவாசல்கள் (Mosques) நடத்திவந்த பள்ளிகள் மூடப்பட்டன. மதச்சார் பற்ற அரசாங்கப்பள்ளிகள் திறக்கப்பட்டன. மேலைநாட்டு முறையில் கல்வித்திட்டம் மாற்றியமைக்கப்பட்டது. துருக்கியர் அணிந்துவந்த ஃபெஸ் (Fez) தொப்பியை எவரும் அணிந்து கொள்ளக் கூடாதென ஆணையிடப்பட்டார்கள். மேலைநாட்டு முறையில் நுண்கலைகள் வளர்க்கப்பட்டன. அரபிய எழுத்து முறையை அவர் மாற்றியமைக்க வழி செய்தார். தொடக்க நிலையில் எல்லாக் குழந்தைகளும் கல்விகற்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டது. மேலைநாட்டு முறையில் மருத்துவமனைகள் திறக்கப்பட்டன. துருக்கியர் தங்கள் இடங்களையும் சூழ்நிலை களையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமென வற்புறுத்திக் கூறப்பட்டார்கள். நோய்கள் வருவதும் மக்கள் இறப்பதும் விதியின் செயல் எனத் துருக்கியர் நம்பினுர்கள். அத்தகைய மூட நம்பிக்கைகளைக் கமால் தகர்த்தெறிந்தார். நாட்டிலிருந்த மக்கள் தொகையில் பாதி அளவில் இருந்த பெண்கள் திரைமறை வில் இருந்தால், அதாவது முகத்திரை (பர்தா) அணிந்து கொண் டால் நாடு முன்னேருது என்று கமால் பாஷா கூறினுர். பெண் கல்வியை அவர் வற்புறுத்தினுர். பெண்கள் அரசியலிலே பங்கு கொள்ள வேண்டும் என்று கூறினுர். 1934ஆம் ஆண்டு பெண் களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட்டது. அரசியலில் பெண்கள் பங்கு கொண்டனர். 1935ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 'தேசியச் சட்டமன்றத்தில்' இருந்த உறுப்பினர்களுள் பதினேழு பேர் பெண்கள் ஆவர். இந்த முன்னேற்றத்தைக் கண்டு கமால் பாஷாவே வியந்தார். ஆண்களும் பெண்களும் மேற்கத்திய உடையை அணிய வேண்டுமென அவர் அறிவித்தார். நிறுத்தல் அளவைகளும், முகத்தல் அளவைகளும் மெட்ரிக் முறையில் நாடு முழுவதும் பின்பற்றப்படவேண்டும் என அரசு ஆணையிட்டது. மேலே கூறப்பட்டவை பெரும்பாலும் கமால் மேற்கொண்ட சமூகச் சீர்திருத்தங்களாகும்.

பல பொருளாதாரச் சீர்திருத்தங்களையும் கமால் பாஷா கொண்டு வந்தார். வேளாண்மைத் துறையில் புரையோடிப் போன பழைய முறைகளையே கையாளாமல் நவீன முறைகள்

பின்பற்றப்பட்டன. உரங்களும், உழுகருவிகளும் உற்பத்தி செய்யப்பட்டன. இல்லாதவை இறக்குமதி செய்யப்பட்டன. வேளாண்மை வங்கிகளும், வேளாண்மைக் கல்லூரிகளும், கூட்டுறவுச் சங்கங்களும் திறக்கப்பட்டன. கோதுமை, பார்லி, அரிசி முதலான உணவுத்தானியங்களின் உற்பத்தி பல மடங்கு அதிகரிக்கப்பட்டது. உழவர்களுக்கு அரசு பல உதவிகளைச் செய்தது.

தொழில்துறையில் துருக்கி வியத்தகு முன்னேற்றத்தைப் பெற்றது. எல்லாவிதமான இயற்கைச் செல்வங்களும் துருக்கியில் கிடைத்தன. அவற்றைப் பயன்படுத்துவதற்கான வழி முறைகள் செய்யப்பட்டன. இரும்பு, எஃகு ஆலைகள், இரசாயனக் கூடங்கள், உரத் தொழிற்சாலைகள், பஞ்சாலைகள் முதலானவை பெருகின. தொழிலதிபர்களுக்குப் பண வசதி செய்யத் தொழில் வங்கிகள் தொடங்கப்பட்டன. இவை அனைத்தும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளித்தன.

அயல்நாட்டு வாணிக வளர்ச்சிக்கும் சிறப்பிடம் தரப்பட்டது. புகையிலை, பருத்தி ஆடைகள் மற்றும் உலர்ந்த பழவகைகள் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. துருக்கியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துவாலைகளும் மேல்துண்டுகளும் (Turkey towels) இந்தியாவில்கூடப் புகழ் பெற்றிருந்தன. ரஷ்யா, இத்தாலி முதலான நாடுகளுடன் வாணிக ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப் பட்டன.

போக்குவரத்து வசதிகள் பெருக்கப்பட்டன. பல அகன்ற நெடுஞ்சாலைகள் போடப்பட்டன. பல ஐரோப்பியப் பெரு முதலாளிகள் துருக்கியில் புகைவண்டிப் பாதைகளுக்குச் சொந்தக் காரர்களாக இருந்தார்கள். அதிகமான பாதைகளைப் போடும்படி அவர்களைக் கமால் பாஷா கேட்டுக்கொண்டார். பின்னர் 1935-36ஆம் ஆண்டுகளில் அவை நாட்டுடைமை ஆக்கப்பட்டன.

இங்ஙனம் துருக்கி பல துறைகளில் முன்னேறுவதற்கு அரும் பாடுபட்ட கமால் பாஷா அந்த நாட்டு மக்களால் 'அடாடர்க்' (Ataturk) அதாவது 'துருக்கியின் தந்தை' எனச் சிறப்பிக்கப் படுகிறார். அவர் சர்வாதிகாரியாக இருந்தார் என்பது உண்மை. எனினும் தம் அதிகாரங்களை நாட்டின் நன்மைக்கே பயன்படுத் தினார். அவர் நிறுவிய குடியரசு அழியவில்லை. அவருடைய மறை வுக்குப் (1938) பின்னும் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

# VII (ஆ). இருபதாம் நூற்றண்டு உலகம்

## 24. இரண்டாம் உலகப் போர் (1939—1945)

இரண்டாம் உலகப் போர், முதல் உலகப் போரைவிட மிகப் பயங்கரமான முறையில் நடைபெற்றது. அறிவியல் பயனை அழிவுச் சக்தியாக மாற்றினுல் எவ்வளவு விரைவாக உலகம் அழியக்கூடும் என்பதை எச்சரித்துக் காட்டும் வகையில் இந்தப் போர் அமைந்தது. போரின்போது நடைபெற்ற கடற்போர்களினுல் கடல்களே கொந்தளிப்புகளுக்கு உள்ளாயின. மனித இனம் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாத அளவுக்குப் போர் விமானங்கள் குண்டுகளைப் பொழிந்து மக்கள் இனத்தை அழித்தன. முதல் முறையாக விவரிக்க முடியாத அழிவுச் சக்தியைக்கொண்ட அணுகுண்டுகள் இப்போரில் பயன்படுத்தப்பட்டன. அத்தகைய போர் நடைபெற்றதற்கான காரணங்கள் யாவை என்பதைக் காண்போம்.

**காரணங்கள்**

(1) **ஜெர்மனியின் பழிவாங்கும் உணர்ச்சி :** இரண்டாம் உலகப் போர், ஜெர்மனியின் பழிவாங்கும் உணர்ச்சியால் தொடங்கப் பட்டது என்பது வரலாற்றுசிரியர்களின் கருத்தாகும். முதல் உலகப்போரின் முடிவில் செய்யப்பட்ட 'வெர்சாய் உடன் படிக்கை'யின்படி ஜெர்மனி மிக இழிவான நிலைக்குள்ளாக்கப் பட்டது. அந்நாட்டின் குடியேற்றங்கள் பறிக்கப்பட்டன. அதன் எல்லைகள் குறைக்கப்பட்டன. அதன் கப்பற்படை அழிக்கப் பட்டது. அதன் படைபலம் குறைக்கப்பட்டது. ஜெர்மனியின் இரும்பு, நிலக்கரிச் சுரங்கங்கள் கைப்பற்றிக்கொள்ளப்பட்டன. பெரும் போர் இழப்பீட்டை (War indemnity) ஜெர்மனி கட்ட வேண்டியதாயிற்று. ஜெர்மனியின் மிகப் பெரிய அவமானச் சின்னமாக விளங்கிய 'வெர்சாய் உடன்படிக்கை'யை மாற்றி

யமைக்க ஜெர்மனி விரும்பியது. இந்தச் சூழ்நிலையில்தான் ஹிட்லர் 1933ஆம் ஆண்டு ஜெர்மனியின் சர்வாதிகாரி ஆனார். அவர் அந் நாட்டின் படை வலிமையைப் பெருக்கினார்; தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிர் தந்தார்; பண வீக்கத்தைக் கட்டுப் படுத்தினார்; ஜெர்மானியருக்குப் புதுவாழ்வைத் தந்தார்; ஜெர் மானிய மக்கள் ஆளப் பிறந்தவர்கள்; அவர்கள் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்குக் கட்டுப்பட்டு வாழவேண்டியதில்லை என்ற எண்ணத்தை ஜெர்மானியரிடையே ஹிட்லர் ஏற்படுத்தினார். வெர்சாய் உடன்படிக்கையால் அவமானப்பட்ட ஜெர்மனி அதைத் தகர்த்தெறிந்து, மற்ற ஐரோப்பிய நாடுகளைப் பழிவாங்கி, அவற்றிற்குப் பாடம் கற்பிக்கத் :தேவையான எல்லா ஏற்பாடுகளை யும் செய்து வந்தது.

(2) **ஜப்பானின் ஏகாதிபத்தியம் :** ஜப்பானின் ஏகாதிபத்திய வெறி மற்ற ஆசிய நாடுகளுக்குப் பெருந்தலைவலியாகத் தோன்றி யது. மண்ணாசை கொண்ட ஜப்பான் தன் படைபலத்தைப் பெருக் கியது. வலிமைமிக்க கடற்படையை அது உருவாக்கியது. 1931-ல் மஞ்சூரியாவைத் தாக்கிக் கைப்பற்றிக்கொண்டது. 1937-ல் சீனாவைத் தாக்கத் தொடங்கியது. சீன நகரங்கள் ஒவ்வொன்றாக வீழ்ந்தன. வியத்தகு தொழில் வளர்ச்சியைப் பெற்ற ஜப்பான் தன் பொருள்களை மற்ற நாடுகளில் திணிக்க, ஏகாதிபத்தியக் கொள்கையே சிறந்த வழி என எண்ணியது.

(3) **இத்தாலியின் ஆக்கிரமிப்புகள் :** இத்தாலியில் ஃபாசிசச் (Fascism) சர்வாதிகார ஆட்சியை முஸ்ஸோலினி (Mussolini) அமைத்தார். பண்டைக் காலத்திலே பீடுநடை போட்ட ரோமா னியப் பேரரசைப்போல மற்றொரு பேரரசை உருவாக்க அவர் திட்டமிட்டார். மத்தியதரைக் கடலை 'இத்தாலிய ஏரி'யாக மாற்ற அவர் விரும்பினார். 1936-ல் வடகிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள அபிசீனியா (எதியோப்பியா) மீது படையெடுத்து அதை இத்தாலியுடன் சேர்த்துக்கொண்டார். 1939-ல் அல்பேனியாவை யும் (Albania) தம் நாட்டுடன் சேர்த்துக்கொண்டார். இத்தகைய ஏகாதிபத்திய வேட்கைகொண்ட முஸ்ஸோலினியின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் மற்ற நட்பு நாடுகள் எதிர் நடவடிக்கைகளை எடுத்தன.

(4) **ஐரோப்பிய மக்களாட்சி நாடுகளின் வலிவின்மை :** முதல் உலகப் போருக்குப்பின் இங்கிலாந்தும், ஃபிரான்சும் தொடர்ந்து நட்பு நாடுகளாக இல்லை. அவை ஒன்றைவிட்டு ஒன்று விலகிச் சென்றன. ஐரோப்பிய அரசியலில் அதிகமாகக் கலந்து கொள் ளாமல் இங்கிலாந்து தனித்திருக்கத் தொடங்கியது. தன் வாணிக

வளர்ச்சியில் அது அதிக அக்கறை காட்டியது. ஜெர்மனியின் வளர்ச்சியைக் கண்டு ஃபிரான்ஸ் அஞ்சியது. ஜெர்மனியின் மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டே வந்தது. அதற்கு மாருக ஃபிரான்சின் மக்கள்தொகை தேங்கியிருந்தது, இந்த இரு நாடுகளுக்கிடையே போர் நடைபெற்ருல் ஜெர்மனியே வெற்றிபெறும் என்று ஃபிரான்ஸ் உறுதியாக நம்பியது. தனக்கு உதவியாக இங்கிலாந்தும், ஐக்கிய அமெரிக்காவும் இருக்கவேண்டுமென ஃபிரான்ஸ் வேண்டிக்கொண்டது. ஆனுல், அந்த நாடுகள் எந்த உறுதிமொழியையும் தரவில்லே. இந்தச் சூழ்நிலேயில் செக்கோஸ்லோவாகியா, பெல்ஜியம், போலந்து முதலான சிறிய நாடுகளுடன் ஃபிரான்ஸ் நட்பு உடன்படிக்கைகளேச் செய்துகொண்டது. இங்கிலாந்தும் போரை விரும்பவில்லே. வெர்சாய் உடன்படிக்கையின்படி, நட்பு நாடுகள் படைவலிமையை அதிகமாகப் பெருக்கவில்லே. ஆனுல், ஜெர்மனியும் இத்தாலியும் படைவலிமையை மிக அதிகமான அளவு பெருக்கின. இந்த நிலேயில் ஃபிரான்ஸ், இங்கிலாந்து முதலான மக்களாட்சி நாடுகளே எளிதாக வீழ்த்திவிடலாமென ஜெர்மனியும் இத்தாலியும் கருதின.

(5) **அச்சு நாடுகளின் அணி :** 1936ஆம் ஆண்டு, ஜப்பானுடன் 'பொதுவுடைமை எதிர்ப்பு ஒப்பந்தத்தை' (Anti-Comintern Pact) ஜெர்மனி செய்துகொண்டது. பொதுவுடைமைக் கருத்துகள் பரவுவதைத் தடுக்கவும், ரஷ்யாவின் செல்வாக்கு மற்ற நாடுகளில் ஏற்படுவதை முறியடிக்கவும் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டது. இந்த இரண்டு நாடுகளுடன் 1937-ல் இத்தாலியும் சேர்ந்துகொண்டது. இங்ஙனம் ரோம்-பெர்லின்-டோக்கியோ அச்சு (Rome-Berlin-Tokyo Axis) உருவாயிற்று. இந்த அச்சு நாடுகளின் அணி, நட்பு நாடுகளே மிக எளிதாகத் தோற்கடித்துவிடலாம் என்று கருதியது. இந்த மூன்று நாடுகளும் போர்வேட்கையிலும், ஏகாதிபத்திய வெறியிலும் ஒன்றுக்கொன்று சளேத்தவை அல்ல. படைவலிமை மிக்க இந்த நாடுகளின் கூட்டு உலக அமைதியைக் குலேக்கும் வெடிகுண்டாயிற்று.

(6) **சர்வதேசச் சங்கத்தின் வலிவின்மை:** ஐக்கிய அமெரிக்கா உறுப்பு நாடாக இல்லாததாலும், தனக்கென்று ஒரு வலிமை மிக்க படை இல்லாததாலும், சர்வதேசச் சங்கம் வலுவான அமைதி காக்கும் நிறுவனமாகச் செயல்படவில்லே. மஞ்சூரியாவை ஜப்பான் தாக்கியபோதும் முஸ்ஸோலினி அபிசீனியாவைக் கைப்பற்றிக் கொண்டபோதும் சங்கம் தன் கடமையைச் செய்யத் தவறியது என்பதை முன்னரே பார்த்தோம். ஹிட்லரின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகவும் உறுதியான நடவடிக்கைகளேச் சங்கம் எடுக்கவில்லே. அச்சு நாடுகளாகிய மூன்றும் சங்கத்திலிருந்து விலகின. 1933-ல்

ஜப்பானும் ஜெர்மனியும் சங்கத்திலிருந்து விலகின. 1937-ல் இத்தாலி விலகியது. உலக நாடுகள், குறிப்பாகச் சங்கத்தின் உறுப்பு நாடுகளே சங்கத்தின் செயல்முறையில் நம்பிக்கை இழந்து விட்டன. எனவே, நாடுகள் தங்கள் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக்கொள்ளாமல் படைவலிமை கொண்டு தீர்த்துக்கொள்ளத் தொடங்கின. இரண்டாம் உலகப்போர் தொடங்குவதற்கு முன் சர்வதேசச் சங்கம் மரணப்படுக்கையில் இருந்தென்றே கூறலாம்.

(7) **உடனடிக் காரணம்-ஹிட்லரின் ஆக்கிரமிப்புகள் :** 1938ஆம் ஆண்டு ஆஸ்திரியாவை ஹிட்லர் தம் நாட்டுடன் இணைத்துக் கொண்டார். அதே ஆண்டு செக்கோஸ்லோவாகியாவின் ஒரு பகுதியாகிய சுடேடன்லாந்தை (Sudetenland) ஹிட்லர் கைப் பற்றிக்கொண்டார். அப்பொழுதே இரண்டாம் உலகப் போர் தொடங்கியிருக்கும். ஆனால், உடனே இங்கிலாந்தின் பிரதம அமைச்சர் நெவில் சாம்பர்லெய்ன் (Neville Chamberlain) இப் பிரச்சினையில் தலையிட்டார். இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கு மிடையில் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அது 'மியுனிச் ஒப்பந்தம்' (The Munich Pact, 1938) ஆகும். அதன்படி சுடேடன் லாந்தை இங்கிலாந்து நிர்வகிக்க ஜெர்மனி ஒத்துக்கொண்டது. செக்கோஸ்லோவாகியாவின் எந்தப் பகுதியையும் ஆக்கிரமிப் பதில்லை எனவும் ஜெர்மனி உறுதி கூறியது. ஆனால், அடுத்த ஆண்டே (1939) அந்த ஒப்பந்தத்தை மீறிச் செக்கோஸ் லோவாகியா முழுவதையும் ஹிட்லர் ஆக்கிரமித்துக்கொண்டார். அந்த நாட்டில் ஜெர்மானியர்கள் வாழ்கிறார்களென்று ஹிட்லர் காரணம் காட்டினார். அதுமட்டுமன்றி லிதுவேனியாவிடமிருந்து (Lithuania) மெமல் (Memel) என்ற பகுதியை ஜெர்மனிக்குத் தரும் படி ஹிட்லர் வற்புறுத்தினார். இத்தகைய பகிரங்கமான ஆக்கிர மிப்புகளைக் கண்ட இங்கிலாந்தும் ஃபிரான்சும் போலந்துடன் ஒரு நட்பு உடன்படிக்கையைச் செய்துகொண்டன. போலந்து பயன் படுத்திக் கொண்டிருந்த டான்சிக் (Danzig) துறைமுகத்தைத் தமக்குக் கொடுத்துவிடும்படி போலந்தை ஹிட்லர் வற்புறுத்தினார். போலந்து அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதைத் தொடர்ந்து ஹிட்லர் போலந்தைத் தாக்கினார். போலந்துக்கு நட்பு நாடு களான இங்கிலாந்தும் ஃபிரான்சும் ஜெர்மனிமீது போர் தொடுத் தன. 1939ஆம் ஆண்டு செப்டம்பர் மூன்றும் தேதி இரண்டாம் உலகப்போர் தொடங்கிவிட்டது.

### போர் நிகழ்ச்சிகள்

போரின்போது நவீனப் போர் முறைகளை ஹிட்லர் கையாண் டார். பிளிட்ஸ்கிரிக் ((Blitzkrieg) என்னும் மின்னல் தாக்குதலைப்

போலந்தின்மீது அவர் மேற்கொண்டார். அந் நாட்டின் தலைநகர மான வார்சா (Warsaw) மிக எளிதாக வீழ்ச்சியுற்றது. அந்த நேரத்தில் ரஷ்யா தனது படைகளை அனுப்பிக் கிழக்குப் போலந்தை ஆக்கிரமித்துக்கொண்டது.[1] இங்ஙனம் ஜெர்மனியும் ரஷ்யாவும் போலந்தைப் பங்குபோட்டுக் கொண்டன. லாட்வியா, லிது வேனியா, எஸ்தோனியா போன்ற பால்டிக்கடல் நாடுகளையும் ரஷ்யா கைப்பற்றிக்கொண்டது. ஹிட்லர் மிக எளிதாக டென் மார்க், நார்வே, ஹாலந்து, லக்சம்பர்க், பெல்ஜியம் போன்ற நாடு களையும் கவர்ந்து கொண்டார். பின்னர், ஃபிரான்சைக் கைப் பற்றத் திட்டமிட்டார். இதற்கிடையில் இங்கிலாந்தில் நெவில் சாம்பர்லெய்ன் பதவி விலகினார். 1940ஆம் ஆண்டு மே மாதம் வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill) இங்கிலாந்தின் தலைமை அமைச்சரானார். திறமைமிக்க அவர் தலைமையின்கீழ் ஜெர்மனியின் ஆக்கிரமிப்புகளை முறியடிக்க இங்கிலாந்து ஆயத்தமாயிற்று.

ஹிட்லர் ஃபிரான்சை மிகப் பயங்கரமாகத் தாக்கினார். தென் கிழக்குப் பகுதியிலிருந்து முஸ்ஸோலினி ஃபிரான்சைத் தாக்கினார். இருமுனைத் தாக்குதலைத் தாங்கமுடியாத ஃபிரான்ஸ் வீழ்ந்தது (1940). அடுத்த நான்கு ஆண்டுகள் ஃபிரான்ஸ், ஜெர்மனியின் அதிகாரத்திற்கு உட்பட்டே இருந்தது. ஃபிரான்சின் உதவிக்கு வந்த ஆங்கிலப் படைகள் துரத்தியடிக்கப்பட்டன. ஹிட்லரின் அடுத்த இலக்கு இங்கிலாந்து ஆயிற்று.

இங்கிலாந்தைக் கைப்பற்றுவது அவ்வளவு எளிதான காரிய மன்று. ஏனெனில், பிரதம அமைச்சர் சர்ச்சில் மக்களிடையே பெரும் தைரியத்தை ஊட்டியிருந்தார். தமது உணர்ச்சிமிக்க உரை ஒன்றில், 'நாம் கடல்கள் மற்றும் பெருங்கடல்கள் மீதிருந்து போரிடுவோம். வளரும் வலிமையோடு வானில் போரிடுவோம். எப்படியும் நம் தீவை நாம் காத்தே தீரவேண்டும். கடற்கரைகளில் போரிடுவோம். வயல்களிலும், வீதிகளிலும் அஞ்சாமல் போரிடு வோம். குன்றுகளிலும் போரிடுவோம். நாம் சரணடையவே கூடாது', என்று சர்ச்சில் வீரமுழக்கமிட்டார்.[2] 1940ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஹிட்லர் போர் விமானங்களை அனுப்பி ஆயிரக் கணக்கான குண்டுகளை இங்கிலாந்தின்மீது பொழியச் செய்தார்.

[1] 1939ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஜெர்மனியும் ரஷ்யாவும் ஓர் உடன் படிக்கையைச் செய்துகொண்டன. அதன்படி மேற்குப் போலந்தை ஜெர்மனி கவர்ந்துகொண்டால், கிழக்குப் போலந்தை ரஷ்யா கைப்பற்றிக் கொள்ளலாம் என இருநாடுகளும் ஒப்புக்கொண்டிருந்தன. மேலும், பால்டிக் கடல் நாடுகளில் தன் விருப்பப்படி ரஷ்யா தலையிட ஜெர்மனியின் ஒப்புதலைப் பெற்றிருந்தது.

[2] *Vide* Southgate, G. W., European History (1789–1960), 1970 Ed., p. 261.

மிகுந்த தைரியத்துடன் இத் தாக்குதலை ஆங்கிலேயர்கள் சமாளித்தனர். இந்த 'பிரிட்டன் போர்' (The Battle of Britain) இரண்டு மாதங்கள் நீடித்தது. அந்த நாட்டின் நகரங்கள், துறைமுகங்கள் தொழிற்சாலைகள் முதலானவை நொறுக்கப்பட்டன. அஞ்சா நெஞ்சினரான ஆங்கிலேயர்கள் மனந்தளராது போரிட்டனர். ஆங்கில விமானப்படை ஹிட்லரின் தாக்குதலை வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தியது. இங்கிலாந்தைக் கைப்பற்ற ஹிட்லரால் முடியவில்லை.

முஸ்ஸோலினி இத்தாலியப் படைகளுடன் சென்று பிரிட்டிஷ் சோமாலிலாந்தை ஆக்கிரமித்துக் கொண்டார். பின்னர் எகிப்தைத் தாக்க முற்பட்டார். வேவல் (Wevell) தலைமையில் சென்ற ஆங்கிலப்படை இத்தாலியப் படையைத் தோற்கடித்தது. ஹிட்லர், இத்தாலியின் உதவிக்கு, ரொம்மெல் (Rommel) தலைமையில் ஒரு படையை அனுப்பினார். இருப்பினும் ஆங்கிலப் படை எரிட்ரியா, சோமாலிலாந்து, அபீசீனியா முதலிய பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டு இத்தாலியப் படைகளை விரட்டியடித்தது.

இங்கிலாந்தை வெல்லமுடியாத ஹிட்லர், தம் கவனத்தை ரஷ்யாவின்மீது செலுத்தினார். பால்டிக்கடல் நாடுகள் பலவற்றை ரஷ்யா கைப்பற்றிக் கொண்டிருந்ததைக் கண்டு ஜெர்மனி பொறாமை கொண்டது. 1939ஆம் ஆண்டு ரஷ்யாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையைப் புறக்கணித்துவிட்டு, 1941ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஹிட்லர் ரஷ்யாவைத் தாக்கினார். இதை எதிர்பார்க்காத ஸ்டாலின் (Stalin), ரஷ்யப் படைகளைப் பின் வாங்கச் செய்தார். ஜெர்மன் படைகள் முன்னேறின. ரஷ்யர்கள் எல்லாவற்றையும் அழித்துவிட்டுப் பின்னோக்கிச் சென்றனர். நெப்போலியன் செய்த தவற்றைத் தாம் செய்யமாட்டோம் என்று நினைத்த ஹிட்லர் அதே தவற்றைச் செய்தார். ஜெர்மானியப் படைகள் உணவின்றித் தவித்தன; நோயினாலும், குளிரினாலும் பல தொல்லைகளுக்கு உள்ளாயின. ஸ்டாலின்கிராட்டில் (Stalin grad) நடைபெற்ற போரில் ஜெர்மானியப் படைகள் தோற்கடிக்கப் பட்டன. அதையடுத்து ரஷ்யா பல இடங்களில் வெற்றி பெற்றது.

1941ஆம் ஆண்டு டிசம்பர் 7ஆம் தேதி ஜப்பான் மிகப் பெரிய தவற்றைச் செய்தது. பசிபிக் பெருங்கடலில் ஹாவாய்த் தீவுகளிலுள்ள பேர்ல் ஹார்பரை (Pearl Harbour) ஜப்பான் தாக்கி அங்கிருந்த அமெரிக்கக் கடற்படையைக் குண்டுபோட்டு அழித்தது. அத்தாக்குதலினால் அமெரிக்காவுக்குச் சொந்தமான ஏழு போர்க் கப்பல்களும் நூற்று ஐம்பது போர் விமானங்களும் அழிந்தன.

இரண்டாயிரத்து நானூறு வீரர்கள் உயிரிழந்தனர். அதுவரை நடுநிலை வகித்த ஐக்கிய அமெரிக்கா இந்த நிகழ்ச்சிக்குப்பின் ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு எதிராகப் போரில் இறங்கியது. முதலில் ஜப்பான் பெருவெற்றியைக் கண்டது. மலேயா, சிங்கப்பூர், ஃபிலிப்பைன் தீவுகள் பர்மா, இந்தோசீனு, கிழக்கிந்தியத் தீவுகள் முதலானவற்றை ஜப்பான் கைப்பற்றிக்கொண்டது. ஆங்கில ஆதிக்கத்தின் கீழிருந்த இந்தியா, இலங்கை முதலானவற்றையும் பிடித்துக் கொள்ள அந்நாடு திட்டமிட்டது. அமெரிக்கா போரில் ஈடுபட்ட பின்னர் இங்கிலாந்து, ஃபிரான்ஸ் முதலான நட்பு நாடுகள் அமெரிக்காவின் உதவியைப் பெற்றன. ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் F.D. ரூஸ்வெல்ட் (Roosevelt) நட்பு நாடுகளுக்குத் தேவையான போர் விமானங்கள், போர்க் கப்பல்கள், வெடிகுண்டுகள் முதலானவற்றை எல்லாம் கொடுத்துதவினர். ஐரோப்பாவில் போரிட ஐசன்ஹவர் (Eisenhower) தலைமையில் ஒரு பெரும்படை அனுப்பப்பட்டது. தென் கிழக்கு ஆசியாவில் ஜப்பானை எதிர்த்துப் போரிட மெக் ஆர்தர் (Mac Arthur) தலைமையில் அமெரிக்கப் படைகள் அனுப்பப்பட்டன.

1943ஆம் ஆண்டு ஜுலை மாதம் நட்பு நாடுகளின் படைகள் சிசிலித் (Sicily) தீவைத் தாக்கிப் பின்னர் இத்தாலியைத் தாக்கின. அக்டோபரில் இத்தாலி சரணடைந்தது. 1944ஆம் ஆண்டு ஜூன் மாதம் அமெரிக்கப் படைகளும், ஆங்கிலப் படைகளும் ஃபிரான்சை விடுவிக்க முயன்று வெற்றிபெற்றன. பல இடங்களில் ஜெர்மானியப் படைகள் தோல்வியடைந்தன. அமெரிக்கப் படைகள் மேற்கிலிருந்தும், ரஷ்யப் படைகள் கிழக்கிலிருந்தும் ஜெர்மனியைத் தாக்கின. ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார். 1945ஆம் ஆண்டு மே மாதம் சரணடைந்தது.

தென்கிழக்கு ஆசியாவில் மெக் ஆர்தர் தலைமையில் அமெரிக்கப் படைகளும், மவுண்ட் பேட்டன் தலைமையில் ஆங்கிலப் படைகளும் ஜப்பானை எதிர்த்துப் போரிட்டன. பர்மாவை ஆங்கிலப் படைகளும், ஃபிலிப்பைன் தீவுகளை அமெரிக்கப் படைகளும் கைப்பற்றின. 1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், ஹிரோஷிமா (Hiroshima), நாகாசகி (Nagasaki) ஆகிய இரண்டு ஜப்பானிய நகரங்களின் மீது அமெரிக்கா இரண்டு அணுகுண்டுகளை (Atom bombs) வீசியது. இதனுல் ஜப்பான் விவரிக்க முடியாத பெருஞ் சேதத்திற்கு உள்ளானது. உடனே ஜப்பான் நிபந்தனையின்றிச் சரணடைந்தது. இரண்டாம் உலகம் போர் நின்றது.

**விளைவுகள்**

ஜெர்மனியில் நாசிச ஆட்சியும், இத்தாலியில் ஃபாசிச ஆட்சியும் முடிவடைந்தன. ஜெர்மனி இரண்டாகப் பிரிக்கப்பட்டது. மேற்கு ஜெர்மனி, நட்பு நாடுகளான இங்கிலாந்து, ஃபிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றின் மேற்பார்வையின் கீழ் விடப் பட்டது. கிழக்கு ஜெர்மனி, ரஷ்யாவின் மேற்பார்வையின்கீழ் வந்தது. நாடு பிரிந்ததைப்போல் தலைநகரமாகிய பெர்லினும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இத்தாலி குடியரசாயிற்று. அது தனது ஆப்பிரிக்கக் குடியேற்றங்களை இழந்தது.

ஐரோப்பிய நாடுகள் சிறிது சிறிதாகத் தமது குடியேற்ற நாடுகளுக்கு விடுதலை வழங்கின. இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இலங்கை, ஃபிலிப்பைன்ஸ் தீவுகள், கொரியா முதலானவை போருக்குப் பின்னர் விடுதலை பெற்ற நாடுகள் ஆகும். இங்கிலாந்தில் 1945ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று அட்லியின் (Atlee) தலைமையில் தொழிற்கட்சி (Labour Party) அமைச்சரவையை அமைத்தது. அது ஏகாதிபத்திய, குடியேற்றக் கொள்கையை எதிர்த்தது. அந்த அமைச்சரவை இங்கிலாந்தின் குடியேற்றங்கள் மட்டுமின்றி மற்ற ஐரோப்பிய நாடுகளின் குடியேற்றங்களும் விடுதலை பெற அரும்பாடுபட்டது. இங்கிலாந்தும் ஃபிரான்சும் உலக அரங்கில் வலிமையை இழந்தன. அவை வல்லரசுகள் என்று அழைக்கப்பட்டாலும் உண்மையில் அந்த நிலையில் அவை இல்லை. அவை இரண்டாந்தர அரசுகளாகவே மாறின. இதற்கு மாறாக ஐக்கிய அமெரிக்காவும் ரஷ்யாவும் மிகவும் வலிமை மிகுந்த நாடுகள் என்பது நிரூபிக்கப்பட்டது.

ஜப்பானின் பொருளாதாரம் பெரிதும் சீர்குலைந்தது. ஹிரோஷிமா, நாகாசகி ஆகிய நகரங்களின்மீது வீசப்பட்ட குண்டுகளினால் இலட்சக்கணக்கான அதன் மக்கள் பாதிக்கப் பட்டனர். எனினும், போருக்குப் பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் உதவியுடன் தன் பொருளாதார நிலையை ஜப்பான் சீர்படுத்தியது.

கோடிக்கணக்கான மக்கள் மடிந்தனர்; பலகோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் அழிந்தன. அதனால் இத்தகைய போர் மீண்டும் வரக்கூடாது என்பதற்காக ரூஸ்வெல்ட், சர்ச்சில் முதலானவர்களின் முயற்சியால் ஐக்கிய நாடுகள் நிறுவனம் (United Nations Organisation) அமைக்கப்பட்டது. மனித இனம் மடிவதனின்று காப்பதற்காக இந்த நிறுவனம் தன்னால் இயன்ற பணியைச் செய்து வருகின்றது.

# 25. ஐக்கிய நாடுகள் நிறுவனம்

## தோற்றம்

உலக அமைதியைக் காக்கும் பணியைத் திறம்படச் செய்யச் சர்வதேசச் சங்கம் தவறிவிட்டது என்பதை ஏற்கெனவே பார்த்தோம். இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுதே, 1941ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் F.D. ரூஸ்வெல்ட்டும், இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் வின்ஸ்டன் சர்ச்சிலும் வட அட்லாண்டிக் கடலில் ஒரு கப்பலில் சந்தித்தனர். அவர்கள் நடத்திய பேச்சுகளின் விளைவாக 'அட்லாண்டிக் சாசனம்' வெளியிடப்பட்டது. அதில் உலக அமைதியைக் காக்க அமெரிக்காவும் இங்கிலாந்தும் மேற்கொள்ளப் போகும் நடவடிக்கைகள் பற்றிக் கூறப்பட்டிருந்தன. 1944ஆம் ஆண்டு செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் வாஷிங்டனில் உள்ள 'டம்பார்டன் ஓக்ஸ்' (Dumbarton oaks) மாளிகையில் ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா ஆகிய நான்கு வல்லரசுகள் கூடி ஐக்கிய நாடுகள் நிறுவனத்தை அமைப்பதற்கான திட்டத்தை வெளியிட்டன அதையடுத்து 1945ஆம் ஆண்டு ஃபிப்ரவரி மாதம் அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் கிரிமியா (Crimea) தீபகற்பத்திலுள்ள யால்டாவில் (Yalta) கூடிப் பேசின. அந்த ஆண்டு ஏப்ரல் மாதம் சான்ஃபிரான்சிஸ்கோவில் (San Francisco) உலக நாடுகளின் மாநாடு ஒன்றைக் கூட்ட அந் நாடுகள் ஒத்துக்கொண்டன.

அதற்கேற்ப 1945ஆம் ஆண்டு ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் நடைபெற்ற சான்ஃபிரான்சிஸ்கோ மாநாட்டில் ஐம்பது நாடுகள் கலந்துகொண்டு, விவாதித்து, ஐக்கிய நாடுகள் சாசனத்தில் (Charter of the United Nations) கையொப்பமிட்டன. இம் மாநாட்டில் இந்தியாவும் கலந்துகொண்டது. 1945ஆம் ஆண்டு அக்டோபர் 24ஆம் தேதி ஐக்கிய நாடுகள் நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.

## ஐ. நா. நிறுவனத்தின் நோக்கங்கள்

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் நோக்கங்கள், கொள்கைகள், அதன் செயல்முறை முதலானவை பற்றிய எல்லா விவரங்களும்

ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் முதல் பத்தியில் (Article 1) கூறப் பட்டுள்ளன. அதன் நோக்கங்கள் (Purposes), (அ) பன்னாட்டு அமைதியையும் பாதுகாப்பையும் பேணுதல், (ஆ) உலக நாடுகளுக் கிடையே நட்புறவை வளர்த்தல், (இ) பன்னாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க எல்லா நாடுகளின் முழு ஒத்துழைப்பையும் பெறுதல், (ஈ) இந் நோக்கங்களை நிறைவேற்ற ஐ.நா. சபை சிறப்பான இடமாகச் செயல்படுதல் ஆகியவை ஆகும். சாசனத்தின் இரண்டாவது பத்தி (Article 2), 'ஐக்கிய நாடுகள் நிறுவனம் உறுப்பு நாடுகள் அனைத்தும் சமமான அந்தஸ்து உடையவை என்ற கொள்கையில் அமைக்கப்பட்டது', என்று கூறுகின்றது.

ஐக்கிய நாடுகளின் நோக்கங்களில் நம்பிக்கையுள்ள எல்லா நாடுகளும் அந் நிறுவனத்தில் சேரலாம். நிறுவனத்தின் 'பொதுச் சபை' புதிய உறுப்பு நாடுகளைச் சேர்த்துக்கொள்கின்றது. ஆங்கிலம், ஃபிரெஞ்சு, சீன, ரஷ்ய, ஸ்பானிய மொழிகள் ஐக்கிய நாடுகளின் அலுவலக மொழிகளாகும். நிறுவனத்தின் உறுப்பு நாடுகள் தங்களின் தகுதிக்கு ஏற்பக் குறிப்பிட்ட தொகையை நிறுவனத்திற்குத் தருகின்றன. இதன் தலைமையகம் இப்பொழுது நியூயார்க் நகரத்தில் உள்ளது.

### நிறுவனத்தின் உறுப்புகள்

ஐக்கிய நாடுகளின் நிறுவனத்தில் ஆறு முக்கியமான உறுப்பு களும், வேறுபல கிளை அமைப்புகளும் உள்ளன. அவற்றைப் பற்றிய விவரம் கீழ்வருமாறு :

(1) பொதுச் சபை (General Assembly): ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உறுப்பு நாடுகளாக உள்ள அனைத்தும் தங்கள் பிரதி நிதிகளை இச் சபைக்கு அனுப்புகின்றன. இப்பொழுது 144 நாடுகள் இதில் உள்ளன. ஒவ்வொரு நாடும் ஐந்து பிரதிநிதிகளைக் கொண்ட குழுவை அனுப்பலாம். இச் சபை பொதுவாக ஆண்டுக்கு ஒரு முறை தலைமையகத்தில் கூடுகின்றது. இருப்பினும் அவசர காலத்தில் பாதுகாப்பு அவை, பொதுச் சபையைக் கூட்ட லாம். அல்லது பொதுச் சபையின் பெரும்பாலான உறுப்பு நாடு களின் விருப்பத்திற்கு ஏற்ப எப்பொழுது வேண்டுமானாலும் கூடி அவசரப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கலாம். ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைப் பொதுச்சபை தான் நிர்ணயிக்கின்றது. மற்ற உறுப்புகளின் அறிக்கைகளையும் தீர்மானங்களையும் இச் சபை ஆராய்ந்து இறுதி முடிவு எடுக் கின்றது. பாதுகாப்பு அவையின் தாற்காலிக உறுப்பினர்களையும், பொருளாதார-சமூக அவையின் உறுப்பினர்களையும், தருமகர்த்தா அவையின் உறுப்பினர்களையும், சர்வதேச நீதி மன்றத்தின் நீதிபதிகளையும் பொதுச்சபைதான் தேர்ந்தெடுக்கின்றது. சபை

யின் நடவடிக்கைகளையும் விவாதங்களையும் முறைப்படுத்த ஆண்டுக்கு ஒரு முறை சபையின் தலைவரும் துணைத்தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நிறுவனத்தின் பொதுச்செயலரும் இச் சபையினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

(2) பாதுகாப்பு அவை (Security Couucil): இதில் முதலில் பதினொரு நாடுகள் இருந்தன. 1966ஆம் ஆண்டிலிருந்து இதில் பதினைந்து நாடுகள் உள்ளன. அவற்றுள் இங்கிலாந்து, ஃபிரான்சு, அமெரிக்கா, ரஷ்யா, செஞ்சீனா ஆகியவை நிரந்தர உறுப்பு நாடுகள் ஆகும்.[1] மற்றப் பத்து நாடுகளும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பொதுச் சபையினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்த்து வைப்பதும், ஆக்கிரமிப்பைத் தடுப்பதும் இந்த அவையின் இரண்டு முக்கியப் பணிகளாகும். நிரந்தர உறுப்பு நாடுகள் ஒருமனதாக ஏற்றுக் கொண்டால்தான் குறிப்பிட்ட பிரச்சினையின்மீது இறுதி முடிவு எடுக்க முடியும். இந்த நாடுகளுக்குத் 'தடுப்பாணை அதிகாரம்' (Veto Power) உள்ளது. இவ் வதிகாரத்தை ரஷ்யா மிக அதிக மாகப் பயன்படுத்தி உள்ளது. 'தடுப்பாணை அதிகாரம்' இந் நிறுவனத்தின் செயல்முறைக்குப் பெருந்தடையாக இருக்கின்றது.

(3) பொருளாதார-சமூக அவை (Economic and Social Council) : இதில் முதலில் பதினெட்டு உறுப்பு நாடுகள் இருந்தன. இப்பொழுது இருபத்தேழு நாடுகள் உள்ளன. உறுப்பு நாடுகளின் பதவிக்காலம் ஒன்பது ஆண்டுகள் ஆகும். (1) உலக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், வேலை வாய்ப்புகளை அதிகரித் தல், மக்களின் பொருளாதார-சமூக நிலையை மேம்படச் செய்தல், (2) சர்வதேசப் பொருளாதார, சமூக உடல்நலப் பிரச்சினை களுக்குத் தீர்வு காணுதல்; சர்வதேசக் கல்வி மற்றும் கலாசார வளர்ச்சிக்கு ஒத்துழைத்தல்; (3) எந்தவித வேறுபாடும் காட்டாமல் மனித உரிமைகளை எல்லா மக்களும் பெறும்படிச் செய்தல் முதலா னவை இந்த அவையின் முக்கிய நோக்கங்களாகும்.

(4) தருமகர்த்தா அவை (Trusteeship Council:) தன்னாட்சி பெறாத சில நாடுகளின் நலன்களைக் காக்க இந்த அவை அமைக்கப் பட்டது. காப்பு முறையில் இருந்த நாடுகள், இரண்டாம் உலகப் போரின்போது பகைமை நாடுகளிடமிருந்து பெறப்பட்ட நாடுகள், தருமகர்த்தா ஆட்சிக்குட்பட்ட நாடுகள் முதலான வற்றின் நலன்களில் இந்த அவை அக்கறை கொண்டது.[2]

[1] 1971ஆம் ஆண்டு தேசிய சீனா ஐ. நா. நிறுவனத்திலிருந்து வெளியேற்றப் பட்டுச் செஞ்சீனா உறுப்புநாடாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

[2] எடுத்துக்காட்டுக்குச் சிலவற்றைக் கூறலாம். ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள நியுகினியா, ஃபிரெஞ்சு காமெரூன், சோமாலிலாந்து, தாங்கனிகா முதலான தரும கர்த்தா நிலப்பகுதிகளை முறையே ஆஸ்திரேலியா, ஃபிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து முதலான நாடுகள் நிர்வகித்து வந்தன.

அத்தகைய நாடுகளில் வாழ்ந்த மக்களின் உரிமைகளைக் காத்தல், சுதந்திரம் பெற உதவுதல் முதலானவை இந்த அவையின் பணிகளாகும். பாதுகாப்பு அவையின் நிரந்தர உறுப்பு நாடுகள், தருமகர்த்தா நாடுகளை நிர்வகிக்கும் நாடுகள் மற்றும் பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்படும் நாடுகள் ஆகியவை இந்த அவையில் அங்கம் வகிக்கின்றன. அவற்றின் பதவிக் காலம் மூன்றாண்டுகள் ஆகும்.

(5) சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice): இதில் பதினைந்து நீதிபதிகள் உள்ளனர். அவர்களின் பதவிக்காலம் ஒன்பது ஆண்டுகளாகும். அவர்கள் பொதுச் சபையினாலும் பாதுகாப்பு அவையினாலும் உறுப்பு நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதனுடைய தலைமை அகம் ஹாலந்து நாட்டில் உள்ள தி ஹேக் (The Hague) என்ற நகரமாகும். நாடுகளுக்கிடையே தோன்றும் சட்ட நுணுக்கங்கள் மிகுந்த பிரச்சினைகளுக்கு இது வழிமுறைகளைத் தருகின்றது. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உறுப்புகளும் மற்றக் கிளை நிறுவனங்களும் இம் மன்றத்தின் ஆலோசனையைப் பெறுகின்றன.

(6) செயலகம் (Secretariat): நிர்வாகப் பொறுப்புகளைக் கவனிப்பது இதன் பணியாகும். இதில் உறுப்பு நாடுகளிலிருந்து நியமிக்கப்பட்ட ஏறத்தாழ நான்காயிரம் அலுவலர்கள் பணிபுரிகின்றனர். இதன் பொதுச்செயலர் (Secretary-General) பாதுகாப்பு அவையின் பரிந்துரையின் அடிப்படையில், பொதுச் சபையினால் நியமிக்கப்படுகின்றார். இப்பொழுது டாக்டர் குர்ட் வால்தீம் (Dr. Kurt Waldheim) என்பவர் பொதுச் செயலராக உள்ளார். இவருக்கு உதவி செய்யப் பல துணைப் பொதுச் செயலர்கள் உள்ளனர்.

**மற்றக் கிளை நிறுவனங்கள்:** மேலே குறிப்பிடப்பட்ட ஆறு முக்கியமான உறுப்புகள் மட்டுமின்றி வேறு பல கிளை நிறுவனங்களும் உள்ளன. அவற்றுள் சில கீழ்க்கண்டவை ஆகும்.

(அ) சர்வதேசத் தொழிலாளர் நிறுவனம் (International Labour Organisation, ILO), (ஆ) உணவு வேளாண்மை நிறுவனம் (Food and Agricultural Organisation, FAO), (இ) ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல், கலாசார நிறுவனம் (United Nations Education Scientific Cultural Organisation, UNESCO), (ஈ) உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation, WHO), (உ) சர்வதேசப் பண நிதி (International Monetary Fund, IMF), (ஊ) ஐக்கிய நாடுகளின் சர்வதேசக் குழந்தைகளின் அவசர நிதி (United Nations International Childrens' Emergency Fund, UNICEF) முதலானவை ஆகும்.

இவை அவற்றின் பெயர்களுக்கு ஏற்ப அந்தந்தத் துறைகளில் சிறப்பான பணியைச் செய்துவருகின்றன.

**நிறுவனத்தின் சாதனைகள்**

கடந்த முப்பது ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் நிறுவனம் பல துறைகளில் அரும்பணியைச் செய்துள்ளது. அதுபற்றி இனிக் காண்போம்.

அரசியல் துறையில், நாடுகளுக்கு இடையே பல்வேறு காலங்களில் நடைபெற்ற போர்களைத் தடுத்து ஐக்கிய நாடுகள் நிறுவனம் அமைதியை நிலைநாட்டியுள்ளது. குறிப்பாக, (1) இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த பின்னர் 1946-ல் ஆங்கிலப்படைகளும், ஃபிரெஞ்சுப் படைகளும் சிரியா மற்றும் லெபனன் ஆகிய நாடுகளிலிருந்து விலக மறுத்தன. போருக்குப் பின்னர் அமைதிக் காலத்தில் தங்கள் நாட்டில் அயல்நாட்டுப் படைகள் இருப்பதை அந்நாடுகள் வன்மையாகக் கண்டித்தன. ஐக்கிய நாடுகள் நிறுவனத்திற்கு அந் நாடுகள் விண்ணப்பித்தன. உடனே பாது காப்பு அவை தக்க நடவடிக்கை எடுத்ததால் ஆங்கிலப் படைகளும் ஃபிரெஞ்சுப் படைகளும் சிரியா மற்றும் லெபனன் நாடுகளிலிருந்து விலகிச்சென்றன. (2) காஷ்மீர் பிரச்சினை சம்பந்தமாக 1948ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் போர் மூண்டது. இதில் ஐ.நா. நிறுவனம் தலையிட்டுப் போர் நிறுத்தத்திற்கு வழி வகுத்தது. (3) இந்தோனேஷியா, டச்சு நாட்டின் (Holland) குடியேற்ற நாடாக இருந்தது. டாக்டர் சுகர்னோவின் தலைமையில் இந்தோனேஷியர் விடுதலை இயக்கத்தை நடத்தினார்கள். அந்த இயக்கத்தை 1947-ல் இருந்து டச்சு நாடு மிகக் கொடுமையாக நசுக்கி வந்தது. ஐக்கிய நாடுகள் நிறுவனம் இதில் தலையிட்டுப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென இந்தியா முதலான நாடுகள் வற்புறுத்தின. நிறுவனத்தின் நன்முயற்சியால் இந்தோனேஷியா 1949ஆம் ஆண்டு விடுதலை பெற்றது. (4) 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் நாடு தோன்றியது. அந் நாடு தோன்றிய அன்றே அரபுநாடுகள் அதை எதிர்த்துப் போரிட்டன. உடனே பாதுகாப்பு அவை தலையிட்டுப் போரை நிறுத்தியது. 1949ஆம் ஆண்டு மீண்டும் இஸ்ரேல்—அரபு நாடுகள் போர் தொடங்கியது. அப்பொழுதும் நிறுவனம் போரை நிறுத்தி மேற்கு ஆசியாவில் அமைதியை நிலைநாட்டியது. எனினும், இந்த இஸ்ரேல்—அரபு நாடுகள் பிரச்சினை நிறுவனத்திற்குத் தீராத தலைவலியாகவே இருந்துவருகின்றது. (5) 1950ஆம் ஆண்டு வடகொரியாவின் படைகள் தென் கொரியாவின்மீது படையெடுத்து ஆக்கிரமிப்பில் ஈடுபட்டன. பாதுகாப்பு அவையும் பொது அவையும் ஆக்கிரமிப்பை நிறுத்தும்படி ஆணையிட்டன. வடகொரியா மறுத்தது. செஞ்சீனு அந்த நாட்டுக்கு உதவி செய்து வந்தது. ஐக்கிய நாடுகள் நிறுவனம், தன்னுடைய படையை அனுப்பித் தென் கொரியாவின் சுதந்திரத்தைக் காத்தது. பின்னர்ப் போரையும் நிறுத்தியது. (6) 1956ஆம் ஆண்டு சூயஸ் கால்வாயை எகிப்தின் தலைவர் நாசர் நாட்டுடைமை ஆக்கினார்.

உடனே ஆங்கில ஃபிரெஞ்சுப் படைகள் சூயஸ் கால்வாய்ப் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டன. போரை நிறுத்தவேண்டும் என்று நிறுவனம் ஆணையிட்டது. அயல்நாட்டுப் படைகள் சூயஸ் பகுதியிலிருந்து விலகின. 1957ஆம் ஆண்டுக்குள் அந்தக் கால்வாய் எல்லா நாடுகளின் போக்குவரத்துக்கும் திறந்துவிடப்பட்டது. சூயஸ் கால்வாய் எகிப்துக்கே உரியதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (7) 1960ஆம் ஆண்டு காங்கோ பெல்ஜியத்தினின்று விடுதலை பெற்றது. ஆனால், பல்வேறு அரசியல் காரணங்களுக்காக அந்தக் குடியரசு சரியாகச் செயல்படவில்லை. ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் அந்த நாட்டில் அரசியல் விவகாரங்களில் தலையிட்டன. அவற்றைத் தடுத்து, காங்கோக் குடியரசு சிறப்பாகச் செயல்பட நிறுவனம் உதவியது.

**அரசியல் சார்பற்ற பணிகள் :** போர்களைத் தடுத்து அமைதியை ஏற்படுத்தியது மட்டுமன்றி வேறுபல பொதுநலப் பணிகளையும் நிறுவனம் செய்துள்ளது. 1948ஆம் ஆண்டு இந்த நிறுவனம் 'மனித உரிமைகளை' (Human Rights) அறிவித்தது.[1] இவற்றில் ஆடவரும் பெண்டிரும் பெறவேண்டிய உரிமைகளைப்பற்றி முப்பது பத்திகளில் (articles) வற்புறுத்தப்படுகின்றன. உலக நாடுகளின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு நிறுவனம் பெருமளவு உதவி செய்துள்ளது. அம்மை, மலேரியா முதலான தொற்று நோய்கள் பரவா வண்ணம் தடுக்க எல்லா நாடுகளிலும், குறிப்பாக ஆப்பிரிக்க நாடுகளில் அரும்பணியைச் செய்துள்ளது. தொழில் துறையில் முன்னேறாத நாடுகளுக்குத் தொழில்துறை வல்லுநர்களை அனுப்பியும் பணவுதவி செய்தும் அவற்றின் வளர்ச்சிக்கு உதவி வருகின்றது. உலக நாடுகளின் கலாசாரத்தைப் பேணிக்காக்க நிறுவனம் வேண்டிய எல்லாவித உதவியையும் தருகின்றது. தமிழ்நாட்டில் சில கோவில்களைப் புதுப்பிக்க நிறுவனம் உதவி செய்துள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

அணுகுண்டு வெடிப்பதையும் போர்க் கருவிகள் பெருக்குவதையும் தடைசெய்ய நிறுவனம் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. நிறுவனத்தின் முயற்சியால் 1963ஆம் ஆண்டு ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் அணுசோதனைத் தடுப்பு உடன்பாட்டில் (Test Ban Treaty) கையெழுத்திட்டன. 1967ஆம் ஆண்டு அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து முதலான அறுபது நாடுகள், அறிவியல் ஆராய்ச்சிகளை உலக அமைதியைக் காக்கவே பயன்படுத்தவேண்டும் என ஒத்துக்கொண்டு ஓர் உடன்பாட்டில் கையெழுத்திட்டன,

**நிறுவனத்தின் குறைகள்**

ஐக்கிய நாடுகள் நிறுவனம் பல துறைகளில் போற்றத்தக்க

1 'மனித உரிமைகளை' எழுதுவதற்காக ஐ.நா. நிறுவனம் அமைத்த குழுவுக்குத் திருமதி F.D. ரூஸ்வெல்ட் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பணியினைச் செய்து வருகின்றதென்றாலும், அது வலுவிழந்த நிறுவனமாகவே காணப்படுகின்றது. ஏனெனில், உலக நாடுகளில் பல இதில் உறுப்பு நாடுகளாக இல்லை. சுவிட்சர்லாந்து, மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி, வடகொரியா, தென் கொரியா, வடக்கு வியட்நாம், தெற்கு வியட்நாம் முதலான நாடுகள் இதில் சேரவில்லை, அல்லது சேர்த்துக்கொள்ளப்படவில்லை. ஐக்கிய நாடுகள் நிறுவனத்திற்குத் தேவை ஏற்படும்போது உறுப்பு நாடுகளிலிருந்து படையைப் பெறுகின்றது. அந்த நிறுவனத்திற்கென்று தனியாகப் படை எதுவும் இல்லை. அதனால் ஆக்கிரமிப்பில் ஈடுபடும் நாடுகளை வலுவான முறையில் தடுக்க இந் நிறுவனத்தினால் முடியவில்லை. எந்தப் பிரச்சினையின்மீதாவது இறுதி முடிவு எடுக்கவேண்டுமாயின் பாதுகாப்பு அவையில் ஐந்து வல்லரசுகளும் ஒருமனதாக அந்த முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென ஒரு விதி உள்ளது. அதனால், ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, ரஷ்யா முதலான வல்லரசுகள் 'தடுப்பாணை' அதிகாரத்தை அதிகமாகப் பயன்படுத்துகின்றன. இது நிறுவனத்தின் செயல்முறைக்குப் பெருந்தடையாக உள்ளது. ஆப்பிரிக்க நாடுகளும் ஆசிய நாடுகளும் பாதுகாப்பு அவையில் தங்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் இல்லை என்றே கருதுகின்றன. மேலும், பல சிறிய நாடுகள் வல்லுரசுகளின் சார்பு நாடுகளாக இருப்பதால் அவை தங்கள் விருப்பம்போல் நிறுவனத்தில் செயல்படமுடியவில்லை. வல்லரசுகள் தங்களின் நலன்களைக் காத்துக்கொள்ள முயல்கின்றனவேயன்றிச் சிறிய நாடுகளின் கருத்துகளுக்கும் நலன்களுக்கும் கவனம் செலுத்துவதில்லை.

அதனால் பல முக்கியப் பிரச்சினைகளை நிறுவனம் தீர்த்துவைக்கவில்லை வடக்குவியட்நாமுக்கும் தெற்கு வியட்நாமுக்கும் இடையே பல ஆண்டுகளாக நடைபெற்றுவந்த போரை நிறுவனத்தினால் நிறுத்தமுடியவில்லை. ஏனெனில் வல்லரசுகளாகிய அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் இப்போரில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்தன. அண்மையில்தான் (ஏப்ரல், 1975) அமெரிக்கப் படைகள் தெற்கு வியட்நாமிலிருந்து வெளியேற்றப்பட்டன. அதேபோல இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையே அடிக்கடி போர்கள் நடைபெறுகின்றன. இப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வினை நிறுவனம் காணவில்லை. மேலும், தென் ஆப்பிரிக்காவில் பின்பற்றப்படும் 'இன வேறுபாட்டு'க் (racial discrimination) கொள்கைக்கு எதிராக நிறுவனம் உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை.

இருப்பினும் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் அரசியல், பொருளாதாரம், சமூக-கலாசாரம் போன்ற துறைகளில் போற்றத்தக்க பணியை ஐக்கிய நாடுகள் நிறுவனம் செய்துவருகின்றது. எனவே, இந்த நிறுவனம் இருண்ட எதிர்காலத்தை நோக்கிப் பயணம் செய்யும் மனித சமுதாயத்திற்கு ஓர் ஒளிவிளக்காகத் திகழ்கின்றது.

# 26. இந்திய விடுதலை இயக்கம்

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்கு உட்பட்ட இந்திய நிலப்பகுதிகளில், கம்பெனியின் கவர்னர் ஜெனரல்கள் இந்தியர் விரும்பிய நல்லாட்சியை நடத்தவில்லை. அத்தகைய ஆட்சியை எதிர்த்து 1857ஆம் ஆண்டு 'சிப்பாய்க் கலகம்' நடைபெற்றது. அதன் விளைவாக விக்டோரியா மகாராணியார் 1858 ஆம் ஆண்டு வெளியிட்ட பேரறிக்கையை அடுத்துக் கம்பெனியின் எல்லா இந்திய நிலப்பகுதிகளும் இங்கிலாந்து அரசாங்கத்தின் நேர் ஆட்சியின்கீழ் வந்தன.

கம்பெனியின் ஆட்சியின்போதும், ஆங்கில அரசின் ஆட்சியின் போதும் இந்திய மாணவர்கள் ஆங்கிலக் கல்வியைப் பெற்றனர். அம் மொழியின் வாயிலாக மேலைநாடுகளின் கலைகளையும் நாகரிகத்தையும், குறிப்பாக விடுதலை இயக்க வரலாறுகளையும் இந்தியர் கற்றறிந்தனர். அதனால் இந்திய விடுதலை இயக்கத்தைத் தொடங்குவதற்கான அடிப்படை அறிவையும் ஆற்றலையும் இந்தியத் தலைவர்கள் பெற்றனர். தொடக்கத்தில் உயர்கல்வி பெற்ற இந்தியர்கள் அரசாங்கத்தில் தங்களுக்கு அதிகமான வேலைவாய்ப்புகள் வேண்டும் என்பதற்காகவே போராடினர். பின்னர் இந்தப் போராட்டம் விடுதலை இயக்கமாக மாறியது.

### இந்திய தேசியக் காங்கிரஸ் (1885)

கல்வி கற்ற இந்தியர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசுக்கு உணர்த்தவும், அவர்கள் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளப் பயன்படும் மன்றமாகவும் இருக்க ஒரு சங்கம் அமைக்க வேண்டியதன் அவசியத்தை இந்தியத் தலைவர்கள் உணர்ந்தனர். அவர்களின் முயற்சிக்கு உற்ற துணைவராக இருந்தவர் ஆலன் அக்டேவியன் ஹ்யூம் (Allen Octavian Hume) என்ற ஓய்வுபெற்ற ஆங்கில உயர் அதிகாரி ஆவார். அவருடைய முயற்சியால் 1885 ஆம் ஆண்டு பம்பாயில் இந்திய தேசியக் காங்கிரசின் முதல் மாநாடு கூடியது. இந்த மாநாட்டிற்கு W. C. பானர்ஜி தலைமை தாங்கினார். இதில் பெரோஸ்ஷா மேதா, தாதாபாய் நௌரோஜி முதலான பெருந்தலைவர்கள் கலந்துகொண்டனர். அவர்கள் பல தீர்மானங்களை மாநாட்டில் நிறைவேற்றினர். இங்ஙனம் இந்திய

தேசியக் காங்கிரஸ் நிறுவப்பட்டது. அப்பொழுது வைஸ்ராயாக இருந்த டஃப்ரின் பிரபு (Lord Dufferin) இத்தகைய அமைப்பு நிறுவப்படுவதை வரவேற்ருர். காங்கிரசின் மற்ற ஆண்டு மாநாடுகள் கல்கத்தா, சென்னை, அலகாபாத், லாகூர் முதலான இடங்களில் நடைபெற்றன. அடுத்த சில ஆண்டுகளில் காங்கிரஸ் மிகப் பெரிய மக்கள் கட்சியாக மாறியது. பாலகங்காதர திலகர், லாலா லஜ்பத்ராய். பிபின் சந்திரபால், கோபாலகிருஷ்ண கோகலே, S.N. பானர்ஜி முதலான தலைவர்கள் விடுதலை இயக்கத்தின் முன்னணியில் நின்றனர். மக்களிடையே தேசிய உணர்வைத் தட்டி யெழுப்பினர். திலகர் 'கேசரி' (சிங்கம்) என்ற பத்திரிகையை நடத்தி மக்களை எழுச்சியுறச் செய்தார். 'சுதந்திரம் என் பிறப்புரிமை, அதை நான் பெற்றே தீருவேன்,' என்று அவர் முழங்கினுர். தமிழ்நாட்டில் வ.உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய பாரதியார் முதலானுேர் திலகரின் அரசியல் கருத்துகளுக்கு ஆதரவு தந்தனர்.

**வங்கப் பிரிவினை (1905)**

வங்க மாநிலம் மிகப்பெரியதாக உள்ளதெனக் கருதி நிர்வாக வசதிக்காக அதைக் கர்சன் பிரபு இரண்டாகப் பிரித்தார். ஆனுல், அவருடைய உண்மையான நோக்கம் இந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரித்து அவர்களுக்கிடையே பிளவை ஏற்படுத்த வேண்டும் என்பதே ஆகும். இந்த வங்கப் பிரிவினை வங்காளிகளின் தேசியக் கனலைக் கொழுந்துவிட்டு எரியச் செய்தது.[1] கொதித்தெழுந்த அவர்கள் 'சுதேசி இயக்கத்தை'த் தொடங்கினர். 'வந்தே மாதரம்' என்ற முழக்கம் எங்கும் ஒலித்தது.[2] அவர்கள் அயல்நாட்டுப் பொருள்களைப் புறக்கணித்தனர். ஆங்கிலேயர்களைத் தாக்கினர். கடையடைப்புகளைச் செய்தும், கூட்டங்களைப் போட்டும், வன்மையாகப் பேசியும் தங்கள் எதிர்ப்பினை அரசுக்கு உணர்த்தினர். அரசு இந்த எழுச்சியைக் கொடுமையான முறையில் ஒடுக்கியது. வங்கப்பிரிவினை எதிர்ப்பு இயக்கம் விடுதலை இயக்கத்தின் முக்கியமான கட்டமாகும்.

**முஸ்லிம் லீக் நிறுவப்படுதல் (1906)**

'பிரித்து ஆளு' (Divide and Rule) என்ற கொள்கையைப் பின்பற்றிய ஆங்கில அரசு, காங்கிரசுக்கு ஒரு வலுவான எதிர்ப்பு அணியை உருவாக்கத் திட்டமிட்டது. அப்பொழுது டாக்கா நகரத்தைச் சேர்ந்த நவாப் சலிமுல்லா மற்றும் அவருடைய

[1] 1911ஆம் ஆண்டு ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இந்தியாவுக்கு வந்தபோது வங்காளம் மீண்டும் இணைக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டது. அதே ஆண்டு தலைநகரமும் கல்கத்தாவிலிருந்து புதுடெல்லிக்கு மாற்றப்பட்து.

[2] 'வந்தே மாதரம்' என்ற சொற்றொடருக்குத் 'தாய்நாட்டை வணங்குவோம்' என்று பொருளாகும்,

நண்பர்கள் 1906ஆம் ஆண்டு டாக்கா நகரத்தில் முஸ்லிம் லீகைத் (Muslim League) தொடங்கினார்கள், அப்பொழுது வைஸ்ராயாக இருந்த மின்டோ பிரபு லீகின் வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்தை யும் செய்தார். காங்கிரசுக்கு ஒத்துவராத கொள்கைகளை லீக் பின்பற்றத் தொடங்கியது.

## சூரத் மாநாடு (1907)

காங்கிரஸ் கட்சியின் ஆண்டு மாநாடு 1907ஆம் ஆண்டு சூரத்தில் நடைபெற்றது. அம் மாநாட்டில் தீவிரவாதிகளுக்கும் (Extremists) மிதவாதிகளுக்கும் (Moderates) இடையே கடுமை யான அரசியல் கருத்துவேறுபாடுகள் தோன்றின. திலகர், லாலா லஜ்பத்ராய், சுப்பிரமணிய பாரதியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை முதலானோர் தீவிரவாதிகள் ஆவர். கோபால கிருஷ்ண கோகலே மிதவாதிகளின் தலைவர் ஆவார். சுதந்திரம் பெறப் போராடுவதே காங்கிரஸ் கட்சியின் நோக்கம் எனத் தீவிரவாதிகள் கூறினர். அதை மிதவாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நிலையில், காங்கிரசில் ஏற்பட்ட பிளவைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, 'கேசரி' என்ற பத்திரிகையில் மக்களைத் தூண்டுகின்ற முறையில் அரசாங்கத்திற்கு எதிரான கட்டுரையைத் திலகர் எழுதினார் எனக் குற்றம் சாட்டி, அவரை ஆங்கில அரசு கைது செய்து, ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துப் பர்மாவுக்கு அனுப்பிவிட்டது. அதேபோல லஜ்பத் ராயைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து பர்மாவுக்கு அனுப்பியது.

## மின்டோ-மார்லி சீர்த்திருத்தங்கள் (1909)

காங்கிரசில் பிளவு ஏற்பட்டிருந்ததால் மிதவாதிகளைத் தன்பால் இழுக்க அரசு முயன்றது. அதே நேரத்தில் முஸ்லிம் களுக்கும் சில சலுகைகளை அரசு கொடுக்க விரும்பியது. அதன் விளைவாக மின்டோ-மார்லி சீர்த்திருத்தங்கள் (Minto-Morley Reforms) அறிவிக்கப்பட்டன. அதன்படி மத்திய, மாநிலச் சட்ட மன்றங்களில் அதிகமான பிரதிநிதித்துவம் இந்தியர்களுக்குக் கொடுக்கப்பட்டது. முஸ்லிம்களுக்குத் 'தனித் தொகுதிகள்' கொடுக்கப்பட்டன. முஸ்லிம்கள் மகிழ்ந்தனர்; மிதவாதிகள் பாராட்டினர்; ஆனால், தீவிரவாதிகள் பல குறைகளைச் சுட்டிக் காட்டினர்.

## முதல் உலகப் போர் (1914-18)

முதல் உலகப் போரில் இங்கிலாந்துக்கு ஆதரவாக இருந்து பொருளையும் படையையும் அந் நாட்டுக்குக் கொடுத்து இந்தியா

உதவியது. பன்னிரண்டு லட்சம் இந்திய வீரர்கள் கடல்கடந்து சென்று இங்கிலாந்துக்கு ஆதரவாகப் போரிட்டார்கள். அவர்களில் ஒரு லட்சம் வீரர்கள் போரில் உயிரிழந்தார்கள். இந்திய சுதேச அரசர்களும் தங்கள் முழு ஒத்துழைப்பை ஆங்கில அரசுக்குக் கொடுத்தனர். முதல் உலகப்போர் நடைபெற்றுக்கொண்டிருந்த போது இந்தியாவில் சில முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

1916ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சிக்கும் முஸ்லிம் லீகுக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அந்த ஆண்டு லக்னோவில் நடைபெற்ற தனித்தனி மாநாடுகளில் காங்கிரஸ் முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதிகள் கொடுப்பதை ஏற்றுக்கொண்டது. காங்கிரஸ் சுதந்திரம் பெறப் போராடும் கொள்கையை முஸ்லிம் லீக் ஏற்றுக் கொண்டது. இங்ஙனம் இரு கட்சிகளுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. இது 'லக்னோ ஒப்பந்தம்' (Lucknow Pact) என்று அழைக்கப்பட்டது.

அதே ஆண்டு (1916) திலகரும், அன்னி பெசன்ட் அம்மையாரும் 'சுய ஆட்சி' (Home Rule) இயக்கத்தைத் தொடங்கி மக்களின் நாட்டுப்பற்றைத் தூண்டினர். வட இந்தியாவில் திலகர் இந்த இயக்கத்தைத் தீவிரமாக நடத்தினர். சென்னை மாநிலத்தில் அன்னிபெசன்ட் அம்மையார் 'சுய ஆட்சி' இயக்கத்தைச் சிறப்பான முறையில் நடத்தினர். முதலில் உதக மண்டலத்திலும் பின்னர்க் கோயம்புத்தூரிலும் அந்த அம்மையார் தங்கியிருந்தார். 'புதிய இந்தியா' (New India) என்ற தம் பத்திரிகையில் நாட்டுப்பற்றைத் தூண்டிய எழுச்சி மிக்க கட்டுரைகளை அவர் எழுதிவந்தார். அது போன்ற பணியை 'இந்து' (The Hindu), 'சுதேசமித்திரன்' போன்ற பத்திரிகைகளும் செய்துவந்தன.

**காந்தியடிகளின் தலைமையில் விடுதலை இயக்கம் (1919—1947)**

1915ஆம் ஆண்டு காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வந்து இங்கேயே தங்கிவிட்டார். அது முதல் அவர் இந்திய அரசியலில் தீவிரப் பங்குகொள்ளத் தொடங்கினர். முதல் உலகப் போருக்குப்பின் இந்திய விடுதலை இயக்கம் காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்றது. மிதவாதியான கோபாலகிருஷ்ண கோகலேயிடம் காந்தியடிகள் அரசியல் பாடம் கற்றார். அந்தக் கோகலே 1915ஆம் ஆண்டு மறைந்தார். 'இந்தியாவின் முதுபெரும் மனிதரான' தாதாபாய் நௌரோஜி 1917ஆம் ஆண்டு இயற்கை எய்தினர். தீவிரவாதியான திலகர் 1920-ல் இறந்தார். இந்த நிலையில் இந்தியமக்கள் காந்தியடிகளை விடுதலை இயக்கத்தின் தலைவராக ஏற்றுக்கொண்டனர். அதே நேரத்தில் மோதிலால் நேரு, C. R. தாஸ் முதலானவர்களும் காங்கிரசில் முக்கியமான தலைவர்களாக விளங்கினர்கள்.

### ரௌலட் சட்டம் (ஜனவரி, 1919)

இந்தியாவில் நடைபெற்றுவந்த தேசிய இயக்கத்தை நசுக்குவதற்காக 1918ஆம் ஆண்டின் இறுதியில் ரௌலட் சட்டத்தை அரசு இயற்றியது. இச் சட்டத்தை இயற்றிய குழுவின் தலைவர் ரௌலட் (Rowlatt) என்பவராவர். அதனால் இச்சட்டம் அவர் பெயரால் அழைக்கப்பட்டது. இச் சட்டம் காரணமின்றி யாரை வேண்டுமானாலும் கைது செய்யவும் விசாரணையின்றிச் சிறையிடவும் அரசுக்கு அதிகாரம் வழங்கியது. இச் சட்டத்தை காந்தியடிகள் கடுமையாக எதிர்த்தார். மக்களின் எதிர்ப்பை அரசுக்குத் தெரிவிப்பதற்காக அமைதியான 'சத்யாக்ரக' (Satyagraha) முறை எதிர்ப்பை மேற்கொள்ள வேண்டுமெனக் காந்தியடிகள் மக்களைக் கேட்டுக்கொண்டார். அதற்கேற்ப 1919ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பல்வேறு இடங்களில் எதிர்ப்புக் கூட்டங்களும், கிளர்ச்சிகளும், கடையடைப்புகளும் நடைபெற்றன. அவை அனைத்தும் அமைதியான முறையிலேயே நடைபெற்றன. எனினும் அவ்வியக்கத்தை அடக்கக் கடுமையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது.

### ஜாலியன்வாலா பாக் படுகொலை[1] (ஏப்ரல், 1919)

முதல் உலகப் போர் நிதி (War Fund) திரட்டுவதில் முறைகேடுகள் இருந்தன என்பதைக் கண்டிக்கவும், ரௌலட் சட்டத்தை எதிர்க்கவும் காங்கிரஸ் தலைவர்களும் ஊழியர்களும் ஜாலியன் வாலா பாக் (Jalianwalla Bagh) என்னுமிடத்தில் கூடினர். முன்னறிவிப்பு எதுவுமின்றி ஜெனரல் டயர் (General Dyer) மற்றும் அவருடைய வீரர்கள் கூட்டத்தைச் சூழ்ந்துகொண்டு கருணையின்றிச் சுட்டுத் தள்ளினர். அவர்கள் 1600 முறை சுட்டதன் விளைவாக 379 பேர் கொல்லப்பட்டனர். 1200 பேர் காயமடைந்தனர் என்று அரசே அறிக்கை வெளியிட்டது. இந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்ட இந்தியர் கொதித்தெழுந்தனர்; ஆங்கில அரசுக்கு எதிராக எதையும் செய்ய ஆயத்தமாக இருந்தனர்.

### மான்டேகு-செம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தங்கள் (டிசம்பர், 1919)

முதல் உலகப் போரில் இங்கிலாந்துக்கு ஆதரவாக இந்தியா எல்லா உதவிகளையும் செய்தது. அதைப் பாராட்டுகின்ற முறையில்,: இந்தியர்களுக்கு ஆட்சித்துறையில் பல வாய்ப்புகளைத் தருவதற்காக ஆங்கிலப் பாராளுமன்றம் இந்திய அரசாங்கத்தை

[1] இந்த இடம் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அமிர்தசரஸ் என்னும் நகரில் உள்ளது. எனவே இது 'பஞ்சாப் படுகொலை', 'அமிர்தசரஸ் படுகொலை' என்றும் கூட அழைக்கப்படுகிறது.

(Government of India Act, 1919) இயற்றியது. அப்பொழுது இங்கிலாந்தில், இந்திய விவகாரங்களைக் கவனிக்கும் அமைச்சராக மான்டேகுவும் (Montagu) இந்தியாவில் வைஸ்ராயாகச் செம்ஸ்ஃபோர்டும் (Chelmsford) இருந்தனர். அவர்களின் நன் முயற்சியினால் இச் சட்டம் நிறைவேற்றப்பெற்றது. எனவே, இந்தச் சட்டம் மான்டேகு-செம்ஸ்ஃபோர்ட் சீர்த்திருத்தங்கள் என்று அழைக்கப்பட்டது. அவற்றின்படி மத்திய அரசின் துறைகள் எவையென்றும், மாநில அரசின் துறைகள் எவையென்றும் வரையறுக்கப்பட்டன. மத்திய அரசில் இரு சபைகளைக்கொண்ட சட்ட மன்றம் அமைக்கப்பட்டது. மாநிலங்களில் இரட்டை ஆட்சி (Dyarchy) கொண்டுவரப்பட்டது, சீக்கியர்கள், ஐரோப்பியர் மற்றும் இந்தியக் கிறித்துவர்களுக்குத் தனித்தொகுதிகள் தரப்பட்டன. எனினும் இச் சீர்திருத்தங்களை எல்லாத் தரத்தினரும் குறைகூறினர்.

### கிலாஃபத் இயக்கம் (1920)

முதல் உலகப் போரில் துருக்கி இங்கிலாந்துக்கு எதிராக ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டு போரிட்டது. போருக்குப் பின்னர் இங்கிலாந்து துருக்கியை மிக மோசமான முறையில் நடத்தியது. அதைக் கண்டிப்பதற்காக இந்திய முஸ்லிம்கள் கிலாஃபத் (Khilafat) இயக்கத்தை நடத்தினர்கள். அந்த இயக்கத்திற்குக் காந்தியடிகள் தம் முழு ஆதரவை நல்கினர். அதனல் காங்கிரஸ் நடத்திய விடுதலை இயக்கத்திற்கு முஸ்லிம்கள் தங்கள் ஒத்துழைப்பைக் கொடுத்தனர்.

### ஒத்துழையாமை இயக்கம் (1920-22)

1919ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகள், ஆங்கில அரசு இந்திய விடுதலை இயக்கத்தை ஒடுக்கத் திட்டமிட்டுள்ளது என்பதை நிரூபித்தன. எனவே, அமைதியான முறையில் 'ஒத்துழையாமை இயக்கத்தை' (Non Co-operation Movement) நடத்தி ஆங்கில அரசை அடிபணியவைக்கக் காந்தியடிகள் எண்ணினர். 1920ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற நாகபுரிக் காங்கிரஸ் மாநாட்டில் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நாடு முழுவதும் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கியது.[1]

[1] இந்த இயக்கம் தொடங்குவதற்கு முன்னர் 1920ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஒரு முறையும், தொடங்கிய பின்னர் 1921ஆம் ஆண்டு இரண்டு முறையும் காந்தியடிகள் சென்னை மாநிலத்திற்கு வந்திருந்தார்; சென்னை நகரத்திலும் மற்ற முக்கிய நகரங்களிலும் உரையாற்றினர்.

இந்தியர் ஆங்கில அரசு கொடுத்த பட்டங்களைத் துறந்தனர். அரசு விழாக்களில் கலந்துகொள்ள மறுத்தனர். வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்லவில்லை. அனைவரும் ஆங்கிலப் பொருள்களைப் புறக்கணித்தனர். தேர்தல்களில் எவரும் கலந்துகொள்ளவில்லை. மாணவர்கள், ஐரோப்பியப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் செல்லவில்லை. 1921ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வேல்ஸ் இளவரசர் (Prince of Wales) பம்பாய் நகரத்திற்கு வந்தபோது அவருக்கு எதிரான பெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இவ்வியக்கத்தில் இந்துக்களும் முஸ்லிம்களும் பங்குகொண்டனர். ஆங்கில அரசு மிகக் கொடுமையான முறையில் இந்த இயக்கத்தை ஒடுக்க முயன்றது. அரசு, இருபத்தையாயிரத்திற்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது. சிறையில் அவர்கள் சொல்ல முடியாத துன்பத்தை அனுபவித்தார்கள்.

1922ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் உத்தரப் பிரதேசத்தில் உள்ள சௌரி சௌரா (Chauri Chaura) என்னுமிடத்தில், காவலர்களின் அட்டூழியங்களைக் கண்டு ஆத்திரப்பட்ட மூவாயிரத்திற்கும் மேற்பட்ட கூட்டம், காவல் நிலையத்தைத் தாக்கி அதற்குத் தீயிட்டது. அதிலிருந்த இருபத்தோரு காவலரும் ஒரு காவல் துணை ஆய்வாளரும் தீயில் மாண்டனர். இதைப்பற்றி அறிந்த காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை உடனே நிறுத்தும்படி மக்களை வேண்டிக்கொண்டார். இயக்கம் நிறுத்தப்பட்டது. எனினும் காந்தியடிகள் கைது செய்யப்பட்டு ஆறு ஆண்டுச் சிறைத் தண்டனை பெற்றார். ஆயினும் 1924-ல் விடுவிக்கப்பட்டார்.

அப்பொழுது மோதிலால் நேரு, C. R. தாஸ், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் முதலானோர் காந்தியடிகளின் தலைமையைக் குறை கூறினார்கள். மோதிலால் நேருவும், C. R. தாசும் 'சுயராஜ் கட்சி'யை (Swaraj Party) 1923ஆம் ஆண்டு தொடங்கினார்கள். அவர்கள் சட்டமன்றத்திற்குச் சென்று 1919ஆம் ஆண்டுச் சீர்திருத்தங்களை முறியடிக்க எண்ணினார்கள். இக் கட்சியினர் அந்த ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி பெற்று, சட்டமன்றங்களுக்குச் சென்றனர். எனினும், அவர்கள் முழுமையான வெற்றியைப் பெறவில்லை. 1926ஆம் ஆண்டில், அதை நிறுவிய தலைவர்கள் இறந்த பின்னர், சுயராஜ் கட்சி மறைந்தது.

**சைமன் கமிஷன் (1927-28)**

இர்வின் பிரபு இந்தியாவில் வைஸ்ராயாக இருந்தபோது, 1927ஆம் ஆண்டு, இங்கிலாந்து அரசு சைமன் கமிஷனை அனுப்

பியது. மான்டேகு-செம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தங்களுக்குப் பின் இந்திய அரசு எங்ஙனம் செயல்படுகின்றது என்பதை ஆய்ந்தறிந்து அரசுக்கு அறிக்கை தர அந்தக் கமிஷன் இந்தியாவிற்கு வந்தது (1928). அதில் அனைவரும் (ஏழு பேர்) ஆங்கிலேயரே உறுப்பினர்களாக இருந்தனர்.[1] எனவே, கமிஷன் சென்றவிடமெல்லாம் இந்துக்களும் முஸ்லிம்களும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். எனினும், கமிஷன் தன் அறிக்கையை 1930ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசிடம் ஒப்புவித்தது. இதுவே, பின்னர் 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

## லாகூர் மாநாட்டுத் தீர்மானம் (1929)

ஜவஹர்லால் நேருவின் தலைமையில், 1929ஆம் ஆண்டு, லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாடு 'இந்தியா முழுச் சுதந்திரம் அடைவதற்குப் போராடுவதே காங்கிரசின் நோக்கம்', என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. அதற்காக எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கக் காங்கிரஸ் திட்டமிட்டது. காங்கிரஸ் கட்சியின் வரலாற்றில் இந்த லாகூர் மாநாட்டுத் தீர்மானம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.[2] அதே மாநாடு அரசாங்கத்தை எதிர்த்துச் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்துவதற்கான நடவடிக்கையையும் மேற்கொண்டது. எனவேதான் காந்தியடிகள் உப்புச் சத்தியாக்கிரகத்தை நடத்தினர்.

## உப்புச் சத்தியாக்ரகம்—தண்டிப்பேரணி (1930)

சாதாரண ஏழை எளிய மக்கள் உட்பட அனைவரும் பயன்படுத்தும் உணவுப் பொருள் உப்பு ஆகும். அந்த உப்பை உற்பத்தி செய்யும் முறைகளைக் கட்டுப்படுத்த இந்திய அரசு பல சட்டங்களை இயற்றியிருந்தது. அவற்றை எதிர்ப்பதற்காகக் காந்தியடிகள் உப்புச் சத்யாக்ரகத்தை மேற்கொண்டார். அகமதாபாத்தில் உள்ள சபர்மதி ஆசிரமத்திலிருந்து கடற்கரையில் உள்ள தண்டிக்குச் செல்ல ஒரு பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது.

[1] It was an 'all white' Commission.

[2] இத் தீர்மானத்தை அடுத்து 1930ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் தேதி இந்திய 'சுதந்திர நாளாகக் கொண்டாடப்பட்டது. ஜனவரி 26ஆம் தேதி ஒவ்வோராண்டும் சுதந்திர நாளாகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்திய விடுதலை இயக்கத்தில் இந்தத் தேதி வரலாற்றுச் சிறப்புப் பெற்றது. ஆனால் ஆங்கில அரசு ஆகஸ்ட் 15ஆம் தேதி நமக்குச் சுதந்திரத்தைக் கொடுத்தது. ஜனவரி 26ஆம் தேதியை நாம் சிறப்பித்து, நினைவுகூர்கின்ற முறையில் நம்முடைய குடியரசு நாளாக' ஏற்றுக்கொண்டுள்ளோம். 1950ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் தேதிதான் நம்முடைய அரசியலமைப்பு (Constitution). நடைமுறைக்கு வந்தது.

எழுபத்து எட்டுத் தொண்டர்களுடன் 'தண்டிப் பேரணி'யை (Dundi March) காந்தியடிகள் நடத்திச்சென்று, தண்டியில் உப்பைக் காய்ச்சி உப்புச் சட்டங்களை மீறினர் (ஏப்ரல், 1930). நாடு முழுவதும் இத்தகைய உப்புச் சத்யாக்ரகங்கள் நடைபெற்றன.

சென்னை மாநிலத்தில் ராஜாஜி தலைமையில் மொத்தம் நூறு தொண்டர்கள் திருச்சியிலிருந்து தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள வேதாரணியம் என்ற இடத்திற்குச் சென்று உப்பைக் காய்ச்சி உப்புச் சட்டங்களை மீறினர். சென்னை மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் இந்த இயக்கம் வெற்றிகரமாக நடைபெற்றது. அரசுக்கெதிரான எதிர்ப்புக் கூட்டங்கள், ஊர்வலங்கள், கடையடைப்புகள் முதலானவை எல்லா மாவட்டங்களிலும் நடைபெற்றன. இந்திய அரசு அறுபதாயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. நூற்று மூன்றுபேரைச் சுட்டுக் கொன்றது. நானூற்றுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். இந்த இயக்கத்தை ஒடுக்க அரசு மிகக் கொடுமையான முறைகளைக் கையாண்டது. உப்புச் சத்யாக்ரகம், சட்ட மறுப்பு இயக்கம் (Civil Disobedience Movement) என்றும் அழைக்கப்படுகிறது.

### வட்டமேசை மாநாடுகள் (1930-32)

சைமன் கமிஷனின் அறிக்கையை விவாதிக்கவும், இந்திய அரசாங்கத்தில் செய்யப்படவேண்டிய மாறுதல்கள் பற்றியும் விவாதிக்க 1930ஆம் ஆண்டு முதல் வட்டமேசை மாநாடு இலண்டனில் கூடியது. ஆனால், காங்கிரஸ் இதில் கலந்துகொள்ளவில்லை. 1931ஆம் ஆண்டு ஏற்பட்ட காந்தி-இர்வின் ஒப்பந்தப்படி காந்தியடிகள் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ள இசைந்தார். அந்த ஆண்டு கூடிய இரண்டாவது வட்டமேசை மாநாட்டிற்குக் காங்கிரசின் சார்பில் காந்தியடிகளும், முஸ்லிம் லீகின் சார்பில் முகமது அலி ஜின்னாவும் சென்று பங்கு கொண்டனர். ஜின்னாவின் பிடிவாதப் பேச்சுகளால் இம் மாநாடு தோல்வியுற்றது. 1932-ல் நடைபெற்ற மூன்றாவது மாநாட்டில் காங்கிரஸ் கலந்துகொள்ளவில்லை. எனினும் மாநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் இயற்றப்பட்டது.

### பயங்கர அடக்குமுறை ஆட்சி (1931)

இரண்டாவது வட்டமேசை மாநாடு தோல்வியடைந்ததால் காந்தியடிகள் உடனே தாயகம் திரும்பினர். அவர் இந்தியாவில்

வந்து இறங்கியவுடன், புதிய வைஸ்ராய் வெல்லிங்டன் பிரபு காந்தியடிகளைக் கைது செய்தார். மேலும், நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான காங்கிரஸ் தலைவர்களும் எழுபதாயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்களும் காரணமின்றிக் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர். இந்த நேரத்தில் இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் ராம்சே மாக்டொனல்ட் 'வகுப்புவாரித் திட்டத்தை' (Communal Award) 1932-ல் அறிவித்தார். இதைக் காந்தியடிகள் எதிர்த்து உண்ணாவிரதம் இருந்தார். ஆனால், டாக்டர் அம்பேத்கார் இதை ஏற்றுக்கொண்டார். காந்தியடிகள் விடுதலை செய்யப்பட்டார். ஓரளவு அமைதி நிலவியது.

### 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டமும் காங்கிரஸ் அமைச்சரவைகளும்

1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் 1937ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. அதன்படி மாநிலங்களுக்குச் 'சுய ஆட்சி' வழங்கப்பட்டது. இந்தியா ஒரு கூட்டாட்சியாக (Federation) அமைக்கப்பட்டது. மத்திய அரசில் இரட்டை ஆட்சி கொண்டுவரப்பட்டது.

இந்த அமைப்பை ஏற்றுக்கொண்ட காங்கிரஸ் 1937ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் போட்டியிட்டது. தேர்தல்களில் காங்கிரஸ் பெரும் வெற்றிபெற்றது. பதினொரு மாநிலங்களில் எட்டில் காங்கிரஸ் அமைச்சரவைகளை அமைத்தது. சென்னை மாநிலத்தில் ராஜாஜியின் தலைமையில் அந்த ஆண்டு ஜூலை மாதம் காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தது.

காங்கிரசின் கொள்கைகளை முஸ்லிம் லீகின் தலைவர் முகமது அலி ஜின்னு ஏற்றுக்கொள்ளாததால் முஸ்லிம் லீகினரை அமைச்சரவைகளில் சேர்த்துக்கொள்ளக் காங்கிரஸ் மறுத்துவிட்டது. அதனால் காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகுக்குமிடையே கருத்துவேறுபாடுகள் அதிகரித்தன.

### இரண்டாவது உலகப்போரும் அமைச்சரவைகள் பதவி துறத்தலும்

1939ஆம் ஆண்டு இரண்டாவது உலகப் போர் தொடங்கியது. இந்தியத் தலைவர்களுடன் கலந்தாலோசிக்காமல், அவர்களின் ஒப்புதலைப் பெறாமல் இங்கிலாந்து இந்தியாவைப் போரில் ஈடுபடுத்தியது. இங்கிலாந்தின் செயலைக் கண்டிக்கின்ற முறையில் 1939-ல் காங்கிரஸ் அமைச்சரவைகள் அனைத்தும் பதவி துறந்தன. இந்தியாவிற்கு முழுச் சுதந்திரம் வேண்டும் எனக் காங்கிரஸ் குரலெழுப்பியது.

காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி துறந்ததுபற்றி ஜின்னு பெருமகிழ்ச்சி கொண்டார். முஸ்லிம்கள் அந்த நாளை 'விடுதலை நாளாக'க் (Day of Deliverance) கொண்டாடினுர்கள். 1940ஆம் ஆண்டு லாகூரில் முஸ்லிம் லீக் மாநாடு நடைபெற்றது. அதில் முஸ்லிம்கள் தனி இனத்தினர் என்றும் அவர்களுக்குப் பாகிஸ்தான் என்ற தனி நாடு வேண்டும் என்றும் ஜின்னு கோரினுர்.

### கிரிப்ஸ் திட்டம் (மார்ச், 1942)

இரண்டாவது உலகப்போர் நடைபெற்றுக்கொண்டிருந்த போதே இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill), கிரிப்ஸ் தூதுக்குழுவை (Cripps Mission) அனுப்பினுர். அக் குழு இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்தைத் (Dominion Status) தர முன்வந்தது. ஆனுல், அதைக் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. காந்தியடிகள் அந்தத் திட்டத்தை 'வீழ்ச்சியுறும் வங்கிக்குக் கொடுக்கப்பட்ட பின் தேதியிட்ட காசோலை' (Post-dated cheque on a crashing bank) என வருணித்தார். முழுச் சுதந்திரத்தைத் தவிர, வேறு எந்தத் திட்டத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது எனக் காங்கிரஸ் கூறியது.

### வெள்ளையனே வெளியேறு இயக்கம் (ஆகஸ்ட், 1942)

கிரிப்ஸ் திட்டம் தோல்வியடைந்தது. ஜப்பான் இந்தியாவின் கிழக்கே வெற்றிகளைக் குவித்துக்கொண்டே வந்தது. இந்தியாவையும் அது கைப்பற்றிவிடும் என்ற நிலை ஏற்பட்டது. எனவே, இந்தியா விடுதலை பெற்றே தீரவேண்டும் எனக் காங்கிரஸ் கருதியது. 1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பம்பாயில் கூடிய காங்கிரஸ் மாநாடு 'வெள்ளையனே வெளியேறு' (Quit India) இயக்கத்தைக் காந்தியடிகளின் தலைமையில் நடத்தவேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றியது. தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மறுநாளே காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்த காங்கிரஸ் தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள். இந்த இயக்கத்தை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடலாம் என்று அரசு கனவு கண்டது.

அரசின் கொடுமையான நடவடிக்கைகளைக் கண்டு இந்தியர்கள் வெகுண்டெழுந்தார்கள். 'வெள்ளையனே வெளியேறு' என்ற முழக்கம் விண்ணதிர நாடு முழுவதும் எழுப்பப்பட்டது. நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் மிகத் தீவிரமாக இந்த இயக்கம் நடைபெற்றது. ஐந்நூறுக்கும் மேற்பட்ட இடங்களில் போலீசும் இராணுவமும் மக்கள்மீது சுட்டன. ஆயிரக்கணக்கான இந்தியர்கள் சிறையிலிடப்பட்டனர். அரசு மேற்கொண்ட

கொடிய முறைகளைக் கண்டிக்கச் சிறையிலிருந்த காந்தியடிகள் தள்ளாத தனது 73ஆம் வயதில் மூன்று வார உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

முஸ்லிம் லீக் இந்த இயக்கத்தில் கலந்துகொள்ளவில்லை. காங்கிரஸ் 'வெள்ளையனே வெளியேறு' என்று கூறியபோது, 'பிரித்துவிட்டு வெளியேறு' (Divide and Quit) என்று முஸ்லிம் லீக் கூறியது.

### வேவல் பிரபுவின் முயற்சிகள் (1943-47)

வேவல் (Lord Wavell), *1943*-ல் வைஸ்ராய் ஆனார். அவர் காந்தியடிகளை விடுவித்து காந்தி—ஜின்னா சந்திப்பை ஏற்பாடு செய்தார். ஜின்னா பாகிஸ்தான் என்ற தனிநாட்டுக் கொள்கையில் பிடிவாதமாக இருந்ததால் சந்திப்புத் தோல்வியடைந்தது.

*1945*ஆம் ஆண்டு காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் சேர்ந்து 'இடைக்கால அரசு' (Interim Government) அமைக்கவேண்டு மென்ற திட்டத்தை வேவல் வெளியிட்டார். ஆனால், ஜின்னாவின் பிடிவாதப் போக்கால் அத்தகைய அரசு அமைக்கப்படவில்லை.

அதே ஆண்டு (*1945*) இங்கிலாந்தில் தொழிற் கட்சி தேர்தல் களில் வெற்றிபெற்று அட்லியின் (Attlee) தலைமையில் அமைச்சரவையை அமைத்தது. அட்லி பரந்த நோக்கமும் இந்தி யாவின்பால் அன்பும் பாசமும் கொண்டவர். அவர் *1946*ஆம் ஆண்டு மார்ச் மாதம், இந்திய அரசியல் அமைப்பை நிர்ணயிக்க 'அமைச்சரவைத் தூதுக்குழு'வை (Cabinet Mission) அனுப்பினார். அது ஒரு திட்டத்தை வெளியிட்டது. அதன்படி வேவல் செயல்பட விரும்பினார்.

*1946*ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மத்திய சட்டமன்றத் திற்கு நடைபெற்ற தேர்தல்களில் காங்கிரஸ் பெரும் வெற்றி பெற்றது. அதைத் தொடர்ந்து நாட்டின் பல இடங்களில் குறிப்பாக பீகாரிலும் வங்காளத்திலும் இந்து-முஸ்லிம் கலவரங் கள் நடைபெற்றன. இவற்றைக் கண்டு காந்தியடிகள் மன வேதனைப்பட்டார். கலவரங்கள் நடந்த இடங்களுக்கு அவர் சென்று இந்துக்களும் முஸ்லீம்களும் சகோதரர்கள்போல் வாழ வேண்டுமென வேண்டிக்கொண்டார்.

*1946*ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வேவல் பிரபுவின் வேண்டுகோளின்படி ஜவஹர்லால் நேரு 'இடைக்கால அரசை' அமைத்தார். லீக் இதில் சேர்ந்ததென்றாலும் மற்றக் காங்கிரஸ்

அமைச்சர்களுடன் ஒத்துழைக்கவில்லை. எனினும், அரசு மிகத் திறமையாகச் செயல்பட்டது.

1947ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தலைமை அமைச்சர் அட்லி, 1948ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுக்கப் போவதாக அறிவித்தார். காங்கிரஸ் இதை மகிழ்ச்சியுடம் வரவேற்றது.

ஆனால், ஜின்னா தனது 'தனி நாடு' கோரிக்கையை இங்கிலாந்து அரசு ஏற்றுக்கொள்ளாது என அஞ்சினார். எனவே, மீண்டும் முஸ்லீம்கள் 'நேரடி நடவடிக்கை'யில் (Direct Action) ஈடுபட்டுக் கலவரங்களை உண்டுபண்ணினார்கள். நாடு முழுவதும் குறிப்பாகப் பஞ்சாபில், பயங்கரமான இனக் கலவரங்கள் நடைபெற்றன.

**மவுண்ட்பாட்டன் திட்டமும் இந்தியா விடுதலை பெறுதலும்**

1947ஆம் ஆண்டு மார்ச் மாதம் மவுண்ட்பாட்டன் பிரபு (Lord Mountbatten) இந்தியாவின் வைஸ்ராய் ஆனார். இந்து முஸ்லிம் கலவரங்களைக் கண்ட அவர் முஸ்லிம்களுக்குத் தனி நாடு கொடுக்கத் தீர்மானித்தார். இங்கிலாந்துக்குச் சென்று அரசுக்குத் தன் கருத்தை எடுத்துக்கூறினார். தலைமை அமைச்சர் அட்லி மவுண்ட்பாட்டனின் திட்டத்தை ஏற்றுக்கொண்டார்.

இந்தியாவிற்குத் திரும்பிய மவுண்ட்பாட்டன் ஜூன் மாதம் மூன்றும் தேதி வானொலியில் பேசி இந்தியாவை இரு நாடுகளாகப் பிரித்துச் சுதந்திரம் வழங்கப்போவதாக அறிவித்தார். முஸ்லிம் லீக் அதைக் கேட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்தது. காங்கிரஸ் வேறு வழியின்றி நாட்டுப் பிரிவினையை ஏற்றுக்கொண்டது.

1947ஆம் ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆங்கிலப் பாராளு மன்றம் இந்திய சுதந்திரச் சட்டத்தை இயற்றியது. அதற்கேற்ப 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி இந்தியா பாகிஸ்தான் என்ற இரு சுதந்திர நாடுகள் உதயமாயின.

# 27. உலக அமைதிக்கு இந்தியாவின் பணி

அகிம்சா மூர்த்திகளான புத்தர், மகாவீரர், காந்தியடிகள் முதலானவர் பிறந்த நம் பாரதநாடு, நீண்ட காலமாகவே அமைதியை விரும்பிய நாடாக இருந்துவந்துள்ளது. இருபதாம் நூற்றுண்டில் உலக அமைதியைக் கெடுக்கும் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன, நடைபெற்றுவருகின்றன. எனவே, நாடுகளிடையே நல்லுறவை ஏற்படுத்தி, அமைதியைக் காக்கத் தன்னுல் இயன்ற பணியை இந்தியா செய்து வருகின்றது.

விடுதலை பெற்ற இந்தியா பின்பற்றிவரும் உலக அமைதிப் பணி, விடுதலை பெறுவதற்கு முன்னரே நம் விடுதலை இயக்கத் தலைவர்களால் உருவாக்கப்பட்டதாகும். 'இந்திய நாட்டு மக்கள் அண்டை நாடுகளுடனும் மற்ற நாடுகளுடனும் சமாதான மாகவும் நட்புறவுடனும் வாழ விரும்புகின்றுர்கள். அதனுல் இந்த நாடுகளுக்கிடையே உள்ள கருத்து வேறுபாடுகளைக் களைய இந்தியா விரும்புகின்றது. நிரந்தர அமைதி உலக நாடுகளிடையே ஏற்பட வேண்டுமென்றுல் ஏகாதிபத்தியமும், மக்களை மக்கள் சுரண்டுவதும் ஒழியவேண்டும்' என்று இரண்டாம் உலகப் போர் தொடங்குவதற்கு முன் 1938ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியது. அந்த அடிப்படையில் தான் விடுதலை இந்தியாவும் உலக அமைதி காக்கும் பணியைச் செய்ய முயன்று வருகின்றது.

இந்தியாவின் உலக அமைதிப் பணிக்கு உயிரூட்டியவர் விடுதலை பெற்ற இந்தியாவின் முதன் தலைமை அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு (1947-64) ஆவார். இந்தியா விடுதலை பெற்ற போது உலக நாடுகள் இரண்டு பகைமை அணிகளாகப் பிரிந்திருந்தன. ஐக்கிய அமெரிக்காவும் அதை ஆதரித்த இங்கிலாந்து, ஃபிரான்ஸ், மேற்கு ஐரோப்பிய நாடுகள், கனடா முதலான தனிவுடைமைப் பொருளாதார அமைப்பில் இயங்கிய நாடுகள் ஓர் அணியில் இருந்தன. ரஷ்யாவும் அதை ஆதரித்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முதலான பொதுவுடைமை நாடுகள் மற்ருேர் அணி

யில் இருந்தன. இந்த நிலையில் எந்த அணியுடனும் இந்தியா சேரக் கூடாது. அது நடுநிலை நாடாக இருக்கவேண்டும் என நேரு கருதினார். உலகத்திலேயே மிகப் பெரிய மக்களாட்சி நாடாகிய இந்தியா எந்த ஓர் அணியிலும் சேராமல் தனக்கென ஒரு தனிப் பாதையை அமைத்துக் கொள்ளவேண்டும் என்று அவர் எண்ணினார். அதனால்தான் இந்தியா கூட்டுச் சேராத நாடாக (Non-aligned Nation) உள்ளது. பொருளாதாரக் கொள்கையிலும் ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளில் உள்ள, இந்தியாவுக்கு ஏற்ற கொள்கைகளை ஏற்று இந்தியா கலப்புப் பொருளாதார (Mixed Economy) அமைப்பில் செயல்படுகின்றது.

நேரு உருவாக்கிய அயல்நாட்டுக் கொள்கையின்படி, இந்தியா ஏகாதிபத்திய, குடியேற்றக் கொள்கையை எதிர்க்கின்றது. இன வேறுபாடுகள் காட்டக்கூடாது, நீக்ரோக்கள் முதற்கொண்டு எல்லா இனத்தினரும் ஏற்றத்தாழ்வுகள் இன்றிச் சமமாகப் படைக்கப்பட்டவர்கள் ஆவர். எனவே, எல்லா நாடுகளும் சுதந்திரமாக இயங்கவேண்டும். நாடுகள் ஆக்கிரமிப்பில் ஈடுபடக்கூடாது. நாடுகளுக்கிடையில் உள்ள கருத்து வேறுபாடுகள் அமைதியான முறையில் பேச்சுவார்த்தைகளினால் தீர்த்துக் கொள்ளப்படவேண்டும். இந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் இந்தியா போற்றத்தக்க பணியினைச் செய்துவருகின்றது. அந்த நிறுவனம் தொடங்கப்பட்ட 1945ஆம் ஆண்டிலிருந்தே அதில் இந்தியா உறுப்பு நாடாக உள்ளது. கீழ்க்காணும் சில முக்கியமான பணிகளை இந்தியா செய்துள்ளது.

கிழக்கு இந்தியத் தீவுகள் என்று சொல்லப்பட்ட இந்தோனேஷியா, டச்சுக்காரர்களின் அடக்குமுறை ஆட்சிக்குட்பட்டிருந்தது. அத் தீவுகளின் மக்கள் டாக்டர் சுகர்னோ தலைமையில் விடுதலை இயக்கத்தைத் தொடங்கினார்கள். அந்த இயக்கத்திற்கு இந்தியா ஆதரவு தெரிவித்தது. ஏகாதிபத்திய குடியேற்ற ஆதிக்கம் ஒழிய வேண்டும் என இந்தியா அறிவித்தது. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலை இயக்கங்களை இந்தியா ஆதரித்தது என்பதை டச்சு நாடு அறிந்திருந்தது. எனவே, 1949ஆம் ஆண்டு இந்தோனேஷியா விடுதலை பெற்றது.

1950ஆம் ஆண்டு கொரியாவில் குழப்பங்கள் மலிந்தன. அங்கு இரண்டு ஆண்டுகள் போர் நடைபெற்றது. அந்த உள்நாட்டுக் குழப்பத்தில் அமெரிக்கா, ரஷ்யா முதலான நாடுகள் தலையிடத் தொடங்கின. ஐக்கிய நாடுகள் சபையில், கொரியப் போர் நிற்க வேண்டுமாயின் அயல்நாடுகளின் தலையீடு விலகவேண்டும் என

இந்தியா வற்புறுத்தியது. இந்தியாவின் முயற்சியினால்தான் போர் நின்றது. போர் நின்ற பிறகு போர்க்கைதிகளை மாற்றிக்கொள்வதில் இந்தியா அரும்பணியைச் செய்தது.

இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் தோல்வியடைந்தபிறகு, ஐக்கிய அமெரிக்கா தன் படைகளை நிரந்தரமாக அந்த நாட்டில் வைத்திருந்தது. அதை ஜப்பான் எதிர்த்தது. இந்தியாவும் அதைக் கண்டித்தது. ஒரு சுதந்திர நாட்டில் அயல் நாட்டுப் படைகள் இருப்பது நியாயமில்லை என இந்தியா வாதிட்டது. அதையடுத்து 1951ஆம் ஆண்டு அமெரிக்கப் படைகள் ஜப்பானிலிருந்து விலகின.

1949ஆம் ஆண்டு ரஷ்யா அணுகுண்டு வெடித்துப் பரிசோதனை நடத்தியது. இதைக் கண்டு அஞ்சிய ஐக்கிய அமெரிக்கா ஹைட்ரஜன் குண்டு தயாரிக்க முற்பட்டது. அந்த முயற்சியில் வெற்றி பெற்று 1952ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்கா ஹைட்ரஜன் குண்டு வெடித்துப் பரிசோதனை நடத்தியது. அதற்கு அடுத்த ஆண்டு ரஷ்யாவும் ஹைட்ரஜன் குண்டை வெடித்தது. இத்தகைய பயங்கரமான போர்க் கருவிகளைச் செய்து குவிப்பதில் அமெரிக்காவும் ரஷ்யாவும் போட்டியிட்டன. இதைக் கண்டு இந்தியா அஞ்சியது. மனித சமுதாயத்தை அழிக்கக் கூடிய அணுகுண்டு மற்றும் ஹைட்ரஜன் குண்டுகளை வெடிப்பதை நிறுத்த வேண்டுமென நேரு வற்புறுத்தினார். 1954ஆம் ஆண்டுப் பாராளுமன்றத்தில், 'ரஷ்யாவும் அமெரிக்காவும் குண்டுகளை வெடிப்பதை நிறுத்த உடன்படிக்கை செய்துகொள்ளவேண்டும். அந்தக் குண்டுகளின் அழிவுத் தன்மையை அவை உணரவேண்டும், அமைதிச் சாதனங்களுக்கே அவை பயன்படவேண்டும்' என அவர் வாதாடினார். அவர் மேலும் கூறும்போது, 'இந்தியா அணுசக்தியை ஆக்கச் சக்திக்கே பயன்படுத்தும்' என்று அறிவித்தார்.

1954ஆம் ஆண்டு ஜூன்மாதம் தலைமை அமைச்சர் நேருவும், பொதுவுடைமைச் சீனாவின் தலைமை அமைச்சர் சூ-யென்-லாயும் (Chou-En-lai) 'பஞ்ச சீலக்' கொள்கையை வெளியிட்டனர். அதன்படி நாடுகள் (அ) மற்ற நாடுகளின் ஒற்றுமையையும் சுதந்திரத்தையும் மதித்து நடக்கவேண்டும். (ஆ) பிற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக்கூடாது. (இ) ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. (ஈ) எல்லா நாடுகளையும் சமமான நாடுகளாக நடத்தி உதவிகளைப் பெற்று முன்னேறவேண்டும். (உ) மிக அமைதியான முறையில் எல்லா நாடுகளும் ஒத்து வாழவேண்டும் என்று கூறப்பட்டது. இந்தக் கொள்கைகளை எல்லா

நாடுகளும் பாராட்டின. எனினும், சீனு 1962ஆம் ஆண்டு நம்மீது படையெடுத்தது. நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இதை நேரு எதிர்பார்க்கவே இல்லை,

ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளின் இடையே நல்லுறவை வளர்க்கவும் அவைகளிடையே உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவும் நேருவின் முயற்சியால் முதலில் டெல்லியிலும், பிறகு 1955ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்தோனேஷியாவில் உள்ள பாண்டுங் நகரத்திலும் ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளின் மாநாடு நடைபெற்றது. அதில் இருபத்தொன்பது நாடுகள் கலந்துகொண்டன. ஐரோப்பிய நாடுகள் பின்பற்றிவந்த ஏகாதிபத்திய குடியேற்றக் கொள்கையை அம் மாநாடு கண்டித்தது. 'வாழு வாழவிடு' என்ற அடிப்படையில் நாடுகள் இயங்கவேண்டும் என்றும், ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்புப் பெருகவேண்டும் எனவும் அம் மாநாடு வற்புறுத்தியது. இது இரு கண்டங்களில் உள்ள நாடுகளில் புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

உலக அமைதியைக் காக்க வேண்டுமாளுல், நாடுகள் பொருளாதார ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளலாம், ஆனுல், ராணுவ ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளக்கூடாது என்று நேரு கருதினுர். அதனுல்தான் 1949ஆம் ஆண்டு அமெரிக்கா, வட அட்லாண்டிக் பெருங்கடலின் கரையிலுள்ள நாடுகளை ஒன்றுபடுத்தி, வட அட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனத்தை (NATO) அமைத்துக் கொண்ட போது இந்தியா எதிர்ப்புத் தெரிவித்தது. அதேபோல 1954-ல் தென்கிழக்கு ஆசிய நாடுகள் ஒப்பந்த நிறுவனத்தை (SEATO) அமைத்தபோது இந்தியா அதில் சேரவில்லை. கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் ரஷ்யா செய்துகொண்ட வார்சா ஒப்பந்தத்தையும் (1955) இந்தியா நல்லதெனக் கருதவில்லை.

ஐக்கிய நாடுகள் நிறுவனம் தொடங்கியதிலிருந்து இந்தியா உறுப்பு நாடாக இருந்து வருகின்றது. அந்த நிறுவனத்தில் இந்தியா உலக அமைதிக்காகப் போற்றுதற்குரிய பணியைச் செய்து வருகின்றது. காலம் சென்ற முன்னுள் பாதுகாப்பு அமைச்சர் திரு. V.K. கிருஷ்ணமேனன் ஐக்கிய நாடுகள் மன்றத்தில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பின்பற்றி வந்த ஏகாதிபத்தியக் கொள்கைகளை வன்மையாகக் கண்டித்துப் பேசினுர். 1948ஆம் ஆண்டு காஷ்மீர் பிரச்சினை சம்பந்தமாகப் பாகிஸ்தான் இந்தியாவுடன் போருக்கு வந்தது. காஷ்மீர் பிரச்சினையை ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு அவர் தெளிவுபடுத்தினுர். அவை இந்தியாவின் நிலையை உணரத் தொடங்கின. ஏற்கெனவே கூறப்பட்டது போல் 1950ஆம் ஆண்டு கொரியப் பிரச்

சீனையில் மற்ற நாடுகள் தலையீடு தவறானது என இந்தியா கருதியது. 1955ஆம் ஆண்டிலிருந்தே வியட்நாமில் போர் நடைபெறத் தொடங்கியது. இதில் தெற்கு வியட்நாமை ஐக்கிய அமெரிக்காவும், வடக்கு வியட்நாமை ரஷ்யா, பொதுவுடைமைச் சீனு ஆகியவையும் ஆதரித்தன. வியட்நாமில் அமைதி நிலவ வேண்டுமானல் அயல்நாட்டுப் படைகள் விலகவேண்டுமென இந்தியா கூறி வந்தது. எனினும், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் இந்தியா வெளியிட்ட கருத்துகளை அந்த நாடுகள் புறக்கணித்தன. 1956ஆம் ஆண்டு எகிப்தின் அதிபர் நாசர், சூயஸ் கால்வாயை நாட்டுடைமை ஆக்கினர். உடனே இங்கிலாந்தும் ஃபிரான்சும் அப் பகுதியில் படைகளைக் குவிக்கத் தொடங்கின. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் இந்தியா அந்நாடுகளின் படைகள் அப்பகுதியிலிருந்து விலகவேண்டுமென வற்புறுத்தியது. அதையடுத்து அங்கு அமைதி நிலவியது. இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் அடிக்கடி போர்கள் நடைபெற்றன. இஸ்ரேலுக்கு ஐக்கிய அமெரிக்கா உதவி செய்தது. படைகளையும் அனுப்பியது. அதனுல் இஸ்ரேல், அரபு நாடுகளின் பல பகுதிகளை ஆக்கிரமித்துக்கொண்டது. அப்பொழுதும் அமெரிக்காவின் தலையீட்டை இந்தியா கண்டித்தது, ஐக்கிய நாடுகள் மன்றத்தில், நீக்ரோ இன மக்களின் மேன்மைக்காகவும் இந்தியா வாதிட்டுள்ளது. இங்கிலாந்து முதலான நாடுகள் ஆப்பிரிக்காவில் பின்பற்றிவந்த இனவேற்றுமையை நம்நாடு கண்டித்தது. குறிப்பாகத் தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர் அரசு பின்பற்றி வந்த இனவேறுபாட்டை (Racial discrimination) ஐ.நா. நிறுவனத்தில் இந்தியா மிகக் கடுமையாகக் கண்டித்தது. ஆப்பிரிக்க நாடுகள் விடுதலையடைவதற்கு இந்தியா அரும்பணியைச் செய்துள்ளது.

நேரு வகுத்த அமைதி வழியை லால் பகதூர் சாஸ்திரி (1964-65) தொடர்ந்து பின்பற்றினர். 1965ஆம் ஆண்டு கெய்ரோவில் (Cairo) நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் மாநாட்டில் அன்றைய இந்தியாவின் தலைமை அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி கலந்து கொண்டு, நேருவின் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றுவதாகவும், கூட்டுச் சேராத நாடுகள் உலக அமைதியைக் காக்க அரும்பணியைச் செய்துவருகின்றன என்றும் குறிப்பிட்டார். அதில் கலந்து கொண்ட யுகோஸ்லாவியாவின் அதிபர் டிடோ (Tito) இந்தியாவின் அமைதிப் பணியை மனமுவந்து பாராட்டினர்.

இன்றைய தலைமை அமைச்சர் இந்திரா காந்தியும் தன் தந்தையின் வழியையே பின்பற்றி வருகின்றுர். மேற்குப் பாகிஸ்தானின் அடக்குமுறை இராணுவ ஆட்சியை எதிர்த்துக் கிழக்குப் பாகிஸ்

தான் போரிட்டது. மனிதாபிமான உணர்வு மிக்க இந்திரா காந்தி கிழக்குப் பாகிஸ்தானுக்குத் தன் ஆதரவைத் தெரிவித்தார். போரின்போது ஒரு கோடிக்கும் மேற்பட்ட அகதிகள் இந்தியா விற்கு வந்தனர், அவர்களுக்காக இந்திய அரசு இருநூறு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து, அவர்களுக்கு உணவும், உடையும், இடமும் கொடுத்தது. பங்களா தேசம் 1971-ல் விடுதலை அடைந்தது. அதற்கு இந்திரா காந்தி பெருமளவு காரணமாவார். 'எங்கே சுதந்திரம் பறிபோகிறதோ, அங்கே இந்தியா விரைந்து சென்று அதைக் காக்கும்' என்று நேரு கூறியதற்கேற்ப அவர் மகள் நடந்துகொண்டார். இந்தியாவும் பாகிஸ்தானும் நட்பு நாடுகளாக வாழவேண்டுமென்ற நோக்கத்தில் 1971ஆம் ஆண்டு ஸிம்லா ஒப்பந்தம் (Simla Pact) செய்துகொள்ளப்பட்டது. 1974ஆம் ஆண்டு மே மாதம் இந்தியா அணுகுண்டை வெடித்துப் பரிசோதனை நடத்தியது. அணு சக்தியை அழிவுச் சக்தியாகப் பயன்படுத்தாமல் ஆக்கச் சக்தியாகவே பயன்படுத்துவோம் என்று இந்திரா காந்தி கூறினார். அதேபோல் 1975ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பூமியைச் சுற்றிவர 'ஆரியபட்டா' என்ற செயற்கைக் கோளை இந்தியா அனுப்பியபோது நம் நாட்டின் அறிவியல் ஆராய்ச்சிகள் அமைதி வழிகளுக்கே பயன் படுத்தப்படும் என்று இந்திரா காந்தி அறிவித்தார்.

### பண்டித ஜவஹர்லால் நேரு (1889—1964)

பதினேழு ஆண்டுகள் இந்தியாவின் தலைமை அமைச்சராகப் பணிபுரிந்த நேரு உத்தரப் பிரதேசத்தில் உள்ள அலஹாபாத்தில் பிறந்தார். பெரிய பணக்கார வழக்கறிஞரான மோதிலால் நேருவும் அவருடைய மனைவி சுரூபராணியும் ஜவஹர்லாலின் பெற்றோராவர். ஆடம்பரமான சூழ்நிலையில் அவர் வளர்க்கப் பட்டார். F. T. புரூக்ஸ் என்ற ஆசிரியரை நியமித்து நேருவுக்கு வீட்டிலேயே கல்வி கற்பிக்க மோதிலால் ஏற்பாடு செய்தார். இளமையில் நேரு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்படவில்லை. மற்றக் குழந்தைகளோடு சேர அவர் அனுமதிக்கப்படவில்லை. இதுபற்றி, 'என்னுடைய இளமைப் பருவத்தில் விளையாடுவதற்கு நண்பர் களின்றி, தன்னந்தனியான குழந்தையாகவே நான் வளர்ந்தேன். தனி ஆசிரியர்களே எனக்கு வீட்டிலேயே கல்வி புகட்டினர்' என்று நேருவே கூறுகின்றார்.

1907ஆம் ஆண்டு, அவருடைய பதினைந்தாவது வயதில் நேரு இங்கிலாந்திற்குச் சென்றார். அங்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பயின்றார். இரசாயனம், உயிரியல், மண்ணியல் முதலான பாடங்களைப் பயின்றார். பின்னர் சட்டக் கல்வியையும்

பயின்று, பட்டம் பெற்று, 1912ஆம் ஆண்டு அங்கேயே வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கினர். இங்கிலாந்தில் அவர் தங்கியிருந்தபோது ஆங்கில நாகரிகத்தால் பெரிதும் கவரப்பட்டார். ஆங்கிலப் பண்பாடும் அரசியல் அமைப்பும் அவரைப் பெரிதும் கவர்ந்தன. அவை அவருடைய பிற்கால வாழ்க்கையிலும் பிரதிபலித்தன.

இந்தியாவிற்கு வந்த பின்னர் தொடர்ந்து வழக்கறிஞராக, அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் பணியாற்றினர். எனினும் அந்தத் துறையில் அவருக்கு அதிகமான ஈடுபாடு ஏற்படவில்லை. இளைஞராக இருந்தபோதே அன்னிபெசன்ட் அம்மையார் தோற்றுவித்த 'பிரம்ம ஞான சபை'யில் சேர்ந்திருந்த நேரு அவரோடு 'சுயாட்சி சங்கத்தில்' (Home Rule League) தீவிர பங்கு கொள்ளத் தொடங்கினர். 1916ஆம் ஆண்டு முதல் முறையாக, லக்னோ காங்கிரஸ் மாநாட்டில் காந்தியடிகளைச் சந்தித்தார். அதே ஆண்டு பெற்றோர் விருப்பப்படி கமலா கவுல் என்ற உறவுப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். 1917ஆம் ஆண்டு இந்திரா பிரியதர்சினி பிறந்தார்.

1918ஆம் ஆண்டிலிருந்து அரசியலில் மிகத் தீவிரமாகக் கலந்துகொண்டார். அந்த ஆண்டு சுயாட்சி சங்கத்தின் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டு காங்கிரஸ் கட்சியின் செயற்குழுவில் உறுப்பினராகத் தேர்தெடுக்கப்பட்டார். 1919ஆம் ஆண்டு காந்தியடிகள் நடத்திய இயக்கங்களில் கலந்து கொண்டார். 1921ஆம் ஆண்டு காந்தியடிகள் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் அவர் கலந்து கொண்டதால் ஆங்கில அரசு அவரைக் கைது செய்து சிறைக்கனுப்பியது. அவர் சிறைக்கனுப்பப்பட்டது அதுவே முதல் முறையாகும். பின்னர், நாட்டு விடுதலைக்காகப் போரிட்டபோது அவர் ஒன்பது முறை சிறைக்கனுப்பப்பட்டார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் அவர் கலந்து கொண்ட போது 34 மாதங்கள் தொடர்ந்து சிறையிலிருந்தார். நான்கு முறை காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தார். காந்தியடிகளும், நேருவும் இந்தியாவின் தலைசிறந்த அரசியல் தலைவர்களானர்கள். பல்வேறு பிரச்சினைகளில் கருத்து வேறுபாடு கொண்டாலும் நேருதான் தனக்குப் பின் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தலைவராக விளங்குவார் என்பதைக் காந்தியடிகள் அறிந்திருந்தார்.

1946ஆம் ஆண்டு கவர்னர் ஜெனரல் வேவல் பிரபுவின் அழைப்பை ஏற்று இடைக்கால அரசை நேரு அமைத்தார். அந்த

அரசு திறமையாகச் செயல்பட்டதைக் கண்டு வேவல் மற்றும் மவுண்ட்பேட்டன் பிரபு வியந்தனர். இந்தியா உரிமை பெற்ற பின்னர் நேரு அதன் முதல் தலைமை அமைச்சர் ஆனார்.

நேரு மிகச்சிறந்த அரசியல்வாதி மட்டும் அல்லர், தலைசிறந்த எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் விளங்கினார். 1930-33ஆம் ஆண்டுகளில் அவர் சிறையிலிருந்தபோது தன்னுடைய அன்பு மகள் இந்திரா பிரியதர்சினிக்கு, உலக வரலாற்றைக் கடிதங்கள் மூலமாக எழுதியனுப்பினார். அக்கடிதங்கள் பின்னர் தொகுக்கப் பட்டு 'உலக வரலாற்றின் கண்ணோட்டங்கள்' (Glimpses of World History) என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. இது சிறந்த உலக வரலாற்று நூலாகக் கருதப்படுகிறது. 1935ஆம் ஆண்டுச் சிறை வாழ்க்கையின்போது 'தன் வாழ்க்கை வரலாற்றை' எழுதி முடித்தார். 1944ஆம் ஆண்டுச் சிறை வாழ்க்கையின்போது 'இந்தியாவின் கண்டுபிடிப்பு' (The Discovery of India) என்ற நூலை எழுதி முடித்தார். இந்த நூல்கள் அவருடைய எழுத் தாற்றலையும், ஆங்கிலப் புலமையையும் விளக்குகின்றன.

எல்லாக் கொள்கைகள் பற்றியும் அவர் தன் கருத்தைத் தெரி வித்துள்ளார். மூடநம்பிக்கைகளை அவர் ஏற்கவில்லை. உண்மை யான இந்துமதக் கொள்கைகளை அவர் புகழ்ந்து பாராட்டி யுள்ளார். உபநிடதங்களிலும் 'கீதை'யிலும் உள்ள தத்துவங்களை அவர் வியந்து போற்றுகிறார். இந்தியக் கலாசாரத்தின் சிறப்புக் கூறுகளை மனமுவந்து பாராட்டிப் பின்பற்றினார். எனவே எல்லா இந்தியரும் அவர்பால் அன்பு செலுத்தினார்கள். நீண்ட காலம் இந்தியாவின் தலைமை அமைச்சராக இருந்து, உலக அரங்கில் இந்தியாவுக்கு ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுத் தந்தவர் நேருவே ஆவார்.

# 28. அமெரிக்காவும் ரஷ்யாவும் உலக வல்லரசுகளாதல்

## (I) அமெரிக்கா

ஐக்கிய அமெரிக்கா (The United States of America) 1776ஆம் ஆண்டு ஆங்கில ஆட்சியினின்று விடுதலை பெற்றது. அப்பொழுது அந் நாட்டில் பதின்மூன்று மாநிலங்களே இருந்தன. 1783ஆம் ஆண்டு இங்கிலாந்துடன் செய்துகொள்ளப்பட்ட பாரிஸ் உடன் படிக்கையின்படி மிஸ்ஸிஸிப்பி நதிவரையிலுள்ள பெருநிலப் பகுதியை அமெரிக்கா பெற்றது. 1803ஆம் ஆண்டு லூசியானு (Louisiana) என்ற மற்ருெரு பெரும் பகுதியை ஜனுதிபதி ஜெஃப்பர்சன் ஃபிரான்சிடமிருந்து விலைக்கு வாங்கினுர். 1819ஆம் ஆண்டு ஃபிளாரிடாவை (Florida) ஸ்பெயினிடமிருந்து ஐக்கிய அமெரிக்கக் பெற்றது. 1845ஆம் ஆண்டு டெக்சாஸ் (Texas) முழுவதும் அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது. 1846-ல் ஒரிகன் (Oregon) பெறப்பட்டது. 1848-ல் டெக்சாஸ் எல்லையிலிருந்து பசிபிக் பெருங்கடல் வரை இருந்த பரந்த பகுதி மெக்சிகோவிட மிருந்து பெறப்பட்டது. 19ஆம் நூற்றுண்டின் இடைப்பகுதிக்குள் ஐக்கிய அமெரிக்கா நிலப்பரப்பிலும், வலிமையிலும் மிகப்பெரிய நாடாக மாறிவிட்டது.

ஐக்கிய அமெரிக்காவின் ஜனுதிபதி மன்ரோ 1823-ல் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதன்படி இரு அமெரிக்கக் கண்டங் களில் இருக்கின்ற நாடுகளுக்கு அமெரிக்கா தன்னைக் காப்பாளனுக (Guardian) நியமித்துக்கொண்டது, அதையடுத்து முதல் உலகப் போர் தொடங்கும்வரை ஐரோப்பிய விவகாரங்களில் ஐக்கிய அமெரிக்கா ஈடுபடவில்லை என்று கூறலாம். எனினும், இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும், பசிபிக் பெருங்கடலில் இருக்கும் பல தீவுகளிலும் ஐக்கிய அமெரிக்கா தன் செல்வாக்கை நிலைநாட்ட முயன்றது. ஏனெனில், 19ஆம் நூற்றுண்டின் இறுதியில் நடை பெற்ற தொழில் புரட்சியால் ஐக்கிய அமெரிக்காவில் பெரும் எண்ணிக்கையில் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அவற்றை விற்க அயல்நாட்டுச் சந்தைகள் அந்நாட்டிற்குத் தேவைப்பட்டன. பெரும் முதலாளிகள் தங்கள் செல்வத்தை அயல்நாடுகளில் முதலீடு செய்ய விரும்பினர். அந்த நூற்றுண்டின்

இறுதியில் இங்கிலாந்தும், ஜெர்மனியும் தங்கள் பொருள்களைக் குடியேற்றங்களில் குவித்து வந்தன. அதேபோன்ற குடியேற்ற ஏகாதிபத்தியக் கொள்கையை ஐக்கிய அமெரிக்கா பின்பற்றத் தொடங்கியது.

### பசிபிக் பெருங்கடலில் ஏகாதிபத்தியம்

வட அமெரிக்கக் கண்டத்தின் வடமேற்கில் உள்ள அலாஸ்கா (Alaska) ரஷ்யாவிற்குச் சொந்தமாக இருந்தது. அமெரிக்கக் கண்டத்தில் ரஷ்யாவின் ஆதிக்கம் இருந்ததை அமெரிக்கா விரும்பவில்லை. எனவே, 1868ஆம் ஆண்டு அமெரிக்கா எழுபத்திரண்டு லட்சம் டாலர் ரஷ்யாவிற்குக் கொடுத்து அப் பகுதியை விலைக்கு வாங்கியது. அலாஸ்காவை இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடமாக அமெரிக்கா கருதியது.

பசிபிக் பெருங்கடலில் உள்ள தீவுகளைக் கைப்பற்றிக் கொள்வதில் ஐக்கிய அமெரிக்கா முக்கிய கவனம் செலுத்தியது. 1867 ஆம் ஆண்டு மிட்வே தீவுகளை (Midway Islands) அமெரிக்கா கைப்பற்றிக் கொண்டது. அவற்றை ஏற்கெனவே, அமெரிக்கர்கள் தான் கண்டுபிடித்தார்கள் என்று காரணம் காட்டி அமெரிக்கா அவற்றைத் தனக்குரியதாக ஆக்கிக்கொண்டது.

ஹவாய் தீவுகள் (Hawai Islands) சர்க்கரை உற்பத்திக்குச் சிறந்தவையாக இருந்தன. அத் தீவுகளை ஆட்சிசெய்த அரசரோடு செய்துகொண்ட உடன்படிக்கையின்படி பல அமெரிக்கர்கள் அத் தீவுகளில் சென்று குடியேறினார்கள். காலப்போக்கில் அமெரிக்கர்கள் தேசிய அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அத்தகைய நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டால் அமெரிக்கர்களின் சொத்துகள் பறிமுதல் செய்யப்படும் என அரசு அறிவித்தது. அதைத் தொடர்ந்து சில ஆண்டுகள் தேசிய அரசுக்கும் அமெரிக்க அரசுக்கும் இடையே பூசல்கள் நடைபெற்றுவந்தன. இறுதியாக 1899ஆம் ஆண்டு ஹவாய் தீவுகள் முழுவதையும் அமெரிக்கா கைப்பற்றிக் கொண்டது. அத்தீவுகளில் உள்ள பேர்ல் ஹார்பர் (Pearl Harbour) அமெரிக்காவின் மிகச் சிறந்த இராணுவ தளமாக அமைந்தது.

சமோவா தீவுகளில் (Samoa Islands) தங்கள் அதிகாரத்தை நிலைநாட்ட அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய மூன்று நாடுகளும் போட்டிபோட்டன. 1899ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி அத் தீவுகளை ஜெர்மனியும் அமெரிக்காவும் பங்கு போட்டுக்கொண்டன.

கரிபியன் கடலில் உள்ள கியூபா (Cuba) மற்றும் போர்டோ ரீகோ (Puerto Rico) ஆகிய தீவுகளில் ஸ்பெயின் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டி இருந்தது. அவற்றைக் கைப்பற்றிக்கொள்ள

அமெரிக்கா திட்டமிட்டது. அதன் விளைவாக ஸ்பானிய-அமெரிக்கப் போர் நடைபெற்றது (1898). போரின் இறுதியில் செய்துகொள்ளப்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின்படி போர்டோ ரீகோ மற்றும் பசிபிக் பெருங்கடலில் உள்ள ஃபிலிப்பைன்ஸ் தீவுகளையும் (Philippines), குவாம் (Guam) தீவினையும் ஸ்பெயின் அமெரிக்காவிற்குக் கொடுத்துவிட்டது. ஸ்பானிய-அமெரிக்கப் போருக்குப்பின் கியூபாவில் அமெரிக்கா அரசியல் செல்வாக்கை ஏற்படுத்திக்கொண்டது.

### இலத்தீன் அமெரிக்க நாடுகளில் தலையீடு

இலத்தீன் அமெரிக்க நாடுகளின் நலன்களைக் காத்து, அந்நாடுகளில் தன் செல்வாக்கை ஏற்படுத்திக்கொள்வது தனது கடமை என அமெரிக்கா கருதியது. 1895ஆம் ஆண்டு வெனிசுலாவிற்கும் பிரிட்டிஷ் கயானாவிற்கும் இடையே எல்லைத் தகராறு ஏற்பட்டது. இந்தப் பிரச்சினையில் அமெரிக்கா தலையிட்டு வெனிசுலாவிற்குச் சாதகமாகச் சமரசம் ஏற்படுத்த முயன்றது. இங்கிலாந்து அதை ஏற்றுக்கொள்ளவில்லை. பிரச்சினை சில ஆண்டுகள் நீடித்தது. 1904 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் தியோடர் ரூஸ்வெல்ட், 'மன்ரோ' கொள்கை'யை வலியுறுத்தி, 'ரூஸ்வெல்ட் துணைக் கொள்கை' (Roosevelt Corollary) வெளியிட்டார். பின்னர் இங்கிலாந்து அமெரிக்காவின் சமரசத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது. இது அமெரிக்காவிற்குக் குறிப்பிடத்தக்க வெற்றியாக அமைந்தது.

கியூபாவிலும், போர்டோ ரீகோவிலும் அமெரிக்கா தன் செல்வாக்கை ஏற்படுத்திக்கொண்டது என்பது ஏற்கெனவே கூறப்பட்டது.

பசிபிக் பெருங்கடலையும் கரிபியன் கடலையும் இணைக்க மத்திய அமெரிக்கப் பகுதியில் ஒரு கால்வாயை வெட்ட ஐக்கிய அமெரிக்கா திட்டமிட்டது. கொலம்பியா குடியரசின் ஒரு பகுதியாகிய பனாமாவில் அத்தகைய கால்வாயை வெட்ட 1903-ல் கொலம்பியா அரசிடம் அமெரிக்கா அனுமதி கோரியது. அதற்குக் கொலம்பியா மறுத்தது. அதைக் கண்டு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தியோடர் ரூஸ்வெல்ட் ஆத்திரம்கொண்டார். கொலம்பியா அரசை எதிர்த்து பனாமாவில் ஒரு கிளர்ச்சி தூண்டிவிடப்பட்டது. கிளர்ச்சி செய்த பனாமா தனிநாடாக அறிவித்துக்கொண்டது. உடனே ஐக்கிய அமெரிக்கா புதிய நாட்டை அங்கீகரித்தது. புதிய நாடான பனாமாவிடமிருந்து நிலத்தை வாங்கிக் கால்வாயை வெட்டுவதற்கான பணியை அமெரிக்கா தொடங்கியது. 1914ஆம் ஆண்டுக்குள் கால்வாய் வெட்டி முடிக்கப்பட்டது.

கரிபியன் கடலில் உள்ள டொமினிகன் குடியரசு (Dominican Republic) அமெரிக்காவிற்குத் தரவேண்டிய கடனைக் கொடுக்க முடியாத நிலையில் இருந்தது. அதனுடைய நிதிநிலை சீர்கெட்டிருந்தது. 1905ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்கா அந்தக் குடியரசின் நிதி நிர்வாகத்தை மேற்கொண்டது.

1911ஆம் ஆண்டில் அமெரிக்க முதலாளிகள் நிகாரகுவா (Nicaragua) என்ற நாட்டின் நிதி நிர்வாகத்தைக் கட்டுப்படுத்த முற்பட்டனர். அடுத்த ஆண்டு அமெரிக்கப் படைகள் அந் நாட்டிற்குள் புகுந்து அதன் நிர்வாகத்தை மேற்கொண்டு அடுத்த இருபது ஆண்டுகள் அங்கேயே இருந்தன.

1913ஆம் ஆண்டு உட்ரோ வில்சன் (Woodrow Wilson) ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் ஆனார், அவர் மற்ற நாடுகளின் உரிமைகளில் தலையிட விரும்பாதவர். ஏகாதிபத்தியக் கொள்கையை வெறுத்தவர். 'இனி ஓர் அடி கூடுதல் நிலப்பரப்பைக்கூட அமெரிக்கா போரிட்டுக் கைப்பற்றாது' என்று வில்சன் அறிவித்தார்.[1] எனினும், பல்வேறு விதமான சூழ்நிலைகளால் அவரும் ஏகாதிபத்தியக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டியதாயிற்று.

ஹைதி (Haiti) என்ற சிறிய நாட்டில் பயங்கரமான கலகங்கள் நடைபெற்றன. 1915-ல் ஐக்கிய அமெரிக்கா உடனே தலையிட்டு அமைதியை நிலைநாட்டியது. பின்னர், அமைக்கப்பட்ட தேசிய அரசுகள் அனைத்தும் அமெரிக்காவின் பொம்மை அரசுகளாகவே இயங்கின.

அமெரிக்காவின் அண்டை நாடான மெக்சிகோவில், நூற்றுக் கணக்கான அமெரிக்கத் தொழிலதிபர்கள் நூறு கோடி டாலருக்கும் மேல் முதலீடு செய்து அந்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உதவினர். எனினும், அதன் நன்மைகளை அனுபவித்தவர்கள் அமெரிக்கர்களே ஆவர். மெக்சிகோவின் குடிமக்கள் ஏழைத் தொழிலாளர்களாகவே இருந்தனர். ஆயிரக்கணக்கான குடிமக்கள் தங்கள் பயிர் நிலங்களை இழந்தார்கள். அதனால் அரசை எதிர்த்துக் கிளர்ச்சிகள் நடைபெற்றன (1911). அதைத் தொடர்ந்து மெக்சிகோவில் உள்நாட்டுக் கலகங்கள் நடைபெற்றன. 1914ஆம் ஆண்டு மெக்சிகோவின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிட்டு அந்த நாட்டு அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டது. 1917ஆம் ஆண்டு வரை அமெரிக்கப் படைகள் மெக்சிகோவில் இருந்தன. மெக்சிகோவின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிட்டது நேர்மையற்ற செயலாகும்.

[1] The United States would never again seek one additional foot of territory by conquest—W. Wilson.

**சீன-ஜப்பானிய-அமெரிக்க உறவுகள்**

கிழக்கு ஆசிய நாடுகளிலும் தன் செல்வாக்கை நிலைநாட்ட அமெரிக்கா விரும்பியது. சீனாவில் அமெரிக்கர்களும், பல ஐரோப்பிய நாட்டவரும் வாணிகம் செய்துவந்தனர். அமெரிக்க வணிகர்களின் நலன்களைக் காக்க அமெரிக்கா ஒரு கொள்கையை வெளியிட்டது. அதன்படி சீனாவில் வாணிகம் செய்துவந்த எல்லா அயல்நாடுகளும் சமமான வாணிக உரிமைகளைப் பெற்றன. ஒரு நாட்டின் வாணிக உரிமைகளிலும் சலுகைகளிலும் மற்றொரு நாடு தலையிடக்கூடாது என ஒத்துக்கொள்ளப்பட்டது. இது 'திறந்த கதவுக் கொள்கை' (Open Door Policy) என்று அழைக்கப்பட்டது 1899—1900). இந்தக் கொள்கையைச் சீனாவின்மீது அமெரிக்கா, 'திணித்தது' என்றே கூறவேண்டும்.

சீனாவில் அயலவர்கள் ஆதிக்கம் செலுத்துவதைச் சீனர்கள் வெறுத்தனர். அதனால் அவர்கள் 'பாக்சர் கிளர்ச்சி'யை (Boxer Rebellion) நடத்தினார்கள் (1900).[1] அயல் நாட்டவரையும் அவர்களுடைய சொத்துகளையும் அவர்கள் தாக்கினார்கள். உடனே அமெரிக்கா படைகளை அனுப்பிக் கிளர்ச்சியை ஒடுக்கி, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாட்டவர்களின் உயிர்களையும் உடைமைகளையும் காத்துத் தன் அதிகாரத்தைச் சீனாவில் நிலைநாட்டியது.

ஜப்பான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் கொரியாவையும் மஞ்சூரியாவையும் கைப்பற்றிக்கொள்ளப் போட்டியிட்டன. அதன் விளைவாக 1904-5ஆம் ஆண்டுகளில் ரஷ்ய-ஜப்பானியப் போர் நடைபெற்றது. ஜப்பான் போரில் பல வெற்றிகளைப் பெற்றது. கிழக்கு ஆசியாவில் 'அதிகாரச் சமநிலை'யை (Balance of Power, ஏற்படுத்துவதற்காக அமெரிக்கா தலையிட்டு, போரை நிறுத்தி) ஜப்பானில் தன் செல்வாக்கை ஏற்படுத்திக்கொண்டது.

**முதல் உலகப் போரில் அமெரிக்கா**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திற்குள், அமெரிக்கா உலக வல்லரசாக மாறிவிட்டது. அது தன் வலிமையை உலகுக்கு எடுத்துக்காட்ட முதல் உலகப் போர் மிகச்சிறந்த வாய்ப்பினை அளித்தது.

முதல் உலகப் போரில் ஜெர்மனி, ஆஸ்திரியா, துருக்கி, முதலான பகைமை நாடுகளை எதிர்த்து இங்கிலாந்து, ஃபிரான்சு, ரஷ்யா முதலான நட்பு நாடுகள் போரிட்டன. 1914ஆம் ஆண்டு ஜூன் மாதம் போர் தொடங்கியது. இந்தப் போரில் நேரிடையாகக் கலந்துகொள்ள அமெரிக்கா விரும்பவில்லை. நடுநிலை

[1] 143-144ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.

நாடாகவே இருக்க அது விரும்பியது. எனினும், ஜெர்மனி தோல்வியடைந்து, இங்கிலாந்து வெற்றிபெறவேண்டும் என்பதே குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சனின் விருப்பமாகும். போர் தொடங்கிய பின்னர் அட்லாண்டிக் கடலில் கப்பல்களின் போக்கு வரத்துக்கு இங்கிலாந்து தடை விதித்தது. இது நடுநிலை நாடான அமெரிக்காவின் உரிமைகளைப் பாதித்தது. அதே நேரத்தில் ஜெர் மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் (Submarines) பல ஆங்கில, அமெ ரிக்கக் கப்பல்களை மூழ்கடித்தன. குறிப்பாக, 1915ஆம் ஆண்டு மார்ச் மாதம் லூசிடானியா (Lusitania) என்ற கப்பலை ஜெர்மா னிய நீர்மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடித்தன. அதில் இருந்த 1,198 பயணிகள் இறந்தனர். அவர்களுள் 128 பேர் அமெரிக்கர்கள் ஆவர். இச் செய்தியை அறிந்த வல்லரசாகிய அமெரிக்கா பெரும் ஆத்திரம் கொண்டது. உடனே ஜெர்மனி மீது போர் தொடுக்க வேண்டுமென அமெரிக்கர்கள் துடித்தனர். எனினும், அமெரிக்காவைப் போரில் ஈடுபடுத்த வில்சன் விரும்பவில்லை. அவர் பின்பற்றிய தலையிடாக் கொள்கையினால்தான் 1916ஆம் ஆண்டு வில்சன் மீண்டும் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1917ஆம் ஆண்டு ஜெர்மனி அமெரிக்காவிற்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தியது. அந்த ஆண்டு பிப்ரவரி-மார்ச் மாதங் களில் ஆறு அமெரிக்கக் கப்பல்களை ஜெர்மனி மூழ்கடித்தது. ஆத்திரம் கொண்ட அமெரிக்கா ஏப்ரல் மாதம், 'உலக நாடுகளில் மக்களாட்சி முறையைக் காப்பதற்காக' ஜெர்மனிமீது போர் தொடுத்தது. ஜெர்மனியை எதிர்த்துப் போரிட ஐக்கிய அமெரிக்கா பெரும் எண்ணிக்கையில் போர்க் கருவிகளையும் பண உதவியையும் நட்பு நாடுகளுக்குக் கொடுத்தது. 36 இலட்சத் திற்கும் மேற்பட்ட வீரர்களை முதல் உலகப்போரில் போரிட அமெரிக்கா அனுப்பியது. ஜெர்மானியப் படைகள் ஃபிரான்சின் எல்லைப்பகுதிகளில் மிகக் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டன. 1918ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் பகைமை நாடுகள் சரணடைந்தன. முதல் உலகப் போரில் நட்பு நாடுகளின் வெற்றிக்கு ஐக்கிய அமெரிக்காவே காரணமாகும்.

### முதல் உலகப்போருக்குப் பின்

முதல் உலகப் போருக்குப்பின் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன் தம்முடைய 'பதினான்கு கோட்பாடுகளை' (The Fourteen Points) வெளியிட்டார். அதன் அடிப்படையில் போரைத் தடுக்கவும் உலக அமைதியை நிலைநாட்டவும் 'சர்வ தேசச் சங்கம்' (The League of Nations) அமைக்கப்பட்டது. எனினும், இந்தச் சங்கத்தில் அமெரிக்கா உறுப்பு நாடாகச் சேர வில்லை. ஏனெனில், அங்ஙனம் சேருவதற்கு அமெரிக்காவின் மேல் சட்டமன்றமாகிய செனெட் (Senate) மறுத்துவிட்டது.

போருக்குப் பின் நிறைவேறிய 'வெர்சாய் உடன்படிக்கை'யின் போது (The Treaty of Versailles, 1919) ஐக்கிய அமெரிக்கா மிக முக்கியமான பணியைச் செய்தது. மேலும் 1921–22ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா 'வாஷிங்டன் மாநாட்டைக்' (The Washington Conference) கூட்டியது. அதில் ரஷ்யாவைத் தவிர மற்ற முக்கிய ஐரோப்பிய நாடுகளும், ஜப்பான், சீனு முதலான ஆசிய நாடுகளும் கலந்துகொண்டன. கடற்படை வலிமையைக் குறைக்கவும், ஐரோப்பா, ஆசிய நாடுகளில் அமைதியை நிலைநாட்டவும் இந்த மாநாட்டின்போது பல முக்கிய உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன.

போருக்குப் பின்னர் ஜெர்மனி முதலான ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நிலை சீர்பட, ஐக்கிய அமெரிக்கா கோடிக் கணக்கான டாலர் பணத்தைக் கடனுகக் கொடுத்துதவியது. குறிப்பாக ஜெர்மனியின் பொருளாதார நிலை சீர்படப் போர் நஷ்ட ஈட்டுத் தொகையை மாற்றியமைக்க அமெரிக்கப் பொருளாதார வல்லுநர்களின் உதவியால் டாவ்ஸ் திட்டம் (The Dawes Plan, 1924), யங் திட்டம் (The Young Plan, 1928) முதலானவை வகுத்துத் தரப்பட்டன.

இலத்தீன் அமெரிக்க நாடுகளின் நல்லெண்ணத்தைப் பெறவும் ஐக்கிய அமெரிக்கா விரும்பியது. எனவே, கரிபியன் கடலிலுள்ள கியூபா, டொமினிகன் குடியரசு, ஹைதி, நிகாரகுவா ஆகிய சிறிய நாடுகளில் வைத்திருந்த தனது படைகளை ஐக்கிய அமெரிக்கா திரும்ப அழைத்துக்கொண்டது.

இத்தகைய செயல்களால் நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திலும் அமைதியைக் காப்பதிலும் தனக்குப் பெரும் அக்கறை உள்ளது என்பதை ஐக்கிய அமெரிக்கா எடுத்துக் காட்டியது.

### இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கா

1939ஆம் ஆண்டு ஜெர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லரின் ஆக்கிரமிப்புகளால் இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. இந்தப் போரிலும் ஐக்கிய அமெரிக்கா பங்குபெற விரும்பவில்லை. ஆயினும் இங்கிலாந்து, ஃபிரான்ஸ் போன்ற நட்பு நாடுகளுக்கு அமெரிக்கா தன் ஆதரவைத் தெரிவித்தது. ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய பகைமை நாடுகள் மற்ற நாடுகளைப் பல இடங்களில் தாக்கிப் பெருஞ்சேதத்தை ஏற்படுத்திவந்தன. 1941ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை அமெரிக்கா போரில் கலந்து கொள்ளவில்லை. அந்த ஆண்டு டிசம்பர் 7ஆம் தேதி ஹாவாய் தீவுகளில் பேர்ல் ஹார்பரில் (Pearl Harbour) இருந்த அமெரிக்கக் கடற்படையை ஜப்பான் குண்டுபோட்டு அழித்தது. ஆத்திரமுற்ற அமெரிக்கா உடனே பகைமை நாடுகளுக்கு எதிராகப்

போரில் இறங்கியது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் F.D. ரூஸ்வெல்ட் (F.D. Roosevelt) நட்பு நாடுகளுக்குத் தேவையான போர் விமானங்கள், போர்க் கப்பல்கள், வெடிகுண்டுகள் முதலான எல்லாவற்றையும் கொடுத்துதவினார். ஐரோப்பாவில் போரிட ஜெனரல் ஐசன்ஹோவர் தலைமையில் ஒரு படையும் ஜப்பானை எதிர்த்துப் போரிட மெக்ஆர்தர் தலைமையில் மற்றொரு படையும் அனுப்பப்பட்டன. 1943-ல் இத்தாலி தோற்கடிக்கப் பட்டது. 1944-ல் ஃபிரான்ஸ் ஜெர்மனியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டது. 1945ஆம் ஆண்டு ஜெர்மனி சரணடைந்தது. அதே ஆண்டு ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய ஜப்பானிய நகரங்கள் மீது அமெரிக்கா இரண்டு அணுகுண்டுகளைப் போட்டதால் ஜப்பானும் சரணடைந்தது. இங்ஙனம் நட்பு நாடுகள் வெற்றி பெறுவதற்கு ஐக்கிய அமெரிக்காவே காரணமாக இருந்தது. இரண்டாவது முறையாக அந்த நாடு தன் ஈடு இணையற்ற வலிமையை உலகுக்கு அறிவித்தது.

### இரண்டாம் உலகப்போருக்குப் பின்

இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக்கொண்டிருந்த போதே F.D. ரூஸ்வெல்ட், வின்ஸ்டன் சர்ச்சில் ஆகியவர்கள் உலக அமைதியைக் காக்க ஐக்கிய நாடுகள் நிறுவனத்தை அமைப் பதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். ஐக்கிய நாடுகள் நிறுவனத்தை அமைத்த ஸான்ஃபிரான்சிஸ்கோ மாநாடு 1945ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்றது என்பதையும், பின்னர் அந்த நிறுவனத்தின் தலைமையகம் நியூயார்க்கில் அமைக்கப்பட்ட தென்பதையும் முன்னரே கண்டறிந்தோம்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஐக்கிய அமெரிக்கா ஏகாதிபத்திய, குடியேற்ற ஆதிக்கத்தை வெறுத்தது. தன் ஆதிக்கத்திலிருந்த ஃபிலிப்பைன் தீவுகளுக்கு 1946ஆம் ஆண்டு சுதந்திரம் கொடுத்தது. அமெரிக்காவின் நல்லெண்ணத்தினால் தான் இந்தியா முதலான ஆசிய நாடுகள் விடுதலை பெற்றன எனக் கூறலாம்.

போருக்குப் பின்னர் ரஷ்யாவின் பொதுவுடைமைக் கொள்கைகள் மற்ற நாடுகளில் பரவாவண்ணம் தடுக்க ஐக்கிய அமெரிக்கா பல முயற்சிகளை மேற்கொண்டது. 1947ஆம் ஆண்டு ட்ரூமன் (Truman) குடியரசுத் தலைவராக இருந்தபோது கிரீஸ், துருக்கி ஆகிய இரு நாடுகளின் பொருளாதார, இராணுவ உதவிக் காக நாற்பது கோடி டாலர் பணத்தை அமெரிக்கா கொடுத்தது. இந்த நாடுகள்பால் ட்ரூமன் கொண்ட கொள்கை, 'ட்ரூமன் கொள்கை' (The Turman Doctrine) என்று புகழ்பெற்றது. அதே ஆண்டு மார்ஷல் திட்டம் (The Marshall Plan) உருவாக்கப்

பட்டது. இரண்டாம் உலகப்போரின்போது நலிவுற்ற ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவ, அமெரிக்க உள்துறைச் செயலர் மார்ஷல் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அதன்படி பதினாறு மேற்கு ஐரோப்பிய நாடுகள் இந்தத் திட்டத்தில் சேர்ந்தன. இந்தத் திட்டத்தின்கீழ் 1,400 கோடி டாலர் பணத்தை அமெரிக்கா இந்த நாடுகளின் வளர்ச்சிக்குக் கொடுத்துதவியது (1948—1952). இது உண்மையிலேயே வியக்கத் தக்க உதவியாகும்.

1948ஆம் ஆண்டு 'அமெரிக்க நாடுகளின் நிறுவனம்' (Organisation of American States) என்று இலத்தீன் அமெரிக்க நாடுகளுடன் ஓர் அமைப்பை ஐக்கிய அமெரிக்கா உருவாக்கியது. இதன்படி பொருளாதார மற்றும் இராணுவ உதவியை ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து, இலத்தீன் அமெரிக்க நாடுகள் பெற்றன.

1949ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஃபிரான்ஸ் முதலான பன்னிரண்டு நாடுகள் வட அட்லான்டிக் ஒப்பந்த நிறுவனத்தை (North Atlantic Treaty Organisation) ஏற்படுத்திக்கொண்டன. இது ஓர் இராணுவ அமைப்பாகும். இந்த நாடுகளுள் ஏதாவது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளின்மீது வேறு எந்த நாடாவது போர்தொடுத்தால், இந்தப் பன்னிரண்டு நாடுகளும் ஒன்றுபட்டு, தாக்குதலை முறியடிக்க வேண்டுமென ஒத்துக்கொள்ளப்பட்டது. இதன் தலைமைப் பொறுப்பை அமெரிக்கா ஏற்றுக்கொண்டது.

இந்தியா மிகப் பெரிய மக்களாட்சி நாடு. அதன் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக அமெரிக்கா பலவிதத்தில் உதவி செய்ய முன் வந்துள்ளது. பொதுச் சட்டம் 480-ன் கீழ் (Public Law-480) பெருமளவிலான கோதுமை முதலான உணவுப் பொருள்களை அமெரிக்கா இந்தியாவிற்குக் கொடுத்தது.

ஆசிய நாடுகளில் பொதுவுடைமைச் செல்வாக்கு ஏற்படாமல் இருக்க 1954-ல் தென்கிழக்கு ஆசிய நாடுகள் ஒப்பந்த நிறுவனத்தை (South-East Asia Treaty Organisation) அமெரிக்கா அமைத்தது. ஆனால், இதில் இந்தியா சேரவில்லை. இது NATO-வைப்போல் வலுவாகச் செயல்படவில்லை. ஆசிய நாடுகளான கொரியா, வியட்நாம் முதலான நாடுகளில் நடைபெற்ற போர்களில் அமெரிக்காவும் ரஷ்யாவும் ஈடுபட்டுப் போரிட்டதைப் பெரும்பாலான நடுநிலை நாடுகள் கண்டித்தன. அண்மையில் (ஏப்ரல், 1975) அமெரிக்கப் படைகள் தெற்கு வியட்நாமிலிருந்து வெளியேற்றப்பட்டன.

அறிவியல் துறையில் அமெரிக்கா மிக வேகமாக முன்னேறியுள்ளது. 1945ஆம் ஆண்டு அணுகுண்டுகளைச் செய்துமுடித்தது.

முதலில் நியூமெக்சிகோ பாலைவனத்தில் சோதனை செய்தபின்னர், ஜப்பானிய நகரங்கள்மீது போட்டு அதன் அழிவுத் தன்மையை அமெரிக்கா தெரிந்துகொண்டது. பின்னர் 1952ஆம் ஆண்டு ஹைட்ரஜன் குண்டை அமெரிக்கா வெடித்தது. 1969ஆம் ஆண்டு இரண்டு அமெரிக்க விண்வெளி வீரர்களை, அமெரிக்க விஞ்ஞானிகள் சந்திரனில் இறக்கினார்கள். அந்த அளவு அமெரிக்கா விஞ்ஞானத் துறையில் முன்னேறியுள்ளது.

அமெரிக்கா மேற்கொண்ட இத்தகைய அரசியல், பொருளாதார, அறிவியல் நடவடிக்கைகளால் தான் மிகப் பெரிய வல்லரசு என்பதை நிரூபித்துள்ளது. அதை உலக நாடுகளும் ஐயமின்றி ஏற்றுக்கொண்டுள்ளன.

## II. ரஷ்யா

1917ஆம் ஆண்டு நடைபெற்ற ரஷ்யப் புரட்சியிலிருந்து அந்த நாடு மிக வேகமாக முன்னேறத் தொடங்கியது. லெனின் (ஆட்சி 1917-24) ஆட்சிக்கு வந்தவுடன் கார்ல்மார்க்ஸின் பொதுவுடைமைக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த முற்பட்டார். முதலாளித்துவ அமைப்பை ஒழித்துக்கட்டினார். உழவர்களுக்குச் சொந்த நிலங்கள் கொடுக்கப்பட்டன; தொழிற்சாலைகள் அரசாங்க உடைமையாயின; திருச்சபை கலைக்கப்பட்டது. லெனின் 'உழைக்காதவற்கு உணவில்லை' என்றார்.[1] அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்த்தவர்கள் ஒடுக்கப்பட்டனர். உள்நாட்டு, வெளிநாட்டுப் பகைவர்களை அழிக்க டிராட்ஸ்கி (Trotsky) தலைமையில் 'சிவப்புப் படை' (The Red Army) அமைக்கப்பட்டது. அது வெற்றிகரமாகப் பகைவர்களை ஒழித்தது.

லெனின் எதிர்பார்த்ததுபோல் பொதுவுடைமைக் கொள்கைகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியவில்லை. தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் திறமையாக உழைக்கவில்லை. ஏனெனில், அவர்கள் எப்படி வேலைசெய்தாலும் சம்பளத்தைப் பெற்றார்கள். உழவர்கள் தங்கள் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யவில்லை. ஏனெனில், அவர்களின் தேவைக்கு அதிகமாக இருப்பதை அரசு எடுத்துக்கொண்டது. எனவே, இந்தக் குழப்பத்திலிருந்து நாட்டை மீட்க லெனின் புதிய பொருளாதாரக் கொள்கையை (New Economic Policy) அறிவித்தார். இது சுருக்கமாக NEP என்று சொல்லப்பட்டது. இது லெனின் மேற்கொண்ட தாற்காலிகமான கொள்கையே ஆகும். அதன்படி ஓரளவு தனியார் வாணிகம் அனுமதிக்கப்பட்டது. சிறு தொழில்களை நடத்தத் தனிப்பட்டவர்கள் அனுப்பப்பட்டனர். அவர்கள் இலாபம் பெறுவதும் அனுமதிக்கப்பட்டது. அதேபோல உழவர்

1 He who does not work neither shall he eat.

களும் குறிப்பிட்ட அளவு உணவுத் தானியங்களை அரசுக்குக் கொடுத்துவிட்டு மற்றவற்றை அவர்களே வைத்துக்கொள்ளலாம் என அனுமதிக்கப்பட்டது. எனவே, வேளாண்மைத் துறையும் தொழில்துறையும் முன்னேற்றம் அடைந்தன. ரஷ்யா பொருளாதாரத் துறையில் வேகமாக முன்னேறியது.

லெனின் மற்ற நாடுகளுடன் நல்லுறவை வைத்துக்கொள்ளவே விரும்பினார். 1921ஆம் ஆண்டு ரஷ்யா, இங்கிலாந்துடன் ஒரு வாணிக உடன்பாட்டை ஏற்படுத்திக்கொண்டது. அதனால் இரு நாடுகளும் வணிக உறவை வைத்துக்கொண்டன. ஒரு நாடு மற்றொரு நாட்டுக்கு எதிரான பிரசாரத்தைச் செய்வதில்லை என ஒத்துக்கொண்டது. இது புதிய பொதுவுடைமை ரஷ்யாவை இங்கிலாந்து அங்கீகரித்ததுபோலவே கருதப்பட்டது. அதே ஆண்டு ஜெர்மானியக் குடியரசு, நார்வே, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் ரஷ்யாவுடன் வாணிக உறவு வைத்துக்கொண்டன. இந்தப் போக்கு லெனினுக்குக் குறிப்பிடத்தக்க வெற்றியாகும். 1922ஆம் ஆண்டு ஜெர்மனியும் ரஷ்யாவும் 'ரபால்லோ உடன்படிக்கை'யை (The Treaty of Rapallo) செய்துகொண்டு இரு நாடுகளும் அரசியல் உறவுகளை வைத்துக்கொண்டன. ரஷ்யா வலிமைமிக்க நாடாக உருவாகி வருவதை லெனின் காலத்திலேயே ஐரோப்பிய நாடுகள் சில ஏற்றுக்கொண்டன. 1923ஆம் ஆண்டு ஒரு புதிய அரசியல் சட்டம் எழுதப்பட்டது. அதன்படி ரஷ்யா தொடர்ந்து பொதுவுடைமை அரசாகச் செயல்படத் தொடங்கியது. 1924ஆம் ஆண்டு லெனின் இயற்கையெய்தினார்.

லெனின் மறைவிற்குப் பின்னர், ஸ்டாலின் (Stalin) மற்றும் ட்ராட்ஸ்கி (Trotsky) ஆகியவருக்கிடையே பதவிப்போட்டி ஏற்பட்டது. இறுதியாக ஸ்டாலினே ஆட்சியைக் கைப்பற்றினார். ஸ்டாலின் (ஆட்சி, 1924-53) பொதுவுடைமைக் கொள்கைகளை மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தினார். பெருந்தொழில்களை நாட்டுடைமை ஆக்கினார். ஐந்தாண்டுத் திட்டங்களைக் (Five Year Plans) கொண்டு வந்தார். 1928–32ஆம் ஆண்டுகளில் முதல் ஐந்தாண்டுத் திட்டம் செயல்முறைப்படுத்தப்பட்டது. அதன் கீழ் ரஷ்யா தொழில்துறையில் பெருமளவு முன்னேறியது. இரும்பு எஃகு ஆலைகள் அமைக்கப்பட்டன. நாற்பத்திரண்டு புதிய மின் திட்டங்கள் அமைக்கப்பட்டன. ஆண்டில் 360 நாள்கள் தொழிலாளர்கள் உழைக்கவேண்டுமென ஸ்டாலின் ஆணையிட்டார். ஞாயிற்றுக்கிழமைகூட விடுமுறை தரப்படவில்லை. கார்கவ் (Kharkov) நகரத்தில் டிராக்டர் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. மாஸ்கோ (Moscow) நகரத்தில் மோட்டார் வண்டித் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. வேளாண்மைத் துறையில் கூட்டுறவுப்

பண்ணைமுறை ஊக்குவிக்கப்பட்டது. உணவுப் பொருள்களின் உற்பத்தி பெருக்கப்பட்டது. கல்வித்துறைக்கும் சிறப்பிடம் கொடுக்கப்பட்டது. தொழிற்கல்வியும் வேளாண்மைக் கல்வியும் முன்னுரிமை பெற்றன. கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் பொதுவுடைமைக் கொள்கைகள் கற்பிக்கப்பட்டன. 1932-37ஆம் ஆண்டுகளில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும், 1938-42ஆம் ஆண்டுகளில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும் செயல்முறைப்படுத்தப்பட்டன. அதனால் ரஷ்யா பொருளாதாரத் துறையில் மிக வலிமை பொருந்திய நாடாக மாறிவந்தது. 1924ஆம் ஆண்டுக்குள் பல ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவை அங்கீகரித்தன. 1933ஆம்ஆண்டு ஐக்கிய அமெரிக்காவும் ரஷ்யாவை அங்கீகரித்தது. 1934ஆம்ஆண்டு சர்வதேசச் சங்கத்திலும் ரஷ்யா சேர்த்துக்கொள்ளப்பட்டது. 1936ஆம் ஆண்டு ஒரு புதிய அரசியல் சட்டம் எழுதப்பட்டது. அது 'ஸ்டாலின் அரசியல் சட்டம்' என்றும் சொல்லப்படுகிறது. ரஷ்யா இப்பொழுதும் அந்த அரசியல் சட்டப்படிதான் இயங்கிவருகிறது. ஸ்டாலின் ரஷ்யாவின் படை வலிமையைப் பெருமளவுக்குப் பெருக்கினார். 1935ஆம் ஆண்டு ரஷ்யாவின் படையில் பத்துலட்சம் வீரர்கள் இருந்தார்கள். ஜெர்மனியில் ஹிட்லர் படை வலிமையைப் பெருக்கிக்கொண்டுவந்ததைக் கண்டு ஸ்டாலின் தம் நாட்டின் படை வலிமையையும் பெருக்கினார். 1939ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் தொடங்குவதற்கு முன், ரஷ்யாவின் படையில் ஏறத்தாழ முப்பது இலட்சம் வீரர்கள் இருந்தார்கள். ஹிட்லர் செய்ததுபோலவே ரஷ்யாவின் படையும் நவீன முறையில் அமைக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது ஹிட்லர் ரஷ்யாவை மிகக்கடுமையாகத் தாக்கினார். ரஷ்ய மண்ணில் போர் பயங்கரமாக நடைபெற்றது. லெனின்கிராட் (Leningrad) போரில் மட்டும் ரஷ்யா ஏறத்தாழ ஐந்து இலட்சம் வீரர்களை இழந்தது. எனினும், ரஷ்யா தொடர்ந்து போரிட்டது. 1942-லிருந்து ஜெர்மானியர் பின்வாங்கினர். மூன்று இலட்சம் ஜெர்மானிய வீரர்கள் இறந்தார்கள். 1945ஆம் ஆண்டு ஜெர்மனியைக் கிழக்கேயிருந்து ரஷ்யா மிகப் பயங்கரமாகத் தாக்கியது. மேற்கிருந்து அமெரிக்க, ஆங்கிலப் படைகள் தாக்கின. ஜெர்மனி சரணடைந்தது. ஹிட்லரின் அழிவுக்கு ரஷ்யாவும் காரணமாகும்.

போருக்குப் பின்னர் ஐக்கிய நாடுகள் நிறுவனம் அமைக்கப்படுவதற்கு ரஷ்யா முக்கியமான முயற்சிகளை எடுத்துக்கொண்டது. போர் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட், இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் சர்ச்சில் மற்றும் ஸ்டாலின் ஆகியவர்கள் கிரிமியா தீபகற்பத்தில் உள்ள யால்டா (Yalta) என்ற நகரத்தில் கூடி அத்தகைய அமைப்பை

ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள். ரஷ்யாவின் வல்லரசு நிலையை அமெரிக்காவும் இங்கிலாந்தும் ஏற்றுக் கொண்டன என்றே கூறவேண்டும்.

1949ஆம் ஆண்டு, விஞ்ஞானத் துறையிலும் வேகமாக முன்னேறியிருந்த ரஷ்யா, அணுகுண்டை வெடித்துப் பரிசோதனை செய்தது. 1945ஆம் ஆண்டு அமெரிக்கா அணுகுண்டு வெடித்தது. எனவே, அமெரிக்காவிற்கு இணையான வல்லரசாக ரஷ்யா விளங்கியது. அதேபோல 1952-ல் அமெரிக்கா ஹைட்ரஜன் குண்டை வெடித்தது. அடுத்த ஆண்டே ரஷ்யாவும், ஹைட்ரஜன் குண்டை வெடித்தது, எல்லாத் துறையிலும் அமெரிக்காவிற்கு இணையாக ரஷ்யா முன்னேறிவந்தது.

ரஷ்யாவின் வலிமை வெகுவாக வளர்ந்து வந்ததைக் கண்டு அமெரிக்காவே அஞ்சியது. ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவின் தாக்குதலுக்கு உட்படக்கூடும் எனக் கருதி 1949ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்கா வட அட்லான்டிக் ஒப்பந்த நிறுவனத்தை அமைத்தது. அதன்படி கனடா, இங்கிலாந்து, ஃபிரான்ஸ் முதலான பதினாறு நாடுகள் ஓர் இராணுவ ஏற்பாட்டை அமைத்துக் கொண்டன. இத்தகைய ஒப்பந்தத்தை ரஷ்யா எதிர்த்தது. இதை எதிர்க்கின்ற முறையில் 1955ஆம் ஆண்டு ரஷ்யா கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் 'வார்சா ஒப்பந்தத்தை' (The Warsaw Pact) செய்துகொண்டது. இதுவும் ஓர் இராணுவ உடன்படிக்கையே ஆகும். கிழக்கு ஐரோப்பிய நாடுகளான கிழக்கு ஜெர்மனி, போலந்து, ருமேனியா, ஹங்கேரி முதலான நாடுகள் ரஷ்யாவின் தலைமையை ஏற்றுக்கொண்டது ரஷ்யாவிற்குப் பெரும் வெற்றியாகும்.

ஸ்டாலினுக்குப் பின், மாலன்கோவ் (1953-55), புல்கானின் (1955-58), குருஷ்ஷேவ் (1958-64) ஆகியவர்கள் ரஷ்யாவின் தலைமை அமைச்சர்களாகப் பணிபுரிந்தார்கள். கோசிஜின் 1964ஆம் ஆண்டிலிருந்து தலைமை அமைச்சராக உள்ளார். அவர்களின் ஆட்சிக்காலத்திலும் எல்லாத் துறைகளிலும், குறிப்பாக அறிவியல் துறையிலும், ரஷ்யா வியக்கத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றது.

ஐக்கிய நாடுகள் நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து ரஷ்யா ஒரு வல்லரசு உறுப்புநாடாக இருந்துவருகின்றது. ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் நலன்களைக் காக்க ரஷ்யா குறிப்பிடத்தக்க பணியைச் செய்துவருகின்றது. இந்தியாவும் வல்லரசாகிய ரஷ்யாவுடன் நல்லுறவை வைத்துக்கொண்டுள்ளது. இங்ஙனம் பொதுவுடைமை ரஷ்யா மிகக் குறுகிய காலத்திலேயே வல்லரசாக மாறிவிட்டது.

# உலக வரலாற்றில் சில முக்கிய நிகழ்ச்சிகள்

கி.பி.

1453 கான்ஸ்டான்டிநோபிளைத் துருக்கியர் கைப்பற்றினர்.

1492 கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.

1493–1494 'போப்பின் ஆணைக் கோடுகள்' வெளியிடப்பட்டன.

1517 மார்ட்டின் லூதர் பாவமன்னிப்புச் சீட்டு விற்பதை எதிர்த்தார்.

1519–1522 மெகல்லனின் 'விட்டோரியா கப்பல்' உலகை வலம்வந்தது.

1607 அமெரிக்காவில் 'வெர்ஜினியா' என்ற முதல் ஆங்கிலக் குடியேற்றம் அமைக்கப்பட்டது.

1620 புனிதத் தந்தையர் மே ஃப்ளவர் கப்பலில் அமெரிக்கா சென்றனர்.

1643 ஃபிரான்சில் பதினான்காம் லூயி ஆட்சிக்கு வந்தார்.

1644 சீனாவில் மஞ்சு ஆட்சி தொடங்கியது.

1688 ரஷ்யாவில் மகா பீட்டர் ஆட்சிக்கு வந்தார்.

1740 பிரஷ்யாவில் மகா ஃபிரெடரிக் ஆட்சிக்கு வந்தார்.

1776 ஐக்கிய அமெரிக்கா விடுதலை பெற்றது.

1789 ஃபிரெஞ்சுப் புரட்சி தொடங்கியது.

1799 நெப்போலியன் முதல் கான்சல் ஆனார்.

1804 நெப்போலியன் ஃபிரான்சின் பேரரசர் ஆனார்.

1811 வெனிசுலா விடுதலை பெற்றது.

1815 நெப்போலியன் ஹெலினா தீவிற்கு அனுப்பப்பட்டார்.

1821 நெப்போலியன் மறைந்தார்.

1828 ராஜா ராம்மோகன் ராய் பிரம்ம சமாஜத்தை நிறுவினார்.

1830 சைமன் பொலிவர் மறைவு.

1839–1842 முதல் ஆங்கில-சீனப் போர்.

1848 மார்க்ஸ்-எங்கெல்சின் 'பொதுவுடைமைப் பொது அறிக்கை' வெளியிடப்பட்டது.

1850–1858 சீனாவில் தைப்பிங் கிளர்ச்சி.

1856–1858 இரண்டாவது ஆங்கில-சீனப் போர்.
1870 இத்தாலிய இணைப்பு முடிவடைந்தது.
1871 ஜெர்மானிய இணைப்பு முடிவடைந்தது.
1893 சிகாகோவில் 'சமயங்களின் மாநாட்டில்' சுவாமி விவேகானந்தர் உரையாற்றினார்.
1894–1895 சீன-ஜப்பானியப் போர்.
1900 சீனாவில் 'பாக்சர் கிளர்ச்சி'.
1904–1905 ரஷ்யா-ஜப்பானியப் போர்.
1911 சீனக் குடியரசு நிறுவப்பட்டது.
1914 முதல் உலகப்போர் தொடங்கியது.
1915 காந்தியடிகள் இந்திய அரசியலில் புகுந்தார்.
1917 ரஷ்யப் புரட்சி நடைபெற்றது.
1918 முதல் உலகப்போர் முடிவடைந்தது.
1919 இந்திய அரசாங்கச் சட்டம் இயற்றப்பட்டது.
1919 வெர்சாய் உடன்படிக்கை.
1920 சர்வதேசச் சங்கம்.
1920 கமால் பாஷா துருக்கியில் தேசிய அரசை அமைத்தார்.
1920–1921 காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம்.
1922 இத்தாலியில் முஸோலினி ஆட்சிக்கு வந்தார்.
1924 லெனின் மறைவு—ஸ்டாலின் ஆட்சிக்கு வந்தார்.
1930 இந்தியாவில் சட்ட மறுப்பு இயக்கம் நடைபெற்றது.
1931 ஜப்பான் மஞ்சூரியாவைக் கைபற்றிக்கொண்டது.
1933 ஜெர்மனியில் ஹிட்லர் ஆட்சிக்கு வந்தார்.
1935 இந்திய அரசாங்கச் சட்டம் இயற்றப்பட்டது.
1939 இரண்டாவது உலகப்போர் தொடங்கியது.
1942 இந்தியாவில் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம்.
1945 இரண்டாவது உலகப்போர் முடிவடைந்தது.
1945 ஐக்கிய நாடுகள் நிறுவனம் அமைக்கப்பட்டது.
1947 இந்தியா விடுதலை பெற்றது.
1948 காந்தியடிகள் மறைவு.
1949 சீனாவில் பொதுவுடைமை அரசு அமைக்கப்பட்டது.
1950 இந்தியா குடியரசு ஆயிற்று.
1964 நேரு மறைவு.
1969 சந்திரனில் அமெரிக்க விண்வெளி வீரர்கள் இறங்கினர்.
1974 இந்தியா அணுகுண்டை வெடித்துப் பரிசோதனை நடத்தியது.
1975 இந்தியா 'ஆரியபட்டா' என்ற செயற்கைக் கோளை அனுப்பியது.

# மேற்கோள் நூற்பட்டியல்
## (BIBLIOGRAPHY)


1. Carrington Goodrich, L. —A Short History of the Chinese People.
2. Chou Hsiang-Kuang—Modern History of China.
3. Clyde Paul, H. —The Far East.
4. Fisher, H. A. L. —History of Europe, Vol. I and II.
5. Grant, A. J. —Outlines of European History.
6. Grant, A. J. —Europe: The Last Five Centuries.
7. Hofstadter, Miller and Aaron —The American Republic.
8. Latowrette, K. S. —A History of Modern China.
9. Majumdar, Ray Chaudhuri and Datta —An Advanced History of India.
10. Murry, D. —Japan.
11. Narayanan, N. K. —History of Europe (Tamil).
12. Parkes, H. B. —The United States of America, A History.
13. Ramachandran, T. R. —World History (Tamil).
14. Rowe, D. N. —Modern China.
15. Stead—Japan.
16. Southgate—Europeon History (1789—1960).
17. Wolfram Eberhard—A History of China.
18. The Encyclopedia Americana—All Volumes.
19. கலைக்களஞ்சியம்—எல்லாத் தொகுதிகளும்.

# கலைச்சொற்கள்

**A**

Agrarian Revolution — வேளாண்மைப் புரட்சி
Ancient Period — பண்டைக் காலம்
Archaeology — புதைபொருள் ஆராய்ச்சி
Assembly — சட்டமன்றம்
Astronomy — வானியல்
Axis Nations — அச்சு நாடுகள்
Aztec Empire — அஸ்டெக் பேரரசு

**B**

Balance of Power — வல்லரசு சமநிலை
Banking System — வங்கி முறை
Barbarians — பார்பேரியன்கள், முரட்டு இனத்தினர்
Benevolent Despot — குடிநலச் சர்வாதிகாரி (அ) மக்கள் நலம்பேணும் வல்லாட்சியாளர்
Bible — விவிலிய நூல்
Bicameralism — இருசபை கொண்ட சட்டமன்ற அமைப்பு
Biology — உயிரியல்
Blast furnace — ஊது உலை
Bourgeoisie — நடுத்தர வகுப்பினர்
Boxer-Rebellion — பாக்சர் கிளர்ச்சி
Boycott — புறக்கணி
Byzantine Empire — பைஸான்டைன் பேரரசு

**C**

Cathedral — தேவாலயம்
Chapel — தேவாலயம்
Charter — சாசனம்
Church — திருச்சபை
Classical language — உயர் தனிச் செம்மொழி
Clergy — குருமார்

Colony — குடியேற்றம்
Communism — பொதுவுடைமை
Communist Manifesto — பொதுவுடைமைப் பொது அறிக்கை
Confederation — கூட்டிணைப்பரசு
Conquest — வெல்கை
Constitution — அரசியல் சட்டம்
Consul — கான்ஸல்
Continental System — கண்டத் திட்டம்
Council — கவுன்சில், குழு
Counter-Reformation — சமயச் சீர்திருத்த எதிர் இயக்கம்
Covenant — ஒப்பந்தத் திட்டம்
Craft guilds — தொழிற்கழகங்கள்
Culture — கலாசாரம்

**D**

Depression — பொருளாதார மந்தநிலை
Directory — டைரக்டரி
Divine Right — தெய்வீக உரிமை
Division of labour — வேலைப் பகுப்பு முறை
Duchy — கோமகனாட்சிப் பகுதி
Duke — கோமகன்
Dynamics — பொருளியக்கவியல்
Dynasty — வமிசம்

**E**

Eastern Roman Empire — கிழக்கு ரோமானியப் பேரரசு
Excommunication — மதவிலக்கு
Extremists — தீவிரவாதிகள்

**F**

Factory Acts — தொழிற்சாலைச் சட்டங்கள்
Fascism — ஃபாசிசம்
Federation — கூட்டாட்சி, கூட்டரசு
Feudalism — நிலமானிய முறை, படை மானிய முறை
Flying Shuttle — பறக்கும் நாடா
Frescos — சுவரோவியங்கள்

**G**

Gallican Liberties — காலிகன் உரிமைகள்
Geographical discoveries — புதிய கடல்வழிக் கண்டு பிடிப்புகள்

Gothic Architecture — கோதிக் கட்டடக் கலை
Governor — ஆளுநர்

**H**

Heresy — புறச்சமயக் கருத்து
Heretic — புறச்சமய வாதி
Holy Roman Empire — புனித ரோமானியப் பேரரசு
Home Rule — சுய ஆட்சி
Humanist — மனித நலப் பற்றுளர்
Human Rights — மனித உரிமைகள்

**I**

Idolatry — விக்கிரக வழிபாடு
Incendiary bombs — தீ கக்கும் குண்டுகள்
Indemnity — போர் இழப்பீடு
Indulgences — பாவமன்னிப்புச் சீட்டுகள்
Industrial Revolution — தொழிற்புரட்சி
Interim Government — இடைக்கால அரசு
International — பன்னாட்டு, சர்வதேச
Investiture struggle — பதவிச் சின்னப் போராட்டம்
Isolation — தனித்த நிலை

**K**

Knighthood — நைட் வீரர் பட்டம்

**L**

Last Judgement — இறுதித் தீர்ப்பு
Last Supper — இறுதி உணவு
League — லீக், சங்கம்
League of Nations — சர்வதேசச் சங்கம்
Liberator — விடுதலை வீரர்
Limited Monarchy — வரம்புடை முடியாட்சி

**M**

Manor — மேனர், பண்ணை
Mariners compass — மாலுமியின் திசை காட்டும் கருவி
Mediaeval period — இடைக்காலம்
Meiji Restoration — மெய்ஜி மீட்சி
Mercantile Oligarchy — வணிகர் ஆதிக்க ஆட்சி
Merchant Guilds — வணிகக் கழகங்கள்
Middle class — நடுத்தர வகுப்பினர்

Mixed economy — கலப்புப் பொருளாதாரம்
Moderates — மிதவாதிகள்
Modern period — நவீன காலம், தற்காலம்
Mosque — பள்ளிவாசல்
Museum — அரும்பொருட்கூடம்

**N**

Nationalism — தேசிய உணர்வு, நாட்டுணர்வு
Nation states — தேசிய நாடுகள்
Navigation Acts — கப்பல் போக்குவரத்துச் சட்டங்கள்
Nazism — நாசிசம்
Non-aligned — கூட்டுச் சேராத

**O**

Open-door policy — திறந்த கதவுக்கொள்கை
Opium — அபின், கஞ்சா
Organisation — நிறுவனம்

**P**

Papal states — போப்பாட்சி மாநிலங்கள்
Peninsular war — தீபகற்கப் போர்
Pilgrim fathers — புனித யாத்திரிகத் தந்தையர்
Planets — கோள்கள்
Police — காவல்காரர்
Power-loom — விசைத்தறி
Printing Press — அச்சு இயந்திரம்
Provisional Government — தாற்காலிக அரசு
Purgatory — பாவம் களையுமிடம்

**R**

Racial discrimination — இனவேறுபாடு
Referendum — பொது வாக்கெடுப்பு
Reformers — சீர்திருத்தவாதிகள்
Reformation — சமயச் சீர்திருத்தம்
Reign of Terror — பயங்கர ஆட்சி
Renaissance — மறுமலர்ச்சி
Representation — பிரதிநிதித்துவம்
Republic — குடியரசு
Revolution — புரட்சி
Revolutionary Government — புரட்சி அரசு
Roman Empire — ரோமானியப் பேரரசு

S

Safety lamp — காப்பு விளக்கு
Schism — சமயப் பிளவு
Separation of Powers — அதிகாரப் பிரிவினை
Serfs — அடிமைகள்
Spinning frame — நூற்கும் சட்டம்
Spiritual Powers — ஆன்மீக அதிகாரங்கள்
Strait — நீர்ச்சந்தி
Stamp Act — முத்திரைக் காகிதச் சட்டம்
Submarine — நீர்மூழ்கிக் கப்பல்
Sugar Act — சர்க்கரைச் சட்டம்
Supreme Court — தலைமை நீதிமன்றம்

T

Taiping Rebellion — தைப்பிங் புரட்சி
Tax — வரி
Telescope — தொலைநோக்கி
Temporal Powers — அரசியல் அதிகாரங்கள்
Theology — மதத்துறைப் படிப்பு
Theosophical Society — பிரம்ம ஞான சபை
Third Estate — ஃபிரான்சில் இருந்த பொது மக்கள் சபை
Toll gate — சுங்கச் சாவடி
Treaty — உடன்படிக்கை, ஒப்பந்தம்

U

Unicameralism — ஒரே சபைகொண்ட சட்ட மன்ற அமைப்பு
Unification — இணைப்பு, ஐக்கியம்
Universe — அகிலம்

Veto · தடுப்பாணை
Vote வாக்கு, ஓட்டு

Water frame — நீர்ச் சட்டம்